வேத புருஷர்

இரண்டாம் காண்டம்



சாமுவேல் பவுல் ஐயர்

AMAINTHAKARAI
CHRISTIAN ASSEMBLY
POST BOX 2501
AYAVOO NAIDU COLONY
MADRAS - 600 029
INDIA

வேத புருஷர்

பழைய ஏற்பாட்டு புருஷர்கள்

இரண்டாம் காண்டம்

சாமுவேல் பவுல் ஐயர்

THE CHRISTIAN LITERATURE SOCIETY
(*In association with the United Society for Christian Literature*)
POST BOX 501, PARK TOWN, MADRAS 3
and at
MYSORE, BANGALORE, TIRUVALLA, KODAIKANAL & COIMBATORE

G.L.
COPYRIGHT

Reprinted, 1965

PRINTED AT THE DIOCESAN PRESS, MADRAS—1965. B408

முகவுரை

சில காலத்துக்குமுன் வேத புருஷர் என்னும் பிரபந்தத்தின் முதலாம் பாகத்தை தமிழ்க் கிறிஸ்தவர்கள்முன் ஒப்புவித்தோம். இப்போது தேவ கிருபையை முன்னிட்டு அப்பிரபந்தத்தின் இரண்டாம் பாகத்தை அவர்கள்முன் படைக்கிறோம்.

இதில் சாலொமோன் அரசன் காலமுதல் இஸ்ரவேலர் பாபிலோனில் சிறைப்பட்ட காலமட்டுமுள்ள சுமார் ஐந்நூறு வருஷங்களுக்குள் இடைக்கிடையே ஜீவித்துவந்த பதினாறுபேருடைய வரலாறுகள் அடங்கியிருக்கின்றன. இவர்களில் ஒருவராவது சாமானியமானவாகளல்ல. சிலர் அரசராயும், வேறு சிலர் தீர்க்கதரிசிகளாயும், பின்னும் சிலர் பிரதானிகளாயும், ஒருவர் பெரிய குடித்தனக்காரராயுமிருந்திருக்கிறார்கள். இவர்களுடைய வரலாறு அவரவர் வசித்த காலவரிசையின்படியல்ல, வேதாகமத்தில் ஒழுங்குப்படுத்தப்பட்டிருக்கிற ஆகம முறைப்படி இவ்விடத்தில் அமைக்கப்பட்டிருக்கிறது. இப்பிரபந்தத்தின் முதலாம்பாகத்தைப்போலவே இதின் வாசக நடையும், சொல்வளமும், பொதுப்போக்குமிருக்கும்படி நம்மாலானமட்டும் பிரயாசப்பட்டோம்.

இதை வாசிக்கும் சிநேகிதர் வேத அறிவில் தேறி இப்புருஷரின் தாழ்வுகளைத் தள்ளி, அவர்களில் விளங்கிய பக்தி, விசுவாசம், பொறுமை, உண்மை, துன்பம் சகித்தல் ஆகிய பரம குணங்களில் பெருகி, தங்கள் ஜீவகாலத்தைத் திருத்திக்கொள்ளுவார்களென்று கர்த்தருக்குள் நம்புகிறோம்.

சாட்சியாபுரம்,
சிவகாசி,
ஏப்ரல், 1888.

இப்படிக்கு,
உங்கள் அன்புள்ள
S. பால் ஐயர்.

வேத புருஷர்

இரண்டாம் காண்டம்

எழுதியவர்
சாமுவேல் பவுல் ஐயர்

CLS

கிறிஸ்தவ இலக்கியச் சங்கம்

பொருள் அட்டவணை

அத்தியாயம்	பக்கம்
1. இராஜ ஞானியார் (சாலொமோன்)	1
2. ரெகொபெயாம்	27
3. யோசபாத்து அரசன்	40
4. ஆகாப்	54
5. எலியா ரிஷி...	77
6. எலிசா உழவுப் பருவம்—அற்புதப்பருவம்—இராஜ்ய சம்பந்த பருவம்—அந்தியகாலப் பருவம்	110
7. நாகமான்	139
8. எசேக்கியா இராஜா	156
9. யோசியா இராஜன்	176
10. எஸ்றா	186
11. மொர்தெகாய்	203
12 பொறுமை பக்தன் (யோபு) வாழ்வு பருவம்—தாழ்வு பருவம்—சிநேகிதர் பருவம் —புதுவாழ்வு பருவம்	235
13. எசாயா தீர்க்கதரிசி	270
14. புலம்பும் பக்தன் (எரேமியா)	287
15. தானியேல் மந்திரி சிறைப்பட்ட பருவம்—பொற்சிலைப் பருவம்—சிங்கக் கெபி பருவம்	309
16. கடல் ஆழங்கண்டவர் (யோனா)	351

வேத புருஷர்

இராஜ ஞானியார்

சாலொமோன்

வேதாகம சரித்திரமானது, அதின் உத்தமத்தினாலே, மனுஷருடைய ஆணவத்தையும் பெருமையையும் தாழ்த்தி அடக்கி விடுகிறதென்று சொல்லவேண்டியது. அவைகளைக் கருத்தாய் வாசிக்கிறவன் எவனும், தன்னைக் குறித்துப் பெருமை கொள்ளாமல் தன் வாயை மூடிக்கொள்ளுவான் என்பதற்குச் சந்தேகமில்லை. நாம் இப்பொழுது வாசிக்கப் போகும் சரித்திரத்தினால், துவக்கத்திலே நற்குணமும், பக்தி விநயமுமாய் இருக்கிற மனுஷர் பிற்காலங்களில் கேடும் பொல்லாப்பும் நிறைந்தவர்களாகிப்போனாலும் போகலாம் என்பதைத் தெளிவாய் அறிந்துகொள்ளலாம். சாலொமோன் என்பவர் மனுமக்களில் உயர்ந்த ஸ்திதியை உடையவராய் மாத்திரம் அல்ல, ஞானத்திலும், அறிவிலும், விவேகத்திலும் அவருக்கு மிஞ்சினவர்கள் இல்லையென்று சொல்லத்தக்கதாக அவ்வளவு மேன்மையாக தேவனால் நடத்தப்பட்டவராய் இருந்தாலும் அவரிடத்தில் விளங்கிய பொல்லாப்பும், மதியீனமும், ஆகாமியமும் கொஞ்சமல்ல. அவருடைய மகிமையைப்பற்றிக் கேள்விப்படுவோர், அவரிடத்திலுள்ள பொல்லாப்புகளைப் பற்றிக் கேள்விப்பட்டால் நம்பவே மாட்டார்கள். அப்படியே அவருடைய பொல்லாப்பைப்பற்றிக் கேள்விப்படுகிறவர்கள் அவருடைய ஞானங்களையும், மகிமைகளையும் பற்றிக் கேள்விப்பட்டால் நம்பமாட்டார்கள். என்றாலும் அந்த ஒரே ஆளிடத்தில் சன்மார்க்கப் பிரகாசமும் துன்மார்க்க அந்தகாரமும் விளங்கிற்று. அவருடைய மகிமைகளும் ஞானங்களும் சூரியனைப்போல் விளங்கினாலும் அவை

அனைத்தும் அறிவீன இருளாலும் அஞ்ஞான இரவாலும் விழுங்கப்பட்டுப் போயிற்று என்று சொல்லலாம். சாலொமோனின் சன்மார்க்க ஒளியின் தன்மை ஆதிமனிதனாகிய ஆதாமின் தன்மையை ஒத்ததென்று சொல்லவேண்டியதாய் இருக்கிறது. இவரைக் காட்டுகிறதற்கு வேறு மனுஷருடைய திருஷ்டாந்தரங்களைக் காணோம். இவருடைய சரித்திரத்தை ஆரம்பிக்கிறதற்கு முன் இவ்வளவு காரியங்களைத் தொகுப்பாய்ச் சொன்னது போதுமென்று எண்ணுகிறோம். இனி இவருடைய வரலாறுகளைச் சொல்லி ஆங்காங்கே நாம் கற்றுக்கொள்ளவேண்டிய ஞான போதனைகளைத் தியானிப்போமாக. சாலொமோன் என்பவர் இராஜனையும் மகாஞானியாயும் இருந்தபடியால் நாம் அவரை இவ்விடத்தில் இராஜ ஞானியார் என்ற பேரால் அழைப்போமாக.

இராஜ ஞானியாரின் ஜாதகமானது சாதாரண ஜாதகம் என்று சொல்லக்கூடாது. எப்படியெனில், அவர் பிறக்கு முன்னமே கடவுள் அவருடைய ஜீவியத்தின் வரலாறுகளைச் சொல்லி, அவருக்குச் சாலொமோன் என்று பேரிடவேண்டுமென்றும் கட்டளையிட்டிருந்தார். இராஜ ஞானியாருடைய பிதாவானவர் ஒருநாள் தேவ சமுகமேறி தேவசித்தத்தை அறியவேண்டுமென்று காத்திருந்தபோது, கர்த்தருடைய வார்த்தை அவருக்குண்டாகி, ‘இதோ உனக்குப் பிறக்கப்போகிற குமாரன் அமைதியுள்ள புருஷனாய் இருப்பான்; சுற்றிலுமிருக்கும் அவன் சத்துருக்களையெல்லாம் விலக்கி அவனை அமர்ந்திருக்கச் செய்வேன்; ஆகையால் அவன்பேர் சாலொமோன் என்னப்படும்; அவன் நாட்களில் இஸ்ரவேலின்மேல் சமாதானத்தையும் அமரிக்கையையும் அருளுவேன். அவன் என் நாமத்திற்கு ஆலயத்தைக் கட்டுவான்; அவன் எனக்குக் குமாரனாயிருப்பான், நான் அவனுக்குப் பிதாவாயிருப்பேன்; இஸ்ரவேலை ஆளும் அவனுடைய இராஜாங்கத்தின் சிங்காசனத்தை என்றென்றைக்கும் நிலைப்படுத்துவேன்’ என்று திருவாக்குப் பண்ணியிருந்தார் (1 நாளா. 22:9,10). இந்த வாக்கு தேவ குமாரனாகிய இயேசுகிறிஸ்துவைப் பூரணமாய்ச் சுட்டிக் காட்டுகிறதாயிருந்ததோடு சாலொமோனை முதலாவது குறிக்கிறதாயுமிருந்தது. இராஜ ஞானியைக்குறித்த இந்த அதிசய வாக்

யைக் கேட்ட அவருடைய பிதாவான இராஜ புலவர் (தாவீது இராசன்) அகமகிழ்ந்து, தமது திருப்புலவத் திறமைப்படி கவிகட்டி, கடவுளை ஸ்துதித்து தம்முடைய குடும்பத்தில் தோன்றும் சாலொமோன் என்னும் பாலனை கண்ணாரக்காண கவலைகொண்டிருந்தார்.

இராஜ ஞானியார் பிறந்ததினத்தில் அரமனையிலுண்டான ஆனந்தத்தை இவ்விடத்தில் சொல்லிமுடியாது; இராஜத்துவமும், அமரிக்கையும், ஞானமும், அறிவும், விவேகமும், ஜெயமும் அவருடைய நெற்றியிலே விளங்கிற்று என்று சொல்லவேண்டியது. இக்குழந்தை வாக்குத்தத்தம் பண்ணப்பட்டு கர்ப்பத்திலே நாமதேயம் சூட்டப்பட்டதால் இவரைப்பற்றி பெற்றோருக்கும் மற்றோருக்கும் எவ்வளவு உயர்ந்த எண்ணம் இருக்கவேண்டியது என்பதை யாவரும் ஓர்ந்துக்கொள்ளுவோம். இவர் நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாக வளர்ந்தார்; இராஜ ஞானி வளர்ந்த பின்பு பிதாவின் கீதங்களைப் படித்துக்கொண்டு, அதைத் தமது பிதாவின் கின்னரத்தில் வாசித்துக் களிகூர்ந்து வந்தார். இவருக்கு இராஜத்துவ நெஞ்சும், புலவத்துவத் தலையும் இருந்தது; இராகத் தலைவர்களும் யூகத் தலைவர்களும் இவருக்குமுன் தலை கவிழ்ந்து நிற்கவேண்டியது தான்.

இவருக்குச் சுமார் பதினெட்டு வயதானபோது பராக்கிரம மன்னனைப்போல விளங்கினார். அக்காலத்தில் அவருடைய பிதா பலவீனப்பட்டுப் போனதாலும், அவருடைய மாற்றாந்தாயின் பிள்ளைகள் இராஜ பட்டம் எனக்கு, எனக்கு என்று வாதுகூறி, சமர்த்துப் பண்ணி சதியாலோசனை செய்துகொண்டு வந்தபடியாலும், தமது கண்ணுள்ளபோதே திருவாக்குப் பெற்று பிறந்த இந்தக் குமாரனுக்கு பட்டம் கட்டிப்போடவேண்டுமென்று. பிதாவானவர் எண்ணங் கொண்டார்.

இராஜ ஞானியாரைக் கிரீடாதிபதியாக்கப் போகிறார்களாம் என்ற சமாச்சாரம் நகரம் முழுவதிலும் பிரசித்தமானபோது, அதோனியா என்ற ஒரு சகோதரன் அதைத் தடுக்கும்படி தன்னாலான பிரயத்தனமெல்லாம் செய்தும்

வாய்க்காமல், தன் முயற்சியில் அபஜெயமானன். அப்பால் ஞானியார் தெருக்கள்தோறும் தோரணங்களாய் விருதுகள் பறக்க, மத்தளங்கள் தொனிக்க, முன்காவல் பின்காவல் பக்கக்காவலுடன் நகர்வீதி வந்து கோடானகோடி வேடிக் கைகளோடும் மங்களகீதங்களோடும் கொலுமண்டபமேறி சிம்மாசனபதியானர்.

இராஜ ஞானியார் சிம்மாசனபதியான காலம் இராச்சிய சம்பந்தமாய் அமைதலும் வாழ்வுமுள்ள காலமாயிருந்தது. தமது குமாரன் தன் பாலியகரத்தில் இஸ்ரவேலை ஆளும் செங்கோலைப் பிடித்திருந்தது, தமது கண்முன் நீதியையும் நியாயத்தையும் செய்து வருகையில், அவருடைய பிதாவாகிய இராஜ புலவர் கடவுளிடத்தில் வரங்கேட்கும் விண்ணப்பக் கவிகளை கட்டி, சுரமண்டலமேந்தி தாம் கட்டின கவிகளைப் பாடி வருவார். அச்சமயத்தில் பாடின ஒரு பாட்டை எழுபத்திரண்டாம் சங்கீதத்தில் காணலாம். அதிலே அவர் தமது குமாரனுக்கு நீதி நியாயத்தின் வரம் அருளப்பட வேண்டுமென்றும், தேசத்திலே சமாதானம் நிலைப்பட்டு, ஏழைகள் பராமரிக்கப்பட்டு, தேவ பயம் விருத்தியாகி வளரும்படியாக கடவுளுடைய அருள் புல் அறுப்புண்ட வெளியின்மேல் பெய்யும் மழைபோலவும், பூமியை நனைக்கும் தூற்றல்போலவும் இறங்கவேண்டுமென்றும் பிரார்த்தித்திருக்கிறர். இராஜ ஞானியார் கொலுமண்டபமேறின துவக்கத்தில் இராஜ துரோகிகளாகக் காணப்பட்ட சிலரைத் தகுந்தபடி ஆளும்படி முயற்சிசெய்தார். அவர்களில் தன்னை இராஜவாக்கிக்கொள்ள முயன்ற அதோனியா பயந்து பலிபீடத்தின் கொம்பைப் பிடித்துக்கொண்டு நிற்கிற செய்தியைக் கேள்விப்பட்டு இனி அவன் யோக்கியனய் நடந்துகொண்டால் ஒரு பொல்லாப்பும் அவனுக்கு நேரிடாது என்று சொல்லி வாக்குக் கொடுத்தார். அபியத்தார் என்ற ஆசாரியன் இராஜ துரோகிகளோடு சேர்ந்தவனயிருந்தும் அவனையும் மன்னித்து, ஒரு இடத்தைக் குறித்து அவன் அதைவிட்டு வெளியே போகக்கூடாதென்று திட்டஞ்செய்தார். யோவாபை அவனுடைய முந்தின அநியாயங்களினிமித்தமும் பிந்தின இராஜ துரோகத்தினிமித்தமும் மரணாக்கினை செய்யும்படி கட்டளையிட்டார். இதினலே நாம் இராஜ ஞானியாரைக்

குறைகூறக்கூடாது. இராஜாக்கள் துன்மார்க்கத்தையும், துன்மார்க்கரையும் தண்டனையினாலே அடக்கிப்போடவேண்டுமென்பதே தேவசித்தமாயிருக்கிறது. இராஜ ஞானியாரின் அரசாட்சியின் ஆரம்பம் சகல குடிகளுக்கும் நியாயமாயும் நேர்மையாயும் காணப்பட்டதால் அவர்கள் தங்கள் புதிய அதிபதியை ஏகமனம்போல் நேசித்து கனப்படுத்தி வந்தார்கள். இது கர்த்தரால் அவருக்குக் கிடைத்த தயவுதான். ஏனெனில் 'கர்த்தர் சாலொமோனை மிகவும் பெரியவனாக்கி, அவனுக்கு முன்னே இஸ்ரவேலில் இராஜாவான ஒருவனுக்கும் இல்லாதிருந்த இராஜரீக மகத்துவத்தை அவனுக்குக் கட்டளையிட்டார்' என்று சத்தியவேதத்திலே வாசிக்கிறோம் (1 நாளா. 29:25). ஒவ்வொரு விஷயத்திலும் தேவனுடைய கரம் இருக்கிறதென்பதை நாம் எப்போதும் உணர்ந்து கொள்ளவேண்டியது. உலக இராஜாங்கம் கர்த்தருடையது, அவரே தமது சித்தத்தின்படி எல்லாவற்றையும் நடப்பிக்கிறார். மனிதர் அவருடைய சித்தத்தை எதிர்த்தாலும் அதை அழித்துப்போடக்கூடாது; அவருடைய ஆலோசனைகள் நித்தியகாலமாயுள்ளவைகள். உண்டாயிருக்கிற அதிகாரங்கள் அனைத்தும் தேவனால் உண்டாயிருக்கின்றன. ஒரு அரசாட்சியின் வாழ்வும், அமரிக்கையும், சமாதானமும் எல்லாம் கர்த்தரால் வந்தவைகள் என்பதற்குச் சந்தேகமில்லை. மற்றவர்களால் நமக்குக் கிடைக்கும் மதிப்பும் மேன்மையும் உயர்வும் எல்லாம் அவரால் கிடைக்கும் பாக்கியங்கள்தான். அவனவனுக்கு இருக்கும் அழகும், மனோபலமும் திறமையும் சொற்சதுரியும் எல்லாம் அவரிடத்திலிருந்து வந்தவைகள்தான். இப்படிப்பட்ட உணர்வும் எண்ணமும் கடவுள் பேரில் அதிக பற்றாசையை உண்டாக்குமென்பதற்கு ஐயமில்லை. நாம் நமக்கிருக்கும் வரங்கள் பெலன்கள் எல்லாவற்றையும் அவருடைய நாமத்துக்கு மகிமையாக பிரயோகிக்க வேண்டியது. சகலமும் அவராலும் அவர் மூலமாயும் அவருக்காகவும் இருக்கிறது; அவருக்கே என்றென்றைக்கும் மகிமையுண்டாவதாக. ஆமென்.

சாலொமோனுடைய இராஜ்யபாரம் நிலைப்பட்ட பின்பு அவர் எகிப்து இராசாவாகிய பார்வோனின் குமாரத்தியை விவாகஞ்செய்தார். அவர் தமது பிதாவின் மரணத்துக்கு

முன்னே அம்மோனிய ஸ்திரீயாகிய நாமாளை விவாகம் பண்ணி அவளுக்கு ஒரு குமாரனும் பிறந்திருந்தான் (1 இரா. 11:42ஐ 14:21ஓடு ஒத்துப்பார்). இந்த அந்நிய ஸ்திரீகளைத் தகுந்த முகாந்தரங்களோடுதான் அவர் கலியாணம் செய்திருக்கவேண்டும். அவர்கள் யூத மார்க்கத்தைச் சேர்ந்து போயிருக்கலாம். அவர் இராஜ்யபார விஷயத்தில் எவ்வளவு மேன்மையும் பெருந்தன்மையும் உடையவராயிருந்தாரோ அதிலும் அதிகமாய் மார்க்க விஷயத்தில் ஊக்கமுடையவராயிருந்தார். 'கர்த்தரிடத்தில் அன்புகூர்ந்து, தன் தகப்பனாகிய தாவீதின் கட்டளைகளில் நடந்தான்' என்று அவரைக் குறித்துச் சொல்லப்பட்டிருக்கிறது (1 இரா. 3.3). தமது பிதாவானவர் மரணமடைகிறதற்குமுன் சொன்ன போதனைகளையெல்லாம் கருத்தாய்க் கவனித்து, அதின் படியே நடந்து வந்தார். பிள்ளைகள் தங்கள் பெற்றோரின் புத்திமதிகளைப் பிடித்து நடப்பதால் அநேக வாழ்வுண்டு. இக்காலத்தில் அவரிடத்திலிருந்த நற்குணத்துக்கு ஆட்சேபனையான ஒரு வழக்கத்தை இவர் கையாடி வந்தார். அதாவது, சிலர் அக்காலத்தில் செய்து வந்ததுபோல அவர் மேடைகளிலே பலியிட்டு தூபங்காட்டி வந்தார்; இது அஞ்ஞானிகளின் வழக்கமாயிருந்தது. மெய்த்தேவ வணக்கத்தின் சுத்தாங்க முறையோடு அஞ்ஞான வணக்கத்து முறையையும் இவர் பின்பற்றினார்போல் இருக்கிறது. இது இவர் பேரில் நாம் சொல்லத்தக்க குறைதான். இவர் இவ்வித வணக்கத்தை எந்த நோக்கத்தோடு செய்து வந்தபோதிலும் அது தப்பிதமாயும், மற்றவர்கள் உத்தம தேவ வணக்கத்திலிருந்து விலக ஏது பண்ணுகிறதாயுமிருந்தது என்று சொல்லவேண்டியது. நாம் தீமையாகத் தோன்றுகிற யாவற்றுக்கும் விலக்கிக்கொண்டால் மிகவும் நலமாயிருக்கும்.

இராஜ ஞானியார் தமது இராஜ்ய பாரத்தில் பலப்பட்டவுடனே தமது அரசாட்சிக்குட்பட்ட நாட்டதிபதிகளையும், சேனாதிபதிகளையும், நியாயாதிபதிகளையும், நகராதிபதிகளையும், குடும்பத் தலைவரையும், கோத்திரத் தலைவரையும் வரவழைத்து கிபியோனிலிருந்த ஒரு பெரிய மேடையண்டை கூடப் பண்ணி இராஜாங்க வாழ்வுக்காக கடவுளுக்கு பலியிட்டு, கடவுளை வணங்கி, உற்சவம் கொண்டாடினார். அன்

றையத்தினம் ஆயிரம் சர்வாங்கதகனபலிகள் செலுத்தப்பட்டன. அன்று இரவு அரசன் சந்தோஷத்தால் பூரித்து தன் பலிகள் சதாகாலமும் உயிரோடிருக்கிறவரால் அங்கிகரிக்கப்பட்டிருக்கிறதென்கிற நிச்சயத்தோடு சாங்கோபாங்கமாய்த் தூங்குகையில் ஆண்டவர் சொப்பனத்தில் தரிசனமாகி,

'நீ விரும்புகிறதை என்னிடத்தில் கேள்'

என்று வினவினர். இராஜ ஞானியார் இச்சமயத்தில் மகா விவேகமாய் நடந்துகொண்டார். அவர் பெரிய அரசனும், வாலிபமும், செல்வச் செருக்குமுள்ள அந்தஸ்துள்ளவராயிருந்தபோதிலும், உலகத்தார் நாடுகிறதுபோல நாடாமல், தேவ சித்தத்துக் கேற்றவைகளை மாத்திரம் கேட்டார். ஏரோது இராஜன் ஒருநாள் தன்முன் நடனமாடின சிறு பெண்ணினிடத்தில் உனக்கென்ன வேண்டுமென்று கேட்டபோது அவள், தன் தாயின் சத்துருவின் தலையைக் கேட்டாள். சாலொமோன் ஞானி அப்படிப்பட்ட வரமொன்றும் கேட்கவில்லை. கடவுள் உனக்கு என்னவேண்டுமென்று கேட்கிறது. பெரிய காரியமே அன்றி நாம் நமக்கு இன்னின்னது வேண்டுமென்று சொல்லுகிறது பெரிய காரியமல்ல என்பதை அவர் உணர்ந்து, கர்த்தாவே! நானோ போக்குவரவு அறியாத சிறு பிள்ளையாய் இருக்கிறேன், திரள் கூட்டமாகிய உம்முடைய ஜனங்கள் நடுவில் நீரே என்னை அரசனாக்கினீர்; ஆகையால் உம்முடைய ஜனங்களை நியாயம் விசாரிக்கவும் நன்மைதீமை இன்னதென்று வகையறுக்கவும் அடியேனுக்கு

'ஞானமுள்ள இருதயத்தைத் தந்தருளும்'

என்று கேட்டார். அந்த மறுமொழியை ஆண்டவர் கேட்டு மனமகிழ்ந்து, நீ உனக்கு நீடித்த நாட்களையாவது, ஐசுவரியத்தையாவது, சத்துருக்களின் பிராணனையாவது கேளாமல் ஞானத்தைக் கேட்டபடியால் ஞானமும் உணர்வுமுள்ள இருதயத்தை உனக்குத் தந்தேன்; அதோடு நீ கேளாத ஐசுவரியத்தையும் மகிமையையும் உனக்குத் தந்தேன் என்று திருவாக்கருளினர். அன்று முதல் இராஜ ஞானியின் ஞானமும், அறிவும், ஐசுவரியமும், மகிமையும் நிலையாய் விருத்தியானதால், அவர் அக்கால உலகத்துக்கும் எக்கால

உலகத்தாருக்கும் ஒரு அதிசயம்போல் விளங்கினர். இராஜ ஞானியார் கேட்டது தேவ சித்தத்துக்கு ஏற்றதாயிருந்தது; தேவனிடத்தில் கேட்கிறது சகல ஜீவன்களின் இயல்பாய் இருக்கிறது. ஆனல் அவருடைய சித்தமறிந்து கேட்பதே உத்தம விசுவாசிகளின் குணமாய் இருக்கவேண்டியது. அவர் நம்மிடத்தில் உனக்கு என்ன வேண்டியது என்று கேட்கும் காலத்தில், கர்த்தாவே! உமது சித்தத்தின்படி அடியானுக்குக் கட்டளையிடும் என்று சொல்லவேண்டியது. நாமாய் அவரிடத்தில் போகும்போது, ஆண்டவரே! நான் என்ன செய்யச் சித்தமாயிருக்கிறீர் என்று கேட்கவேண்டியது. இந்த தரிசனை அவருக்குள்ளிருந்த மகிழ்ச்சியை விருத்தியாக்கிவிட்டது. இதுதான் அவர் கண்ட முதலாம் தேவ தரிசனை. அவர் தமக்குக் கிடைத்த திருவாக்கை தலைமேல் சுமந்துகொண்டு, தமது இராஜதானியாகிய எருசலேமுக்கு வந்து, கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டிக்கு முன்பாக நின்று பலியிட்டு, தன் ஊழியக்காரரெல்லாருக்கும் விருந்து பண்ணினர்.

மேலும் இதினல் நாம் ஜெபங்களைச் செய்யக் கடவுள் நம்மை ஏவுகிறர் என்றும், ஜெபம் கேட்கப்படுவது ஒரு அபிப்பிராயமல்ல நிச்சயமென்றும் திட்டமாய் அறிகிறேம், இராஜ ஞானி தமது ஜெபத்தில் ஒரே ஒரு விஷயந்தான் தமக்கு வேண்டியதென்று கேட்டார்; அவர் ஞானம் மாத்திரம் கேட்டார். ஆனல் தேவன் அவர் விண்ணப்பத்துக்கு பதிலாக, ஞானம் கேட்ட மகனே! ஞானத்தோடே மாத்திரம் போ என்று சொல்லாமல், அதோடு உணர்வுள்ள இருதயத்தையும், ஐசுவரியத்தையும், மகிமையையும், நீடித்த நாளையும் தந்தோம் என்று சொல்லுகிறர். நாம் தேவசித்தத்துக்கேற்ற தொன்றைக் கேட்டால் அவர் தமது சித்தத்தின்படியான ஐந்தைத் தரலாம். அவருடைய சித்தமறிந்து ஒன்றைக் கேட்டு ஐந்தோடு திரும்பி வருகிறதற்கும் சித்தமறியாமல் ஐம்பதைக்கேட்டு ஒன்றும் கிடையாமல் வெறுங் கையோடு திரும்பி வருகிறதற்குமுள்ள வித்தியாசத்தை நீயே உணர்ந்துகொள்ளவேண்டியது.

இராஜ ஞானி தேவவரம் பெற்று தமது மந்திரி பிரதானிகளோடும், அதிபதி பிரபுக்களோடும் கொலுமண்டபத்தில்

விற்றிருக்கிற சமயத்தில் இரண்டு ஸ்திரீகள் வழக்குக்கு வந்தார்கள். அவருடைய அபிஷேக ஆரம்பத்தில் அவர் ஒழுங்குபடுத்தின தீர்மானங்களெல்லாம் தமது பிதாவின் அரசாட்சிகால பாக்கிவிசாரணையாய் இருந்ததென்று சொல்ல வேண்டியது. இதற்கு முன் அவர் அதோனியா விஷயத்தில் செய்த தீர்ப்பு அந்தரங்கமும் குடும்ப சம்பந்தமுமாய் இருந்தது; இந்த ஸ்திரீகளின் வழக்கோ அரசாட்சிக்குரிய முதலாம் வழக்காய் இருந்தது. இந்த வழக்கு காலத்தில் விசேஷ பலி உற்சவத்துக்கென்று வந்திருந்த மாகாண அதிபதிகள் அனைவரும் இருந்தார்கள். அவர்கள் தங்கள் நாடெங்கும் போய்த் தங்கள் அரசரின் மகத்துவங்களைப் பிரஸ்தாபிக்கட்டும் என்று ஆண்டவர் சித்தங்கொண்டாராக்கும். அரசர் செய்யும் விசாரணையைக் கவனித்து அவரவர் தம்தம் மாகாணங்களின் விசாரணையை நடத்தவும், அவர் கூறும் தீர்ப்பைக் கவனித்துக் கற்றுக்கொள்ளவுமாக சமஸ்த பிரபுக்களும் ஆவலாய் இருந்தார்கள். அவ்விரு ஸ்திரீகளும் ஒருத்தி வாதியும் இன்னொருத்தி பிரதிவாதியுமாய் வந்தார்கள். இருவரும் வேசிகள். வேசிகள் பகிரங்கமாய் வழக்காடுவதும் வழக்கத்துக்கு விரோதந்தான். இதுவும் மற்றவர்களுக்கு அதிசயத்தை உண்டாக்கியிருக்கலாம். பணவழக்காய் அல்லது நில வழக்காய் அல்லது பொருள் வழக்காயிராமல் பிள்ளை வழக்காயிருந்தது. இப்படிப்பட்ட வழக்கு உலகமுண்டானது முதல் இதுவரையும் கச்சேரிக்கும் விசாரணைக்கும் வந்திருக்கமாட்டாது. அந்த வழக்கைக் கேள்!

வாதி சொல்லுகிறாள்:—

முடிமன்னரே! அடியாள் பேச்சை முடியவும் கேளும்; ஆண்டவனே! நானும் இந்த ஸ்திரீயும் ஒரே வீட்டில் குடியிருக்கிறோம்; நான் ஒரு ஆண் குழந்தையைப் பெற்றேன், நான் பிள்ளை பெற்ற மூன்றாம் நாளில் இந்த ஸ்திரீயும் ஆண் பிள்ளையைப் பெற்றாள். நேற்று இரவு தூக்கத்திலே இந்த ஸ்திரீ தன் பிள்ளையின்மேல் புரண்டு படுத்ததினால் அது செத்துப்போயிற்று; அப்போது உமது அடியாளுக்கு நல்ல தூக்கமாயிருந்தது. நான் தூங்கும்போது இவள் எழுந்து

என் பிள்ளையை யெடுத்து தன் மடியிலே கிடத்திக்கொண்டு தன் செத்த பிள்ளையை என் மடியில் கிடத்திவிட்டாள். விடியற்காலத்தில் பால்குடிக்க பிள்ளையை எந்தினேன், அது செத்துப்போயிருந்தது. விடிந்த பின்பு முகத்தைப் பார்த் தேன், அது என் பிளளையல்லவென்று கண்டேன். அடியா ளுக்கு என் பிள்ளையை வாங்கிக்கொடுக்க வேண்டுமென்று மன்றாடுகிறேன் என்று சொல்லி சாஷ்டாங்க தெண்டனிட் டாள்.

உடனே அரசனும் பிரபுக்களும் ஆச்சரியப்பட்டார்கள். என்றாலும் பிரதிவாதி சொல்வதைப் பார்ப்போம் என்று அரசன் மற்றவளைக் கேட்டார்.

பிரதிவாதி சொல்லுவாள்:—

மகா ராஜாவே! உயிரோடிருக்கிறது என் பிள்ளை, செத்ததுதான் அவள் பிள்ளை என்று சொன்னாள். அதன் பேரில் அரசன் முன்புக்கே இருவருக்கும் வாதாட்ட மாயிற்று. அவ்விருவருடைய வாதாட்டத்தையும் அரசன் சற்றுநேரம் கவனித்து, இதற்கென்ன தீர்ப்பு செய்யலா மென்று ஆலோசித்துக்கொண்டிருந்தார். அவ்விடத்தில் கூடிவந்திருந்த மந்திரி பிரதானிகளுக்கும் இந்த வழக்கின் சாரம் பிடிபடவில்லை. இந்த வியாச்சியத்துக்கு சாட்சிகளே கிடையாது. ஒரே அற்ப காரியமாத்திரம் இருந்தது. அதா வது ஒரு குழந்தை மூன்று நாளுக்கு மூத்தது; அதை ரூபிக்கவும் கூடாது. ஏனெனில் பிந்தின பிள்ளை பிறக்கும் போதே புஷ்டியாய்ப் பிறந்திருக்கலாம், அல்லது செத்தவுடன் மட்டுமிஞ்சி உப்பியிருக்கலாம். அரசனுடைய விவேகம் இதில்தான் விளங்க வேண்டியதென்று அனைவரும் காத்திருந்தபோது அவர் திடீரென்று மெய்மறந்தவர்போல் துடித்து பட்டயத்தால் உயிரோடிருக்கிற பிள்ளையை இரண் டாகத் துண்டித்து ஆளுக்குப் பாதி கொடுத்துவிடுங்கள் என்று தீர்ப்புச் செய்தார். உடனே அரசன் கரத்தில் பட்டயமும் சேர்ந்தது. இந்தத் தீர்ப்பு கூடிவந்திருந்த ஜனத்துக்கு அதிசயத்தைக் கொடுத்திருக்கும்; இதைக் கேட்டவுடனே இதைப்போல முரட்டுத் தீர்ப்பை நாங்கள் கேள்விப்படவில்லை என்று சொல்லலாம். ஆனாலும் இது

தான் தீர்ப்பு. இதின் இரகசியம் இன்னும் சற்று நேரத்தில் வெளியாகும்.

அரசன் அந்தத் தீர்ப்பைக் கூறி பட்டயத்தை வாங்கின வுடனே உயிரோடிருக்கிற பிள்ளையின் தாயாகிய வாதி, தன் பிள்ளைக்காக அவள் குடல் துடித்ததால் இராஜாவின் பாதத்தில் விழுந்து, ஐயோ, என் ஆண்டவனே! உயிரோடிருக்கிற பிள்ளையைக் கொல்லவேண்டாம், அதை அவளுக்கே கொடுத்துவிடும் என்று அழுதாள். மற்றவளோ மகா ராஜாவின் தீர்ப்பு சரிதான்; எனக்கும் வேண்டாம் உனக்கும் வேண்டாம், பிளக்கட்டும் என்று இராஜ நீதியைப் புகழ்ந்து, நீதியினிமித்தம் துன்பப்படுகிறவளைப்போல பாசாங்கு பண்ணினாள். அரசன் உடனே அவர்கள் மனோபாகத்தையும் புத்திர நேசத்தையும் கண்ணுற்று அனுதாபப்பட்டவளே பிள்ளையின் தாயென்று தீர்த்து, உயிரோடிருக்கிற பிள்ளையை அவளிடத்தில் ஒப்புவித்தார். இராஜா தீர்த்த இந்தத் தீர்ப்பை இஸ்ரவேலரெல்லாரும் கேள்விப்பட்டு தேவன் அருளிய ஞானம் இராஜாவுக்கு உண்டென்று கண்டு அவருக்குப் பயந்தார்கள். அதிகாரிகள் ஞானமுள்ளவர்களும் விவேகிகளுமாயிருக்கவேண்டும். ஒரு இராச்சியத்தின் வாழ்வு அதின் தலைவரின் ஞானத்திலும் நீதியிலும் அடங்கியிருக்கிறதென்று சொல்லலாம். அந்தக் கிருபை பரத்திலிருந்து அருளப்படவேண்டும். ஆதலால் ஒவ்வொரு உண்மையுள்ள பிரஜையும் தன்னை ஆளும் அதிபதிகள் நீதியும் பரிசுத்தமுமாய் நடக்கவும், அவர்கள் தேவனுடைய கனத்தையும் மகிமையையும் எப்பொழுதும் நாடவும், அவர்கள் பட்சபாதமில்லாமல் உண்மையாய் நீதியைச் செலுத்தி துன்மார்க்கத்தைத் தண்டனையினாலே அடக்கி, சத்திய வேதத்தையும் சன்மார்க்கத்தையும் நிலைப்படுத்தி வரவும், அவர்கள் தங்கள் ஆளுகைக்குட்பட்ட தேசங்களில் சமாதானமும் செல்வமும், சத்தியமும் நீதியும், சன்மார்க்கமும் தேவபக்தியும் தலைமுறை தலைமுறையாக நிலைத்திருக்கும்படி ராஜ்யபாரத்துக்கடுத்த எல்லாக் காரியங்களையும் உறுதியான உத்தம அஸ்திபாரங்களின்மேல் ஸ்தாபிக்கும்படி அநுக்கிரகம் பண்ணவும் கடவுளை நோக்கி அடிக்கடி பிரார்த்தித்து வரவேண்டியது.

இராஜ ஞானியார் கிரீடாதிபதியான மூன்றும் வருஷத்தில் (கி.மு. 1012) தேவாலயத்தைக் கட்டும்படி பிரயத்தனப்பட்டார். இதற்காக தேவன் அவரை உயர்த்தி, இவருடைய அரசாட்சியையும் சமாதானமுள்ளதாக்கினார். தேச சமாதானம் குடிகளின் உலக வாழ்வுக்கு மாத்திரமல்ல, பரம வாழ்வுக்கும் அநுகூலமாயிருக்கிறது. 'கர்த்தாவே, எங்கள் காலத்தில் சமாதானத்தைக் கட்டளையிடும்' என்பது ஒவ்வொரு கிறிஸ்தவனுடைய மன்றாட்டாகவும் இருக்கவேண்டியது. இராஜ ஞானியார் பிறக்குமுன் இந்த வேலைக்கென்று அவர் முன் குறிக்கப்பட்டு தமது பிதாவின் மரணத்துக்கு முந்தி அதற்கென்று தைரியமாக்கப்பட்டார். அவரும் அதைக் குறித்து ஏதோதானோ என்றிராமல், அதற்குரிய பிரயத்தனங்களை யெல்லாம் ஊக்கத்தோடு செய்துவந்தார். அவர் ஒரு பெரிய அரசாட்சியைத் தமது தலைமேல் சுமந்து கொண்டிருந்தபோதிலும் ஏழு வருஷ காலமாக தேவ ஆராதனைக்கென்று ஒரு பிரதான கட்டடத்தைக் கட்ட இரவும் பகலும் கவலைகொண்டிருந்தார். இது நமக்கு அதிசயமாயிருக்கிறது. இக்காலத்தில் அந்தஸ்தும் உலக வாழ்வும் எவ்வளவுக்கு அதிகப்படுகிறதோ அவ்வளவுக்கு தேவாலயத்தையும் ஆராதனையையும்பற்றிய எண்ணம் தாழ்ந்துபோகிறது. இராஜ ஞானியாரோ தமது பொன்னையும், வெள்ளியையும், வெண்கலத்தையும், இரத்தினங்களையும் கர்த்தருடைய ஆலயத்துக்கென்று கொடுத்துவிட மனங்கோணவில்லை. என் வீட்டிலுள்ள வாழ்வெல்லாம் உம்முடைய வீட்டிலுள்ளதே என்று சொல்லுகிறவரைப்போல அவைகளைக் கர்த்தருக்கு மனப்பூர்வமாய்க் கொடுத்தார். தேவாலயக் கட்டுமானத்துக்கு அநுகூலமாக ஆண்டவர் தீருவின் ராஜாவாகிய ஈராமுக்கும் சாலொமோனுக்கும் சமாதானத்தைக் கட்டளையிட்டார். தேவன் நம்மை எந்த வேலைக்கென்று நியமித்திருக்கிறாரோ அதற்குரிய அநுகூலங்களையும் சகாயங்களையும் கட்டளையிடுகிறவராயிருக்கிறார். இராஜ ஞானியார் கட்டின தேவாலயத்தின் அலங்காரங்களையும் அதையடுத்த சகல நுட்பங்களையும் நாம் இவ்விடத்தில் எடுத்து சொல்ல முடியாது. மொத்தத்தில் சொன்னால் தாவீதரசன் ஆண்டவரால் போதிக்கப்பட்டு தமது குப

ங்குக் கட்டளையிட்ட அளவின்படிக்கும், அலங்காரப் க்கும், முறையின்படிக்கும் குறைவில்லாமல் சகலமும் றைவேற்றப்பட்டது. இதற்கென்று தாவீதரசன் தமது மாரனுக்கு ஒப்புவித்துவிட்டுப்போன பொன்னின் கிரயம் த்திரம் ஆயிரம் கோடி ரூபாய்க்கு அதிகமென்று ஒருவர் ணக்கிட்டிருக்கிறார். அக்கட்டடத்துக்கு வேண்டிய துரு மரங்களும் தேவதாரி மரங்களும் தீருவின் இராசா றல் லீபனோன் மலையிலிருந்து வெட்டி அனுப்பப்பட்டன.

தேவாலயம் கட்டி முடிந்தவுடனே இராஜன் பிரதிஷ்டை ண்டிகையை ஸ்தாபித்து நாடெங்கும் கட்டளையனுப்பி, திபதிகளையும் ஆசாரியர்களையும் கூடிவரப்பண்ணி, பலிக ாடும் ஜெபங்களோடும் தூபதீப ஆராதனைகளோடும் அக் ட்டத்தைப் பிரதிஷ்டை செய்தார். அச்சமயத்தில் ானுதி தேவன் தமது மகிமையை ஒரு மேகத்தின் மூலமாய் னுப்பி அக்கட்டடத்தை நிரப்பினார். அந்த மேகத்தி மித்தம் ஆசாரியர் ஊழியஞ் செய்கிறதற்கு நிற்கக் டாமற் போயிற்று. மேகங்களைத் தமது இரதமாக்கி ற்றின் செட்டைகளில் பறந்து கரும்புனல்களையும் காயத்து கார்மேகங்களையும் தமது ஒளிப்பிடமாக்கிக் காண்டு மனுப்புத்திரர் நடுவில் தாழ்கிற மேன்மை பாருந்திய யேகோவாவே! உமது அருள் பிரசாதத்தை டியானின் அகமாகிய ஆலயத்தில் அமரப்பண்ணுவீராக)ரா. 6,7,8 அதி. பார்). மகா மன்னராகிய சாலொமோன், ந்தப் பரம மகிமையைத் தான் கட்டின ஆலயத்துள் றங்கக் காணவே ஆனந்தப் பரவசம் பூண்டு, அடியற்ற ரம்போல விழுந்து ஆண்டவரை வணங்கி, தனக்கும் தன் ராச்சியத்துக்கும் வேண்டிய தேவகடாட்சத்துக்காக கனி ன் பிரார்த்தனைப் பண்ணி, தமது இராச்சியமெங்கும் மெய்த்தேவ வணக்கம் நிலைவரப்படும்படி அதிபதிகள் ல்லாம் ஜாக்கிரதையாயிருக்கும்படி புத்திசொல்லி ரதிஷ்டை பண்டிகையை முடித்தார். அரசர் இருந்தால், தய்வீக விஷயத்தில் இப்படியிருக்கவேண்டும். இக்காலத் ல் இதில் ஆயிரத்தில் ஒரு பங்கு முதலாய்க் கிறிஸ்து ார்க்க அதிகாரிகளாலும் அரசராலும் தெய்வீக விஷயங்கள் றைவேறக் காணோம். அஞ்ஞான அரசரால் விக்கிரக

வணக்கத்துக்குச் செய்யப்பட்ட முயற்சிகளில் பதினுயி. தில் ஒரு பங்கு கிறிஸ்தவ அரசாட்சிகளால் இல்லாததை காணும்போது மனவருத்தமாய்த்தான் இருக்கிறது.

இது விஷயத்தில் நாம் ஆளும் அரசாட்சியைக் குற் படுத்துகிறதைவிட நம்மையே குற்றப்படுத்திக்கொள் வேண்டியது. இக்காலத்தில் கிறிஸ்தவர்களாயிருக்கிற ந தேவாராதனை விஷயங்களைப்பற்றி அதிக அறிவும் வணக்க முடையவர்களாயிருக்கவேண்டும். அப்படிப்பட்ட குண நமது நாட்டுச் சபைகளில் இல்லை. விக்கிரகத்துக்குமு விழுகிறவனிடத்திலிருக்கிற பணிவும் தாழ்மையும் பயபக் யும் சிலவேளை கிறிஸ்துவின் பாதத்தில் விழுகிறவர்களிட தில் இல்லாமலிருக்கிறது. தற்காலத்திலிருக்கிற கிறிஸ் வர்களுடைய தேவதாபக்தி பிற்காலத்தாருக்கு மெய் பக்தியை உண்டாக்கும் கருவியாய் இருக்கவேண்டியது நாம் கடவுளை அடுத்து அவருடைய கட்டளைகளை மதித் அவரை ஆவியோடும் உண்மையோடும் வணங்கி வந்தா மாத்திரம் தேவ ஆசீர்வாதம் நம்மை முடிசூட்டும். 'நீங்க கர்த்தரோடிருந்தால் அவர் உங்களோடிருப்பார்; நீங்க அவரைத் தேடினுல் உங்களுக்கு வெளிப்படுவார்; அவர விட்டீர்களேயாகில் அவர் உங்களை விட்டுவிடுவார்' என் சத்திய சாஸ்திரம் அறிவிக்கிறது (1 நாளா. 15:2).

பக்திவிருத்தியுண்டாக்குவது பல வாழ்வுக்கு அநுகூ மாய் இருக்கிறது; அது இவ்வுலகில் மனச்சமாதானமாகி பாக்கியத்தையும் மறு உலகத்தில் நித்திய ஜீவனுகிய பாக் யத்தையும் தந்து சரீரத்தையும் ஆத்துமாவையும் வா வடையச் செய்கிறது; அது தனக்கும் தன் குடும்பத்து கும் தேவாசீர்வாதம் கிடைக்கும் ஏதுவாயுமிருக்கிறது சன்மார்க்கமும் நீதியும் சாதியை உயர்த்தும் என்பதை நாம் நன்ருய் உணர்ந்துகொள்ளவேண்டியது. இரா ஞானியர் தேவனுடைய வழிகளில் நடந்த காலமெல்லா அவருடைய ராஜ்யபாரம் சகலவிதமான வாழ்வையு அடைந்திருந்தது; தேசத்தில் அதிக வரும்படி வந்தது விஸ்தாரமும் அலங்காரமுமான அரமனைகள் கட்டப்பட டன; கோட்டைக்கொத்தளங்கள் பலப்படுத்தப்பட்டன

பட்டிக்காடுகள் பட்டணங்களாயின; கப்பல் வர்த்தகமும் கடை வியாபாரமும் விர்த்தியாயின; கல்வி அபிவிர்த்தியா யிற்று; கவிகட்டும் புலவரும் கத்திகட்டும் பராக்கிரமரும் எழும்பினார்கள்; பயிர்த்தொழிலும் விளைச்சலும் அதிகப் பட்டன; ஏரிகளும் கால்வாய்களும் உண்டாக்கப்பட்டன; மலைகளின்மேல் மெத்தை வீடுகளும் ஈச்சங்காடுகளில் அழகிய கட்டடங்களும் எழும்பின; சேனைகளுக்குள் இரதங்களும் குதிரைகளும் வழங்கப்பட்டன; பெனிக்கியர் எகிப்தியர் முதலிய அயல் தேசத்தாரோடு வியாபாரம் நடந்துவந்தது. இக்காலத்தில் யூதஜாதியார் தேறினவர் களாயிருக்கிற வியாபார சாஸ்திரம் சாலொமோன் காலத்தில் தான் முதலாவது ஆரம்பமாயிற்று என்று சொல்லவேண்டி யது. மேலும் அக்காலத்து வியாபாரம் இந்தியாவையும் இலங்கையையும் இராஜ ஞானியாரோடு கைகுலுக்கப்பண் ணிற்று. வருஷா வருஷம் பொன்னும் யானைத்தந்தமும் மயில்களும் குரங்குகளும் சந்தனக்கட்டைகளும் ஓப்பீரி லிருந்து சாலொமோனுக்குக் கொண்டுபோகப்பட்டது. அந்த ஓப்பீர் என்பது சிலரால் மலாக்கா, சுமுத்திரா தீவுகள் என்று அபிப்பிராயப்பட்டு வந்தபோதிலும், அது தென், இந்தியாவின் மேல்பாகமாகிய மலையாள நாட்டையும் இலங் கையையும் சேர்த்து குறிக்கிறதென்று தீர்மானிக்கத்தகுந்த நியாயங்கள் உண்டு. ஆ, இந்தியாவே! நீ சாலொமோன் அரசனோடு அநேக நூறு வருஷங்களுக்கு முன்னே உறவாகி உன் பொன்னால் அவர் இராச்சியத்தையும், உன் தந்தத்தால் அவர் சிம்மாசனத்தையும், உன் மயில்களால் அவர் தோப்பு களையும், உன் சந்தன சவ்வாதுக்களால் அவர் மனைவி மக்களையும் மகிழ்வடையச் செய்தாயே! இதோ, சாலொ மோனிலும் பெரியவரை நீ இன்னும் கண்டடையாமல் தடவுகிறாயே! அவருக்கல்லோ உன் வெள்ளியும் பொன்னும் உன் விலையுயர்ந்த வஸ்துக்களும் காணிக்கையாகவேண்டி யது. சாலொமோனிலும் பெரியவர் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவே. இந்தியாவிலுள்ள சகல மாந்தரே! அவரோடு உறவாகுங்கள், அவரைச் சேவியுங்கள்.

கங்கை சிந்து தீரங்கள்
காவேரிப் போக்குகள்
பெண்ணைப் பாலார்திக்குகள்
கண் ஆறும் காட்சிகள்;
ஆனால் அங்குள்ள மாந்தர்
அஞ்ஞான இருளால்
அழிந்துபோகிறார்கள்,
இரட்சிப்பார் இல்லாமல்.

இந்துதேசம் எங்கேயும்
சந்தம் வீசுதே பார்!
மல்லி முல்லை சவ்வாதும்
மணக்குதே நீ பார்!
மாந்தர் உள்ளம் ஐயையோ!
பாவசாபத்தீட்டால்
கெட்டுப்போயிற்றையையோ!
போதிப்பாரில்லாமல்.

இராஜ ஞானியார் ஆளுகைக்குட்பட்ட தேசங்கள் வாழ்வும் சமாதானமும், வர்த்தகமும் கல்வியும் அதிகப்பட்ட போதிலும் சன்மார்க்க விஷயத்தில் தாழ்வான சில குறிப்புகள் வெளிப்பட்டன. அவர், பக்கத்திலிருந்த அஞ்ஞான அரசருடைய அரமனை அழகையும் வெளிடம்ப பிரஸ்தாபத்தையும் பின்பற்றினார். இது அவருடைய சன்மார்க்கத்தைக் குலைக்கும் காரணங்களாயிருந்தன. தேவ ஆளுகைக்குட்பட்டிருந்த காலத்து அதிகாரம் தனக்கு பற்றுதென்று உணர்ந்து தன் இஷ்ட அதிகாரங்களைச் செய்ய ஆரம்பித்தார். அரசன் இட்டதே சட்டமாயும் அவன் நினைத்ததே நிறைவேறுதலாயுமிருந்தது. அரசன் வாக்குக்கு மறுவாக்குண்டோ என்ற பழமொழி சாலொமோன் காலமுதல் உலகத்தில் வழங்கத் தலைப்பட்டதென்று சொல்லவேண்டியதாயிருக்கிறது. அவருடைய இராச்சியபார போக்கெல்லாம் வரவரக் குடிகளின் க்ஷேமத்தைக் கருதுகிறது போல் இராமல் ராஜ கவுரதையைக் கருதுகிறதாகக் காணப்பட்டன. சாமுவேல் தீர்க்கர் அநேக ஆண்டுகளுக்குமுன் ஒரு இராஜாவால் நடக்கும் கேடுகள் இன்னவையென்று

சொன்னபடியெல்லாம் சாலொமோன் காலத்தில் இஸ்ரவேலருக்குச் சம்பவித்தது.

எகிப்து, பலஸ்தீனு, பெனிக்கேயா, பாரசீகம் முதலிய கீழ்த்திசைதேசங்களிலுள்ள அரசர் அநேக மனைவிகளையும், வைப்பாட்டிகளையும் வைத்துக்கொள்ளுகிறதுமான வழக்கத்தில் தேறினவர்களாயிருந்தார்கள். இராஜ ஞானியார் அதில் அவர்கள் எல்லாரையும்விட தாண்டிவிடவேண்டுமென்று ஆசைகொண்டார். அக்காலத்தில் மனைவிகளின் தொகை எவ்வளவு அதிகமோ அவ்வளவுக்குப் பெரியதனமாம். தாவீதரசனுகிய இவருடைய பிதா பதினுறு மனைவிகளைக் கலியாணஞ்செய்திருந்தார். இவருக்கு முப்பது நாற்பதல்ல, ஏழுநூறு மனைவிகளும் முந்நூறு வைப்பாட்டிகளும் இருந்தார்கள்.[1] அவர் அத்திசையிலுள்ள எகிப்தியர், மோவாபியர், அம்மோனியர், ஏதோமியர், சீதோனியர், ஏத்தியரான அநேக அந்நிய ஸ்திரீகளைப் படைத்துக்கொண்டார். இது தேவ கட்டளைக்கு முற்றிலும் விரோதமாயிருந்தது (யாத். 34:15; உபா. 7:3,4). சாலொமோனுடைய பந்தி சாமான்களும் பணிமுட்டும் விலையுயர்ந்தவைகளாயிருந்தன; அவர் சாப்பிடும் கிண்ணங்களும் குடிக்கும் பாத்திரங்களும் சுத்தப்பொன்னுகை இருந்தது. அவர் காலத்தில் வெள்ளிக் கிண்ணங்கள் ஏழைகளுடையதாக மதிக்கப்பட்டன. அவர் பொன் இழைத்த தந்த சிம்மாசனத்தில் வீற்றிருந்து ராஜ்யபாரம்பண்ணினுர்.

இந்த எல்லா விஷயங்களையிட்டு அவர் பேர் பிரஸ்தாபப்பட்டதோடு, தேவனுல் விசேஷ வரமாக அருளப்பட்ட ஞானமும் விவேகமும் அவரை அதிகமாய்ப் பிரஸ்தாபப்படுத்திற்று. அவருடைய தேசத்திலிருந்து அயல்தேசங்களுக்குப் புறப்பட்டுப்போகும் வியாபாரிகளும் அயல்தேசங்களிலிருந்து வரும் வியாபாரிகளும் சாலொமோனின் பவுசையும், பாட்டையும், ஞானத்தையும் தாங்கள் போகும் திசையெல்லாம் விதைத்தார்கள்; கிறிஸ்துவின்

---

[1] காஸ்ரோயெஸ் என்னும் பாரசீக இராசா தன் பள்ளியறைக்கு 3,000 மனைவிகள் உண்டென்று பெருமையாய்ச் சொல்லிக்கொள்ளுவானும்.

அடியார் அவருடைய அன்பின் பிரஸ்தாபத்தையும், இரட்சிப்பின் மகத்துவத்தையும் தாங்கள் போகும் இடங்களிலும் தங்கும் இடங்களிலும் பிரஸ்தாபிக்கக் கடமைப்பட்டவர்களாயிருக்கிறார்கள். இராஜ ஞானியாரின் விடுகதைகளும், விநோதகவிகளும், அரமனை பவுசுகளும், சேனை மகத்துவங்களும் எல்லாம் வழிப்போக்கரின் வழி நடைப்பேச்சாயும், உட்கார்ந்திருப்போரின் இன்ப அலப்பலாயும், சாப்பிடுவோரின் சம்பாஷணையாயும், கப்பலோட்டிகளின் கதையாயும், வியாபாரிகளின் விருந்துபேச்சாயுமிருந்தன. அவருடைய பேரைத் தூரமான அராபிதேசத்தின் தென்பாகத்திலிருந்த சேபா இராணி கேட்டு அதிசயப்படத்தக்கதாக அவ்வளவு பிரஸ்தாபமாயிற்று. அவளுடைய தேசத்தில் வாசனைத்திரவியங்களும் இரத்தினங்களும் திரளாயிருந்தன. அந்த இராணி அரசனைப் பார்க்கவும் அவருடன் கலந்து பேசவும் நோக்கங்கொண்டு விலையுயர்ந்த வெகுமதிகளோடும் திரண்ட பவுஞ்சோடும் ஒட்டகவாகனமேறி, வழியிலிருந்த பாலைவனங்களையெல்லாம் கடந்துவந்தாள். அவள் வந்த செய்தி இராஜ ஞானியாருடைய அரமனைக்குச் சந்தோஷத்தின்மேல் சந்தோஷத்தைக் கொடுத்தது. அவள் ராஜாவோடு சம்பாஷிக்கவும் அவருடைய ஞானங்களைக் கேட்கவும் விடுகதைகளால் அவரைச் சோதிக்கவும் ஆசைமூண்டு, விலையுயர்ந்த வாசனைவர்க்கங்களையும் ஒரு கோடியே இருபத்தைந்துலட்சம் ரூபாய் பெறுமான பொன்னையும் அவர் பாதத்தில் படைத்தாள். கீழ்த்திசை ராஜாக்கள் பணம் கட்டி விடுகதைமூலமாய் ஒருவித பந்தய ஆட்டம் ஆடுவது வழக்கமாய் இருந்தது. இந்த வழக்கந்தான் பிற்காலத்தில் இந்து அரசராலும் பாரசீக அரசராலும் பின்பற்றப்பட்டதென்றும், அவர்கள் வரவர ஞான சூதைவிட்டு லோக சூதைக் கையாடி தங்கள் இராஜ்யங்களை சூதுபொருளுக்காகத் தோற்று கஷ்டநஷ்டங்களை அனுபவிக்க நேரிட்டதென்றும் அநுமானிக்க வேண்டியதாயிருக்கிறது. இராஜ ஞானியாருக்கு அவருடைய விடுகதைகளாலும், மற்றவர்களுடைய விடுகதைகளை விடுவிக்கிறதாலும் திரண்ட பணம் சேர்ந்தது என்று சொல்லவேண்டியது. சேபாதேசத்து ராணி இன்னின்ன விஷயத்தை வினவினாள் என்று வேதத்

தில் விபரிக்கப்படவில்லை. அவள் 'தன் மனதில் இருந்த தெல்லாவற்றையுங்குறித்து அவரிடத்தில் விசாரித்தாள்' என்று மாத்திரம் சொல்லப்பட்டிருக்கிறது. இராணி கேட்ட விடுகதைகளையெல்லாம் சாலொமோன் விடுவித்தார்; அப்பால் அவருடைய ஆடம்பரங்களும் பவுசுகளும் அவளை அதிகமாய்ப் பிரமிக்கப்பண்ணிற்று. அவர் கட்டின அரண் மனையையும், பந்தியின் போஜனபதார்த்தங்களையும், ஊழி யக்காரரின் வீடுகளையும், உத்தியோகஸ்தரின் வரிசையை யும், அவர்கள் வஸ்திரங்களையும், அவருடைய பானபாத் திரக்காரரையும், அவர்கள் வஸ்திரங்களையும், கர்த்தருடைய ஆலயத்துக்குள் பிரவேசிக்கும் நடைமண்டபத்தையும், அவள் கண்டபோது ஆச்சரியத்தால் பிரமைகொண்டு ராஜாவை நோக்கி, 'உம்முடைய வர்த்தமானங்களையும் ஞானங்களையும்பற்றி நான் கேள்விப்பட்டது கொஞ்சம், காண்கிறதோ அதிகம்' என்று சொல்லி, அரசனையும் அவருடைய ஜனங்களையும் வாழ்த்தினாள்.

இவ்விடத்தில் நாம் சாலொமோனிலும் பெரியவருடைய ஞானத்தைப்பற்றி சில காரியங்களைச் சொல்லாமல் விடலா காது. இயேசுவின் பரம ஞானபோதனைகளுக்குச் சாலோ மோனின் ஞானம் எம்மாத்திரம்? அவர் ஞானம், அறிவு என்பவைகளின் பொக்கிஷங்களையுடையவர்; அவர் ஆலோ சனைக் கர்த்தர்; ஆதிகாலமுதல் மறைவாயிருந்த தேவ ஞானமெல்லாம் அவர் மூலமாய் வெளியாயின. அவருடைய ஞானவசனங்களில் இரண்டொன்றைக் கேளுங்கள்:—

ஆவியில் எளியோர் பாக்கியர்,
பரலோகம் அவர்களுடையது. } மத். 5:3.

இரக்கமுள்ளோர் பாக்கியர்,
அவர்கள் இரக்கம் பெறுவார். } மத். 5:7.

இருதய சுத்தர் பாக்கியர்,
அவர்கள் தேவனைத் தரிசிப்பார். } மத். 5:8.

ஒருவன் வலதுகன்னத்தில் அறைந்தால்
மறு கன்னம் திருப்பிக்கொடு. } மத். 5:39.

உன் சத்துருவை நேசி,
உன்னைச் சபிப்போனை ஆசீர்வதி. } மத். 5:44.

தேவனுடைய இராச்சியத்தை நாடு,
எல்லாம் உனக்குக் கூடும். } மத். 6:33.

இன்னும் நான்கு சுவிசேஷங்களிலும் பார்த்தால் இயேசு மொழிந்த ஞானவசனங்களை விபரமாய் அறியலாம். இந்தப் பரமஞான புருஷனை மதிப்போர் கொஞ்சம்பேர்; அவர் ஞானத்தால் நிறைந்திருந்தபோதிலும் ஞானமற்ற பைத்தியக்காரனைப்போல உலகத்தாரால் தள்ளிவிடப்படுகிறார். இந்தியாவே! நீ இயேசுவின் ஞானத்தைக் கேட்க ஏன் வரமாட்டேன் என்கிறாய்? சகல சம்பூரண ஞானத்தையுமுடைய இயேசுவை நோக்கி 'எங்களை விட்டு விலகியிரும், அவருடைய வழிகளை அறிய விரும்போம்' என்று இன்னம் எவ்வளவு காலம் தடுத்துக்கொண்டு நிற்கப்போகிறாய்? இயேசுவே! சாலொமோனின் ஞானம் சேபாவின் இராணியை இழுத்தது; உமது உன்னத ஞானம் இந்திய அரசர் யாவரையும் இழுத்து, உமது பாதத்தில் காணிக்கைகளைப் படைக்கக் கிருபைபுரியும்.

லோகஞானம் நாஸ்திகம்
பலதேவபூஜை
புத்து இஸ்லாம் ப்ராமணம்
ஆளும் இந்தியாவை
யேசுபாதம் சேர்க்கவே
வாரும் நல் நேசுரே!
இந்தியாவை யேசுக்கே
காணிக்கையாக்குமே!

இராஜ ஞானியாருடைய அரசாட்சியின் ஆரம்பத்தில் அவருடைய தேவதாபக்தி விஷயங்கள் உச்சிநேரத்து பகலோன்போல காந்தியும் பிரகாசமுமாயிருந்தபோதிலும், பிற்காலத்தில், அடைந்துபோகும் சூரியன்போல் தாழ்வடைந்தது. பக்தியின் அனல் இயல்பாய் ஒரே அளவான இலட்சணமுள்ளதல்ல. பக்தியை வளர்க்க உன்னதத்திலிருந்துவரும் திரு அக்கினி ஒரே நிறமாயிருந்தாலும், பாவ ஜலத்திலிருந்து வீசும் அதின் ஜுவாலை பல நிறமாகத்தானிருக்கிறது; அது மனுஷ பலவீனத்தையும் விழுதலையும் காண்பிக்கிறதேயன்றி தேவபக்திக்குரிய பூரண சுய லட்சண

மாயில்லே; அது வரவர எரிந்து வல்லமையாய்ப் பிரகாசிக்கும் ஒளியைப்போலிருக்கிறது. ஐயோ! இராஜ ஞானியின் பக்தி மாறிப்போய் அவருடைய பொன் களிம்பாயிற்று என்று சொல்வது அதிசயம்போல் காணப்படலாம். அயல் அரசர் அஞ்சின ஞானமும், ஜாதிகளை அவரிடத்தில் இழுத்த அருளும், மனுமக்களாகிய ஈக்களை வசப்படுத்தின அவருடைய அமிர்தவசனமும், கல்நெஞ்சனையும் கடவுளின் பாதத்தில் கிடத்தப்பண்ணின அவருடைய பக்திவிநயங்களுமெல்லாம் மறைந்து இருண்டுபோகும் காலம் வந்தது. ஐயோ! பசும்பொன் பித்தளையிலும் தாழ்ந்துபோகும் காலமுண்டோ? பக்திவிஷயத்திலுண்டு; ஆதலால் தன்னை நிற்கிறேன் என்று எண்ணுகிறவன் விழாதபடி பார்க்கக்கடவன். இராஜ ஞானியார் அநேகலட்சம் செலவிட்டு கட்டின ஆலயம் கைவிடப்பட்டது; பண்டிகை ஆசரிப்பும் நின்றுபோயிற்று; பலியாடுகளின் சத்தம் எருசலேமின் தெருக்களில் குறைந்தன; தூபதீபங்களின் புகை மேக ஆகாயத்தில் அபூர்வமாய்க் காணப்பட்டது. அவருடைய மார்க்க ஆரம்பத்தின் வாழ்வு இவ்வளவு தாழ்வான முடிவாக இருக்குமென்று யார்தான் எண்ணக்கூடியதாயிருந்தது?

இராஜ ஞானியார் எழுநூறு மனைவிகளும், முந்நூறு வைப்பாட்டிகளுமாக ஆயிரம் ஸ்திரீகளைப் படைத்திருந்தார் என்று நாம் முன்சொன்னோமே; அந்தச் செய்கைதான் இவ்வளவு கேட்டுக்கும் தாழ்வுக்கும் அவரை இழுத்துவிட்டது. பாதாள பூதமாகிய அப்பொல்லியோன் ராஜ ஞானியாரை பாவ படுகுழியில் தள்ள தன் வசத்திலுள்ள லேகியோன்களால் முடியாதென்று கண்டு, ஆயிரம் அழகிய லோகப் பெண்களைத் தன் படையோடு சேர்த்து சிற்றின்பக் கயிறுகளை அவருடைய அந்தகரணங்களில் பூட்டி இழுத்து விட்டான். ஐயோ, ஞானியாரே! நீர் பக்தி பர்வதத்திலிருந்து பாவ படுகுழியில் விழுந்துவிட்டதை நினைத்து மனம் கலங்குகிறேன். இனி சேபாவின் இராணி உம்மைத் தேடிவரமாட்டாள்; இனி உம்மை மதிப்பாருண்டோ? அவருடைய ஸ்திரீகள் அவருடைய இருதயத்தை வழுவிப் போகவும் அந்நியதேவர்களைப் பின்பற்றவும் சாயப்பண்ணினார்கள். ஐயோ! இம்மட்டும் பரலோகத்தை நோக்கின

மனதை இந்தச் சண்டாள ஸ்திரீகள் ஏகமாய்க் கூடிவளைந்து பாதாளலோகத்தின் திசையில் திருப்பிவிட்டார்கள். பெண்களைப் பெலவீன பாண்டமென்று அடிக்கடி சொல்லுகிறதுண்டு, ஆனால் எல்லாக் கிரியைக்கும் அவர்கள் பெலவீனரல்ல; சரீரவாழ்வை விர்த்திபண்ணும் விஷயத்தில் அவர்கள் பெலவீனர்தான். வெட்டவும், கொத்தவும், விதைக்கவும், அறுக்கவும், ஓடவும், சாடவும் அவர்கள் பெலவீனர்தான். ஆனால் ஆத்துமவாழ்வின் விஷயத்தில் அவர்களைப்போல் பலவான்கள் இல்லை. ஆதலால் ஸ்திரீகள் ஆத்தும வாழ்வு தாழ்வுகளின் வஸ்தாதுகள் என்று சொன்னாலும் தகும். ஐயோ, ஞானியாரே! சகல ஞானங்களோடும் படைக்கப்பட்ட ஆதாமும் பெண்ணால் விழுந்தான்; அநேக ராஜ்ய பாரங்களை ஞானமாய் ஆண்டு, பரமஞானங்களைப் பூரணமாய்ப் பெற்ற நீர் பெண்களால் விழுந்தீர். 'ஊருக்கெல்லாம் சாஸ்திரம் சொல்லும் கெவுளி காடியில் விழுந்ததாம்' என்று இத்தேசத்தில் வழங்கும் பழமொழி உம்முடைய சரித்திரத்தில் உறுதிப்படுகிறதாயிருக்கிறது. நீர் ஸ்திரீஜாதிகளை அடுத்து அவர்களால் மயங்கி இவ்விதமாக உம்முடைய நற்கீர்த்தியைக் குறைவுபடுத்தினீர். இப்படிப்பட்ட உமது பைத்தியத்துக்குத் தக்க ஆக்கினையாக உமது பிள்ளைகள் மடங்கடிக்கப்படவும், உம்முடைய பின்னடியார்மேல் தேவ கோபாக்கினை வரவும் இடமாச்சுது (ஏசு சீரா—ஞானம். 47:19,20).

ஞானியார் தமது சிற்றின்பவாஞ்சையோடே விக்கிரக வாஞ்சையும் உடையவரானார். அவருடைய மனைவிகள் அந்நிய ஜாதியாராகையால் இஸ்ரவேலரின் தேவனை அவமதிக்கிறவர்களாய் இருந்தார்கள் அவர்கள் மனதை திர்ப்திபடுத்தும்படி. அவர்கள் எந்த விக்கிரகத்துக்கு பீடம்போட சொன்னார்களோ அதற்கெல்லாம் ஞானியார் பீடம்போட்டு அவர்களோடு விக்கிரகவணக்கஞ் செய்தார். ஒரு கேட்டுக்கு இடம்கொடுக்கும்போது அது அந்த ஒன்றோடு முடியாது; ஏனெனில் எந்தக் கேடும் தனித்திராமல் சங்கிலித்தொடரா யிருக்கிறது. கேட்டின் சங்கிலியே பேயின் கழுத்தில் தொங்கும் ஆபரணமாயிருக்கிறது. அது வேசித்தனம், விக்கிரகாராதனை, பகை, விரோதம், விபசாரம் முதலிய

நரகலோக பசும்பொன்னால் செய்யப்பட்ட சங்கிலியாயிருக்கிறது. சாத்தான் ஒரு நெஞ்சத்துக்குள் பவனிவரும்போது அந்தச் சங்கிலி ஆபரணத்தோடுவந்து அதில் ஒரு சரத்தை கழற்றி பாவியின் இருதயத்தில் கட்டி தன் பின்னே கழுதையைப்போல் வரும்படி இழுத்துக்கொண்டுபோகிறான். இவ்வளவு பக்தனையும், ஞானியையும், அருள்பெற்றவனையும் புலவனையும், அரசனையும் சாத்தான் இக்கோலம் பண்ணுவித்தால் நாம் அவன் உபாயங்களில் அகப்படுவது எவ்வளவு நிச்சயம் என்று ஒவ்வொருவரும் உணர்ந்துகொள்ள வேண்டியது. இதினாலே நாம் சாத்தானுக்கு பயப்பட வேண்டியதில்லை. சிங்கத்துக்குப் பயப்பட்டதினாலே அதின் வாய்க்கு முறைப்படி இரையாகும்படி ஒரு காட்டிலுள்ள மற்ற மிருகங்களெல்லாம் தீர்மானஞ்செய்ததாம்; அப்படியே நடந்துவருங்காலத்தில் ஒரு நரி தன் விவேகத்தால் தன் உயிரைத் தப்புவித்து சிங்கத்தை அதமாக்கிவிட்டதாக ஒரு கதையுண்டு. இதில் ஒரு ஞானகருத்து எடுத்து சாத்தானுக்குச் சாட்டலாம். பாவிகள் அவன் தந்திரங்களுக்குப் பயந்து அவனுடைய கடைவாய்ப்பற்களுக்கு இரையாக முந்திக்கொள்ளாமல் பரலோக ராஜ்யத்தின் நரிகளாகவும், பரமஞானம் நிறைந்த நரித்தலை உடையவர்களாகவுமிருந்து அவனை அடியோடு அதம்பண்ணி தன்னையும் தனக்குப் பின்னடியாரையும் இரட்சிக்கப் பிரயாசப்படவேண்டியது. பிசாசு நம்மை நெருங்கவிடாமலும், அப்படியும் நெருங்கி விட்டால் அவனைத் துரத்தவும் ஆண்டவர் தமது வசனத்திலே முறைகள் காட்டியிருக்கிறார். அவையாவன:—

வரும்பிசாசைத் தடுக்கும் மருந்து. 'பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள், அப்பொழுது அவன் உங்களைவிட்டு ஓடிப் போவான்.'

வந்தபிசாசைத் துரத்தும் மருந்து. 'ஜெபத்தினாலும் உபவாசத்தினாலுமேயன்றி வேறெதினாலும் இவ்வித பிசாசைத் துரத்தப்படாது.'

இவ்வளவும் கேட்ட நாம் ஐயோ! விழுந்த ஞானியார் விழுந்தேபோனாரா? எழுந்திருக்கவில்லையா? என்று கேட்போம், அவர் எழுந்தாரென்று தெளிவாய்ச் சொல்லப்பட

வில்லே. எப்படியும் அவருடைய விழுதலால் அநேக நஷ்டங்கள் உண்டாயின. கர்த்தர் அவர்மேல் கோபமாயிருந்தார்; அவருடைய இராச்சியபாரம் பிரிக்கப்பட்டுப் போம் என்ற தேவதீர்ப்புக் கூறப்பட்டது. அநேக ஆளுகை நஷ்டங்களும் தேச நஷ்டங்களும் உண்டாயின; பலதிசைகளிலும் சத்துருக்கள் அதிகப்பட்டார்கள்; அவர்கீழ் கப்பங் கட்டினவர்கள் சுயாதீனராளுர்கள். அவருடைய வேலைக்காரனுக்கு இராச்சியத்தின் மிச்சமான பாகம் கொடுக்கப்படும் என்று தேவனுல் அறிவிக்கப்பட்டது. அவருடைய கடைசி முடிவைப்பற்றி வேதத்தில் யாதொன்றும் தீர்மானமாய்ச் சொல்லப்படாவிட்டாலும், பெரும்பாலும் இவர் பாவமன்னிப்பைப் பெற்று இருதய சமாதானமாய் மரித்தார் என்று எண்ணிக்கொள்ளப்படுகிறது. தேவன் சாலொமோனைக் குறித்து அவருடைய பிறப்புக்கு முன்னேபேசின வார்த்தைகளில் 'அவன் அக்கிரமம் செய்தால் நான் அவனை மனுஷனுடைய மிலாற்றினுலும், மனுபுத்திரருடைய அடிகளாலும் தண்டிப்பேன்.........சவுலேவிட்டு என் கிருபையை விலக்கினதுபோல அவனைவிட்டு விலக்கமாட்டேன்' என்று சொல்லியிருக்கிறபடியால் அவருடைய மரணம் பாவமன்னிப்பால் முடிசூட்டப்பட்டதென்று சொல்லவேண்டியது (2 சாமு. 7:14–15).

அவர் எழுதிய நீதிமொழிகளும் பிரசங்கியின் ஆகமமும் பிந்தியகாலத்தில் அவர் மனந்திரும்பினுர் என்பதை நன்கு வெளிப்படுத்துகிறது. அவர் தமது அந்தியகாலத்தில் ஒருதரம் தமது முந்திய நடபடிகளைத் தியானித்து பரவசமாகி மற்றவர்களுக்கு எச்சரிப்பாக 'என் கண்கள் இச்சித்தவைகளில் ஒன்றையும் நான் அவைகளுக்குத் தடைபண்ணவில்லே; என் இருதயத்திற்கு ஒரு சந்தோஷத்தையும் நான் வேண்டாமென்று விலக்கவில்லே; நான் செய்த முயற்சிகளில் எல்லாம் என் மனம் மகிழ்ச்சிகொண்டிருந்தது; இதுவே என் பிரயாசங்கள் எல்லாவற்றினுலும் எனக்கு வந்த பலன். என் கைகள் செய்த சகலவேலைகளையும், நான்பட்ட எல்லாப்பிரயாசத்தையும் கண்ணேக்கிப் பார்த்தேன்; இதோ, எல்லாம் மாயையும், மனதுக்குச் சஞ்சலமுமாயிருந்தது, சூரியனுக்குக்கீழே பலன் ஒன்றுமில்லே' என்று சொன்னுர்

(பிர. 2:10,11). என் சிநேகிதனே! லோகசம்பந்தமாய் நாடும் மனோபாக்கியத்துக்கு உன் நெஞ்சை விட்டுவிடாதே; அப்படி விட்டுவிடுவதினால் ஆத்தும வாழ்வு உண்டாகிறது. மெய்யானால், அந்த வாழ்வை ஞானியார் அநுபவித்திருப்பார்; அப்படி அவர் அநுபவிக்கவில்லை. அவைகளைப்பற்றி பின்னடியாராகிய நமக்கு அவர் எழுதிவைத்துப்போயிருக்கிற பொன் எழுத்து வாசகமென்னவென்றால்;—

'இதோ எல்லாம் மாயையும்
மனதுக்கு சஞ்சலமுமாய் இருக்கிறது'

சாலொமோனின் அக்கிரமங்கள் எவ்வளவு பொல்லாதவைகளாய் இருந்தபோதிலும் தேவகிருபை அவரை இரட்சிக்கக்கூடியதாயிருந்தது. பாவம் பெருகிய இடத்தில் தமது கிருபையை பெருகச்செய்கிற நமது தேவனுடைய கர்த்தருக்கு சமானமானவர் யார்? அல்லேலூயா! நாம் அவரைவிட்டுப் பின்வாங்கி அவர் வழிகளை மறந்து, நமது இஷ்டம்போல் நாசவழியில் இருக்கும்போதும் இரட்சகர் வந்து சீர்கெட்ட பிள்ளைகளே! திரும்புங்கள், உங்கள் சீர்கேட்டைக் குணமாக்குவேன் என்று கூப்பிடுகிறார். ஞானியார் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட விஷயத்திலும், ஆலயம்கட்டின விஷயத்திலும், ஞானியாயிருந்த விஷயத்திலும் லோக ரட்சகராகிய இயேசுகிறிஸ்துவின் முன் குறிப்பாய் இருக்கிறார்; அவரே உலக தோற்றத்துக்கு முன் மனுமக்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்டு எத்தனமாக்கப்பட்ட இரட்சகராயிருந்தார். அவர் பூலோகத்தைப் பரலோகம் போலாக்கும்படி அவதாரமெடுத்து தேவனுடைய சபையை உண்டுபண்ணி பரம வாசஸ்தலத்தைப் பூமியில் ஸ்தாபித்தார். அவருடைய அனந்தஞானமானது திருச்சபையின் மூலமாய் வெளியாக்கப்படுகிறது. சாலொமோனை நாடி அநேகர்வந்து அவர் ஞானத்தைக் கேட்டார்கள்: இயேசுவின் பரமஞானம் இன்னும் சரியாக அங்கிகரிக்கப்படக்காணோம். ஆனால் ஒரு காலம் வரும், அப்பொழுது இந்தியா முழுவதும் தங்கள் சுயஞானங்களை அக்கினிக்கு இரையாக்கி இயேசுவின் பாதமடைந்து பரமஞானங்களைக் கற்றுக்கொண்டு தேவஞானிகளாவார்கள். அப்பொழுது 'அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டி

யானவர் வல்லமையையும், ஐசுவரியத்தையும், ஞானத்தை யும், பெலத்தையும், கனத்தையும், மகிமையையும், ஸ்தோத் திரத்தையும் பெற்றுக்கொள்ளப் பாத்திரராய் இருக்கிறார்' என்ற கீதத்தின் மகா சத்தம் வானத்தில் மாத்திரம் அல்ல, பூமியிலுள்ள நமது இந்தியா முழுவதிலும் கேட்கப்படும்.

ரெகொபெயாம்

இதற்கு முந்தின சரித்திரத்தில் இராஜ ஞானியாராகிய சாலொமோனுடைய மகத்துவ அரசாட்சியையும், ஞானப் பிரஸ்தாபங்களையும்பற்றி வாசித்த நமக்கு இந்தச் சரித்திரத்தை வாசிப்பது உச்சிநேர சூரியப்பிரகாசத்திலிருந்து திடீரெனக் குச்சு வீட்டுக் காரிருளுக்குள் பிரவேசிக்கிறது போல் காணப்படும். இதிலும் அதிகமாய் நாம் அறியப் போகும் வரலாறுகள் இராஜ ஞானியாரின் மகனுடைய வரலாறுகள் என்பது அந்த ஆச்சரியத்தை ஆயிரமடங்கு அதிகரிக்கச் செய்கிறதாயிருக்கும்.

சாலொமோன் ராஜாவுக்கு ஆயிரம் மனைவிகள் இருந்த போதிலும் அவர்களில் ஒருத்திக்குமாத்திரம் ஒரே குமாரன் பிறந்தான்; மற்றவர்கள் வேறு அநேக பெண்களைப் பெற்றார்கள் என்பதற்குச் சந்தேகமில்லை. ஆண் என்று பிறந்தது ஒன்றுதான் அந்த ஆயிரம் மனைவிகளில் அநேகர் மலடிகளாயிருந்தாலும் இருக்கலாம். இந்த ஒரு ஆணையும் சாலொமோனின் முதலாம் மனைவியே பெற்றாள். இவன் ஒருவன் இராவிட்டால் ஞானியாரின் வீடு அவரோடு முடிந்துபோயிற்றென்று சொல்லவேண்டியதாய்த்தான் இருக்கும். ஆண்டவர் இந்த ஒரே மகனை அவருக்குக் கொடுத்ததும் பெரிய கிருபை என்றுதான் சொல்லவேண்டியது. அந்த ஆயிரம் பேரும் அதிகமான ஆண் பெண்களைப் பெறுவிட்டாலும், ஆளுக்கொரு ஆண்மாத்திரம் பெற்றது மெய்யானால் அந்த ஆயிரம் மக்களும் பிதாவின் பட்டம் எனக்கு எனக்கு என்று வாதாடி, அந்த நாடு முழுவதையும் தங்கள் இரத்தத்தால் நிரப்பியிருப்பார்கள். ஏனெனில் அத்திசையிலுள்ள பேரரசர் சிற்றரசர் பிரபுக்கள் பெரியோரெல்லாரும் இவர்களில் ஏதாவதொரு மனைவியின் இனபந்துக்களாகவே இருந்திருக்கலாம். ஆகவே அத்தனைபேரும் ஆளுக்கொரு ஆண்

பெற்றது நிசமானால் அநேக குழப்பங்களும், கலகங்களும் அந்த இராச்சியத்தில் உண்டாயிருக்கலாம். இராஜ ஞானி யார் தமது பள்ளியறைகளை ஆயிரம் மனைவிகளால் நிரப்பின போதிலும் இராஜாதி ராஜனாகிய ஆண்டவர் அவர் முற்றத் தில் உலாவ ஒரு பையனைமாத்திரம் கடாட்சம்பண்ணினார். அவருக்குக் கிடைத்த மகனும் ஒரு அம்மோனிய மனை விக்குப் பிறந்தவனாயிருந்தான். யூதரும் புறச்சாதியாரும் சாலொமோன் கொடிவழியில் ஒரே ஜாதியாக்கப்பட்டார்கள். கிறிஸ்துவுக்குள் யூதனென்றும் கிரேக்கனென்றும் வித்தியாச மில்லை; அவரில் நாம் எல்லாரும் ஒரே சகோதரராகிறோம். ஆயிரம் மனைவிகளையுடைய சாலொமோனுக்கு ஒரே மகன் இருந்தான் என்பது தேவ மகத்துவத்தை உயர்த்திவிடுகிற தாயிருக்கிறது. புத்திரசந்தான வாழ்வானது மனுஷன் வல்லமைக்குள் அல்ல, காரணகர்த்தரின் கிருபையிலிருக் கிறதென்று அறியவேண்டியது. ஒரு மனைவியையுடைய ஏழையின் வீட்டை அநேக புத்திரரால் நிரப்புகிறவரும், அநேக மனைவிகள் நிறைந்த பிரபுவின் வீட்டை புத்திரசந் தான மில்லாமல் செய்கிறவரும் கர்த்தரே. 'இதோ, பிள்ளை கள் கர்த்தரால் வரும் சுதந்தரம், கர்ப்பத்தின் கனி அவரால் வரும் பலன்' என்று தாவீதரசன் பாடியவசனம் உண்மை தான்.

ஞானியார் பெற்ற ஒரேமகன் ஞானியாய் அல்லோ இருக்க வேண்டியது? ஐயோ! காரியம் முற்றிலும் வேறாக இருந்தது. தகப்பனார் எவ்வளவுக்கு ஞானியென்று பேர் விளங்கினாரோ அவ்வளவுக்கு மகன் மதியீனனாய் விளங்கி னான். ரெகொபெயாம் தன் பிதாவின் இளவயதின் குமாரனா யிருந்ததால், பிதாவோடு நாற்பது வயதுமட்டும் இருந்து அவருடைய ஆளுகை விபரங்களை அறிந்திருந்தான்; என்றா லும் பிதாவின் ஞானமாவது அதின் காற்றாவது இவனிடத்தி லிருந்து வீசவேயில்லை. 'பூவோடு சேர்ந்து நாரும் மணம் பெற்றது' என்றொரு பழமொழியுண்டு. அது ரெகொபெ யாமுக்குச் செல்லாது. பலவான்கள் தங்களுக்குப் புத்திர பாக்கியத்தை உண்டுபண்ணிக்கொள்ள சக்தியில்லாதவர்க ளாய் இருக்கிறதுபோல ஞானவான்கள் தங்கள் ஞானத்தைத் தங்கள் மக்களுக்கு ஊட்டிவிட சக்தியற்றவர்களாயிருக்கிறார்

கள். இராஜ ஞானியாருக்குத் தமது ஒரே பட்டத்துக் குமாரனைப்பற்றி அதிக கவலையிருந்தது; என் மகன் ஞானியாயிருப்பானோ, மதியீனனாய் விளங்குவானோ, யார் அறிவார்? என்று அவர் அடிக்கடி சொல்லிவந்தார். ஆனால் பகல் மாறி இராவருவதுபோல ஞானி மாறி மூடன் சிம்மாசனம் ஏறினான். பிள்ளைகளின் பக்தியையும் புத்தியையும் பிதாக்களைக்கொண்டு தீர்மானிக்கக்கூடாது; பிதாக்களின் விசுவாசத்தையும் தேவ பக்தியையுங்கொண்டு பிள்ளைகளைத் தீர்மானிக்கவும் கூடாது. இதனாலே பக்தி, ஞானம், அன்பு, தாழ்மை, விசுவாசம் முதலிய வரங்கள் பிதாவழியாய் இறங்குகிறதில்லையென்றும், இவை வேண்டுமென்று ஆசைப்படுவோர் வானத்து நேராகத் தங்கள் கண்களை உயர்த்தி, கைகளை விரித்து, யாவருக்கும் சம்பூரணமாய்க் கொடுக்கிறவராயும், ஒருவரையும் அதட்டாதவராயும் இருக்கிற தேவனிடம் பெற்றுக்கொள்ளவேண்டுமென்றும் நாம் எச்சரிக்கப்படுகிறோம். சாலொமோன் தன் அரசாட்சியைப் பதினெட்டாம் பிராயத்தில் ஆரம்பித்தார்; அவர் மகனோ நாற்பதாம் பிராயத்தில் ராஜாவானான். என்றாலும் அரசாட்சியின் ஆரம்பத்தில் பாலிய ஞானியார் நரைத்த கிழவன் போலும், நரை ஆரம்பித்திருந்த ரெகொபெயாம் விளையாட்டு பையன்போலும் தங்கள் அரசாட்சியை நடத்தியிருக்கிறார்கள். ஞானம் வயது பார்த்து இறங்குகிறதில்லை. இவ்வுலகில் தாடைமயிர் முளையாத ஞானிகளும் நரைத்த தலையுடைய பாலரும் இருக்கிறார்கள் என்று சொல்ல வேண்டியது.

ஞானியார் மரித்தவுடனே ராஜ குடும்பத்தைக் குறித்து நாட்டாருக்குள்ளும், நாட்டதிபதிகளுக்குள்ளும் அந்தரங்கமாய்ப் பேசிக்கொள்ளப்பட்ட பல விஷயங்கள் பிரிவினைக்கு ஏதுவான கிரியையை உண்டாக்கிக்கொண்டிருந்தது என்று தோன்றுகின்றது. இதற்கெல்லாம் காரணம் ஞானியார் ஆயிரம் மனைவிகளைக் கட்டினதும், அந்நியதேவர்களை வணங்கி வந்ததுந்தான். சாலொமோன் வரவர சிற்றின்பத்தில் மனதைச் செலுத்தி விட்டதால் அங்கங்கே வைக்கப்பட்ட அதிகாரிகள் தங்கள் இஷ்டப்படி செய்யவும், குடிகளை வருத்தப்படுத்தவும் தலைப்பட்டார்கள். அதினால் அவர்கள்

மனமுறிவடைந்திருக்கலாம். இதன் ஆரம்பம் ஞானியார் காலத்தில் தானே துவக்கினது. யெரொபெயாம் என்ற ஒரு உத்தியோகஸ்தன் இராச்சியத்தைப் பிரித்துப்போட அப்பொழுதே முயன்றான். ஞானியார் அவனைப்பற்றி முன் ஜாக்கிரதையாயிருந்தபடியால் அவன் பயந்து எகிப்து இராசனிடத்தில் ஒதுக்கிடம் பெற்றிருந்தான். ஞானியாரும் எகிப்து அரசனும் ஒருவருக்கொருவர் மைத்துனர். எகிப்திய மைத்துனன் யூதாவம்ச மைத்துனனிடம் எவ்வளவோ சகாயங்களைப் பெற்றிருக்கவேண்டும். சாலொமோன் வீட்டையும் அவன் சொத்தையும் தன் வீட்டுப் பொருள்போல் அநுபவித்து வந்தபோதிலும் இச்சமயத்தில் தன் பந்துவுக்குப் பிராண விரோதியாகி, தன் பந்துவின் பிராணபகைஞனை கைவிரித்து அணைக்கிறவனாயிருந்தான். மைத்துனமித்திரம் மாறி சத்துருவாகிறது பூர்வ காலங்களில் அபூர்வமாய் இருந்தபோதிலும் இக்காலங்களில் அது சகஜமாயிருக்கிறது.

ஞானியார் காலத்துக்கலக்கம் யெரொபெயாம் ஓடிப் போனதோடு அடங்கிப்போனபோதிலும், அவர் மரித்தவுடனே மறுபடியும் ஆரம்பித்தது. ஞானியார் மரித்தவுடன் குடிகள் வந்து புது ராஜாவின் பட்டாபிஷேகத்தைத் தீவிரப்படுத்துகிறதற்கு பதிலாக, அரசனே அவர்களைக் கெஞ்சும்படி நேரிட்டது. அவன் தன் ராஜதானியைவிட்டுச் சீகேமுக்குப்போய் பிரபுக்களை வரவழைத்து தன்னை இராசாவாக்கிக்கொள்ளப் பிரயாசப்பட்டான். ஒருவேளை வடநாட்டார் அனைவரையும் வசப்படுத்திக்கொள்ள இதுதான் நல்ல வகையென்று வயதில் மூத்த ஆலோசனைக்காரர் ரெகொபெயாமைத் தூண்டியிருக்கலாம். அரசன் நகரம் விட்டு நாட்டுக்கு வந்தது நாம் நினைத்த காரியத்தை முடித்துக் கொள்ள நல்ல சமயம் என்று குடிகள் நினைத்து, உடனே எகிப்துக்கு ஆள் அனுப்பி ஓடிப்போன யெரொபெயாமை வரவழைத்தார்கள். மேலும் அவர்கள் அரசனுக்கு மனுப் பண்ணி தங்களுடைய தற்கால தீர்வை அதிகம் என்றும், அதைக் குறைக்கவேண்டும் என்றும் கேட்டார்கள். ஞானியார் அதிகத் தீர்வையை ஏற்படுத்தினது தேச வாழ்வுக்கு அநுகூலமாயிருந்தது. ஏனெனில் அவர் காலமெல்லாம் நாடெங்கும் சமாதானமும், நல்விளைச்சலும் அதிகப்பட்

டன; வெள்ளி மண்போல் மதிக்கப்படத்தக்கதாக வியாபாரம் விருத்தியாயின; கோட்டைக் கொத்தளங்களும், ஏரிகளும், கால்வாய்களும் கட்டப்பட்டன. அவர்கள் அதிக வரியினு லுண்டான தேச வாழ்வைக் கவனியாமல் ராஜமாளிகையில் நடந்த வீண் செலவுகளையெல்லாம் கவனித்து மனமுறி வடைந்தார்கள்போல் இருக்கிறது. அந்த விண்ணப்பத்தை அரசன் வாங்கி மூன்று நாள் தவணைகொடுத்து, தன் பிதா வின் காலத்து மந்திராலோசனைக்காரரோடே அதைப்பற்றி ஆலோசித்தபோது அவர்கள் பல காரியங்களையும் கவனித்து, ஜனங்களின் மனுவுக்கு இணங்கிப்போவது நலமென்று சொன்னார்கள். அது பற்றுதென்றும் இன்னும் தீர்க்க ஆலோசனை செய்யவேண்டுமென்றும் அரசன் பாராட்டி, வாலிபரான பலரைக் கூப்பிட்டு குடிகளுடைய மனுவுக்கு உங்கள் மனதின்படியான உத்தரவு என்னவென்று கேட் டான். இப்படி ஆலோசனை கேட்டுகிறது பிசகல்ல; ஆலோச னைக்கு ஆலோசனைக்காரரால் பெலமுண்டாகும் என்பது நிசந்தான்; ஆனால் மன அநுபோகங்களை மதலைக் குழந் தைகளிடத்தில் கேட்கிறதில் லாபமென்ன? அந்த வாலிபர் உலக ஞானங்களையெல்லாம் கரைத்துக் குடித்தவர்களைப் போல கண்ணை மூடி, நெற்றியைச் சுளித்து, உதட் டைக் கடித்து, தலையைத் தேய்த்து அரசனண்டை பின் வரும் மறுமொழியைச் சொன்னார்கள். மகா மன்னரே! நீர் உமது மனுஷருக்குச் சொல்லவேண்டிய மறுமொழி யாவது:—

என் சுண்டுவிரல் என் தகப்பனார் இடுப்பிலும் பருவன்;
என் பிதாவின் நுகம் பாரம், என் நுகம் அதிக
பாரமாயிருக்கும்;
பிதா சவுக்கால் அடித்தார், நான் தேள்களால்
கொட்டுவேன்

என்பதுதான் என்று சொன்னார்கள். இதைக் கேட்டவுடனே அரசனுக்கு ஆனந்தமாகிவிட்டது. மரித்த பிதாவானவர் உயிரோடெழுந்து இந்த ஞானமான மறுமொழியைச் சொல் லுகிறார் என்பதுபோல அவன் நினைத்திருக்கவேண்டியது. வாழுங்குடியைக் கெடுக்கவும், தழைக்கும் அரசாட்சியைத்

தாறுமாறுக்கவும் இந்த ஒரு உத்தரவு போதாதா? ஐயோ! ஞானியார் மகனே! உன் பைத்தியம் இப்படியும் வெளியாக வேண்டுமோ? புலிக்குப் பிறந்தது பூனையாகுமா? என்றொரு பழமொழியுண்டே? அது உனக்குச் செல்லாது. ரெகொபெயாம் ஞானிக்குப் பிறந்தமூடன்.

அரசன் வாக்குக்கொடுத்தபடி மூன்றும் நாள் பிரபுக்கள் அனைவரும் ராஜசமுகமேறி தங்கள் மனுவின் முடிவைக் கேட்டார்கள். இராசா கடைசி மட்டும் முதியோர் ஆலோசனைகளை முற்றிலும் தள்ளிவிட்டு, வாலிபத்தோழர் படித்துக் கொடுத்த உத்தரவைப் பள்ளிப்பாடம்போலச் சொன்னான்.

'என் சுண்டுவிரல் என் தகப்பனார் இடுப்பிலும் பருமன்' என்று சொன்னவுடனே, அவர்கள் அனைவர் தலையும் கீழே விழுந்தது. ஐயோ! லோகமெங்கும் பேரெடுத்த ஞானிக்கு இப்படிப்பட்ட மூடப்பிள்ளையும் பிறந்ததே என்று அதிசயித்தார்கள். இப்படித் தங்களை அவதூறு பண்ணின மகனை அவர்கள் கண்டிருக்கமாட்டார்கள். அப்பால்

'என் பிதாவின் நுகம் பாரம், என் நுகம் அதிக பாரமாயிருக்கும்' என்று சொன்னவுடன், அந்த நுகத்துக்கு எங்கள் கழுத்து குனியமாட்டாதென்று எதிர்க்கிறவர்களைப்போல உடலசைத்து தங்கள் முதுகைத் திருப்பினார்கள். கடைசியாக,

'என் பிதா சவுக்கால் அடித்தார், நான் தேள்களால் கொட்டுவேன்' என்று சொன்னவுடனே, அவர்கள் மூர்க்க வெறிகொண்டு 'தாவீதோடே எங்களுக்குப் பங்கேது, ஈசாயின் குமாரனிடத்தில் எங்களுக்குச் சுதந்தரமில்லை. இஸ்ரவேலே! நீ உன் கூடாரங்களுக்குப் போய்விடு; தாவீதே! உன் சொந்த வீட்டைப் பார்த்துக்கொள்' என்று சொல்லிவிட்டு அவரவர் மட்டில்போய் விட்டார்கள். இதோடு அநேக வருஷமாய் ஐக்கியப்பட்டிருந்த ராஜ்யம் இரண்டாகப் பிரிந்தது. இந்த பெரிய பிரிவினை யுத்தத்தாலும் கட்கத்தாலும் உண்டாகாமல் வார்த்தையினால் உண்டாயிற்று; ஆதலால் நமது வாயின் சொற்களைப்பற்றி எச்சரிக்கையாயிருக்கவேண்டும். ரெகொபெயாமின் வாயிலிருந்து எழும்

பின அக்கினிப்பொறிகள் இஸ்ரவேல் ராஜ்யத்தின் சமாதானத்தை ஒரே நிமிஷத்தில் கொளுத்திப்போட்டது; அவனுடைய வார்த்தைகள் வெண்ணெயைப்போல் மெதுவாயிருந்தாலும் அவைகளே யூதாவையும் இஸ்ரவேலையும் வெட்டிப்போட உருவின பட்டயமாயிருந்தது. இதற்குள் எகிப்திலிருந்து யெரொபெயாம் வந்து விட்டான்; உடனே அவர்கள் அவனைத் தங்களுக்கு ராஜாவாக அபிஷேகம் பண்ணினார்கள்.

குடிகளின் விண்ணப்பம் தள்ளப்பட்டதையிட்டு அவர்கள் மனமடிவாகித் தங்கள் தீர்வைப் பணங்களை நிறுத்திக் கொண்டார்கள்; உடனே அரசன் விசேஷ தாக்கீதுகளோடே ஒரு பகுதி விசாரிப்புக்காரனை அனுப்பி, பாக்கித் தீர்வைகளைத் தண்டும்படியாகவும் கலகக்காரரை அடக்கும்படியாகவும் கட்டளையிட்டான். பிரிந்த கூட்டத்தார் அனைவருங் கூடி அவனைக் கல்லெறிந்து கொன்றுபோட்டார்கள். அச் செய்தி கேட்டவுடனே இனி நாம் அரை நிமிஷம் இங்கே தாமதிக்கலாகாதென்று கண்டு சீகேமிலிருந்து தீவிரமாய் ரதமேறி எருசலேமுக்கு வந்தான். காரியம் மிஞ்சிப் போயிற்று. ராஜா பட்டபாட்டையெல்லாம் யூதா வம்சத்தார் கேள்விப்பட்டு இஸ்ரவேலரை பழையபடி தங்கள் அரசனின் அரசாட்சிக்குட்படுத்தும்படி யுத்தம் செய்ய ஆரம்பித்தார்கள்; ஆனால் தேவன் ஒரு தீர்க்கதரிசியைக் கொண்டு தடுத்தபடியால் தங்கள் பிரயத்னத்தை நிறுத்தி விட்டார்கள். இப்படி தேவ சித்தத்துக்கும் போதனைக்கும் இணங்கிச் சும்மாயிருந்துவிட்டது ரெகொபெயாமிடத்தில் விளங்குகிற ஒரு நல்ல குணந்தான். ஒவ்வொரு விஷயத்திலும் தேவ சித்தமுண்டென்று விசுவாசிக்கிறதும் அந்த சித்தத்துக்கு அடங்குவதும் கிறிஸ்தவர்களுக்கும் இருக்க வேண்டிய விசேஷித்த லட்சணமாயிருக்கிறது.

யெரொபெயாம் பத்துக் கோத்திரத்துக்கும் அதிபதியாகப் பட்டம் பெற்றுக்கொண்டு 258 வருஷங்களுக்கு முன்னே அபிமெலேக்கால் கட்டி மண் மேடாக்கப்பட்ட சீகேமை மறுபடியும் கட்டி கோட்டைக் கொத்தளமுள்ள நகரமாக்கி அதிலே தன் ராஜதானியை ஸ்தாபித்தான். இவ்

வண்ணம் தன் சிம்மாசனத்தை ஸ்தாபித்தவுடனே தனது குடிகள் எருசலேமை எந்தக் காரியத்துக்கும் நாடிப்போகாத படி என்ன செய்யலாமென்று கருதி ராஜ்யத்தின் வட எல்லையாகிய தாணிலும், தென் எல்லையாகிய பெத்தேலிலும் கன்றுக்குட்டி விக்கிரகங்களை உண்டாக்கி பண்டிகைகளையும் ஏற்படுத்தி தன் குடிகளை வரவழைத்து, ஓ ஜனங்களே! நீங்கள் பண்டிகைதோறும் எருசலேமுக்குப் போகிறது வருத்தமாயிருக்கும். இஸ்ரவேலரே! இதோ, இவைகள் உங்களை எகிப்திலிருந்து வரப்பண்ணின உங்கள் தேவர்கள் என்று சொல்லி ஜனங்கள் அவைகளைப் பணியும்படி ஏவினான். அவன் மேடையாகிய ஒரு கோவிலையும் கட்டி அதில் லேவியரான ஆசாரியர் ஊழியஞ்செய்ய மாட்டோமென்று சொல்லிவிட்டதால் ஜனத்தில் ஈனமானவர்களை ஆசாரியராக்கி, தன்னை மகா பிரதான ஆசாரியனைப்போல அவர்களுக்கு மேலாக உயர்த்திக்கொண்டு, தான் உண்டு பண்ணின கன்றுக்குட்டி. விக்கிரகங்களுக்கு முன்னே பலியிட்டுத் தூபங் காட்டினான். இவ்வளவு அக்கிரமத்துக்கு இவன் துணிந்த காரணமென்ன? இவன் கையில் பத்துக்கோத்திரத்தையும் கொடுப்பாரென்று அகியா சொன்னதுதான். தேவன் நம் மேல் தயவாயிருக்கிறதால் நாம் எப்படியும் செய்யலாமென்று இவன் துணிந்தான் போலிருக்கிறது. தேவ தயவு நம்மை குணப்படுதலுக்கு ஏவுகிறதேயல்லாம் நாம் நினைத்தபடியெல்லாம் செய்ய தைரியம் கொடுக்கிறதில்லை. சாத்தான் நமக்கு அருளப்படும் தேவ தயவைக் காட்டி நம்மைப் பாவஞ்செய்யத் தூண்டுகிறது முண்டு; அதற்குக் கிறிஸ்தவன் எச்சரிக்கையாய் இருக்கவேண்டியது.

யெரொபெயாமைப்போல் மெய்த்தேவ ஆராதனையையும், ஆவிக்குரிய பலிகளையும் செலுத்தும் தேவ சபையின் ஐக்கியத்தை விட்டு தன்னிஷ்ட ஆராதனைகளையும் முறைமைகளையும் ஏற்படுத்துகிறவர்கள் கிறிஸ்து சபையிலும் உண்டென்று சொல்லவேண்டியது. அவர்களுடைய ஆதிநோக்கம் தன்னயமாயும், கடைசி நஷ்டம் கிறிஸ்துவை விட்டு விலகிப்போகுதலாகவும் இருக்கிறதென்றும் சொல்லவேண்டியதாயிருக்கிறது. லேவியரான ஆசாரியர் யெரொபெயாமின் கன்றுக்குட்டிக்குமுன் தாங்கள் தூபகலசத்தை ஏந்த

மாட்டோமென்று சாதித்ததையிட்டு நாம் அவர்களைப் புகழ வேண்டியது. அவர்கள் ஜீவனுள்ள மெய்த்தேவனாகிய யெகோவாவின் கேருபீன்களுக்கும், உடன்படிக்கைப் பெட்டிக்குமுன் நின்று ஆராதனை செய்வதின் மேன்மையை இதினால் உறுதிப்படுத்தினார்கள். கலகக்கூட்டத்தாரின் தலைவனாயிருக்கிறதைவிட சமாதான தேசத்தின் சாதாரண குடியானவனாயிருந்தால் நலம்; சபைப் பிரிவினையின் தலைவராயிருக்கிறதைவிட தேவாலயத்தைக் கழுவித் துடைக்கும் வேலைக்காரராயிருக்கிறது நலம். யெரொபெயாம் இப்படித் தன்னிஷ்டப்படி பலியிட்டு, கன்றுக்குட்டி ஆராதனையை ஸ்தாபித்தது தேவ சித்தத்துக்கு விரோதமாயிருந்ததால் தேவன் அன்றையத்தினமே ஒரு தீர்க்கதரிசியை அனுப்பி அவனுக்கு வரும் தீர்ப்பைக் கூறும்படி செய்தார். அந்தத் தீர்க்கதரிசி அவன் பலியிடும் சமயத்தில் திடீரென்று வந்து 'பலிபீடமே! பலிபீடமே! தாவீதின் வம்சத்தில் யோசியா என்னும் பேருள்ள ஒரு குமாரன் பிறப்பான்; அவன் உன் முன் தூபம் காட்டும் ஆசாரியரை உன்மேல் பலியிடுவான்; அவர்கள் எலும்புகள் உன்மேல் வேகும் என்று கர்த்தர் சொல்லுகிறார்' என்று சொன்னான். தன் வார்த்தைகள் மெய்யென்பதற்கு இந்தப் பலிபீடம் வெடித்து இதன்மேல் வேகும் பலிச்சாம்பல் கொட்டுண்டுபோம் என்றான். இப்படிச் சொல்லவே அரசன் உக்கிர கோபமாகிய தன் கையை நீட்டி அவனைப் பிடியுங்கள் என்றான்; உடனே அக்கை மடக்கப்படாமல் திமிர்த்துப்போயிற்று; அதே சமயத்தில் பலிபீடமும் வெடித்தது. அப்பொழுது ராஜா பயந்து தன் கை குணமாகும்படி தீர்க்கதரிசியை வேண்டிக்கொண்டான். அவன் வருந்தி விண்ணப்பஞ் செய்ததின்பேரில் ராஜாவின் கை குணமாயிற்று. தேவ பணிவிடைக்குரிய ஊழியங்களைச் செய்ய எவரும் துணியக்கூடாது; அவர்கள் கர்த்தராலும் அவருடைய ஆவியாலும் ஏவப்பட்டவர்களாகவும், திருச்சபையின் அதிகாரிகளாலே ஒழுங்கின்படி அழைத்து அனுப்பப்பட்டவர்களாகவும் இருக்கவேண்டியது.

யெரொபெயாமின் அழிம்புகளைப்பற்றி இம்மட்டும் சொன்னது போதும்; இனி நாம் ரெகொபெயாமையே தொடர்ந்துபோவோமாக. பிரிந்துபோன பத்துக்கோத்தி

ரத்தாரை எதிர்ப்பதை விட்டு ஓய்ந்தவுடன் இனி தன் ராஜ்யத்தைப் பலப்படுத்திக்கொள்ளுகிறது நலமென்று ரெகொபெயாம் கருதி, பல அரண்களையும் கோட்டைகளையும் கட்டினான். சாலொமோன் திரவியத்தாலும் வாழ்வாலும் அவன் ராஜ்ய பாரத்திலுள்ள இரண்டு கோத்திரங்களும் வடநாட்டு பத்துக்கோத்திரத்தின் வாழ்வுக்கும் விருத்திக்கும் அதிகப்பட்டதாகவே இருந்தது. மேலும் கன்றுக்குட்டி ஆராதனையை அருவருத்த ஆசாரியரும் குடிகளில் பலரும் அவன் ராஜ்யத்தில் வந்து தங்கி, அதை ஸ்திரப்படுத்தினார்கள். ராஜ்ய பாரவாழ்வு ராஜ குடும்பத் தாழ்வை அடிக்கடி பிறப்பிக்கிறதுண்டு. நாட்டு வாழ்வைக்கண்டதால் ராஜா மகிழ்ச்சியடைந்து மெய்த் தேவனைவிட்டு சன்மார்க்க நெறி தவறினான். அரசனுடைய கேட்டை குடிகள் கற்றுக்கொள்ள அதிக வருஷங்கள் செல்லவேண்டுமா? 'அரசன் எப்படியோ குடிகளும் அப்படியே.' அவர்களும் தங்கள் அரசனைப்போல் ஆலயத்தையும், ஆராதனைகளையும், பலிகளையும், நியமங்களையும், நியாயங்களையும், நியாயப் பிரமாணத்தையும், போதனைகளையும் விட்டு விட்டு அவரவர் மனம்போனபடி நடந்தார்கள். ஐயோ! அவன் ஜீவனுள்ள தேவனை முற்றிலும் மறந்து விக்கிரகத்தைப் பின்பற்றினான்.

தேவன் தம்முடைய கனத்தை உரிந்துகொள்ள விரும்பும் மனுப்புத்திரருடைய கனத்தை அடியோடு உரிந்து போடுகிறார். ரெகொபெயாம் ராஜ்யபாரம் துவக்கின ஐந்தாம் வருஷத்தில் எகிப்தின் ராஜாவாகிய சீஷாக் எருசலேமுக்கு விரோதமாய்ப் படை யெடுத்துவந்தான். அவன் முதலாவது தென்னாட்டு அரணான பட்டணங்களைக் கீழ்ப்படுத்திக்கொண்டு, கடைசியாக எருசலேமைத் திரண்ட சேனையோடு முற்றிக்கை போட்டான். உடனே ரெகொபெயாம் இவ்வளவும் தேவசித்தத்தால் நடந்தேறுகிறதென்பதைத் தீர்க்கதரிசியால் அறிந்துகொண்டு சீஷாக்கை எதிர்க்காமல் அவன் கேட்ட நிபந்தனைக்கெல்லாம் இணங்கி, திரண்ட செல்வத்தை அவன் பாதத்தில் காணிக்கையாகப் படைத்து அவனோடு ராஜியாகி, அவனுக்குக் கீழ்ப்பட்டான். சாலொமோன் எகிப்தின் பெண்ணுக்குப் போனகாலம்போக, சீஷாக் எருசலேமின் பொன்னுக்கு வருங்காலம் வந்தது.

எகிப்தின் அரசனாகிய பார்வோன் வீட்டிலிருந்து பெண் பரிசமாக வந்த சொத்துக்களெல்லாம் திரும்பவும் எகிப்துக்கு எருசலேம் அடிமையான அபராதமாகச் செலுத்தப் பட்டது. சீஷாக், ஆலயத்திலும் அரண்மனையிலுமிருந்த பொக்கிஷங்கள் அனைத்தையும் கொள்ளையிட்டான்.[1]

இதற்கப்பால் நாம் அதிகமாக ரெகொபெயாமைக் குறித்து வாசிக்கிறதுமில்லை. அவன் பதினெட்டு மனைவிகளையும் அறுபது மறுமனையாட்டிகளையும் விவாகம்பண்ணி இருபத்தெட்டு குமாரரையும் அறுபது குமாரத்திகளையும் பெற்றான்; அவன் தன் நாற்பத்தோராம் வயதில் பட்டத்துக்கு வந்து, பதினேழு வருஷம் ராஜ்யபாரம்பண்ணி சஞ்சலத்தோடு தன் ஆயுளை முடித்தான். அவனுடைய தகப்பனால் அடிக்கடி கேட்ட ஞானமெல்லாம் வீணாய்ப் போயிற்று. தகப்பன்மாருடைய நல்ல போதனைகளைக் கேட்டும் சீர்ப்படாதவர்களில் இவனும் ஒருவனாயிருக்கிறான்.

---

[1] **தேவாலயச் சரித்திரப் பொழிப்பு:** கி.மு. 1005—588 எருசலேம் தேவாலயம் சாலொமோனால் பிரதிஷ்டையாக்கப்பட்டது முதல் பின்வரும் வரலாறுகள் அந்த ஆலயச் சம்பந்தமாய் நடந்திருக்கின்றன.

முதலாம் ஆலயம். கி.மு. 972இல் அது பிரதிஷ்டையாகி, 33 வருஷத்துக்குப் பின்பு எகிப்து அரசனாகிய சீஷாக்கால் கொள்ளையிடப்பட்டது. கி.மு. 856இல் யூதராஜனாகிய யோவாஸ் ஆலயத்தைப் பழுதுபார்க்கும்படி பணஞ்சேர்த்து நல்மனதோடு அந்த வேலை நடந்தது.

கி.மு. 740இல் யூதராஜனாகிய ஆகாஸ் சீரிய அரசனையும், இஸ்ரவேல் அரசனையும் விரோதிக்கும்படி அசீரியா ராஜாவாகிய திக்லாத் பிலேசரை ஏவும்படி தேவாலய பொன்னையும், பொக்கிஷங்களையும் கொள்ளையிட்டு பரிதானம் கொடுத்தான். மேலும் அவன், முன்னிலிருந்த வெண்கல பலிபீடத்தை மாற்றி தமஸ்குவில் தான் கண்டமாதிரியான பலிபீடத்தை ஸ்தாபித்தான். சில காலத்திற்குப் பின்பு அவன் ஆலயத்தைக் கொள்ளையிட்டு, அதிலுள்ள பரிசுத்த பாத்திரங்களை உடைத்து, அதின் கதவையும் சாத்திப்போட்டான்.

கி.மு. 736இல் ஆகாசின் குமாரனாகிய எசேக்கியா அடைபட்டிருந்த ஆலயத்தைத் திறந்து சுத்தம்பண்ணி, பழுதுபார்த்தான். ஆனால்

கி.மு. 713இல் அவன் ஆலயப் பொக்கிஷத்தை எடுத்து தன் ராஜ்யத்தைத் தாக்கும்படி வந்த சனகெரிப்புக்குக் காணிக்கை யாகப் படைத்து, அவனைச் சமாதானப்படுத்தி அனுப்பிவிடக் கட்டாயப்படுத்திவிடப்பட்டான்.

கி.மு. 698இல் எசேக்கியாவின் குமாரனாகிய மனாசே ஆலயப்பிராகா ரத்துக்குள் விக்கிரகங்களையும் பீடங்களையும் ஸ்தாபித்தான். ஆனால் பிந்திய காலத்தில் அதற்காக மனஸ்தாபப்பட்டு அவை களை அகற்றிவிட்டான்.

கி.மு. 624இல் யோசியா ஆலயத்தைப் பழுதுபார்த்து ஆசாரியரையும் நியமித்து கிரமப்படி பலிகள் நடந்துவரத் திட்டம்பண்ணினான்.

கி.மு. 606இல் யோயாக்கீம் ராஜன் காலத்தில் நேபுகாத்நேச்சார் வந்து ஆலயத்தைக் கொள்ளையடித்தான்.

கி.மு. 599இல் யோயாக்கீமின் காலத்தில் மறுபடியும் நேபுகாத் நேச்சார் வந்து ஆலயத்தைச் சேர்ந்த மற்றப் பாத்திரங்களைக் கொள்ளையடித்தான்.

கி.மு. 588இல் சிதேக்கியாவின் பதினோராம் வருஷத்தில் நேபுகாத் நேச்சார் ஆலயத்தை இடித்து அழித்துவிட்டான்.

இரண்டாம் ஆலயம். கி.மு. 535—170.

கி.மு. 535இல் செருபாபேல் இரண்டாம் ஆலயத்துக்கு அஸ்திபாரம் போட்டான்.

கி.மு. 515இல் சமாரியர் அந்தக் கட்டுமானத்தைத் தடுத்தும் அது கட்டிமுடிந்தது. அதின் உயரமும் அகலமும் முதலாம் ஆலயத் துக்கு இரட்டிப்பாய் இருந்தது.

கி.மு. 170இல் அந்தியோகு எப்பிப்பானுவால் கொள்ளையிடப்பட்டு தீட்டுப்படுத்தப்பட்டு, பலிபீடத்துக்குச் சமீபத்தில் யூப்பித்த ஒலம்பியாஸ் என்ற விக்ரகம் நிறுத்தப்பட்டது. மேலும் மூன்று வருஷகாலமாக பலிகள் நிறுத்தப்பட்டிருந்தது; மக்கபேயர் காலத்தில் பழையபடி மறுபடியும் பலியிட ஆரம்பிக்கப்பட்டது (1 மக். 4:52).

மூன்றாம் ஆலயம். (ஏரோதுவின் ஆலயம்.) கி.மு. 17-கி.பி. 70. கி.மு. 17இல் ஏரோது பழைய கட்டடத்தை இடித்துவிட்டு ஒரு புது ஆலயத்தை 46 வருஷமாகக் கட்டினான். ஆயிரம் வண்டிகளா லும் பதினாயிரம் சிற்பாசாரிகளாலும் வேலை நடந்தது; அந்த

வேலையை மேல்பார்க்க ஆயிரம் ஆசாரியர் நியமிக்கப்பட்டிருந்தார்கள்.

கி.மு. 7இல் ஆலயம் ஆராதனைக்கேற்றதாய் முடிந்தது.

கி.மு. 7 முதல் கி.பி. 64 மட்டும் அதில் வேலைகள் நடந்துகொண்டே வந்தது. முந்தின இரண்டு ஆலயங்களிலும் இது பெரியது.

கி.பி. 70இல் தீத்துஸ் என்ற உரோமை இராயன் ஆலயத்தை அஸ்திபாரமட்டும் தோண்டி அழித்துப்போட்டான்.

கிறிஸ்து சபையாகிய ஆலயம் பல மாறுதலுக்குட்பட்ட போதிலும் முற்றிலும் அழிந்துபோகாது; பாதாளத்தின் வாசல்களும் அதை ஜெயிப்பதில்லை. ஏனெனில் அதின் அஸ்திபாரங்கள் பரிசுத்த பர்வதத்திலுள்ளது.

யோசபாத்து அரசன்

நாம் ஆகாப், எலியா, எலிசா முதலியவர்களின் சரித்திர வரலாறுகளால் மார்க்க விஷயத்தில் இஸ்ரவேலரின் ஸ்திதி வரவர தாழ்வடைந்து வந்ததென்று அறிந்துகொள்ளுவோம். ஐயோ! அரசரும் குடிகளும் அடியோடு ஆண்டவருடைய வழிகளிலிருந்து விலகி அவரவர் மனம்போன போக்கின்படி விக்கிரகங்களை வணங்கி வந்தார்கள். இப்பொழுது நாம் இதே காலத்தில் அதின் பக்கத்திலிருந்த யூதவம்சத்தார் தேவதாபக்தி விஷயத்தில் எப்படிப்பட்டவர்களாய் இருந்தார்களென்று சற்றே கவனிப்பது தகுதியாயிருக்கும். இவர்களுக்குள்ளே பக்தி வளர்ச்சிக்குரிய பல குறிப்புகள் காணப்படுகின்றன. ஆராதனை விஷயத்திலும் சன்மார்க்க விஷயத்திலும் பல குறைவுகள் இருந்ததென்பது மெய்தான். ஆனால் தேவன் தாவீதுக்குக் கொடுத்த வாக்கின்படி அவனுடைய சந்ததியில் தொடர்ச்சியாய் அரசரை எழும்பும்படி செய்தார். அவர்கள் அப்போதப்போதே அவபக்தியை யூதாவிலிருந்து விலக்கிக் குடிகளுக்குள் மெய்த்தேவ வணக்கத்தை ஸ்தாபித்துவந்தார்கள்.

அந்த விசேஷித்த வேலைகளை முயற்சியாய் நிறைவேற்றினவர்களில் யோசபாத்து அரசன் விசேஷமானவன் என்று சொல்லவேண்டியது. இவர் ஆசா என்னும் பக்தியுள்ள அரசனுடைய குமாரனாயிருந்தார். ஆசா தன் குமாரனாகிய யோசபாத்தைக் கர்த்தருடைய வழிகளில் நடக்கும்படி கருத்தாய் கவலைப்பட்டிருக்கிறான் என்பதை இவருடைய சரித்திரம் நன்றாய் விளக்குகிறது. பிதாக்கள் தங்களுடைய பிள்ளைகளின் வளர்ப்பைக்குறித்து எப்பொழுதும் கவலையுள்ளவர்களாயிருந்தால் பிள்ளைகள் பக்தியுள்ளவர்களாய் வளருவார்கள் என்பதற்குச் சந்தேகமில்லை.

அவபக்தியுள்ள இஸ்ரவேல் அரசனுகிய ஆகாப் காஞ னின் வடதிசை தேசங்களின் செங்கோல் செலுத்தி வந்த காலத்தில் இந்த யோசபாத்து அரசன் தென்னுடுகளில் அரசுபுரிந்து வந்தார். ஞானியார் என்று நாம் அழைக்கும் சாலொமோன் அரசனின் கொடிவழியில் இவர் நான்காவது தோன்றின ராஜனுயிருந்தார். இவர் சுமார் இருபத்தைந்து வருஷகாலமாய் ஞானத்தோடும் பக்திவிநயத்தோடும் அர சாட்சி செய்துவந்து தேசத்தில் பக்திவளர்ச்சியும் நல்வாழ்வு முண்டாகும்படி ஓயாமல் கருதிவந்தார். அரசனின் தேவ பக்தியைக் கண்ணுற்ற குடிகளும் தேவபக்தியில் வளர்ந் தார்கள். 'அரசன் எப்படியோ அப்படியே குடிகளும்' என்று ஒருபழமொழியுமுண்டு. ஆ! சத்திய மார்க்கத்தையும், மெய்த்தேவ பக்தியையும்போல நன்மையானது வேறுண்டா? இந்தச் சரித்திரத்தால் விளங்கும் நல்லொழுக்கங்களைக் கண்டு அவைகளைப் பின்பற்றி நடப்பதே வாசிக்கிற ஒவ் வொருவருடைய கருத்தாயிருக்கவேண்டியது.

யோசபாத்து பட்டாபிஷேகம் பெற்றவுடனே தன் ராஜ்யபாரத்தைக் காபந்துசெய்வதற்கேற்ற முயற்சிகளை யெல்லாம் விவேகமாய் செய்துமுடித்துக்கொண்டார்; தன் அரசாட்சிக்குட்பட்ட சீரத்தை ஆளும்படிமாத்திரம் அவர் கருதாமல் அவர்களுடைய ஆத்துமாவையும் ஆவியையும் பந்தோபஸ்து செய்துகொள்ளும்படி தேவபக்தியையும், மெய்த்தேவ வணக்கத்தையும் தன் தேசத்தில் நிலைநிறுத்து வதே தகுதியென்று கண்டார். தன் தேசத்திலுள்ள வட நாட்டில் நடந்துவந்த விக்கிரகாராதனை முதலிய சகல அருவருப்புகளையும் அவர் அடியோடு பகைத்து, அவை களில் எந்தெந்த கேட்டைத் தன் நாட்டார் பிடித்திருந்தார் களோ அவைகளை நீக்கிப்போடும்படி பிரயாசப்பட்டார். தன்னை தேவ ஊழியங்களை நிறைவேற்ற வேண்டியவ னென்று சொல்லிக்கொண்டது மாத்திரமல்ல, அந்த ஊழி யங்களை உத்தம இருதயத்தோடு நிறைவேற்றுகிறவனுமா யிருந்தார். தெய்வீக விஷயங்களில் அவர் காட்டின ஊக்க மும் தைரியமும் கொஞ்சமல்ல. அவர் ஆசாரியரையும் லேவியரையும் ஊரெங்கும் அனுப்பி, அவர்களுக்குத் துணை யாக அரமனை மனுஷரையும் போகச் சொல்லி, பட்டணங்

களிலும் தேவனுடைய பிரமாணங்களைப் பிரஸ்தாபிக்கவும், பிரசங்கித்துப் போதிக்கவும் திட்டஞ்செய்தார். இவ்விதமாய்த் திருச்சபையின் பக்தியும் ராஜாங்கத்தின் பலமும் ஏகமாய்க்கூடி தேவநாமத்தை மகிமைப்படுத்திவந்தது. சொல்லவேண்டுமானால் யோசபாத்து அரசன் தன் பூட்டனாகிய தாவீதைப்போல நடந்துகொண்டிருக்கிறார்; ஆளுகை விஷயத்திலும் ஆராதனை விஷயத்திலும் தாவீதரசன் எவ்விதமாய் நடப்பித்துவந்தாரோ அதேவிதமாக இவரும் ஒழுங்குபடுத்தி அரசாட்சி செய்துவந்தார்.

இதினாலே அவர் காலமட்டும் தேசம் மொத்தத்துக்கும் பெரும் வாழ்வு உண்டாயிற்று. அவர் சீக்கிரத்துக்குள்ளாக ஐசுவரியத்திலும், கனத்திலும், சொற்சக்தியிலும் பலத்துப் போனார். அவர் குடிகளனைவரும் தொழுவத்துக்குள் அமைதலாய்த் தங்கும் ஆட்டுமந்தைபோல் சமாதானமும் சுகமும் பெற்றுவந்தார்கள். 'கர்த்தர் அவனோடிருந்தார்' என்று வாசிக்கிறோம். தேவன் தம்மை கனம்பண்ணுகிற பிள்ளைகளைக் கனம்பண்ணி காவல் காத்துவருகிறார் என்பது நிசந்தான். நாம் எப்போதும் தேவ பாராமரிப்பை சிந்தையில் கருதி ஜீவித்துவரவேண்டுமென்பதே வேதாகம ஏற்பாடாயிருக்கிறது. ஒவ்வொன்றிலும் தேவ நடத்துதல் உண்டென்று உணர்ந்தறிந்துகொள்ளுகிறவன் பாக்கியவான் என்று சொல்லவேண்டியது. அவருடைய சித்தமில்லாமல் அடைக்கலான்குருவியின் மயிர்முதலாய் தரையிலே விழுகிறதில்லை. நாமோ அடிக்கடி தேவசித்தத்துக்கு கனத்தைக் கொடாமல் இது என் அதிர்ஷ்டம், இது என் நல்வேளை, இது யோகதிசை என்று சொல்லிக்கொள்ளுகிறதுண்டு. இப்படி நினைப்பதும் சொல்லுவதும் மகா பிசகு. சம்பவிப்பவைகளெல்லாம் சர்வ வல்லவரின் கரத்தால்மாத்திரம் சம்பவிக்கிறது. அவருடைய கரத்தை நாம் காணக்கூடாததால் இப்படியெல்லாம் வீணாய் பிதற்றுகிறதேயன்றி வேறல்ல. இந்த விஷயத்தில் மெய்த்தேவ பக்தியின் மகத்துவமும், அதின் பிரயோசனமும் இன்னதென்று தெரியவருகிறது. மெய்ப்பக்தியானது எந்த நிலைமையிலும் அந்தஸ்திலும் சிறந்து விளங்குமென்பது மெய்யானாலும், அது அரசாட்சியோடும் ஆதிக்கத்தோடும் சேர்க்கப்படும்

போது மட்டற்ற லாபத்தை விளைவிக்கிறதாயிருக்கிறது. தேசத்து அதிகாரிகள் சத்தியத்தையும் நீதியையும் கையாடி சுவிசேஷ பிரபல்லியத்தைப்பற்றி பக்திவைராக்கியமுள்ள வர்களாயிருப்பதுண்டானால் அத்தேசத்தில் கர்த்தருடைய வேலை வல்லமையோடு விருத்தியாகி திரள் பலனைத்தரும் என்பதை ஒருவரும் ஆட்சேபிக்கக்கூடாது. அதிபதிகள் இவ்வண்ணம் மார்க்க விஷயத்தில் தலையிடுகிறது அவசிய மும் யூகமும் அல்ல என்று சிலர் எண்ணிக்கொள்ளுகிற துண்டு; அது முற்றிலும் பிசகான எண்ணம். பக்தியும் மார்க்கமும் மனுமக்களின் பூலோக பாக்கியங்களையாவது வாழ்வு விருத்தியையாவது குறைக்கிறவைகளாயிராமல், அமைதலும் அடக்கமுமுள்ள குணத்தைப் பெருக்கி ராஜாபி மானத்தைப் பிரபல்லியப்படுத்துகிறதாயிருக்கிறது. அது தேச காபந்தைத் தடுக்கிறதுமில்லை, கோட்டை கட்டுவதைக் கெடுக்கிறதுமில்லை, சேனை தளங்களைச் சிதறடிக்கிறது மில்லை, வியாபார விருத்தியைக் குறைக்கிறதுமில்லை, அறிவு விருத்தியை அழிக்கிறதுமில்லை. யோசபாத்து அரசன் பக்திநிலைமையில் நின்று பக்திவழியைக் கைவிடாதுபற்றி நடந்ததால் மேலே சொல்லிய தேசவாழ்வுகள் எவ்வள வேனும் குறைந்துபோகாமல் கூடிவந்ததென்றே காண் கிறோம்.

பக்தியுள்ள அரசர்மாத்திரமல்ல, அப்படிப்பட்ட ஒவ் வொரு புருஷரும் ஸ்திரீகளும் அந்தந்த ஊருக்கு அல்லது நகரத்துக்கு அல்லது தேசத்துக்கு ஆசீர்வாதத்தை வருவிக்கிறவர்களாயிருக்கிறார்கள். நமக்கு என்னென்ன அருள்கள் அளிக்கப்பட்டிருக்கிறதோ அவை களைத் தேவ நாமத்தின் மகிமைக்கும், மனுஷ இரட்சிப்பின் விஷயத்திற்கும் பிரயோகிக்கவேண்டுமென்ற கவலை நமக்குள் இருக்கவேண்டியது. நாம் மற்றவர்களை அடிக்கடி குறைகூற ஆரம்பித்தது இன்னின்னான் எவ்வளவு பெரிய காரியங்களையெல்லாம் நடப்பிக்கும்படி தேவ கிருபை கிடைத்திருக்கிறது. எனக்கு மாத்திரம் அந்தக் கிருபைகள் கிடைத்திருந்தால் இப்படி அப்படி யெல்லாம் செய்வே னென்று சொல்லுகிறதுண்டு; அது சரியல்ல. அதே சமயத் தில் நாம் நமக்குக் கிடைத்திருக்கிற குறைந்த வரங்களால்

தேவனுக்கடுத்த ஊழியங்களை குறைவாயாவது செய்யக் கூடுமே என்பதை யோசிக்கிறதேயில்லை. ஐயோ! இதெல்லாம் நமது இருதயத்தை நாம் ஆராயாததாலுண்டாகிற கேடேயன்றி வேறல்ல. யோசபாத்துக்கு இருந்த அந்தஸ்து உனக்கு மிருக்கிறதென்று ஒருவிதமாய்ச் சொல்லலாம். அவர் ஒரு ராஜ்யத்தை ஆண்டார், நீ ஒரு குடும்பத்தை ஆளுகிறாய்; அல்லது உன்னைமாத்திரம் ஆளும் அரசனாயிருக்கலாம். அவர் தன் குடிகள் தேவனை வணங்கவும், அவருடைய நியாயங்களையறியவும், பக்தியை விருத்தி பண்ணவும் பிரயாசப்பட்டதுபோல நீயும் உன் குடும்பத்துக்குள் பிரயாசப்படலாமே. தனக்குள்ளும் தன் குடும்பத்துக்குள்ளும் தேவ பக்தியை வளர்க்க இயலாதவன் கிரீடாதிபதியான பின்பு எங்கே வளர்ப்பான்? பட்டயம் வீசி பக்தியைப் பெருக்குகிறதிலும், பக்தியை வீசி பக்தியை பெருகப்பண்ணுகிறதல்லோ மேன்மை. கட்டளைகொடுத்து கடவுளுக்குக் கீழ்ப்படியப்பண்ணுகிறதைவிட, கடிந்துகொண்டு கனிந்துபேசி கீழ்ப்படியப்பண்ணுகிறதல்லோ மேன்மை. உன் போதனை ஒருவிதமாயும், செய்கை இன்னொருவிதமாயும் இருக்கலாகாது. இரண்டும் ஒன்றாய் உன்னில் பொருந்தி நின்று கடவுளை மகிமைப்படுத்துகிறதுண்டானால் அது மெய்த்தேவ பக்தியை விருத்தியாக்குமென்பது மெய்.

யோசபாத்து அரசன் ஆளும் திறமையிலும் தேவபக்தியிலும் சிறந்து விளங்கி கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட்டபோதிலும், தேவனே அவரோடிருந்தபோதிலும் அவன் ஒரு காலத்தில் பக்திநெறி தவறிநடந்தானென்று துக்கத்தோடே சொல்லவேண்டியதாயிருக்கிறது. ஐயோ! எவ்வளவு பக்திமானும் கர்த்தருக்கென்று எவ்வளவு அதிகமான வேலைகளை செய்தவனும் பக்தி நிலைமையின் தாழ்ந்த ஸ்திதிக்கு இறங்கிவிடக்கூடும். 'தன்னை நிற்கிறேனென்று எண்ணுகிறவன் விழாதபடிக்குப் பார்க்கக் கடவன்' என்று சத்தியவேதம் உணர்த்துகிறது. அவன் விக்கிரகாராதனையைத் தன் தேசத்திலிருந்து ஒழிக்கவும், மெய்த்தேவ வணக்கத்தை ஸ்தாபிக்கவும் எவ்வளவோ முயன்றபோதிலும் விக்கிரகாராதனைக்காரரோடு சிநேகமாயிருக்க ஆரம்பித்தான். ஒரு

வேளை அதினால் தன் பேர்பிரஸ்தாபத்துக்கும், தேசவாழ்வுக்கும் அனுகூலமுண்டாகுமென்று நினைத்தானுக்கும்! அப்படி நினைத்து அவர்களோடு சம்பந்தப்பட்டாலும் அது பிசகுதான். தேவமகிமையையே கருதி நிற்கிறவன் பேர்பிரஸ்தாபத்தையும் மற்றெந்த புறவாழ்வையும் எப்படி சட்டைபண்ணலாம்? என்றாலும் இப்படிப்பட்ட பலவீனம் விசுவாசிகள் எல்லாருக்கும் இருக்கிறதென்று காண்கிறோம். பரி. பவுல் 'நான் விரும்புகிற நன்மையைச் செய்யாமல் விரும்பாத தீமையையே செய்கிறேன்' என்று சொல்லியிருக்கிறார்.

ஒருவேளை தேவனால் அவருக்கிருந்த வாழ்வும் கனமும் ஒரு கண்ணியாய் இருந்திருக்கலாம். வாழ்வினால் உண்டாகும் ஆத்தும மோசங்களை நாம் அடிக்கடி கண்டிருக்கலாம். அது அடிக்கடி மனதை எழுப்பிவிட்டு தேவனுக்கு முன்னிலும் அதிக கனத்தைக் கொடுக்கிறதுபோல காணப்படும் முறைகளை மனதில் உண்டாகச்செய்கிறதுண்டு. அவைகளை நிறைவேற்றும்போதே அதிக கனவீனத்துக்கேதுவாய் முடியலாம். யோசபாத்து பொல்லாதவனாயிருந்த இஸ்ரவேல் அரசனாகிய ஆகாபோடே ஐக்கியமாயிருந்தான்; இதை யார்தான் சகிப்பார்? ஆகாபோடுகூட யோசபாத்துக்கு மனம்வந்ததும், அவன்கூட உலாவ கால்வந்ததும், அவனோடு பேச வாய்திறந்ததும், அவனைப் பார்க்க கண் சம்மதித்ததும் அதிசயமாயிருக்கிறது. இதினாலே பேசக்கூடாதென்பது கருத்தல்ல. யோசபாத்து அப்பால் நடந்துகொண்ட முறைகளைக் கவனித்தே இப்படிச் சொல்லுகிறோம். யோசபாத்து தன் மகனுக்கு ஆகாபின் மகளை விவாகம் செய்துவைத்தான். யோசபாத்தை சிநேகிக்கிற ஒருவன் இதைச் சகிப்பானோ? யோசபாத்தே! நீ ஏன் ஏசபேலின் மகளைத் தேடிப் பிடித்தாய்? எருசலேமுக்கும் ஏசபேலுக்கும் எவ்வளவுதூரமோ அவ்வளவு எருசலேமுக்கு வாழ்வென்று அறியாமற்போனாயோ? ஆ! எருசலேமின் தெருக்களின் அலங்காரத்தையும், கோட்டையின் அழகையும், கொத்தளங்களின் உயர்வையும், ஆலயத்தின் சிறப்பையும், ஆராதனையின் பக்தி விநயத்தையும் ஏசபேலின் மையிட்ட கண்கள் கண்டால் அப்புறம் மையிடமாட்டாளென்று நினைத்தாயோ! இந்த சம்பந்

தத்தின்மூலமாய் ஏசபேலேயும் இஸ்ரவேல் அனைத்தையும் எருசலேமுக்கு இழுத்துவிடலாமென்று எண்ணினாயோ? நீ எந்த உயர்ந்த நோக்கத்தோடு பெண்ணெடுத்தாலும் சரி, தாழ்ந்த நோக்கத்தோடு சம்பந்தம் கலந்தாலும் சரி; ஏசபேல் ஏசபேலாய்த்தானிருப்பாள். மேலும் இன்னும் நான் அந்த விஷயத்தில் ஒளியால் உரைக்க வேண்டிய இன்னொருவாசகமுண்டு. அதாவது: நீ போனபோக்கு கர்த்தருடைய பிரியத்துக்கு விரோதமாயிருந்தது; யோசபாத்தின் நடபடிக்கை இராச்சியமுழுவதுக்கும் ஒரு கெட்ட மாதிரியை உண்டு பண்ணிற்று; அவனுக்கு அது அதிக மோசமானதாய் முடிந்தது. தேறின பக்தரில் பதினாயிரத்தில் ஒன்று இப்படிப்பட்ட சம்பந்தங்களால் ரட்சண்யவிஷயத்தில் தப்பிக்கொண்டதுண்டு. மற்றவர்கள் அனைவரும் தங்கள் பக்தி பர்வதத்திலிருந்து சருக்கிவிழுந்து பாதாளம் கண்டிருக்கிறார்கள் என்று சொல்லவேண்டியது. இக்காலத்திலுங்கூட அஞ்ஞானமும் அவபக்தியுமுள்ள குடும்பங்களில் மாப்பிள்ளை அல்லது பெண்களைத் தேடிக்கட்டும் பக்தியுள்ள குடும்பத்தார் மற்றவர்களால் வேண்டாமென்று தடுக்கப்பட்டபோதிலும் கேளாமல், நாங்கள் அவர்களைக் குணப்படுத்தப்போகிறோம்; இந்த சம்பந்தத்தால் கெட்டகுடும்பம் நல்ல குடும்பமாய் மாறுகிறது சந்தோஷமல்லவா என்று பக்திவேஷமாய்ப் பேசுகிறதுண்டு. அவர்கள் தங்கள் மனதுக்குள் இருக்கும் பொருளாசையையும், பேர்பிரஸ்தாபத்தையும், மற்ற அற்பவாழ்வையும் வெளிக்குக் காட்டாமல் மாயபக்தி என்ற மண்குதிரையின்மேலேறி மணம்புரியும் லோகத்தாரேயன்றி வேறல்ல. வாசிக்கிறவனே! நீ அப்படிப்பட்ட சம்பந்தங்களுக்கு விலகிக்கொள்வாயாக.

யோசபாத்து ஆகாபோடு பண்ணின கலியாண சம்பந்தமானது கத்திசம்பந்தத்துக்கும் இழுத்துவிட்டது. எப்படியெனில், யோசபாத்து தன் கலியாண சம்பந்தமுறைபடி ஆகாபோடே போக்குவரவாயிருக்கையிலே அவன் யோசபாத்தைத் தன்னோடு சீரிய ராஜாவுக்கு விரோதமாய்ப் படையெடுத்து வரக்கேட்டான்; இனி யோசபாத்துக்கு இல்லை கூடாது என்று சொல்ல வாய்வருமா?—அப்படி வர

லாமா?—சம்பந்தக்காரராச்சுதே. ஆகாப் கேட்டவுடனே அரசன் சொல்வான்:

'நான்தான் நீர்'

'என்னுடைய ஜனங்கள் உம்முடைய ஜனங்கள்'

'உம்மோடுகூட யுத்தத்துக்கு வருகிறேன்'

என்று சொன்னான். ஆகாப் கேட்டதற்கு இல்லையென்று சொல்லவேண்டியவனுடைய ஆத்துமஸ்திதியானது இவ்வளவு சீக்கிரத்துக்குள் தன் சம்மததத்தை மும்முறை மூன்று வித வாசகத்தால் வற்புறுத்திக் கூறும்படி மாறிப்போனது எவ்வளவு ஆச்சரியமாயிருக்கிறது. என்றாலும் அவனிடத்தில் பக்தி அனல் முற்றிலுமாய் அணைந்துபோகவில்லையென்பதற்கு ஒரு குறிப்பு காணப்பட்டது. எப்படியெனில் அந்த யுத்தத்துக்குப் போவதைப்பற்றி தேவசந்நதம் எப்படியென்று அறியவேண்டுமென்று யோசபாத்து கவலையாயிருந்தான். ஆகாபின் வீட்டுக்குள்ளிருந்து ஆண்டவரைத் தொழுவது அசாத்தியமல்லவா? அவன் வீட்டுக்குள் ஆண்டவருடைய தீர்க்கதரிசிகளுக்கு நிற்க ஸ்தலமும், உட்கார ஆசனமும் கிடைக்குமா? கிடையாது. யோசபாத்தின் ஆசையை நிறைவேற்ற ஆகாப் பாகாலின் பூசாரிகளை வரவழைத்தான்; உடனே 400 பேர் பாதாளலோகத்து அதிபதியின் மக்களாய் ஆகாபின் வீட்டில் ஆடுகளைப்போல் வந்துகூடினார்கள். எலியா அவர்களைக் கொலைசெய்தது போல யோசபாத்தும் கொலைசெய்ய வேண்டுமென்று அவன் முன் ஆண்டவர் நிறுத்துகிறாராக்கும். யோசபாத்து அப்படி ஆகாப் வீட்டில் செய்ய மனம்வருமா? அவர்கள் சொன்ன பித்தலாட்டமான சன்னதத்தையெல்லாம் யோசபாத்து கேட்டான்; அவன் மனம் திருப்தியாகவில்லை. சர்வஞானியின் ஆலோசனைகளை அறிந்தவன் இதை ஒப்புக்கொள்வானா? பின்பு கர்த்தரின் தீர்க்கதரிசியைக் கேட்டாலன்றி என் மனம் திர்ப்திபடமாட்டாதென்று அரசன் சொன்னதின்பேரில் மீகா என்ற ஒருவனைக் கொண்டு வந்தார்கள். அவன் தேவ ஆவியால் ஏவப்பட்டு அந்த யுத்தத்தில் வரும் நஷ்டங்களையெல்லாம் சொன்னான். ஆகாபோடு இருந்த பாசம் தேவனுடைய தீர்க்கதரிசியின் வார்த்தையைத்

தூரவைத்துவிட்டு தன் இஷ்டப்படிச் செய்ய ஏவிற்று. யோசபாத் ஆகாபோடே கூடிப்போனான். இப்படிச்செய்ய தன் மனதில் தீர்மானித்திருந்தவன் பக்திமான்போல் கர்த்தருடைய தீர்க்கதரிசியைக் கேட்கவேண்டுமென்று சொன்னது மாயமல்லவா? தேவகிருபையிருந்து ஆளுகைசெய்த நெஞ்சத்தில் உலகம் பிரவேசித்தபின் அது மாய்மாலமான பக்தியைத்தான் வெளிப்படுத்தும் என்று சொல்ல வேண்டியது.

யோசபாத்தின் செய்கை சிலருடைய மனதுக்கு குற்றமாகக் காணப்படுகிறதில்லை. அவர்கள் சொல்லுகிறார்கள்: திரளான வாழ்வைநாடி விவேகமாய் நடந்து அதைச் சம்பாதித்துக்கொள்ளுகிறது தோஷமா? அந்த அதன் வாழ்வினால் தேவனை முன்னிலும் அதிகமாய்க் கனப்படுத்திவரலாமே என்பார்கள். தன் புத்திக்கு வாழ்வாய்த் தோன்றுகிறதெல்லாம் மெய் வாழ்வு என்று சாதிப்பது புத்தியீனமல்லவா? மேலும் வாழ்வை விவேகமாய்த் தேடுகிறேனென்று சொல்லிக்கொண்டு தெளிவான தேவ கட்டளையை மீறுகிறது சரியல்லவே. ஆனால் பெரும்பாலும் நாம் காண்கிறபடி பொருளாசையை நாடி அதின் மூலமாய்க் கடவுளை மகிமைப்படுத்தப்போகிறோம் என்று கிரியைகளை நடப்பிக்கிறவர்களுடைய காரியமெல்லாம் கடைசியிலே மோசமாய் முடிகிறது. யோசபாத்து ஆகாபோடு யுத்தத்துக்குப்போய் தன் உயிர்தப்பி வந்ததே பெரிய காரியம்; அற்புதமாய்த் தப்பினானென்றே சொல்லவேண்டியது. சத்துருக்கள் அவன் பிராணனை வாங்கும்படி நெருங்கின சமயத்தில் கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டான்; அவர் அவன் அங்கலாய்ப்பைக் கேட்டருளி இரட்சித்தார். ஆபத்து காலத்தில் நம்மை ஆதரித்துக் காக்கும் அநாதி தேவனுக்கு அநுதினமும் துதியுண்டாவதாக. அல்லேலூயா! அரசன் தேவாதீனமாய் உயிர்தப்பி தன் அரமனை வந்து சேர்ந்தான். உடனே தேவன் ஒரு தீர்க்கதரிசியை அனுப்பி அவன் செய்கையைக் கண்டித்தார். தீர்க்கதரிசி அரசனிடம் சேர்ந்து அரசரே!

'துன்மார்க்கருக்கு துணைநின்று,
கர்த்தரைப் பகைக்கிறவர்களை நீர் சிநேகிக்கலாமா?'

என்று சொல்லி எச்சரித்தான். 'துன்மார்க்கருடைய ஆலோசனையில் நடவாமலும், பாவிகளுடைய வழியில் நில்லாமலும், பரியாசக்காரர் உட்காரும் இடத்தில் உட்காராமலும் கர்த்தருடைய வேதத்தின்மேல் பிரியமாயிருந்து இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்' என்பதே தேவ ஞான சுலோகமாகவிருக்கிறது. பரிசுத்தவான்கள் தங்கள் சீர்கேடுகளினிமித்தம் தண்டிக்கப்பட்ட போதிலும் அழிக்கப்பட்டுப் போகிறதில்லை என்பதையும் இதினால் அறிந்துகொள்ளுகிறோம்.

யோசபாத்து ஆகாபின் வீட்டோடு ஐக்கியப்பட்டதால் தன் குடும்பத்திலும் தேசத்திலும் சீர்கேடுகள் நேரிட்டிருக்கிறதென்பதை நன்றாய்க் கண்டுகொண்டான். ஒருவன் பக்தி பர்வதத்தில் ஏறுகிறதைப் பார்த்து அவன் பின்னால் ஏறும்படி பிரயாசப்படுகிறவர்களுடைய தொகையிலும், ஒருவன் பாவ பாதாளத்துக்கு இறங்குகிறதைப் பார்த்து அவன் பின்னால் இறங்கும்படி அல்லது முந்திச்சாகும்படி தீவரிக்கிறவர்களின் தொகை நூறு பங்கு அதிகம் என்று சொல்லவேண்டியது. அரசன் உயிர்தப்பி வந்தவுடனே தன் குடும்பத்திலும் ராஜ்யத்திலும் நேரிட்டிருந்த சீர்கேடுகளை அகற்றி சுத்திகரிக்கும்படி விரும்பினான். அவன் அங்கங்கே நியாயாதிபதிகளையும், அதிகாரிகளையும் நியமித்து நிதியாய் ராஜ்யத்தை ஆண்டு ஜனங்களை அவர்கள் தேவனாகிய கர்த்தரிடத்துக்குத் திருப்பினான்.

யோசபாத்து ஆகாபோடு சேர்ந்த நஷ்டம் வேறுவிதமாய் விளங்கிற்று. மோவாபின் இராசா அம்மோன் புத்திரரோடு கூடிக்கொண்டு அவனுக்கு விரோதமாய்ப் புறப்பட்டு யுத்தத்துக்கு வந்தான். அப்பொழுது அவன் பயந்து கர்த்தரைத் தேடுகிறதற்கு ஒருமுகப்பட்டு தன் ஆளுகைக்குட்பட்ட குடிகளனைவரும் கூடிவந்து உபவாசம் பண்ணவேண்டுமென்று கற்பித்தான். அக்கட்டளைப்படி யூதாமனுஷர் எருசலேமில் கூடி, கர்த்தரே இந்த ஆபத்திலிருந்து தங்களை விடுவிக்கவேண்டுமென்று மன்றாடினார்கள். அரசனே அந்த பட்சாதாப ஆராதனையை நடத்தவேண்டுமென்று ஆலய முகப்பிலே நின்று ஆண்டவரை நோக்கி விண்ணப்பஞ் செய்

தார். இந்த விண்ணப்பத்தால் தேவ மகத்துவத்தையும் அவருடைய பூர்வ கிருபைகளையும் அரசன் விபரமாய்க்கூறி மோவாபியரால் உண்டாகிறதாகத் தோன்றும் ஆபத்தை வெளியிட்டு, சகாயம் தேவனிடத்திலேயன்றி வேறெங்குமில்லை என்று அறிக்கையிட்டான். அந்தப் பிரார்த்தனையின் முடிவில் அரசனும் குடிகளும் தலை குனிந்து தாழவிழுந்து ஆண்டவரை நமஸ்கரித்தார்கள். லேவியரான பாடகர் அநேகவித வாத்தியங்களால் ஸ்தோத்திரங்களைப் பாடினார்கள். மறுநாள் யுத்தத்துக்குப் போகையில் பாடகர் கவிகளைப் பாடி, வீரர் ஈட்டிகளைப் பிடித்து நடந்தார்கள்; சத்துருக்கள் முறிந்தோடி ஒருவரை ஒருவர் வெட்டி ஓட்டம் பிடித்தார்கள். 'தேவன் எழுந்தருளுவார், அவருடைய சத்துருக்கள் சிதறுண்டு அவரைப் பகைக்கிறவர்கள் அவருக்குமுன் ஓடிப் போவார்கள்.' புகை பறக்கடிக்கப்படுகிறதுபோல் அவர்கள் பறக்கடிக்கப்பட்டு மெழுகு அக்கினிக்குமுன் உருகுவதுபோல் துன்மார்க்கர் தேவனுக்குமுன் அழிவார்கள்.

ஜெபத்தின் வல்லமைக்கு இது ஒரு நல்ல திருஷ்டாந்தமாயிருக்கிறது. பட்டயத்தோடும் ஈட்டியோடும் போனயோசபாத்தின் சேனை அவைகளைப் பிரயோகிக்காமல் நின்றுகொண்டு கர்த்தரால் தங்களுக்குக் கிடைத்த இரட்சிப்பைப் பார்த்தார்கள். கர்த்தாவே! கனமும் புகழும் உமக்கே தகுதி, வல்லமையும் பிரஸ்தாபமும் உமக்கே உரியது. பாட்டோடு போன ஜனம் பாட்டோடும் ஆட்டத்தோடும் ஆனந்தத்தோடும் திரும்பி வந்தார்கள் என்று சொல்லவேண்டியது. இந்த அற்புத தேவச் செயலைக் கண்ட அடுத்த அரசர் அனைவரும் அதோடு அடங்கிவிட்டார்கள். ஆண்டவருடைய ஆளும் கரத்தைக் கண்டவன் அடங்காதிருப்பானோ? யோசபாத்துக்கு பயந்து ஓடிப்போன ஜனம் கொள்ளைநோயால் மாண்ட ஆடுகள்போல பிணமாய்க் கிடந்தார்கள். இஸ்ரவேலர் அவர்களை மூன்றுநாள் மட்டும் கொள்ளையிட்டு திரண்ட சொத்தோடு திரும்பி வந்தார்கள்; அதோடு யோசபாத்தின் ராஜ்யபாரம் அமரிக்கையாயிருந்தது.

இது நமக்கு ஒரு நல்ல போதனையைத் தருகிறது. கர்த்தரைவிட்டுப் பின்வாங்கிப் போனவர்கள் மறுபடியும் முழு இருதயத்தோடு அவரைத் தேடும்பொழுது தேவன் சகாயஞ்செய்ய ஆயத்தமாயிருக்கிறார். கர்த்தரை நம்புகிற வர்கள் காலையில் கண்ணீர்விட நேரிட்டாலும் மாலையில் மகிழ்ந்து கெம்பீரமடைவார்கள். ஆ! நமது தேவன் எவ்வளவு கிருபையுடையவராய் விளங்குகிறார்; அவருடைய இரக்கங்களுக்கு முடிவில்லை. நமக்கு இடுக்கமும் ஆபத்தும் நேரிடும்போது கடவுளுடைய கருணையுள்ள பாதத்தில் விழுவோமாக. ஏனெனில் இரட்சிக்கக்கூடாதபடி அவருடைய கை குறுகிப்போனதுமில்லை, கேட்கமாட்டாதபடிக்கு அவருடைய காதுகள் மந்தமானதுமில்லை.

யோசபாத்து அப்பால் ஞானத்தோடும் பக்தியோடும் ராஜ்யபாரம் செய்துவந்தான். தேவனை ஆராதிப்பதிலும் அவருடைய கற்பனைகளின்படி நடப்பதிலும் ஜனங்களைத் திருத்துவதே அவன் வேலையாயிருந்தது; அவன் தேவதா பக்தி விஷயத்தில் அதிகம் செய்தபோதிலும் தான் நினைத்ததையெல்லாம் செய்யக்கூடாமலிருந்தது. அவன் விக்கிரகாராதனையையும் சோதோமியரின் கேடுகளையும் தன் இராச்சியத்தை விட்டு விலக்கினபோதிலும் மெய்த்தேவனுக்கென்று மேடைகளில் நடந்துவந்த வீண் ஆராதனைகளை அகற்றிப்போடவில்லை; ஒருவேளை ஜனத்தின் இருதயம் அதில் அவ்வளவு பலமாய் ஊன்றியிருந்ததாக்கும். முதல்தரமான மனுஷரிடத்தில் நாம் எதிர்பார்க்கிற காரியமெல்லாம் நிறைவேறும் என்று நினைக்கக்கூடாது. எப்படியும் கர்த்தருக்குள் நம்முடைய வேலை விருதாவாய் முடியாதென்று நம்பி, ஜாக்கிரதையோடும் விவேகத்தோடும் அந்த ஊழியங்களை நடத்திக்கொண்டு வருவதே நமது கடமையாயிருக்கிறது.

மறுபடியும் ஒருதரம் நாம் இந்த யோசபாத்தைப்பற்றி குறைகூற வேண்டியதிருக்கிறது. 'ஒருதரம் பட்டால் ஒதுங்கி வாழ்' என்றொரு பழமொழியுமுண்டல்லவா? இவன் அப்படி ஒதுங்கி வாழவில்லை. அதையும் வேதாகம வரலாறுகளில் காண்கிறோம். யோசபாத்து மறுபடியும்

ஆகாபின் வீட்டாரோடு கூட்டுறவானுன். எப்படியெனில் ஆகாபின் குமாரனுகிய அகசியாவோடு கூட்டுவியாபாரஞ் செய்ய ஆரம்பித்து உடன்படிக்கை பண்ணிஞன். இந்த அகசியா தன் தகப்பனைப்போலவே துன்மார்க்கனும் மெய்த் தேவனை மறந்தவனுமாயிருந்தான். இருவருங்கூடி கப்பல் வியாபாரஞ்செய்து திரண்ட பொன் சம்பாதிக்க ஆரம்பித் தார்கள். கர்த்தர் அவன் பிரயத்தனத்துக்குத் தடையா யிருந்தார். ஏனெனில் அவன் கப்பல்களெல்லாம் உடைந்து போயிற்று. துன்மார்க்கருடைய ஆசை அழியும் என்பது ஒரு திருவாக்கு. மேலும் தேவன் ஒரு தீர்க்கதரிசியை அனுப்பி யோசபாத்து ஆகாபின் மகனேடு கூட்டுறவு செய்ததற்குத் தண்டனையாக இதைச் சம்பவிக்கச் செய்தா ரென்று உணர்த்தும்படி கட்டளையிட்டார். நாம் கூடும் கூட்டாளிகளும் சேரும் சிநேகிதரும் எப்படிப்பட்டவர்க ளென்று முந்தி ஆராய்ந்து பார்த்துக்கொள்வது நல்லது. மறுபடி அகசியா இவனை வருந்தி பங்குசேரக் கூப்பிட்டும் சம்மதிக்கவில்லை. தேவன் நம்மைச் சீர்த்திருத்தும்படியாக சிட்சித்து நஷ்டப்படுத்துகிறதுமுண்டு; அப்பொழுது நாம் அதை பொறுமையோடு சகிக்கவேண்டியது.

இதினுலே நமது மனம் உலகத்துக்கும் அதின் வாழ்வுக் கும் எவ்வளவு லேசாய் சாய்ந்துபோகிறதென்பதைக் காண் கிறேம் அல்லவா? வியாபார சம்பத்துக்குப் பின்பும் ஒரு தரம் யோசபாத்து யோராமோடு யுத்த சம்பந்தமானுன்; அதினுலும் அவனுக்குப் பெரும் நஷ்டமுண்டாயிற்று. ஆகாபின் வீட்டில் கால் வைத்ததுமுதல் அவனுடைய அடி கள் சருக்கலாகவே இருந்தன; ஆனுல் அவன் தன் சகல விழுதல்களோடுங்கூட கர்த்தரை அண்டிக்கொண்டிருந் தான்.

எந்த பரிசுத்தவானும் தன் ஆத்தும ஸ்திதி நிலையுள்ள தென்று அஜாக்கிரதையாயிருக்கலாகாது; ஒரு அற்பகேடு சகலத்தையும் அழித்துவிடும் பெரிய நஷ்டங்களை இழுத்து வரலாம். யோசபாத்து ஆகாபோடு சம்பந்தங் கலந்த விஷயம் வெளிக்கு ஆபத்தாக அல்ல, அந்தஸ்தாகத்தா

ளிருந்தது. ஆனுல் அதே பிரயத்தனத்தால் அவன் அதோ கதியானுன் என்று சொல்லவேண்டியது.

கடைசியாக பக்தியுள்ள இந்த அரசனின் விழுதல் நமது விழுதலுக்கு ஒரு முகாந்தரமாய் இருக்கக் கூடாது; பொல்லாப்பை விரும்புகிற பலர் அவனே இப்படி அப்படி செய்தானே, நான் எம்மாத்திரம் என்று சொல்லிக்கொண்டே பக்தி வழியிலிருந்து விலகுகிருர்கள். பக்தரின் விழுதல் மற்றவர்களும் இப்படியே விழுந்துபோங்கள் என்று ஏவுகிறதாயிராமல், இப்படி விழுந்துபோகவேண்டாம் என்று எக்காளமூதி எச்சரிக்கிறதுபோல் இருக்கின்றன.

ஆகாப்

வேதாகமமானது அந்தந்தக் காலங்களில் தேவனுடைய பையைப் பாதுகாத்து விருத்தி செய்துவந்த பக்தர்களின் வரலாறுகளைப் பாதுகாக்கும் தஸ்தாவேஜாக இருந்தபோதிலும், இடைக்கிடையே அவபக்தியுள்ளவர்கள் சிலரையுங் குறித்து தெரிவிக்கிற நூலாகவும் இருக்கிறது. அப்படிப்பட்ட சரித்திரங்களை நாம் அதிக கவனத்தோடு ஆராய்ந்து தியானிக்கவேண்டியது. பூரண பக்தாட்களின் வரலாறுகளால் நாம் பல ஞான போதனைகளை எப்படிப் பெற்றுக்கொள்ளக்கூடுமோ அதுபோலவே பஞ்சமாபாதகரின் வரலாறுகளால் நாம் படித்துக்கொள்ளவேண்டிய போதனைகளும் பல உண்டென்று ஒப்புக்கொள்ளவேண்டியது. சன்மார்க்கரின் வரலாறுகள் நமது நடைகளைப் பக்திவழியில் நிலைநிறுத்துகிறதுண்டு; துன்மார்க்கரின் வரலாறுகள் நமது மனதை அவபக்திக்குச் சாயவிடாமல் எச்சரிக்கிறதற்கு உதவியாயிருக்கும். மேலும் சன்மார்க்க சரிதை அந்தந்த பக்தாட்களின் சுயபலத்தை நமக்கு வெளிப்படுத்துகிறதாயிராமல் தேவனுடைய கிருபையின் வல்லமையை நமக்கு விளக்குகிறதாயிருக்கிறது; துன்மார்க்கரின் விழுதல்களோ நமது சுபாவ பலவீனத்தை இக்காலத்திலும் காட்டுகிற திருஷ்டாந்தரங்கள்போல் இருக்கிறது.

இப்போது நமது தியானத்துக்கு வரும் ஆகாப் சின்னஞ்சிறிய பாவியல்ல, இவன் பாவத்தில் முற்றிப்போன புருஷனையிருந்தான். 'கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்ய தன்னை விற்றுப்போட்ட ஆகாபைப்போல் ஒருவனுமில்லை' என்ற வாசகம் அவனுடைய ஆத்தும ஸ்திதியை எக்காலத்திலுமுள்ளவர்கள் அறிந்துகொள்ளும்படி ஒரு உயர்ந்த ஸ்தம்பத்தில் வெட்டப்பட்ட ஈய எழுத்துபோல் இருக்கின்றன (1 இரா. 21:25).

ஞானியாராகிய சாலொமோன் அரசன் காலத்துக்குப் பிற்பாடு இஸ்ரவேல் ஜாதியார் தேவ தீர்மானத்தின்படியே இரண்டு இராச்சியத்தாராகப் பிரிக்கப்பட்டிருந்தார்கள். பத்துக் கோத்திரத்தார் சாலொமோனுடைய குமாரனின் இராச்சியத்தை எதிர்த்து அதிலிருந்து தங்களைப் பிரித்துக் கொண்டு, யெரொபெயாம் என்ற ஒருவனைத் தங்களுக்குத் தலைவனாக்கிக்கொண்டார்கள்; அதுமுதல் அவர்கள் தாவீதின் வீட்டாருடையஅரசாட்சிக்கு இணங்கவே இல்லை. இந்த ராஜ்யபார பிரிவினையோடு மார்க்க பிரிவினையும் உண்டாயிற்று. எப்படியெனில் பிரிந்துபோன பத்துக் கோத்திரத்தாரும் தங்களுடைய இராச்சிய விஷயத்தில் சங்கடம் நேரிடாதபடிக்கு இரண்டு புது தேவ ஸ்தலங்களை நியமித்து, அதில் கன்றுக்குட்டி சுரூபங்களை ஸ்தாபித்து வணங்கி வந்தார்கள். இராசாங்கமும் மார்க்கமும் பெரும்பாலும் ஐக்கியப்பட்டே இருக்கிறது; மெய்த்தேவ மார்க்கத்தை நிலைநிறுத்தும் நோக்கமாகவே இராசாங்க ஏற்பாடுகள் இருக்கவேண்டியது. எல்லா மார்க்கங்களையும் ஒன்று போல பாவித்துக்கொண்டு ராஜ்யபாரஞ் செய்யக் கருதுவதும், மெய்மார்க்க விஷயத்தில் அநுகூலஞ் செய்யாமல் அரசாட்சிகளை நடத்துவதும் வேதாகமப் போங்கல்ல என்பதை எவர்களும் ஒத்துக்கொள்ளவேண்டும். யெரொபெயாம் என்பவன் இராச்சிய சம்பந்தமாய் ஏற்படுத்திய விக்கிரக வணக்கமானது கடைசியாக இஸ்ரவேலர் மெய்த்தேவனை விட்டுவிலகிப் போய்விடுவதற்கு வழியாயிருந்தது. யெரொபெயாம் செய்த இந்த தேவ துரோகத்துக்கு அவனுக்குக் கிடைத்த லாபம் என்னவென்றால்,

'இஸ்ரவேலைப் பாவம் செய்யப் பண்ணின யெரொபெயாம்' என்ற பட்டப் பேர்தான். நாம் இப்பொழுது தியானிக்கும் ஆகாப் பிரிவினை ராஜ்யத்தின் ஏழாவது அரசனாயிருந்தான்; இவனுக்கு முன்னிருந்த அரசாட்சி காலங்களில் இஸ்ரவேலர் சகலவிதமான பாவங்களிலும், அருவருப்புகளிலும் படிப்படியாய்த் தேறிவந்தார்கள். பாவிகள் பாவத்தில் முற்றும்போது தேவன் தமது கோபத்தில் முற்றுகிறார் என்று சொல்லவேண்டியது. இஸ்ரவேல் ராஜ்யத்தின் அரசர் ஒருவன்பின் ஒருவனாய் அகால மரணமாகி தங்கள் அர

சாட்சியை முடித்தார்கள். அப்படியிருந்தபோதிலும் பிந்தி வந்தவன் உணர்வடையவில்லை. பட்டம் பெற்ற அரசனெல்லாம் நான் எனக்கு முந்தினவனைவிட நல்லவனாயிருக்க எப்படிப் பிரயாசப்படுவேன் என்று கவலைப்படுகிறவனாயிராமல், முந்தினவனிலும் அதிக பாவத்தையும் தீமையையும் பந்தயம் போட்டு செய்து முடிக்கிறவனைப் போலவே இருந்தான். 'ஆகாபின் தகப்பனாகிய உம்ரி என்பவன் தனக்கு முன்னிருந்த எல்லாரைவிட கேடாய் நடந்தான்' என்று சொல்லப்பட்டிருக்கிறது (1 இரா. 16:25). தகப்பனே இக்கேடானால் அவனுடைய கர்ப்பக் கனி எப்படியிருக்கும்? எட்டிப்பழத்தில் இனிய பழம் உண்டா? விரையொன்று போடச் சுரையொன்று முளைக்குமா? பன்றிக் குட்டியில் ஒன்று கன்றுக்குட்டியாகுமா? இவ்வளவிற்கும் காரணமென்ன? தகப்பன் கெட்டவனானதால் மகனும் கெட்டவனாய்த்தானிருப்பான் என்று தீர்மானிக்கலாமா? அப்படியல்ல. எத்தனையோ துன்மார்க்கமான பொல்லாத மனுஷரின் மக்கள் சேர்க்கை வாசனையால் மனந்திரும்பி, பூரண பக்திமான்களாயிருக்கிறார்கள் என்பது மெய். ஆனால் இந்த உம்ரி தன் மகனைக் குறித்து எவ்வளவேனும் கவனிக்கவே இல்லை; ஆகாப் கெட்ட வளர்ப்பிலே வளர்க்கப்பட்டு தன் தகப்பனிலும் கெட்டவனாகிவிட்டான்; அவன் தன் இருதயத்தில் தேவ கிருபை கிரியைசெய்ய இடம் கொடுக்கவில்லை; அவன் தனக்கு முன்னிருந்த எல்லாரையும் பார்க்கிலும் கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்தான். ஆகாப் தன் தகப்பனிடத்தில் தேவ பக்தியைக் காணாததால் தானும் சன்மார்க்க வழியைக் கண்டடையாமற் போனான். ஒவ்வொரு பெற்றோரும் இதிலே ஒரு படிப்பினையைக் கற்றுக்கொள்ளவேண்டியது. உங்களிடத்தில் பிள்ளைகள் யாதொரு நன்மையான குணங்களையும் படித்தறிந்துக் கொள்ளக்கூடாதானால், அதாவது பெற்றோராகிய உங்களிடத்தில் தேவ பக்தியின் மணம் இல்லாவிட்டால், உங்கள் பிள்ளைகள் தேவ பக்தியாய் நடப்பார்கள் என்பதை நீங்கள் எப்படி எதிர்பார்க்கலாம்? 'தாயைப்போல் பிள்ளை, நூலைப் போல் சேலை' என்ற பழமொழி உம்ரியின் விஷயத்திலும்,

அவன் மகனுகிய ஆகாபின் விஷயத்திலும் நிச்சயப்படு கிறதுபோலிருக்கிறது.

இந்த வரலாறுகளை வாசிக்கிற வாலிபர் தங்கள் குணக் கேட்டையும், நடக்கை பிசகையும் தங்கள் பெற்றேர் பேரைக் கொண்டு மூடி மறைத்து, தங்கள் பழியைக் கழித்துக் கொள்ளலாமென்று நினைக்கலாகாது; அவரவர் குற்றத்துக்கு அவரவரே உத்தரவாதிகளாயிருப்பார்கள்; அவர்களுக்குண் டாகும் குடும்ப சம்பந்தம் அவர்களுக்கு போக்காக மாட்டாது. ஆகாபின் வரலாறுகளால் நாம் நமது பெற் றேரின் பாவ வழிகளிலாவது பந்துக்களின் பொல்லாப்பின் படியாவது நடந்துவந்தால், பெரும் துன்பத்தையும் இழி வான முடிவையும் அடைவோம் என்று நன்றுய் அறிந்து கொள்ளலாம்.

ஆகாப் என்பவன் தன் பிதாவின் சிம்மாசனமேறின வுடனே மெய்த்தேவ மார்க்கத்துக்கும் பக்திக்கும் தன்னைப் பகைஞன் என்று தெளிவாக வெளிப்படுத்தும்படி துவக்கி ஞன். அவன் யேகோவாவின் வணக்கத்தை விட்டதுமாத்திர மல்ல, விக்கிரக வணக்கத்தைத் தனக்கு முன்னிருந்த அரசரைவிட அதிக ஊக்கத்தோடு ஸ்தாபித்து,[1] பாகாலுக்கு ஒரு ஆலயத்தையும் கட்டினுன். இவ்வளவு கேட்டிற்கும் ஆகாப் உட்பட்டதற்குக் காரணமென்ன? இவன் இயல்பிலே தேவ பயமற்றவனுயிருந்ததோடு இவன் கட்டின மனேவியின் வகையறுக்களால் அதிகமாய்க் கெட்டுப்போனுன். ஆகாப் சீதோனியரின் ராஜாவின் குமாரத்தியாகிய யேசபேலை விவாகஞ் செய்தான். இவளைச் சாதாரண ஸ்திரீயென்று சொல்லவேகூடாது. சாத்தான் பெண் ரூபமாக வந்தால் இவளைவிட துன்மார்க்கத்திலும், கேட்டிலும், பொல்லாப்பி லும் மிஞ்சியிருக்கவே மாட்டான் என்று சொல்லவேண்டி யது. ஆகாப் இவளைக் கட்டுமுன் ஒருவேளை சீதோன் அரச

[1] பாகால் என்பதும் 'பேல்' என்பதும் ஒன்றுதான். ஆதியில் இது மெய்த்தேவனைக் குறிக்கும் பதமாகவே வழங்கப்பட்டது; வரவர ஒரு விக்கிரகஞ் செய்து அதை பாகால் என்று அழைத்து அதின் மூல மாய்த் தேவனை வணங்கி வந்தார்கள்; கடைசியாக அதையே தேவனுக வணங்கி வந்தார்கள்.

னுடன் சமாதான உடன்படிக்கை செய்யவாவது வியாபார முயற்சி செய்யவாவது போயிருக்கலாம். அச்சமயத்தில் இந்தப் பாதகி தன் கண்களின் மையாலோ, இனிய குரலாலோ, நளின நடையாலோ ஏழை ஆகாபை மயக்கிவிட்டாள். அவள் தன் துர்க்குண சொரூபத்தை யெல்லாம் அடக்கிக்கொண்டு நற்குண மங்கைபோல வேஷம்போட்டிருக்கலாம்; ஆகாப் அவளைக் கலியாணஞ் செய்ததுமுதல் தனக்குள் அடங்கியிருந்த பிசாசின் குணங்களையெல்லாம் ஒவ்வொன்றாய் வெளிப்படுத்தினாள்; ஆகாப் யேசபேலின் சரீரத்தைத் தனக்குக் கீழ்ப்படுத்த கழுத்தில் தாலியைக் கட்டின சமயத்தில் அவள் உத்தமிபோல் குனிந்து ஆகாபின் ஆத்துமத்தைத் தனக்குக் கீழ்ப்படுத்தும்படி அவன் காலில் கண்ணியை முடிந்தாள். இவ்விருவரில் அந்த நீலியே கெலித்தாள். ஆகாபின் ஆத்தும கஷ்டமனைத்துக்கும் யேசபேலே காரணம். வாசிக்கிறவனே! உன் மனைவி எப்படிப் பட்டவள்? அவள் உன் ஆத்துமாவைக் கிறிஸ்துவைவிட்டு விலகச் செய்கிறவளாயிருந்தால் உனக்கு எவ்வளவோ சங்கடமான ஜீவனமாயிருக்கும்? இக்காலத்தில் சிலர் தங்களுக்கு அப்படிப்பட்ட பெண்கள்தான் மனைவிகளாக வேண்டுமென்று சொல்லிக்கொள்ளுகிறார்கள். இதின் காரணமென்ன? காமவிகாரந்தான். கிறிஸ்து மார்க்கத்தைச் சேர்ந்த வாலிபனே! உன் எண்ணம் இப்படிப்பட்டதானால் அதை உடனே மாற்றவேண்டியது. விவாகமானது கிறிஸ்துவுக்கும் அவருடைய திருச்சபைக்குமுள்ள ஞான ஐக்கியத்தைக் காட்டுகிறது; ஆகையால் நீ விரும்பும் பெண் சிவந்த தோலும், மையிட்ட கண்ணும், குயிலின் குரலும், நீண்ட மயிரும், அன்ன நடையும், ஆசார கைவீச்சுமாயிருக்க வேண்டுமென்று கருதாமல் தேவ பக்தியும், நல்லொழுக்கமும், சாந்தமும், அடக்கமுமுள்ள பெண்ணாயிருக்க வேண்டுமென்று கருதவேண்டியது. ஆகாப் யேசபேலைக் கட்டாவிட்டால் அவனிடத்தில் இப்பொழுது காணப்படுகிற பொல்லாப்புகளில் அநேகத்தை நாம் காணாமலே இருக்கலாம்.

ஆகாப் யேசபேலை தன் வீட்டுக்கு தேவதையும் ராஜ்யத்திற்கு தேவனுமாக எண்ணிக்கொள்ளும்படி அவள் செய்து

கொண்டாள். அவள் சொன்னபடி ஆகாப் செய்யவில்லையானால் ஆகாபுக்கு அன்று சாப்பாடு கிடையாதுபோல் இருக்கிறது. யார்பேரில் பாணந்தொடுக்கவும், யாரைக் கொல்லவும், யாரை உயர்த்தவும், யாரைத் திருடவும் யேசபேல் சொல்வாளோ அந்தப்படி ஆகாப் செய்துவந்தான். அவளுடைய ஏவுதலினால் ஆகாப் செய்த தீமைக்கு ஒரு கணக்கில்லை. கடைசியாக அவன் தன் மனைவியாகிய நீலியின் பேச்சுக்கு இணங்கி, வேடர் வனத்தில் முயல்களை வேட்டையாடுவதுபோல கர்த்தருடைய தீர்க்கதரிசிகளை ஆள்வைத்துப் பிடித்துக் கொலைசெய்தான். இதனாலே நன்மையான விஷயத்துக்கெல்லாம் நமக்குத் துணையும் ஆதரவுமாயிருக்கவேண்டிய மனைவிகள் எவ்வளவு தீமைக்கும் புருஷரைத் திருப்பிவிடக் கூடுமென்று விளங்குகிறது. இவ்வுலகத்தில் அநேகம்பேர் தங்கள் நோக்கங்களையும் போங்குகளையும் தங்கள் மனைவியினுடைய இஷ்டத்திற்குச் சமூலமாய்த் திருப்பிவிடுகிறார்கள். இதை வாசிக்கும் வாலிபரே! நீங்கள் கவனிக்கவேண்டிய விஷயமொன்று இங்கே உண்டு. உங்கள் நடக்கையும் குணமுமாத்திரமல்ல, ஒருவேளை நித்தியகாலத்தின் லாபநஷ்டமும் எல்லாம் நீங்கள் இனி விவாகஞ்செய்யப்போகிற பெண்ணின் கையிலிருக்கிறதென்று சொன்னாலும் சொல்லலாம். நீங்கள் காமவிகார இழுப்பினாலாவது மாம்ச இன்ப இனிப்பினாலாவது மயங்கி இப்படிப்பட்ட விவாக சம்பந்தத்துக்குட்பட்டு, அரையளவு சேற்றில் இறங்கி அபயமிடும் கலைமான் போல் அவதிப்படாதபடிக்கு எச்சரிக்கையாய் நடந்து கொள்ளவேண்டியது. அநேக வாலிபர்கள் தங்கள் மீசைமேல் கைபோட்டு ஆகாப் மூடனைப்போல் நான் மூடனாய்ப் போகமாட்டேன், நான் யேசபேலை அபிகாயேலாக்கிவிட சமர்த்தனுக்கும், என்னால், கெட்டவள் நல்லவளாகிப்போவாள் என்றும் சொல்லிக்கொள்ளலாம். ஆனால் நாம் உலக நடபடிக்கையை ஆராய்ந்துபார்த்தால் ஆணால் திருத்தப்பட்ட பெண்கள் தொகையைவிட, பெண்ணால் கெடுக்கப்பட்ட ஆண்கள் தொகை அதிகமென்று சொல்லவேண்டியது. மேலும் பெண்கொள்ளும் விஷயமும் கொடுக்கும் விஷயமும் உலகவாழ்வை மாத்திரம் கருதினதாயிராமல், ஆத்தும வாழ்வையும் அழியாத நித்திய ஆனந்த பாக்கியங்களையும்

அடுத்த விஷயமாயிருக்கிறது. அப்படிப்பட்ட சம்பந்தங்களில் தேவாசீர்வாதம் நிலைத்திருக்கமாட்டாது. அப்படிச் செய்யக்கூடாதென்றும் தேவன் கட்டளையிட்டிருக்கிறார்.

ஆகாபின் அக்கிரமம் வளர்ந்தபோது ஆண்டவர் சும்மாயிராமல் தமது தீர்க்கதரிசியைக்கொண்டு அவனுக்கு உணர்த்தினார். ஆண்டவர் இரக்கமும் மன உருக்கமும் நீடிய சாந்தமுமுடையவராயிருந்தபோதிலும், பாவிகள் மனந்திரும்பவில்லையானால் அவர் தமது பட்டயத்தைக் கூர்மையாக்கி தமது வில்லை நாணேற்றுகிறார். அரசனுடைய அவபக்தியினிமித்தமும் அக்கிரமத்தினிமித்தமும் தேவன் அவன் தேசமனைத்தையும் பஞ்சத்தினாலும் மழைத்தாழ்ச்சியினாலும் சந்திக்கச் சித்தமானார். பெரும்பாலும் பஞ்சகாலத்தில் ஏழைகள் நவதானியமில்லாமல் மாண்டாலும் பிரபுக்களும் அரசரும் வருத்தப்படாமல் காலங்கழிக்கலாம். இந்தச் சமயத்திலுண்டான பஞ்சத்திலோ அப்படியல்ல. அரசன் வீடுமுதல் ஆண்டிவீடுவரையும் பஞ்சத்தால் அவதிப்பட்டது; மாடாடுகள் மந்தை மந்தையாய் மாண்டன; மனுமக்கள் கிராமம் கிராமமாய்ச் செத்தார்கள்; ஆறுகளும் ஏரிகளும் வெட்டாந்தரையாயின; மலைகள்மேல் மேகம் தங்கவுமில்லை, மேடுகள் மேல் முகில் காணப்படவுமில்லை; பகற்காலத்தில் மேகமந்தாரமாவது இராக்காலத்தில் மின்னொளியாவது காணப்படவில்லை; பச்சையெல்லாம் பட்டது, பயிரெல்லாம் காய்ந்தது; அகவிலை ஏறிற்று, அப்பத்தாழ்ச்சியாயிற்று; வானம் வெண்கலம்போலும் பூமி இரும்புபோலும் இருந்தது.

இந்தப் பஞ்சம் மூன்றரைவருஷமிருந்தது; ஆனாலும் ஆகாப் உணர்வடையவில்லை. இதென்ன ஆச்சரியம்! இருதயம் கடினப்படும்போது தேவதண்டனையை முதலாய் மனுஷன் சட்டைபண்ணுகிறதில்லை. இது எவ்வளவு துக்கமான காரியம்! ஆகாப், நான் என்ன பாடுபட்டாலும் என் பாகாலை விடேன் என்று சொல்லுகிறவனைப்போல இவ்வளவு துன்பங்கள் அவனுக்குமுன் இருந்தபோதிலும் தேவனை நினைக்கவில்லை. அவருடைய தீர்க்கதரிசிகளைத் துன்பப்படுத்துவதும் கொலைசெய்வதுமே அவன் வேலையாயிருந்தது. கர்த்தருடைய தீர்க்கதரிசிகளின் இரத்தம் வானத்தின் மதகுகளை

யும் பூமியின் கதவுகளையும் திறந்துவிடுமென்று நினைத்தானுக்கும்; அல்லவென்று, நாம் யேகோவாவின் பிள்ளைகளைத் துன்பப்படுத்திக் கொலைசெய்கிறது மெய்யானால், அவர் பயந்து நமது தேசத்தில் செழிப்பைத் தந்துவிடுவார் என்று நினைத்தானுக்கும்.

தேவனுடைய தீர்க்கதரிசிகளைக் கொலைசெய்த இந்தப் பாதகன் பாகாலின் பூசாரிகளையெல்லாம் தன் பிள்ளைகளைப் போல காப்பாற்றி, அவர்களுக்கு வேண்டிய சகாயமெல்லாம் செய்துவந்தான். இக்காலத்தில் ஆகாபுக்கு புத்தியுள்ள ஒரு உக்கிராணக்காரன் இருந்தான்; அவனுக்கு ஒபதியா என்று பேர். இந்தப் பக்தன் தன் எசமானை அறியாமல் கர்த்தருடைய தீர்க்கதரிசிகளில் நூறுபேரை இரண்டு கெபிகளுக்குள் அடைத்து அரைவயிற்று ஆகாரங்கொடுத்து ஆதரித்துவந்தான். இந்தச் சமாச்சாரம் ஒன்றும் ஆகாபுக்குத் தெரியாது; தெரிந்திருந்தால் இவர்களுடைய தலையும் யேசபேலின் ஏவுதலால் வெட்டுண்டுபோயிருக்கும். தேவ தண்டனைக்கு அஞ்சாத பாதகரில் ஆகாப் முதல்வன் என்று சொல்லவேண்டியது.

ஆகாபைப்போல தேவகிருபைக்குத் தங்களை முற்றிலும் அந்நியராக்கிக்கொண்டவர்கள் இக்காலத்திலும் உண்டு. ஆண்டவர் அவர்களைப் பல பிரயத்தனங்கள்மூலமாய்த் தம்மண்டை இழுத்துக்கொள்ளும்படி அழைத்தாலும், அணைத்தாலும், அடித்தாலும், அவர்கள் குடும்பங்களைத் துன்பங்களினாலும் உபத்திரவங்களினாலும் அசைத்தாலும், அவர்கள் மனந்திரும்பாமலிருக்கிறார்கள்; அவர்களுக்குப் புத்திசொல்லி எச்சரிக்கும் தேவ ஊழியக்காரரை முழுப் பகையாய்ப் பகைக்கிறார்கள்.

ஆகாப் அவனுடைய பாவத்தையும் தேவதண்டனையையும் தனக்குச் சொன்ன எலியாவைப் பிடித்துக் கொலைசெய்யும்படி ஊரூருக்கு ஆட்களை அனுப்பினான்; அயல் ராஜ்யங்களிலும் ஜாதிகள் நடுவில் ஒளிந்திருந்தாலும் இருக்கலாமென்று அங்கும் செய்தியனுப்பினான்; அவர்கள் தங்கள் தேசத்தில் எலியா இல்லையென்று சொன்னபோதிலும் நம்பாமல் சத்தியம் வாங்கினான். இப்படியெல்லாம் இருக்க, பஞ்ச

காலம் நீங்கும்படி குறித்தகாலத்தில் எலியா தாமே வந்து அரசனைச் சந்தித்தார். அப்போது அவரை ஒன்றும் செய்ய வில்லை; அவன் முனிவரை தன் ஆத்திர.புத்தியாலும் மன வருத்தத்தாலும் ஒரு சத்துருவைப்போல எண்ணிப் பேசினு லும் அவர்மேல் கைபோடத் துணியவில்லை. தீர்க்கதரிசியைக் கண்டவுடனே அவரைப்பற்றிய பயத்தை தேவன் ஆகாபின் நெஞ்சில் கட்டளையிட்டார் என்றுதான் சொல்லவேண்டியது. கடைசியாக, தீர்க்கதரிசி சொன்னபடியெல்லாம் ஆகாப் செய் தான். இந்த விஷயத்தில் இவன் குணம் வேடிக்கையா யிருக்கிறது. இம்மட்டும் யேசபேலின் பேச்சின்படியே நடந்து விக்கிரக தேவர்களை வணங்கும் முறைகளை உற்சாகப் படுத்தி கர்த்தருடைய தீர்க்கதரிசிகளைக் கொலைசெய்த ஆகாப், இப்போது எலியா தீர்க்கதரிசியின் சொந்த மனுஷனைப்போல நடந்துகொண்டு பாகாலின் பூசாரிகளையெல்லாம் கர்மேல் மலைக்கு வரவழைத்து, பந்தயம்போட்டு பலியிடச் செய்து, அவர்கள் தோற்றுப்போனபோது தீர்க்கதரிசி சொன்னபடியே அவர்கள் அனைவரையும் கொன்றுபோட்டான். இதற்கெல் லாம் காரணமென்ன? எலியாவின் பக்திதான். பக்திமா னுக்கு முன் அவபக்தன் நிற்கமாட்டான்; மெய்பக்தி மாய பக்தியை வெகு லேசாய் ஓட்டிவிடும்; உத்தம பக்தருக்கு துன்மார்க்கர் பயப்படவேண்டியதுதான். மேலும் இந்த ஆகாப் இப்பூலோகத்தில் பயப்படவேண்டுமானல் எலியா வுக்குத்தான் பயப்படவேண்டும். பாகாலுக்குப் பயந்து யேசபேல் சொன்னபடியெல்லாம் செய்த ஆகாப் எலியாவுக் குப் பயப்படவேண்டியது நியாயமாகத்தானிருக்கிறது. ஒரு வேளை கர்மேல் மலைமேல் இருபட்சத்தாரும் பலியிட்டதும், அதில் எலியாவின் பலி வானத்து அக்கினியினல் பட்சிக்கப் பட்டதுமான வரலாறு அச்சமயத்தில் அவன் மனதை மாற்றி, இம்மட்டும் தன்னை ஏமாற்றி வந்த பாகாலின் திருட் டுப் பூசாரிகளைக் கொலைசெய்ய ஏவிவிட்டிருக்கலாம். ஆனல் இந்த ஆகாபை நம்பவேண்டாம்; இது சமய பக்தியேதவிர நிலையான பக்தியல்ல. இப்படிப்பட்ட குணம் பல கிறிஸ்த வர்களிடம் காணலாம். அவர்கள் எழுப்புதலான போதனை களை அல்லது விசேஷ தேவச்செயல்களை உணர்ந்தவுடனே உயர்ந்த தீர்மானங்களைச் செய்து கிறிஸ்துவுக்காக திரண்ட

பணங்களைச் செலவிடுவார்கள்; பெரிய காரியங்களையும் செய்வார்கள். ஆனால் அவையனைத்தும் அந்நேரத்து முயற்சியே தவிர அதற்கப்பால் ஒன்றுமில்லை. தேவனுடைய விஷயங்களில் நமக்குண்டாகும் முயற்சிகள் வெடிமருந்தில் நெருப்புப் பிடித்து சீக்கிரம் அணைகிறதுபோல் இராமல் நிலையான அசைவற்ற தீர்மானமான ஊழியமாயிருந்தால் நல்லது.

இந்த விசேஷ சம்பவங்களுக்குப்பின்பு ஆகாபின் நடபடிக்கை எப்படியிருந்தது? கர்மேல் மலைமேல் நடந்த சம்பவங்களையெல்லாம் அவன் தன் மனைவியாகிய யேசபேல் அம்மாளுக்கு விபரமாய்ச் சொன்னான். அவன் அவைகளைத் தன் மனைவியினிடத்தில் சொல்வது இயல்புதான்; அதை அவன் சொல்லும்போது மெய்த்தேவ பயத்தினால் நிறைந்திருந்தானென்று சொல்லவேண்டியது. ஆனால் அதைக் கேட்ட யேசபேலோ மூர்க்கவெறிகொண்டு தான் மதித்து வந்த ஆசாரியர்கள் மடிந்துபோனார்கள் என்பதும் தன்னுடைய எதிரியாகிய எலியா பந்தயம் கெலித்தான் என்பதும் அவள் மனதில் அக்கினிபாணம்போல் கடந்துபோயிற்று. அவள் உடனே கர்த்தருடைய தீர்க்கதரிசியாகிய எலியாவைக் கருவறுத்து தலையறுத்துவிடவேண்டுமென்று தீர்மானஞ் செய்தாள். அவளுடைய மதியீனமும் எரிச்சலும் ஆகாபால் அபஜெயமாக்கப்படக் கூடாமற்போயிற்று. அவன் எலியாவைத் தற்காக்கப் பிரயத்தனப்படவுமில்லை; இதினாலே யேசபேல் தன் புருஷனைத் தன்னுடைய சுண்டுவிரலால் நினைத்த திசைக்கு ஓட்டிவிடும் நீலியாயிருந்தாளென்று தோன்றுகிறது. ஒருவேளை ஆகாப் எலியாவுக்காக ஏதாவது சகாயவார்த்தைகள் பேசுகிறதுண்டானால் எலியாவின் தலைக்குமுன் ஆகாபின் தலையை உருட்டிவிடுவாள்போலிருக்கிறது. இந்தக் குணம் அடிக்கடி நம்மிடத்தில் காணப்படுகிறதுண்டு. நாம் சத்திய சுவிசேஷத்தின் மகத்துவங்களைத் திட்டமாய் உணர்ந்தறியாதவர்களாயிருந்தபோதிலும் சத்தியத்தை விரோதிக்கும் எதிரிகளின் பட்டய பளபளப்பையும், ஈட்டியின் கூர்மையையும், கூட்டத்தின் ஆரவாரத்தையும், அவர்களால் சம்பவிக்கிறதுபோல் காணப்படும் தூஷணங்களையும், துன்பங்களையும் கவனித்து, சத்தியத்தை நிலைநிறுத்துவதில் முன்னுக்குப் போகாமல் பின்னுக்குப்

போகலாம், அல்லது அமைதலாயிருந்துவிடலாம். இவை போலக் கோழைத்தனமும் துரோகமும் வேறொன்றுமில்லை. இப்படிப்பட்ட சமயத்தில் நமக்கேன் இந்த வம்பு என்று சும்மாயிருக்கக்கூடாது. 'ஏனெனில் என்னோடே இராதவன் எனக்கு விரோதியாயிருக்கிறான்; என்னோடு சேர்க்காதவன் சிதறடிக்கிறான்' என்று இரட்சகர் சொல்லியிருக்கிறார் (மத். 12:30).

உள்ளபடிச் சொல்லவேண்டுமானால் பஞ்சம் நீங்கினதால் ஆகாபின் குணம் பழைய சீர்கேட்டிற்குத் திரும்பிற்று. தேவனுடைய கிருபைகளைப் பெரும்பாலும் பாவிகள் பாவங்களுக்குத் திரும்பவும் அதில் வளரவும் ஏதுவாக்கிக்கொள்ளுகிறார்கள்; அது அவரை அசட்டைசெய்கிறதுபோலிருக்கிறது. கிருபையை உணர்ந்துகொள்ளுகிறதும் அந்தக் கிருபைக்கு அவதூறுண்டாகாதபடி தன்னைப் பழைய பாவங்களுக்கு விலக்கிக்கொள்ளுகிறதும் மெய்த்தேவ பக்தனுடைய விசேஷித்த லட்சணமாயிருக்கிறது. ஆகாபின் ஜனங்களாவது சன்மார்க்கராய் மாறவுமில்லை. இதையெல்லாம் பார்க்கும்போது இம்மட்டும் தேவன் அவர்களுக்குக் கொடுத்த தண்டனை பற்றாதென்றும் இன்னம் பலத்த அடிகளால் அடித்து அவர்களைத் தாழ்த்திப்போடவேண்டுமென்றும் ஆத்திரத்தோடு சொல்லும்படி மனம் வரும். ஆனால் நாம் எந்தச் சரித்திரத்திலும் மனுஷனுடைய விழுதலின் துரோகத்திற்கு மிஞ்சி தேவன் சகாயஞ்செய்யும் கிருபையானது மேலிட்டிருக்கிறதென்று அறிகிறோம். இந்த விஷயத்திலும் அப்படியே; எப்படியெனில், சீரியாதேசத்து அரசனாகிய பெனாதாத் தன் சொற்சத்திக்குட்பட்ட வேறு முப்பத்திரண்டு அரசரையும் அவர்கள் படைகளையும் கூட்டிக்கொண்டு ஆகாபின் ராஜதானியை முற்றிக்கைபோட்டு யுத்தத்துக்கு அழைத்தான். ஆகாப் அவ்வளவு சேனையையும் கண்டு பயந்தான். ஏனெனில் அவனிடத்தில் மெய்த்தேவபற்று இருக்கவில்லை. பாகாலைப்பற்றி அவனுக்கு இருந்த வைராக்கியமானது கர்மேல் மலையோடு கடந்துபோயிற்றென்று சொல்லவேண்டியது. தேவபக்தரோ தங்கள் சத்துருக்களின் தொகையையும் பராக்கிரமத்தையும் கவனியாமல் தேவபலத்தின் நிச்சயத்தையே தியானித்து தைரியங்கொள்ளுகிறவர்

களாய் இருப்பார்கள். ஆகாப், பெனதாத்தின் படைத் திரளுக்குப் பயந்து சமாதான வார்த்தைகள் சொல்லி அவன் மனப்படி நடந்துகொள்வதாக செய்தி சொல்லியனுப்பின போதிலும் எதிரிகள வீண்வம்பு வளர்த்து தேவனுடைய ஜனத்தை அவகீர்த்தி செய்யும்படி துணிந்ததால் சண்டைக்கு ஆரம்பம் பண்ணினார்கள். ஆகாபினிடத்திலும் அவன் குடிக ளிடத்திலும் எவ்வளவு தீமைகள் இருந்தபோதிலும் தேவன் இச்சமயத்தில் இஸ்ரவேலின் சேனவீரராய் எழும்பி பென தாத் முறிந்தோடிப்போகும்படி செய்தார். யுத்தம் துவக்கு முன் பெனதாத் வீம்போடு, என் சேனையிலுள்ள ஒவ்வொரு வனும் வாரிக்கொண்டுபோக உன் பட்டணத்தில் ஆளுக் கொருபிடி மண்முதலாய் இல்லையென்று பேசினவன் பிழைத் தோம், பிழைத்தோம் என்று ஓடுவது தேவச்செயலால் அல்லாமல் வேறென்ன? இந்த ஜெயம் ஆகாபின் ஜாக் கிரதையினலாவது ஜனங்களின் பக்திவைராக்கியத்தினலா வது கிடையாமல், இஸ்ரவேலின் தேவனை நிந்தித்த பெனதாத் தேவனல் தண்டனைக்குட்படும்படி அவராலே கிடைத்தது. தேவன் தமது ஆளுகையில் அடிக்கடி ஒரு துஷ்டனைக்கொண்டு இன்னொரு துஷ்டனைத் தண்டிக்கிறது முண்டு. பாவிகளே! உங்களிலும் குறைந்த பாவிகள்போல உங்களுக்குக் காணப்படும் மற்றவர்கள் உங்களை விட அதிக மாய்த் தேவனல் தண்டிக்கப்பட்டாலும் படலாம்; உங்க ளுடைய தவணையின் காலம் மற்றவர்களுடைய காலத்தைப் பார்க்கிலும் நீடித்திருந்தாலும் இருக்கலாம். ஆனல் உங்க ளுடைய தற்கால வாழ்வைப் பார்த்து மயங்கி நிற்கவேண் டாம். ஏனெனில் உங்கள் ஆபத்து உங்கள் வீட்டு வாசலில் பொறுமையோடு காத்து நிற்கலாம். அல்லது நீங்கள் உங்கள் ஜீவகாலமெல்லாம் அக்கிரமத்தைச் செய்கிறது தீர்மானமா னல் அப்படிப்பட்ட ஜீவகாலம் அவ்வளவு நீளமாயிருக்கிற தின் லாபந்தானென்ன? தேவநீதியின் அடையாளமாயிருக் கும்படி கடைசியாக பெனதாத் ஆகாபின் ஆக்கினைசக்கரத் துக்குள்ளானன். ஆகாப் அவனை தேவனுடைய சத்துரு வாகக் கடைசிமட்டும் பாவித்துக்கொள்ளாமல், அவனுக்கு இளக்காரங்காட்டி, அவனைத் தப்பிப்போகப் பண்ணி, சகோ தரனைப்போல நடத்தி, புத்தியீனமான உடன்படிக்கைகளை

அவனோடு செய்யவும் தலைப்பட்டான். இந்தச் செய்கை கடவுளுக்கு விரோதமாயிருந்தபடியால் ஆகாப் தப்பவிட்ட பெனாதாத்தினிமித்தம் அவன் ஜீவனே சீக்கிரம் முடிவடையுமென்று ஒரு தீர்க்கதரிசியின்மூலமாய் வெளிப்படுத்தினார். நாம் நமது சொற்சத்தியையும் பேர்பிரஸ்தாபத்தையும் உலகப் போங்கையும் கவனிக்கிறவர்களாயிராமல், தேவனுடைய தயவுள்ள சித்தத்தை இன்னதென்று அறிந்து, அதை அவருடைய நாமத்தின் மகிமைக்கேதுவாக நிறைவேற்றி முடிக்கிறவர்களா யிருக்கவேண்டியது.

ஆகாப் தன் ஆகாமியத்தைக்குறித்து உணர்த்தப்பட்ட போதிலும் அவைகளிலிருந்து தன் நடக்கைகளைச் சீர்ப்படுத்திக்கொள்ளவில்லை; அவன் தன் இருதயத்தைத் தாழ்த்தவுமில்லை; தன் பொல்லாப்பை விடவுமில்லை. ஐயோ! வானத்தின் எச்சரிப்புக்கும் அசையாத இருதயங்களும் மனுப்புத்திரருக்குள் இருக்கின்றன. ஆகாப் தன் குற்றத்தையும் குறையையும் தனக்கு எடுத்துக்காட்டி மனந்திரும்புதலுக்கு ஏவின தீர்க்கதரிசியின்மேல் கோபதாபங்கொண்டு மனமடிவோடு தன் வீட்டிற்குத் திரும்பினான். தேவசித்தத்தை உத்தம இருதயத்தோடுணர்த்தும் ஊழியக்காரர் உலகத்தின் உயர்ந்த ஜனங்களால் பகைக்கப்படுகிறதுண்டு; அதினிமித்தம் கர்த்தருடைய ஊழியக்காரன் தான் கூறும் தேவ விஷயங்களை நிறுத்திவிடக்கூடாது.

இப்பொழுது நாம் ஆகாபைப் புகழலாமோ? அவன் கையில் கருக்குள்ள பட்டயமும் தோளில் கவசமும் தலையில் வயிரமிழைத்த கிரீடமுமிருந்தாலும், அவன் உள்ளத்தில் தேவகோபத்தின் ஜ்வலம் ஊற்றப்பட்டிருக்கிறது. அவனுடைய காதுக்குள் பெனாதாத்தை முறியடித்த ஜெயகீதங்கள் ஏறினபோதிலும் அவன் இருதயத்துக்குள் தேவ தண்டனையின் சத்தம் கேட்கிறது. இன்னும் இவனுடைய வரலாற்றை நாம் கடைசிமட்டும் கவனித்தால் சாத்தான் இவனைத் தனக்குச் சொந்தமாக்கி தன் இஷ்டப்படியெல்லாம் நடத்தினான் என்று விளங்கும். முன்னே யேசபேலால் நடத்தப்பட்ட இவன், பின்பு யேசபேலின் தேவனாகிய பெயெல்செபூலால் நடத்தப்பட்டான். கர்மேல் மலையின்

மேல் அவனுக்குண்டான உணர்ச்சியையும், அனலேயும் யேசபேல் வெகுசீக்கிரம் அணைத்துக் கெடுத்துப்போட்டாள்.

ஆகாப் தன் அந்தியகாலத்தில் தன் இராச்சியத்திலுள்ள ஒரு ஏழையைக் கொள்ளையிடத் துணிந்தான். எப்படியெனில், நாபோத்து என்னும் ஒரு குடியானவனுக்கு ஆகாப் ராஜாவின் அரமனையண்டை ஒரு திராட்சத்தோட்டம் இருந்தது. ஆகாப் நாபோத்தோடே பேசி, உன் திராட்சத் தோட்டத்தை எனக்கு கீரைக்கொல்லையாக்கும்படிக்குக் கொடு, அதைப் பார்க்கிலும் நல்ல திராட்சத்தோட்டத்தை அதற்கு பதிலாகத் தருவேன் என்று கேட்டான். அதற்கு நாபோத்து, அது என் பிதாக்களின் சுதந்தரமாகையால் உமக்குக் கொடுக்கக்கூடாது என்று சொன்னான். மேலாக இந்தச் சங்கதியைக் கவனித்தால், ஆகாபின்மேல் பிசகில்லை என்றும், நாபோத்து சற்று இடக்கனென்றும் காணப்படலாம். ஆகாபின் பட்டத்தில் பேசுகிறவர்கள், இராசா நியாயமானபடிதானே நடந்துகொண்டிருக்கிறார், அந்தத் தோட்டம் அரமனையோரத்திலிருந்ததால் கேட்டாரேயன்றி வேறல்ல; அதற்குப் பதிலாக அதைவிட நல்ல தோட்டத்தைத் தருவேன் என்றும், மற்றப்படி அதின் கிரயத்தைத் தருவேன் என்றும் கேட்கிறார்; ஆதலால் அரசன் நீதியின்படியே நடந்துகொண்டிருக்கிறார் என்று சொல்லலாம். நாபோத்து இந்த விஷயத்தில் நடந்துகொண்ட விபரமானது அதைவிடப் புகழப்படத்தக்கது. எப்படியெனில், நாபோத்தின் முகாந்தரம் பிதாக்கள்மேலுள்ள மதிப்பையும் தேவன் பேரிலுள்ள பக்திவைராக்கியத்தையும் பொருந்தினதாயிருந்தது. 'என் பிதாக்களின் சுதந்தரத்தைக் கொடாதபடிக்குக் கர்த்தர் என்னைக் காப்பாராக' என்றான். நாபோத்து வறுமையடைந்தால் அதை மற்றவர்களுக்கு அடைமானம் வைக்க தேவ உத்தரவேயன்றி, சமூலமாய் விற்றுப்போட உத்தரவில்லை. அவன் அரசன் விரும்பினபடி விற்றுப்போட்டது மெய்யானால் தேவகட்டளையை மீறின பெரும்பாவியாவேன் என்று எண்ணினான். அந்த அடைமானமுதலாய் வைக்கும்படி நேரிடாதபடி தேவன் காப்பாராக என்று அதேசமயத்தில் விண்ணப்பம் பண்ணிக்கொள்ளுகிறான்.

இதன் பின்பு ஆகாப் இந்த விஷயத்தில் நடந்துகொண்ட விஷயமானது துவக்கத்தில் நியாயமான நடக்கைபோல காட்டினதையெல்லாம் மாற்றிப்போடுகிறது. நாபோத்து தன் விருப்பத்தை நிறைவேற்றவில்லையென்று கண்டவுடனே 'ஆகாப் சலிப்பும் சினமுமாய்த் தன் வீட்டுக்கு வந்து, போசனம் பண்ணாமல் தன் கட்டிலின்மேல் படுத்துத் தன் முகத்தை மறைத்துக்கொண்டிருந்தான்' என்று வாசிக்கிறோம். இதனாலே ஆகாபுக்கு விளையாட்டுப் பிள்ளைக்குரிய புத்தி இருந்ததென்று விளங்குகிறது. அவன் இச்சமயத்தில் தன் இச்சையையும் பேராசையையும் தேவன் தடுத்துப்போட்டார் என்று ஞான உணர்ச்சியடைகிறதற்குப் பதிலாக சலிப்பும், கோபமும், பட்டினியும், முகக்குறுவுதலுமுடையவனாய்க் கட்டிலின்மேல் கிடக்கிறான். தான் தன் குடியானவன் ஒருவனுடைய சொத்தை ஆசித்தது அவனுக்கு வெட்கமாகக் காணப்படாமல், நாபோத்து சம்மதியாதது தனக்கு ஒரு பெரிய அவமானமாக எண்ணிக்கொண்டான்.

அச்சமயத்தில் மையிட்ட அவன் மனைவி யேசபேலம்மாள் எழுந்தருளினாள். பெயெல்செபூல் எழுந்தருளியானால் பூலோகம் பாழ், யேசபேல் எழுந்தருளியானால் இஸ்ரவேல் பாழ். விருந்துமணி அடிபட்டவுடனே கணவனைக் காணோமென்று கருத்தாய்த் தேடி வந்தாளாக்கும்! எந்நேரமும் யேசபேலுக்குமுன் பந்தியில் வந்திருக்கும் ஆகாப் அன்றையத்தினம் படுக்கையின்மேல் பெருமூச்சு விடுகிறான். யேசபேல் அவனிடம் வந்து, அவன் மனசலிப்பின் காரணத்தைக் கேட்கவே, தனக்கும் நாபாலுக்கும் நடந்த சம்பாஷணையைச் சொன்னான். ஆகாபின் வாக்கு மூலமானது யேசபேலைக் குலுங்க குலுங்க நகைக்கப் பண்ணிற்று. அந்த படுநீலிக்கு இது விசனப்படவும், பசியாயிருக்கவும் படுத்திருக்கவுந்தக்க விஷயமாய்க் காணப்படவில்லை. அவள் தன் புருஷனை நோக்கிச் சொல்வாள்: 'நீர் எழுந்து போசனம் பண்ணி மகிழ்ச்சியாயிரும்; நீர் இப்போது இஸ்ரவேலின்மேல் ராஜ்ய பாரம்பண்ணுகிறவரல்லவா? யெஸ்ரயேலனான நாபோத்தின் திராட்சத் தோட்டத்தை நான் உமக்குக் கொடுக்கிறேன்' என்று சொன்னாள். இதனாலே மனதுக்கு மனம் எவ்வளவு வித்தியாசப்படுகிறதென்பது

தெரிய வருகிறது. ஆகாபுக்குப் பெரிய மலைபோல் காணப் பட்ட விஷயமானது யேசபேலுக்கு காலின் கீழிருக்கும் தூசிபோல் இருக்கிறது. யேசபேல் சொன்ன வார்த்தைகளை அடக்கிச்சொன்னால், 'நீர் இப்போது ராஜ்ய பாரம்பண்ணு கிறவரல்லவா, உம்மாலாகாததை நான் முடித்துத் தருகிறேன்' என்று சொல்லுகிறதுபோல் இருக்கிறது. அல்லது இதுமுதல் நான் இராசனும் நீர் இராணியும்போல் இரும்; நான் ஆண் பிள்ளையும் நீர் பெண் பிள்ளையுமாகி விடவேண்டியது என் பதுதான். ஆகாப் ரோசங்கெட்டவன்; அவன் தன் பெண் சாதியினிடத்திலிருந்து இதுவும் கேட்பான், இதற்கு மிஞ்சி யும் கேட்பான்.

அன்றையத்தினம் அரசனும் மனைவியும் திடும் பிரவேச மாய்த் தீனி சாப்பிட்டிருக்கலாம். யேசபேல் ஆகாபின் பேரால் நிருபங்களை எழுதி ராஜ முத்திரையையும் போட்டு, பட்டணத்தின் மூப்பருக்கும் பெரியோருக்கும் அனுப்பி னாள். அந்த நிருபங்களில் கண்டிருந்ததாவது: 'நீங்கள் உப வாசம் என்று பிரசித்தப்படுத்தி நாபோத்தை ஜனத்தின் முன் நிறுத்தி, தேவனையும் ராஜாவையும் தூஷித்தானென்று அவன்மேல் பொய்ச்சாட்சி சொல்லுகிற பேலியாளின் மக்க ளாகிய இரண்டுபேரை அவனுக்கு எதிராக நிறுத்தி, அவனை வெளியே கொண்டுபோய் அவன் சாகும்படி அவனைக் கல் லெறியுங்கள்' என்று எழுதினாள். இவள் கள்ளக் கடிதம் எழு தவும் கள்ளத்தனமாய் முத்திரையிடவும், கள்ளச்சாட்சி களைப் பிணைக்கவும், கொலை செய்யவும் அதிகமாய்த் தேறி யிருக்கிறாள். இவளுடைய கள்ள எழுத்துகளுக்கு ஊரி லுள்ள பெரியோரெல்லாம் இணங்கினதுதான் ஆச்சரியமா யிருக்கிறது. ஐயோ! அவளுடைய மையிட்ட கண் அவ் வளவுபேருடைய புத்தியின் கண்களையும் குருடாக்கிவிட்ட தாக்கும்! அவள் எவ்வண்ணம் எழுதியிருந்தாளோ அப் படியே நிறைவேற்றினார்கள். ஏழை நாபோத் கல்லெறியுண்டு செத்தான்.

அந்த சமாச்சாரம் உடனே யேசபேலுக்கு அறிவிக்கப் பட்டது. உடனே அவளுடைய ஏவுதலின்படி ஆகாப் துக்கசாகரத்திலிருந்து மீண்டும் எழுந்து புறப்பட்டு,

நாபோத்தின் தோட்டத்தைக் கையாட்சி செய்யும்படி போனான்.

ஆகாபே! ஆகாபே! நீ எங்கே போகிறாய்? படுக்கையில் பலவீனன் போலிருந்த உன்னை நாபோத்தின் இரத்தம் பலப்படுத்திவிட்டதோ! கட்டிலில் கிலேசமாய்க் களைத்துக் கிடந்த உன்னை நாபோத்தின் இரத்தத் துளிகள் களையாற்றினதோ! ஏழையின் சொத்தை அனுபவிக்க நீ எவ்வளவு விரைவாய் நடந்துபோகிறாய்! நாபோத்து செத்தான் என்று போகிறாய், அவன் சாகவில்லை. அவனுடைய இரத்தம் யெஸ்ரயேலின் வீதியிலிருந்து யேசபேலுக்கும் உனக்கும் விரோதமாய்க் கூக்குரலிட்டுக் கொண்டிருக்கிறது. நீ அந்தத் தோட்டத்தை ஆசித்த நாட்களின் தொகையைவிட நீ அதை அநுபவிப்பதின் நாட்கள் குறைவாயிருக்குமென்று சேனைகளின் கர்த்தரின் தீர்மானமாயிருக்கிற தென்பதைச் சீக்கிரத்தில் அறிவாய்.

இந்த வரலாறு, ஸ்திரீகளால் புருஷருடைய உத்தியோகங்களில் பெரும்பாலும் நடக்கும் கேடுகளைக் காட்டும் படம் போலிருக்கிறது. உயர்ந்த அந்தஸ்தையும் பிரஸ்தாபத்தையும் பெற்ற சிலர் தங்களுடைய கேடுகளையும் பேராசைகளையும் தாங்களாய் நிறைவேற்றினால் உலகம் பழிக்குமென்று சிந்தித்து தங்கள் மனைவிகளை அதற்கு விசேஷித்த கருவிகளாக்கி விடுகிறார்கள். நம்மால் ஆகாத கேடு ஒன்றுண்டானால் அதற்காக சந்தோஷப்படவேண்டும்; ஏனெனில் அதினால் உண்டாகும் சாபத்துக்கும் நஷ்டத்துக்கும் நம்மை நீங்கலாக்கிக்கொள்ளுகிறோம். நம்மாலாகாததும் நாம் தலைப்பட்டால் வெட்கம் என்று சொல்லப்படத்தக்கதுமான தீமைகளை நமது மனைவிகளைக் கொண்டாவது மற்றவர்களைக்கொண்டாவது நிறைவேற்றத் துணிவதைப்போலொத்த கெடுதல் வேறொன்றில்லை. காரியங்களை வல்லமையாயும், சாதுரியமாயும் நடத்தத் தெரிந்த ஸ்திரீயை மனைவியாக உடைய புருஷன் ஒவ்வொருவனும் அவளைப் பற்றி இரவும் பகலும் எச்சரிக்கையா யிருக்கவேண்டியது. தன் மனைவி நாபாலாயிருப்பது நல்லதுதான்; ஆனால் அவள் யேசபேலாயிருக்கக்கூடாது. அவள் யேசபேலாகிறது மெய்

யானல் அவள் தன் புருஷனை ஆகாபாக்கி விடுவாள். போது மென்கிற மனதுடனே கூடிய மெய்த் தேவபக்தி ஆகாபுக்கு இல்லாததுதான் இவ்வளவு பொல்லாப்புக்கும் காரணமா யிருந்தது. நாம் நிலத்தின்மேல் நிலத்தையும், அதிகாரத்தின் மேல் அதிகாரத்தையும், சொற்சக்தியின்மேல் சொற்சக்தியை யும் கூட்டுகிறவர்களாயிருக்கலாகாது. 'இப்பொழுது இருக் கிற நிலைமையில் ஏன் திருப்தியாயிருக்கக்கூடாது?' 'துன் மார்க்கருக்குள்ள செல்வத் திரட்சியைப் பார்க்கிலும், நீதிமானுக்குள்ள கொஞ்சமே நல்லது' என்று சத்திய சாஸ்திரம் அறிவிக்கிறது. (சங். 39:16).

ஆகாபின் மனைவி தான் செய்யப்போகும் அநியாயங்களை யெல்லாம் மூடும்படியாக நாபோத்தின் நடபடிக்கைகளுக்கு முன்பாக உபவாசம் கூறும்படி கட்டளையிட்டாள். இதினால், தான் தேவாவியால் ஏவப்பட்டு துன்மார்க்கத்தைத் தன் ராஜ்ய பாரத்திலிருந்து துரத்துகிறவள்போல் மற்றவர் களுக்குத் தோன்றும்படி செய்தாள். பாதாளத்தின் மக்கள் செய்யும் அநேக பொல்லாப்புகள் உபவாசத்தாலும் ஜெபத் தாலும் மூடப்பட்டிருந்தாலுமிருக்கலாம்; இயேசுநாதர் ஜெபத்தையும் உபவாசத்தையும் பேயைத் துரத்தும் கருவி யாகப் பிரயோகிக்க உத்தரவு கொடுத்திருக்கிறார். பெயெல் செபூலின் பிள்ளைகளோ அதைத் தங்கள் அக்கிரமப் பட்ட யங்களின் உரையும், நரகலோகத்து அக்கினி அம்புகளின் அம்பறாத்தூணியும், பாவக்கிரியைகளின் மூடியுமாகப் பிர யோகித்து வருகிறார்கள். தேவனுடைய பரிசுத்த பண்டங்க ளெல்லாம் இப்படித் துன்மார்க்கரால் தீட்டுப்படுத்தப்படு கிறது.

ஆகாப் நாபோத்தின் தோட்டத்தைக் கையாட்சி செய் யும்படி போனானென்று சொன்னோமே; அவன் அந்தத் தோட்டத்திற்குள் நிற்கும்போது தான் செய்யத் தீர்மானித்த பல மாறுதல்களைத் தன் மனதுக்குள் ஆலோசித்துத் தோட் டக்காரனிடத்தில் சொல்லிக்கொண்டிருக்கலாம்; ஒருவேளை அக்காலத்தில் திராட்சச் செடிகளெல்லாம் பூத்து காய்த்து பழுத்திருக்கலாம். அந்தப் பூவோடும் காயோடும் பிடுங்கி விடாதபடி தன் யோசனையைப் பழக்கலாம். முடியுமட்டும்

நிறுத்திவிடவும் ஆலோசித்திருக்கலாம். ஆனால் தேவன் அதின் பந்தலுக்குள் ஆகாபைக் குனியவிடவும், அதின் நிழலை அநுபவிக்கவும் இடங்கொடுக்கவில்லை. நாபோத்தின் இரத்தம் பரலோகத்தின் தேவனை நியாயத்துக்குத் தூண்டிவிட்டதென்று சொல்லலாம். அவர் உடனே தமது தாசன் ஒருவனுக்குக் கட்டளையிட்டு ஆகாபின் தண்டனைகளைக் கூறும்படி சித்தங்கொண்டார். ஆகாப் அந்தத் தோட்டத்துக்குள்ளிருக்கையில், சிலகாலம் தலைமறைவாய் ஒளிக்கப்பட்ட எலியாதீர்க்கன் மறுபடியும் திடீரென்று அவனுடைய சமுகத்தில் தோன்றினார். ஆகாப் தீர்க்கதரிசியைக் கண்டவுடனே,

'என் பகைஞனே என்னைக் கண்டுபிடித்தாயா'?

என்று சொன்னான். நாபோத்தின் சாவோடே எல்லாத் தொல்லையும் தொலைந்து போயிற்றென்று நினைத்திருந்த ஆகாப் எலியாவைக் கண்டவுடனே கலங்கினான். துன்மார்க்கரை நேராக கண்டிக்கிற தேவ ஊழியக்காரர் அவர்களுக்குப் பகைஞர்போலக் காணப்படுகிறார்கள். எலியா அவனுடைய கோபத்தைச் சட்டை பண்ணவில்லை அவர், ஆம், ஆகாபே, கண்டுபிடித்தேனென்று சொல்லிக்கொண்டு நாபோத்தின் தோட்ட விஷயத்தில் ஆகாப் செய்த அநியாயங்களையெல்லாம் சொல்லி, 'கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்ய நீ உன்னை விற்றுப்போட்டாய்' என்று கண்டித்து, ஆகாபுக்கும் அவன் மனைவிக்கும் அவன் குடும்பத்துக்கும் வரும் தேவ சாபங்களைக் கூறினார். அந்தச் சாபங்களைச் சுருக்கிச் சொன்னால்,

(1) உன்மேல் பொல்லாப்புவரும்;

(2) உன் சந்ததி அழிந்துபோம்;

(3) உன் மனைவி யேசபேலை யெஸ்ரயேலின் நாய்கள் தின்னும்;

(4) உன் சந்ததியில் பட்டணத்தில் சாகிறவனை நாய்கள் தின்னும்; காட்டில் சாகிறவனைப் பறவைகள் தின்னும் என்பதே.

ஐயோ! ஆகாப் அடியோடு தொலேந்தான். முப்பத்திரண்டு அரசரோடு வந்த பெனுதாத்தை முறியடித்த ஆகாபை எலியா தமது வாயின் பட்டயத்தால் முறியடித்துப் போட்டார். அதிகாரத்தையும் சுயாதீனத்தையும் முடியாகக் கொண்டு துன்மார்க்கத்தில் விரைந்தோடும் அனைவரும் எச்சரிப்படையும்படி ஆகாப் அடையாள ஸ்தம்பம்போல் நாபோத்தின் திராட்சத்தோட்டத்துக்குள் நிற்கிறுன் என்று சொல்லவேண்டியது. அநியாயமாய்ச்சம்பாதிக்கிறலாபத்தின் பின், நஷ்டம் காத்துக்கொண்டிருக்கிறது. பாவத்தை எவ்வளவு சாமர்த்தியமாய்ச் செய்து, அதற்கு வேறு நிறம்கொடுத்த போதிலும் அதின் சுய நிறத்தோடு தேவனுல் வெளிப்படுங் காலம் ஒன்றுண்டு. ஆகையால் நமது பாவம் நமக்கு உணர்த்தப்படும்போது அதை மனந்திரும்பும் சமயமாகப் பிரயோகித்துக்கொள்ளவேண்டியது.

ஆகாப் தன் பொல்லாப்பை இவ்வளவு தெளிவாய்க் கண்டபோதிலும் அவன் மனந்திரும்பினுனே? இல்லே! இல்லே!! 'ஆகாப் இந்த வார்த்தைகளேக் கேட்டவுடனே தன் வஸ்திரங்களேக் கிழித்து, தன் சரீரத்தின்மேல் இரட்டைப் போர்த்துக்கொண்டு உபவாசம் பண்ணி, இரட்டிலே படுத்து தாழ்மையாய் நடந்துகொண்டான்' என்று காண்கிறோம். இது மெய் மனஸ்தாபத்தினுல் உண்டான செய்கையல்ல; வெட்கத்தினுலும் விசனத்தினுலும் உண்டான லோக உணர்ச்சியாய் மாத்திரம் இருந்தது. ஏனெனில் இதினுல் அவனுக்கு பாவ மன்னிப்புக் கூறப்படவுமில்லே, இவன் இதற்குப்பின் தன் உத்தமத்தில் நிலேத்திருக்கவுமில்லே. என்றுலும் தேவன் இவனுடைய வெளியரங்கமான உணர்ச்சியின் மூலமாய்த் தமது கிருபையை வெளிப்படுத்தச் சித்தமானுர். அவன் பாவத்தை தேவன் மன்னிக்கத்தக்க உத்தம மனஸ்தாபத்தை அவர் காணுதேபோனுலும் தாம் சொன்ன தண்டனேயின் காலத்தைக் கடத்தி அவையனேத்தும் அவன் குமாரன் காலத்தில் நடக்கும் என்று சொன்னுர். இதினுல் ஆகாபின் உத்தம மனஸ்தாபம் விளங்குகிறதைவிட தேவன் பாவிகள்மேல் எவ்வளவு கிருபையாயிருக்கிறுரென்பது தெளிவாய் விளங்குகிறது. ஆகாப் குணப்படும்படி மறுபடி

யும் காலங்கொடுக்கப்பட்டது. ஆனால் அவன் பின்னும் தன் ஆகாமியத்தில் நிலைத்திருந்தான்.

ஆகாப் அப்பால் சீரிய ராஜாவுடன் யுத்தஞ்செய்யும்படி யோசபாத் என்னும் யூத ராஜாவையும் சேர்த்துக்கொண்டு திரண்ட சேனையோடு போனான். அந்த யுத்தத்தை ஆகாபின் கடைசி யுத்தமாக ஆண்டவர் தீர்மானித்திருந்தார். யுத்தம் ஆரம்பிக்குமுன் வழக்கம்போல தேவ சித்தத்தை அறியும்படி விரும்பினார்கள். அப்படி விரும்புகிற வேலையை முதலாவது ஆகாப் தன்மேல் எடுத்துக்கொண்டு விக்கிரக பூசாரிகளிடத்தில் வரம் கேட்டான். அவர்கள் யுத்தத்துக்குப் போகலாம், ஜெயம் கிடைக்குமென்று சொன்னார்கள். அவர்களுடைய வாக்கு யோசபாத்து இராசனுக்கு அவ்வளவு திருப்தியாய்க் காணப்படவில்லை; ஆதலால் மெய்த் தேவனுடைய தீர்க்கதரிசிகளிடத்தில் வரம் கேட்கும்படித் தேடினதில் மிகாயா என்னும் தீர்க்கதரிசியைக் கண்டுபிடித்தார்கள். இந்தத் தீர்க்கதரிசியினிடத்தில் கேட்க ஆகாபுக்குப் பிரியமில்லை. ஏனெனில், அவன் தேவ சித்தத்தைச் சரியாய்ச் சொல்லுகிறவனாயிருந்தான். அரசன் என்று அவன் பயப்படவுமில்லை, ஆகாப் என்று அஞ்சவுமில்லை. தேவ சித்தத்தை உத்தமமாய் வெளிப்படுத்தும் ஊழியக்காரர் துன்மார்க்கரால் பகைத்து வெறுக்கப்படுகிறார்கள். அநேக தேவ ஊழியக்காரர் தேவனுடைய முழுச் சத்தியங்களையும் பிரசங்கியாமல் மனுஷரின் மனதிற்கேற்றாப்போல சிலவற்றைக் கூட்டியும் குறைத்தும் சொல்லுகிறதுண்டு. அவர்களெல்லாரும் ஆகாபின் பூசாரிகளைச் சேர்ந்தவர்களென்று தெளிவாகச் சொல்லலாம். மிகாயாவோ தன்னைத் தேவனுடைய மனுஷன் என்று உணர்ந்து தைரியத்தோடு தேவ சித்தத்தைக் கூறினான்; ஆகாபும் அவன் சேனையனைத்தும் தாங்கள் போக இருக்கும் யுத்தத்தில் அபஜெயமாகித் தோற்றுப் போவார்கள் என்று சொன்னான். அவனுடைய வார்த்தைகள் ஆகாபுக்குப் பிடியாததால் மிகாயாவைத் தான் வெற்றி விருதோடு திரும்பி வருமட்டும் காவலில் அடைக்க உத்தரவுகொடுத்து தேவ சித்தத்துக்கு விரோதமாய்த் துணிந்து யுத்தத்துக்குப் போனான். 'கேடு வரும்போது மதிகெட்டுவரும்' என்ற பழமொழி நிஜந்தான். புத்திமதிகளை அடிக்கடி அசட்டை செய்கிறவர்களுக்குத்

திடீரென்று மோசம் சம்பவிக்கும். 'அடிக்கடி கடிந்துகொள்ளப்பட்டும் தன் பிடரியைக் கடினப்படுத்துகிறவன் சகாயமின்றி சடுதியில் நாசமடைவான்' என்று சத்தியவேதம் அறிவிக்கிறது (நீதி. 29:1).

ஆகாப் வெளிக்குத் துணிந்துபோனாலும் உள்ளுக்குள் தேவ தண்டனையைப் பற்றிய பயமுடையவனாயிருந்தானென்று தோன்றுகிறது. அவன் தன் சுய உடைகளைத் தரியாமல் மாறுவேஷம் போட்டு தன்னை ஒரு சாதாரண சேவகன்போல பாராட்டி வேறொருவனுக்கு ராஜவேஷம் தரித்து யுத்தஞ்செய்தான். தன் ராஜ பட்டத்தைத் தானே உரிந்து களைந்துவிட்டதுபோல் இது காட்டுகிறது. எதிரிகள் தன்னை இனமறியாதபடி இப்படிச்செய்தான். எதிரிகள் கண்களை மூடிப்போட்ட இவன், சகலரையும் காணும் தேவனுடைய கண்ணை மூடிப்போடவில்லை. அவர் அந்த யுத்தகளத்தில் ஆகாபை அறிந்து ஒரு கூர்மையுள்ள அம்பை ஆகாபின் நெஞ்சுக்கு நேரே நடத்தினார். அந்த அம்பு ஆகாபின் கவசத்தின் சந்துகளுக்குள் பட்டது; அந்தக் காயத்தால் ஆகாபு அன்று சாயந்தரம் இறந்தான். அவனுடைய காயத்தின் இரத்தம் இரதத்தின் தட்டிலே வடிந்தது. உடனே யுத்தம் நின்றுபோயிற்று. பட்டாளங்கள் பட்டணத்தை நாடி புலம்பலோடு வந்தது. ஆகாபை அடக்கம் பண்ணினவுடன் வேலைக்காரர் அவனுடைய கவசத்தையும் இரதத்தையும் சமாரியாவின் குளத்திலே கழுவினார்கள். அப்பொழுது நாய்கள் வந்து அவன் இரத்தத்தை நக்கிற்று. இவ்விதமாக கர்த்தர் ஆகாபின்மேல் சொன்ன சாபம் நிறைவேறிற்று. இன்னும் கொஞ்சக் காலத்துக்குள் அவனுடைய குடும்பம் முழுமையும் அழிந்துபோயிற்று.

இது மகா பயங்கரமான சரித்திரம். இது பாவிகள் உணர்த்துவித்து குணப்படுதலுக்கு ஏவும் ஒரு சங்கதியாயிருக்கிறது. பாவிகளே, நீங்கள் தேவனுடைய சாபங்களை அற்பமாய் எண்ணவேண்டாம். தேவன் தமது நீதியை வெகுகாலம் மறந்திருக்கிறவர்போல காணப்பட்டாலும் அதை கையாடுங்காலமும் உண்டு. நீ குணப்படாத பட்சத்தில் உனக்குக் குறிக்கப்பட்டிருக்கிற முடிவு ஆகாபின் முடி

வைப் பார்க்கிலும் பயங்கரமானதாயிருக்கலாம். நீ துணிந்து விரைந்து அக்கிரமத்தில் சாடுகிறாய்; தடுப்பாரில்லாமல் ஓடும் குதிரையைப்போல் பொல்லாப்பில் ஓடுகிறாய். ஆனால் உன் முடிவு சடுதியாயிருக்கும்; அது பயங்கரமாயுமிருக்கும்.

குணப்பட விரும்பும் பாவியே! உன் தீர்மானங்கள் தற்காலத்துக்கும், சில மணி நேரத்திற்கு மாத்திரம் உரியதாயிராமல், உன் ஜீவகாலமெல்லாம் நீடித்திருக்கும் தெய்வீக உணர்ச்சியா யிருப்பதாக.

எலியா ரிஷி

பூர்வ மகாத்துமாக்களின் சரித்திரங்களை அதனதன் விசேஷ முக்கிய தன்மையின்படி ஒழுங்குபடுத்துகிற துண்டானல் இவரை மோசேக்கு அடுத்தவரென்று சொல்ல வேண்டியது. இருவருடைய காரியங்களுக்கும் அதிக சம்பந்தமிருக்கிறது. மோசே எலியா என்ற இரண்டு மகாத்துமாக்களும் தேவ குமாரனின் மனுஷாவதார காலத்தில் ஒரு தரம் தங்கள் மரித்தோர் ஸ்தலத்தைவிட்டு ஒரு மலையில் இறங்கி திரு அவதாரமூர்த்தியாகிய இயேசு சுவாமியோடு சம்பாஷித்தார்கள் என்ற சத்தியம் அவ்விருவரையும் ஒரே தாராசில் ஏக நிறையாய்க் காட்டி, சாதாரண மனுஷரிலிருந்து அவர்களை விசேஷப்படுத்துகிறதாயிருக்கிறது. புதிய ஏற்பாட்டின் காலத்தில் விசேஷ வரம்பெற்ற மனுஷரை எலியா என்ற பட்டப் பெயரால் அழைக்கிறதுண்டு.

எலியா ரிஷியின் வரலாறுகள் எவர்களுக்கும் பிரியத்தையும், மதிப்பையும் கொடுக்கும் என்பதற்குச் சந்தேகமில்லை. இவரை நாம், எங்கும் நின்று சத்தியத்தைக்கூறி அநியாயத்தை ஆட்சேபிக்கும் ராணுவ வீரனென்று காணலாம். இவரை ராஜதானியின் தெருக்களிலும், ராஜமாளிகையிலும், காட்டிலும், ஆற்றோரத்திலும் காணலாம். இவருடைய பூர்வோத்தரம் இன்னதென்றும் இவருடைய பிதாமாதாக்களின் வரலாறு இன்னதென்றும், இவருடைய ஜனனம், கல்விப்பயிற்சி முதலியவைகள் இன்னதென்றும் நமக்குத் தெரியாது. அநேக ஆண்டுகள் சென்ற பிற்பாடு ஒருநாள் இரவில் ஒரு வால்வெள்ளி விளங்குவதுபோல் இவர் வரலாறு துவக்குகிறது. இவரைப்பற்றிய ஒரு வரலாறு மாத்திரம் நமக்குத் தெரியும். அதாவது, அவர் திஸ்பிஊரான் என்பதுதான். இது எருசலேமையாவது சிலோவையாவது அடுத்த ஊராயிராமல், யோர்தான் ஆற்றுக்கு வடகிழக்கே

கீலெயாத்து மலைநாட்டிலிருந்த ஒரு கிராமம். இங்கே கல்விச்சாலையும் கவிராயரும், குருக்களும் போதகரும் இருக்கவில்லை. கீலெயாத்தின் திசை வாசனையுள்ள செடிகளுக்கும், தைல மரங்களுக்கும் பேர்போனதாயிருந்தது. அந்தச் செடிகளின் நடுவே எலியா என்னும் மனுப்பூண்டு எழும்பி அந்நாடெங்கும் மணக்கும் வாசனைப் புஷ்பங்களைச் சொரிந்து, ஆரோக்கிய போதனைகளாகிய ஆவியின் பிசின் தைலத்தைப் பொழிந்தது.

எலியா ரிஷியின் பேர் முதலாவது தேவ ஊழியத்தோடே தான் துவக்கப்படுகிறது. இவருடைய காலத்தில் இஸ்ரவேல் ராஜ்யம் என்றழைக்கப்பட்ட கானானின் வடநாடுகள் மெய்த் தேவ அறிவும் ஆராதனையும் அற்றுக் கேவலப்பட்டிருந்தது; அஞ்ஞான அந்தகாரம் அவர்கள் வீட்டையும் நாட்டையும் ஆண்டுகொண்டிருந்தது; பாகால், அஸ்தரோத் என்னும் விக்கிரகங்கள் வீடுகளிலும் தெருக்களிலும் காடுகளிலும் நிறுத்தப்பட்டன; பரிசுத்த பூமியனைத்தும் விக்கிரக பீடங்களால் நிரப்பப்பட்டிருந்தன; மேடுகளிலிருந்து விக்கிரகபலிகளின் புகையும் பள்ளத்தாக்குகளிலிருந்து விக்கிரக துதிகளும் எழும்பின. ஜனங்கள் அக்கிரமத்தை ஜலத்தைப் போலக் குடித்து, விக்கிரகங்களுக்குமுன் ஆடிப்பாடி குதித்துக் கூத்தாடினார்கள். ஐயோ, இஸ்ரவேலே! நீ இந்த ஸ்திதிக்கு வருவாயென்று ஒருவரும் அறியார்களே. உன்னில் விளங்கிய வாழ்வுகளும் பிரஸ்தாபங்களும் மாறி, நிந்தையும் அவமானமும் உன்னைக் மூடிக்கொண்டதென்ன? ஐயோ! நீ கர்த்தரைவிட்டு இஸ்ரவேலின் பரிசுத்தரைத் தீட்டுப்படுத்திவிட்டாய்; நீ மோசேயின் வழிகளைவிட்டு விலகி, ஆகாபின் வழிபாடுகளைத் தொடர்ந்துவிட்டாய்; உன் அக்கிரமத்தை இனி வானம் சகிக்கவொண்ணாது. அந்தகாரமும் அதோடு கார்மேகமும் இஸ்ரவேலைக் கவிந்துகொண்டிருந்த காலத்தில் எலியா ரிஷி தமது வாயில் அக்கினி பந்தத்தோடு வருகிறார் பாருங்கள்! அவர் ராஜதானியின் தெருக்களைக் கடந்து ராஜ சமுகமேறி, அக்காலத்து அரசனாகிய ஆகாபை நோக்கி, 'என் வாக்கின்படியேயன்றி இந்த வருஷங்களில் பனியும் மழையும் பெய்யாதிருக்கும் என்று இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கு முன்பாக

நிற்கிற நான் அவருடைய ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன்' என்றார். இந்த சொற்கள் அக்கினிபொறிகள்போல் இருந்தது. இவைகள் கூறப்பட்டவுடனே மேகத்தின் தண்ணீரும், வானத்தின் ஜலமும், பூமியின் ஈரமும் எல்லாம் வறண்டுபோகத் துவக்கிற்று. இந்தச் சாபவார்த்தைகள் இஸ்ரவேல் ராஜ்யத்தின் விளைச்சல்களைக் கறுக்கிப்போடவும், தரையை வெடித்துப்போடவும் செய்தது.

எலியாவின் வார்த்தைகளை நாம் கவனிக்கையில், அவர் தேவனைத் தமக்குமுன் நிறுத்திக்கொண்டவராயும் அவரைத் தன் அகத்தில் அடக்கிக்கொண்டவராயும் இருந்தார் என்று விளங்குகிறது. தேவனைத் தனக்குமுன் நிறுத்திக்கொள்ளும் பக்தர் அரசனின் கட்கத்துக்கு அஞ்சாவீரராய் விளங்குவார்கள். 'கர்த்தருக்கு முன்பாக நிற்கிற நான்' என்ற வாசகத்தால் என்னை அசைக்கவும் துன்பப்படுத்தவும் உன்னாலாகாது என்று சொல்லுகிறதுபோலிருக்கிறது. 'என் வாக்கின்படியேயன்றி' அதாவது நான் சொல்லாதபடிக்கு வானம் தன் மழையையும் மேகம் தன் பனியையும் உனக்குத் தராது என்கிறார். இது தன்னை வானத்துக்கும் மேகத்துக்கும் ஆண்டவன்போல் பேசும் ஆணவம் என்றெண்ணக்கூடாது. வானாதிதேவனின் வல்லமை தனக்குள் அடங்கியிருக்கிறதென்கிற புதுமையை இது வெளிப்படுத்துகிறதேயன்றி வேறல்ல; இந்தப் பரிசுத்த கர்வம் பக்தரிடத்தில் விளங்குவது தோஷமல்ல. பாகாலையும் அஸ்தரோத்தையும் குறிப்பிடும் பைத்தியக்காரருக்கு வானாதிதேவன் ஆண்டவராகிறதைவிட அவருடைய அடியார் ஆண்டவராகிறது நியாயந்தான். பாகாலும் அஸ்தரோத்தும் ஆகாபுக்கு தேவனாகிறதுண்டானால் எலியா தேவனாகிறது எவ்வளவு நியாயமாகத் தோன்றுகிறது! எலியா ரிஷி காலங்குறியாமல் தண்டனையை மாத்திரம் குறித்தார். 'இந்த வருஷங்களிலே பெய்யாது' என்று சொன்னாரேயன்றி இத்தனை வருஷங்களிலே பெய்யாது என்று சொல்லவில்லை. இது சாபத்தை அதிகப்படுத்துகிறதாயிருக்கிறது. மேலும் எலியா ரிஷி தமது சாபத்தை ஆணையோடு கூறுகிறார். ஆகாபுக்கேற்ற ஆளையும், அவன் காலத்துக்கேற்ற தீர்க்கதரிசியையும் தேவன் தேடி அனுப்புகிறார். கீலெயாத்து மலைக்காடுகளில்

திரிந்தலைந்த ஒரு சிங்கக்குட்டியைக்கொண்டு ஆகாபு என்ற ஓநாயைப் பீறிப்போடுகிறார். தேவன் அந்தந்த காலத்துக் கேற்ற ஆட்களை அனுப்பித் தமது ஊழியங்களை நிறைவேற்று கிறார். எலியாவின் வாசகம் காற்றுப்போல் எழும்பி பெருங் காற்றைப்போல் வீசிற்று; அது தீப்பொறியாய்ப் பெருகி இஸ்ரவேல் நாட்டைக் கொளுத்திவிடுகிறது. இம்மட்டும் அவர் கீலெயாத்து கெபிகளுக்குள்ளிருந்து இஸ்ரவேலரின் ஆகாமியங்களைக் கவனித்து, அவர்களை நயமும் பயமுமாய் எச்சரித்திருக்கலாம்; இப்பொழுதோ அந்த முறையை நிறுத்தி கட்கமுறையைக் கையாடி, தேவசாபத்தை வீசு கிறார். பாவிகளுக்கு முதலாவது எச்சரிப்புக் கூறப் பட்டாலும் அவர்கள் குணப்படாதபட்சத்தில் பட்சிக்கிற அக்கினிப் பிரளயம் புரண்டுவரும்.

மழை நிறுத்தப்படும் என்று எலியா சொன்னபடி நின்றேபோயிற்று. வானத்தில் இடைக்கிடையே ஓடிக் கொண்டிருந்த மேகங்களின் திரட்சியும் அவைகளில் கறுப்பு நிறமும் மாறிப்போயிற்று; சூரியகாங்கை மண்ணின்மேலும் மனுஷர்பேரிலும் வல்லமையாய்ப் பிரகாசித்தது; வானமும் அதின் சத்துவங்கள் அனைத்தும் சிருஷ்டி கர்த்தாவின் கரத் தில் இருக்கின்றன; 'அவர் சொல்ல ஆகும், அவர் கட்டளை யிட சகலமும் நிற்கும்'. ஒரு தேசத்தில் மழை பெய்யா திருக்கவும் இன்னொரு தேசத்தில் மழை பெய்யச்செய்யவும் கட்டளையிடுகிறவர் அவரே. அவர் தமது இஷ்டப்படியே வெட்டாந்தரையைத் தண்ணீர் தடாகமாக்கி, செழிப்பான ஸ்தலத்தை அதின் குடிகளின் அக்கிரமத்தினிமித்தம் உவர் நிலமாக மாற்றுகிறார்.

மழை நிறுத்தப்படும் காலத்தை முந்தி குறிக்காவிட் டாலும் பிந்தின நடபடிகளால் மூன்றரை வருஷமாக அது நிறுத்தப்பட்டிருந்ததென்று காண்கிறோம்; அதனால் கொடிய பஞ்சமுண்டாயிற்று. பஞ்சம் அவ்வளவு கொடியதாயிருந்த போதிலும் மனுஷர் குணப்படவே இல்லை. ஆகாபும் அவன் மனைவி யேசபேலும் அத்தேச குடிகளும் தங்கள் பாவங் களினிமித்தமும், விக்கிரகாராதனையினிமித்தமும் இந்த நஷ்டமுண்டாயிற்றென்று உணரும் புத்தியையுடையவர்களா

யிராமல், எலியா ரிஷியின் வாய்ச்சொல்லினாலே இவ்வளவு கேடும் வந்தது என்று சொல்லி, எலியாவைக் கொன்று விட்டால் உடனே பஞ்சம் தானாய் நின்றுபோம் என்று தீர்மானித்தார்கள். தங்களுடைய விக்கிரகாராதனை முதலிய அக்கிரமங்கள் வானத்தை இரும்பாக்கிவிட்டதென்று நினையாமல் எலியாவுடைய உதிரத்தையும் உடலையும் பூமி ருசி பார்த்தால் தண்ணீரைத் தானாய்க் கக்கி தானியத்தைத் தாராளமாய்க் கொடுத்துவிடும் என்று நினைத்தார்கள். நமக்குத் துன்பங்கள் நேரிடும்போது அதின் கடுமையால் மனுஷரைப் பிடித்துத் தின்னுகிறவர்களா யிராமல், வானத்தை அண்ணாந்து பார்த்து உன்னத கரத்தின் அந்தரங்கங்களை உணருகிறவர்களா யிருக்கவேண்டும்.

'எள்ளோடுங்கூட கம்பும் காய்ந்தது' என்ற வாசகம் போல் துன்மார்க்க இஸ்ரவேலரோடு எலியா ரிஷியும் பஞ்சகால வருத்தங்களை அநுபவிக்கவேண்டியதா யிருந்தது; பஞ்சம் அதிகரிக்க, அதிகரிக்க எலியாமேல் அரசன் மனதில் உண்டாயிருந்த எரிச்சலும் அதிகரித்தது. அதை அறிந்த ஆண்டவர் தமது பக்தனைப் பகைவர் கைக்குத் தப்புவிக்கவும், பஞ்சத்தின் அவதியிலிருந்து காக்கவும் திருவுளமானார். எப்படியெனில் ஒருநாள் எலியா தமது தியானத்திலிருக்கையில் கர்த்தருடைய வார்த்தையுண்டாகி, 'நீ இவ்விடத்தை விட்டுக் கீழ்த்திசையை நோக்கிப்போய் கேரீத் ஆற்றண்டையில் ஒளித்துக்கொண்டிரு; அந்த ஆற்றின் தண்ணீரைக் குடிப்பாய்; அங்கே உன்னைப் போஷிக்க காகங்களுக்குக் கட்டளையிடுவேன்' என்று சொன்னார். தேவனுடைய பிள்ளைகள் உலக மக்களின் உபத்திரவங்களில் பங்குபெற வேண்டியதுதான். என்றாலும் உபத்திரவங்களோடு நமக்குப் போக்கை உண்டுபண்ணுகிற பரமபிதா தமது நாமத்தின் மகிமையை விளக்கும் மகத்துவ தயவுகளையும் நமக்குச் செய்கிறார். இவர் ஒளித்திருக்கவேண்டுமென்ற கட்டளையால் உன் பிராணன் அபாயத்திலிருக்கிறதென்று அறிவிக்கிறதுபோலிருக்கிறது. இவர் ஒரு சிறு ஓடையையும் காகங்கள் கொண்டுவந்துகொடுக்கும் போசனத்தையும் தின்று காலங்கழிக்க வேண்டியதாயிருந்தது.

உலகப்பிரகாரமாய்ப் பார்த்தால் இவையொன்றும் ஆறுதலான வாசகமல்ல. காட்டுக்குள் காகத்தை நம்பி காலங்கழிக்கிறதைவிட அரசன் கட்கத்துக்கு அன்றே இரையாகி, பஞ்சகால உபத்திரவத்திற்கு விலகிக்கொள்வது லேசு அல்லவா! எலியா ரிஷி அந்த வார்த்தைகளை உலகப் போங்காய் எடுத்துக்கொள்ளவில்லை; அதை அவர் பரம போங்காய் எடுத்தார். 'மனுஷன் அப்பத்தினால் மாத்திர மல்ல, தேவனுடைய வார்த்தையால் பிழைப்பான்' என்பது இவருடைய சரித்திரத்தில் விளங்குகிறது. இதனால் எலியாவும் விசுவாசமுள்ளவரென்று உலகத்துக்கு வெளிப்படுத் தப்படுகிறது. ஒரு பெரிய ஆற்றையல்ல, ஒரு சிற்றாற்றை நம்பிக் காலங்கழிக்கவும், அகப்பட்டதையெல்லாம் தானே தின்றுவிடுகிறதுமான காகத்தின் காட்சிக்குக் காத்திருக்க வும் உத்திரவுசெய்ததும் அவர் அந்தப்படியே செய்யப் பயணப்பட்டதும் எலியாவுடைய உத்தம விசுவாசத்தை நமக்குத் துலாம்பரமாய்க் காட்டுகிறதல்லவா? காகங்களுக் குப் படியளக்கும் தேவன் காகங்களைக்கொண்டு தமது தாச னுக்குப் படியளக்கச் சித்தங்கொண்டார். இப்பொழுது நாமும் எலியாவோடு கூடப்போய் அவருடைய விசுவாசத் தின் மாட்சிமையையும், அவருடைய அற்புத போஜன பந்தியையும் பார்த்து அகமகிழுவோமாக. அவர் யோர்தான் ஆற்றோரமான காட்டைச் சேர்ந்தார். அந்தக் காட்டுக்குள் யாதொரு அரவத்தையும் காணோம்; சிங்கம் புலிகள் தங்க ளுக்கு இரை அகப்படாமல் தானாய்ச் சாகிற நிலைமையில் இருக்கின்றன; காட்டில்வந்து மேயும் மாடாடுகள் பஞ்சத் தில் மாண்டுபோனதால் அவைகளின் ஆரவாரத்தையும் காணோம்; தரையில் ஈரமில்லாமல் செடிகள் வதங்கி இலைகள் உதிர்ந்து வனம்போல் இருக்கிறது; மழையைச் சபித்து சூரிய வெப்பத்தை வாழ்த்தும் முட்செடிகள் மாத்திரம் வல்லமையாய் தலைகாட்டிக்கொண்டிருக்கின்றன. ஒற்றடிப் பாதையும், ஆள் அடி அடையாளமும் அங்கேயில்லை. அந்தக் காட்டுக்குள்ளேயிருந்த ஒரு சிறு பரும்பின் கெபிக்கு நேராக எலியா ரிஷி குனிந்து நுழைந்து நகர்ந்துபோகிறார். அங்கே ஒரு சிற்றோடையும் ஓடுகிறது. அந்த ஓடையண்டை யிருந்த கெபித்துவாரத்துக்குள் எலியா ரிஷி ஒரு எலிபோல்

நுழைந்து முகமலர்ச்சியாய் இருக்கிறார். இல்லை; அவர் ஆவியில் புலிபோல் பூரித்து, அக்குகைக்குள் கெம்பீரத்தோடு கடவுளின் தயவுகளைச் சொல்லித் துதிக்கிறார். இது தான் அவருக்குக் குறிக்கப்பட்ட அரமனை. பாதாள அரசனாகிய பெயெல்செபூல் தன்னை அண்டின ஆகாபுக்கு கொலுமண்டபத்தையும், கொத்தள மகத்துவத்தையும் கொடுத்தான். பரலோக அரசனாகிய யேகோவா தம்மை அண்டின எலியா ரிஷியைப் பூமியின் தாழ்விடங்களில் இறக்கி, மனுஷசஞ்சாரத்தை அகற்றி, காகங்களைச் சிநேகிதராக்குகிறார். இக்காலத்தில் நீல ஆகாயமே எலியாவுக்கு வீட்டு மேல் கூரையாயும், கன்மலை வெடிப்புகளே சுவராயும், தட்டையான கல்லே தரையாயும், மரக்கிளைகளே கட்டிலாயும், புல்லே மெத்தையாயும், காகங்களே உணவூட்டும் தாயாயும், சிற்றோடை கீதம்பாடும் கவிராயனாயும் இருந்தது. அவர் ஆட்டுமயிரால் நெய்யப்பட்ட தமது போர்வையைத் தரையில் விரித்து வானாதி தேவனைத் தியானித்துக்கொண்டிருக்கிறார். காகங்கள் விடியற்காலத்தில் அப்பமும் இறைச்சியும் கொண்டுவந்தது; தாகத்துக்கு அந்த ஆற்றின் தண்ணீரைக் குடித்தார். இம்மாதிரி சாப்பாடு அந்தத் தேசத்தில் ஒருவருக்கும் கிடைக்கவில்லை. ஒபதியா என்ற ஒரு பக்தன் அக்காலத்தில் அநேக தீர்க்கதரிசிகளைக் கெபியில் ஒளித்து வைத்து அப்பமும் தண்ணீரு மாத்திரம் கொடுத்து அவர்கள் உயிரைக் காப்பாற்றி வந்தான். இவருக்கோ இறைச்சியுங் கூட கிடைத்தது. நாம் தேவனுடைய கட்டளைப்படி எந்த இடத்திலும்போய் அவருக்கு ஊழியஞ்செய்யவேண்டும். நாம் நமது சரீரத்துக்காகக் கவலைப்படுகிறதிலும் தேவன் அதைப்பற்றி அதிகக் கவலைப்படுகிறார். இக்காலத்தில் நம்மில் அநேகர் எலியாவைப்போல் அற்புதமாய்ப் போஷிக்கப்படுகிறோம் என்பது மெய். காகங்கள் வந்து நமக்கு சாப்பாடு கொடாவிட்டாலும், காகங்களைவிட பேராசைப் பிடித்த பலருடைய கையால் அநேகருக்கு உதவியும் சகாயமும் கிடைக்கிறதில்லையா! அந்தப் பேராசைக்காரர் தங்களுடைய எச்சிலையல்ல, தங்களுடைய முதல்தரமான லாபங்களையும் வாழ்வுகளையுமே மற்றவர்கள் அநுபவிக்கும்படி கொடுக்கக் கட்டாயம்பண்ணப்படுகிறார்கள். எல்லா

வாழ்வுகளும் எனக்குத்தான் என்று வாயை ஆவென்று திறந்து திரிகிறவர்கள் வாயில் கொஞ்சம் கொடுத்து, மீதியை அவர்கள் கையில் கொடுத்து தன்னை வெறுக்கும் உத்தம தாசருக்கு அவனே கொடுக்கும்படி ஆண்டவர் செய்கிறது முண்டு.

எலியா காகசவரட்சணைக்குள் சரியாய் ஒரு வருஷமிருந்தார். இவ்வளவு காலமிருந்தாரென்பது அதிசயத்தைக் கொடுக்கலாம். இக்காலத்தில் அவர் கையில் புஸ்தகங்களாவது வேறு தொழில் கருவிகளாவது இருக்கவில்லை. அவருடைய நேரம் எப்படிப் போயிற்று? நமக்கு நேரம்போக்க பல வழிகளுண்டே; அவருக்கு ஒரேவழி இருந்தது. அந்த ஒரு வருஷமும் தியானத்தால் தமது காலத்தை இன்பமாய்க் கழித்தார். அவர் தமது கண்ணுக்குமுன் கண்டதையெல்லாம் ஞானமாக்கி ஆத்தும பசியை ஆற்றிக்கொண்டார் என்று சொல்லவேண்டியது. அவர் கண்ட பர்வதம் தேவனுடைய பரிசுத்த பர்வதமாகிய சீயோனையும், அவர் கண்ட ஆறு ஜீவநதியையும், விருட்சங்கள் ஜீவமரங்களையும், காக சேவை தேவதூதரின் பணிவிடைகளையும், நன்றாய் அவருடைய மனதுக்கு விளக்கிற்று. இவைகளின்மேல் தமது தியானத்தை வைத்து வளர்ப்பதும், தேவ அன்பின் அனலை அடைந்து மகிழ்வதும், பாவநாசத்தைக் கவனித்துப் புலம்புவதும் அவருடைய பிரதான வேலையாயிருந்தது. ஒரு வருஷத்துக்குள்ளாக அந்த ஆறு வற்றிப்போயிற்று. ஐயோ! இனி எலியா என்ன செய்வார்? தேவசித்தத்துக்குக் காத்திருந்தார்.

ஆண்டவர் ஒருநாள் அவருக்குத் தரிசனமாகி, 'நீ எழுந்து சீதோனுக்கடுத்த சாறிபாத் ஊருக்குப் போய் அங்கே தங்கியிரு; உன்னைப் பராமரிக்கும்படி அங்கே ஒரு விதவைக்குக் கட்டளையிட்டேன்' என்று திருவாக்களித்தார். நதி வற்றிப்போயிற்று என்பதும், வேறு இடத்துக்குப் போகும்படி எலியாவுக்கு புது உத்தரவுண்டாயிற்று என்பதும், தேவச்செயலை உணராதவர்களுக்கு ஒருமாதிரியாகத் தோன்றும். இம்மட்டும் அற்புதம் என்று நாம் எண்ணினது இப்பொழுது நாடோடிய விஷயம்போல்

இருக்கிறதே என்பார்கள். எலியா ரிஷிக்கோ அது அப்படி இருக்கவில்லை; இவ்விடத்திலிருந்து புறப்படும்படி கட்டளையிடுகிற தேவன் இம்மட்டும் நடத்தின அற்புத நெறியிலும் மேலான அற்புத நடத்துதலைக் காட்டப்போகிறாராக்கும் என்று எண்ணிக்கொண்டார். உலகப்பிரகாரம் சொல்ல வேண்டுமானால், காட்டுக்குள் துரத்தின கட்டளையிலும் இதுதான் கஷ்டமான கட்டளையாயிருந்தது. காட்டு ஜீவியம் கட்கத்துக்கு நீக்கிற்று; இனிவரும் நாட்டுஜீவியம் கட்கத்துக்கு அவரை நெருக்கிற்று. மேலும் இவர்போய்த் தங்கவேண்டிய ஊர் புறச்சாதிகளின் ஸ்தானமாயும், அவர் போய்த் தாமதிக்கவேண்டிய வீடு கைம்பெண்ணின் கிரகமாயுமிருந்தது. எலியா யூதஜாதியானாயிருந்தார். யூதர் புறச்சாதியாரை நாய்கள் என்று எண்ணியும் சொல்லியும் வந்தார்கள்; ஆதலால் யூதன் பார்வைக்கு இந்த தேவ கட்டளை நாயின் எச்சிலைத் தின்னும்படி உத்தரவாகிறதுபோலத் தோன்றவேண்டியது. எலியா அக்கட்டளையை அலட்சியஞ் செய்யாமல் அந்நிமிஷமே புறப்பட்டு சாறிபாத் ஊருக்குப் போனார். தேவனுடைய பிள்ளைகளுக்கு ஜாதி என்ற கர்வமுண்டாகிறதுமில்லை; அவர்கள் அந்தஸ்து என்கிற ஆணுவம் பேசுகிறதுமில்லை.

சாறிபாத் ஊர் கோட்டைக் கொத்தளமுள்ள ஒரு சிறு பட்டணமாயிருந்தது. எலியா அவ்வூரின் வாசலண்டை வரும்போது அவ்விடத்தில் ஒரு கைம்பெண் விறகு பொறுக்கிக்கொண்டிருந்தாள். அந்தப் பஞ்சகாலத்தில் அரிசிக்குப் பஞ்சமேயன்றி விறகுக்குப் பஞ்சமில்லை. மழைத்தாழ்ச்சியால் மரமெல்லாம் காய்ந்து, செடிகள் வதங்கி எவ்விடங்களிலும் லேசாக விறகு சம்பாதிக்கக் கூடியதாயிருந்தது. அவள் விறகு பொறுக்குகிற ஜாடையைக் கவனித்து, இவள்தான் கர்த்தர் நம்மைப் பராமரிக்கும்படி திட்டஞ்செய்திருக்கிற தாயாக்கும் என்று அவர் எண்ணியிருக்கலாம். அச்சமயத்தில் எலியா பகலெல்லாம் வெயிலில் நடந்து வழியெல்லாம் குடிக்கத் தண்ணீரற்று, நாவறண்டு, முகங்குழுவி, கண் குழிவிழுந்து வந்துசேர்ந்தார். எலியா அவளைப் பார்த்துக் கூப்பிட்டு, தாம் குடிக்கும்படி ஒரு பாத்திரத்தில் ஜலம் கொண்டுவரச் சொன்னார்.

அந்தப் புண்ணியவதி தன் வேலையை நிறுத்தி, எலியாவின் வேலையை முந்திமுடிக்க தீவிரித்துப்போனாள். இயேசு ஜலம் கேட்டபோது சமாரிய ஸ்திரீ வீண்பேச்சுப் பேசி காலங்கழித்தாள். இவள் அப்படிச் செய்யவில்லை. ஜலம் கொண்டுவர அவள் போகையில் அவர் அவளைக் கூப்பிட்டு, கொஞ்சம் அப்பமும் எனக்குக் கொண்டுவா என்று கேட்டார். தாகந்திர அவளைக் கெஞ்சுவதோடு அவள் மனதின் நேசத்தையும் அளந்துபார்க்க முயன்றாராக்கும். இதைப் பார்க்கும் சிலர், ஈரம்கண்ட இடத்தில் இன்னம் தோண்டிப் பார்க்க எலியா ரிஷி கெட்டிக்காரன் என்று பரியாசமாய்ச் சொன்னாலும் சொல்லலாம். அது சரியல்ல. எலியாவுக்கு ஒரு கைம்பெண்ணைப்பற்றி எப்படி தேவன் சொல்லியிருந்தாரோ அப்படியே அந்தக் கைம்பெண்ணுக்கு ஒரு தீர்க்க தரிசியைப்பற்றியும் சொல்லியிருந்தார். ஆகவே தேவ எச்சரிப்படைந்த இருபட்சத்தாரும் அதின் அந்தரங்கங்களை வெளிப்படுத்தாமல் ஒருவரையொருவர் பரீட்சித்து அவரவருக்குச் சொல்லப்பட்ட எச்சரிப்பைக் கண்டறிந்து கொள்ளுகிறார்கள் என்று சொல்லவேண்டியது. எலியா அப்பம் கேட்டவுடனே இவள் தன் பஞ்சகால குடல் கொதிப்புகளைக்கொட்டாமல் தேவ நடத்துதல்களை சாந்தமுள்ள மனதோடு அங்கீகரிக்கிறவளைப்போல் விளங்கினாள். அவள் சொல்வாள்: மா ரிஷியே! அடியாள் பானையில் ஒரு பிடிமாவும், அடியாள் கலயத்தில் கொஞ்சம் எண்ணெயுமே அன்றி சுட்ட அடையாவது, வடையாவது தற்சமயம் வீட்டில் இல்லை என்பது வாஸ்தவம் என்பதற்கு வானவரே சாட்சி. இதோ, நானும் என் குமாரனும் சாப்பிட்டு செத்துப்போக இரண்டு விறகுக்குச்சுகளைப் பொறுக்கவந்தேன் என்று சொன்னாள். இவ்வளவு சொன்னாளேயன்றி தாம் ஜலம் கொண்டுவரும்போது அடையும் கொண்டுவருவேனென்று அவள் சொல்லவில்லை. அவள் நிலைமை அவ்வளவு தரித்திரத்திலிருந்தது. அப்பொழுது எலியா அவளைப் பார்த்து, ஐயோ, அம்மணி! உன் நிலைமை அவ்வளவு தரித்திரமா, அவ்வளவு தாழ்வா! அப்படியானால் அடை வேண்டாம், ஜலம் மாத்திரம் தந்தால் போதுமென்று அனுப்பினாரா? இல்லை; அந்தக் கொஞ்சமாவிலும் 'தமக்கு ஒருபங்கு

வேண்டுமென்கிறார். அவர் சொல்வார்: மாதே! பயப்படாதே, நீ போய் அடைசுடு; ஆனால்

'முதல் அதிலே எனக்கு ஒரு சிறிய அடையைப்
பண்ணிவா,

பின்பு உனக்கும் உன் குமாரனுக்கும் பண்ணலாம்'

என்று சொன்னார். இதைக் கேட்கிற சாதாரண மனுஷர், அப்பா! எலியா ரிஷியின் பக்தியெல்லாம் இங்கே பளிச்சென்று விளங்கிப்போயிற்றே; இவரைப்போலத் தன்காரிய குட்டி யாருண்டு? ஒரு விதவை ஒருபிடி மாவை அடைசுட்டு தாயும் மகனுமாகப் புசித்து சாகப்போகிறார்கள்; அதிலும் இவருக்கு ஒருபங்கு வேண்டுமாம் என்பார்கள். அப்படிப் பேசுவது பிசகு; அதின் இரகசியம் பின்னால் விளங்கும். தேவன் தமது ஊழியக்காரர்மூலமாய் தேவாலயத்துக்கும், தேவ பணிவிடையாட்களுக்கும் உதவும்படி சபையாரைக் கேட்கும் பண உதவிகளும் இப்படியே இருக்கிறது. அவர் ஐசுவரியவான்களிடத்திலும் ஏழைகளிடத்திலும் தமது ஊழியரை அனுப்பி பொருளுதவி கேட்கிறார். நமது வரும்படியும், நமது கஷ்டமும், நமது பசியும், நமது நிர்வாணமும் அவருக்கு நன்றாய்த் தெரிந்தபோதிலும் நாமே அடிக்கடி அவரிடம் சொல்லியழுதபோதிலும் அவர் பின்னும் கேட்கிறார். அதின் காரணமென்ன? இருக்கிற கொஞ்சத்தைப் பிடுங்கி, இல்லாத அதிகத்தைக் கொடுக்கவே. 'கொடுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்' என்பது பரலோகப் பிரமாணங்களில் ஒன்றாயிருக்கிறது. எலியா, தாம் கேட்ட அடையை அவள் அல்லத்தட்டாமல் கொடுக்கும்படி ஒரு நல்வாக்கும் கூறினார். கர்த்தர் தேசத்தின்மேல் மழையைக் கட்டளையிடும் நாள்வரைக்கும் 'பானையின் மா செலவழிந்துபோவதுமில்லை, கலயத்தின் எண்ணெய் குறைந்துபோவது மில்லையென்று இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறார்' என்று சொன்னார். அந்த மங்கள வாக்கை தலைமேல் ஏந்தி அந்தக் கைம்பெண் கடியநடந்து ரிஷி கேட்டபடி அவருக்கு அடையும் ஜலமும் கொடுத்தாள். பின்பு அவள் எலியா ரிஷியைக் கூட்டிவந்து தன் வீட்டில் வைத்து ஆதரித்தாள். ரிஷி சொன்னபடி பஞ்சம் முடியுமட்டும் அவளும், மகனும், ரிஷியும் அனுதின

மும் பெருகிக்கொண்டுவந்த மாவாலும் எண்ணெயாலும் பஞ்சகாலத்தைக் கடத்தினார்கள். இந்த அற்புதம் அந்தக் கைம்பெண் விறகுக்குப் போய் வீட்டுக்குத் திரும்புகிற நேரத்திற்குள் அல்லது எலியா ஆசீர்வாதங்கூறின நேரத்தில் நடக்கத் துவக்கியிருக்கலாம். எப்படியும் அவள் ரிஷிக்கு அடைசுட மாவும் எண்ணெயும் எடுக்கிற சமயத்தில் அதில் அற்புதம் நடந்திருக்கிறதென்று அறிந்திருக்க வேண்டியது; மற்றப்படி எலியாவை அவள் வீட்டிலே சேர்த்துக்கொள்ளமாட்டாள். இந்த வரலாறு நமக்கு அநேக போதனைகளைத் தருகிறது. தேவ நடத்துதல்களை மதிக்கிறவன் அவரால் ஆசீர்வாதத்தைப் பெறுவான்; நாம் சரீரத்துக்காகப் படுகிற கவலையைவிட தேவசித்தத்தை நிறைவேற்ற அதிகக் கவலையுள்ளவர்களாய் இருக்கவேண்டியது. இந்த அஞ்ஞான ஸ்திரீயினிடத்தில் விளங்கிய விசுவாசமும் பரோபகாரகுணமும் கிறிஸ்தவர்களிடம் இல்லையென்று துக்கத்தோடு சொல்லவேண்டியதாயிருக்கிறது. சாறிபாத் ஊராளே! நீ புண்ணியவதி; நீ உன் உத்தமத்தால் உன் ஊரையும், உலக ஸ்திரீகளையும், விசேஷமாய்க் கைம்பெண்களையும், புறசாதி முழுவதையும் மேன்மைப்படுத்தும் கொடிமரம்போல் வேதாகம சோலைக்குள் நின்று அசைகிறாய்.

எலியா இக் கைம்பெண்ணுடைய வீட்டில் சிலகாலம் சமாதானத்தோடு காலங்கழித்தார். இவள் வீட்டுக்கு ஒரு மேல்மெத்தையுமிருந்தது; எலியா மெத்தைமேலும், அவர்கள் கீழ் அறையிலுமாக வாசம்பண்ணிவந்தார்கள். இப்படியிருக்குந்தறுவாயில் அந்தக் கைம்பெண்ணின் ஒரே மகன் வியாதிப்பட்டான்; அந்த வியாதி நாளடைவில் அதிகப்பட்டதால் பையன் இறந்துபோனான். இது எலியாவுக்குச் சொல்லமுடியாத மனநோவை உண்டாக்கிற்று. காட்டில் வசித்து ஊற்றின் ஜலம்குடித்து காலங்கழிக்க இடமுமில்லாமல் அந்த ஊற்றும் வற்றிப்போயிற்று; இப்பொழுது வீட்டில் வசித்து அடைதின்று காலங்கழிக்க வழியில்லாமல் அந்த வாழ்விலும் மண்விழுந்ததே என்ற கவலை எவர்களுக்கும் உண்டாகுமல்லவா? எலியா இது காரியங்களைத் தமது மனதில் கிரகித்து கடவுளின் செயலை பக்திவிநய தியானத்

தால் உணர்ந்துகொண்டு பிள்ளையைப் பார்க்கப்போனார். அந்தக் கைம்பெண் தலைவிரிகோலமாய் எலியாவை நோக்கிச் சொல்வாள்: 'தேவனுடைய மனுஷனே! எனக்கும் உமக்கும் என்ன? அதாவது நான் உமக்கு என்ன அநியாயஞ்செய்தேன்? என் அக்கிரமத்தைக் கடவுள் மறவாமல் நினைவுகூரவும், அதினிமித்தம் என் அருமை மகன் சாகவுமா என்னிடத்தில் வந்தீர்' என்று அலறி அழுதாள். எலியா அவள் அங்கலாய்ப்பைக் கண்டு கலங்கிப்போகவில்லை. ஒருவேளை தேவன் அந்த வீட்டில் நடக்கப்போகிற சாவையும், வெளிப்படுத்தப்போகிற தேவ மகிமையையுங் குறித்து எலியாவுக்கு முன்னறிவித்திருந்தாலும் இருக்கலாம். அவர் அவள் மடியிலிருக்கிற செத்தபிள்ளையை என்னிடத்தில் தா என்று கேட்டு வாங்கி தமது மேலறையில் கொண்டுபோய் கிடத்திக்கொண்டு சகல ஜீவாத்துமாக்களுக்கும் உயிர் கொடுக்கும் கடவுளின் பாதத்தைப்பிடித்து ஜெபஞ்செய்தார். அந்த ஜெபமாவது:—

'என் தேவனாகிய கர்த்தாவே! நான் தங்கியிருக்க இடங்கொடுத்த இந்த விதவையின் மகனை சாகப்பண்ணினதால் அவளுக்கு துக்கத்தை வருவித்தீரோ?' என்று அலறி 'கர்த்தாவே! இந்தப் பிள்ளையின் ஆத்துமா அவனுக்குள் திரும்பி வரப்பண்ணும்' என்று விண்ணப்பம் பண்ணினார். அட்சணமே பிள்ளைக்கு உயிர்வந்தது; அவன் பிழைத்துக் கொண்டான். கொல்லவும் உயிர்ப்பிக்கவும் வல்லமையுள்ள தேவனே! உமது நாமத்துக்கு எந்நாளும் மகிமையுண்டாவதாக. இதுதான் மரித்தவர்கள் உயிரடைந்தார்கள் என்று காட்டும் முதலாம் திருஷ்டாந்தமாயிருக்கிறது. கர்த்தரால் சாவு, ஜீவனாய் மாறும் என்பதற்கு இது நிலையான அத்தாட்சியாகவும் அசையாத திருஷ்டாந்தரமாகவும் இருக்கிறது. மரித்துப்போன பிள்ளை முன் கைம்பெண்ணுக்கு மாத்திரம் பாத்தியப்பட்டது; அது முனிவரால் மறுபடியும் உயிரோடெழுப்பப்பட்டதால் அற்புதத்தால் அவருக்கும் பிள்ளையாயிற்று. முனிவர் இனி அந்த வீட்டில் தங்க யாதொரு ஆட்சேபனையில்லை. இனி அந்தக் கைம்பெண் தன் மகனைவிட முனிவரை அதிகமாய்ப் போஷிக்க கடமை

பட்டவள் என்பதை ஆண்டவர் தமது செயலால் விளங்கப் பண்ண விரும்பினுராக்கும்.

எலியா சுமார் இரண்டு வருஷத்துக்கதிகமாய் அக் கைம் பெண்ணினுடைய வீட்டிலிருக்கையில் ஒருநாள் திடீரென்று எலியாவுக்குக் கர்த்தருடைய வார்த்தையுண்டாயிற்று: 'எலியாவே! நீ எழுந்து புறப்பட்டு ஆகாப் அரசனைக் கண்டு கொள்; நான் தேசத்தின்மேல் மழையைக் கட்டளையிடு வேன்' என்று கர்த்தர் சொன்னுர். முன் அவனைக்கண்டு பஞ்சம் வருமென்று கூறின நாள்முதல் ஆகாப் எலியாவை பிடிக்கப் பல பிரயத்தனங்களைச் செய்தும் வாய்க்காதே போயிற்று. முன் ஆகாபின் கைக்குத் தப்பும்படி காட்டுக் குள்ளும் வீட்டுக்குள்ளும் ஒளித்துவைத்திருந்த தேவன் மறுபடியும் அவன் கண்ணுக்கெதிரே வரும்படி கட்டளையிட் டார். பஞ்சமுண்டாகி மூன்று வருஷத்துக்குள்ளாக ஆகாப் மனந்திரும்பி தன்மட்டில் சீருள்ளவனுய் நடந்திருக் கலாம். ஏதாவது மாறுதல் இந்த பஞ்சகாலத்தில் ஆகாபுக்கு உண்டானதென்பது மெய்யானுல் அதற்கு அவனுடைய அரமனை விசாரிப்புக்காரனுகிய ஒபதியாவே காரணமாயிருக் வேண்டியது. அவன் கர்த்தருக்குப் பயந்து நடக்கிறவனு யிருந்தான்.

எலியா தேவ கட்டளைப்படி ஆகாபைச் சந்திக்கப் போகையில் ஒபதியா வழியில் அகப்பட்டான். அவன் மூல மாய்த்தான் ராஜனைப் பார்க்க வருகிறதாக செய்தி சொல்லி யனுப்பினுர். ஒபதியா அந்தச் செய்தியை முதலாய் அரச னுக்குச் சொல்ல பயந்தான். நான் எலியாவை வழியில் கொன்றுபோட்டேன் என்று வந்து சொல்லுகிறதற்குப் பதி லாக, எலியா உம்மைச் சந்திக்க வருகிறுர் என்று வந்து சொல்லுகிறதா, என்னை உடனே கொன்றுபோடுவானே என்ற பயத்தோடு, எலியா திடீரென்று அற்புதமாய் மறைந்துபோனுலும் போவாரே, அப்பொழுது என்ன செய்யலாமென்றும் அஞ்சினுன். மேலும் எலியாவைப் பிடிக்க அரசன் ஆட்களைத் திட்டம்பண்ணியிருக்கையில் இவரைக் கண்டால் கொன்றுபோடுவானே என்றும்சமுசயப் பட்டிருக்கலாம். ஒபதியாவின் அச்சத்தையெல்லாம் எலியா

அகற்றி தைரியப்படுத்தினவுடன் அவன் அரசனண்டை போய் சங்கதியைச் சொன்னான். அந்த சமாச்சாரம் அரசனை அசைத்துவிட்டது. நாம் எலியாவைக் கொல்லும்படி என்ன பிரயாசப்பட்டும் வாய்க்கவில்லை; இப்போது அவரே நம்மைத் தரிசிக்க வரவேண்டுமென்று செய்தியனுப்புகிறார். இதில் என்ன இரகசியம் இருக்கிறதோ என்று அவன் அஞ்சி அவருடைய இருப்பிடம்தேடி அரசனே ஓடினான். அரசன் எலியாவைக் கண்டவுடன் கோபத்தால் பொங்கி, இஸ்ரவேலை இப்படிப் பஞ்சத்தால் கலங்கவும், அவதிப்படவும், அங்கலாய்க்கவும் பண்ணுகிறவன் நீ அல்லவா? என்று கேட்டான். உடனே எலியா முகத்தில் அடித்தாற்போல,

இஸ்ரவேலைக் கலங்கப்பண்ணுகிறவன் நானல்ல, நீரும் உமது தகப்பன்வீட்டாரும் கலங்கச் செய்கிறீர்கள்

என்றார். அதைக் கேட்டவுடனே அரசன் மரத்துப்போய் ஒன்றும் பேசாமல் வாய் மூடிக்கொண்டான். அப்பால் எலியா அரசனை நோக்கி, நீர் இந்தட்சணமே இஸ்ரவேலின் பெரிய மனுஷரையும், பாகாலின் 450 தீர்க்கதரிசிகளையும், தோப்புவிக்கிரக தீர்க்கதரிசிகள் 400 பேரையும் கர்மேல் மலைமேல் என் முன்வந்து கூடும்படி கட்டளையனுப்பும் என்று சொன்னார். உடனே ஆகாப் கட்டளையனுப்பி அவ்வளவு பேரையும் கர்மேலுக்கு வரவழைத்தான். இதின் இரகசியம் ஒருவருக்கும் தெரியாது. ஒருவேளை இவர்களெல்லாரும் மழைக்காக விசேஷ பலியிடும்படி அரசன் வரவழைக்கிறானாக்கும் என்று எண்ணியிருக்கலாம். அரசனுடைய கட்டளைப்பிரகாரம் அனைவரும் கர்மேல் மலையில் கூடினவுடனே எலியா அவர்களண்டைவந்து நின்றார். அவரைக் கண்டவுடன் பாகாலின் பூசாசாரிகள் அனைவரும் பஞ்சத்தைக் கொண்டுவந்த பாதகன் அப்பா என்று தங்களுக்குள் சொல்லிக்கொண்டிருக்கலாம்; என்றாலும் இன்னும் என்ன பெரிய ஆபத்துக்குள் நம்மையும் அரசனையும் விழத்தட்டும்படி தேவசாபத்தைப் பொழிந்துவிடுவாரோ என்று மனங் கலங்கி நின்றார்கள். எலியா அவர்களை நோக்கிச் சொல்லுவார்:

'நீங்கள் எந்தமட்டும் இரண்டு நினைவால் குந்தி குந்தி நடப்பீர்கள்?

கர்த்தர் தெய்வமானால் அவரைப் பின்பற்றுங்கள்,
பாகால் தெய்வமானால் அவனைப் பின்பற்றுங்கள்'

என்று சொன்னார். அவர்களில் ஒருவரும் அவருக்கு மறுமொழி கொடுக்கவில்லை. பின்னும் எலியா சொல்லுவார்: கர்த்தரின் தீர்க்கதரிசிகளில் நான் ஒருவன் இங்கே இருக்கிறேன், பாகாலின் தீர்க்கதரிசிகளாகிய நீங்களோ 450 பேர் இருக்கிறீர்கள்; நாமிருபட்சத்தாரும் பந்தயங்கூறி பலியிடுவோம்; இரண்டு காளைகள் கொண்டுவரப்படட்டும்; ஒரு காளையை நீங்கள் தெரிந்துகொண்டு அதைத் துண்டித்து, நெருப்புப்போடாமல் விறகுகளின் மேல் வையுங்கள். நான் மற்றக் காளையை அப்படியே செய்து நெருப்புப்போடாமல் விறகுகளின்மேல் வைப்பேன்; நீங்கள் உங்கள் தேவனை நோக்கிக் கூப்பிடுங்கள்; நான் யேகோவாவாகிய கர்த்தருடைய நாமத்தைச் சொல்லிக் கூப்பிடுவேன். அப்பொழுது,

அக்கினியினால் உத்தரவருளும் தெய்வமே தெய்வம்

என்று சொன்னார். இதைக் கேட்டவுடனே பாகாலின் பூசாசாரிகளின் இரத்த ஓட்டமெல்லாம் நின்று கட்டை போல் நின்றிருப்பார்கள். அவர்கள் மனதுக்குள் இன்றோடு எலியா என்ற புலி நம்மைப் பட்சித்துப்போட்டது என்ற உணர்விருந்த போதிலும் வெளிக்கு எங்கள் தேவனுக்கு மிஞ்சின சுவாமியும் உண்டோ என்று நிச்சயித்தவர்களைப் போல்

'இது நல்ல வார்த்தை,
இது சரியான பந்தயந்தான்'

என்று சொன்னார்கள். ஒருவேளை எலியாவின் பந்தயத்தை நம்முடைய வாய்ச் சாமர்த்தியத்தால் மடக்கிவிடலாம் என்று நினைத்தாலும் நினைத்திருக்கலாம். பந்தயம் சரிதான் என்று ஒத்துக்கொள்வதால் மாத்திரம் பந்தயம் நிறைவேறிப் போகாதே; ஆதலால் எலியா பின்னும் சொல்லுவார்: நீங்கள் அநேகரானதால் நீங்களே முந்தி ஒரு காளையைத் தெரிந்து கொண்டு அதை ஆயத்தம்பண்ணி, நெருப்புப்போடாமல் உங்கள் தேவனைநோக்கிக் கூப்பிடுங்கள் என்று அவர்களை நெருக்கினார். கடைசியாகப் பந்தயம் கெலிக்கும் பூசாசாரி

கள்போல் பாசாங்குபண்ணி அங்குமிங்குமோடி, அதை இதைச் செய்து, பலியிட்டு சகலத்தையும் ஆயத்தம்பண்ணி,

பாகாலே எங்களுக்கு உத்தரவருளும்,
பாகாலே எங்களுக்கு அக்கினியருளும்

என்று காலமே துடங்கி மத்தியான மட்டும் பாகாலின் நாமத்தைச் சொல்லிக் கூப்பிட்டார்கள். பாகால் உத்தர வருளினதோ? பாகால் அக்கினி கொடுத்ததோ? இல்லை. ஒரு சத்தமும் பிறக்கவில்லை, மறு உத்தரவும் கொடுக்வில்லை. அவர்கள் கூப்பிட்ட பாகால் அல்லது சூரியன் வராமல் பிசாசுக்கள் வந்து அவர்களை ஆண்டது; ஆதலால் அவர்கள் கட்டின பலிபீடத்துக்கு எதிரே குதித்து ஆடினார்கள். ஆகாப் இந்த வேடிக்கையை யெல்லாம் பார்த்துக்கொண்டு இது என்னமாய் முடியுமோ என்று தியானித்துக்கொண் டிருந்தான். உச்சிவேளையிலே எலியா இவர்கள் செய்யும் ஆராதனையைப் பார்த்து நகைத்து பரியாசம்பண்ணிச் சொல் வார்:

உரத்த சத்தமாய்க் கூப்பிடுங்கள்,
அவர் தேவனுமே கூப்பிடுங்கள்,
அவர் தியானத்திலிருப்பார் கூப்பிடுங்கள்,
அவர் அலுவலாயிருப்பார் கூப்பிடுங்கள்,
அவர் வரும் பயணத்திலிருப்பார் கூப்பிடுங்கள்,
தூங்கினாலும் தூங்குவார் கூப்பிடுங்கள்,
அவர் விழித்தெழும்பும்படி கூப்பிடுங்கள்

என்று பழித்து அவர்களை வெட்கப்படும்படி பண்ணினார். கடைசியாக, சத்தம் கேட்டு வராதசுவாமி இரத்தம்கண்டால் வந்துவிடுவாரென்று தங்கள் வழக்கத்தின்படியே இரத்தம் தங்கள்மேல் வழியுமட்டும் கத்திகளாலும், ஈட்டிகளாலும் தங்களைக் கீறிக்கொண்டார்கள். புலி தான் பிடித்த புல் வாயைத் தின்னுமுன் என்ன பாடுபடுத்துமோ அதுபோல எலியாப் புலி இந்த பூசாசாரிகளை இப்படித் திருக்கூத்தாடப் பண்ணுகிறார், பாருங்கள். போதனையை உணராத மூடருக் குப் பரியாசம் தான் கடைசி மருந்து என்று நினைத்தாரோ? எலியா பரியாசம் பண்ணத் துவக்கினதுமுதல் சிலர், இனி நாம் வேறு கோலம் காட்டவேண்டுமென்று கருதி, பாகா

விடத்திலிருந்து சன்னதவரம் வந்ததுபோல பாராட்டி அது முதல் சன்னதம் சொல்ல ஆரம்பித்தார்கள். அப்படிப் பத்து நாழிகைநேரம் கொடுத்தும் பலிக்கவில்லை. பலிப்பதார்த் தங்களெல்லாம் நாற்றமெடுக்கத்துவக்கிற்று; அச்சமயத்தில் பருந்தும் கழுகும் காகமும் தங்களுக்குக் கொழுத்த கன்றின் இறைச்சி அகப்பட்டதென்று அவர்கள் தலைமேல் பறந்து கொண்டு திரிந்தன. இந்த லாபந்தவிர வேறொரு லாபமும் வானத்தில் காணப்படவேயில்லை. விக்கிரகத்தை நம்புகிற வர்களுக்கு வெட்கமாகிய ஒரு லாபந்தவிர வேறு லாபம் கிடையாது.

கடைசியாக அன்று சாயரட்சை மூன்றுமணியாகிற சமயத்தில் எலியா மறுபடியும் அவர்களண்டைவந்து, என் கிட்ட வாருங்கள், இனி நான் என் பலியைச்செலுத்தி என் தேவனை நோக்கி வேண்டிக்கொள்ளுகிறேன் என்றார். அதுகேட்ட பூசாசாரிகள் தங்கள் பிரயத்தனம் எப்படி அபஜெயமாய் முடிந்ததோ அதேபிரகாரம் எலியாவின் பிரயத்தனமும் முடியுமென்று ஒருவேளை எண்ணியிருக்க லாம். அந்த மலைமேல் முன்னொரு பலிபீடம் கட்டப்பட்டு தகர்க்கப்பட்டிருந்தது. எலியா அதைச் செப்பனிட்டு விறகுகளை அடுக்கி, காளையைச் சந்துசந்தாகத் துண்டித்து விறகுகளின்மேல் அடுக்கிவைத்தார். அப்பால் பலியை வந்து பட்சிக்கும் அக்கினி கள்ள அக்கினி என்றாவது, திருட்டுத்தனமாய்க் கொளுத்தப்பட்டதென்றாவது சத்துருக் கள் ஆட்சேபிக்க இடமிராதபடிக்கு பீடத்தைச் சுற்றிலும் இரண்டுபடி விதை விதைக்கத்தக்க அளவாக ஒரு வாய்க் காலையுண்டாக்கி, பெரிய குடத்தால் பன்னிரண்டு குடம் தண்ணீர் கொண்டுவரச்சொல்லி, விறகுகள்மேலும் பலியின் மேலும் வார்க்கும்படி சொன்னார். இந்த வேலைகளையெல் லாம் பாகாலின் பூசாசாரிகள்தான் செய்திருக்கவேண்டும். சாத்தானுடைய மக்களால் தமக்காகவேண்டிய வேலைகளை யும் தேவன் நிறைவேற்றிக்கொள்ளுகிறார். தண்ணீர் பீடத்தைச் சுற்றிலும் ஓடிற்று, வாய்க்காலும் தண்ணீரால் நிரம்பிப்போயிற்று. அப்பால் எலியா அப்பலிமுன் நின்று கடவுள் வானத்திலிருந்து அக்கினி அனுப்பி அந்தப் பலி களைப் பட்சித்து தமது மகத்துவத்தை வெளிப்படுத்த

வேண்டுமென்று விண்ணப்பம் பண்ணினார். அந்த விண்ணப்ப மாவது:—

> 'ஆபிரகாமுக்கும் ஈசாக்குக்கும் யாக்கோபுக்கும் தேவனாகிய கர்த்தாவே, இஸ்ரவேலிலே நீர் தேவ னென்றும், நான் உம்முடைய ஊழியக்காரனென்றும், நான் இந்தக் காரியங்களையெல்லாம் உம்முடைய வார்த்தையின்படி செய்தேன் என்றும் இன்றைக்கு விளங்கப்பண்ணும்; கர்த்தாவே, நீர் தேவனாகிய கர்த்தரென்றும், தேவரீர் தங்கள் இருதயத்தை மறுபடியும் திருப்பினீர் என்றும் இந்த ஜனங்கள் அறியும்படிக்கு என்னைக் கேட்டருளும், என்னைக் கேட்டருளும்'

என்பதே. 'கேட்டருளும்' என்ற வார்த்தை கேட்கப் பட்டவுடனே கர்த்தரிடத்திலிருந்து அக்கினி இறங்கி அந்த சர்வாங்க தகனபலிகளையும், விறகுகளையும், கற்களையும், மண்ணையும் பட்சித்து வாய்க்காலிலிருந்த தண்ணீரையும் நக்கிப் போட்டது; அரசனும் அங்கிருந்த ஜனமனைத்தும் அட்சணத்தில் அடியற்ற மரம்போல் முகங்குப்புறவிழுந்து,

'கர்த்தரே தெய்வம், கர்த்தரே தெய்வம்'

என்றார்கள். தமது தாசரின் விண்ணப்பங்களை இவ்வளவு தீவிரமாய்க் கேட்டு தமது மகிமையைச் சத்துருக்கள் நடுவில் வெளிப்படுத்தின எலியாவின் தேவனுக்கு எந்நாளும் ஸ்தோத்திரமுண்டாவதாக. ஆமென். எலியாவின் தேவனே! யேகோவாவே! இந்தியாவிலுள்ள விக்கிரக பூசாரிகளின் பித்த லாட்டங்களை வெளிப்படுத்தவும், இங்குள்ள கள்ளகுருக் களைக் காட்டிக்கொடுக்கவும், அவர்கள் அனைவரையும் உமது திருக்குமாரனின் வாயின் கட்கமாகிய சுவிசேஷ பட்டயத் துக்கு இரையாக்கவும் என்றைக்கு வந்து உமது மகிமையை எங்கள் நடுவில் நடத்துவீர் என்று நாங்கள் அனைவரும் எதிர்பார்த்தவண்ணமாய் இருக்கிறோம்.

இந்த அற்புதம் பாகாலின் பூசாரிகளைக் குணப்படுத்தி விட்டது. அவர்கள் தங்கள் உணர்ச்சியால் யேகோவாவே கர்த்தர் என்று அறிக்கையிட்டபோதிலும் இம்மட்டும்

பாகாலே அநியாயமாய்ச் சேவித்து தேவனுடைய பிள்ளைகளைத் துன்பப்படுத்தி வந்ததால் இதோடு அவர்களைப் பழிவாங்கவும் தேவன் சித்தங்கொண்டார். ஆகாப் இவ்வளவும் கண்டபின்பு இனி எலியாவின் பேச்சைத் தட்டுவானா? எலியா உடனே பாகாலின் பூசாரிகள் அனைவரையும் கைப்பிடியாய்ப் பிடித்து வெட்டிப்போட உத்தரவு கொடுத்தார். அந்தப்படியே ஆயிற்று. சாத்தானுடைய ஊழியக்காரருக்கு அவன் கொடுக்கிற கடைசிக்கூலி வெட்கமும் மரணமுந்தான். அந்தக் கள்ள குருக்களுக்கு பாலும் பழமும் கொடுத்து வளர்த்த ஆகாபே அவர்களைக் கொல்லும்படியும் தேவனால் நியமிக்கப்பட்டிருந்தான். இதினாலே நாம் அநேக போதனைகளைக் கற்றுக்கொள்ளுகிறோம். தேவனை வணங்குகிறது பெரிய காரியமல்ல; மெய்த்தேவனை இன்னாரென்று கண்டறிந்து அவரைச் சேவிக்கவேண்டியது. கள்ள உபதேசங்களால் சனத்தை மோசம்போக்குகிறவர்களைத் தேவன் தப்பாமல் தண்டிப்பார். தேவன் தாம் ஏற்படுத்திய உத்தம ஊழியர் மூலமாய் தம்முடைய மகிமைகளை விளங்கப் பண்ணுகிறார்.

அப்பால் எலியா அரசனைக் கூப்பிட்டு, இன்றுமுதல் பஞ்ச சாபத்தை ஆண்டவர் நீக்கிவிடுவார் என்று சொல்லி, ஆண்டவரை நோக்கி மழைக்காக விண்ணப்பம் பண்ணினார். உடனே வானம் மேகங்களினாலும் காற்றினாலும் கறுத்து பெருமழை உண்டாயிற்று. வானமானது கடந்த மூன்றரை வருஷ காலமாய் பூமியின் ஈரத்தையெல்லாம் சூரியன் மூலமாய் இழுத்துக் கொண்டபோதிலும் வேறொன்றுக்குக் காத்திருந்ததாக்கும். அது நானூற்றைம்பது பூசாசாரிகளின் ரத்தத்தையும் கர்மேல் மலையருகே ஓடக்கண்டவுடனே மனம் குளிர்ந்து மூன்றரை வருஷமாய் அடைத்திருந்த மழை மதகுகளைத் திறந்துவிட்டுப் பூமியைக் குளிரப் பண்ணிற்று. ஆகாப் வேகமான குதிரை பூட்டின இரதமேறி தன் ஊருக்கு ஓடினான். ஆனாலும் தீர்க்கதரிசியோடு தேவ பலம் இருந்ததால் அவர் அவன் இரதத்துக்கு முந்திக் கொண்டே நடந்துபோனார்.

இம்மட்டும் நடந்த வரலாறுகள் ஒன்றும் ஆகாபின் மனைவிக்குத் தெரியாது. அரசன் கர்மேலில் நடந்த விபரங்

களை அவளுக்கு ஆதியோடந்தமாய்ச் சொன்னவுடனே அவளுடைய ரத்தம் கொதித்தது; அவள் கர்த்தரே தெய்வமென்று அறிக்கையிடுகிறதற்கு பதிலாக எலியாவைக் கொலைசெய்து போடவேண்டுமென்று பிரயத்தனப்பட்டாள். ஆகாபின் மனைவிக்கு யேசபேல் என்று பேர். அவள் தன் புருஷனை அறியாமல் எலியாவிடம் ஆளனுப்பி, நீ என் ஆசாரியரெல்லாரையும் கர்மேல் மலையடிவாரத்தில் கொலை செய்வித்தாயே; நாளையத்தினம் இன்னேரத்துக்குள் நான் உன் உயிரை வாங்கிப்போடாவிட்டால் நான் யேசபேல் அல்ல என்பதுபோல் சபதஞ்செய்து, விக்கிரக தேவர்கள் மேல் ஆணையிட்டு அனுப்பினாள். இந்தப் பாதகி லேசான ஸ்திரீ அல்ல.

எலியா இந்த சமாசாரத்தைக் கேட்டவுடனே தமது பிராணன் பிழைக்கத் தென்னாட்டுக்கு ஓடினார். அவருக்குண்டான மனநோவும் ஆயாசமும் கொஞ்சமல்ல. கர்மேல் பலியோடு தமது கஷ்டமெல்லாம் கடந்துபோயிற்றென்று எண்ணினாராக்கும். தேவனுடைய மகிமை விளங்குகிறதற்காக யேசபேலின் இருதயம் கடினமாகுமென்ற ரகசியம் தெரியாமல்போயிற்றுக்கும். அவர் வனாந்தரத்தில் ஒருநாள் பிரயாணம் போய் ஒரு சூரைச்செடியின் கீழ் உட்கார்ந்து தான் சாகவேண்டுமென்று கோரி, ‘போதும் கர்த்தாவே, என் ஆத்துமாவை எடுத்துக்கொள்ளும், என் பிதாக்களைப் பார்க்கிலும் நான் நல்லவனல்ல’ என்று ஜெபஞ்செய்தார். இங்கே எலியாவின் மனச்சோர்வைத் தெளிவாய்ப் பார்க்கிறோம். எவ்வளவு பூரணபக்தரும் தேவ நடத்துதல்களைப் பூரணமாய் அறிந்துகொள்ள இயலாமல் பிரலாபிக்கிறதுண்டு ‘போதும் கர்த்தாவே’ நான் தீர்க்கதரிசியாக எழும்பினதும் இவ்வளவு சங்கடப்படுவதும் போதும், என்னைக் காட்டுக்கு துரத்துவதும் போதும், காகங்களைக்கொண்டு போஷிப்பதும் போதும், என் ஜெபத்தைக் கேட்டு வானத்தை அடைப்பதும் போதும், அதைத் திறப்பதும் போதும், என்னைக்காக்கும்படி கைம்பெண்ணின் மாவைக் கூட்டுவதும் போதும், என்னை வெட்டும்படி யேசபேல் கட்கத்தைத் தீட்டுவதும் போதும், ஆகாப் எனக்கு பயந்ததும் போதும், நான் யேசபேலுக்கு பயந்ததும் போதும், மூன்றரைவருஷ

மாக என்னை நாட்டைவிட்டுத் துரத்தினதும் போதும், மறுபடியும் காட்டுக்குள் ஓட்டுவதும் போதும், அற்புதவரம் தந்ததும் போதும், அதினால் நான் துன்பப்படுவதும் போதும், போதும் கர்த்தாவே போதும்; என் ஆத்துமாவை எடுத்துக்கொள்ளும் என்பதுபோலச் சடைவாய்ப் பேசுகிறார். இவ்வண்ணம் தமது நிலைமையைத் தியானித்து நொந்து அன்றுபகலடித்த வெயிலுக்கு ஒதுங்க ஒரு சூரைச் செடியின்கீழ் குனிந்து நகர்ந்துபோனார். சற்று நேரத்துக்குள்ளாக அதன் குளிர்ந்த நிழலால் களையாறி அப்படியே தூங்கிவிட்டார். எலியாவே! நீர் சாவுதூக்கம் தூங்குகிறீரோ, சஞ்சலதூக்கம் தூங்குகிறீரோ? இல்லை, இல்லை. நீர் ஜீவதூக்கம் தூங்குகிறீர்.

எலியா தூங்கி விழிக்கிறதற்குள்ளாக தேவதூதன் தேவனால் அனுப்பப்பட்டு அவருக்கு அடை சுட்டு ஜலம் கொண்டு வந்து வைத்து எலியாவைத் தட்டி எழுப்பி, எழுந்திருந்து போசனம் பண்ணு என்று சொல்லிவிட்டுக் காணாமல் போனான். எலியா திடுக்கிட்டு இதென்ன ஆச்சரியமென்று விழிக்கவே இதோ தழலில் சுடப்பட்ட அடையும் ஒரு பாத்திரத்தில் தண்ணீரும் அவர் தலைமாட்டிலிருந்தது. அவர் புசித்துக் குடித்துத் திரும்பப் படுத்துக்கொண்டார்.

இம்மட்டோடே காரியம் முடியவில்லை. தேவனுடைய தூதன் மறுபடியும் அவருக்கு விசேஷ விதமான போசனத்தைக் கொண்டுவந்து மறுபடியும் தட்டி எழுப்பி, எழுந்திருந்து போசனம் பண்ணு, நீ பண்ணவேண்டிய பிரயாணம் வெகுதூரம் என்று சொன்னான். இது என்ன போசனமோ தெரியவில்லை; ஒருவேளை வானத்து போசனமாயிருக்க வேண்டும். முதலாந்தரம் கொடுத்ததுபோல இது சாதாரண உணவாயிராமல் நாற்பது நாளளவும் பிரயாணஞ் செய்யும் பலத்தையும், பசியற்றிருக்கும் வரத்தையும் அருளும் உணவாயிருந்தது. எலியா எழுந்து புசித்துக் குடித்து அந்தப் போசனத்தின் பலத்தினாலே நாற்பதுநாள் இரவு பகல் நடந்து தேவபர்வதம் என்னப்பட்ட ஓரேப் என்ற பர்வதம் சேர்ந்தார். அவ்விடத்தில் ஒரு கெபி யிருந்தது. எலியா அந்தக் கெபிக்குள் நுழைந்து தங்கினார். அவ்விடத்தில் கர்த்தருடைய வார்த்தை அவருக்குண்டாகி:

'எலியாவே! இங்கே உனக்கென்ன காரியம்?' என்று விளம்பிற்று. இக்காலத்தில் எலியாவின் மனம் தேவ பராமரிப்பு தம்மட்டில் அவ்வளவு கிருபையாய் இருக்கவில்லையென்று விசனப்பட்டவராய் இருந்தாரென்று சொல்ல வேண்டியது; ஆண்டவரோடு அவர் சற்று எடுப்பாய்ப் பேசும்படி ஆரம்பித்தார். அவர் சொல்வார்: சேனைகளின் தேவனாகிய கர்த்தருக்காக வெகு பக்தி வைராக்கியமாயிருந்தேன். இஸ்ரவேலர் ஏகமாய் உமது உடன்படிக்கையைத் தள்ளிவிட்டார்கள், உமது பலிபீடங்களை இடித்துப்போட்டார்கள், உமது தீர்க்கதரிசிகளைக் கொன்று போட்டார்கள், நான் ஒருவன் மாத்திரம் மீதியாயிருக்கிறேன்; என் பிராணனையும் வாங்கத் தேடுகிறார்கள் என்று சொன்னார். ஓரேப்மலை கெபிக்குள்ளிருந்து எலியா கடவுளைக் குற்றப்படுத்தும் வாதியாக ஏற்பட்டார். இது அதிசயமாயிருக்கிறது. இது அவர் செய்த விண்ணப்பம்போலிருந்தாலும் கடவுளுடைய நடத்துதல்களின் குறைவை இவர் வெகு நுட்பமாய்க் கவனித்து கடவுளிடத்தில் தானே பிரியாது செய்கிறதுபோலக் காணப்படுகிறது. இதில் தாம் தேவனுக்காக அதிக கருத்துள்ளவராயிருந்தும் தேவன் எலியாவுக்காக கிஞ்சித்தும் கவலைப்படவில்லையென்று சொல்லாமல் சொல்லுகிறதுபோலிருக்கிறது. இப்படிப்பட்ட பிரியாது ஒருவேளை தேவனுடைய காதில் இதற்கு முன் வந்தெட்டாமலிருக்காலம். என்றாலும் ஆண்டவர், ஆதாமின் மகன் மண்தானே, அவனோடு நமக்கு உறவென்ன, சங்காத்தமென்ன? என்றிருக்கவில்லை. அவர், மக்களே; என்னோடு வழக்காடுங்கள் என்றும், வழக்காடுவோம் வாருங்கள் என்றும் அழைக்கிறார். எலியாவின் வழக்கைத் திட்டமாய் ஆராய்ந்து அவருடைய மனமடிவின் காரணத்தைக் கண்டிக்க ஆண்டவர் துணிந்து, நீ வெளியே வந்து கர்த்தருக்கு முன்பாக பர்வதத்தில் நில் நின்றார். முன்னொரு காலத்தில் அதே மலையில் மோசே எவ்வளவு பயத்தோடும் நடுக்கத்தோடும் நின்றாரோ அதே பிரகாரம் எலியா என்ன சம்பவிக்குமோவென்று தெரியாமல் நின்றார். அட்சணமே பர்வதங்களைப் பிளக்கிறதும் மலைகளைப் பிளக்கிறதுமான பெருங் காற்று உண்டாயிற்று. அந்தக் காற்றிலே

கர்த்தர் இருக்கவில்லை. அப்பால் பூமி எவரும் அஞ்சத் தக்கதாக அதிர்ந்தது; அந்த அதிர்ச்சியிலே கர்த்தர் இருக்கவு மில்லை. அதன் பின்பு மலைமேலிருந்து அக்கினி குபீரென்று எழும்பிற்று; அக்கினியிலும் கர்த்தர் இருக்கவில்லை. அப்பால் அமர்ந்த மெல்லிய சத்தம் உண்டாயிற்று; அதில் சாட்சாத் கடவுள் தமது தாசனைச் சந்திக்க வந்தார். அந்தச் சத்தத்தோடு எலியா ஒரு சாயலையும் கண்டிருக்கலாம். அதின் ஒளி தாங்கமாட்டாமலே அவர் தம்மை முக்காடிட்டுக்கொண்டார் என்று சொல்லவேண்டியது. இவ்விதக் காட்சியை அவர் காட்டவேண்டியதென்ன? பெருங் காற்று, பூமியதிர்ச்சி, அக்கினி ஆகிய இவைகள், எலியாவே! நீ வீணாய்க் குற்றப்படுத்தும் தேவன் சாமானிய மானவரல்ல என்று உணர்ந்து, எச்சரிக்கையாயிரு என்று கூறும் கட்டியக்காரர்போலிருக்கின்றன. கடைசியான மெல்லிய சத்தக் காட்சியானது, நான் உன் பலவீனத் துக்குத் தக்கதாக தாழ்வடைந்து, உனக்குச் சகாயஞ் செய்து வருகிறேன் என்று சொல்லுகிறதுபோலிருக்கிறது. தேவன் திரு அவதாரமெடுக்கச் சித்தங்கொண்டபோது கன்னியாஸ்திரீயின் கர்ப்பத்தை அருவருக்காமல் அவ்வளவு தூரம் தாழ்ந்து வந்ததினால்தான் நாம் அவரை அண்டவும், அவர் பாதம் சேரவும் ஏதுவாயிருக்கிறது. எங்களை உம் மோடு ஐக்கியப்படுத்த உம்மை எங்களுடைய சுபாவ மட்டும் தாழ்த்தின இயேசுவே! நீர் வாழ்க! தேவனை அண்டும் எந்தப் பாவிக்கும் அவருடைய திரு அவதாரமே லேசான வழியாயிருக்கிறது. மனுஷாவதாரத்தைத் தள்ளி ஆண்ட வரையடுக்கும்போது பயமும் திகிலும் நம்மைப் பட்சிக் கிறது. திரு அவதாரமூர்த்தியின் மூலமாய் தேவனை அடுக் கும் தைரியமும், திடநம்பிக்கையோடே தேவனை அடுக்கும் சலாக்கியமும் கிடைக்கிறது.

எலியாவின் பிரியாது பிசகென்றும், தேவ கோபமல்ல அவருடைய தயவே முனிவருக்கு அரணாயிருக்கிறதென்றும் இந்தக் காட்சி யுணர்த்திற்று. எலியா தமது பக்தி வைராக்கியத்தை ஒரு பெரிய காரியமாக எண்ணி வீணாய்த் தன்னை மேன்மை பாராட்டிக்கொள்ளாதபடிக்கு எலியாவே! நான் மாத்திரம் மீதியாயிருக்கிறேன் என்று நினைத்துக்

கொள்ளாதே, இன்னம் 7000 பேர் இஸ்ரவேல் தேசத்திலிருக்கிறார்கள் என்பதை அறிந்துகொள் என்று சொல்லி, வேறொரு வனாந்தரத்துக்குப் போகும்படி முனிவரை ஏவி, போகிற வழியில் ஆசகேலை சீரியாவுக்கும், எகூவை இஸ்ரவேலுக்கும் அரசராகவும் எலிசா என்பவரை எலியாவுக்குப் பின் அவர் ஸ்தானத்திலே தீர்க்கதரிசியாகவும் அபிஷேகம் பண்ணவும் ஆக்கியாபித்தார். எலியா தமக்கு கட்டளையிட்டபடியே செய்தார். தமக்குப்பின் ஒரு தீர்க்கதரிசியையும் அபிஷேகம் பண்ணும்படி கர்த்தர் கட்டளையிட்டது எலியாவுக்குச் சந்தோஷமாயிருக்கும். ஏனெனில் அக்காலத்து அக்கிரமமும், ஆகாபின் பாவங்களும் யேசபேலின் வேசித்தனங்களும் எலியாவின் கண்ணுக்குள் ஊசிபோலும், காதுக்குள் எறும்புபோலும், மூளைக்குள் புழுபோலும் வேதனைப்படுத்திக் கொண்டிருந்தது. நல்லவன் ஒருவனும் இந்த நாச உலகத்தை நாடமாட்டானே. அவன் இதை விட்டுப் பிரிந்து கர்த்தரிடத்தில் குடியிருக்க அல்லவோ அதிகமாய் நாடுவான்.

இவ்வளவு காலமாக ஒண்டியாய்த் திரிந்தலைந்த எலியா எலிசாவினால் சற்று ஆறுதலையடைந்தார். அப்பால் எலியா மறுபடியும் ஒருதரம் ஆகாபைச் சந்திக்க தேவனால் கட்டளைப் பெற்றார். ஆகாப் அநியாயமாய் ஒரு குடியானவனுடைய நிலத்தை அபகரிக்க விரும்பி அது வாய்க்காததால் தன் மனைவியின் ஆலோசனைப்படி அவனைக் கொன்றுபோட்டான். இந்தக் காரியம் தேவனுடைய பார்வைக்கு ஆகாததாகக் கண்டது. தேவன் தமது தாசனாகிய எலியாவைக் கொண்டு ஆகாபுக்கும் அவன் குடும்பத்துக்கும் வரும் தண்டனையைக் கூறினார். முன்னே யேசபேலுக்குப் பயந்தோடின கோழைத்தனம் இனி நாம் எலியாவினிடத்தில் காணவே மாட்டோம். உத்தம தேவ ஊழியக்காரர் தாங்கள் உணர்த்தப்போகிற பெரியோரின் கோபாக்கினியைக் கவனியாமல் அவர்கள் விழப்போகிற நரக அக்கினியின் சுவாலையை உணர்ந்து கண்டிக்கிறவர்களாயிருக்கிறார்கள். அவர்கள் ஆகாதவனை நோக்கி, நீ சாகவே சாவாய் என்று அஞ்சாமல் சொல்லவேண்டியது. சபையார் கண்டிப்பாய் எச்சரித்து தங்கள் பாவங்களைத் தூண்டிக்காட்டி குணப்பட

ஏவும் குருக்களைப் பகைக்கக் கூடாது. அப்படிப்பட்ட ஆட்களை ஒரு காலத்தில் நீயே விரும்பியும் கண்டடைய மாட்டாமல் மரித்துப்போகலாம். அவர்கள் ஒவ்வொரு வரும் எலியாவின் ஆவியும் பலமுமுடையவர்களாய் விளங்கி துன்மார்க்கத்தைப் பலத்த குரலோடு கண்டித்து சன்மார்க் கத்தைப் நிலைப்படுத்த ஏவும்படி அவர்களுக்காக மன்றாட வேண்டியது. இச்சமயத்தில் எலியாவின் உயிர் அபாயத்தி லிருந்தபோதிலும் அவர் தேவனுடைய ஊழியத்தை நிறை வேற்ற அஞ்சவில்லை.

அப்பால் எலியா தேவதாபக்தி வைராக்கியத்தால் ஏவப் பட்டு முந்தினதிலும் அதிக விசேஷமான ஒரு காரியத்தை ஒரு இராசனுக்கு உணர்த்தும்படி தேவனால் அனுப்பப்பட் டார். அக்காரியத்தை நிறைவேற்றுவதில் எலியாவுடைய உயிர் அதிக அபாயத்திலிருந்தது. ஆகாபின் குமாரனாகிய அகசியா சிம்மாசனமேறி சில நாட்களுக்குள்ளாக மேல் மெத்தையிலிருந்து விழுந்து வியாதிப்பட்டு இந்த வியாதி நீங்கி பிழைப்பேனா என்று குறி கேட்கும்படி ஒரு விக்கிரக ஆலயத்துக்கு ஆட்களை அனுப்பினான்; இதை ஆண்டவர் தமது தேவதூதனை யனுப்பி எலியாவுக்குச் சொல்லி, எலியா உடனே குறி கேட்கப்போகும் ஆட்களைச் சந்திக்கவும், தேவ தீர்மானத்தின் தண்டனையைக் கூறவும் கட்டளையிட் டார். எலியா அப்படியே அகசியா ஆட்களுக்கு எதிர்ப் பட்டு தம்மை இன்னானென்று சொல்லாமல், ஓய்! குறி கேட்கப்போகும் குருடரே! 'இஸ்ரவேலிலே தேவன் இல்லை யென்று நீங்கள் எக்ரோனின் தேவனாகிய பாகால்சேபூ பிடத்தில் விசாரிக்கப்போகிறீர்கள்? இதினிமித்தம்

நீ ஏறின கட்டிலிலிருந்து இறங்காமல்
சாகவே சாவாய்

என்று கர்த்தர் சொல்லுகிறார் என்பதை அவனோடு சொல் லுங்கள்' என்றார். அந்த மனுஷர் உடனே அரசனண்டைத் திரும்பி தங்கள் காதில் விழுந்த தேவ குறியை அரசன் காதில் போட்டார்கள். அரசன் அதைக் கேட்டு மதிமயங்கி இந்த சாவு குறி சொன்ன பூசாரி யார் என்றும் அவனுடைய முகரூபு உடை நடை எவ்விதமென்றும் விசாரித்து, அவர்

கள் சொல்லிய மறுமொழியால் இந்தக் குறி சொன்னவன் எலியாதானென்று தீர்மானித்துக்கொண்டு கோபவெறியால் பித்தங்கொண்டு எலியாவைப் பிடித்து கையோடு கொண்டு வரும்படி ஒரு சேனைத் தலைவனையும் ஐம்பது சேவகரையும் அனுப்பினான். அரசனுடைய சேனை வருகிற சமயத்தில் எலியா ஒரு மலையுச்சிமேல் இருந்தார்; ஒருவேளை ஜெபத் தியானஞ் செய்திருக்கலாம். சேனைத் தலைவன் தன் பவுஞ் சோடு எலியாவிடம் போய் 'தேவனுடைய மனுஷனே, இராசா உன்னை வரச் சொல்லுகிறார்' என்று சொன்னான். உடனே எலியா 'நான் தேவனுடைய மனுஷனானால் அக்கினி வானத்திலிருந்து இறங்கி, உன்னையும் உன் ஐம்பது பேரை யும் பட்சிக்கக் கடவது' என்றார். எலியாவுடைய வாயின் வார்த்தைகள் முடியுமுன் அக்கினி அவர்கள் அனைவரையும் பட்சித்துவிட்டது. தேவனுடைய பிள்ளைகளைத் துன்பப் படுத்துகிறவர்களுக்கு விரோதமாய் தேவன் படையெடுத்து வருகிறார். இவ்வளவு பெரிய அதிசயம் நடந்தும் அரசன் மனம் திரும்பாமல் கடினப்பட்டது. அவன் முன்போல் மறுபடியும் ஒரு அதிபதியையும் அவனோடு ஐம்பது சேவகரையும் அனுப்பி, எலியாவைப் பிடித்துவரக் கட்டளை யிட்டான். அவன் வந்து முன்னிலும் ஆத்திரத்தோடும் அதிகாரத்தோடும் எலியாவை மிரட்டி, 'தேவனுடைய மனுஷனே, ராஜா உன்னைச் சீக்கிரமாக வரச் சொல்லு கிறான்' என்றான். 'சீக்கிரம்' என்கிற வார்த்தையை இவன் கூட்டுகிறான். ஐயோ! தன் அழிவு சீக்கிரம் நிறைவேறும் என்று அவன் அறிந்தானில்லை. அதற்கு எலியா முன் போலவே மறுமொழி சொன்னார். உடனே வானத்திலிருந்து அக்கினி இறங்கி அவர்களைப் பட்சித்துவிட்டது. பின்னும் அரசன் முன்போல ஒரு தலைவனையும் ஐம்பது பேரையும் அனுப்பினான். மூன்றாந்தரம் அனுப்பப்பட்ட தலைவன் அகசியாவைப்போல் உணர்வற்றவனுமல்ல, முந்தின தலை வரைப்போல் மூடனுமல்ல. அவன் எலியாவை விகட சந்நியாசி என்று எண்ணாமல் தேவனுடைய அருள் விளங் கும் மனுஷன் என்று பக்தி விநயமாய் எண்ணி, முனிவ ருக்கு முன்பாக முழங்கால் படியிட்டு அவரை வேண்டிக் கொண்டு 'தேவனுடைய மனுஷனே, என்னுடைய பிராண

னும் உமது அடியாராகிய இந்த ஐம்பதுபேரின் பிராணனும் உமது பார்வைக்கு அருமையாய் இருப்பதாக' என்று கெஞ்சினான். அச்சமயத்திலே ஒரு சம்மனசு தோன்றி எலியாவை நோக்கி, அவனோடுகூட இறங்கிப்போ, அவனுக்குப் பயப்படாதே என்றார். எலியா மலையிலிருந்து எழுந்தருளியாகி அரசனிடம் வந்தார். அரசன் படுக்கையிலிருந்தான். தன் அபாய நிலைமையைப் பார்த்து எலியா மனம் குளிர்ந்து நல்வார்த்தை சொல்வாரென்று அவன் நினைத்திருக்கலாம். ஆகாபின் மகனுக்கு ஆண்டவரிடம் சகாயமுண்டோ? பாகால்சேபூபைப் பின்பற்றினவனுக்கு பிதாவின் வீட்டில் பங்கேது? எலியா முன்சொன்னபடியே அரசனை நோக்கி மறுபடியும் சொன்னார்:—'இஸ்ரவேலிலே தேவன் இல்லையென்று நீ பாகால்சேபூபைக் கேட்க ஆட்களை அனுப்பினாய்? ஆதலால்

நீ ஏறின கட்டிலிலிருந்து இறங்கமாட்டாய்,
நீ இந்தப் படுக்கையோடே சாகவேசாவாய்'

என்று சொல்லிவிட்டு, ராஜ சமுகம் விட்டுப் புறப்பட்டார். எலியா ராஜதானியின் தெருக்கள் வழியாகப் போகையில் பலருங்கூடி தன் ஜெபத்தால் வானத்தை அடைத்து, தன் விண்ணப்பத்தால் வானத்தைத் திறந்த மா ரிஷி போகிறார் என்றும், ஆகாபை ஆட்டிவிட்ட சிங்க ரிஷி போகிறார் என்றும், பாகாலைச் சங்காரம் பண்ணின பக்த ரிஷி போகிறார் என்றும், கர்த்தரால் அமுதுண்டு காலங்கழித்த கடந்தரிஷி போகிறாரென்றும் பலவாறாகச் சொல்லியிருக்கலாம். தன் பிதாவின் பாவங்களையும், தன் பாவங்களையும் சுமந்து நோயால் வதங்கின அகசியா தன் மரண காலத்தில் முகாந்தரமில்லாமல் வேறு 100 சேவகரின் இரத்தப்பழியையும் சுமத்திக்கொண்டு மண்ணறை சேர்ந்தான். தேவனை விட்டு விலகுகிறது மகா மோசமானது; அதற்கு வரும் முடிவின் பயங்கரத்தை வாசிக்கவும் கேட்கவும் பயங்கரமாயிருக்கும். அப்படியானால் அதை அனுபவிப்பது எவ்வளவு பயங்கரமாயிருக்கும்?

எலியா வானத்திலிருந்து அக்கினி வரவழைத்து பகைவரைப் பட்சிக்கச்செய்த விஷயமானது தேவ ஊழியக்காரர்

தேவனுடைய சாபங்களைச் சபையில் கொட்டும்படி ஏவக்கூடாது. இதில் எலியா தமது சுய பெருமையையும் அந்தஸ்தையும் நிலைநிறுத்தவேண்டுமென்று முயலவேயில்லை. தேவன் தமது வல்லமையை அகசியாவுக்கு உணர்த்தி அவன் தன் உபத்திரவகாலத்தில் ஆளனுப்பிச் சன்னதம் கேட்கும் விக்கிரகத்துக்கு யாதொரு வல்லமையில்லையென்றும், தமக்கே சகல அதிகாரமும் உண்டென்றும் விளக்க, இந்த அற்புதங்களை எலியாவின் மூலமாய் வெளிப்படுத்தினார் என்று உணர்ந்துகொள்ளவேண்டியது. இயேசுவின் ஊழியக்காரர் தங்கள் சபைகளை ஆக்கினைக்குட்படுத்துகிறவர்களாயிராமல், தங்கள் எஜமானைப்போல் சபையின் ஜனங்களுக்கு இரட்சிப்பின் மார்க்கத்தை விளக்கிக் காட்டுகிறவர்களாயிருக்கவேண்டும்.

எலியாவுடைய கடைசி முடிவு அவருடைய ஜீவியத்தின் மத்திமையிலுள்ள மாட்சிமைபோலவே இருக்கிறது. அவர் பூலோகத்தார் எல்லாரும் போகிறதுபோல மரண நதியைக் கடந்துபோகிறவராயிராமல், உயிரோடு பரலோகத்துக்கு வரவழைத்துக்கொள்ளும்படியாக தேவன் சித்தங்கொண்டார். ஏனோக்கு என்ற பக்தன் கூட்டோடு பரலோகம் போனார் என்று நாம் முன் அவர் சரித்திரத்தில் காட்டினோம். அதைவிட இது விசேஷ மேரையாயிருந்தது. ஏனெனில், ஏனோக்கு தேவனோடு சஞ்சரித்துக்கொண்டிருக்கையில் இராதேபோனார், இவரோ அப்படி எவருமறியாமல் ஏகனிடம் போய்விடவில்லை. இவர் போகுங்காலமும் வகையும் திட்டமாக அறிவிக்கப்பட்டிருந்ததென்று சொல்லவேண்டியது. அவர் பரலோகம் போகுங்காலம் நெருங்கிற்று என்பதை அவர் திட்டமாய் அறிந்தபோதிலும் அதையிட்டு சஞ்சலப்பட்டு மனமுடைந்போகாமல், மரணமானது ஜீவனாலே விழுங்கப்படுகிறதென்பதின் ஆனந்தத்தால் புதுப்பெலன் அடைந்தவர்போல் கடைசிமட்டும் அதிக ஊக்கமாய் தேவனுடைய ஊழியங்களை நிறைவேற்றினார். அக்காலத்தில் ஸ்தாபகமாகி நிலைபெற்றிருந்த தீர்க்கதரிசிகளின் புத்திரருடைய பல கல்விச்சாலைகளுக்குப் போய் அங்குள்ள வாலிபருக்குப் பக்திக்குரிய அநேக போதனைகளைச் செய்து அவர்களை விசுவாசத்தில் பலப்படுத்தினார். தமக்குப் பின்

தீர்க்கதரிசியாக அபிஷேகம்பெற்ற எலிசா அவர் போகும் இடமெல்லாம் அவரைப் பின்தொடர்ந்தான். அவர்கள் கடைசியாக யோர்தான் ஆற்றோரத்தையடுத்தார்கள். அதைக் கடக்க நேரிட்டபோது எலியா தமது சால்வையால் ஜலத்தை அடித்தார். உடனே அது பிரிந்தது. அவ்விருவரும் சுகமாய் ஆற்றைக் கடந்து அக்கரை சேர்ந்தார்கள். இதற்குமுன் இந்த ஆற்றில் மோசேயினாலும் யோசுவாவினாலும் அற்புதம் நடந்தது. அவர்களும் இந்த ஆற்றைப் பிரிந்துபோகும்படி தேவகிருபையால் அற்புதஞ்செய்தார்கள். எலியா போன இடங்களிலிருந்த தீர்க்கதரிசிகளின் புத்திரருக்கெல்லாம் அவர் அன்றையத்தினம் பரமேறுவது தேவனால் வெளிப் படுத்தப்பட்டிருந்தது.

எலியா அக்கரைப்பட்டபின்புதான் தாம் அன்று எடுத்துக் கொள்ளப்படுவதை எலிசாவுக்குச் சொன்னார். எலிசாவே, நான் உன்னைவிட்டு எடுத்துக்கொள்ளப்படுமுன்னே நான் உனக்குச் செய்யவேண்டியது என்ன என்று கேள்! என்றார். எலிசாவுக்கு வாழ்வுகாலம் இதுமுதல் துவங்குகிறதென்று நாம் அறிந்துகொள்ளவேண்டியது. இந்தச் சமயத்தை விட்டால் வேறொரு சமயம் நமக்கு வாய்க்காது என்று எலிசா நன்றாய் அறிந்து,

உம்மிடத்திலுள்ள ஆவியின் வரம்
எனக்கு இரட்டிப்பாய்க் கிடைக்கவேண்டும்

என்று கேட்டான். எலியாவுக்குப் பிள்ளையிருந்தாலும் அவன் இவ்வளவு ஞானமுள்ள பிள்ளையாய் இராமலிருக்க லாம். இவன் எலியாவில் விளங்கிய தேவ அருளை எவ்வளவு அதிகமாய் மதித்தான் என்று விளங்குகிறது. அதற்கு எலியா சொல்வார்:—

அரிதானதைக் கேட்டாயப்பா,
நான் ஏறுவதை நீ கண்டால் அது கிடைக்கும்,
நீ காணாவிட்டால் கிடையாது

என்று சொன்னார். உடனே எலிசாவுக்குண்டான ஆனந்தம் கொஞ்சமல்ல. அவர்கள் பின்னும் கொஞ்சம் பேசிக் கொண்டு நடந்துபோகையில் இதோ, அக்கினி ரதமும் அக்கினி குதிரைகளும் அவர்கள் நடுவாக வந்து இருவரை

யும் பிரித்தது. இது வானத்திலிருந்துதான் வந்திருக்க வேண்டியது. இந்த அக்கினி ரதம் சம்மனசுக்களின் சேனையாயிருக்கவேண்டியது. அவர் தமது தூதர்களைக் காற்றுகளும், தமது ஊழியக்காரரை அக்கினிச் சுவாலை களுமாக்குகிறார் என்று வேதத்தில் வாசிக்கிறோம். கடைசி யாக எலியா ரிஷி அக்கினிச் சுழல் காற்றிலே பரலோகத் துக்கு ஏறிப்போனார். எலியாவே! நீர் பாக்கியம் பெற்றவர்; நீர் உமது ஜீவகாலமெல்லாம் கடவுளுக்குச் செய்த பணி விடையின் பலனை அநுபவித்துவருகிறீர்.

எலியாவுக்கு அருளப்பட்ட இந்த வகையான மரணம் அவருடைய போதனையனைத்தையும் உறுதிப்படுத்தும் ஏதுவாயுமிருந்தது; இது மறுமையின் உறுதியையும் உயிர்த் தெழுதலின் நிச்சயத்தையும் உலகத்துக்கு விளக்கும் உன்னத அக்கினிஸ்தம்பம் போலிருக்கிறது.

எலியா ரிஷி பரமேறி எட்டு வருஷத்துக்குப் பின்பு அவரிடத்திலிருந்து யோராம் அரசனுக்கு ஒரு கடிதம் வந்த தென்று அறிகிறோம் (2 நாளா. 21:12–15). அக்கடிதத்தில் யோராமின் ஆகாமியங்களும் அதற்கு வரும் முடிவும் கண் டிருந்தது. பரமேறி எட்டு வருஷத்துக்குப் பின்பு அவ ரிடத்திலிருந்து கடிதம் வந்தது என்பது அதிசயந்தான். இதைப்பற்றி ஆட்சேபிக்கிற சிலர் எலிசா என்ற பேரை எப்படியோ பிசகாய் எலியா என்று போட்டிருக்கிற தென்றும், எலியாவல்ல, எலிசாவே அதை எழுதி யனுப்பினது என்றும் சொல்லுகிறார்கள்; வேறு சிலர் எலியா முனி உயிரோடிருக்கையில் யோராமின் வரலாறுகளை ஞான திருஷ்டியால் அறிந்து ஒரு கடிதமெழுதி எலிசாவிடம் ஒப்பு வித்துக் கொடுக்கக் கட்டளை யிட்டிருக்கலாமென்றும் சொல்லுகிறார்கள். ஆனால், தேவாவியினால் எழுதப்பட்ட வேதாகமத்தின் நிச்சயத்தை ஒப்புக்கொள்ளுகிற சகல வேத வித்துவான்களும் அக் கடிதமானது எலியாவுடைய மரணத் துக்குப்பின்பு பரலோகத்திலிருந்து தேவதூதர் மூலமாய் யோராமுக்கு அனுப்பப்பட்டக் கடிதமேயன்றி வேறல்ல வென்று ஒத்துக்கொள்ளுகிறார்கள். பூலோக மனுஷருக்கும் மரித்துப்போன ஆவிகளுக்குமிருக்கும் அந்தரங்க அந்நி

யோக்கியம் இதனால் உணர்த்தப்படுகிறது. வேதத்திலுள்ள திருஷ்டாந்தரங்கள் இதை உறுதிப்படுத்துகின்றன. மரித்துப்போன சாமுவேல் சவுலுக்குக் காட்சியளித்ததும், மோசேயும் எலியாவும் இயேசுவின் காலத்தில் ஒரு மலையின் மேல் வந்து சம்பாஷித்ததுமான பல குறிப்புகள் இந்த எண்ணத்துக்குச் சார்பாகவே இருக்கின்றன.[1]

எலியா பரலோகத்தோடு அதுமுதல் அடங்கிப்போகாமல் மறுபடியும் தேவகுமாரன் காலத்தில் ஒருதரம் மோசேயோடுகூட வெளிப்பட்டு, இயேசுநாதர் எருசலேமில் நிறைவேற்றப்போகிற அவருடைய மரணத்தைக் குறித்துப் பேசிக்கொண்டிருந்தார் (பரி. லூக். 9:31). மரித்துப்போன மகாத்துமாக்கள் இயேசுவின் மரண வரலாறுகளில் எவ்வளவு இன்பமாயிருக்கிறார்களென்பது இதனால் விளங்குகிறது. ஏனெனில், அவர்களும் நாமும் அதனாலேமாத்திரம் பூரணராகவேண்டியதாயிருக்கிறது. அந்தச் சம்பாஷணையின் விபரம் ஒன்றும் தெரியாது. ஆனால் வாசிக்கிறவனே, நீயும் நானும் பரிசுத்தமாய்க் காலம் கழித்து பரலோகத்துக்குப் போகிறதுண்டானால் இருவருமாய்க் கூடி மோசே எலியா ஆகிய ரிஷிகளிடம் போய் எங்கள் இயேசுவின் மறுரூப தினத்தில் பண்ணின சம்பாஷணையின் வரலாறும் வார்த்தைகளும் என்னவென்று கேட்டுக் கடவுளைத் துதிக்கலாம்; அதுமட்டும் பொறுமையாயிரு; இதனிடையில் தேவன் எலியாவின் ஆவியையும் வரத்தையும் உனக்குத் தரவும், நீ அக்கினி வாகனமேறி பரமேறும் பாக்கியத்தை அவர் தராதே போனாலும் மரண ஆற்றைக் கடக்கும்போது தாமே வள்ளமாய் வந்து உன்னைக் கரையேற்றவாவது, தமது குமாரனின் நீதியின் சால்வையால் உன் மரண நதியை அடித்து விலக்கிச் சமாதானப் பயணத்தைக் கட்டளையிடவாவது கிருபை செய்யும் என்று மன்றாடிக்கொண்டிரு. உன் மரணத்துக்கு முன் கிறிஸ்துவின் வருகை நேரிடுகிறதானால்

---

[1] அவிசுவாசமிகுந்த இக்காலத்தில் பெரும்பாலர் அந்த நிருபம் எலியாவின் பரமேறுதலுக்குமுன் தேவ வெளிப்படுத்தலால் எழுதி வைக்கப்பட்டு பிற்பாடு யோராமுக்குக் கொடுக்கப்பட்டதென்று நினைக்கிறார்கள்.

நீ கர்த்தருக்கு எதிர்கொண்டுபோக ஆகாயத்தில் எடுத்துக் கொள்ளப்படும் பக்தரோடு கூடிக்கொள்ளும்படி உத்தம பக்தனாய் நடந்துகொள். அப்படியானால் எப்பொழுதும் கர்த்தரோடிருப்பாய் என்று நான் ஆணையோடு சொல்லக் கூடும் (1 தெச. 4:17).

THE TINNEVELLY DIOCESAN LIBRARY

எலிசா

உழவுப் பருவம்

திருச்சபையின் பணிவிடைக்காரரும் தீர்க்கதரிசிகளும் தங்கள் தங்கள் முறையின்படி மாண்டு தங்கள் மண்ணறைக்குள் போனபோதிலும் அதன் தலைவர் எப்பொழுதும் அதனோடு வாசம்பண்ணுகிறவராயிருக்கிறார். ஏனெனில் அவர் என்றும் பிழைத்திருக்கிறவர்; மேலும் அவர் ஜீவித்துப் போனவர்களின் ஆவிகளைத் தமது பாதுகாப்புக்குள் வைத்துக்கொண்டிருக்கிறார். இந்த உணர்ச்சி நம்மை ஆறுதல் படுத்தவேண்டியது. நாம் அடிக்கடி திருச்சபையின் பிரதான தூண்போலவும் பிரதான ஆள்போலவும் இருந்தவர்கள் மாண்டுபோகும் சமயத்தில் அதிக கவலைக்கும் சஞ்சலத்துக்கும் இடங்கொடுக்கிறதுண்டு. நாம் கர்த்தருடைய காரியத்துக்காகக் கவலைப்படுகிறதிலும் அதிகமாய் அவர் தமது காரியத்தில் கவலையுள்ளவராயிருக்கிறார். திருச்சபைக்கு ஒரு காலத்தில் தூணாக அவரால் ஸ்தாபிக்கப்பட்ட ஆளை அவர் மாற்றி, முன்னிலும் பலத்ததும் அலங்காரமும் மேன்மையுமான தூணை அவர் நிலைநிறுத்துகிறார். மண் தூணை இடிக்கையில் கல் தூண் ஒன்றை ஆயத்தப்படுத்தியிருக்கிறார்; கல் தூண் போன்ற ஒருவனை வெள்ளித் தூண் போன்ற ஒருவனால் பின்தொடரப் பண்ணுகிறார்; வெள்ளித் தூணை மாற்றி பொன் அல்லது வைரம்போன்ற ஒருவனைத் தமது சபையின் ஸ்தம்பமாய் அல்லது ஊழியக்காரனாய் வைக்கிறார். ஆதலால் நாம் தேவ செயலை மகிமைப்படுத்துகிறவர்களாயிருக்கவேண்டுமே தவிர மரணத்தாலுண்டாகும் மாறுதல்களை உணர்ந்து மனச்சோர்படையலாகாது. அவர் நேற்றும் இன்றும் என்றென்றும் ஒரேவிதமாய் இருக்கிறார். இப்படிப்பட்ட மாறுதல்கள் உண்டாகிற சமயத்தில் தேவன் தமது

அறுப்புக்கேற்ற வேலையாட்களை அனுப்பும்படி வேண்டிக் கொள்வது நமது கடமையாயிருக்கவேண்டியது. 'பராபரனே, எங்கள் பிதாக்கள் காலத்திலும் அவர்களுக்கு முந்தின பூர்வ காலத்திலும், தேவரீர் செய்த மகத்தான கிரியைகளை எங்கள் பிதாக்கள் அறிவிக்க எங்கள் காதுகளால் கேட்டோம்; கர்த்தாவே, உமது மகிமைப்பிரதாபத்தினிமித்தம் எழுந்தருளி எங்களுக்குச் சகாயஞ்செய்து எங்களை இரட்சியும்' என்று ஜெபம் பண்ணுவது தகுதியாயிருக்கும்.

நாம் எலியாவின் மரணவரலாறை வாசிக்கையில் ஐயோ! எலியா போனாரே, இனி நமது காரியம் தாழ்வுதான் என்று சொல்ல வாய் எழும்பும். ஆனால் தேவன் அதற்குத் தகுந்த ஒரு ஆளைத் தெரிந்துகொண்டிருந்தார். எலியாவுக்கு தேவன் கொடுத்த வரத்திலும் இரட்டிப்பான வரத்தை அவர் எலிசாவுக்குக் கொடுத்து தமது தீர்க்கதரிசியாக அனுப்பினார். 'தாயைப்போல பிள்ளை நூலைப்போல சேலை' என்ற முதுமொழிபோல எலியாவுக்கும் அவருக்குப்பின் வந்த எலிசாவிற்கும் அதிக ஒற்றுமை இருந்தது. எலிசாவின் ஜீவனார்த்தமும், குணசீலங்களும், அவர் செய்த ஊழியங்களும், அற்புதவரங்களும் எல்லாம் எலியாவைப்போலவே விளங்கின.

எலிசா தமது தீர்க்கதரிசன ஊழியத்தை நிறைவேற்றுகிறதற்குச் சுமார் எட்டுவருஷங்களுக்கு முன்னேயே அதற்கென்று பிரித்தெடுக்கப்பட்டிருந்தார். எலியா தேவகட்டளையின்படி ஒருநாள் எலிசாவின் ஊர்வழியாய்ப் பிரயாணம் பண்ணினார். அச்சமயத்தில் இவர் பன்னிரண்டு ஏர்பூட்டி கடைசி ஏரைத்தாமே பிடித்து ஓட்டிக்கொண்டிருந்தார். இதினாலே எலிசாவுக்குப் பூஸ்திதியும், வேலையாட்களும், மாடாடுகளும் அதிகமாய் இருந்ததென்று தோன்றுகிறது; விவசாயத்தொழிலில் மகா நிபுணன் என்று தோன்றுகிறது. கரடுமுரடான நிலங்களைக் கஷ்டத்தோடு உழுது பொறுமையோடு காலங்கழித்த இவர் தான் குணப்படாத இஸ்ரவேலரின் இருதயங்களைத் தேவஞானத்துக்கு நேராய்த் திருத்தத் தகுந்த ஆள் என்று ஆண்டவர் நினைத்தார்போலிருக்கிறது.

இவர் சொகுசைநாடி மற்றவர்களை ஏவிவிட்டு தான் வீட்டில் தூங்காமல் தாமே உஷ்ணவெயிலில் கஷ்ட உழவைச் செய்துவந்தார். தேவனுடைய சபையில் ஆளோட்டிகளா யிருந்து அதிகாரம் பண்ணவேண்டு மென்பதே சிலருடைய நோக்கமாயிருக்கிறது. தேவன் தமது வேலைக்கு ஏவும் ஆட்களைவிட அந்த வேலையைச் செய்யும் ஆட்களை விரும்பு கிறார்.

எலியா எலிசாவின் ஏர்மட்டும்போய்த் தன் சால்வையை அவர்மேல் போட்டார். அப்பொழுது அவர் மாடுகளை விட்டு எலியாவின் பிறகாலே ஓடி நான் என் தகப்பனையும் தாயையும் முத்தஞ்செய்து திரும்பும்படி உத்தரவுகொடும் என்று கேட்டார்; அப்படியே உத்தரவுகொடுத்தார். இதி னாலே பெற்றோரைப் பற்றிய அவருடைய மதிப்பு வெளியா கிறது. ஒருவேளை தனக்குக் கிடைத்த தேவ அருளைச் சொல்லி அவர்களைச் சந்தோஷப்படுத்தவும், உழவுகாரியங் களை ஒழுங்குபடுத்திவிடவும் போயிருக்கலாம். இதினாலே உலக சிந்தை அவருக்கு இருந்த தென்பது நமது கருத் தல்ல. தமது ஊழியம் மாறினதால் வீட்டுக்காரியங்களைப் பற்றிய கவலை எவ்வளவேனும் தம் மனதை வருத்தப்படுத் தாதபடி ஒழுங்குசெய்துவிடுகிறது. பக்தியோடு கூடிய குணந்தானே. எலிசா அப்புறம் ஒரு ஏர்மாடுகளைப் பிடித்து அடித்து ஏரின் மரமுட்டுகளால் அவைகளின் இறைச்சியைச் சமைத்து ஜனங்களுக்குக் கொடுத்தார். ஒருவேளை அந்த ஏரும் எருதுகளும் எலியா வரும்போது தாம் உழுதுகொண்டிருந்ததாயிருக்கலாம். இதினாலே இன்றுமுதல் நான் என் ஊழியத்தை மாற்றிக்கொண்டேன் என்றும், நான்மாத்திரமல்ல என் ஏரும் எருதும் கர்த்தருக் குப் பிரதிஷ்டையாக்கப்பட்டிருக்கிறதென்றும், கர்த்தரு டைய ஊழியத்துக்கென்று அழைக்கப்படுகிறவன் சமூல மாய்த் தன்னை அவருக்கு ஒப்புக்கொடுக்க வேண்டுமென்று சகலருக்கும் உணர்த்து விக்கப்படுகிறது. தாய் தகப்பன் மார் அவரை முத்தமிட்டு உடனே அனுப்பிவிட்ட விஷய மானது புகழப்படத்தக்கது. இதினாலே எலிசாவின் பெற்றோர் மெய்த்தேவனை ஆராதிக்கும் உத்தமபக்தராய்

இருந்தார்களென்றும் அவர்கள் தீர்க்கதரிசியை நல்வளர்ப்பிலே வளர்த்திருக்கிறார்களென்றும் ருசுப்படுகிறது.

இப்படி கலப்பையும் கையுமாய் இருந்த ஆளை ஒரு பிரதான மனுஷனாகத் தெரிந்துகொள்ள வேண்டியதென்ன? என்று கேட்போமோ? மனுஷன் பார்க்கிறபடி தேவன் பார்க்கிறவரல்ல என்பதே அதன் உத்தரவு. அவர் புறம்பான அந்தஸ்தையும், கல்வித்திறமையையும் அநுபோக விருத்திகளையும் பார்க்கிறவரல்ல; அவர் தமக்குச் சித்தமான ஒருவனைத் தெரிந்துகொண்டு, அவனுக்குத் தாம் ஒப்புக்கொடுக்கும் ஊழியத்திற்கேற்ற தகுதியையும் குணத்தையும் கிருபைகளையும் அருளுகிறார். அவர் ஒவ்வொரு இருதயத்திலும் அந்தரங்கமாய் நடத்தும் இரகசியமாறுதல்களைக் கண்டுபிடிக்கக்கூடாது. நமது இரட்சகர் தமக்குச் சீஷராக ஆட்களைத் தெரிந்துகொண்டபோது அவர்கள் வரும்படியுள்ள வேலைகளையெல்லாம் தள்ளிவிட்டு அவரைப் பின்சென்றார்கள். தேவ அன்பு அவர்கள் உள்ளத்தில் கிரியைசெய்து ஏவிவிட்டதால் உலகம் எந்நாளும் பிரமிக்கத்தக்க அரியகிரியைகளையெல்லாம் அப்போஸ்தலர் நிறைவேற்றினார்கள் என்று பார்க்கிறோம். நாமும் தேவனுடைய கிருபையானது வல்லமையாய் நமக்குள் கிரியை செய்யும்படி சமூலமாய் நம்மை அவருக்கு கையளிக்கவேண்டியது.

எலிசா தன் ஆண்டவனுடைய வேலைக்காரன்போல சுமார் எட்டுப் பத்து வருஷமிருந்து, அவர் போகும் இடமெல்லாம் போய், அவர் செய்தவைகளையெல்லாம் கண்டுகொண்டிருந்த காலத்தில் ஒருநாள் திடீரென்று தன் எஜமான் ஆகாயத்திலிருந்திறங்கின அக்கினிரதமேறி, சுழல் காற்றின் வழியாய்ப் பரலோகம் போகக்கண்டு, 'என் தகப்பனே! என் தகப்பனே! இஸ்ரவேலருக்கு இரதமும் குதிரைவீரருமாயிருந்தவரே!' என்று புலம்பி, துக்கத்தால் தன் வஸ்திரத்தையும் கிழித்துக்கொண்டார். அதற்குச் சற்றுநேரத்துக்குமுன் எலியாமுனி இவரைப் பார்த்து, என் ஜீவஓட்டம் முடிவடையப்போகிறது, உனக்கு நான் செய்யவேண்டியது என்னவென்று கேட்டார். அதற்கு எலிசா, உம்மிடத்திலுள்ள ஆவியின் வரம் எனக்கு இரட்

டிப்பாய்க் கிடைக்கும்படி வேண்டுகிறேன் என்றார். அதற்கு எலியா,

நான் போகிறதைக் கண்டால் கிடைக்கும்,
காணாவிட்டால் கிடைக்கமாட்டாது

என்று சொல்லிவிட்டார். எப்படியும் அந்த இரட்டிப்பான வரத்தை விடக்கூடாது என்று எலிசா எண்ணி, தன் எஜமான் பரமேறிப்போகையில் வானம் பார்த்தகண்ணாய் நின்றார்; அங்கிருந்து எலியாவின் சால்வை விழுந்தது. தன் சால்வையைத் தாழவிட்டதால் எலியா இரட்டிப்பான வரத்தை எலிசாவுக்கு தத்தஞ்செய்தார். எலிசா இச் சமயத்தில் காட்டின பக்திவைராக்கியம் தேவனுடைய பிள்ளைகளுக்கு நல்ல படிப்பினையைக் கொடுக்கவேண்டியது. அவர் தன் எஜமானைவிட்டுப் பிரியேன் என்று தீர்மானித்து தன் பற்றுதலை அவரிடத்தில் காட்டினார். கிறிஸ்துவைப் பின்பற்றும் விஷயத்தில் நாமும் அப்படிச் செய்யவேண்டும். உனக்கு என்ன வேண்டுமென்று கேட்ட சமயத்தில் அவர் உலகவாழ்வொன்றையும் நாடாமலும் கேளாமலும் 'உம்மிடத்திலுள்ள ஆவியின் வரம் எனக்கு இரட்டிப்பாய்க் கிடைக்க வேண்டுகிறேன்' என்றார். தான் நிறைவேற்றும் படி எலியா வைத்துவிட்டுப்போன வேலைக்குத் தகுமான பெலன் தனக்கு இல்லையென்றும், அந்தப் பலம் உன்னதத்திலிருந்து அபரிமிதமாய் அருளப்படாதபட்சத்தில் அந்த வேலைகளை நிறைவேற்ற அவரால் முடியாதென்றும்அறிக்கையிடுகிறார். எலிசா இரட்டை வரம்கேட்டது தான் எலியாவைவிட பேரெடுப்பாய் விளங்கவேண்டுமென்ற தன்னயத்தால் என்று சொல்லவே கூடாது. அவர்கேட்ட இரட்டை வரம் அவருக்குக் கொடுக்கும் வேலையின் தன்மையைக் குறிக்கிறதேயன்றி அவர் பேராசையைக் காட்டுகிறதில்லை. நாமும் தேவனுடைய எந்தவிதமான வேலைகளையும் அவருடைய சித்தத்தின்படி நிறைவேற்றி முடிக்கும்படி உன்னத பலத்துக்காக மன்றாடவேண்டும். நாம் அடிக்கடி நமது சுயபலத்தில் சார்ந்து தேவகிரியைகளை நடப்பிக்கிறதினால் அநேக தீமைகள் அவைகளில் கலந்து, நமக்குக் கெடுதியையும் மற்றவர்களுக்கு நஷ்டத்தையும் உண்டாக்கும் பலனாக முடிகிறது.

எலிசாவுக்கு வரங்கொடுத்தவரைப்பார்க்கிலும் பெரியவர் ஒருவர் நமக்கிருக்கிறார். எந்த நல்ல ஈவும், நிறைவுள்ள எந்த வரமும் அவருடைய திருக்கரத்தில் இருக்கிறது. 'கேளுங்கள், அப்பொழுது கொடுக்கப்படும்' என்று அவர் சுவிசேஷத்தின் மூலமாய் உலகமெங்கும் விளம்பரமடித்திருக்கிறார்; ஆகையால் முக்கியமான வரங்களை இச்சித்து நாடுவோமாக. தன் விஷயத்தில் பாவமன்னிப்பும் பிறர் விஷயத்தில் நேசமும் முக்கியமான வரங்களாயிருக்கின்றன. இந்த இரட்டை வரத்தையும் நாம் நாடுவது புத்தியாயிருக்கும்.

அற்புதப் பருவம்

எலியாவின் சால்வையின் அடையாளத்தினால் தான் கேட்ட இரட்டிப்பான வரம் வானத்திலிருந்து தனக்கு அருளப்பட்டதென்று எலிசா விசுவாசித்துக்கொண்டு அந்தச் சால்வையைக் கருவியாகப் பிரயோகித்துக்கொண்டு தன்னுடைய முதலாம் அற்புதத்தைச் செய்தார். எப்படியெனில், எலிசா தன்வழியே திரும்பிப்போய் யோர்தான் ஆற்றங்கரையில் வந்து 'எலியாவின் தேவனாகிய கர்த்தர் எங்கே' என்று ஜெபித்து அச்சால்வையால் தண்ணீரை அடித்தார். உடனே அது இருபக்கமாய்ப் பிரிந்ததினால் எலிசா இக்கரைப்பட்டார். அச்சமயத்தில் சற்றுநேரத்துக்முன் ஆற்றைக்கடந்துபோன எலியாவுக்கும் எலிசாவுக்கும் என்னசம்பவித்ததோ என்று ஏங்கி, ஆற்றோரத்தில் பார்த்த கண் தட்டிவிழியாமல் காத்துக்கொண்டு நின்ற தீர்க்கதரிசிகளின் புத்திரர் இவ்வதிசயத்தைக்கண்டு பிரமித்து எலியா தமது ஜீவகாலத்தை முடித்துவிட்டாரென்றும், அவருடைய வரப்பிரசாதங்கள் எலிசாவின்மேல் வருஷிக்கப்பட்டிருக்கிறதென்றும் உணர்ந்துகொண்டு அவருக்கு எதிர்கொண்டு போய் தரைமட்டும் குனிந்து அவரை வணங்கி, தங்கள் தலைவராக மதித்துவந்தார்கள். தேவ அருள் பிரசாதம் தங்கும் போது உலகம் தானாய்த் தலைகுனியும்; அநேகர் பட்டயத்தையும் ஈட்டியையும் காட்டி மற்றவர்களைத் தங்களுக்கு அடங்கப்பண்ணப் பிரயத்தனப்படுவார்கள். அவ்வண்ணம்

அடங்கப்பண்ணுவதும் சரியல்ல, அடங்கியிருப்பதும் பெருமையல்ல. அன்பினாலும் அருளினாலும் அயலாரை ஆளும் மனுஷனே மனுஷனென்று சொல்லவேண்டியது.

எலிசா வரம்பெற்று திரும்பினது முதல் அற்புதங்களின் மேல் அற்புதங்களைப் பொழிந்தாரென்று சொல்லவேண்டியது. அவர் அற்புதமாய் யோர்தானைக் கடந்ததும், அவர் கடந்துபோகுமட்டும் ஜலம் அவரை வணங்குகிறதுபோல் பிரிந்து நின்றதும் ஊர் எங்கும் பேசிக்கொள்ளப்பட்டது. அப்பொழுது அப்பட்டணத்தின் மனுஷர் எலிசாவண்டை வந்து தங்கள் ஊரிலுள்ள கெட்ட தண்ணீரை நல்ல தண்ணீராக்கவேண்டுமென்று மன்றாடினார்கள்; உடனே அவர் உப்பைப்போட்டு நல்ல தண்ணீராக்கினார். அதுமுதல் குடியிருப்புக்கு ஏற்ற இடமாயிருந்தாலும் ஜல சவுக்கியமில்லாத எரிகோ ஊர் வாழ்வடைந்தது. எரிகோவின் ஜலமானது அந்த நிலத்தையும் பாழாக்கிவிட்டது; பச்சை அதிலிருந்ததுமில்லை, பயிர் அதில் ஓங்கினதுமில்லை. ஜலசாபம் மாறினது முதல் சகல வாழ்வுமுண்டாயிற்று. அந்த ஜலத்தால் எரிகோவின் நோயும் நொடியும் அதிகமாயிருந்ததென்று சொல்லலாம். எலிசா அற்புதஞ்செய்து 'இனி இதனால் சாவும் வராது, நிலப் பாழுமிராது என்று கர்த்தர் சொல்லுகிறார்' என்று ஆசீர்வாதம் கூறினார். அதோடு வாழ்வு துவக்கிற்று. நமது இருதயங்களில் பாவ சிந்தையிருக்குமட்டும் அதனுள் ஊறிவழியும் நடக்கைகளும், பேச்சுகளும் ஆத்தும சுகத்துக்குப் பிரதிகூலமான சாபமுள்ளதாகவே இருக்கும். பரிசுத்த ஆவியின் அருள் நமது நெஞ்சை சந்திக்கும்போது உப்பு எரிகோ ஜலத்தின் சாபத்தை மாற்றினதுபோல மாற்றிவிடும். ஆதலால் கெட்ட சிந்தையுள்ள யாவரும் அந்த உன்னத மாறுதலுக்காக மன்றாடவேண்டியது.

அப்பால் எலிசா பெத்தேலுக்குப் போனார். அவ்விடத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருந்த தீர்க்கதரிசிகளின் புத்திரருடைய கல்விச்சாலையை மேல் விசாரிக்கும்படி போயிருக்கலாம். அவர் தமது வழியே போகையில் அவ்வூர் பிள்ளைகள் கூட்டமாக நின்று அவரைப் பரிகாசம் பண்ணி:

மொட்டைதலையா ஏறிப்போ,
மொட்டைதலையா ஏறிப்போ

என்று கத்தினார்கள். ஒருவேளை எலியா பரமேறினது போல நீயும் பரமேறி தொலைந்துபோ என்று உணர்த்தும் பாவனையாகப் பழித்தார்களாக்கும். அப்பொழுது எலிசா கோபமூண்டு கர்த்தரின் நாமத்தினால் அவர்களைச் சபித்தார். உடனே காட்டிலிருந்து இரண்டு கரடிகள் புறப்பட்டு வந்து அவர்களில் நாற்பத்திரண்டு பிள்ளைகளைப் பீறிப்போட்டது. இந்தத் துயர சரித்திரமானது நம்மைப் பிரமிக்கச்செய்ய லாம். ஆனாலும் நாம் தேவ செயலையாவது தீர்க்கதரிசியின் குணத்தையாவது இதைக்கொண்டு குறைகூறலாகாது. கரடி கையில் நாற்பத்திரண்டு பிள்ளைகள் அகப்பட்டது மெய் யானால் இன்னம் எத்தனையோ பிள்ளைகள் தப்பியோடியிருக் கலாம். ஆகவே ஏகமாய் வந்த பிள்ளைகளின் தொகை இவ் வளவென்று நமக்குத் தெரியாது. இவ்வளவு பிள்ளைகளும் கரடிகள் தங்கும் பருமபுகள் மட்டும் வரவேண்டியதென்ன? இவர்களுக்குப் பிதாக்களில்லையா? மாதாக்களில்லையா? பள் ளிக்கூடமில்லையா? உபாத்தியாயரில்லையா? ஐயோ! இந்தப் பிள்ளைகளின் திரளும், அவர்களுடைய நடபடிக்கைகளும், அவர்களுக்கு நேரிட்ட தண்டனைகளும் பெத்தேல் ஊராரின் பக்தி நிலைமையை நன்றாய் ரூபிக்கிறது. பெத்தேல் ஊர் ரெகொபெயாம் காலமுதல் விக்கிரகாராதனையில் பேரெடுத் தது. அது யானின் விக்கிரக ராஜதானியாயிருந்தது. இந்த விக்கிரகாராதனையை மடக்கும்படி அந்த இடத்திலே தீர்க்க தரிசிகளின் பள்ளிக்கூடம் ஒன்றிருந்தது; அவ்விடத்து தீர்க்கதரிசிகளின் புத்திரரும் யெரொபெயாமின் கன்றுகுட்டி ஆராதனைக்கு விரோதமாய் வரும் தேவ சாபங்களைக் கூறி வந்திருக்கலாம். ஆகவே அவ்விருபட்சத்தாருக்கும் இடை யிலிட்ட துரும்பு ஆகாமல் அவ்வளவு கொடிய பகையிருந் தது. எலியா பாகாலின் பூசாசாரிகளை அதம் பண்ணின தும், விக்கிரகாராதனையை அழித்ததும் அவர்களுக்கு எரிச்சலாயிருந்தது. அவர் தொலைந்தால் தாங்கள் சுகமா யிருக்கலாம் என்று அவர்கள் எண்ணியிருக்கலாம். எலியாவுக்குப்பின் எலிசா இரட்டை வரம்பெற்று தேவ னால் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறார் என்று அவர்கள் கேள்

விப்பட்டது அவர்கள் மனதை வதைத்தது. ஒருவேளை எலிசா தாம் பெத்தேலுக்கு வருவதைத் தெரிவித்திருக்கலாம். அதோடு அவர் அற்புதமாய் யோர்தானைக் கடந்ததும், எரிகோவின் கெட்ட ஜலத்தை நல்ல ஜலமாக்கினதும் பெத்தேலின் தெருக்களில் பேசிக்கொள்ளப்பட்டிருக்கலாம். அந்த எலிசா வந்து பெத்தேலில் தங்குவது மெய்யானால் நமது விக்கிரக ஆராதனையைக் கீழது மேலதாக்கி விடுவாரென்று அவ்வூரார் நினைத்து, தங்கள் பிள்ளைகளையெல்லாம் கும்பலாக அனுப்பி தீர்க்கதரிசி வரும்போதே பரியாசம் பண்ணி நிந்தித்து, கல்லெறிந்து, கூடுமானால் கொலை செய்து போடவும் திட்டஞ்செய்திருக்கலாம். பிசாசு தன் கிரியைகளை முடிக்கச் சர்ப்பத்தை ஏதுவாக்கும்போது பிள்ளைகளை ஏதுவாக்குவது எவ்வளவு நிச்சயம்! இந்த பெத்தேலின் பிதாக்கள் தங்கள் பொல்லாப்பை தங்கள் பிள்ளைகள் மூலமாய் நிறைவேற்றியிருக்கிறார்கள். ஆகையால் இந்தப் பிள்ளைகள் சாபம் பெற்றதில் தேவ நீதியிருந்ததேயன்றி தீர்க்கதரிசியின் சுயநயமும், கர்வமும், இருந்ததில்லை. பெத்தேல் என்பதற்கு கர்த்தருடைய வீடு என்று அர்த்தம். ஐயோ! கர்த்தருடைய வீட்டுக்குள்ளிருந்து பெயெல்செபூலின் பிள்ளைகள் புறப்பட்டு கர்த்தரின் ஊழியக்காரரை நிந்தைக்கும் அவமானத்துக்கும் உட்படுத்துகிறதுண்டு. இதினாலே பெத்தேலின் பெற்றோர் தங்கள் பிள்ளைகளை எவ்வளவு கெட்ட வளர்ப்பில் வளர்த்திருக்கிறார்கள் என்று தெரிய வருகிறது. ஒவ்வொரு பிதா மாதாக்களும் தேவ ஊழியக்காரரை மதிக்கும்படி தங்கள் பிள்ளைகளை வளர்க்கவேண்டியது.

பெத்தேலிலிருந்து தீர்க்கதரிசி கர்மேலுக்குப் போனார். அவ்விடத்தில் எலியாவினால் நடந்த அதிசயங்களும், பாகாலின் பூசாரிகள் சங்காரமானதும் அவர் மனதில் வந்திருக்கும். அவர் அவைகளைத் தியானித்து, தன் பத்தாவை ஸ்துதித்து, தானும் தன் எஜமானைப்போல விக்கிராராதனையைத் தேசத்திலிருந்து விலக்கிவிட வரம் தரவேண்டுமென்று மன்றாடியிருப்பார் என்பதற்கு ஐயமில்லை. கர்மேலிலிருந்து எலிசா இராசாங்கவேலையாய் சமாரியாவுக்குப் போகும்படி தேவனால் ஏவப்பட்டார். எப்படியெனில் ஆகாபின் காலமட்டும் இஸ்ரவேல் ராஜாவுக்குக் கீழ்ப்பட்

டிருந்து வருஷவாரி கப்பங்கட்டிக்கொண்டு வந்த மோவாபின் ராஜா அவன் மரணத்துக்குப்பின் தன் நுகத்தை உதறிக் கப்பம் கட்டமாட்டேனென்று வம்பு பண்ணினன். அவனைக் கீழ்ப்படுத்தும்படி ஆகாபின் குமாரனாகிய யோராம் துணிந்து யூதாராஜாவாகிய யோசபாத்தைக் கேட்டான்; அவனும் அதற்குச் சம்மதித்தான். பின்பு இருவரும் ஏதோமின் இராசாவையும் சேர்த்துக்கொண்டு திரண்ட படை பண்டாரங்களுடன் மோவாபின் இராசாவை எதிர்த்து கீழ்ப்படுத்தப்போனார்கள். அவர்கள் போனவழியில் தண்ணீரில்லாததால் சேனை ஏழுநாள் அவதிப்பட்டது. இப்படித் தண்ணீரற்றுத் தவனத்தால் நாவறளும் சேனை எதிரிகளைக் கீழ்ப்படுத்தக்கூடுமோ? அவரவர் நாவு வறண்டு, ஐயோ! நமது உடலைக் கீறி நமது இரத்தத்தைத்தான் குடிப்போமா என்று சொல்லும்படி அவ்வளவு சங்கடம் அவர்களுக்கு நேரிட்டது. அந்த மூன்று அரசரும் இது தேவ தண்டனையேயன்றி வேறல்ல, கர்த்தர் மூன்று அரசரையும் வனத்தில் மாளும்படிச் சித்தங்கொண்டிருக்கிறாராக்கும் என்று எண்ணிக்கொண்டார்கள். இப்படி அவதிப்படுங்காலத்தில் கர்த்தருடைய தீர்க்கதரிசிகள் இவ்விடத்தில் உண்டா என்று யோசபாத்து விசாரித்தான். உடனே இஸ்ரவேல் ராஜாவின் வேலைக்காரன் எலிசா கூட வருவதாகச் சொன்னார் என்றான். எலிசாவின் பூர்வோத்தரம் எல்லாம் அந்த ஊழியக்காரனுக்குத் தெரிந்திருந்தபோதிலும் அந்த அரசருக்கு அவ்வளவாய்த் தெரியவில்லை. ஒருவேளை ஆகாப் வீட்டில் நெடுங்காலம் வேலைசெய்து எலியாவுக்குப்பின் எலிசா தீர்க்கதரிசியான வரலாறுகளை அறிந்தவனாயிருக்கலாம். உடனே அம்மூன்று அரசரும் எலிசாவிடம் போனார்கள். அவர்களுக்குண்டான ஆபத்து அவ்வளவு பெரிதாயிருந்ததால் அந்த மூன்று அரசரும் தீர்க்கதரிசியிடம் தானாய்ப்போனார்கள் என்று தோன்றுகிறது. உபத்திரவ காலத்தில் மாத்திரம் குருக்களைத் தேடி மதித்து, வாழ்வு காலத்தில் அவர்களை நினையாத குணம் நல்லதல்ல.

யோராம் தன் சங்கடங்களைச் சொல்லி வரம் கேட்டான். உடனே தீர்க்கதரிசி அவனை சட்டை பண்ணமல் அவனை அவன் தாயும் தகப்பனும் கும்பிட்ட பாகாலிடம் போகும்

படிச் சொன்னார். பின்பு அவர்களில் ஒருவனாகிய யோசபாத்து அரசனுடைய முகத்துக்காகச் சொல்லுகிறேன் என்று சொல்லிதான் வரம்சொல்ல ஏவப்படும்படி சுரமண்டலக்காரரைக் கொண்டுவரவேண்டுமென்று கேட்டான். அப்படியே அவர்கள் இங்கிததொனியோடு சுரமண்டலங்களை வாசிக்கையில் கர்த்தருடைய வரம் அவன்மேல் இரங்கிற்று. அவன் பள்ளத்தாக்குகளில் துரவுகளை வெட்டுங்கள், தண்ணீர் உண்டாகும் என்று சொன்னான்; அப்படியே செய்தார்கள். மறுநாள் எலிசா குறித்த நேரத்தில் வெட்டின துரவுகளிலிருந்து ஜலம் திரளாய் பெருகி ஓடிவந்தது. அவர்கள் தவனம்தீர்ந்து மகிழ்ச்சியடைந்தார்கள். அந்த ஜலம் பெருகி ஏதோம் தேசத்துக்குள்ளும் பாய்ந்தது; சூரியன் உதிக்கும் சமயத்தில் அதின் கிரணங்கள் அந்த ஜலத்தின்மேல் வீசினதால் அது சிவப்புநிறமாய்த் தெரிந்தது. ஏதோமியர் தங்கள்மேல் படையெடுத்துவரும் சத்துருக்களைப்பற்றிக் கேள்விப்பட்டிருந்ததால் வேறே கருத்து கொண்டு, அதின் நிறம் சிவப்பாயிருப்பதால் நம்மைக் கொல்லவந்த எதிரிகள் தங்களைத் தாங்களே மடங்கடித்து மாண்டார்கள் என்று கைதட்டி கொள்ளையடிக்கும்படி வந்தார்கள். உடனே களையாறி தகைமாறியிருந்த மூன்று அரசருடைய சேனையும் ஏகமாய்க்கூடி அவர்களைச் சங்காரஞ் செய்துவிட்டார்கள். எலிசாகூட இராவிட்டால் இந்தச் சகாயம் அவர்களுக்குக் கிடைத்திருக்கமாட்டாது.

இவ்வதிசய நடபடிக்கைக்குப் பின்பு எலிசா சிலகாலம் இஸ்ரவேல் ராஜ்யத்தில் தங்கியிருந்தார் என்று யோசேப்புஸ் சரித்திரக்காரர் சொல்லுகிறார். அக்காலத்தில் எவரும் பிரமிக்கத்தக்க இன்னொரு அற்புதம் நடந்தது. அதாவது, தீர்க்கதரிசிகளின் புத்திரரில் ஒருவனுக்கு மனைவியாயிருந்த ஒரு ஸ்திரீ எலிசாவைப் பார்த்து என் புருஷன் இறந்து போனார், அவர் கர்த்தருக்குப் பயந்து நடந்தவர், அவர் பட்ட கடன்நிமித்தம் கடன்கொடுத்தவன் என் இரண்டு குமாரரையும் அடிமைகளாக்கிக்கொள்ள வந்தான், என்

கடன் நீங்க கருணைபுரியவேண்டுமென்று கெஞ்சினாள்.[1] உடனே எலிசா உன்னிடம் என்ன இருக்கிறதென்று கேட்க, ஒரு குடம் எண்ணெயேயல்லாமல் வேறொன்றுமில்லை என்றாள். அப்பொழுது எலிசா, நீ போய் அயல் வீட்டுக் காரரெல்லாரிடத்திலும் அநேகம் வெறும்பானைகளை வாங்கி உன் பிள்ளைகளுடன் உள்ளேபோய்க் கதவைப் பூட்டி அந்தப் பாத்திரங்கள் எல்லாவற்றிலும் வார்த்து நிறைந் ததை ஒரு பக்கத்தில் வை என்று உத்தரவுகொடுத்தார். அவள் அப்படியே செய்தாள். ஊரார் பாத்திரமெல்லாம் அவள் வீட்டில் எண்ணெயால் நிரப்பப்பட்டிருந்தது; வேறு பாத்திரங்கள் இருந்ததில்லை. அந்தச் சமாசாரத்தை தீர்க்க தரிசியிடம் போய்ச் சொன்னாள். உடனே அவர் அதை யெல்லாம் விற்று உன் கடனைத் தீர்த்து மீந்ததைக்கொண்டு நீயும்உன்பிள்ளைகளும் ஜீவனம்பண்ணுங்கள் என்று உத்தரவு கொடுத்தார். இதினாலே தீர்க்கதரிசிக்கு ஏழைகள்மேலிருந்த அன்பும்பாசமும் விளங்குகிறது. இந்த அற்புதத்தினால் அவ ருக்கு லாபமில்லாதிருந்தும் மற்றவர்களுக்குக் கர்த்தரை முன்னிட்டு நன்மைசெய்யும் மனம் இருந்ததென்று விளங்கு கிறது. அநேகர் இந்த வரம் எனக்கு இருக்குமானால் நான் ஏழைகளைக் காப்பாற்றுவது நிச்சயமென்று பழிப்பாய்ச் சொல்லத் துணியலாம்; அப்படிப் பழிக்கிறவர்கள் இந்த வரத்தை தன்நயத்துக்கே திருப்பிக்கொள்வார்களென்பது நிச்சயம். நமக்குத் தேவன் தந்திருக்கிற அளவுக்குத் தக்க தாக நாம் ஏழைகளையும் கைம்பெண்களையும் ஆதரிக்க வேண்டியது. கொஞ்சம் கொடுக்க மனம் வராதவனுக்கு அதிகம் கொடுக்க மனம் வருமா? விசேஷமாய் நாம் விதவை யின் இருதயத்தைக் கெம்பீரிக்கப் பண்ணுகிறவர்களாயிருக்க வேண்டியது.

---

[1] இந்த ஸ்திரீ ஆகாபின் காலத்தில் கர்த்தருடைய தீர்க்கதரிசி களைக் கெபியில் அடைத்துப் போஷித்துவந்த ஒபதியாவின் மனைவியென்று யோசேப்புஸ் சொல்லுகிறார். இந்த அபிப்பிரா யத்தை தார்கூம் ஆகமமும், மற்ற ரபிமார் வாசகமும் உறுதிப் படுத்துகின்றன. அவளுக்குண்டான கடன் தீர்க்கதரிசிகளைப் போஷித்த கடனாக இருக்கலாம் என்று சிலர் அபிப்பிராயப்படு வதை ஒப்புக்கொள்ள வேண்டியதுதான்.

பின்பு ஒருநாள் எலிசா சூனேம் என்னும் ஊருக்குப் போனார். அது அவருடைய பயணத்தின் மத்தியிலிருந்ததென்று எண்ணவேண்டியது. ஏனெனில் தீர்க்கதரிசிகளின் புத்திரருடைய கல்விச்சாலைமூலமாய் அத்தேசத்தில் மெய்த்தேவ அறிவையும் வணக்கத்தையும் நிலைநிறுத்தும்படி அவர் வெகுவாய் முயன்றுவந்தார். எலிசாவின் ஜீவியம் எலியாவின் ஜீவியத்தைப்போல மிச்சமாய்க் காட்டுக்குள் இராமல் நாட்டுக்குள் இருந்தது. அந்த ஊரில் கனம்பொருந்திய ஒரு ஸ்திரீ இருந்தாள். அவள் தீர்க்கதரிசியை வருந்தி அழைத்து, போசனம் கொடுத்துவந்தாள். அவளுடைய பக்திவிநயத்தையும் மெய்த் தேவபற்றுதலையும் கண்ட எலிசா அத்திசை போகும்பொழுதெல்லாம் அவள் வீட்டில் தங்கியிருக்கிறதுண்டு. எலிசா தன் வீட்டில் தங்குவது அவளுக்கு ஒரு பெரிய பாக்கியமாய் காணப்பட்டது; ஆதலால் அவரைச் சந்தோஷப்படுத்தும்படி தன்னாலானமட்டும் பிரயாசப்பட்டாள். எலிசாவின் அற்புத வரங்களையும், அரிய உபதேசங்களையும் அவள் கேள்விப்பட்டிருக்கலாம். வரவர அவள் தீர்க்கதரிசியைத் தன் வீட்டில் குடித்தனக்காரன் போலாக்கிக்கொள்ளவேண்டுமென்று விரும்பி, அவருடைய சுகத்துக்காக தன்னுடைய வீட்டில் ஒரு மேல்மெத்தை கட்டுவது நலமென்று தன்னுடைய கணவனுடன் ஆலோசனைசெய்தாள். அவனும் அதற்கு இணங்கி ஒரு ஆள் குடியிருக்கவும், ஒரு கட்டிலும் மேசையும் நாற்காலியும் போடவும் சிறிய மேல்மெத்தையைக் கட்டினான். இந்த ஸ்திரீயின் அன்பும் அவள் செய்த மரியாதையும் அவளுக்குத் தன்னாலாகக்கூடிய ஒரு சகாயத்தால் முடிசூட்டப்படுவது நலமென்று தீர்க்கதரிசி உத்தேசித்து, தமது ஊழியக்காரனைக்கொண்டு அந்த ஸ்திரீ பாராட்டிய தயவைச் சொல்லிக்காட்டி இதற்கு பதில் நன்மை உனக்கு என்னவேண்டுமென்று கேட்டார். உத்தம பக்தர் மற்றவர்கள் சொத்தையும் சுகத்தையும் தாங்கள் அநுபவித்து, அவர்களால் வரும் புகழ்ச்சியைப் பெற தாங்கள் பிறந்திருக்கிறார்கள் என்று எண்ணமாட்டார்கள். ஒரு சகாயத்துக்கு ஒன்பது சகாயமும், ஒரு உதவிக்குப் பல கிருபைகளும் காட்டுவதே அவர்கள் தொழில். மேலும்

அவர்கள் நன்மையைப்பெற்று நன்மையைச் செய்யாதிரார்கள். அவளுக்குக் கிடைக்கவேண்டிய உதவி இராசாங்க உதவியாக இருந்தாலும் அதைச் சொல்லும்படி கேட்டார். 'இராசாவினிடத்திலாவது சேனபதியினிடத்திலாவது உனக்காக நான் பேசவேண்டிய காரியமுண்டோ' என்று முதலாய்க் கேட்டார். இதினுல் எலிசாவுக்கு அரமனையிலிருந்த சொற்சக்தி இவ்வளவென்று தெரியவருகிறது. தீர்க்கதரிசி கேட்டதை அவள் கருத்தில் எண்ணி களிகூர்ந்தபோதிலும், போதுமென்கிற மனதுடனேகூடிய தேவபக்தி அவள் இருதயத்தை ஆண்டுகொண்டிருந்ததால் அவருக்கு மறுமொழியாக:—

நான் என் ஜனத்தின் நடுவே
சுகமாய்க் குடியிருக்கிறேன்

என்று மாத்திரம் சொன்னாள். இதினுல் தனக்குப் பூலோக சகாயம் ஒன்றும் வேண்டியதில்லை என்று அறிக்கையிட்டாள். அவள் போனபின்பு தீர்க்கதரிசி தமது வேலைக்காரனைப் பார்த்து, அவளுக்கு என்ன சகாயம் செய்யலாம் என்று கேட்டதற்கு

'அவளுக்குப் பிள்ளையில்லை'

என்று சொன்னான். அவளுடைய புருஷனும் வயது சென்றவனுயிருந்தான். உடனே தீர்க்கதரிசி அவளை அழைத்துவரச் சொல்லி, இன்னும் ஒரு வருஷத்தில் அவளுக்கு ஒரு ஆண் குழந்தை பிறக்கும் என்று ஆசீர்வாதங் கூறினார். அந்த வாக்கின்படி ஒரு குழந்தை பிறந்தது. அதை நாளொருவண்ணமும் பொழுதொரு மேனியுமாக வளர்த்தாள்.

அவளுக்குப் பயிர்பச்சை அதிகமாயிருந்தது. புருஷன் காடுகரைகளைப் போய்ப் பார்த்து விதைக்கிறதும் அறுக்கிறதுமான வேலையிலே தன் நாட்களைக் கடத்தினன். ஒரு நாள் இந்த மகன் வயலிலிருந்த தன் தகப்பனண்டை போயிருந்த சமயத்தில் வியாதிப்பட்டு வீட்டுக்குக் கொண்டு வரப்பட்டு மரித்துப்போனுன். இந்தக் காலத்தில் தீர்க்கதரிசி அந்த வீட்டில் இல்லை. அவர் கர்மேல்மலைமேல்

போயிருந்தார். உடனே இந்தச் சமாசாரம் அவருக்குத் தெரிவிக்கப்பட்டது. தீர்க்கதரிசி தன் தடியை வேலைக்காரன் கையில் கொடுத்து அதின்மூலமாய் அந்தப் பிள்ளையை உயிரடையச்செய்ய முயன்றார். அவனுடைய அவிசுவாசத்தினாலே அது பலிக்கவில்லை. அப்பால் எலிசாவே போய்க் கர்த்தரை நோக்கி விண்ணப்பஞ்செய்து, வெகு வருத்தத்தோடு பிள்ளை உயிரடையும்படிச் செய்தார். இதினாலே நீதிமானை ஏற்றுக்கொள்ளுகிறவன் நீதிமானுக்குரிய பலனை அடைவான் என்கிற வாசகம் உண்மை பெறுகிறது. அந்த ஸ்திரீ எலிசாவின்பேரிலே நம்பிக்கை வைத்துவிடாமல் கர்த்தரை நாடும்படி இது ஒரு தட்டுதலாயிருந்தது. தேவ ஊழியக்காரர் துன்பப்படுகிறவர்களோடே அநுதாபமும், துக்கப்படுகிறவர்களோடே கண்ணீரும்விட்டு, அவர்களுக்காக கருத்தோடு ஜெபம்செய்ய இதினால் போதிக்கப்படுகிறார்கள்.

எலிசாவின் ஊழியம் பெரும்பாலும் மெய்த்தேவ பக்தியை வெளிப்படுத்துகிறதும், தேவ ஊழியத்தின் உத்தமத்தைக் காட்டுகிறதுமா யிருக்கிறதென்று இம்மட்டும் சொன்ன வரலாறுகளால் ஒருவாறு தெரியவரலாம். இன்னும் போகப்போக அவைகள் எவ்வளவேனும் குறைகிறதாயாவது மாறுதலடைகிறதாயாவது நாம் உணரமட்டோம். அவர் எப்போதும் தேவமகிமையையே கோரி, மெய்த்தேவ வணக்கத்தின்பேரில் கருத்துள்ளவராயிருந்தார். தன் வாழ்வையும் விருத்தியையும் பிரஸ்தாபத்தையும் அவர் விரும்பவேயில்லை. தேவகரம் அவரோடு அல்லும் பகலுமிருந்ததால் அவர் அற்புதங்களைச் செய்வதில் வல்லவரானார். அவர் எவ்வளவு அற்புதங்களை நடப்பித்துவந்தபோதிலும் பொல்லாதவர்கள் அவரைப் பகைத்தே வந்தார்கள். தேவகுமாரனாகிய இயேசுகிறிஸ்து அனந்தம் அற்புதங்களைச் செய்து அரும்போதனைகளால் உலகத்தை நிரப்பினபோதிலும் சத்துருக்களின் தொகை அவருக்குக் குறைவாயிருந்ததோ! அவர் போகும் இடங்களிலெல்லாம் தடையும், அவமானமும், நிந்தனையும், எதிராளிகளின் கூட்டமுமே இருந்தன. தன் போக்கெல்லாம் புகழ்ச்சியாலும், வரத்தெல்லாம் வாழ்வாலும், நினைவெல்லாம் நிறைவேறுதலாயும் இருக்கிற

தில்லேயே என்று தேவ ஊழியன் சொல்லிக்கொள்ளக் கூடாது; அவன் தன் இரட்சகரும் எஜமானுமானவர் அநுபவித்த அங்கலாய்ப்புகள் அனைத்தும் அகன்று குடியிருக்கவேண்டுமென்று கனவிலும் எண்ணலாகாது. சகல இடங்களிலும், ஆபத்துகளிலும் நடுவே பொறுமையுள்ள பாடலேர்டும் நம்பிக்கை கலந்த உறுதியோடும் கடந்து போவதே தகுதியாயிருக்கும்.

எலிசா அவதிப்படுவோருக்கு உதவிபுரிவோராய் எப்போதும் நடந்து வந்தார். அவர் தமது விசாரணைக்கு உட்பட்ட தீர்க்கதரிசிகளின் புத்திரருடைய ஞான உணவைப் பற்றிக் கவலையுள்ளவராய் இருந்ததுபோல சரீர உணவைப் பற்றியும் கவலையுள்ளவராயிருந்தார். ஒரு தரம் அவர் கில்கால் என்னும் இடத்திற்கு வந்திருந்த சமயத்தில் அவர்களுக்கு ஆக்கியிருந்த உணவு பதார்த்தங்களில் நஞ்சு கலந்திருந்ததைக் கண்டு அதை மாற்றினர். அது பஞ்சகாலமாயிருந்ததால் பசியை ஆற்றும்படி கண்ட கீரைகளையெல்லாம் சுயம்பாகி கொண்டுவந்து கஞ்சி காய்ச்சி வார்க்கிறதுபோல் வார்த்தான். அதனோடு பேய்க்கொம்மட்டி கொடிகளுமிருந்தன. கூழை வாயில் வைத்தவுடனே அதன் கசப்பு வெளிப்பட்டது; ஒருவேளை அதினால் வாந்தி முதலிய வியாதியடைந்திருக்கலாம். உடனே ஒரு பிள்ளையாண்டான்

'தேவனுடைய மனுஷனே!
பானையில் சாவு இருக்கிறது'

என்று சத்தமிட்டான். அப்பொழுது தீர்க்கதரிசி மாவையே மாற்றுகப் போட்டு அதன் சாபத்தை நீக்கினர். அப்புறம் அதின் நஞ்சு அற்றுப்போயிற்று. அதே சமயத்தில் தீர்க்கதரிசிக்கு நன்கொடையாக இருபது அப்பங்களை ஒரு மனுஷன் அனுப்பியிருந்தான். அதைக் கண்டவுடன் அந்தப் பிள்ளையாண்டான்மாரெல்லாம் அதின்பேரில் கண் வைத்தார்களாக்கும். பஞ்சம் கொடிதாயிருந்ததால் அப்பம் அருமையாயிருந்தது. அன்றையத்தினம் நூறுபேர் அவருடனிருந்தார்கள். தீர்க்கதரிசி தமக்கு வந்த அப்பங்களை அவர்களனைவருக்கும் பங்கிடச் சொன்னர். அவருடைய வேலைக்காரனே இந்த அப்பத்தை நூறு பேருக்குப் பங்கிட என்னு

லாகாதையா என்று சொல்லிவிட்டான். அவரோ இல்லை, நீ பங்கிட்டுக் கொடு, இன்னம் மீதியிருக்கும் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்றார். அப்படியே பணிவிடைக்காரன் செய்து மீதியையுங் கண்டு பிரமித்தான். நாமும் நமக்குள்ளதை மற்றவர்களுக்கு மனங்கோணாமல் செய்ய வேண்டியது; அப்பொழுது கர்த்தர் நம்மை வெறுமையாய் அனுப்பமாட்டார்.

எலிசாவின் பேரும் பிரஸ்தாபமும் அந்த நாடெங்கும் பேசிக்கொள்ளப்பட்டது, ஏனெனில் எலிசாவின் அற்புதங்கள் அவ்வளவு பரோபகாரம் பொருந்தினவைகளாயிருந்தன. பெரியவர்கள் மாத்திரமல்ல சிறியவர்களும், ஆண்கள் மாத்திரமல்ல பெண்களும் அவருடைய பேரையும், அவர் மூலமாய் விளங்கின பல தேவ வரங்களையும் அறிந்திருந்தார்கள். ஒரு சிறு பெண் இவரைப்பற்றி சீரியாவில் போய்ப் பிரஸ்தாபப்படுத்தியதால் அத்தேசத்து சேனாபதிமுதலாய் ராஜ கடிதத்தோடு வந்து தன் நோய் தீர்ந்து சந்தோஷத்தோடு திரும்பிப் போனான். அதன் வரலாறை நாகமானுடைய சரித்திரத்தில் விபரமாய்க் காட்டுவோம்.

தீர்க்கதரிசி இஸ்ரவேல் தேசத்துக்கு ஆசீர்வாதமாகவே இருந்தார். எலிசாவும் அவருடன்கூட வசித்த பிள்ளைகளும் வாசம்பண்ணின வீடு அதிக சிறிதாயிருந்தது. ஆதலால் வேறொரு பெரிய ஜாகை கட்டும்படி முயன்று மரம் வெட்டும்படி போனார்கள். போகும்போது சில கோடரிகளையும் இரவல் வாங்கிக்கொண்டு போனார்கள். மரம் வெட்டும்போது ஒரு கோடரி காம்பு கழன்று பக்கத்திலிருந்த ஆழமான சுனைக்குள் விழுந்துவிட்டது. அதை வாங்கிக்கொண்டு வந்தவன் துக்கப்பட்டு தீர்க்கதரிசியிடம் வந்து அழுது, ஐயோ! இரவல் பொருளை இழந்தேனே, நான் என்ன செய்வேன் என்று புலம்பினான். உடனே எலிசா ஒரு கொம்பை வெட்டி அது விழுந்த இடத்தில் போட்டவுடனே அது மிதந்தது; அதை எடுத்து அழுது அங்கலாய்த்தவன் கையில் கொடுத்துவிட்டார். கேயாஸ் போனதால் யாதொரு நஷ்டமும் நேரிடவில்லை; லாபமே யுண்டாயிற்று. ஏனெனில் தீர்க்கதரிசிகளின் பிள்ளைகள்

கூட்டம் அதிகப்பட்டதால் விஸ்தாரமான கட்டடம் உண்டாக்க நேரிட்டது. கெட்ட மரம் தோட்டத்திலிருந்து தொலைகிறது நல்லதுதான். ஏனெனில் நல்ல மரங்கள் தழைத்தோங்கும்படி போதுமான இடமிருக்குமல்லவா! இக்காலத்தில் இஸ்ரவேல் ராஜ்யத்தில் அவபக்தி அதிகப்பட்டது. அவபக்தியின் காலத்தில் கர்த்தருடைய ஊழியத்துக்கென்று ஆயத்தப்பட அதிகப் பேர் வந்து கூடினது அதிசயந்தான். இரவல் பொருள் போனதற்கு அழுதது தீர்க்கதரிசியின் பிள்ளைகளிடத்தில் காணப்பட்ட உண்மையை வெளிப்படுத்துகிறது. உத்தமர் தம் பொருளை விட பிறர் பொருளைப்பற்றி கவலையாயிருப்பார்கள். குணப்படாமல் பாவத்திலே நிலைத்திருக்கிற இருதயங்கள் சேற்றுக்குள் ஆழ்ந்துபோன இரும்பு கோடரிபோலிருந்தாலும் கர்த்தருடைய வசனத்தின் பெலனால் அவர்கள் அதிலிருந்து எழுந்து மீட்கப்படுவதுமுண்டு.

இராஜ்ய சம்பந்த பருவம்

அப்பால் தீர்க்கதரிசி இராசாங்கத்தைப்பற்றி அதிக கவலையுள்ளவராய் விளங்கினார். ஒரு இராச்சியத்தில் சன்மார்க்க விருத்திக்காக தேவ ஊழியக்காரர் அதின் அனுசரணையாய் இருக்கவேண்டியது நியாயந்தான். சன்மார்க்கமில்லாத ஆளுகையில் லாபமென்ன? ஒருதரம் சீரிய ராஜா இஸ்ரவேல் ராஜாவை ஜெயித்துக் கீழ்ப்படுத்தும்படி அவனுடைய போக்கு வரவுகளையும், அவன் வேட்டையாடும் ஸ்தலங்களையும் கண்டுபிடித்து, திடீரென்று அவன்மேல் விழுந்துவிடும்படி இரகசிய யோசனைகளைச் செய்தான். தேவன் அந்த யோசனைகளைத் தீர்க்கதரிசிக்கு அப்போதப்போதே தெரியப்படுத்தினதால், எலிசாவின் ஆலோசனையால் இஸ்ரவேல் ராஜன் சீரிய இராசாவின் கைக்கு அகப்படவில்லை. பல பிரயத்தனங்கள் பண்ணியும் பலிக்காததால் அவன் மனமெரிந்து, யாரோ தன் ஒழுங்குகளையெல்லாம் எதிரிக்கு அறிவித்துப்போடுகிறதாக அநுமானித்து விசாரணை செய்ததில், அது தன் ஆட்களால் அல்ல, தேவன் எலிசா மூலமாய் அறிவிக்கிறார் என்று கண்டு, அவரைப் பிடித்துக்கொண்டு திரும்பும்படி ஒரு சேனையை அனுப்பி

ளுன். அவர்கள் ஒரு இரவில் தீர்க்கதரிசி தங்கியிருந்த ஊரைச் சுற்றி வளைந்துகொண்டு விடிந்தவுடனே பிடிக்க ஆயத்தமாயிருந்தார்கள். எலிசாவின் வேலைக்காரன் தற்செயலாய் வெளியே போகையில் ஊரைச் சுற்றி பாளையம் போட்டிருந்த இராணுவங்களையும் குதிரைகளையும் இரதங்களையும் கண்டு, அவர்கள் வந்த காரணத்தை அறிந்து திகிலும் கலக்கமுமடைந்து ஓடி வந்து, 'ஐயோ! என் ஆண்டவனே! என்ன செய்வோம்?' என்று அலறினுன். முன்னே பொருளாசை மூண்ட கேயாசை வேலை கொண்ட எலிசா பின்னே அவிசுவாசமும் பயமும் மூண்ட வேலைக்காரனைக்கொண்டு காலங்கழிக்க நேரிட்டது. அதற்கு தீர்க்கதரிசி 'பயப்படாதே! அவர்களோடிருக்கிறவர்களைப் பார்க்கிலும் நம்மோடிருக்கிறவர்கள் அதிகம்' என்று தைரியப்படுத்திஞர். அவிசுவாசிகள் ஒன்றுமில்லாததை பெரிதாக எண்ணி மலைக்கிருர்கள்; விசுவாசிகள் தலைக்கு வரும் ஆபத்தைத் தலைப்பாகைகள்போல் எண்ணி மகிழுகிருர்கள். விசுவாசிக்கும் அவிசுவாசிக்கும் இருக்கும் பல வித்தியாசங்களில் இதுவும் ஒன்றென்று சொல்லவேண்டியது.

எலிசாவின் வாசகம் துவக்கத்தில் வேலைக்காரனுக்கு விபரீதமாய்க் காணப்பட்டிருக்கலாம். ஆனுல் கடைசி மட்டுக்கும் அப்படிக் காணப்படவில்லை. ஏனெனில் எலிசா தன் வேலைக்காரனுடைய கண்களைத் திறந்தார். இதோ! எலிசாவைச் சுற்றிலும் அக்கினி மயமான குதிரைகளாலும் இரதங்களாலும் அந்த மலை நிறைந்திருக்கிறதை அவன் கண்டான். அதுமுதல் எதிரிகளைப்பற்றிய பயம் அவனை விட்டு நின்றுபோனது மாத்திரமல்ல, தேவன் தமது தாசருக்குத் துணையாயிருக்கிருர் என்ற சத்தியமும் அவனுடைய மனதிற்பட்டது.

எலிசா தங்கியிருந்த ஊர் ஒரு மலையடிவாரத்திலிருந்தது. அன்று நடக்கும் சங்கதிகளையெல்லாம் அறிந்த தீர்க்கதரிசி ஊரிலுள்ள ஒரு வீட்டுக்குள் அல்ல, மலையிலுள்ள ஒரு குகையில் வாசம்பண்ணிஞர்போலிருக்கிறது. சேனை திரண்டு அவரைப் பிடிக்க வருகையில் எலிசா கர்த்தரை நோக்கி விண்ணப்பம் பண்ணி, 'இந்த ஜனங்களுக்குக் கண்

மயக்கம் உண்டாகும்படிச் செய்யும்' என்றூர். அப்படியே கர்த்தர் எலிசாவின் ஜெபத்தைக் கேட்டு கண் மயக்க முண்டாகும்படிச் செய்தார். ஒருவேளை எலிசாவுக்கு உதவி யாக தேவனுல் அனுப்பப்பட்டிருந்த அக்கினி இரதங்கள் குதிரைகள் ஆகிய இவைகளின் ஜொலிப்பால் அவர்கள் கண் மயங்கிப் போகும்படி தேவன் அவர்கள் கண்களைத் திறந்தா லும் திறந்திருக்கலாம். ஒருவனும் என் கண் சரியாயிருக் கிறது, நான் சகலத்தையும் காண்கிறேன் என்று சொல்லக் கூடாது. எலிசாவின் கண் அவர் வேலைக்காரனுக்கு இருக்கவுமில்லை, அவர் கண்டதை இவன் துவக்கத்தில் காணவுமில்லை; கண் திறக்கப்பட்டபோதோ எலிசா கண்ட தைத் தானும் கண்டான். தேவ ஞானங்களும், இரகசியங் களும் எல்லாருக்கும் விளங்காது. அவை எனக்குப் பூரண மாய்த் தெரியும், இதற்கு மிஞ்சி வேறென்றுமில்லை, என் கண் துலாம்பரமாயிருக்கிறது என்று பலர் சொல்லுகிறூர் கள். அச்சமயத்தில் 'கர்த்தாவே! இவன் பார்க்கும்படி இவனுடைய கண்களைத் திறந்தருளும்' என்று மன்றூட வேண்டியதே நமது கடமை.

எலிசாவைப் பிடிக்கவந்த சேனை அணிவகுத்து நடந்து போகும்போது நாமும் கூட இருந்தால் என்ன சொல்ல வேண்டியது? ஒரு மனுஷனை பிடிக்க இத்தனைபேரா? அப்படி இவர் பராக்கிரமவீரனு? பயங்கர இராட்சதனு? கோலுங்கையுமாய்க் காலங்கழித்து ஊருக்கூர் திரியும் சந் நியாசியைப் பிடிக்க சீரிய இராசா சேனையையும் அனுப்ப வேண்டுமா? காலால் நடந்துதிரியும் ஆளைப் பிடிக்க இரத வீரரும் குதிரைவீரரும் அவசியமா? என்றே சொல்லவேண் டியது. எலிசாவுக் குள்ளிருந்த தேவன் அவரை அவ்வளவு பராக்கிரமராகவும், கிட்ட அண்டவொட்டாத வீரனுகவும் மற்றவர்கள் கண்ணுக்குமுன் காட்டினுரேயன்றி, வேறல்ல. 'என்பக்கத்தில் ஆயிரம்பேரும் என் வலது பக்கத்தில் பதி ஞயிரம்பேரும் வந்தாலும் நான் பயப்படேன்' என்ற திடன் தீர்க்கதரிசிக்கு இருந்தது. தேவனை முன்னிட்டு தீர்க்க தரிசிக்கு இருந்த தைரியம் எதிரிகளுக்கு அதைரியத்தை உண்டாக்கிற்று.

ஐயோ! சேனையனைத்தும் கண்மயங்கி மேடு, பள்ளம், கல், காடு, பாதை, உளை, வழி, வரம்பு தெரியாமல் திரிகிற சமயத்தில் நாம் கிட்ட நின்றிருந்தால் எவ்வளவு வேடிக்கையாயிருக்கும்! ஓய்! இரதவீரரே! குதிரைவீரரே! என்ன, இப்படி நடுகாட்டில் தடவித் திரிகிறீர்கள்? உங்களுக்கு என்னதேவை? நீங்கள் வந்தகாரியமென்ன? எலிசாவைப் பிடிக்கவந்தோம், அவரைப் பிடிக்கத் தடவுகிறோம் என்று சொல்லுகிறீர்களோ? எலிசாவைப் பிடிக்கவா வந்தீர்கள்? எலிசா உங்களைப் பிடித்தால் போதாதா? நீங்கள் எலிசாவைப் பிடிக்கப்போகிறீர்களா? எலிசா உங்களைப் பிடிக்கப் போகிறாரா? என்று சீக்கிரம் அறிவீர்கள்.

சேனையனைத்தும் கண்மூடி கால் அயர்ந்து சங்கடப்பட்ட சமயத்தில் எலிசா தாமேவந்து இது வழியல்ல, இது பட்டணமுமல்ல, என்பிறகே வாருங்கள், நீங்கள் தேடுகிற மனுஷனிடத்தில் நான் உங்களை வழிநடத்துவேன் என்று சொல்லி, சமாரியாவிலிருந்த தன் அரசன் அரமனைக்கு அழைத்துக்கொண்டுபோனார். மக்கள் அனைவரும் ஆட்டுக்குட்டிகள்போல அவர் பிறகே சென்றார்கள். எலிசா சீரிய தேசத்து பட்டாளத்துக்கு சேனாதிபதியாகிவிட்டார்போல் தோன்றுகிறது; தம்மால் குணமாக்கப்பட்ட நாகமான் இதற்குள்ளாக மரித்துப்போனான் போலிருக்கிறது.

எலிசா அவர்கள் அனைவரையும் கோட்டைக்குள் கொண்டுவந்து ராஜாவிடம் சகல விபரமும் சொல்லி, 'கர்த்தாவே! இவர்கள் பார்க்கும்படி இவர்கள் கண்களைத் திறந்தருளும்' என்று ஜெபஞ்செய்தார். உடனே அவர்கள் கண்கள் திறக்கப்பட்டது. ஐயோ! சமாரியாவின் கோட்டைக்குள் கைதிகளாகிவிட்டோமே என்று அவர்கள் அங்கலாய்த்து என்ன சம்பவிக்குமோ என்று பயந்திருந்தார்கள். இஸ்ரவேல் அரசன், இவர்கள் அனைவரையும் கொன்றுபோடும்படி உத்தரவுகொடுக்கிறீரா? என்று தீர்க்கதரிசியை கேட்டான். அதற்குக் கூடாதென்று தடுத்து 'இவர்கள் புசித்துக்குடித்து இவர்கள் தங்கள் ஆண்டவனிடத்தில் போகும்படிக்குப் போசனம்கொடும்' என்று சொன்னார். அப்பொழுது அவர்களுக்குப் பெரிய விருந்துபண்ணி

அனுப்பிவிட்டான். இஸ்ரவேல் ராஜா பிடித்துக்கொடுத்த ஆளைபட்டயத்தால்வெட்ட வெகுவல்லவனுயிருக்கிறதோடே சத்துருவினிடத்தில் பழிவாங்கவேண்டுமென்கிற குண முடையவனுயிருக்கிருன் என்று பார்க்கிறோம். எலிசாவோ, தன் இரத்தம் குடிக்கவந்த சத்துருக்களைப் போஷித்து அனுப்பிவிடுகிற குணமுடையவராயிருக்கிருர். சத்துருக் களைச் சிநேகிப்பதும் அவர்களுக்காக உத்தம இருதயத் தோடு மன்ருடுவதும் பக்தரின் இலட்சணமாயிருக்கிறது. சீரியாவின் சேனை பிழைத்தோம், பிழைத்தோம் என்று தங்கள் அரசனிடம் சேர்ந்து, நடந்த வரலாறுகளையெல்லாம் அறிவித்தார்கள். சீரியரின் தண்டுகள் இஸ்ரவேல்தேசத் திலே அப்புறம் வரவில்லை; அவன் வெட்கப்பட்டுப்போனுன் போலிருக்கிறது. சத்துருக்களை உபசாரணைபண்ணி அனுப்பி விட்டதுதான் அவனைக் கீழ்ப்படுத்தின பீரங்கிகுண்டுக ளாய் மாறிற்று என்று சொல்லலாம். 'தீமையை நன்மையி ஞல் வெல்லுங்கள்' என்பதே இயேசு ரட்சகரின் திரு உப தேசமாயிருந்தது.

இச்சம்பவங்களுக்குப் பின் சிலகாலமாக சீரியா இராசா இஸ்ரவேல் ராஜ்யத்தின்மேல் தந்திரமாய்ப் படையெடுப் பதை நிறுத்திவிட்டபோதிலும், இனி வெளியரங்கமாய்ப் போகவேண்டுமென்று பின்பு தீர்மானம் பண்ணிக்கொண் டான். அந்தரங்கத்தைச் சொல்லிப்போட எலிசாவினுல் பலமுண்டு, வெளியரங்க யுத்தத்தைத்தடுக்க அவனுல் என்ன ஆகும் என்று எண்ணினுன்போலிருக்கிறது. எலிசாவைத் தீர்க்கதரிசி என்று கண்டு பயந்தபோதிலும் சேனுபதி யல்லவென்று கண்டு யுத்தத்துக்குப் புறப்பட்டுவந்தான். இஸ்ரவேல் ராஜா உள்ளபடி சீரியராஜாவை ஜெயிக்க சேனைப் பலமுள்ளவனுய் இராமையினுல் தன் கோட்டையை மூடி அடக்கமாயிருந்துகொண்டான். சமாரியாவின் கோட்டை அதிக உறுதியுள்ளதாயிருந்ததால் அதை நம்பி கோட்டைக்குள் இருந்துவிட்டான். சீரியராஜா தன்சேனை யோடுவந்து கோட்டையை முற்றுகை போட்டபடியால் சமாரியாவில் கொடிய பஞ்சமுண்டாயிற்று. ஒரு பெரிய யுத்தத்தாலுண்டாகிற சாவைப்பார்க்கிலும் இந்தப் பஞ்சத் தால் கடும்சாவு சம்பவித்தது. இவ்வளவுக்கும் காரணம்

இஸ்ரவேலரின் விக்கிரகாராதனைதான்! எத்தனை யுத்தங்கள் உண்டான போதிலும் எவ்வளவு பஞ்சம் நேரிட்டபோதி லும் அவர்கள் தங்கள் விக்கிரகாராதனையை விடாதிருந்தார் கள்.

சமாரியாவுக்குள் பஞ்சமும் வெளியே சீரியரின் பட்டய மும் நின்று, உங்கள் தேவனாகிய கர்த்தரிடத்துக்குத் திரும் புங்கள் என்று சகலரையும் ஏவிக்கொண்டிருந்தது. தேவன் தமது நீதியை வெளிப்படுத்தும் காலத்தில் யார்தான் சகிக் கக்கூடும்? அந்தப் பஞ்சகாலத்தில் தீட்டான வஸ்துக்கள் தெவிட்டும் தெள்ளமுதுபோலிருந்தன. ஒரு கழுதைத் தலை 80 வெள்ளிக்காசுக்கும், புறாக்களுக்குப் போடுகிற காற்படி பயறு[1] ஐந்து வெள்ளிக்காசுக்கும் விற்கப்பட்டன. பஞ்சம் இவ்வளவு கொடுமையாய் இருந்தகாலத்தில் அரசன் தன் கொத்தளத்தின் மேலேறி சேனைகளின் கிரமத்தையும், கோட்டை மதிலின் பந்தோபஸ்தையும், வில் இயந்திரங் களின் ஒழுங்கையும், மற்ற யுத்த முஸ்தீப்புகளையும் கண் காணித்துச் சுற்றிவரும்போது கோட்டைக்குள் மதிலோரம் தலைவிரிகோலமாய் நின்று வானத்துக்கு நேரே இருகரங் களையும் விரித்து, குரலை எழுப்பி அரசனை நோக்கி அபய மிடும் ஒரு ஸ்திரீயின் சத்தம் கேட்டது. அவள்,

'இராஜாவாகிய என் ஆண்டவனே இரட்சியும்' என்று கதறினாள். இது வயிற்றுக்கொடுமையால் கூவும் அபயமே யன்றி வேறல்லவென்று அரசன் உத்தேசித்து, ஐயோ! அலறி அழும் பெண்ணே! ஆண்டவன் உன்னை இரட்சிக்கா திருந்தால், அரசன் எதிலிருந்து எடுத்து உன்னை இரட்சிக் கலாம்? களஞ்சியத்திலிருந்தா, ஆலையிலிருந்தா? என்று சொல்லிவிட்டு, உன் அங்கலாய்ப்பென்ன? அதை எனக்குச் சொல் என்று கேட்டான். அப்போது அந்த ஸ்திரீ கண்ணீ

---

[1] புறாக்களுக்குப் போடுகிற பயறு என்பது மூலபாஷையில் ஒரு கருத்தைமாத்திரம் கொடுக்கிறதில்லை. சிலர் இது சாம்பல்நிறமான ஒரு பயற்றைத்தான் குறிக்கிறதென்கிறார்கள். வேறுசிலர் புறா எச்ச மென்பது கருத்து என்கிறார்கள். அந்தப் பஞ்சகாலத்தில் உப்புக்குப் பதிலாக புறா எச்சத்தை வாங்கிப் பிரயோகித்ததாக யோசேப்புஸ் எழுதி யிருக்கிறார்.

ரோடு வேறொரு பெண்பிள்ளையைக் கைப்பிடியாய்ப் பிடித்துக்கொண்டு சொல்வாள்:—மகா இராஜாவே கேளும் ஐயா! ‘இந்த ஸ்திரீ என்னைநோக்கி உன் மகனைத்தா, அவனை இன்று ஆக்கித்தின்போம், நாளைக்கு என் மகனை தின்னலாம் என்றாள்; அப்படியே என்மகனை முதல்நாளிலே ஆக்கித்தின்றோம், மறுநாளிலே நான் இவளை நோக்கி நாம் உன் மகனைத் தின்ன அவனைத்தா என்றேன், அவள் தன் மகனை ஒளித்துவிட்டாள்’ என்று சொன்னாள். இப்படிப் பட்ட பிரியாதை நாம் நமது ஜீவகாலத்தில் நடந்ததாக கேட்டிருக்கமாட்டோம்.

அந்த ஸ்திரீயின் வரலாறைக் கேட்டவுடனே அரசன் துக்கத்தால் தன் வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டு, இரட்டுடுத்தி இனி என்னசெய்யலாமென்று ஆலோசிக்கையில், இவ்வளவு இடுக்கமிருக்கிறதென்று எலிசா அறிந்தும், ஏன் அவன் இன்னும் வேண்டுதல் பண்ணி பஞ்சத்தை நிவிர்த்திபண்ணவில்லை யென்று உத்தேசித்து அவர் தலையை வாங்கிப்போடும்படி ஆளை அனுப்பினான். ஏசபேல் பெற்று ஆகாப் தாராட்டின மகனுக்கு இதைவிட வேறு புத்தி எங்கேயிருந்துவரும்? அவன் பஞ்சத்தின் கொடுமையைக் கவனித்தானேதவிர தன் ஜனத்தின் பாவத்தின் கொடுமையைப் பற்றிச் சிந்திக்கவே இல்லை.

எலிசாவைத் தலைவாங்கும்படி அரசன் அனுப்பின ஆள் வரும்போது அவருடன் பல பெரிய பிரபுக்கள் பேசிக்கொண்டிருந்தார்கள், ஒருவேளை ஞானோபதேசம் கற்றுக்கொண்டிருக்கலாம், அல்லது யுத்தத்துக்குப் போகலாமா, போகக்கூடாதா? என்று ஆலோசித்திருக்கலாம். அரசனுடைய ஆள் வருகிறதற்கு முன்னே தீர்க்கதரிசி தம்முடனிருந்தவர்களை நோக்கி, என் தலையை வாங்க அரசனுடைய ஆள் வருகிறது; நீங்கள் அவனை உள்ளே வரவிடாமல் கதவைப் பூட்டிப்போடுங்கள் என்று சொன்னார். உடனே கதவைப் பூட்டினார்கள். அந்த ஆளும் வந்து கதவைத் தட்டினான், தீர்க்கதரிசி நாளை இந்நேரத்தில் பஞ்சம் ஓயும், மலிவு உண்டாகும் என்று சொல்லியனுப்பினார். அப்படியே மறுநாளைக்குள்ளாக சீரியருடைய சேனைக்குள் தேவன்

ஒரு பயங்கரத்தையுண்டாக்கினபடியால் அவர்கள் தங்கள் சத்துருக்களால் முறியடிக்கப்பட்டோமென்று பயந்து சகல வஸ்துக்களையும் போட்டுவிட்டு ஓரோர் திசைக்கு ஓடிவிட்டார்கள். அந்த சமாச்சாரம் பட்டணத்தில் அறிவிக்கப்பட்டபோது சகலரும்போய் அந்தக் கொள்ளைப்பொருளைப் பங்கிட்டார்கள்; அதோடு தேசமும் மலிந்தது. எலிசாவைக் கனமாய் எண்ணி அவருக்கு பயந்திருந்த மனுஷன் திடீரென்று அவரைக் கொலைசெய்ய ஆளனுப்பினது ஆச்சரியமாயிருக்கிறது. ஒருவேளை அவனுடைய அக்கிரமத்தினாலும், அவன் ஜனத்தின் மீறுதலினாலும் இந்தப் பஞ்சம் உண்டாகுமென்று தீர்க்கதரிசி துவக்கத்தில் எச்சரித்திருக்கலாமென்று தோன்றுகிறது. ஒரு பாவி குணப்படும்படியாக தேவன் தண்டனைகளை அனுப்பும்போது அவன் தன் பாவங்களை ஒழித்துத் தன்னை தேவனுக்கு முன்பாகத் தாழ்த்திக்கொள்ளவேண்டுமென்று எவ்வளவும் சிந்தியாமல் தேவனை அதிகமதிகமாய் அவதூறுசெய்யும்படித் துணிகிறார்கள். எலிசா தனக்கு விரோதமாய் செய்யப்பட்ட அரசனுடைய தீர்மானத்தையும், தன்னைக் கொல்லும்படி ஆள் வந்ததையும் அறிந்திருந்தும், ஒருபயமும் இல்லாமல் உட்கார்ந்திருந்தது எவ்வளவு அதிசயமாயிருக்கிறது. விசுவாசத்துக்கு மிஞ்சின பெலனும், தேவ பராமரிப்புக்கு மிஞ்சின கோட்டையும் இல்லையென்று சொல்லவேண்டியது. 'உம்மை உறுதியாய்ப்பற்றிக்கொண்ட மனதையுடையவன் உம்மையே நம்பியிருக்கிறபடியால், நீர் அவனைப் பூரணசமாதானத்துடன் காத்துக்கொள்வீர்' என்று ஒருபக்தன் சொல்லிய வாசகம் உண்மைதான் (ஏசா. 26:3).

பஞ்சம் நீங்கினதுமுதல் தீர்க்கதரிசியைப்பற்றி அரசனுக்கு அதிக அச்சம் இருந்ததென்று தோன்றுகிறது. அவன் ஏதோ முகாந்தரத்தால் எலிசாவின் அற்புதங்கள் அனைத்தையும் ஆதியோடந்தமாய் அறியவேண்டுமென்று கருதி, துவக்கத்தில் அவருக்குப் பணிவிடைசெய்துவந்து பின்பு சாபத்தால் குஷ்டரோகியான கேயாசியை வரவழைத்து அவரைப்பற்றிய பூர்வ வரலாறுகளையெல்லாம் ஒருநாள் கேட்டான். அதேசமயத்தில் ஒரு ஸ்திரீ வந்து தான் எலிசா தீர்க்கதரிசியின் போதனைப்படி பஞ்சத்துக்குத்

தப்பிக்கொள்ள பெலிஸ்தியர் தேசம்போய்த் திரும்பினதாயும் அதற்குள்ளாக ஊரார் அவளுடைய வீட்டையும் நிலங்களை யும் அபகரித்துக்கொண்டு கொடுக்கமாட்டோமென்று குதர்க்கம் செய்கிறதாகவும் முறையிட்டாள். அச்சமயத்தில் தீர்க்க தரிசியின் பூர்வோத்தரத்தைச் சொல்லிக்கொண்டிருந்த கேயாசி அரசனை நோக்கி, இவள்தான் செத்துப்போய் தீர்க்க தரிசியால் உயிரோடெழுப்பப்பட்ட பிள்ளையின் தாய் என்று ரூபித்தான். அப்பொழுது ராஜா அவளுடைய வழக்கைத் தீர்த்து, அவளுடைய சொத்துக்களையும் அதின் வரும்படி களையும் கொடுத்துவிடும்படி ஒரு பிரதானிக்குக் கட்டளை யிட்டான். தேவனுடைய உத்தம பணிவிடைக்காரருக்கு உதவி செய்கிறவர்கள் தங்கள் பலனை இழந்துபோகமாட்டார் கள். அவர்களைப்பற்றிய ஒரு ஞாபக புஸ்தகம் தேவ சமுகத்திலிருக்கிறது.

அந்தியகாலப் பருவம்

எலிசா தீர்க்கதரிசியின் ஊழியம் இஸ்ரவேல் ராஜ்யத்துக் குள் மாத்திரம் அடங்கியிருக்கவில்லை. அவர் ஏதோ ஓர் விஷயமாய் தமஸ்குவுக்குப் பயணப்பட்டுப்போனார். தம்மைக் கொல்லப் பிரயத்தனப்பட்ட தமஸ்குவுக்குத் தாமே போகி றது அதிசயமல்லவா? தேவகட்டளையின்படி போனதால் பயமும் நடுக்கமும் அவரை ஆண்டுகொள்ளவில்லை. தேவ கிருபை ஒருவனைச் சூழ்ந்துகொள்ளும்போது சத்துருக்கள் சிநேகிதராயும், பகை பாசமாயும் மாறிப்போகுமல்லவா! சில நாட்களுக்குமுன் தீர்க்கதரிசியைப் பிடிக்கும்படி சேனை யனுப்பின அரசனே இப்போது சிநேகங்காட்டி அவரைக் கனப்படுத்தி தனக்குண்டாயிருந்த நோயிலிருந்து விடுதலை யாவேனோ, சாவேனோ என்பதையறிய எலிசாவினிடத்தில் தன் சேனாபதி மூலமாய் விண்ணப்பஞ்செய்தான். சீரியா ராஜா இதை உத்தம இருதயத்தோடும் குணப்படுத்தலை யுடைய மனதோடும் கேட்டிருந்தால் நன்மையாயிருக்கும். படுசண்டாளரான பாவிகள் தங்களுக்குச் சுகமும் வாழ்வு முள்ள காலங்களில் இரட்சிப்பைப்பற்றி எவ்வளவும் கவலைப் படாமல் நோயும் நொடியுமடைந்து பாயும் படுக்கையுமாய்க் கிடக்கையில் கவலைப்பட்டு கோயிலைப்பற்றியும், குருவைப்

பற்றியும், ஜெபதபங்களைப்பற்றியும் விசாரிக்கிறதுண்டு சுகமுள்ளகாலத்தில் பகைத்துப் பழிக்கப்பட்ட குருக்கள் சுகவீனப்பட்டவுடனே நேசித்துப் புகழப்படுகிறதுண்டு; ஆனால் உத்தம பக்தனோ இப்படியிராமல் நன்மையிலும் தீமையிலும், வாழ்விலும் தாழ்விலும், வியாதியிலும் சொஸ்தத்திலும் தேவனைத் தேடி அவருடைய கிருபை வரங்களை நாடிக்கொண்டிருப்பான்.

இராசாவின் நோய்க்காக அநுதாபப்பட்டு தீர்க்கதரிசியோடே பேசின தளகர்த்தனுக்கு ஆசகேல் என்று பேர். தீர்க்கதரிசி இந்த நோயிலிருந்து அரசன் பிழைத்துக்கொள்ளக்கூடியதாயினும் வேறொரு காரணத்தையிட்டு ஏறின கட்டிலிலிருந்து இறங்கமாட்டான் என்று மொழிந்தார். அந்த துக்க செய்தியை எலிசா சொன்னவுடன் ஆசகேலைக் கீழும் மேலுமாகப் பார்த்து மாலைமாலையாய்க் கண்ணீர் சொரிந்தார். அப்பொழுது ஆசகேல், முனிவரே! நீர் அங்கலாய்த்துப் பொங்கியழுவதின் அந்தரங்கத்தை அடியேனுக்கு அறிவிக்கவேண்டுமென்று கேட்டான். அதற்கு முனிவர் சொல்வார்: நீ இஸ்ரவேல் ஜாதியாருக்குச் செய்யப்போகிற தீங்கை நான் அறிந்திருக்கிறபடியால் அழுகிறேன்; நீ அவர்கள் கோட்டைகளைக் கொளுத்தப்போகிறாய், அவர்கள் வாலிபரைக் கொல்லப்போகிறாய், அவர்கள் பாலகரை மோதியடிக்கப்போகிறாய், அவர்கள் கர்ப்பங்களைக் கீறப்போகிறாய் என்று சொல்லி விம்மி விம்மி அழுதார். உத்தமர் மற்றவர்கள் செய்யும் பொல்லாப்பை உணர்ந்து கனதுக்கமடைவார்கள். அப்பொழுது அவன் இவ்வளவு பெரிய காரியத்தைச் செய்யும்படி நாயாகிய நான் எம்மாத்திரம் என்றான். அதற்கு எலிசா, நீ சீரியாவின்மேல் இராசாயாவாய் என்று கர்த்தர் எனக்குத் தெரிவித்தார் என்று சொல்லி அவனை அனுப்பிவிட்டார். இவ்வளவும் கேட்டது ஆசகேலை ஆனந்தங்கொள்ளப் பண்ணிற்று. அவன் தன் அரசனை நோக்கி, நீர் சாவதில்லையென்று தீர்க்கதரிசி சொன்னதாக சொல்லிவிட்டு, அவன் கிரீடத்தைக் கூடியசீக்கிரம் தன் சிரசில் மாற்றிக்கொள்ளும்படி அரசன் தூங்கும்போது ஒருஜமுக்காளத்தையெடுத்து தண்ணீரிலே தோய்த்து அவன் முகத்திலே விரித்தான்; அதினால் சிலநாள் பொறுத்துப்போகும் ஜீவன் சீக்கி

ரம் போய்விட்டது. உடனே ஆசகேல் கிரீடாதிபதியாகி, தீர்க்கதரிசி சொன்ன அழிம்புகளையெல்லாம் செய்தான். மனு மக்களின் நெஞ்சம் எவ்வளவு திருக்குள்ளது என்று இதினால் விளங்குகிறது. 'தன்னை நிற்கிறேன் என்று எண்ணுகிறவன் விழாதபடி பார்க்கக்கடவன்.'

அப்பால் தேவன் எலிசாவின் மூலமாய் இஸ்ரவேல் ராஜ்யத்தின் இராசாங்கத்தை மாற்றும்படி சித்தங்கொண்டு யோராமுக்கு பதிலாக ஏகூவை அபிஷேகம் பண்ணுவித்தார். இந்தப் பட்டாபிஷேகத்துக்குப்பின் வெகுகாலமாய் எலிசாவின் வரலாறுகள் இன்னதென்று சரித்திரங்களால் அறிய ஏதுவில்லை. ஒருவேளை ஏகூவும் அவனுக்குப்பின் வந்த அரசரும் எலிசாவை சட்டை பண்ணவில்லையாக்கும்; அரசருடைய மதிப்புக்கு எலிசா எதிர்பார்க்கவுமில்லை; எப்படியும் அக்காலங்களில் அவர் தேவ வேலைகளை ஊக்கமாய் நடப்பித்து, கடவுளை மகிமைப்படுத்தி வந்தாரென்பதற்குச் சந்தேகமில்லை.

கடைசியாக எலிசா சகல மனிதரும் கடந்துபோகும் மரண யோர்தானைக் கடக்கவேண்டிய காலம் வந்தது. அவர் உழவைவிட்டு எலியாவைப் பின்தொடர்ந்ததுமுதல் சுமார் அறுபதுவருஷகாலம் தேவ ஊழியத்தைச் செய்தார். இந்த நெடுங்கால வேலை எக்காலத்திலும் ஒரே சீராய் ஊக்கத்தோடும், பலத்தோடும் செய்யப்பட்டுவந்தது. அவருடைய கடைசி முடிவு எலியாவின் முடிவுபோல் அக்கினி ரதமேறி ஆகாயம் போகும் முடிவாயிராமற்போனாலும் தேவனுடைய உத்தம பக்தரைப்போலவே இருந்தது. இஸ்ரவேலின் ராஜாவாகிய யோவாஸ் அவரை மரணப்படுக்கையில் அடிக்கடி பார்த்து, அவர் பிழைப்பது அசாத்தியம் என்று கண்டபோது அழுது, என் தகப்பனே! என் தகப்பனே! இஸ்ரவேலருக்கு ரதமும் குதிரைவீரருமாய் இருந்தவரே! என்று புலம்பினான். இவன் துவக்கத்தில் அவருடைய ஆலோசனையை அசட்டை செய்திருந்து பின்பு அவராலுண்டான வாழ்வுகளை உணர்ந்தான்போலிருக்கிறது. இது மனுஷ சுபாவத்தின் இயல்புதான். ஒரு குரு உயிரோடிருக்கும்போது அவருடைய உபதேசத்தையும் கடிந்துகொள்ளுதலை

யும் அசட்டை செய்தவர்கள் அவர் சாகப்போகிருர் என்று கேள்விப்பட்டவுடன் அவருடைய அருமையைப்பற்றி புகழ்ந்து பேசலாம்.

அரசன் தீர்க்கதரிசியின் மரணநேரத்தில் செய்த உதவிக்கும் தகுந்த லாபம் கிடைத்தது. எப்படியெனில், அவன் சீரியரை முறியடித்து இஸ்ரவேலரை விடுதலைசெய்வதாக வரம் கொடுத்து, சில அடையாளங்களினுல் அதை அவன் மனதில் நிச்சயப்படுத்தினுர். பக்தராய் ஜீவித்து மரணப் படுக்கையிலிருப்பவர்களைப் பார்க்கப்போகிறது மெத்த நல்லது. அவர்கள் நம்மைவிட்டுப் பிரிந்துபோகிறது ஒரு பெரிய நஷ்டமானபோதிலும் அவர்களால் கிடைக்கும் ஆசீர்வாதம் நமக்கு லாபமாகும்.

கடைசியாக அறுபது வருஷம் தீர்க்கதரிசனம் கூறி, அநேக அற்புதங்களை நடப்பித்து, அநேகரை நீதிமார்க்கத்தில் நடத்தி வந்த எலிசா சகல மனுஷரையும்போல மாண்டு மண்ணறை சேர்ந்தார். அவர் மாண்டு அவருடைய தேகம் மண்ணுக்கு மண்ணுய் உருவழிந்தபோதிலும் அவருடைய அம்சங்கள் அற்புத வல்லமை பொருந்தினதாயிருந்தன. எலிசா அடக்கம்பண்ணப்பட்ட மறுவருஷத்திலே அதே இடத்தில் இனந்தெரியாமல் வேருெரு பிணத்தைக் கொண்டு போய் அடக்கம்பண்ணினுர்கள். அந்தப் பிரேதம் எலிசாவின் எலும்புகளில் பட்டபோது அந்த மனுஷன் உயிரடைந்து தன் கால்களை ஊன்றி எழுந்திருந்தான். இந்த அற்புதம் மாண்டுபோன எலிசாவின் போதனைகளை ஜனங்கள் மதித்து நடக்கும்படி ஏவும் காரணம்போலிருக்கிறது.

நமக்கோ, எலிசாவிலும் மேன்மையுள்ள ஒருவருடைய திரு உபதேசங்களிருக்கின்றன. அவர் மரித்தும் என்றென்றைக்கும் பிழைத்திருக்கிருர்; அவர் தமது மரணத்தால் மரணத்துக்கு அதிகாரியை வென்று, ஜீவனையும் அழியாமையையும் சுவிசேஷத்தினுல் நிலைப்படுத்தியிருக்கிருர். அவருக்கு இன்றும் என்றும் என்றென்றும் ஸ்துதியுண்டாவதாக. ஆமென்.

நாகமான்

ஒரு குஷ்டரோகி குணமான வரலாறு

நாகமானுடைய வரலாறு ஒரு விஷயத்தில் விசேஷமானது. ஏனெனில் இவன் யூதஜாதியானுயாவது ஆபிரகாமின் சந்ததியானுயாவது இராமல், சீரியதேசத்திலுள்ள ஒரு அஞ்ஞானியாயிருந்தான். அவன் மெய்த்தேவனை அறிந்த வரலாறும், அவரைத் தேடிவந்து விசுவாசித்து சேவித்த வரலாறும் மனதுக்கு இன்பமானதென்று இதை வாசிக்கிற எவரும் தெளிவாய் அறிந்துகொள்ளுவார்கள்.

சீரியா தேசத்தில் நாகமான் என்று பேருடைய ஒரு குஷ்டரோகியிருந்தான். அவன் தன் இராணுவ பராக்கிரமத்தால் பேர் வாங்கி உயர்ந்த அந்தஸ்தும் பெரிய சேனுபதி பட்டமும் பெற்றிருந்தான். அவனுல் சீரிய இராச்சியத்துக்கு மேன்மையுண்டாயிருந்தது. அவன் சென்ற இடமெல்லாம் ஜெயம் ஜெயம் என்றே செய்திவரும்; மகா பேரெடுப்புள்ளவனுயிருந்த அவனே குஷ்டரோகியாயிருந்தான். புறஜாதியார் தேவ கட்டளையின்படி குஷ்டரோகிகளைத் தங்கள் மத்தியில் குடியிராதபடி விலக்கினுலும் மற்ற ஜாதியார் அப்படிச் செய்ததில்லை. மேலும் நாகமான் சிறு வயதுமுதல் குஷ்டரோகியாயிராமல் சேனுபதியான பிறகு குஷ்டரோகியாகியிருக்கலாம்.

சீரியருக்கும் இஸ்ரவேலருக்கும் யுத்தமுண்டானதில் சீரியர் இஸ்ரவேலருடைய ஒரு சிறு பெண்ணை சிறைபிடித்துக் கொண்டுவந்தார்கள். இஸ்ரவேல் பெண்கள் பெரும்பாலும் அழகுள்ளவர்களாயிருந்தார்கள். மேலும் நாம் பேசப்போகிற பெண் தன் புத்தியிலும், விவேகத்திலும், அன்பிலும், தாழ்மையிலும் சிறந்து விளங்கினதால் அவளை சேனுபதி அடிமைபோல் நடத்தாமல் தன்வசம் இருக்கும்படி தெரிந்து

கொண்டான். ஆகவே அந்தச் சிறுபெண் குஷ்டரோகியாகிய நாகமானின் மனைவிக்குப் பணிவிடை செய்துகொண்டுவந்தாள். அந்தப் பெண்ணுக்கு தன் நாச்சியாரின் கனமும், கீர்த்தியும், தான் அவள் முன்னின்று மந்திரித்தனம் பண்ணுவதும் சந்தோஷமாயிருந்தாலும், தன்னுடைய ஆண்டவனுகிய சேனுபதி குஷ்டரோகத்தால் அவதிப்படுவதும், அதற்கென்று பல பரிகாரங்கள் செய்துவருவதும் பரிதாபமாயிருந்தது. ஒருவேளை தன் எஜமானுடைய நோயினிமித்தம் ஜனங்கள் பழித்துப் பேசுவதையும் அவள் காது கேட்டிருக்கலாம். அவர் சுகமாகிப் போகவேண்டுமென்பதே அவள் நோக்கமாயிருந்தது.

அவள் வெகுநாளாய் எலிசா தீர்க்கதரிசியைப்பற்றியும், அவருடைய அற்புத வரங்களைப்பற்றியும் சொல்லி தன் எஜமானை அவரிடம் போகச்செய்யவேண்டுமென்று கருதியிருப்பாள் என்பதற்கு ஐயமில்லை. ஒருநாள் தன் நாச்சியார் சாங்கோபாங்கமாய் சாய்ந்து, சல்லாபம்கொண்டிருக்கையில் இந்தப் பெண் சொல்வாள்:—'என் ஆண்டவன் சமாரியாவிலிருக்கிற தீர்க்கதரிசியினிடம் போவாரானுல் நலமாயிருக்கும்; அவர் இவருடைய குஷ்டரோகத்தை நீக்கிவிடுவார்' என்று சொன்னுள். இந்த வாசகத்தை நாகமானின் மனைவி பழிப்பாயாவது விளையாட்டுப்புத்தியாயாவது எடுத்துக் கொள்ளவில்லை. அந்தப் பெண் சொன்ன ஜாடையும், அவளுடைய குரலோசையும், வணக்கமும், பக்திவிநயமும் எல்லாம் கூடி இந்தப் பெண் சொல்வதில் நமக்கு மெய்யாகவே நல்ல வாழ்வு இருக்கிறதென்று நினைத்துக்கொண்டாள். இக்காலத்தில் இப்படிப்பட்ட வேலைக்காரரையுடைய எசமானும் எசமாட்டியும் பாக்கியமுள்ளவர்களென்கலாம். அவர்களெல்லாரும் தங்கள் எஜமான்களைத் திருடவும் அவர்கள் பேரைக் கெடுக்கவும் தலைப்படுகிறுர்கள். இப்படிப்பட்ட குணம் உண்மையுள்ள வேலைக்காரரின் இலட்சணமல்ல. மேலும் இந்தப் பெண் தான் சொன்ன காரியத்தை ஒரு ஆலோசனையாக அல்லது அபிப்பிராயமாகச் சொல்லாமல், தீர்க்கதரிசி 'இவருடைய குஷ்டரோகத்தை நீக்கிவிடுவார்' என்று தீர்மானமாகச் சொன்னுள்.

நாகமானுடைய மனைவி இந்தப் பெண் சொன்ன சமாச்சாரத்தைத் தன்னுடைய புருஷனிடம் சொன்னாள். இது ராஜாமட்டும் எட்டிற்று. உடனே அரசனும் அகமகிழ்ந்து தான் இஸ்ரவேல் ராஜாவுக்கு கடிதமும் கொடுத்தான். நாகமான் கடிதமும் கையுமாய் இஸ்ரவேல் ராஜாவிடம் வந்தான். அவன் அக்கடிதத்தைப் படித்துப் பார்த்து தப்பாக நினைத்து, இது சண்டைக்குக் கூப்பிடுகிற முறையேயன்றி வேறல்லவென்று சொல்லி தன் வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டான். சீரியா ராஜன், நமது கடிதத்தை இஸ்ரவேல் ராஜன் கண்டால் தான் தீர்க்கதரிசியிடம் நலமாகப் பேசி, நல்ல மருந்துகளைக் கொடுத்து, குடியிருக்க வசதியும் பண்ணி, சுகமாய் அனுப்புவிப்பான் என்று நினைத்தானேயன்றி வேறல்ல.

நாகமான் வந்ததும், கடிதம் கொடுத்ததும், அரசன் வஸ்திரம் கிழித்து சஞ்சலப்படுவதுமான சகல செய்தியும் எலிசாவுக்குத் தெரியவந்தது. உடனே அவர் ஒரு ஆளை அரசனிடம் அனுப்பி, அரசனைத் தைரியப்படுத்தி, ‘அவன் என்னிடத்திலே வந்து இஸ்ரவேலிலே தீர்க்கதரிசி உண்டென்பதை அறிந்துகொள்ளட்டும்’ என்று சொல்லியனுப்பினார். இச்சமாச்சாரம் அரசனுடைய கவலையை மாற்றிவிட்டது. உடனே அரசன் நாகமானை எலிசா தீர்க்கனிடம் அனுப்பினான். அப்படியே நாகமான் தன் குதிரைகளோடும் இரதங்களோடும் வந்து எலிசாவின் வாசற்படியில் நின்றான். தீர்க்கதரிசி நாகமானைத் தன் வீட்டிற்குள் வரும்படி அழைக்கவில்லை. அவன் சீரியாவுக்குப் படைத்தலைவனும் பெரிய மனுஷனுமாயிருந்தும் இஸ்ரவேலுக்குக் குஷ்டரோகிதானே. சீரியாவின் முதல் மனுஷன் இஸ்ரவேலின் கடைசி மனுஷன்தான். குணப்படாத ஐசுவரியமுள்ள பாவி குணப்பட்ட ஏழையிலும் தாழ்வு என்பதை யார் ஆட்சேபிக்கக்கூடும்? இரத்தாம்பரம் உடுத்து அநுதினமும் சம்பிரமமாய் வாழ்ந்த ஐசுவரியவான், நாயோடு நாயாய் குப்பைமேட்டில் தங்கின பக்தனாகிய லாசருவுக்குச் சமானமா? எலிசாவாகிலும் வெளியேவந்து, சேனாபதியே வாரும் என்று மங்களம் கூறினதுண்டா? அதுவுமில்லை. அவன் பட்டு வஸ்திரங்களோடும், பாதம்பணியும் ஆட்களோடும்,

சரிகைப் படுதாக்களோடும், இரதவாகனத்தோடும் வந்த போதிலும், சில காலங்களுக்குமுன் சீரியர் சிந்தின இஸ்ரவேலரின் இரத்தக்குறிகளை அவன் மேனியில் தீர்க்கதரிசி கண்டாராக்கும்; ஒருவேளை மெய்யான தாழ்மையை அவனிடத்தில் பார்க்கும்படி இப்படிச் செய்தாராக்கும். குணப்பட விரும்பும் நோயாளிக்கு மனத்தாழ்மை மிகவும் அவசியம் என்பதை இதன்மூலமாய் உலகத்துக்கு வெளிப்படுத்துவது போலிருக்கிறது. நாகமான் சிலநேரம் தன் வீட்டு வாசற்படியில் காத்து நின்றபிறகு, தன் வேலைக்காரன்மூலமாய் அந்தப் பிரபுவுக்கு செய்தி சொல்லியனுப்பினார். அச்சமயத்தில் நாகமான், தீர்க்கதரிசி என்ற பேரெல்லாம் இவ்வளவுக்குள்தானா இருக்கிறது? என் தேசத்து நீசனிடம் இருக்கும் உபசரணை தீர்க்கதரிசியினிடத்தில் காணோமேயென்று நினைத்திருக்கலாம். ஒருவேளை எலிசாவைவிட அவன் வேலைக்காரனாகிய கேயாசியை நல்லவனென்று மதித்திருக்கலாம்.

தீர்க்கதரிசியினிடத்திலிருந்து வந்த மனுஷன் நாகமானைப்பார்த்து, 'நீ போய் யோர்தானில் ஏழுதரம் ஸ்நானஞ்செய். அப்பொழுது உன் மாமிசம் மாறி நீ சுத்தமாவாய்' என்று தீர்க்கதரிசி கட்டளையிடுகிறார் என்று சொன்னான். இப்படிச் சொன்னதைக் கேட்டவுடனே நாகமானுக்குண்டான கோபத்தை என்னசொல்ல! ஐயோ! ஏழை மனுஷன் தனக்குப் பரியாசமும் நிந்தையும் சுமத்தப்பட்டதேயன்றி வேறல்ல என்று தப்பாக நினைத்துக் கடுங்கோபப்பட்டு தீர்க்கதரிசிகள் வீட்டைக் கடந்து அப்பாலே வந்துவிட்டான். தீர்க்கதரிசியின் மனுஷரைப் பரியாசம் பண்ணுகிறமாதிரி இப்படித்தானாக்குமென்று நினைத்துக்கொண்டான் போலிருக்கிறது. தீர்க்கதரிசி பரியாசம்செய்ய நோக்கமாயல்ல, தேவ வல்லமையின் செயல்களைத் தியானிக்கும்படி அவன் தன்னிடத்திலிருந்த சுயபெருமையின் உடையைக் களைந்துவிடும்படியாகவே இப்படிச் செய்தாரென்று சொல்லவேண்டியது. இரக்கம்பெறவேண்டுமென்று கருத்தாக கருதுகிறவன் தன்னைப்பற்றிய பெருநினைவிலிருந்து சுத்திகரிக்கப்படவேண்டியது அவசியந்தான். அவன் எத்திசைக்கும் திரும்பும் இளக்கநெஞ்சடையுமட்டும் கிருபை கிடைப்பது

கூடாதுதான். பாவ குஷ்டரோகத்திலிருந்து குணமடையும்படி விரும்பும் ஆத்துமாக்களை சுயபெருமையிலிருந்து முந்தி மீட்டுக்கொள்ளாத பட்சத்தில் இரட்சண்ய கிருபையைப்பற்றி ஒருமதிப்புமிராது.

எலிசா நாகமானுடைய குஷ்டரோகத்துக்குச் சொன்ன மருந்து வேடிக்கையாயிருக்கிறது.

> ஏழுதரம் யோர்தானில் ஸ்நானம்பண்ணு,
> உன் மாம்சம் மாறும்; சுத்தமாவாய்

என்பதே அந்த மருந்தாயிருந்தது. சாதாரணமாய் இவைகளை வாசிக்கிற எவனும் இதைவிட முதல்தரமான பரியாசம் கிடையாது என்றுதான் சொல்லுவான். போய் ஸ்நானம் பண்ணு என்கிறார். ஐயோ! ஜலம் என்னசெய்யும்! காகம் பாலில் ஸ்நானம்பண்ணி கொக்காகிறதும் கூடாது, மனுஷன் ஜலத்தில் ஸ்நானம்பண்ணி புண்ணியவானாகிறதுமில்லை. ஜலம் அழுக்கைக் கழுவுவது நிஜமானாலும் குஷ்டரோகத்தைத் தீர்க்குமா? மேலும் யோர்தானில் ஸ்நானம்பண்ண வேண்டியதென்ன? மற்ற ஜலத்திலும் அது எந்தவகையில் விசேஷம் பெற்றது? அதில் ஏழுதரம் ஸ்நானஞ்செய்ய வேண்டுமாம்; ஆறுதரமும் உதவாது, எட்டுதரமும் உதவாது, ஏழுதரம் ஸ்நானம் செய்யவேண்டியது. அந்த ஏழு என்கிற தொகைக்குள் ஏதோ வல்லமையிருக்கிறதோ? இதெல்லாம் நாகமானை அவமானப்படுத்தும் வாயின் பட்டயம்போல் அவன் எண்ணினான். நாம் நாடுநகரம் விட்டு வீடு வாசல் ஒழித்துவந்ததும் போதாதென்று பரியாசமும் கூடவா? நான் கடந்துவந்த பயணத்துக்கும் கொண்டுவந்த கடிதத்துக்கும் கிடைத்த லாபம் இதுதானா? தீர்க்கதரிசிக்குப் பரியாசம்பண்ண என்னைவிட ஆள் இல்லாமலாபோயிற்று? அவன் அவ்வளவு பெரிய மனுஷனா? வீட்டைவிட்டு வெளியேவந்து என்னைப் பார்க்கக்கூடாதா? அவன் மெய்யாகவே என்னை குணமாக்கவேண்டுமென்கிற மனமுடையவனாயிருந்தால் என் உடலைத்தொட்டு, மந்திரங்களோதி ஜெபம்பண்ணி, நல்லவார்த்தை சொல்லக்கூடாதா? ஐயோ! என் நோய் என்னைப் புறக்கணிக்கிறதற்குக் காரணமாயிற்று? ஜலஸ்நானம் எனக்கு சுகம்கொடுக்கிறது மெய்

யானால் என் தேசத்தில் இல்லாத ஜலமா இத்தேசத்தி லுண்டு? எத்தனையோ தீர்த்தங்களில் முழுகி நோய்தீராமல் அவதிப்படுகிறேன். தமஸ்குவிலிருக்கிற அப்னு, பார்பார் என்னும் நதிகளுக்கு இணையான நதிகள் இஸ்ரவேல் நாட்டில் உண்டோ? என்றிப்படியெல்லாம் நினைத்து மனம் நொந்தான். கிருபையின் யத்தனங்களை உலக இயல்போடு சமரசப்படுத்தி தியானிக்கிறது மனுஷரின் இயல்பாய்ப் போயிற்று. இது மனுமக்களுக்குண்டான ஆத்துமாவின் பைத்தியம் என்று சொல்லலாம். தேவனால் ஏற்படுத்தப் பட்ட கிருபையின் யத்தனங்களில் ஒரு பிரயோஜனமு மில்லையென்று உணருவது ஆத்துமாவின் பெருமையென்று சொல்லவேண்டியது. சரீர குஷ்டரோகம் பிடித்திருந்த நாகமானுக்கு இந்த இரண்டு ஆத்துமநோயும் இருந்தது. தேவ செயல்களையும் இரட்சண்ய வழிகளையும் உலக ஞானத் தின்படி திருப்பிக்கொண்டுபோகிறதற்கு இதைவிட நல்ல திருஷ்டாந்தம் இல்லையென்று சொல்லலாம். தீர்க்கதரிசி ஒரு ஆற்றின்பேர் சொன்னார், நாகமான் இரண்டின் பேர் சொல்லுகிறான். அவர் காணுனின் ஆற்றைப் பேசும்போது இவன் தமஸ்குவின் ஆறுகளைப்பற்றிப் பேசுகிறான். இரட் சண்யத்தை உலக இயல்புப் பிரமாணங்களோடு கலக்கும் படி பிரயாசப்பட்டால் ஒவ்வாது. லோகக் கல்வியிலும் ஞானத்திலும் தேறின நமது தேசத்தார் பலர் இன்னும் சுவிசேஷசத்தியங்களை அங்கீகரியாததற்கும் ஆட்சேபிக்கிற தற்கும் காரணம் இதுதான். கிரேக்கர் படித்திருந்த பல கலைக்கியானங்களெல்லாம் கிறிஸ்துவையும் சிலுவையையும் பற்றிய உபதேசத்தைக் கிரகித்து விசுவாசித்துக்கொள்ளும் படி அவர்களுக்கு உதவி செய்யக்கூடாமற்போயிற்று. உலக ஞானத்துக்கு பரம ஞானம் பைத்தியமாகக் காணப்பட்டது; அப்படியானால் பரமஞானத்துக்கு லோகஞானம் பைத்தியம் என்பதும் ருசுவாகிறதல்லவா? நாடோடிய வழக்கம்போல பேசினால் லோகஞானத்துக்கும் பரமஞானத்துக்கும் சக்க ளத்திப்போர் உண்டு. ஆதலால் இவ்விரு ஞானங்களிலும் தன் ஆத்துமத்துக்கு நிலையான வாழ்வையருளும் ஞானத் தைக் கண்டடைந்து அந்த வழிகளில் நடக்கிறவனுக்கு ஞானி என்ற பேர் தகும்.

நாகமான் என்ற பேருக்கு அந்தமுள்ளவன் என்று அர்த்தம். அவனுடைய பேர் அவனுக்கு அந்தத்தைக் கொடுத்தபோதிலும் அவனுக்குள்ளிருந்த நோய் அந்தத்தைக் கெடுத்துவிட்டது. கிறிஸ்தவர்கள் தங்களுடைய பொது வான நாமதேயங்களின்படி மேன்மையுடையவர்களாயிருந்த போதிலும் பாவநோய் அவர்களுக்குள் உண்டாகையால் அந்தப் பேருக்குத் தகுந்தவர்களல்ல. நாகமான் குஷ்ட ரோகத்திலிருந்து குணமாகும்படி தேசம்விட்டு தேசம் ஓடுவதும், ஆள்மாற்றி ஆளிடம் போவதும் எல்லாம் நன்றாய்த்தானிருக்கிறது. ஆனால் அவன் செய்யவேண்டிய முறை இன்னதென்று சொன்னவுடனே தீர்க்கதரிசியைப் பழிக்கவும் அவருடைய மருந்துமுறையை ஆட்சேபிக்கவும் துணிகிறான். இரட்சண்யத்தை விரும்பி குருக்களைத் தேடி இத்தேசத்தில் பலர் வருகிறதுண்டு. வந்தவுடன் அவர்கள் கேள்விப்படுகிற இரட்சண்யமுறையை விசுவாசியாமல் ஆட்சேபித்து இது சரியா, அது சரியா? என்று பேசுகிறார்கள். அவர்கள் தேவனுடைய இரட்சண்ய ஏற்பாடுகள் தங்கள் புத்திக்கு இசைவாயிருக்க வேண்டுமென்று கருதுகிறார்கள். அது சரியல்ல. மேலும் மனுஷ கருத்துக்கிசையவும், கல்விக்கிசையவும், அநுபோகத்துக்கிசையவும் தேவன் இரட்சிப்பைப்பற்றிய தமது அநாதி தீர்மானங்களைக் காலாகாலத்துக்குத் தக்கபடி மாற்றமாட்டார்.

கர்த்தராகிய இயேசுவை விசுவாசி,
அப்பொழுது இரட்சிக்கப்படுவாய்

என்பதே இரட்சண்ய ஞானத்தின் அடக்கமாயிருக்கிறது. இது எவர்களுடைய மனதுக்கு இசையாதோ அவர்கள் இரட்சிப்பை இழந்துபோவார்களேயன்றி, அவர்கள் நிமித்தம் அந்த ஞானம் மாற்றப்படமாட்டாது. அதோடு இரட்சிப்புக்குப் பொதுப்பட அவசியமென்று கிறிஸ்து இரட்சகரால் நியமிக்கப்பட்டிருக்கிற கிருபையின் யத்தனங்களை அசட்டைசெய்யவும் கூடாது. நாகமான் தமஸ்குவிலும் ஜலமுண்டு, கானானிலும் ஜலமுண்டு; ஆதலால் இரண்டும் ஒரேமாதிரிதான் என்று நினைத்தான். யோர்தான் அற்புத ஆறென்றும், அதின் ஒரு சொட்டு ஜலம் தேவவல்லமையால்

அப்னு, பார்பார் என்னும் ஆறுகளின் பெருவெள்ளத்திலும் சிரேஷ்டமானதென்றும் நினைத்தானில்லை.

நாகமான் எலிசாவின் வார்த்தைகளைக் கேட்டு உக்கிரத்தோடு திரும்பிப் போனபோது, அவன் ஊழியக்காரர் சமீபத்தில் வந்து அவனை நோக்கி, தகப்பனே! அந்தத் தீர்க்கதரிசி பெரிய காரியத்தைச் செய்யும்படி உமக்குச் சொல்லியிருந்தால் அதை நீர் செய்வீரல்லலோ? ஸ்நானம் பண்ணும், அப்பொழுது சுத்தமாவீர் என்று சொல்லும் போது அதைச் செய்யவேண்டியது எத்தனை அதிகமென்று சொன்னார்கள். நாகமான் தன் ஊழியர் இப்படித் தாராளமாய்ப் பேசும்படி இடங்கொடுத்ததால் சற்று நல்ல மனுஷன் என்று தோன்றுகிறது; ஊழியர் இருந்தால் இப்படியிருக்க வேண்டியது; இவர்கள்தான் எஜமானுடைய தலையைக் காக்கும் ஊழியரென்று சொல்லலாம். நாகமானின் ஊழியர் அவனுடைய மனம்போனபடி மாத்திரம் இசைந்து, ஆம், ஆம் சேனாபதியே! இவையனைத்தும் பரியாசம்போலிருக்கிறது; இரதமேறி இட்சணமே நமது தேசத்துக்குப் பயணப்படுவோம்; இந்தப் பரியாசக்காரர் தேசத்தில் பரிச்சேதம் இருக்கக்கூடாது என்று சொல்லியிருப்பார்களானால், நாகமான் ஒரே ஓட்டமாய் ஓடிப்போயிருப்பான்; அவன் தன் குஷ்டரோகத்தோடே செத்துமிருப்பான். ஆனால் தேவனுக்கு ஸ்தோத்திரமுண்டாவதாக. எலிசாவண்டை வந்தவன் மெய்த்தேவனை அறியாமலிருக்கக் கூடாதென்றே, இஸ்ரவேலின் தேவனை நாடி வந்தவன் வெட்கப்பட்டுப் போகக்கூடாதென்றே, தேவன் நாகமானுடன் ஒரு நல்ல வேலைக்காரனையும் புறப்படப் பண்ணினார். நாகமான் இம்மட்டும் அநேக ராஜ்யங்களை சீரியாவுக்கு அடிமைப்படுத்தினான்; இப்பொழுது அவனை இஸ்ரவேலின் தேவனுக்கு அடிமைப்படுத்தும்படி தேவன் அவனோடு ஒருவனைப் புறப்படச் செய்திருக்கிறார். அவனுடைய வார்த்தைகளைக் கேட்டவுடனே நாகமான் தன் கோபதாபங்களை அடக்கிவிட்டு தீர்க்கதரிசியின் கட்டளைக்குக் கீழ்ப்படியும்படி ஆரம்பித்தான்.

நாகமான் கசப்புள்ள மருந்துகள், அல்லது வாய்க்கட்டும் பஸ்பங்கள், அல்லது மந்திரமோதி குணமாக்குதல், அல்லது

பத்தியம்பிடித்துப் பல மண்டலம் சூரணம் சாப்பிடுதலாகிய இவைகள்தான் தன்னுடைய வியாதிக்கு தகுமான மருந்தென்று உத்தேசித்தபோதிலும் அவன் ஊழியக்காரரோ, தீர்க்கதரிசியின் வார்த்தைக்குக் கீழ்ப்படிவதுதான் கடினமான மருந்து என்று உணர்ந்துகொண்டார்கள். வேலைக்காரருக்கு விளங்கும் தேவஞானம் எஜமான்மாருக்குத் தென்படாமலிருக்கலாம். எப்படியும் கடைசியாக, நாம் நாகமானைப் புகழவேண்டியது. அவன் யோர்தானில் போய் முழுகுகிறான்.

நாகமானே! நீ பாக்கியமுள்ளவன் அப்பா! நீ பாக்கியமுள்ளவன். உலகத்தில் எத்தனையோ குஷ்டரோகிகள் தாங்கள் குஷ்டத்தோடே காலங்கழித்து மாண்டாலும் உனக்கு எலிசாவின் வைத்தியம் கிடைக்கிறது. முழுகு, நாகமானே! முழுகு; யோர்தானின் ஜலத்தில் ஏழுதரம் முழுகு. முன்னே உன்பேர் மாத்திரம் அந்தம், இப்பொழுது உன் உடலும் அந்தமாகிறது. முழுகு, நாகமானே! யோர்தானில் ஏழுதரம் முழுகு. உன் தோல் மாறுகிறது, உன் நிறம் வித்தியாசப்படுகிறது; நீ சந்தோஷமாய் முழுகு.

நாகமான் ஏழுதரம் முழுகி ஆற்றைவிட்டு வருகிறான். அவன் மாமிசம் ஒரு சிறு பிள்ளையின் மாமிசம்போல மாறி, அவன் சுத்தமாய் விளங்குகிறான். சேனாபதியே! என் குஷ்டமெங்கே? அதின் அடையாளமெங்கே? எல்லாம் யோர்தான் ஆற்றின் ஜலத்தால் கழுவப்பட்டுப் போயிற்று. ஆற்றுக்குள் குஷ்டத்துக்கு மாற்றை வைத்த அநாதி தேவனுக்கு அல்லேலூயா பாடுவோமாக.

இரட்சண்ய வழியை ஏற்றுக்கொண்டு கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கிறவன் அவருடைய திரு இரத்தமாகிய பரம யோர்தானுக்குள் இறங்குகிறான். அங்கே அவன் தன் விசுவாசத்தைப் பலப்படுத்துதல் முழுகுகிறதுபோலிருக்கிறது. அந்த இரத்தத்தில் முழுகுகிறவன் பாவம் மன்னிக்கப்பட்ட இருதயமாகிய பொன் மேனியுடையவனாய் வெளிக்குக் காணப்படுவான். சாக்கிரமெந்துகளை அற்பமாய் எண்ணாதே. தேவன் தமது வார்த்தை

யினுலும் பரிசுத்த ஆவியினுலும் அவைகளை வல்லமையுள்ளவைகளாக்குகிருர்.

நாகமான் சுகமானபின் தன் சரீரத்தை எட்டிப் பார்த்து எவ்வளவு சந்தோஷப்பட்டிருப்பான்! அவன் தான் குணமான வரலாற்றைத் தன் பந்துக்களுக்கு முதலாவது தெரியப்படுத்த வேண்டுமென்ருவது, அவர்களிடம் போய் விட வேண்டுமென்ருவது ஆசைப்படாமல், தீர்க்கதரிசியினிடம் ஓடிவந்து தன் நன்றியறிதலைச் செலுத்திஞன். சினத்தோடு எலிசாவின் வீட்டைவிட்டுப் போன இவன், சிரிப்போடும் குணமான மகிழ்ச்சியோடும் திரும்பிவந்தான். முன்னே அவனுடன் பேசவும் அவனை எட்டிப் பார்க்கவும் பிரியமில்லாததுபோல காட்டின எலிசா, அப்புறம் தமது முக தரிசனையைக் காட்டினுர். தன்னை அவன் பெருமைப் படுத்தாமல், தேவனுல்தான் தனக்கு சுகம் கிடைத்தது என்பதை உணரும்படி இப்படிச் செய்தாராக்கும். நாகமான் தீர்க்கதரிசியிடம் வந்து, ‘இதோ, இஸ்ரவேலிலிருக்கிற தேவனைவிட பூமியெங்கும் வேறே தேவன் இல்லையென்பதை அறிந்தேன்’ என்று சொன்னுன். எவ்வளவு தாழ்மைக்கும் கீழ்ப்படிதலுக்கும் விசுவாசத்துக்கும் பின்பு இந்த அறிக்கை வருகிறது! இவன் தனக்குக் கிடைத்த சுகம் ஆற்றின் புண்ணியத்தால் அல்லது ஆளின் புண்ணியத்தால் அல்ல, ஆண்டவர் புண்ணியத்தால் என்று தெளிவாய் வெளிப் படுத்துகிருன்.

அப்பால் நாகமான் தீர்க்கதரிசியை நோக்கி, ‘உம்முடைய அடியான் கையால் ஒரு காணிக்கையை வாங்கிக்கொள்ள வேண்டும்’ என்று கேட்டான். அதற்கு எலிசா, ஆணையோடே நான் வாங்கமாட்டேன் என்று சொல்லிவிட்டார். இதில் நாம், நாகமான் செய்கையானது உலக இயல்புதான்; ஆனுல் தீர்க்கதரிசி அதை வேண்டாமென்று சொன்னது பரம ஞானத்தின் போக்கு என்று சொல்லவேண்டியது. நாகமான்தான் இஸ்ரவேலின் தேவனின் மகத்துவத்தை விசுவாசித்த முதலாம் சீரியனுயிருந்தான். முனிவர் பணம் வாங்கினது மெய்யானுல், பணம் வாங்காததினுல் தேவ மகிமை சீரியாவில் பிரஸ்தாபப்படுகிறதிலும் குறையும் என்று

கண்டு வாங்கவில்லை. மேலும் தேவ ஊழியக்காரர் பணத்துக்காக தேவ ஊழியங்களை நிறைவேற்றுகிறவர்களாயிராமல் தேவ நாமத்தின் மகிமையையே கருதி, தங்கள் ஊழியங்களை நிறைவேற்றிவர வேண்டுமென்பதை இதினால் போதிக்கிறார் என்று சொல்லலாம்.

நாகமான் எவ்வளவாய் மன்றாடியும் எலிசா பணம் வாங்க இசையவில்லை. கடைசியாக நாகமான் எலிசாவிடம் ஒரு இனம் கேட்டான். அதாவது, இரண்டு கோவேறு கழுதை சுமக்கத்தக்க மண்பொதி ஏற்றிக்கொண்டுபோக உத்தரவு கேட்டான். மெய்த்தேவனுக்குப் பலியிடும்படி கானானின் மண்ணால் பீடம் கட்டும்படியாகத்தான் இந்த மண்ணைக் கேட்டான்.[1]

'உம்முடைய அடியான் இனி, கர்த்தருக்கேயல்லாமல் அந்நிய தேவர்களுக்குச் சர்வாங்க தகனத்தையும் பலியையும் செலுத்துவதில்லை' என்று நாகமான் சொன்ன வாசகத்தால் பலிபீடத்துக்கே இந்த மண்ணைக் கேட்டான் என்று விளங்குகிறது.

அதோடு வேறொன்றையும் கேட்டான். அதாவது, 'ஒரு காரியத்தைக் கர்த்தர் உம்முடைய அடியானுக்கு மன்னிப்பாராக. என் ஆண்டவன் பணிந்துகொள்ளும்படி ரிம்மோன்[2]

---

[1] மகமதியர் தங்களுக்குள் புண்ணிய ஸ்தலமாக எண்ணிக்கொள்ளும் இடங்களின் மண்ணை தொழும்போது தங்களுக்கு முன்னே வைத்துக்கொள்ளுவது சில இடங்களில் வழக்கமென்று ஒருவர் எழுதியிருக்கிறார். தற்கால யூதர் எருசலேமைவிட்டு உலகத்தின் எத்திசையில் இருந்தாலும் தங்களில் மரிப்போருடைய கண்ணில் எருசலேமின் மண்ணில் கொஞ்சம் போட்டு அடக்கம் பண்ணுவதுண்டு என்று ஒரு யூதன் எழுதியிருக்கிறான்.

[2] ரிம்மோன் என்ற பதத்துக்கு 'மாதளம்பழம்' என்றும், 'உன்னதமானது' என்றும் இரண்டு அருத்தமுண்டு. மாதளம்பழம் வீனிஸ் தேவனுக்குப் பிரீதியாய்ப் படைக்கப்பட்டு வந்ததால் வீனிஸ் கிரகத்துக்கு இப்பேர் வழங்கப்பட்டது என்று சிலர் சொல்லுகிறார்கள். உன்னதமானது என்ற அர்த்தத்தால் ரிம்மோன் என்பது சூரியனைக் குறிக்கிறதென்று சிலர் சொல்லுகிறார்கள். இந்த ரிம்மோன் என்ற பேர் வேதத்தில் வேறெங்கும் வழங்கப்படுகிறதில்லையென்று கவனிக்கிறோம்.

ஆலயத்துக்குள் பிரவேசிக்கும்பொழுது நான் அவருக்கு கைலாகு கொடுத்து, ரிம்மோன் கோவிலிலே பணிய வேண்டியதாகும்; இப்படி ரிம்மோன் கோவிலிலே நான் பணியவேண்டிய இந்தக் காரியத்தைக் கர்த்தர் உமது அடியானுக்கு மன்னிப்பாராக' என்று சொன்னான். அதற்கு அவர், சமாதானத்தோடே போ என்றார். இந்த வாசகம் அநேக கிறிஸ்தவர்களைத் திகைக்கப் பண்ணுகிறதுண்டு. மேலும் இந்துக்கள் பலர் இதை கிறிஸ்துமார்க்க ஏற்பாட்டுக்கு விரோதமாய்த் திருப்பி எலிசா இவ்விடத்தில் விக்கிரகாராதனைக்குக் கண்சாடையாய் இடங்கொடுக்கிறார் என்று சொல்லுகிறதுமுண்டு. தீர்க்கதரிசி விக்கிரகாராதனையைப்பற்றி கண்சாடையாய் இருந்தாரென்றாவது, அவர் நாகமானுக்கு உன் மனப்படிச் செய்யென்று விட்டுவிட்டாரென்றாவது இதினாலே சொல்லக்கூடாது. இந்த வாசகமானது மூல பாஷையின்படி கடந்த காலநடபடிக்கைகளைச் சொல்லுகிறதுபோல் ஒரு சாஸ்திரி கருத்துப்படுத்துகிறார். (Light foot) வேறொரு பிரதியில் நாகமான் பேசினதற்கு தீர்க்கதரிசி 'இல்லை, சமாதானத்தோடே போ' என்று கண்டிக்கிறதென்றும், அந்த 'இல்லை' என்ற பதம் பல பிரதிகளில் விட்டுவிடப்பட்டிருக்கிறதென்றும் சொல்லுகிறார். பிந்தினது மெய்யானால் தீர்க்கதரிசி நாகமான் கேட்டதற்கு இடங்கொடாமல் அவனை வாழ்த்தியனுப்பினார் என்று தெளிவாகிறது. இப்பொழுது நமது வேதாகமத்திலிருக்கிற வாசகமே யதார்த்தமென்று சொல்லிக்கொண்டபோதிலும் அதினால் எலிசா விக்கிரகாராதனையை ஊர்ஜிதப்படுத்திவிட்டாரென்று குற்றம் சொல்லக்கூடாது. நாகமான் பேசினது தீர்க்கதரிசிக்கு விரோதமாயிருந்தபடியால் திடீரென்று பேச்சை முடித்து, போய்வா என்று சொல்லிவிட்ட பாவனையாக நாம் தாற்பரியப்படுத்தலாமே. நமது மனதுக்குப் பிரியமில்லாத காரியங்களைப் பேசுகிறவர்களைத் தடுக்கும்படி தடுத்து, ஒன்றும் பேசாமல் சீக்கிரம் அனுப்பிவிடுகிறதுமுண்டல்லவா!

நாகமான் தீர்க்கதரிசியினிடத்தில் விடைபெற்றுப் போனான்; அச்சமயத்தில் கூடநின்ற கேயாஸ் என்ற பணிவிடைக்காரன் பொருளாசையால் ஆளப்பட்டான். நாகமான்

தீர்க்கதரிசிக்கு இனுமாகத் தட்டில் பணத்தையும், பட்டு வஸ்திரங்களையும் ஏந்திக் கெஞ்சினதும், எலிசா ஒரே சாதனையாய் ஆணையிட்டு வேண்டாமென்றதையும் எல்லாம் இவன் பார்த்துக்கொண்டு தனக்குள் பொருளாசையால் மூண்டான். கேயாஸ் சாதாரண பணிவிடைக்காரனுயிராமல் தீர்க்கதரிசிகளின் புத்திரரில் ஒருவனுயிருந்தான் என்று எண்ணவேண்டியது. இவன் தனக்குள் எலிசாவுக்குப் பைத்தியமுண்டாயிருக்கிறது, தானுய் வருகிற வாழ்வைக் காலால் உதைக்கிறுன், வந்த பணத்தை வேண்டாமென்று சொல்லியா பக்திமான் என்ற பேரெடுக்கவேண்டும்? தனக்குத் தேவையில்லாவிட்டால் நமக்காவது வாங்கித் தந்துவிடலாகாதா? எத்தனையோ எஜமான்மாரால் ஏழை வேலையாட்கள் பிழைக்கிறதுண்டு; இவரால் நான் பிழைத்துப்போனுல் ஆகாதா? இவரிடத்தில் காத்திருந்ததும் போதும், இவர் நமக்குக் கஞ்சி வார்த்ததும் போதும் என்றிப்படிப் பலவாறுகத் தனக்குள் நினைத்திருக்கலாம். சிலர் நினைக்கிறபடி தீர்க்கதரிசிகளின் புத்திரருடைய சாப்பாட்டுக் கணக்கெல்லாம் இவனிடம் இருந்ததாம். இது நிஜமானுல் தீர்க்கதரிசிக்குப் பணம் வேண்டாத பட்சத்தில் இந்த ஏழைப் பிள்ளைகளுக்கென்று வாங்கி, நமது வசம் கொடுக்கக் கூடாதா என்று முதலாய் யோசித்திருக்கலாம். இதினுல் நாகமான் கொண்டுவந்த காணிக்கை கண்ணுக்குக் கண் வித்தியாசமாய் மதிக்கப்பட்டிருக்கிறதென்று காண்கிறோம். எலிசாவின் கண்ணுக்கு அது வேண்டாமென்று தள்ளும் குப்பையாகவும், கேயாசின் கண்ணுக்கு அது வேண்டுமென்று விரும்பும் பூஷணமாயும் மதிக்கப்பட்டிருக்கிறதல்லவா? பரிசுத்த எலிசாவுக்கு பாவியான கேயாஸ் மந்திரிபோலிருந்தான். பக்தன் பின்னே திரிகிறவன் எல்லாம் பக்தனுய்த்தானிருப்பானென்று எண்ணக்கூடாது.

பொருளாசைகொண்ட கேயாஸ் தீர்க்கதரிசி வேண்டாமென்று தள்ளின காணிக்கையைப் பெற்றுக்கொள்ளும்படி நான் அவன் பிறகாலே ஓடி, அவன் கையிலே ஏதாகிலும் வாங்குவேனென்று கர்த்தருடைய ஜீவன்மேல் ஆணையிட்டு, நாகமானைப் பின்தொடர்ந்தான். விரைவாய் நடந்தால் அவனைப் பிடிக்கக்கூடாதென்று பின்தொடர்ந்து ஓடினுன்.

அவன் ஓடுகிறதைப் பார்த்தால் இவன் எலிசாவின் பணிவிடைக்காரனயிருக்க உதவுகிறதைவிட நாகமானின் குதிரைக்காரனயிருக்க உதவுவான் என்று சொல்ல வேண்டியதாயிருக்கிறதல்லவா? கேயாசே! ஓடு, அப்பா ஓடு, தீவிரமாய்க் குதித்தோடு; குதிரைக்கு முந்தியோடி ரதத்தையும் மறித்துக்கொள்; உன் ஓட்டத்தின் லாபத்தை நான் இன்னும் சில நிமிஷத்தில் உலகத்துக்குக் காட்டிவிடுகிறேன்; நீ ஓடு.

கேயாஸ் ஓடிவருகிறது எப்படியோ நாகமானுக்குத் தெரிந்துகொண்டது. உடனே அவன் தீர்க்கதரிசி ஏதோ புது சமாச்சாரம் சொல்லியனுப்பினராக்கும் என்று உத்தேசித்து, பிரபுத்துவமாய்த் தன் இரதத்தை நிறுத்தி, எதிர்கொண்டுபோக குதித்து 'சுகசெய்தியா' அதாவது என்ன செய்தியென்று கேட்டான். அதற்கு அவன் பேசும் அபாண்டங்களையெல்லாம் கேளுங்கள்; அவன் சொல்வான், 'சுகசெய்திதான், அப்படி அதன் விசேஷமொன்றுமில்லை; தீர்க்கதரிசிகளின் புத்திரரில் இரண்டு வாலிபர் இப்பொழுது தான் எப்பிராயீம் மலைத்தேசத்திலிருந்து என்னிடத்தில் வந்தார்கள்; அவர்களுக்கு ஒரு தாலந்து வெள்ளியையும் இரண்டு மாற்று வஸ்திரங்களையும் தரவேண்டுமென்று கேட்க, என் எஜமான் என்னை அனுப்பினர்' என்றான். உடனே நாகமான் ஒரு தாலந்தல்ல, இரண்டு தாலந்து தருகிறேனென்று சொல்லி, இரண்டு தாலந்து வெள்ளியையும் இரண்டு மாற்று வஸ்திரங்களையும் மூட்டையாகக் கட்டி இரண்டு வேலைக்காரர் தலைமேல் வைத்து, சுகமே போய் வாரும் என்று அனுப்பினன். பொய்யைப் பிணைத்து மெய்யாகக் கட்டி பேச கேயாஸ் எவ்வளவு சாமர்த்தியனயிருக்கிறன் பாருங்கள்! எஜமான் மெய்சொல்ல கெட்டிக்காரன், வேலைக்காரன் பொய்சொல்ல நிபுணன். இவன், வந்த விருந்தாளிகளின் தொகை, அவர்களுடைய இடம், தொழில், வயது, தனக்குவேண்டிய காரியம், இன்னின்னதில் இவ்வளவென்று திட்டவட்டமாய்ச் சொல்லிவிட்டான். தன் பொய்க்கு நல்ல வர்ணம் கொடுத்து 'என் எஜமான் என்னை அனுப்பினர்' என்ற பொற்பூச்சால் தன் பொய்யை பளபளப்பாக்குகிறன். இப்படியெல்லாம் சொல்லாமல், கேயாஸ்

ஓடிப்போய், ஐயா! நான் தீர்க்கதரிசியினுடைய மனுஷன், என் மூலமாய் அல்லவா தீர்க்கதரிசி முதலாவது உம்மோடு பேசினார்; எனக்கு ஏதாவது இனும் கொடுங்களேன் என்று கேட்டிருந்தால் எவ்வளவு நலமாயிருக்கும்! 'கேடு வரும் போது மதிகெட்டு வரும்' என்று ஒரு பழமொழி உண் டல்லவா!

கேயாசுடைய பொருளாசையானது யூதாசை நமக்கு முன் இழுத்துவிடுகிறது; யூதாசும் பொருளாசையால் ஏவப் பட்டு இரட்சகருக்குப் பரிமளதைலம் பூசின ஸ்திரீயின் செய்கையைக் கண்டித்து கிறிஸ்துவைக் காட்டிக்கொடுத் தான். இந்த இரண்டு பேரும் ஏககாலத்திலிராமல் ஒருவருக் கொருவர் தொளாயிரத்திருபது வருஷத்துக்கு முன்பின் இருந்தது இவ்வுலகத்துக்குக் கிடைத்த ஒரு பாக்கியமென்று சொல்லவேண்டியது. அது நிற்க கேயாசின் ஒவ்வொரு வார்த்தையும் பொய்யாய் இருந்தது. அந்தப் பொய்க்கு நல்ல லாபமும் கிடைத்தது; இதை அநேகர் பின்பற்றுகிற துண்டு. மெய்சொல்லி உலகத்தில் மனுஷனாகிறதைவிட பொய்சொல்லி மனுஷராகிறவர்கள் அனந்தம்பேர் உண் டென்று சொல்லி, அந்தவிதமாய்க் காலங் கழிக்கிறார்கள். இந்தப் பொய்யால் கேயாஸ் சம்பாதித்த சொத்து எத்தனை வருஷங்களுக்கு உதவிற்று? சில மணிநேர முதலாய் உதவ வில்லை. 'கெட்டிக்காரன் புளுகு எட்டு நாளைக்குச் செல்லும்' என்று ஒரு பழமொழியுமுண்டு. கேயாசின் பொய் எட்டு மணிநேர முதலாய்ச் செல்லும் பொய்யாக இருக்கவில்லை. அது மெய்யென்பது சீக்கிரம் விளங்கும்.

கேயாஸ் தனக்குக் காணிக்கைகளைச் சுமந்துவந்த ஆட் களைத் தீர்க்கதரிசியின் கண் காணக்கூடாதென்று மெதுவாய் அனுப்பிவிட்டு, தன் அறையில் அவைகளை வைத்துக் கொண்டு, யாதும் அறியாதவன்போலும் எங்கும் போகாத வன்போலும் தன் எஜமானுக்கு முன்பாக நின்றான். எலிசா அவனை நோக்கி:

'கேயாசியே! எங்கேயிருந்து வந்தாய்' என்று கேட்டார்; உம்முடைய அடியான் எங்கும் போகவில்லை என்று உத்தரவு சொன்னான். நாகமானில் அவன் தன் பொய்யைத் துவக்கி

எலிசாவில் முடிக்கிறான். பொய்க்கு மூடி பொய்தான். அப்பொழுது தீர்க்கதரிசி கேயாஸ் ஓடினதையும், நாகமான் எதிர்கொண்டுவர இரதத்திலிருந்து குதித்ததையும், பணம் வாங்கினதையும், வஸ்திரம் மடித்து வைத்ததையும், வழியில் அந்தப் பணத்தால் தோப்புகளையும் தோட்டங்களையும் வாங்கி ஆள் வைத்து வேலை வாங்கும்படி யோசித்துவந்த யோசனைகளையும் எல்லாம் கூட இருந்து பார்த்தவர்போல் வரிசையாய்ச் சொன்னார். ஐயோ, கேயாசே! தீர்க்கதரிசிகள் ஞானக் கண்களுடையவர்களென்று இதுமட்டும் உனக்குத் தெரியாதோ? பிலேயாம் தன்னைக் குறித்து 'கண்கள் தெளிவிக்கப்பட்ட புருஷன்' என்று சொல்லக்கூடுமானால், எலிசா எத்தனை நிச்சயமாய் அந்த வாசகத்தைச் சொல்லக்கூடும்! தீர்க்கதரிசிகளின் உடல் ஒரு இடத்திலும், மனம் வேறொரு இடத்திலும் இருக்குமென்பது உனக்குத் தெரியாதா? நீ ஓடினதும், பேசினதும், வாங்கினதும், சுமந்ததும், ஒளித்து வைத்ததுமெல்லாம் கர்த்தரால் தமது தாசனுக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது; நீ செய்யப்போகிற செலவும் வெளியாக்கப்பட்டிருக்கிறது.

ஐயோ, கேயாசே! இனி என்ன செய்வாய்? இம்மட்டோடே எலிசா நின்றுவிடாமல், 'நாகமானின் குஷ்டரோகம் உன்னையும் உன் சந்ததியாரையும் என்றைக்கும் பிடித்திருக்கும்' என்று சாபம் போட்டார். அந்த நிமிஷமே அவன் உறைந்த மழை நிறமான குஷ்டரோகியாகி, அவர் சமுகத்தைவிட்டுப் புறப்பட்டுப் போனான். நாகமான் குஷ்டரோகத்தோடே எலிசாவிடம் வந்து குஷ்டரோகமாறி, எலிசாவைவிட்டுப் போனான்; கேயாஸ் குஷ்டரோகமில்லாமல் வந்து எலிசாவைவிட்டு குஷ்டரோகத்தோடு போனான். இப்பொழுது நாம் கேயாசுக்கு வந்த லாபம் என்னவென்று தியானிப்பது சரியல்லவா? அவன் பொருளாசைக்கும் பொய்க்கும் வந்த கண்கண்ட லாபம் குஷ்டரோகமே அல்லது தேவ தண்டனையே. நாகமான் பணத்தோடும் நோயோடும் இஸ்ரவேல் தேசத்தில் வந்து அவைகள் இல்லாமல் தன் தேசம் போனான்; கேயாஸ் நாகமானுடைய பணத்தையும் அவன் நோயையும் தன் வசமாக்கிக்கொண்டான். நல்லவர்

கள் விட்டுவிடுகிற பாவங்களைப் பொல்லாதவர்கள் தங்களுடையதாக்கிக் கொள்ளுகிறார்கள்.

நாகமானைப்பற்றி அதன்பின்புள்ள வரலாறுகள் ஒன்றும் நமக்குத் தெரியாது. அவன் இஸ்ரவேலின் தேவனுக்குத் துரோகம் பண்ணாமல், தன் மனதில் தீர்மானித்தபடி அவரைத் தொழுதுவந்தான் என்று சொல்லலாம். விசேஷமாய் கேயாசின் வரலாறு அவனுக்குப் பிற்பாடு எட்டியிருக்கலாம்; அதினால் அவன் பயத்தோடும்; நடுக்கத்தோடும் அவருடைய நாமத்தை நினைவுகூர்ந்துவந்தான் என்று சொல்லவேண்டியது.

நாகமானுக்கு இந்தக் கிருபை கிடைத்த காரணம் என்னவென்று சிலர் கேட்கலாம். இந்தக் கேள்விக்கு இயேசுவின் வாசகம் ஒன்று உத்தரவு சொல்லுகிறதுபோல் இருக்கிறது. 'எலிசா தீர்க்கதரிசியின் காலத்திலே இஸ்ரவேலருக்குள்ளே அநேக குஷ்டரோகிகள் இருந்தார்கள்; ஆயினும் சீரியா தேசத்தானாகிய நாகமானேயல்லாமல் வேறொருவனும் சுத்தமாக்கப்படவில்லை' என்று சொன்னார் (லூக். 4:27). இதினாலே தேவன் தமது கிருபைகளைத் தமது சுயாதீன சித்தத்தின்படி யாருக்குச் செய்ய விரும்புகிறாரோ அவர்களுக்கு செய்து வருகிறார் என்றும், அதையிட்டு மனுஷர் மனத்தாங்கலடைந்து கடவுளைப்பற்றி தப்பாய்ப் பேசிக்கொள்ளக் கூடாதென்றும் போதிக்கிறார். ஆகவே புறஜாதியாரும் தேவனுடைய கிருபையில் பங்கடைவார்கள் என்பதற்கு நாகமான் எந்நாளும் விளங்கும் ஸ்தம்பமாயும், பாவகுஷ்டத்தால் இஸ்ரவேலின் மீட்பரைத் தேடிப்போகிறதுண்டானால் அவர் தமது திரு யோர்தானாகிய இரத்த ஆற்றின் ஜலத்தால் அவனைக் கழுவி பாவமன்னிப்பாகிய புது மேனியாக்கிவிடுவார் என்பதற்கு ஞான அறிகுறியாயும் விளங்குகிறான்.

எசேக்கியா இராஜா

வேதாகமத்திலுள்ள புருஷரின் பூர்வோத்தரங்களை ஆராய்ந்து தியானித்துக்கொண்டு போகும்போது அந்தந்தக் காலத்தில் தேவனுடைய சபையானது என்னென்ன ஸ்திதியிலிருந்ததென்பது பரிஷ்காரமாகிறது. அது பலவித மாறுதலுக்கும், மோசங்களுக்கும், இடுக்கண்களுக்கும் உட்பட்டிருந்தபோதிலும் சர்வ வல்லவரின் கரமே அதைப் பாதுகாத்து, சர்வ ஞானியின் கண்களே அதைக் கண்ணோக்கி வந்திருக்கிறது. திருச்சபையானது தினந்தோறும் தேவனை நோக்கிக் கூவி 'என் சிறுவயது தொடங்கி அநேகந்தரம் என்னை நெருக்கியும் என்னை மேற்கொள்ளாதே போனார்கள்' என்று துதிக்கவேண்டியது நியாயமாயுமிருக்கிறது. சீயோனில் வாசமாயிருக்கிற தேவன் அதை என்றென்றைக்கும் காப்பாற்றுவாரென்றும், பாதாளத்தின் ஒலிமுகவாசல்கள் அதை மேற்கொள்ள மாட்டாதென்றும் நாம் அறிந்திருக்கிறோம்.

மெய்த்தேவ வணக்கமும், மார்க்கமும் யூத ராஜ்யத்தில் மாத்திரம் நிலைபெற்றிருந்தது; அந்த ராஜ்யமானது வரவர பெலவீனப்பட்டுப்போயிற்று. ஆகாஸ் ராஜன் காலத்திலுள்ள யுத்தங்களால் அநேகர் மாண்டும், அநேகர் சிறைப்பட்டும் போனார்கள்; அவர்களுக்கும் வடநாட்டிலிருந்த அவர்கள் சகோதர கோத்திரத்தாருக்கும் சண்டையுண்டானதால் பெக்கா என்னும் பேருடைய இஸ்ரவேல் அரசன் ஒரேநாளில் லட்சத்து இருபதினாயிரம்பேரை வெட்டிப் போட்டான்; வேறு இரண்டு லட்சம் பேர் சமாரியாவுக்கு சிறைப்பட்டுப்போனார்கள். இன்னும் ஏதோமியர், பெலிஸ்தியர் முதலிய ஜாதியாரால் அவர்களுடைய குடிகளின் தொகை வெகுவாய்க் குறைந்துபோயிற்று. இவ்வளவு பெருந் தொகையான ஜனம் கொலையுண்ணப்படவும் குடி

போகவும் நேரிட்டால் அந்த ராஜ்யத்தில் என்ன பெலன் மீந்திருக்கும்? ஆகாசின் அரசாட்சிக் காலத்தில் மார்க்கமே யூத ராஜ்யத்தில் அற்றுப் போயிற்றென்று சொல்லத்தக்கதாக அவ்வளவு தாழ்வு இருந்தது; ஜனங்கள் அனைவரும் விக்கிரகாராதனைக்கு விரைந்தோடினார்கள். இப்படிப்பட்ட ராஜ்யத்தை தேவன் நிர்மூலமாக்காமலிருப்பாரா? தமது கனத்தை விக்கிரகத்துக்குக் கொடுக்கிறதை அவர் எவ்வளவு காலம்தான் சகிப்பார்? அவர் தம்மைக் கனவீனம் பண்ணு கிறவர்களைத் தண்டிக்கும் எரிச்சலுள்ள தேவனாயிருக்கிறார். இஸ்ரவேல் ராஜ்யம் இதினிமித்தமே சீக்கிரத்துக்குள்ளாக சிதைந்துபோயிற்று என்றாலும், இஸ்ரவேல் ராஜ்யத்துக்குச் செய்யாத கிருபைகளை அவர் யூத ராஜ்யத்துக்குச் செய்தார்; அது எவ்வளவு சிறுத்துப்போனபோதிலும், அதின் கிளை கள் களைந்துவிடப்பட்டு அடிமரம் மாத்திரம் இருக்கிற தென்று சொல்லப்படக்கூடிய குறைந்த நிலைமையிலிருந் தாலும் மறுபடியும் அது துளிர்த்து தன் கிளைகளைச் சமுத்திரமட்டாகவும், கொப்புகளை நதிமட்டாகவும் விடும்படி தேவன் ஆசீர்வதித்தார். திருச்சபை விஷயத்தில் தேவன் இவ்வண்ணம் நடத்துவது இயல்பாயிருக்கிறது; சபையின் வாழ்வானது மனுஷ பிரயத்தனங்களால் அல்ல, தேவ வல்லமையிலிருக்கிறதென்று எக்காலத்தோறும் அறிந் துணர்ந்துகொள்ளும்படி இப்படிச் செய்து வருகிறார் என்றே சொல்லவேண்டியது.

'தாவீதுக்கு நான் ஒரு கொம்பை முளைக்கப்பண்ணு வேன்' என்று ஆண்டவர் திருவுளம்பற்றின வாக்கை மறந்து போகவில்லை; ஆதலால் காலாகாலத்தில் அவன் வம்சத்தி லிருந்து அவரை எழுப்பி தமது திருச்சபையைக் காப்பாற்றி வந்தார். அவர் விழுந்துபோன தாவீதின் கூடாரத்தைத் திரும்ப எடுப்பித்து அதன் திறப்புகளை அடைத்து, அதில் பழுதாய்ப்போனதைச் சீர்ப்படுத்தினார். அவரே கிரியை களை நடப்பிக்கும்போது அவருடைய கையை யாரால் தடுக் கக்கூடும்? அவர் தமது வேலைக்காக அந்தந்த வேளைக்கேற்ற ஆட்களை ஆயத்தப்படுத்தி வைத்திருக்கிறார் என்று சொல்ல வேண்டியது. ஆகாசின் வரலாற்றைப் பார்த்தால், இவன் கர்ப்பத்தில் நல்ல பிள்ளை பிறக்குமா என்று சொல்லக்

கூடியதாயிருக்கும்; என்றாலும் அவன் புத்திர ஞானத்திலும், தேவதாபக்தியிலும், வைராக்கியத்திலும் சிறந்து விளங்கினான். இந்தச் சரித்திரத்தால் தேவகாரியங்களெல்லாம் கெட்டு சீர்குலைந்து நாசமாய்ப்போகிறதுபோல் இருக்கிற காலத்தில் அவையனைத்தையும் மாற்றி சபைக்கு நல்வாழ்வைக் கொடுக்கும் மன்னரை ஆண்டவர் ஏற்படுத்தி ஒழுங்குபடுத்துவார் என்பது தெரியவரும்.

எசேக்கியா இருபத்தைந்து வயது வாலிபனாயிருக்கையில் கிரீடாபிஷேகம் பெற்றார். இந்த வயதில் பெரும்பாலும் மனுஷர் தம் மனம்போன போக்கின்படியெல்லாம் செய்ய இஷ்டப்படுகிறதுண்டு. விசேஷமாய் இருபத்தைந்து வயதுள்ள வாலிப அரசன் அதிக டம்பமும், உல்லாசமும், சிற்றின்பப் பிரியனுமாயிருப்பது இயல்பு. அவன் தன் ராஜ்யத்திலுள்ள பணத்தையும், வாழ்வையும் தான் நினைத்தபடியெல்லாம் பிரயோசனப்படுத்த ஆசைப்படுவான்; ஆனால் இந்த வாலிப அரசனுடைய குணங்களோ அப்படியிருக்கவில்லை. இவர் பாலிய பிரபுக்களும், வாலிப மன்னரும் பின்பற்றி நடக்கத்தக்க நல்ல மாதிரிகளை உடையவராயிருக்கிறார்; இவருடைய மாதிரியானது வாலிபத்துக்குரிய இச்சைகளுக்கு விலகியோடும் ஞான நெறியை நன்றாய்க் காட்டும். இவர் தன் பிதாவின் காலத்தில் அடைந்த கல்வியை நாம் மெச்சிக்கொள்ளவாவது, அதினால் மார்க்கலாபத்துக்கு அனுகூலமாயிற்றென்றாவது சொல்லக்கூடாது. விக்கிரக பக்திக்காரனாகிய ஆகாசு வீட்டில் மெய்த்தேவபக்தியின் சாஸ்திரம் போதிக்கப்பட்டிருக்குமா? என்றாலும் கர்த்தர் அவர்மேல் தமதாவியை அபரிமிதமாய்ச் சொரிந்திருந்தபடியால் அவர் கிரீடாதிபதியானவுடன் தேவபக்தியின் பாலுண்டு வளர்ந்தவர்போல் நடந்துகொண்டார். கிரீடம் தலைமேலேறினவுடனே கர்வம் அதோடு அவர் தலைமேல் ஏறவில்லை. கிரீடமணிந்து கொலுமண்டபமேறினவுடனே தன் ராஜ்யத்திலுள்ள விக்கிரகாராதனைகளை வேரோடு எடுத்துப்போடவும் அவர்கள் அனைவரையும் ஆண்டவர் பாதத்தில் ஆடுகள்போல் கூட்டவும் பிரயத்தனப்பட்டார். தன் ராஜ்யத்தில் மார்க்க சீர்திருத்தத்தை உண்டாக்கும்படி அவர் எடுத்த பிரயாசமும், செய்த முயற்சியும் நமக்கு அதிசயத்

தையும் பிரமிப்பையும் கொடுக்கிறது. அவர் மேடைகளை அகற்றி, சிலைகளைத் தகர்த்து, விக்கிரகத்தோப்புகளை வெட்டினார். அவர் தன் ராஜ்யபாரத்தின் முதலாம் வருஷம் முதலாம் மாதத்திலே ஆராதனையும் பலியுமில்லாமல் அடைபட்டிருந்த ஆலயத்தைத் திறந்து, கட்டடத்தைப் பழுது பார்த்து, அன்றுடக பலி அனுதினமும் செலுத்தப்படக் கட்டளையிட்டார்; அந்தக்காலத்தில் இருந்த ஆசாரிமாரும் ஆராதனைகளைப்பற்றிக் கவலைப்படாமல் அவரவர்மட்டில் ஆசோதையாயிருந்துவிட்டார்கள். ஒருவேளை விக்கிரக பூசாரிகளின் விரோதமும், விக்கிரகாராதனையின் மும்முரமும், அரசனுடைய கைவிடுதலுமே இவ்வளவு தாழ்வுக்கும் காரணமாயிருந்திருக்கலாம்; ஆதலால் அரசன் ஆசாரியருக்குள் ஞான அனலையும், உயிரையும் ஏற்றுவதே முதல் வேலையென்று உத்தேசித்து, தேவபூசாரிகள் அனைவரையும் கூடிவரச்செய்து, அவர்களுக்கு புத்திசொல்லி, அவரவர் தம்தம் அந்தஸ்துப்படி தம்தம் வேலைகளைச் செய்துவரும்படி கட்டளையிட்டார்.

அரசன் ஆக்கியாபித்தவண்ணம் ஆசாரியர்போய் அடைபட்டிருந்த ஆலயத்தை திறந்து சுத்தம்பண்ணினார்கள். அரசனும் பிரபுக்களும் ஏகமாய்க்கூடி பிரதிஷ்டையை நடத்தப்போனார்கள்; ஆசாரியர் பலிகளையிட்டார்கள்; பாடகர் கடவுளை ஸ்துதித்தார்கள்; வாத்தியக்காரர் வாத்தியங்களை வாசித்தார்கள்; பூரிகைகளும் எக்காளங்களும் ஊதப்பட்டன; அரசனும் அனைவரும் அடியற்ற மரம்போல் விழுந்து ஆண்டவரைப் பணிந்து ஆனந்தங்கொண்டாடி அவரவர் மனதின்படி கடவுளுக்குக் காணிக்கை செலுத்தினார்கள்.

எசேக்கியாவின் சீர்திருத்தம் இவ்வளவோடு மாத்திரம் முடியவில்லை. அவர் தன் நாடெங்கும் கட்டளையனுப்பினதோடு இஸ்ரவேல் ராஜ்யத்துக் குடிகளுக்கும் செய்தியனுப்பி எல்லாரும் ஏகமாய்க்கூடி பஸ்காவை ஆசரிக்கும்படி பிரயத்தனப்பட்டார். அப்பிரயத்தனத்தின்படியே தானுபதிகள் பல திசைக்கும் அனுப்பப்பட்டு பஸ்கா ஆசரிப்பை விளம்பரம்பண்ணி ஜனங்களைப் பச்சாத்தாபத்துக்கும் வேண்டுதலுக்கும் ஏவி எழுப்பினார்கள். அதனால் சுமார் 250

வருஷக்காலமாய் பிரிந்திருந்த சகோதரர் சமாதானமாகி ஒன்றுகூடவும், தேவனுக்கும் தங்கள் ஜாதிக்கும் இருந்த உடன்படிக்கையை உறுதிப்படுத்திக்கொள்ளவும் ஏதுவாயிற்று.

இஸ்ரவேல் ராஜ்யமானது இக்காலத்தில் அவபக்தியில் அதிகரித்து மெய்ப்பக்தியில் குறுகியிருந்ததால், சன்மார்க்க விருத்திக்கடுத்த இந்த முயற்சிகளெல்லாம் பரியாசமாய் அவர்களுக்குள் பேசிக்கொள்ளப்பட்டன. அப்படிப்பட்டவர்கள் அரசனின் தூதுபதிகளைப் பார்த்து நகைத்து பரியாசம்பண்ணினார்கள்; மெய்மார்க்க விருத்தியை உண்டுபண்ணும்படி முயற்சிப்படுகிறவர்களை அவபக்தர் அவமதிக்கிறதும், நிந்திக்கிறதும் எக்காலத்திலும் வழக்கமாயிருக்கிறது. மெய்மார்க்கத்தைக் குறைக்கும்படி சாத்தான் செய்கிற பாதாள பிரயத்தனங்களில் இதுவும் ஒன்றாய் இருக்கிறதென்பதை ஆதிமுதலுள்ள சரித்திரமானது நமக்குக் காட்டுகிறது. ஆதலால் மெய்ப்பக்தியை வளர்க்க விரும்பும் பக்தர் தங்களுக்கு நேரிடும் எவ்வித குரூரமான நிந்தைகளையும் கவனித்து மலையக்கூடாது. 'கர்த்தர் தம்மைக் கனம்பண்ணுகிறவர்களைத் தாமும் கனம்பண்ணுவார்.'

அரசனுடைய விளம்பரத்தைக் கேட்ட இஸ்ரவேலர் அநேகர் பரியாசம்பண்ணினபோதிலும் சிலர் அதற்கிசைந்து இஸ்ரவேலின் தேவனை நமஸ்கரித்து அவரை துதிக்கும்படி எருசலேமுக்கு வந்தார்கள்; ஆனால் யூத ராஜ்யத்திலுள்ளவர்கள் எல்லாரும் யாதொரு தடைசொல்லாமல் ஒரு தாய் பிள்ளைபோல் ஒன்றுகூடி வந்தார்கள். பண்டிகைக்குத் திரண்டுவந்தவர்களால் எருசலேம் மகிழ்ச்சியாயிருந்தது. பதினாலு நாட்களாய் அவர்கள் பண்டிகை கொண்டாடி பக்தியின் அனலை மூட்டிக்கொண்டார்கள். அவர்கள் அனைவரும் ஏகமாய்க் கூடி அந்நிய தேவனுக்கென்று எருசலேமில் கட்டப்பட்டிருந்த விக்கிரகப் பீடங்களையெல்லாம் தகர்த்துப்போட்டு, அப்பால் தங்களுக்குக் கற்பிக்கப்பட்டிருந்த நியாயப்பிரமாணத்தின்படி பஸ்கா பலியைச் செலுத்தும்படி போனார்கள்; ஆசாரியர் ஊக்கத்தோடு மெய்த்தேவ அறிவை ஜனங்களுக்குப் போதித்து பிரஸ்தாபித்தார்கள்; அரசனும்

பக்திவைராக்கியத்தால் எழுப்புதலடைந்து ஜனங்களைத் தேவனுடைய பிரமாணங்களின் வழிகளில் நடக்கும்படி ஏவினார்.

பண்டிகை முடிந்துபோனதோடு அவர்கள் பக்தியும் முடிந்துபோகவில்லை; அவர்கள் தங்கள் இடங்களுக்குப்போய் மெய்த்தேவனை வணங்கும்படி மற்றவர்களை ஏவிவந்தார்கள்; அவர்கள் சிலைகளை உடைத்து, விக்கிரகத் தோப்புகளை வெட்டி, மேடைகளையும் பீடங்களையும் இடித்துப்போட்டதோடு, மோசேயால் செய்யப்பட்ட வெண்கல சர்ப்பத்தையும் உடைத்துப்போட்டார்கள். ஏனெனில் ஜனங்கள் அதற்குத் தூபம் காட்டிவந்தார்கள். மேலும் அதுமுதல் தேவாராதனைக் கிரமமாய் நடந்துவரும்படி எசேக்கியா ஆசாரிமாரை ஒழுங்குபடுத்தி, அவர்களுடைய ஜீவனத்துக்கு்ரிய ஏற்பாடுகளையும் திட்டஞ்செய்தார். இவ்வண்ணமாய் எசேக்கியா தேவனுடைய விஷயத்தில் எடுத்துக்கொண்ட முயற்சிக்கு ஒரு கணக்கில்லை. அவையனைத்தும் கர்த்தரால் அநுகூலப்பட்டு வந்தன.

இந்தச் செய்கையெல்லாம் நம்மை ஏவி எழுப்பிவிட வேண்டியதில்லையா? எசேக்கியாவின் முன்மாதிரி எவ்வளவோ சிறந்ததாயிருக்கிறது. ஒரு மனுஷன் எத்தனை ஆயிரம்பேருக்கு நன்மையை உண்டுபண்ணியிருக்கிறார்! அவர் அரசனானபடியால் அப்படிச் செய்தார், நானும் அப்படி அரசனானால் அதுவும் செய்வேன், அதற்கு மிஞ்சியும் செய்வேன் என்று சொல்லும்படி சிலருக்கு வாய் எழும்பலாம்; அப்படி நினைக்கலாகாது. எல்லா அரசரும் அப்படிச் செய்தார்களா? இல்லையே. தேவகாரியத்துக்கு அரசனென்றும் ஆண்டியென்றும் இல்லை; உலக விஷயத்தில் ஆண்டியாயிருக்கிறவன் தேவகாரியத்தில் அரசனாகலாம். நாம் எந்தெந்த நிலைமையில் வைக்கப்பட்டிருக்கிறோமோ அந்தந்த நிலைமைக்கு ஏற்றதாய் தேவவிஷயத்தில் பக்திவைராக்கியம் காட்ட வேண்டியதல்லவா! விசேஷமாய்க் கிறிஸ்தவர்களுடைய பலமும் ஊக்கமும் இவ்விதமாய்ச் செலவிடப்படவேண்டியது நியாயமாயிருக்கிறது. என்னால் என்ன ஆகுமென்று கை கட்டிக்கொண்டிருக்கிறது சரியா? நமக்கிருக்கிற சக்தியைக்

கொண்டு கர்த்தருக்கு ஊழியஞ்செய்துவந்தோமானால் தேவன் நம்மை ஆசீர்வதிப்பார். உனக்கு ஆளுகையும், அதிகாரமும் கொடுக்கப்பட்டிருந்தால் மற்றவர்களையும் அன்போடு கூட்டிச்சேர்த்து ஆண்டவரை மகிமைப்படுத்தும்படி பிரயாசப்படு. நீ உன் சொந்த பக்தியில் அவர்களை உற்சாகப் படுத்துகிறதுண்டானால் அவர்கள் உன்னோடுகூட தேவனுக்கு ஊழியஞ்செய்வார்களென்பது நிஜம். உன்னுடைய பக்தியுள்ள முயற்சிகளையும் வேலைகளையும் மற்றவர்கள் பழிக்கிறார்களே என்று நீ எண்ணவேகூடாது. உன் பழிப்பையல்ல, தேவமகிமையையே கருதி, நீ காரியங்களை நடப்பிக்க வேண்டியது; அப்பொழுது உன் பிரயாசத்துக்குத் திரண்ட பலனைக் காண்பாய். அதோடு தேவாலய நியமங்களையும் ஆராதனைகளையும் நீ அசட்டைசெய்யக்கூடாது. மெய்ப் பக்திவளர்ச்சி அவைகளுக்கு அநுகூலமென்று கண்டு தேவன் அவைகளை ஸ்தாபித்திருக்கிறார் என்று ஒத்துக்கொண்டு, அதை அநுசரித்துவரவேண்டியது. பழைய ஏற்பாட்டு சபை நியமங்களையும் ஏற்பாடுகளையும்போல கிறிஸ்து சபை ஏற்பாடுகளும் நியமங்களும் அவ்வளவு பிரயாசமும் பணச்செலவுமுள்ளதல்ல. அப்படியிருக்க, எத்தனையோபேர் அவைகளை அசட்டைசெய்கிறார்கள். தங்கள் வீடுகள் ஆலயத்துக்குச் சமீபமாயிருந்தாலும் ஆராதனைக்கு வராமல் படுத்திருக்கிறவர்களையும், வீடுமேல் வீடுகட்டி நிலத்தோடு நிலத்தை வாங்க பணமிருந்தபோதிலும் கர்த்தருக்கு மன உற்சாகமாய் காணிக்கை செலுத்தாத சபையாரும் இல்லையா? இப்படிப்பட்ட வழக்கங்களை ஒழித்து கிறிஸ்துவின் பிள்ளைகளுக்கேற்ற பக்திவைராக்கியத்தை உடையவர்களாயிருக்கவேண்டியது.

தேவபக்தியுள்ள எசேக்கியா கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட்டார்; ராஜ்ய விஷயத்தில் அவருக்கு பாக்கியமும் வாழ்வும் உண்டாயிற்று; அவர் பெலிஸ்தியரைக் கீழ்ப்படுத்தி, யூத ஜாதியை வெகுகாலமாய் அடக்கிக்கொண்டிருந்த அசூரியரின் ஆளுகையை உதறிப்போட்டார். என்றாலும் தேவன் அவருடைய விசுவாசத்தையும் பக்தி நிலைமையையும் பரீட்சிக்கும்படி அவரை இடுக்கத்துக்கும் வருத்தத்துக்கும் உட்படச் செய்தார்; அதனால் அவருடைய சத்துரு

ருக்கள் அவரை மேற்கொண்டு, அவரைப் பகைக்கிறவர்கள் அவரைத் துன்பப்படுத்தினார்கள். அவர் ராஜ்யபாரம் தாழ்ந்து அடியோடு எடுபட்டுப்போனதுபோலக் காணப்பட்டது. இந்த அவதியின் காலம் தேவன்மேல் அவர் வைத்திருந்த பக்திவைராக்கியத்தின் நிச்சயத்தை உலகத்துக்கு திருஷ்டாந்தரப்படுத்துவதாய் விளங்கின. அவருடைய எல்லா நற்குணங்களுக்கும் மேலாக விசுவாசம் என்னும் குணம் மேலிட்டிருந்ததென்பதை வேதத்தால் அறிந்துகொள்ளுகிறோம்.

எசேக்கியர் சிம்மாசனபதியான பதினாலாம் ஆண்டிலே அசூரிய அரசனாகிய சனகரிப்பு என்பவன் திரண்ட ரதகஜ துரகபதாதியுடனே எருசலேமுக்கு விரோதமாய் வந்தான்; எசேக்கியா அசூரிய ராஜாவுக்கு செலுத்தவேண்டிய கப்பத்தைச் செலுத்தாததுதான் சண்டைக்கு முகாந்தரமாயிற்று. அசூரிய ராஜ்யத்தின் உயர்ந்த உத்தியோகஸ்தரும் அவனுடன் வந்திருந்தார்கள்; அவர்கள் எருசலேமையும் யூதாவையும் அசூரியாவாக்கிப் போடவேண்டுமென்று வந்தார்கள் போல் இருக்கிறது. எசேக்கியா அவர்களைக் கண்டு பயந்து போனார். ஏனெனில் வடநாட்டாராகிய இஸ்ரவேல் ராஜ்யத்தை அவர்கள் சில காலத்துக்குமுன் அதம்பண்ணி அதன் ராஜ்யபாரத்தைக் குலைத்துப்போட்டார்கள். அது அவர் மனதைக் கலங்கடித்திருக்குமென்பதற்குச் சந்தேகமில்லை. ஆனால் அவர் கர்த்தர்பேரில் நம்பிக்கைவைத்து தன்னாலானமட்டும் தன் ராஜ்யத்தைப் பாதுகாக்கும்படி கொத்தளங்களைக் கட்டி, கோட்டையைப் பழுதுபார்த்து, ஜனங்கள் அனைவரும் தேவன்மேல் நம்பிக்கை வைக்கும்படி ஏவிவந்தார். சில நாளைக்குள்ளாக அவர் விசுவாசம் சற்றே குறைந்தது. எப்படியெனில், அவர் சில தானாபதிகளை எகிப்துக்கு அனுப்பி, தனக்கு உதவிசெய்யும்படிக்குக் கேட்டார். அது பலிக்கவில்லை. எசேக்கியாவைப்பற்றி நாம் இம்மட்டும் பேசிக்கொண்டுவந்த விஷயங்களுக்கு இது குறையாயிருக்கிறது மெய்யானாலும், எந்த பக்தனையாவது விசுவாச பர்வதத்திலிருந்து விழவில்லையென்று கண்டோமா? இல்லையே. மேலும் இவர் சிலரைப்போல கர்த்தர் காப்பாற்றுவாரென்று கைகட்டிக்கொண்டிராமல் தன்னாலான

முயற்சிகளை எல்லாம் செய்து எதிரிகளை முறியடிக்க முயன்ருரேயன்றி வேறல்லவென்று நாம் தியானித்துக்கொள்ள வேண்டியது. என்ருலும் எகிப்து அரசன் தனக்கு இதமான மறுமொழி கொடுக்கவில்லையென்று எசேக்கியா மனத்தாங்கலடைந்து தேவச் செயலைப்பற்றி சந்தேகித்து, சத்துருக்களை இனி எதிர்க்காமல் வெகுமதிகளால் அவர்கள் மனதை ஆற்றி அபராதத்தால் தன் ராஜ்யத்தையும் கிரீடத்தையும் மீட்டுக்கொள்ளுகிறது நல்லதென்று எண்ணிஞர்; அவர் தன் வீட்டிலிருந்த பொன் வெள்ளிகளோடு தேவாலயத்திலுள்ள பொன் வெள்ளிகளையும் எடுத்தும் போதாததால் கர்த்தருடைய ஆலயத்துக் கதவுகளிலும், நிலைகளிலும் தான் அழுத்தியிருந்த பொன்தகடுகளைக் கழற்றி அவை எல்லாவற்றையும் அசூரிய ராஜாவுக்குப் பகுதியும் அபராதமுமாய் அனுப்பிஞர். அசூரிய அரசன் பொன்னைக் கண்டவுடன் போய்விடுவானென்று நினைத்து இப்படிச் செய்தார். அவனே அவ்வளவையும் வாங்கிக்கொண்டு பின்னும் யுத்தஞ் செய்து அர்த்தநாசஞ் செய்வேனென்று அட்டகாசம் பண்ணிக்கொண்டிருந்தான். அவன் தன் பிரதானிகளையும் சேவகரையும் ஏவிவிட்டு, இஸ்ரவேலின் தேவனுகிய யேகோவாவைத் தூஷித்து, அவரை வணங்குவதை நிந்தித்து அவதூறு பண்ணிஞன்; அவனுடைய ஆட்கள் பேசின அவதூறுன வார்த்தைகளைக் கேட்ட உத்தமர் அனைவரும் வெட்கத்தால் மூண்டு, துக்கத்தால் தங்கள் வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டார்கள். இனி எசேக்கியா யாரிடத்தில் போக வேண்டியது? அவருடன் ஐக்கியமாயிருந்த அரசர் பின்வாங்கிப்போனுர்கள்; பொன்னும் வெள்ளியும் பிரயோஜனப்படவில்லை; நிந்தை தினந்தோறும் அதிகரித்தது; நெருக்கம் நாள்தோறும் பெருகிற்று; இனி எல்லாரும் விழவேண்டிய யேகோவாவின் பாதமே தஞ்சமென்று விழுந்தார். அவர் உடனே ஏசாயா தீர்க்கதரிசிக்கும் தன் ஜனத்தின் பிரதானிகளுக்கும் செய்தியனுப்பி, தேவாலயத்தில் போய்த் தன்னை இடுக்கத்திலிருந்து விடுதலையாக்கும்படி வேண்டிக்கொண்டார். அன்றையதினம் நடந்த ஆராதனை ஏசாயா தீர்க்கதரிசி மூலமாய்த்தான் நடந்திருக்குமென்று தோன்றுகிறது. அந்நாட்களில் கர்த்தருடைய ஆவி தீர்க்கதரிசிக்குண்டாகி

எசேக்கியாவைத் தைரியப்படுத்திற்று. அதாவது, 'இதோ, அவன் ஒரு செய்தியைக்கேட்டுத் தன் தேசத்துக்கு திரும்பு வதற்கான ஆவியை நான் அவன்மேல் அனுப்பி, அவனை அவன் தேசத்திலே பட்டயத்தால் விழப்பண்ணுவேன் என்று கர்த்தர் உரைக்கிறார்' என்று சொல்லியனுப்பினான். இந்த வார்த்தை விழப்போகும் மனுஷனுக்கு ஊன்றுகோல் கொடுத்ததுபோல் இருந்தது.

தீர்க்கதரிசி கூறின வரலாறுகள் நிறைவேற சில நாட்கள் சென்றன. இதற்குள்ளாக எதிரிகளின் அமளிகளும் அவதூறும் அதிகப்பட்டன; அவர்கள் ஜனத்துக்குள் குழப்பத்தையும் ராஜதுரோகத்தையும் உண்டுபண்ணத்தக்க போதனைகளையெல்லாம் அலங்கத்துக்கப்பாலிருந்து பொழிந்தார்கள். அவர்கள் நிந்தைகளையெல்லாம் எசேக்கியா தன் நெஞ்சத்திலே வைத்துச் சுமந்து கர்த்தருடைய பாதத்தில் கொட்டினார்; கடைசியாக எசேக்கியாவுக்கு அசூரிய அரசனிடத்திலிருந்து வேறொரு புதுக்கட்டளை கடிதம் வந்தது. அதில் அவர் தன்னையும் தன் ராஜ்யத்தையும் சமூலமாய் ஒப்புக்கொடுத்துவிடவேண்டுமென்று கேட்டிருந்ததோடு, யேகோவாவைத் தன் மனம் கொண்டமட்டும் அவதூறுபண்ணியுமிருந்தது. அரசன் தன் ராஜ்யநஷ்டத்தை அவ்வளவாய்க் கருதாமல், ஆண்டவரின் கனம் நஷ்டப்படுகிறதையே குறித்து அதிக மனவியாகுலப்பட்டார். அவர் அந்த நிருபத்தை வாங்கி வாசித்தவுடனே மனந்தாளாமல் கர்த்தருடைய ஆலயத்துக்குப் போய் முழங்கால்படியிட்டார். எசேக்கியாவே, நீர் வாழ்க! கர்த்தரை மேற்கொள்ளும் வகையைக்கடைசியாகக் கண்டுபிடித்துக்கொண்டீர்; எனக்கு நீர் ஜெபம்பண்ணப்போகிறதுபோல் தோன்றாமல் தேவனோடு போராடப்போகிறது போலிருக்கிறது. போராடும், எசேக்கியாவே போராடும்; நமது ஆபத்துக்களில் ஆண்டவர் தோள்கொடுக்காத பட்சத்தில் வேறு சகாயம் நமக்கேது? எசேக்கியா கர்த்தருடைய ஆலயத்துக்குப் போய் தனக்கு வந்த நிந்தை கடிதத்தை கர்த்தருக்கு முன்பாக விரித்து, பாரும், கர்த்தாவே பாரும்; வாசியும், தேவனே வாசியும் என்று சொல்லுகிறதுபோல் காட்டினார். எசேக்கியா கடிதம் விரித்த கையோடும் வானம்பார்த்த கண்ணோடும் விண்ணப்

பம்பண்ணும் காட்சியானது ஆவிக்கு எவ்வளவு எழுப்பு தலைத் தரவேண்டியது! மெய்யாகவே, எசேக்கியா மெய்ம் மறந்தவர்போல் தன் தேவனுக்கு முன்பாக விழுந்து மன் ருடுகிருர். ஆ! சிநேகிதரே! உங்கள் பிராணபகைஞர் உங்களை நெருக்கும்போதும் அவமானமும், நிந்தையும், துக்கமும் உங்களை ஆளும்போதும் எசேக்கியாவைப்போல பலிபீடத் துக்கு முன்பாக வந்து விழுந்து சகலத்தையும் ஆண்டவ ரிடத்தில் விரித்துச் சொல்லுங்கள்; சகாயம் கிடைக்குமோ என்று சந்தேகப்படவேண்டாம்; நமக்கு இரக்கங்காட்டவும் ஏற்ற சமயத்தில் சகாயஞ்செய்யவும் கிருபையை அளிக்க வுமே ஆண்டவர் கிருபாசனபதியாய் வீற்றிருக்கிருர்; ஆதலால் தைரியத்துடனே கிருபாசனத்தண்டை சேரக்கட வோம்.

எசேக்கியா விண்ணப்பம்பண்ணும்படி பிரவேசித்து, ஆவியானவரின் அனலால் மூட்டப்பட்டு சொல்வார்:— ‘கேருபீன்களின் மத்தியில் வாசம்பண்ணுகிற இஸ்ரவேலின் தேவனுகிய கர்த்தாவே, நீர் ஒருவரே பூமியின் ராஜ்யங்களுக் கெல்லாம் தேவனுனவர்; நீர் வானத்தையும் பூமியையும் உண்டாக்கினீர்; கர்த்தாவே, உமது செவியைச் சாய்த்துக் கேளும்; கர்த்தாவே, நீர் உமது கண்களைத் திறந்துபாரும்; சனகரிப் ஜீவனுள்ள தேவனை நிந்திக்கும்படிச் சொல்லி யனுப்பின வார்த்தைகளைக் கேளும்’ என்று சொல்லி அதை வாசித்து, ‘இப்போதும் எங்கள் தேவனுகிய கர்த் தாவே, நீர் ஒருவரே தேவனுகிய கர்த்தரென்று பூமியின் ராஜ்யங்கள் எல்லாம் அறியும்படிக்கு எங்களை அவன் கைக்கு நீங்கலாக்கி ரட்சியும்’ என்று விண்ணப்பம்பண்ணி னுர். அதே நேரத்தில் அவர் ஜெபம் கேட்கப்பட்டது. பூலோக ஜெபம் பரலோகம் ஏற பலநாள் செல்லாது. அரசன் ஆலயத்துக்குள்ளிருந்து அழுத முகத்தோடும் அங்கலாய்த்த மனதோடும் புறப்பட்டு வெளியே வந்தபோது தீர்க்கதரிசி யாகிய ஏசாயாவினுல் அனுப்பப்பட்ட ஒரு மனுஷன் வந்து சொல்வான்: ‘ராஜாவே, என்றைக்கும் வாழ்க! இஸ்ரவேலின் தேவனுகிய கர்த்தர் உரைக்கிறது என்னவென்ருல், அசீரிய ராஜாவாகிய சனகரிப்பினிமித்தம் நீ என்னை நோக்கிப் பண் ணின விண்ணப்பத்தைக் கேட்டேன்...அவன் இந்த நகரத்

துக்குள் பிரவேசிப்பதுமில்லை, இதின்மேல் அம்பு எய்வது மில்லை, இதற்குமுன் கேடகத்தோடு வருவதுமில்லை, இதற்கெதிராகக் கொத்தளம் போடுவதுமில்லை, அவன் இந்த நகரத்துக்குள் பிரவேசியாமல் தான் வந்த வழியே திரும்பிப்போவான்' என்று கர்த்தர் உரைக்கிறார் என்றான். அன்று இரவில் கர்த்தரால் அனுப்பப்பட்ட தூதன் அசீரியரின் பாளயத்தில் இலட்சத்தெண்பதினாயிரம் பேரைச் சங்கரித்தான். இதோ, அவர்களெல்லாரும் விடியற் காலத்தில் செத்த பிணங்களாய்க் கிடந்தார்கள்.

இந்தச் சரித்திரமானது தேவனை உறுதியாய்ப் பற்றிக் கொள்ளுகிறதினால் உண்டாகிய பாக்கியமும் வாழ்வும் இன்னதென்பதை நன்றாக வெளிப்படுத்துகிறது. அவன் துன்பப்படுத்தினாலும் கைவிடமாட்டார்; இனிமேல் கடைத் தேறுகிறதற்கு வழியில்லையென்று சொல்லத்தக்கதாக அவ் வளவு தாழ்வையும் நஷ்டத்தையும் அவர் உண்டுபண்ணலாம். ஆனால் அந்த நிலைமையிலேதான் தேவன் தமது சகாயத்தை யும் இரட்சண்யத்தையும் பூரணமாய் விளங்கப்பண்ண தீர் மானித்திருக்கலாம். இச்சமயத்தில் நாம் தேவன்பேரி லுள்ள பற்றுதலை விட்டு விடாமல், நீர் என்னைக் கொன்றா லும் உம்முடையபேரில் நான் நம்பிக்கையாயிருக்கிறேன் என்று ஒரே நிலையாய்ப் பிடித்துக்கொண்டிருக்க வேண்டியது. துன்பங்கள் நம்மை நெருக்கி நமது முழங்காலை முடங்கப் பண்ணுவது நல்லதுதான்; மற்றப்படி ஆண்டவரை நோக்கி அழுது கூக்குரலிட நமக்கு மனமும் வராது, அவருடைய கிருபைகள் நமக்குக் கிடைக்கவுமாட்டாது. எசேக்கியாவின் சரித்திரத்தால் மனுஷர் சோர்ந்துபோகாமல் எப்பொழுதும் ஜெபம் பண்ணவேண்டுமென்ற போதனை உணர்த்தப்பட்டிருக் கிறது. மனுஷர் சிலதரம் தங்கள் இடுக்கண்களையும் ஆபத் துகளையும் சொல்லி, அதற்கு இன்னின்ன மாதிரியான சகாயம் வேண்டுமென்று கேட்கிறதுண்டு. அப்படிப்பட்ட ஜெபம் சரியல்ல. தேவன் என்னென்ன வழியாக சகாயஞ் செய்வாரோ அதை அவருடைய இஷ்டத்துக்கு விட்டுவிட்டு தன் வருத்தத்தைச் சொல்லவேண்டியதுதான் நமது கடமை என்று உணர்ந்துகொள்ளவேண்டியது.

எசேக்கியா மறுநாள் விடியற்காலத்தில் சத்துருக்களின் பிணத்தைக் கண்டபோது தேவமகத்துவத்தை முன்னிலும் அதிகமாய் உணர்ந்ததோடு தன் ஜெபத்தை இவ்வளவு சீக்கிரமாய்க் கேட்ட தேவனுக்கு ஸ்தோத்திரமுண்டாவதாக என்றும் சொல்லியிருப்பார். இவ்விதமான ஜெயம் தனக்குக் கிடைக்குமென்று அவர் எண்ணி ஜெபஞ் செய்திருக்கவு மாட்டார். தான் சீரிய ராஜாவோடு செய்யும் யுத்தத்தில் தேவன் துணைநின்று ஜெயம் கட்டளையிடவேண்டு மென்று கருதியிருக்கலாம். கர்த்தரோ அதற்கு அதிகமான கிருபையைக் கட்டளையிட்டார். எசேக்கியாவே! நீ உன் பஞ்சுமெத்தையில் சுகமாய்த் தூங்கு; நான் உனக்காக யுத்தஞ்செய்து உன் சத்துருவைத் துரத்திவிடுகிறேனென்று ஆண்டவர் சொல்லிக்கொண்டு யுத்தத்தை நடத்தினது போலிருக்கிறது. அவர் தானும் போகவில்லை, தமது தூதரில் ஒருவனை அனுப்பினார். அந்தத் தூதன் ஒருவேளை மிகாவேலாய் இருக்கலாம். சம்மனசு கத்தி பிடித்தார், சனகரிப்பின் சேனை சர்வசங்காரமாயிற்று. ஆயிரம் காகத்துக்கு ஒரே கல் என்றதுபோல லட்சத்தெண்பதினாயிரம் அரக்கரைக்கொல்ல ஒரு தேவதூதன் போதுமானதாயிருந்தது. எசேக்கியாவே! இன்னும் சற்றுதூரம் அங்குமிங்கும் நடந்துதிரிந்து, மாண்டுகிடக்கும் சத்துருக்களைப் பாரும். அவ்வளவுபேரையும் ஜெயிக்க உமக்கு எவ்வளவு சேனை வேண்டும்? எவ்வளவு வில்லும், ஈட்டியும் பட்டயமும் வேண்டும்? எவ்வளவு ஆயுத்தம் வேண்டும்? எவ்வளவு பலமும் பணமும் வேண்டும்? இத்தனை ஆயிரம்பேர் கொல்லப்படுமுன் நீர் எத்தனை ஆயிரம்பேரை இழக்கவேண்டும்? கர்த்தர் தமது தூதனை அனுப்பி உமக்காக யுத்தஞ்செய்ததால் அவரை ஸ்தோத்திரிப்பதே உமது கடமை அல்லவா?

எசேக்கியாவுக்கு யுத்தஞ்செய்கிற வேலையில்லாவிட்டாலும் புதைக்கிறவேலை போதுமானமட்டுமிருந்தது. இந்தச் சங்காரத்தில் அசூரிய ராசன் அகப்படவில்லை; அவன் எப்படியோ தப்பியோடி தன் அரமனை சேர்ந்தான். இதினால் அவனைச் சாமர்த்தியனென்று சொல்லக்கூடாது. சேனைக்கு முன்னின்று சாவதல்லோ ராஜவீரியம்; இவன் ஒரு பெண் பிள்ளையைப்போல் அமளியைக் கண்டவுடனே ஓட்டம்

பிடித்தான். சனகரிப்பே, நீ ஓடு; நீ தப்பும்படியாகவா ஓடுகிறாய்? இல்லை, நீ சாக ஓடுகிறாய். சனக்ரிப் தன் நகரத்துக்குப் போனவுடன் தன் விக்கிரகதேவனைச் சேவிக்கப்போனான். ஒருவேளை எசேக்கியாவின் சேனை அவன் ராஜ்யத்துக்கு விரோதமாகப் புறப்பட்டுவருகிறார்களென்று அஞ்சி நிஸ்ரோகு[1] தேவனின் சகாயத்தைத் தேடினானுக்கும். அவன் நிஸ்ரோகின் கோவிலிலேபணிந்துகொள்ளுகிறபோது அவனுடைய இரண்டு குமாரரும் வந்து அவனைக் கொன்று போட்டார்கள்.[2] தேவதூதனுடைய பட்டயத்தால் தொடப்பட அவன் அவ்வளவு தகுதியுள்ளவனல்லவாக்கும்! மனுஷருடைய பட்டயத்தால் சாகிறதைவிட கர்த்தருடைய கத்தியால் சாகிறது மேன்மை; ஆதலால்தான் மனுஷர் கைகளில் விழாதிருப்பேனாக என்று ஒரு பக்தன் மன்றாடினார்.

இவ்வளவு அதிசயமானவிதமாய் எசேக்கியாவுக்கு சகாயம் கிடைத்தசெய்தி அத்திசையெங்கும் பெரும்

---

[1] நிஸ்ரோகு விக்கிரகத்தின் வரலாறு ஒன்றும் நமக்குத் தெரியாது. ஒருவர் நோவாவின் பேழையிலுள்ள ஒரு உத்திரத்துக்கோ, பலகைக்கோ கோவில்கட்டி அதை தேவனாக இதில் வணங்கிவந்தார்கள். என்கிறார். வேறொருவர் இதின் மூலபதத்தைக்கொண்டு கழுகுமுகமுள்ள ஒரு விக்கிரகத்தை இது குறிக்கிறதென்றும், இது நினிவேயின் விசேஷித்த விக்கிரகங்களில் ஒன்றென்றும், சொல்லுகிறார். பிந்தினது ஒருவேளை சரியான அபிப்பிராயமாக இருக்கலாம். ஏனெனில் நினிவேமதிலில் கழுகுமுகரூபமுள்ள மனுஷசாயல் சித்திரம் எழுதப்பட்டிருந்ததென்று சரித்திரங்களால் ருஜுவாகிறது.

[2] சனகரிப்புக்கு இந்த அகால மரணம் நேரிட்டதற்கு தோபியாவின் ஆகமத்தில் ஒரு காரணம் காட்டியிருக்கிறது. அவன் யூதேயாவிலிருந்து தப்பியோடிவந்ததுமுதல் தன் ராஜ்யத்திலும் விசேஷமாய் நினிவேயிலும் சிறையாயிருந்த யூதரெல்லாரையும் அநியாயமாய்க் கொலைசெய்து நினிவேயின் மதிலுக்கப்பால் எறிந்துபோட்டானாம். இந்தச் செய்கை குடிகளுக்குள்ளும் விசேஷமாய் அவன் குடும்பத்துக்குள்ளும் மகா எரிச்சலாய் பேசிக்கொள்ளப்பட்டதால், இப்படிப்பட்டவன் அரைநிமிஷம் ஆகாதென்று அவன் மக்களே துணிந்து கொலைசெய்தார்களாம் (தோபியாவின் ஆகமம் 1: 20–23 பார்).

பேச்சாக சொல்லிக்கொள்ளப்பட்டது. அதைக்கேட்ட பேரரசர், சிற்றரசர், பிரபுக்கள், துரைமக்கள் அனைவரும் தம்தம் அந்தஸ்துக்கேற்ற காணிக்கைகளோடும் வெகுமானங்களோடும் எருசலேமுக்கு வந்து, எசேக்கியாவுக்கு மங்களம் கூறி தங்கள் தேசத்துக்குத் திரும்பினார்கள். இதனால் குறைந்துபோன ஐசுவரியம் எசேக்கியாவின் வீட்டில் மறுபடியும் பெருகிற்று. அசூரியரின் கொள்ளைப்பொருளும் அதனோடு கூடவே, ராஜகஜானாவின் பொருளும் அதிகப்பட்டுப்போயிற்று. கர்த்தருடைய பரிசுத்தவான்களே! நீங்களெல்லாரும் அவரில் அன்புகூருங்கள்; உண்மையானவர்களைக் கர்த்தர் தற்காத்து இடும்பு செய்கிறவனுக்குப் பூரணமாய்ப் பதிலளிப்பார் (சங். 31:23).

சனகரிப்பின் சங்காரத்துக்குத் தப்பின எசேக்கியா சீக்கிரத்துக்குள்ளாக மரணத்துக்கேதுவாக வியாதிப்பட்டார். அந்த வியாதி இன்னதென்பதைப்பற்றி பலரும் பலவிதமாய் அபிப்பிராயப்பட்டபோதிலும் பிந்தின வரலாறுகளால் அது ராஜபிளவையென்று தெரியவருகிறது. அரசன் பிழைப்பாரென்று ஒருவரும் எண்ணவில்லை. ஏசாயா தீர்க்கதரிசிதான் இந்த வியாதிநேரத்தில் அரசனை அடிக்கடி போய்ப்பார்த்து தேவபக்திக்கடுத்த ஞானவார்த்தைகளைப் பேசிவந்தாரென்று தோன்றுகிறது. ஒருநாள் தீர்க்கதரிசி அரசனுடைய வியாதியின் அகோரத்தையும் அதினாலுண்டான சாக்குறியையும் கவனித்து, 'நீர் உமது வீட்டுக் காரியத்தை ஒழுங்குபடுத்தும், நீர் பிழைக்கமாட்டீர், மரித்துப்போவீர்' என்று சொன்னார். எசேக்கியாவை தேவன் அசூரியரின் கத்திக்குத் தப்பவிட்டாலும் தமது கத்தியை அவருக்கு நேரே ஓங்குகிறார். எசேக்கியா தனக்கு கிடைத்த சகாயத்தோடும், ஜெயத்தோடும், பொக்கிஷங்களோடும் விட்டுவிடப்பட்டால் மோட்சத்துக்கு முற்றும் தூரமாய்ப் போய்விடுவாரென்று எண்ணி, கர்த்தர் அவரை இப்படி சாகத்தக்க வியாதியால் சந்தித்தாராக்கும். மனக்கவலையோடு கூடிய லோகவாழ்வு நல்லதுதான்; துன்பம் கலந்த இன்பத்தைப்போல சுகமானது ஆத்துமாவுக்கு வேறொன்றுமில்லை.

வியாதிகாலத்தில் நம்மை மரணத்துக்கு ஆயத்தப் படுத்தும் குருக்கள் அகப்பட்டால் எவ்வளவு பாக்கியமென்று சொல்ல வேண்டியது! ஏசாயா தமது ஜீவகாலத்தில் எசேக்கியாவுக்கு தேவசித்தத்தை வெளிப்படுத்தும்படி முயன்றதோடு, மரணகாலத்தில் அவருடைய ஆத்துமா பரதீசின் படிகளில் பயமின்றி ஏறவும் கருதினார். ஒவ்வொருவரும் சாவுக்குமுன் நமது ஆத்தும வீட்டுக்காரியங்களை ஒழுங்கு படுத்திக்கொள்ள வேண்டியது அவசியம். தீர்க்கதரிசியின் வார்த்தைகள் அரசனுடைய இருதயத்தை ஆட்டிவிட்டது; அவர் எவ்வளவு பக்தியுள்ளவராயிருந்தபோதிலும் சாகப் பின்தாங்கினார். மரண பயத்தைக்கொண்டு ஒருவனுடைய மனதின் பக்தியைக் கணித்து விடக்கூடாது. மாம்ச பலவீனத்தால் எவ்வளவு பக்திமானும் மரண நதியைப்பார்த்து மயங்கலாம். ஒருவேளை இந்தச் சமயத்தில் எசேக்கியா மார்க்க விஷயத்திலும் ராஜ்யபார விஷயத்திலும் அநேக நிலையான ஏற்பாடுகள் செய்யவேண்டும் என்று தீர்மானித்திருக்கலாம். மரணத்தால் அத்தீர்மானங்கள் அழிந்து போகிறதே என்று கலங்கியிருக்கலாம். அக்காலத்தில் அவர் மரிக்கிறது மெய்யானால் சத்துருக்கள் பழிக்கவும், அவர்கள் மறுபடியும் யுத்தத்துக்கு வந்து யூதாவை நாசமாக்கவும் நேரிடலாம். மேலும் அதுமட்டும் அவருக்குப் பிள்ளையும் இருந்ததில்லை; தனக்குப்பின் பட்டம்பெற புத்திரனில்லையே என்றும் நினைத்து மனங்கலங்கியிருக்கலாம். ஏசாயாவின் வார்த்தைகளைக் கேட்டவுடனே அரசன் தன் முகத்தை சுவர்முகமாய்த் திருப்பிக்கொண்டு 'ஆ, கர்த்தாவே நான் உமக்குமுன்பாக உண்மையும் மன உத்தமமுமாய் நடந்து, உமது பார்வைக்கு நலமானதைச் செய்தேனென்பதை நினைத்தருளும்' என்று விண்ணப்பம் பண்ணி மிகவும் அழுதார். தீர்க்கதரிசி இனி நாம் அரசனண்டை நின்றால் அவர் வியாகுலம் அதிகரிக்கலாம் என்றெண்ணி, தான் சொல்லவேண்டியதை சொன்னவுடனே வெளியே போனார். அவர் பாதிமுற்றத்தை விட்டு அப்புறம் போகிறதற்கு முன்னே கர்த்தருடைய வார்த்தை மறுபடியும் தீர்க்கதரிசிக்கு உண்டாகி, அவர் அரசனண்டை திரும்பவும் வந்து மகாராஜாவே! மலையவேண்டாம்; கர்த்தர் சொல்லுகிறது என்ன

வென்றால், 'உன் விண்ணப்பத்தைக் கேட்டேன், உன் கண்ணீரைக் கண்டேன், இதோ, நான் உன்னைக் குண மாக்குவேன், மூன்றும் நாளிலே நீ கர்த்தருடைய ஆலயத் துக்குப் போவாய், உன் ஆயுளோடு இன்னம் பதினைந்து வருஷம் கூட்டுவேன் என்கிறார்' என்று சொன்னார். அதோடு தீர்க்கதரிசி ஒரு வைத்தியமும் சொன்னார், அதின்படி அத்திப்பழ அடையைப் பிளவையின்மேல் பற்றுப்போட்ட போது பிழைத்தார். இவ்வளவு சீக்கிரத்துக்குள் கேட்கப் பட்ட ஜெபம் தொகையில் கொஞ்சந்தான். இதினாலே பக்தி யுள்ள எசேக்கியா ஆண்டவருக்கு எவ்வளவு சமீபமாய்க் குடியிருந்தாரென்றும், கர்த்தர் அவருடைய சாவுக்கட்டி லின்மேல் உட்கார்ந்திருந்தாரென்றும் விளங்குகிறதல்லவா! ஜெபத்தால் க்ஷேமத்தைப் பெற்றுக்கொண்டதில் எசேக்கியா நமக்கு நல்ல திருஷ்டாந்தரமாயிருக்கிறார்.

வாசிக்கிறவனே! நீ இவ்விடத்தில் உன் மரணத்தைச் சற்றே தியானம் பண்ணுவாயாக:—நீ மரணத்துக்கு ஆயத்த மாயிருக்கிறாயா? நீ பிழைக்காமல் இன்று சாவாய் என்ற வாசகம் இப்போது கூறப்பட்டதென்று வைத்துக்கொள்; மரணமடைய நீ இப்போது ஆயத்தந்தானா? உன்னை வைக்கும் சவப்பெட்டியும், உனக்குக் குழிதோண்டும் மண் வெட்டியும், உன்னைச் சுமக்கும் பாடையும் ஆயத்தமாயிருக் கிறது; நீ சாக ஆயத்தமாயிருக்கிறாயா? உன் ஆத்தும வீட்டுக்காரியங்களை யெல்லாம் ஆயத்தப்படுத்தியிருக் கிறாயா? எசேக்கியாவுக்குக் கொடுக்கப்பட்ட தீர்ப்பு மாற்றப் பட்டதானாலும் உன் தீர்ப்பு மாறாமலிருக்கலாம். கர்த்தர் உன் மரணத்தைச் சமீபிக்கச் செய்தால் உன் நம்பிக்கை என்ன? இன்னும் பூமியில் இருக்கலாம் என்று ஆசைப் படுவாய் என்றே நினைக்கிறேன்; அந்த ஆசையின் நோக்க மென்ன? சுயநயத்தை நாடியா, தேவமகிமையை நாடியா? உன் ஜீவகாலத்தால் உன் ஆத்தும லாபத்துக்கும் பிறர் ஆத்தும வாழ்வுக்கும் யாதொரு பிரயோஜனமுமில்லை யென்றால் பலன் என்ன?

ஒருவேளை நம்மில் அநேகர் எசேக்கியாவைப்போல் மரண வாசலிலிருந்து மீண்டுவந்திருக்கலாம்; அப்படித் தப்பிப்

பிழைத்ததில் ஆத்துமாவுக்கு லாபம் உண்டா? பிராண அபாயத்துக்கு முன்னிருந்த பொல்லாப்பே நமது உள்ளத்தில் பின்னும் இருக்கிறதுண்டானால் முந்தினநோயால் மாண்டுபோயிருந்தால் நலமல்லவா? எசேக்கியா சுகமான பின்பு தன் தேவனுடைய கர்த்தரை முழுஇருதயத்தோடும் நேசித்துவந்தார். அவர் தாம் பெற்ற சுகம் கர்த்தருடைய கரத்திலிருந்து கிடைத்த ஒரு ஈவு என்று உணர்ந்து ஒரு ஸ்தோத்திரக்கீதம் பாடினார்.[1] இதினாலே அரசனுக்குக் கவிகட்டும் வரமும் இருந்ததென்று தெரியவருகிறது. பெரிய வியாதியிலிருந்து அற்புதமாய்த் தப்பினவர்கள் சுகமான உடனே அவருடைய ஆலயத்திற்குப்போய் ஆனந்த உதடுகளால் அவரை ஸ்தோத்திரித்து தங்களுடைய திராணிக்கு தக்க காணிக்கைகளைச் செலுத்தி, மீதியான ஜீவகாலத்தைப் பயபக்தியோடு பின்னிடுவது நியாயமாயிருக்கும்.

இந்த வரலாறுகளுக்குப்பின்பு நாம் எசேக்கியாவினிடத்தில் விளங்கிய பெருமையையும், பேர்ப்பிரஸ்தாபப் பிரியத்தையும் காண்கிறோம். எப்படிப்பட்ட பக்தனும் இடறி விழுகிறதை நாம் பார்க்கிறோம். இதினாலே நாமும் இடறி விழவேண்டுமென்பது பிரமாணமாகாமல், மனுஷசுபாவத்தின் பெலவீனம் இன்னதென்றுமாத்திரம் வெளியாகிறதாக நாம் தியானித்துக்கொள்ளவேண்டியது. எசேக்கியா மரணத்துக்கேதுவான நோயிலிருந்து தேவகிருபையால் பிழைத்த சங்கதி பல இடங்களில் பிரசித்தமாயிருந்தது. அதைக் கேள்விப்பட்டு பாபிலோன்தேசத்து ராஜா மங்கள உபசாரமடங்கிய கடிதத்தையும், வெகுமானங்களையும் சில தானாபதிகள் மூலமாய் அனுப்பினான். பாபிலோன் அரசன் இதோடு இதாய் தன் தானாபதிகள் எருசலேமின் வாழ்வையும், அந்த ராஜ்யத்து ஸ்திதியையும் அறிந்துகொள்ளவும் தந்திரம் பண்ணியிருந்தான் என்று நினைக்கவேண்டியதாயிருக்கிறது. பாபிலோன் ராஜ்யம் மகா பேரெடுப்புள்ளதாயிருந்தது. அங்கிருந்து தானாபதிகள் வந்ததே எசேக்கியாவுக்குப் பெருமையாயிருந்தது. அந்தப் பெருமையாலுண்டான மகிழ்ச்சியால் அரசன் மெய்மறந்து தன் பொக்கிஷ

[1] எசா. 38:9 முதல் 20 வரையும் பார்க்க

சாலை அனைத்தையும் வெள்ளியையும் பொன்னையும் கந்தவர்க்கங்களையும் நல்ல பரியமளதைலத்தையும் தன் பொக்கிஷ சாலையிலுள்ள எல்லாவற்றையும் காண்பித்தார். அவர்களுக்குக் காண்பியாத பொருளொன்றுமில்லை. ராஜாவின் செய்கை தேவனுக்கு விரோதமாயிருந்தது. அவர் உடனே தமது தீர்க்கதரிசியை அனுப்பி இப்படிக் காண்பித்ததால் அவருடைய குடும்பத்துக்கும் ராஜ்யத்துக்கும் உண்டாகும் பெரு நஷ்டத்தை அறிவித்தார். தீர்க்கதரிசியின் மூலமாய்க் கர்த்தர் விளம்பினபிரகாரம் சில வருஷங்களுக்குப் பின் பாபிலோனியர் எருசலேமைக் கொள்ளையிட்டு எசேக்கியாவின் புத்திரரைச் சிறைபிடித்துப்போனார்கள். இந்த வீண் டம்பம் பாராட்டாமல் வந்த பாபிலோனியருக்கு மெய்த் தேவனைப்பற்றிய அறிவை தன்னுடைய ஆசாரியரையும் வேதியரையும் கொண்டு புகட்டியிருப்பாரானால் இந்த நஷ்டம் உண்டாயிருக்கமாட்டாதல்லவா?

இந்தச் சம்பவங்களுக்குப் பிற்பாடு எசேக்கியாவுக்குப் புத்திர சந்தானமுண்டாயிற்று. இனி பிள்ளை பெற்று லாபமென்ன? சிறைபோகும் பிள்ளையைப் பெறுகிறதில் சிறப்புண்டா? எருசலேமுக்கு அரசனாகும் புத்திரன் பாபிலோனுக்கு அடிமை என்று கேள்விப்படுவது எவ்வளவு விசனமாயிருக்கிறது! இந்த தண்டனை அவரைத் தாழ்த்தும் ஒரு பெரிய தடியைப்போலிருந்தாலும் அவர் அதை பொறுமையோடு ஏற்றுக்கொண்டு முத்தமிட்டார். 'நீர் சொன்ன கர்த்தருடைய வார்த்தை நல்லதுதான்' என்று அரசன் பக்திவிநயத்தோடு சொன்னார்.

அப்பால் நாம் எசேக்கியாவைப்பற்றி யாதொரு குறையும் காண்கிறதற்கு இடமில்லை. தமக்குப் பதினைந்து வருஷ மாத்திரமிருக்கிறதை அவர் திட்டமாய் அறிந்து, தமது தேவனைச் சந்திக்கும்படி ஆயத்தப்பட்டுக்கொண்டே வந்தார். அடிக்கடி விழும் பெலவீன பாவிகளும் தேவனால் பலப்படுத்தப்பட்டு மோட்சபிரயாணத்தில் இடறாமல் நிலைநின்று கடக்கும்படி கர்த்தர் கிருபைசெய்கிறார். அவர் வல்லமையிலும் கனத்திலும் ஐசுவரியத்திலும் மேன்மேலும் வளர்ந்து வந்தார்; அவருடைய அன்பின் குடைக்குள் ராஜ்யம் சுகமாய்

வாழ்ந்துவந்தது. அவருடைய ஜீவகால ஓட்டம் முடிவான போது சர்வ ஜனமும் தம்தம் வீட்டில் சாவுவிழுந்ததுபோல் துக்கங்கொண்டாடினார்கள். அவர்கள் தங்கள் அரசன்மேல் கொண்டிருந்த மட்டற்ற மதிப்பினாலே அவரைத் தாவீது வம்சத்தாரின் கல்லறைகளில் பிரதானமான கல்லறையில் அடக்கம் பண்ணினார்கள். இவர் தேவனுடைய ராஜ்யத்தின் கனமான வேலைகளை நிறைவேற்றினதற்குப் பலனாக மறு உலகத்தில் குன்றாத வாழ்வையும், குறையாத பாக்கியத்தை யும் பெறும்படிப் போனார் என்றே சொல்லவேண்டியது.

யோசியா இராஜன்

எந்தெந்த வயதுக்கும் ஏற்றதாயும், அநுகூலமானதாயுமிருக்கிற மெய்ப்பக்தியானது வாலிபப்பிராயத்துக்கு அதிக ஏற்றதும் அநுகூலமானதுமாயிருக்கிறதென்று சொல்லவேண்டியது. வாலிபப்பிராயத்திலேதான் பெரும்பாலும் மாம்ச இச்சையின் மூர்க்கமும் சிற்றின்பங்களின் தொகையும் மிச்சமாயிருந்து, மனுமக்களின் மனதை பக்திநெறியிலிருந்து விழச்செய்துவிடுகிறதென்று காண்கிறோம். வாலிபத்திலுள்ள தன் பலம் முழுவதையும் தேவ விஷயங்களில் திருப்பி பத்தாவின் பாதத்தைப் பலமாய்ப் பிடித்துக்கொள்ளும் ஆத்துமாக்களை எவர்களும் புகழவேண்டியது நியாயந்தான். வாலிப வயதில் தேவதாபக்தியில் தங்கள் மனதைத் திருப்பி பூலோக மாய்கைகளினால் இழுக்கப்படாமல், பரலோக விஷயங்களில் கருத்துகொண்டு, கருமங்களைச் செய்துவரும் ஆட்களைப் பரலோகத்து சம்மனசுக்களும் பிரமிப்போடு கவனித்து அகமகிழ்ந்து வருகிறார்கள். இவ்வித அருள் நமது இயல்பான சடலத்துக்குள் இல்லையென்பது மெய்யானாலும் உன்னத அருளால் மனுமக்களுக்குக் கடாட்சம் பண்ணப்படுகிறதென்பதை எவரும் ஆட்சேபிக்கலாகாது. ஆண்டவர் பூலோக சந்ததிக்குள் பாலிய அருளால் பிரகாசித்து விளங்கி, முதிர்வயதுமட்டும் பக்திசுவாலையால் பிரகாசிக்கும்படி அவரை மன்றாடிவரவேண்டியது. அப்பொழுது பக்தியும் மெய்த்தேவ அறிவும் அதி தீவிரமாய் வையகமெங்கும் விளங்குமல்லவா!

இச்சமயத்தில் நாம் தியானிக்கப்போகும் யோசியா ராஜாவின் வரலாறுகள் வாலிப பக்தி வளர்ச்சியையும், அதினால் உலகத்துக்குண்டான பிரயோஜனங்களையும்நமக்கு ஒருவாறு தெளிவாகக் காட்டுமென்பது மெய்யாயிருக்கின்றது. யூத ராஜ்யத்தை ஆண்ட அரசர் பலர் துன்மார்க்கரா

யும் விக்கிரக பத்தியைத் தங்கள் நடுவில் பரிபாலித்துவருகிறவர்களாயும் இருந்தார்கள். ஒரு தேசத்தில் மெய்த் தேவனைப்பற்றிய அறிவும், வணக்கமும் அற்றுப்போகிற காலத்தில் அங்கே உண்டாகும் கேடுகள் இவ்வளவென்று எவராலும் சொல்லிமுடியாது. யோசியா அரசனுடைய பாட்டனாகிய மனாசே அரசன் தன் அரசாட்சியின் அந்திய காலத்தில் விக்கிரகாராதனையை நீக்கிப்போடுகிறதற்கும், மெய்த் தேவ அறிவை நிலைநிறுத்துகிறதற்கும் ஏற்ற பல பிரயத்தனங்களை ஆரம்பித்தார். என்றாலும் அவருடைய காலம் கிட்டினதாய் அவர் மாளவே அவராலுண்டான பல மார்க்க சீர்திருத்தங்களும், சன்மார்க்க ஒழுக்கங்களும் பரிபாலிப்பாரின்றி பாழாய்ப்போயின. அவனுக்குப்பின்பு கிரீடாதிபதியான ஆமோன் என்று பேருடைய அவன் மகனோ தேவபக்தியற்ற ஒரு அரசனாயிருந்தான். தன் தகப்பன் எடுத்தெறிந்துபோட்ட விக்கிரகங்களை இவன் திரும்பவும் வைத்து, அவன் இடித்துப்போட்ட பலிபீடங்களைக் கட்டி, அகற்றிப்போட்ட விக்கிரகத் தோப்புகளை மறுபடியும் ஸ்தாபித்தான். இவனுடைய ராஜ்யம் நெடுங்காலம் இருக்கவில்லை. இவன் கிரீடமணிந்த இரண்டாம் வருஷத்தில் தன் சொந்த ஊழியக்காரரின் பட்டயத்துக்கு இரையாகி பாடையிற் படுத்தான். அப்பால் குடிகள் அனைவரும் ஏகமாய்க் கூடி அவனுடைய குமாரனாகிய யோசியாவை அரசனாக முடிசூட்டினார்கள்.

யோசியா முடிசூட்டப்பட்ட காலத்தில் எட்டுவயதுடைய பாலியனாய் மாத்திரமிருந்தார். எட்டுவயதுள்ள இந்த பாலிய அரசனிடத்தில் நாம் என்ன நன்மையை எதிர்பார்க்கக் கூடுமென்று சொல்லுவது இயல்புதான். ஆனால் காரியம் அப்படியிருக்கவில்லை. இவருக்கு முன்னுள்ள பிதாவும், இவரோடிருந்த பல குடிகளும் விக்கிரகத் தொழும்பராயிருந்தபோதிலும் இவர் அவர்களொருவரையும் பின்பற்றவில்லை. பக்தர் கெட்டுப்போன பெருங்கூட்டத்தையல்ல, உத்தமமான சிறிய கூட்டத்தைத்தான் பின்பற்றுவார்கள். கிரீட மகத்துவமும், செல்வாக்கும், அந்தஸ்தும் இவருக்கு சிறுபிராய முதல் கிடைத்தபோதிலும் அவைகளில் ஒன்றையும் மெய்த் தேவபக்திக்கு விரோதமாய் அவர் கையாடத் துணியவில்லை.

அவர் பக்தியும் பரம அருளும் பெற்றிருந்த உபாத்தியாயரால் போதிக்கப்பட்டு வளர்க்கப்பட்டார் என்று சொல்லவேண்டியது. பாலிய பக்தி வளர்ச்சி அவரவர் படிக்கும் பள்ளிக்கூடத்தின் சன்மார்க்க ஸ்திதியிலும், மெய்த்தேவ பற்றுதலிலும் இருக்கிறதென்று தாராளமாய்ச் சொல்லலாம். அது முதல் பதினாறு பிராயமட்டும் அவருடைய வரலாறுகளைப் பற்றி நமக்கொன்றுந் தெரியாது. ஆனால் அவர் இன்னும் இளவயதாயிருக்கையில் தன் தேவனாகிய கர்த்தரை தேடும்படி துவக்கினார் என்று பரிசுத்த வேதாகமத்தில் வாசிக்கிறோம். இதை நாம் யோசியாவுக்குப் புகழ்ச்சியாக சொல்ல வேண்டுமேயன்றி அவரைப் படிப்பித்த உபாத்திமாருக்கும், மற்றும் கட்டுப்பாடுகளுக்கும் புகழ்ச்சியாக சொல்லக்கூடாது. வரவரத் தேறி தைரியங்கொள்ளும் வாலிபப்பிராயமானது உபாத்திக்கு அடங்கி கட்டுக்குட்படுகிறதில்லை என்பது உலக இயல்பென்று காண்கிறோம். யோசியா அரசன் தன் மனோற்சாகத்தால் துன்மார்க்க விஷயங்களைத் தன் மனதுக்குத் தூரப்படுத்தி, சன்மார்க்கத்தைக் கைப்பற்றிக்கொண்டாரேயன்றி வேறல்ல. தன் சிரசின்மேல் கிரீடத்தையும், காலின்கீழ் ராஜ்யத்தையும், இருபக்கங்களிலும் திரவியத்தையும், முன்னும்பின்னும் சேவையையுமுடைய ராஜகுமாரர் எந்த முகாந்தரத்தினாலாவது இப்படித் தங்களை முழுவதுமாய் தேவதாபக்திக்குக் கையளித்துவிடுவது அரிதான காரியந்தான்.

பாலிய மக்களே! வாலிப மாதரே! இந்த யோசியாவைப் போல உங்கள் ரத்தபுஷ்டியின் முதற்பலன்களையும், மனோதத்துவங்களின் முதல் அறுப்பையும் கடவுளுக்கென்று தத்தம்பண்ணினதுண்டா? நீங்கள் உங்கள் ஆத்துமவாழ்வுக்குரிய சன்மார்க்க நெறியில் நடக்க ஆரம்பித்திருக்கிறீர்களா? உங்கள் இளவயதில் சிருஷ்டி கர்த்தாவை நினைத்தீர்களா? ஐயோ! பக்திநெறியைப்பற்றி அணுவளவு கவலைப்படாமல் அங்குமிங்கும் திரிந்தலைகிற வாலிபரைப் பார்க்கும்போது சிலதரம் கண்ணீர்விட வேண்டியதாயிருக்கிறது. அவர்களில் பலர் தங்கள் வாலிபக் காட்சியின் பலமும், சுவாசத்தின் பலமும், நடையின் பலமும், நினைவின் பலமும், செவிப்புலன்களின் பலமும், உணவின் பலமும், மனோதத்துவங்

களின் பலமும், உலக இன்பங்களிலும், ஆசைகளிலும், மாம்ச இச்சைக்கடுத்த சகல விஷயங்களிலும் செலவிடப்பட வேண்டியது என்றும், கால்கள் தள்ளாடி, இடுப்புகள் நகண்டு, முதுகு கூனி, கை தளர்ந்து, செவி மந்தப்பட்டு, முகம் வதங்கி, கண் மங்கி, தலை நரைத்து, மூளை பெலவீனப் படும் விருத்தாப்பியகாலந்தான் வானத்துக்கடுத்த தெய்வீக விஷயங்களுக்குச் செலவிடப்படவேண்டுமென்றும் தப்பாய் எண்ணியும் பேசியும் வருகிறார்கள். அவர்கள் பிசாசுக்கு அடிக்கரும்பும் தேவனுக்கு நுனிக்கரும்பும் அதின் தழை களுந்தான் உண்டென்று வழக்குத் தீர்க்கும் நியாயாதிபதி களைப்போலிருக்கிறார்கள். நம்மை நேசித்த இயேசுநாதர் நமக்காகத் தமது பாலியத்தையும் வாலிபத்தையும் தந்த தோடு, எட்டாம்நாளின் இளம் ரத்தத்தையும் முப்பத்து மூன்றும் வயதின் மூர்க்கமுள்ள ரத்தத்தையும் தந்தா ரல்லவா! அவரை நேசிக்கும் மனுமகன் அப்படியே செய்யும் படி கடமைப்பட்டிருக்கிறான். இப்படிச் சொல்லும்போது அவரவர் தம்தம் வாலிப பாலிய பிராயங்களின் பல சோதனை களையும் கண்ணிகளையும் தியானித்து, என்னுடைய விழுத லுக்கும் லோக இன்ப ஜீவியத்துக்கும் ஒரு காரணமுண் டென்று தன்னைத் தேற்றிக்கொள்ள துவக்கலாம். அப்படிப் பட்ட சிநேகிதனே! யோசியா அரசனைச் சூழ்ந்திருந்த கண்ணி களின் தொகையும் தன்மையும் உனக்கு இல்லையென்பதை மாத்திரம் திட்டமாய் அறிந்துகொள்வாயாக.

சில பாலியரும் வாலிபரும் வெடிமருந்தில் நெருப்புப் பற்றுவதுபோல் திடீரென்று பக்தி சுவாலையால் கொளுத்தப் படுகிறதுண்டு. ஆனால் வெடிமருந்தின் அக்கினி யாரு மறியாமல் திடீரென்று அணைகிறதுபோல் தங்கள் பக்தியி லிருந்து மாறி உலகத்தில் விழுந்துவிடுவார்கள். யோசியா வின் காரியம் அப்படி யிருக்கவில்லை; அது பக்குவத்தோடு வளரும் பல பழமரங்களின் வளர்ச்சியைப்போல் நிலையான பக்தி வளர்ச்சியாயிருந்தது.

யோசியா எட்டாம் வயதில் பட்டம் பெற்றபோதிலும் ராஜ்யபாரத்துக்கடுத்த வேலைகளைத் தானாய் நிறைவேற்ற சில வருஷங்கள் சென்றன. அவர் தன் ராஜ்யபாரத்தின்

பன்னிரண்டாம் வருஷத்தில் தேவதா பக்தி வைராக்கியத்தால் மூண்டு, மேடைகள் தோப்புகள் சொரூபங்கள் விக்கிரகங்கள் ஆகிய இவைகள் அற்றுப்போகும்படி பிரயத்தனப்பட்டார். ஜனங்களும் அவருடைய கட்டளைகளுக்கு இணங்கி பாகாலின் பீடங்களை இடித்தார்கள், சிலைகளை உடைத்தார்கள், தோப்புகளை வெட்டினார்கள். அரசன் எடுத்த முயற்சி யூதேயா தேசத்தோடு மாத்திரம் இருக்கவில்லை. அக்காலத்தில் சீரியருக்குட்பட்டிருந்த இஸ்ரவேல் ராஜ்யத்திலுள்ள விக்கிரக ஸ்தலங்களுக்கும் அவர் போய் அங்கிருந்த பீடங்களையும் தோப்புகளையும் தகர்த்து, விக்கிரங்களை நொறுக்கித் தூளாக்கி, எல்லாச் சிலைகளையும் துண்டு துண்டாய் உடைத்துவிட்டு, விக்கிரக பூசாசாரிகள் பலரை கண்டதுண்டமாய் வெட்டி, அவர்கள் உடலைக் கொளுத்திப் போட்டு, பக்தி அனலோடும் வான பலத்தோடும் தன் ராஜதானிக்குத் திரும்பினார். இவ்வளவு வேலைகளை நடத்தும்படி எவ்வளவு ஆயத்தமும், ஒழுங்கும், தைரியமும், உன்னத பலமும் இருக்கவேண்டுமென்பதை நீயே கவனித்துக்கொள்ளவேண்டியது. இவையனைத்தும் நிறைவேற வேண்டுமென்று கட்டளையிட்டால் தன் மனப்படி நிறைவேறுதென்று உணர்ந்து, தானே சத்திய தேவனுடைய விசுவாசத்தைக் காக்கும் தளகர்த்தனாகிப்போனார். இதினால் அரசனுக்கு யாதொரு தொந்தரவும், ராஜ்யபாரத்தில் ஒரு குழப்பமும் நேரிடவில்லையென்பது நமக்குப் பின்னும் அதிசயத்தைக் கொடுக்கிறது. இதில் தேவனே கூட நின்று வேலையை நடத்தி குடிகளை அடக்கி வைத்தாரென்று சொல்லவேண்டியதாயிருக்கிறது. இக்காலத்துக் கிறிஸ்தவ அரசருக்கும் அதிகாரிகளுக்கும் தேவன் இப்படிப்பட்ட அருளைக் கொடுக்க வேண்டுமென்று நாம் ஒவ்வொருவரும் மன்றாட வேண்டியது. அவர்களுடைய கண்டிப்பினால் பல தீமைகள் அடங்கவும், அவர்கள் கண்சாடையால் அவைகள் விருத்தியாகவும் இடமுண்டென்பதை எவர்களும் ஆட்சேபிக்கமாட்டார்கள். இப்படிப்பட்ட வேலை ராஜாக்களுக்கு மாத்திரம் அடுத்ததென்று சொல்லிவிடாமல் என்னுடைய கடமையும் கொஞ்சமுண்டு என்று உணர்ந்து, அவரவர்

தங்களுடைய பிரயாசத்தால் அழித்துவிடக்கூடிய அவ பக்தியையும் ஆகாமியத்தையும் அழித்துவிடவேண்டியது.

யோசியா அவமார்க்கத்தையும் விக்கிரகாராதனையையும் அழித்துவிட்டதோடு, மெய்ம்மார்க்க பிரபல்லியத்துக்கடுத்த முயற்சிகளையும் செய்தார். இம்முயற்சிகளில் முதலாவதானது தேவாலயத்தைப் பழுது பார்த்ததுதான்; கர்த்தருடைய பரிசுத்த ஆலயமானது இதற்குமுன் ஆறு தடவை கொள்ளையிடப்பட்டு புறக்கணிக்கப்பட்டிருந்தது; கடைசியாக விக்கிரகாராதனை அந்நாட்டில் அதிகப்பட்டுப்போனதால் அதைத் தேடுவாரும் நாடுவாருமில்லாதிருந்தது; தேவாலயத்துச் சுவரும் அதையடுத்த கட்டடங்களும் பார்ப்பார் இல்லாமலும் பழுது பார்ப்பார் இல்லாமலும், பல இடங்களில் இடிந்து கட்டை மண்ணாய்க் கிடந்தது. அரசன் அதை மறுபடியும் சீராக எடுப்பித்து, அதில் தினந்தோறும் தேவ கட்டளையின்படி ஏற்படுத்தப்பட்ட பலிகளும் நியமங்களும் நடந்தேறி வரவும், ஆராதனைகளும் ஊழியங்களும் நடப்பிக்கப்பட்டு வரவும் திட்டம் செய்தார். ஆலயத்தைப் பழுது பார்க்கும்படி திரண்ட திரவியம் தேவையாயிருந்தது, அவையனைத்தையும் ராஜ கஜானாவிலிருந்து கொடுப்பது அவர் சுயாதீனத்திலிருந்தபோதிலும் ஜனங்களை இப்படிப்பட்ட நற்கிரியையில் பழக்குகிறது நலமென்றும், அவர்களுக்கு ஆலயத்தைப்பற்றிய கரிசனையை உண்டாக்க வேண்டுமென்றும் கருதி, நாடெங்கும் தண்டற்காரரை நியமித்தனுப்பி கர்த்தருடைய ஆலயத்துக்கென்று பணம் சேகரித்தார். ஜனங்களும் மனோற்சாகமாய் தங்கள் வெள்ளியையும் பொன்னையும் கொடுத்தார்கள்; போதுமான பணங்கள் சேகரிக்கப்பட்டவுடனே தேவாலயத்தைப் பழுது பார்த்துச் சிங்காரிக்கும் வேலை துடங்கப்பட்டது. இந்த வேலையில் அரசனும், ஆசாரியரும், பிரபுக்களும், சாதாரண புருஷரும் ஒன்றுபோல சம்பந்தப்பட்டிருந்தார்கள். தேவாலயத்துக்கும் தேவனுக்குமடுத்த வேலைகளை எல்லாரும் ஏகமாய்க் கூடிச் செய்யவேண்டியது, வெடிப்புகளைக் கட்டி, இடிந்துபோனதைச் சரிப்படுத்தி, சரிந்து விழுந்து கிடந்த கற்குவியல்களை அகற்றி இவ்வண்ணம் சகல வேலைகளையும் செய்துகொண்டு வரும்போது, ஆட்களை வைத்து வேலை

வாங்கிக் கொண்டிருந்த ஒரு பிரதானி கர்த்தருடைய கட்டளைகளடங்கிய நியாயப்பிரமாண பிரதியொன்றைக் கண்டெடுத்தான்.[1] தேவாலயம் பலதரம் கொள்ளையிடப் பட்டதாலும், விக்கிரகாராதனை தேசமெங்கும் வல்லமை கொண்டதாலும் தேவனுடைய பரிசுத்த பிரமாணங்கள் அடங்கிய வேதாகமமானது சகலராலும் கைவிடப்பட்டு காணாமலே போயிற்று. மேலும் விக்கிரகாராதனையை அதிக ஊக்கத்தோடு பிரபல்லியப்படுத்தி வந்த பல அரசர் வேதாகமத்தை அழித்துவிட்டிருந்தாலும் இருக்கலாம். அரசனாவது அக்காலத்திலிருந்த ஆசாரியராவது இப்படிப்பட்ட ஒரு தெய்வீக வெளிப்படுத்தல் இருக்கிறதென்பதை அறியாம லிருந்தார்கள். அந்த ஆகமத்தை அரசனுக்குக் காட்டவே அவர் அகமகிழ்ந்து அதிலடங்கியிருந்த பல விஷயங்களை வாசிக்கக் கேட்டு அதிசயித்து, ஆண்டவரைத் துதித்து அதிலுள்ள பிரகாரம் ஆலய ஊழியங்களையும் அரசாட்சிக் கிரமங்களையும் ஒழுங்குபடுத்தும்படி முயன்றார். அரசன் அப்பிரமாணங்களை வாசிக்கக் கேட்டு அக்காலத்திலிருந்த மார்க்க ஸ்திதியோடே அதை ஒத்துப்பார்த்து, ஐயோ! இவ்வளவாய் மார்க்கங் கெட்டுப்போயிற்றே என்று அங்கலாய்த்து, தேவதாபக்தி சுவாலையால் தேசத்தைப் பிரகாசிக்கத் தீர்மானம் செய்தார். யோசியா என்ற அவருடைய நாமத்துக்கு 'தேவனுடைய அக்கினி' என்று அர்த்தமாகும்; அந்தப் பத அர்த்தத்தின்படியே அரசன் பக்தி சுவாலையாய் அக்காலத்தில் பிரகாசித்து வந்தாரென்று சொல்ல வேண்டியது.

ராஜ்யத்துக்குள் அக்காலத்திலிருந்த அநேக கேடுகளை அரசன் நினைத்து மனம் நொந்து அதற்கு என்ன சம்பவிக்கும்படி திருவுளத்தில் தீர்மானிக்கப்பட்டிருக்கிறதென்பதை அறிய தேவனிடத்தில் சன்னதங் கேட்டார். அப்போது

[1] உடன்படிக்கைப் பெட்டிக்குள்ளிருந்த வேதாகமப் பிரதியை அல்லாமல் மகா பரிசுத்த ஸ்தலத்திலுள்ள மூலஸ்தானத்தில் தரையிலே கல்லால் செய்த ஒரு பெட்டிபோன்ற குழியில் ஒரு பிரதி வைக்கப்பட்டிருந்ததென்றும், ஆலயம் தளவரிசைப் போடப்பட்டபோது அது கண்டுபிடிக்கப்பட்டதென்றும் சிலர் அபிப்பிராயப்படுகிறார்கள்.

ஆண்டவர் உல்தாள் என்னும் ஒரு ஸ்திரீயைக்கொண்டு எருசலேமுக்கும் யூத ஜாதிக்கும் வரும் தீங்கனைத்தையும் கூறி, இவைகளில் ஒன்றும் யோசியாவின் காலத்தில் வராதென்றும் வாக்கருளினர். அரசன் அதைக் கேட்டு, நமது காலம் ஜெயகாலந்தானென்று தெம்பாயிருந்துவிடாமல் தாழ்ந்த சிந்தையோடும் ஜாக்கிரதையோடும் மார்க்க சீர்திருத்தத்தை நடத்தி வந்தார்.

இதிலே வேதாகம சம்பந்தமாய் நாம் அறிந்துகொள்ளும் பல படிப்பினைகள் வெளியாகிறதல்லவா! நாம் கர்த்தருடைய வேதத்தை மதித்து இரவும் பகலும் தியானித்து வர வேண்டியது; அதைப் பிரபல்லியப்படுத்துவதிலும் நாம் மனச்சோர்பு படலாகாது; ஏனெனில் அதில் ஒன்று இப் பூலோகத்தில் இல்லாவிட்டால் துன்மார்க்கத்தையும் பாவத்தையும் மட்டுப்படுத்த எவராலும் கூடாது. தேவனை மறக்கவும் மன இஷ்டப்போக்கை நிலைநிறுத்தவும் ஆசைப் படும் மனுஷர் அனைவரும் வேதாகமத்தை அடியோடு அகற்றிவிட அனுதினமும் முயன்று வருகிறார்கள் என்பதை யார் ஆட்சேபிக்கக்கூடும்? தேவவசனமோ பல பாஷைகளிலும் திருப்பப்பட்டு, பலர் கைக்கும் எட்டும்படி பிரசித்தஞ் செய்யப்பட்டிருக்கிறதினால்தான் இவ்வுலகம் இக்காலத்தில் இவ்வளவு ஸ்திதியிலாவது இருக்கிறது; அப்படியில்லாவிட்டால் காரியம் வேறே. இந்த ஆவியின் கட்கமானது ஆகாய சிலம்பத்துக்கேற்றதாயிராமல் அகத்துக்குள் கிரியைசெய்து ஆத்துமாவையும் ஆவியையும் ஊடுருவிபாய்ந்து மனுஷரை தேவனுக்குக் கீழ்ப்படுத்திவிடுகிறது. ஐயோ! பரிசுத்த வேதத்தை மதியாத கிறிஸ்தவர்கள் எத்தனையோபேரை இக்காலத்தில் காண்கிறோம். அவர்கள் அதை மூலைகளில் வைத்து பூச்சிகளுக்கு இரையாக்குகிறார்கள்; அநேகருக்கு அதிலடங்கிய திருவுளச்சித்தமும், ரட்சண்ய தேவநேசமும் தெரியாதிருக்கிறது. ராஜபுலவராகிய தாவீது ஒருதரம் தன் காலத்திலிருந்த அவபக்தரையும் வேதாகம விரோதிகளையும் கவனித்து, தமக்குள் அனல்கொண்டு, 'உமது வேதத்தை மனுஷர் காத்துநடவாதபடியால் என் கண்களிலிருந்து நீர்த் தாரைகள் ஓடுகிறது' என்று புலம்பினர். அதே வசனத்தை இக்காலத்திலும் சொல்லவேண்டியதுதான். 'கர்த்தருடைய

வேதத்தில் பிரியமாயிருந்து இரவும் பகலும் அதின்மேல் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்.'

கர்த்தருடைய நியாயப்பிரமாணத்தின்படி தான் விரும்பிய மார்க்க சீர்திருத்தத்தை நிறைவேற்றும்படி அரசனும் பிரபுக்களும் உடன்படிக்கைப் பண்ணிக்கொண்டார்களென்றும் பார்க்கிறோம். மனுஷர் மனுஷரை ஆளும்படி பிரமாணமும் கட்டுப்பாடுகளும் எவ்வளவு அவசியமோ, அவ்வளவு தன்னைத்தானே ஆளும்படி உடன்படிக்கை செய்துகொள்ளுகிறதும் அவசியந்தான். இம்மட்டோடே அரசன் காரியத்தை முடித்துவிடாமல், நாடனைத்தும் ஏகமாய்க் கூடி சத்தியமார்க்கத்தை நிலைநிறுத்துவதற்குரிய உடன்படிக்கைகளைச் செய்கிறதும் நலமென்று கண்டு, பட்டணங்கள்தோறும் பறைசாற்றி பஸ்கா உற்சவம் கொண்டாடவும் கட்டளையிட்டார். இந்த விசேஷித்த உற்சவமானது அநேக ஆண்டுகளாக கைக்கொள்ளப்படாமலிருந்தது. இந்த உற்சவகாலத்தில் அரசன் தமது பேரின் பத அர்த்தப்படியே தேவ அக்கினியாய் விளங்கினார். அந்த உற்சவ சடங்குகளும் நியமங்களும் ஜனங்களுக்குத் தெரியாமலிருந்தது. அரசன் ஆசாரியரை ஏவி அதின் முறைமைகள் அனைத்தையும் ஆராயும்படிச் செய்து அவைகளை நிறைவேற்றும்படி கண்டிப்பு செய்தார். இவ்விஷயத்தில் அரசன் ஏவும் ஆளும், ஆசாரியர் ஆசரிப்பு செய்யும் ஆட்களுமாயிருந்தார்கள். நகரங்களிலும் நாட்டுப்புறங்களிலுமிருந்து கணக்கற்ற ஜனம் இந்த உற்சவத்துக்கென்று கூடி.வந்தார்கள். அநேகமாயிரம் ஆடுகளும் பலியிடப்பட்டன; ஜனங்களும் அரசனும் பக்தி விநயத்தோடு பத்தாவைத் தொழுதுகொண்டார்கள். இவ்வளவு திட்டவட்டமான ஒழுங்கோடும் திரண்ட கூட்டத்தோடும் முந்தின எந்த அரசர் காலத்திலும் அந்த உற்சவம் ஆசிக்கப்படவில்லை. அரசன் நடப்பித்த இந்த உற்சவமானது சுமார் 500 வருஷத்துக்குமுன் சாமுவேல் தீர்க்கதரிசியின் காலத்தில் நடந்த பஸ்கா உற்சவம்போலிருந்ததென்று வாசிக்கிறோம். சிலர் மார்க்கமானது ஏழைகளுக்கு மாத்திரம் உரியது, அரசர் குடிகளை அடக்கும்படி இது ஒரு நல்ல முறையேயன்றி வேறல்லவென்று பழிப்பாய் இகழ்வதுண்டு. இது பேயின் ஏவுதலாலும், பாவத்தின் ஆவலாலும்

உண்டாகும் வீண் பழிப்பேயன்றி வேறல்ல. இவ்வண்ணம் அரசன் மார்க்கவிஷயத்தில் செய்துவந்த நல்முயற்சிகள் வரவர விருத்தியாகிவந்தன. குடிகளில் பலர் உத்தம இருதயத்தோடு தங்கள் பிதாக்களின் தேவனை அண்டினார்கள்.

இவ்வளவு பிரயத்தனங்கள் செய்தபோதிலும் குடிகளில் பலர் அவபக்தியில் வளர பலநாள் செல்லவில்லை. அவர்களில் அநேகர் உயரமான சகல மலையின்மேலும், பச்சையான சகல மரத்தின்கீழும் போய் விக்கிரகாராதனை செய்தார்கள். ஆகையால் அவர்களுக்காக வைக்கப்பட்டிருந்த தண்டனையின் காலம் சமீபித்துவந்தது.

பஸ்கா உற்சவம் கொண்டாடின பதின்மூன்று வருஷத்துக்குப்பின்பு எகிப்திய அரசன் அசீரிய அரசனுடன் யுத்தஞ் செய்யும்படி யோசியா அரசனுடைய நாட்டின் வழியாக வந்தான். யோசியா தன்மட்டிலிருந்துவிடாமல் அவனைத் தடுத்தார். எகிப்து அரசன் படையெடுத்துவந்தது தேவ தீர்மானமாயிருந்தது. அதை யோசியா அறிந்தபின்பும், தான் அசீரிய அரசனுக்குத் துணைநிற்கும் பாவனையாய் அவனை எதிர்த்து அவனோடு போர்புரிந்தார். இது கர்த்தரின் பார்வைக்குத் தகாததாய்க் கண்டது. அந்த யுத்தத்தில் யோசியா காயப்பட்டு, நகரத்துக்குக் கொண்டுபோகப்படும் வழியில் மாண்டு தன் பிதாக்களின் கல்லறையில் அடக்கம் பண்ணப்பட்டார். யூதருடைய அக்கிரமத்தினிமித்தம் தேவனால் நிறைவேற்றப்படும் தண்டனைகளை அவர் கண்காணாதபடிக்கு ஆண்டவர் அவரை முன்னமே எடுத்துக்கொண்டார்.

யோசியா மரித்த மூன்றாம் வருஷத்தில் அவருக்குப்பின் சிம்மாசனபதியான அவர் குமாரன் கைதியாக்கப்பட்டான். நல்ல யோசியா கடைசியில் புத்திக்கெட்டுப்போனாரென்று நாம் குற்றஞ்சொல்லவேண்டியதில்லை. நாம் தேவதாபக்தியில் நடந்துவந்தபோதிலும், திடீரென்று உண்டாகும் ஒரு அற்பத் தவறுதலினாலே தேவ தண்டனைக்குள்ளாகவேண்டியது வருமென்று இதினாலே உணர்ந்துகொண்டு, எப்பொழுதும் விழிப்புள்ளவர்களாய் தேவ கிருபையைக் கையாடிவரவேண்டியது.

எஸ்றா

நாம் பூர்வ சரித்திரங்களைப் பரிசோதித்துக்கொண்டு வரும்போது மனுப்புத்திரர் பெரும்பாலும் சன்மார்க்கத்தையும் தேவ ஆராதனையையும் சேதப்படுத்தி அழித்துவிடும்படி பிரயாசப்படுகிறார்களென்றும், தேவன் அதற்குத் துணையாக காலாகாலங்களில் பக்தாட்களை எழுப்பி அதை நிலைநிறுத்தி வருகிறாரென்றும் அறிந்துகொள்ளலாம். ஆண்டவர் இந்தப் பெரிய சகாயத்தைச் செய்யாவிட்டால் இப்போது பூலோகம் அதிக கேடான ஸ்திதியிலிருக்கும். பூமியை உம்மை அறிகிற அறிவால் நிரப்புகிற தேவனே! உமக்கு ஸ்தோத்திரமுண்டாவதாக. இந்தப் பூலோக சம்பந்தமாயுள்ள தேவ ஆளுகையானது அவருடைய மகிமையை விளங்கப்பண்ணும் திருச்சபையின் வாழ்வையே கருதிக்கொண்டிருக்கிறது. அவர் தமது சபையை இவ்வுலகத்தில் ஸ்தாபிக்கும்படி வல்லமையுள்ள அரசரையும் அடக்கி விஸ்தாரமான ராஜ்யங்களையும் குறைத்து அவர்கள் மகிமைகளையும் தரைமட்டும் தாழ்த்தியிருக்கிறார்.

இப்பொழுது நாம் வாசித்தறியப்போகும் எஸ்றாவின் வரலாறுகள் அதிக விசேஷமுள்ளதாயிருக்கிறது. இம்மட்டும் நாம் புகழ்ச்சியாயும் பெருமையாயும் பேசிவந்த யூதஜாதியார் தங்கள் அரசனோடும், தீர்க்கதரிசிகளோடும், ஆசாரியரோடும் நமது தேசத்துக்கு வடமேற்கே இருக்கும் பாபிலோன் தேசத்தில் சுமார் எழுபதுவருஷம் சிறையிலிருந்து ஆண்டவரை நோக்கி ஓலமிட்டபோது, தேவன் அவர்களை விடுதலை செய்யும்படி கிருபைகூர்ந்தார். இந்த விடுதலையானது யூதஜாதிக்குக் கிடைத்த பெரும் சகாயமாய் மாத்திரமல்ல, உலகமனைத்தையும் தழுவும் பாக்கியமாயுமிருக்கிறது. ஏனெனில் இந்த விடுதலையில் எருசலேமில் மறுபடியும் குடியேறின யூதர் உலக இரட்சகராகிய இயேசு

கிறிஸ்துவின் வெளிப்படுத்தலுக்கு உலகத்தை ஆயத்தப் படுத்தும்படியாக தொலைந்துபோனதுபோல் காணப்பட்ட மெய்த் தேவ வணக்கத்தை மறுபடியும் ஸ்தாபிக்கவும் ஏதுவாயிற்று. அவர்கள் எருசலேமில் ஏககாலத்தில் வந்து குடியேறாமல் பல காலங்களில் பல முகாந்தரமாய் வந்து சேர்ந்தார்கள். இதில் நாம் அவர்களுடைய முதலாம் விடுதலையைப்பற்றி மாத்திரம் எஸ்றாவின் ஆகமத்தைக் கொண்டு பேசுகிறோம்.

காலாகாலங்களில் எழும்பின தேவனுடைய தீர்க்கதரிசிகள் பலர், யூதர்கள் என்றென்றைக்குமல்ல எழுபதுவருஷம் மாத்திரம் சிறையிலிருப்பார்களென்றும், அந்த எழுபது வருஷ முடிவில் அவர்கள் ஒரு அஞ்ஞான அரசனால் விடுதலையாக்கப்பட்டு மறுபடியும் தங்களுடைய தேசத்துக்குத் திரும்புவார்களென்றும், அவர்களைச் சிறைபிடித்த பாபிலோன் ராஜ்யமே சிறையாக்கப்பட்டு சின்னாபின்னப்பட்டுப் போமென்றும் தீர்க்கதரிசனமுரைத்திருந்தார்கள். யூத ஜாதியை விடுதலையாக்கும் அஞ்ஞான அரசனுடைய பேர் இன்னதென்பதையுங்கூட தேவன் 200 வருஷங்களுக்கு முன்னே அறிவித்திருந்தார். அவன் கோரேஸ் என்பவனே. கோரேஸ் என்ற பதத்துக்கு மேய்ப்பன் என்று அர்த்தம். தேவனுடைய தீர்க்கதரிசிகளின் வார்த்தைகளின்படியே கோரேஸ் 200 வருஷங்களுக்குப்பின்பு எழும்பி பாபிலோன் ராஜ்யத்தைப் பாழாக்கி அதன் மகிமையனைத்தையும் உரிந்து கொண்டான்.

அவன் ஒருநாள் தற்செயலாய் ஏசாயாவின் ஆகமத்தை வாசித்துக்கொண்டிருக்கையில் (இந்த ஆகமம் ஒருவேளை பாபிலோனின் கொள்ளைப்பொருளோடு வந்து சேர்ந்ததாயிருக்கலாம்) தன் பேரைக் குறித்து 'அவன் என் மேய்ப்பன், அவன் எருசலேமை நோக்கி நீ கட்டப்படு என்றும், தேவாலயத்தை நோக்கி நீ அஸ்திபாரப்படு என்றும் சொல்லி எனக்குப் பிரியமானதையெல்லாம் நிறைவேற்றுவான்'[1] என்றெழுதிய வாசகத்தையறிந்து, தேவாவியால் தொடப்

---

[1] எரே. 29:10; ஏசா. 44:28; 45:1-4.

பட்டு பின்வரும் விடுதலை விளம்பரத்தைப் பிரசித்தப்படுத்தினான். 'பரலோகத்தின் தேவனாகிய கர்த்தர் பூமியின் ராஜ்யங்களையெல்லாம் எனக்குத் தந்தருளி, யூதாவிலுள்ள எருசலேமிலே தமக்கு ஆலயத்தைக் கட்டும்படிக்கு எனக்குக் கட்டளையிட்டிருக்கிறார். அவருடைய ஜனங்களெல்லாரிலும் எவன் உங்களுக்குள்ளிருக்கிறானோ, அவனோடே அவனுடைய தேவன் இருப்பாராக; அவன் யூதாவிலுள்ள எருசலேமுக்குப்போய், இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டக்கடவன்; எருசலேமில் வாசம்பண்ணுகிற தேவனே தேவன். அந்த ஜனங்களில் மீதியாயிருக்கிறவன் எவ்விடத்தில் தங்கியிருக்கிறானோ, அவ்விடத்து ஜனங்கள் எருசலேமிலுள்ள தேவனுடைய ஆலயத்துக்கென்று அவனிடத்தில் உற்சாகமாய்க் காணிக்கை கொடுத்து அனுப்புகிறதுமன்றி, அவனுக்குப் பொன் வெள்ளி முதலிய திரவியங்களையும், மிருகஜீவன்களையும் கொடுத்து, உதவிசெய்யவேண்டுமென்று பெர்சியாவின் ராஜாவாகிய கோரேஸ் அறிவிக்கிறார் என்று தன் ராஜ்யமெங்கும் எழுதியனுப்பி விளம்பரம் பண்ணுவித்தான் (எஸ்றா 1:2–4).

மேலே சொல்லிய ராஜ விளம்பரம் நாடு நகரங்களில் பிரசித்தமாயிற்று. அதைக் கேட்ட யூதரில் எவர்களுடைய மனதில் தங்கள் சுயதேசத்துக்குப் போகவேண்டுமென்று நாட்டம் கொண்டதோ அவர்களனைவரும் உடனே கும்பு கூடி புறப்பட்டார்கள். போகப் பிரியமற்று பாபிலோன் வாழ்வைப் பெரிதாய் எண்ணிக்கொண்டிருந்தவர்களும், அவர்களைச் சுற்றிலும் குடியிருக்கிற யாவரும் மன உற்சாகத்தோடு காணிக்கை கொடுத்து அவர்களைத் தைரியப்படுத்தினார்கள். அதோடு கோரேஸ் அரசன் பாபிலோனின் சொத்துக்களோடு கண்டுபிடித்த எருசலேம் ஆலயத்துப் பொன் வெள்ளிப் பாத்திரங்கள் அனைத்தையும் ஒரு அதிகாரி வசம் ஒப்புவித்து, ஆலயம் கட்டி முடிந்தவுடனே ஆசாரியர் வசம் ஒப்புவித்துவிடவும் திட்டஞ் செய்யப்பட்டிருந்தது. அந்தப் பாத்திரங்களின் தொகை ஐயாயிரத்து நானூறு உருப்படி.

எருசலேமுக்குப் போக பிரியமான ஜனங்களைக் கண்காணிக்கும்படி செருபாபேல் என்னும் ஒரு அதிபதி ஏற்

படுத்தப்பட்டான். அவனுடைய கட்டளைக்கு அடங்கி சபையாரும், ஆசாரியரும், பாடகரும், பாடகிகளும், வேலைக்காரருமாக சுமார் அரை லட்சம் ஜனம் கும்பல் கும்பலாய்த் திரண்டு போனார்கள். மோசே முன்னொரு காலத்தில் ஆறு லட்சம் புருஷரை ஆடுகள்போல் நடத்தினார்; இப்போது இவர் அரை லட்சம் பேரை ஆட்டுமந்தை போல் நடத்திக்கொண்டுபோய் எருசலேமின் எல்லைக்குள் சேர்த்தார். இந்தச் சிறை மீட்புக்கும் மோசேயின் மீட்புக்கும் அதிக வித்தியாசமிருந்தது. பார்வோன் இஸ்ரவேலரை விடுதலை செய்யும்படி அடையாளங்களும் அற்புதங்களும் வேண்டியதாயிருந்தன; இந்த விடுதலைக்கு அப்படி வேண்டியிருந்ததில்லை. வந்த ஜனங்கள் எவ்வளவேனும் சோம்பலாயிராமல் முதலாவது பலிபீடத்தைக் கட்டி முடித்து அதன் மேல் அந்திசந்தி பலியிட்டு வந்தார்கள்; ஒவ்வொரு கிறிஸ்தவனும் தான் அன்றாடகம் அந்தியும் சந்தியும் பலிசெலுத்தக் கடமைப்பட்டவனாயிருக்கிறான் என்பதை உணர்ந்து கொள்ளவேண்டியது. தன் இருதயத்தில் தேவ அன்பையும் மதிப்பையும் இரட்சண்ய வாழ்வையும் ருசித்துக்கொண்டவன் தேவனுக்குத் தன் இருதயத்தை ஜெபத்தின் மூலமாயும் ஸ்தோத்திரத்தின் மூலமாயும் படைக்கும்படி கடமைப்பட்டவனாயிருக்கிறான் என்பதை நன்றாக அறிந்து கொள்ளுவான். பலிபீடம் கட்டி சிலநாளைக்குப் பின்பு ஆலயத்தைக் கட்டும்படி அஸ்திபாரம் போட்டார்கள். அந்த ஆராதனை மகா சிறப்பாக நடந்தது; நிலையங்கி தரித்த ஆசாரியர் பூரிகைகளை ஊதினார்கள், லேவியர் மேளதாளங்களைக் கொட்டினார்கள், பாடகர் இரண்டு பவுஞ்சாக நின்று கொண்டு,

கர்த்தர் நல்லவர், அவர் கிருபை என்றுமுள்ளது
இஸ்ரவேலின்மேல் அவர் கிருபை என்றுமுள்ளது

என்றும் பாடினார்கள்; பாடகரின் துதியோடு ஜனங்கள் எல்லாரும் கெம்பீரமாய் ஆர்ப்பரித்தார்கள். ஆனால் பாட்டோடு புலம்பும் குரலும் கேட்டது அக்கூட்டத்தில் முந்தின ஆலயத்தின் மேன்மையையும் அழகையும் கண்ட பல விருத்தாப்பியரும் இருந்தார்கள்; அவர்களுக்கு இது புலம்பும் நாள்போல இருந்தன; அவர்கள் மிகவும் அழுதார்கள்.

மொத்தமாய்ச் சொன்னால் பாட்டோடு புலம்பலும்கூட ஏக முழக்கமாய் முழங்கிற்று.

ஆலயம் அஸ்திபாரம் போட்ட சில காலத்துக்குள்ளாக கோரேஸ் அரசன் ஒரு யுத்தத்தில் மடிந்தான்; அவனுடைய குமாரன் கிரீடாபிஷேகம் பெற்றான். கோரேஸ் மாண்டான் என்ற செய்தி யூதருடைய சத்துருக்களுக்கெல்லாம் ஆனந்தத்தைக் கொடுத்தது; ஏனெனில் யூதர் மறுபடியும் ஒரு ஜாதியாக வந்து கூடுவதும், மேன்மையடைவதும் அநேகருக்கு காய்மகாரமாயிருந்தது. ஆதலால் அவர்கள் தேவாலயக் கட்டட வேலையைத் தங்களாலானமட்டும் தடுக்கும்படி பிரயாசப்பட்டார்கள்; அவர்களில் சிலர் பரிதானத்தினாலும், வேறு சிலர் பகையினாலும் ஏவப்பட்டு யூதருக்கு விரோதமான பல காரியங்களைப் பிரியாதாக எழுதி, அவர்களை ராஜ துரோகிகளென்றும், ராஜ கட்டளையை விரோதிக்கும் இடும்பர் என்றும் குற்றஞ்சாட்டி கட்டட வேலையைத் தடுக்கும்படி எழுதினார்கள். புதிய அரசன் தன் பிதாவின் கட்டளைகளின் காரணத்தை ஆய்ந்தோய்ந்து பாராமல், கட்டட வேலைகளை மறு உத்தரவு வருமட்டும் நிறுத்தும்படி கட்டளையிட்டான். பிதாவுக்கு மகன் எவ்வளவு வித்தியாசமான குணமாயிருக்கிறது என்று பாருங்கள்! இந்தக் கட்டளையின்படியே தேவாலயம் அஸ்திபாரம் போட்டபடியே அநேக வருஷங்களாய்க் கிடந்தன. அந்தக் காலத்தில் மெய்த்தேவனுக்கென்று இந்தப் பூலோகத்தில் ஒரே ஒரு கட்டடமாத்திரமிருந்தது; அதுவும் கட்டப்படாமல் பலதரம் தடுக்கப்பட்டது. இப்பொழுதோ உலகமெங்கும் லட்சாதிலட்சம் ஆலயங்களிருக்கின்றன. அங்கங்கிருந்து ஸ்தோத்திர பலிகள் பரலோகத்துக்கு எழும்பிக்கொண்டேயிருக்கின்றன. இந்தத் தேசத்திலும் கிறிஸ்துமார்க்கத்துக்கு வரும் புதுச் சபையார் தேவனுக்கென்று ஆலயங்களைக் கட்டும்போது புறமதஸ்தர் அதைப் பிடுங்கவும் கொளுத்திப்போடவும் தரைமட்டமாக இடித்துப்போடவும் பிரயாசப்பட்டு வருகிறார்கள். அப்படியிருந்தும் அங்கங்கே கர்த்தருக்கென்று கட்டப்படும் ஆலயங்களைக் காண்கிறோம். இந்தியா முழுவதும் ஒரு காலத்தில் கிறிஸ்துவின் பாதம்

அடையும்; அப்போது எங்கும் தேவனுடைய ஆலயத்தின் சிகரங்களைக் காணலாம்.

ராஜ கட்டளையால் தேவாலய வேலையானது அநேக வருஷங்களாக நடந்தேறவில்லை. இதற்கு யூதர் தகுந்த பிரயத்தனம் செய்திருப்பார்களானால், அந்தக் கட்டளை சீக்கிரம் மாற்றப்பட்டிருக்கும் என்பது மெய். யூதர் ராஜ கட்டளையோடு மனஞ்சோர்ந்து போனார்கள். தேவனுக்குச் சித்தமான நற்காரியங்கள்தான் அடிக்கடி பெரியோராலும், பிரபுக்களாலும் ஒடுக்கப்படுகிறதுண்டு; அதனால் நாம் மனஞ் சோர்ந்துபோகலாகாது. நாம் செய்யும் பிரயத்தனங்களைத் தடுக்கும் ஆட்களைப் பார்த்து அக்கிரியைகளை மதிக்காமல் தேவ கட்டளையையும் அவருடைய மேன்மையையும் கவனித்து, அவைகளை மனஞ்சோர்ந்துபோகாமல் நிறைவேற்றி வரவேண்டியது. யூதர் ஆலயம் கட்டுவதையிட்டு பயமடைந்து கவலையற்றிருந்த காலத்தில் தேவன் ஆகாய், சகரியா, செருபாபேல் முதலிய பக்தரில் தமது ஆவியை இறங்கப் பண்ணி, அவர்கள் மூலமாய் ஜனங்களை ஏவி அஸ்திபாரம் போட்ட ஆலய வேலையை முடிக்கும்படிச் சித்தங் கொண்டார். அந்தப்படியே அவர்களனைவரும் ஜாக்கிரதை யோடு சுவர்களை யெழுப்பிக்கொண்டு வரும்போது முன் போலவே அதிகாரிகளாலும், மற்றவர்களாலும் அவர்களுக்குத் தடை நேரிட்டது; அவர்களோ அதை சட்டை பண்ணாமல் வேலையை நடத்தினார்கள். சபையார் தேவாலய விஷயங்களைப்பற்றி கவலைப்படுமட்டும் அதின் விஷயங்கள் தாழ்வாய்த்தானிருக்கும். குருக்களின் ஏவுதலுக்குச் சபையார் உடனே இணங்கி ஒத்து நின்று சபையின் விஷயங்களை ஸ்திரமாய் நடத்தவேண்டியது. இந்த வரலாறுகள் எல்லாம் பாபிலோனுக்குப் பிராது பண்ணப்பட்டது. அக்காலத்தி லிருந்த பாபிலோன் அரசன் பூர்வ சட்டங்களைப் பரிசோதித்து அவர்கள் மகா அரசனாகிய கோரேசால் உத்தரவு பெற்று கட்டுகிறார்களென்று கண்டு, தானும் அதை அநுசரித்து ஒரு புது கட்டளையைப் பிறப்பித்து, தேவாலயத்தைக் கட்டுவதற்கு அத்திசையிலுள்ள அதிகாரிகள் துணைசெய்ய வேண்டுமேயன்றி தடைசெய்யக் கூடாதென்று எழுதினதோடு, 'எந்த மனுஷனாவது இந்தக் கட்டளையை மாற்றினால்

அவன் வீட்டிலிருந்து ஒரு உத்திரம் பிடுங்கி நடப்பட்டு, அவன் அதில் தூக்கப்படவும் அதினிமித்தம் அவனுடைய வீடு குப்பைமேடாக்கப்படவுங் கடவது' என்றும் கட்டளையிட்டான். இக்கட்டளை நாடு நகரெங்கும் விளம்பரம் பண்ணப்பட்டது. அதுமுதல் அவர்களை ஒருவரும் தடுப்பாரில்லாததால் சீக்கிரம் வேலையை முடித்துப் பிரதிஷ்டை செய்து அந்த ஆலயத்தில் அந்தி சந்தி ஆராதனைசெய்து பலிகளைச் செலுத்தி ஆண்டவரை வணங்கிவந்தார்கள். இது முதல் இந்த தேவாலயப் பிரதிஷ்டையை வருஷந்தோறும் பண்டிகையாக ஆசரித்து வந்தார்கள். உலக இரட்சகராகிய இயேசுகிறிஸ்துவும் தமது ஜீவகாலத்தில் இந்தப் பண்டிகையை ஆசரித்தார் (யோவா. 10:22). கோரேஸ் அரசன் ஆலயத்தைக் கட்டும்படி கொடுத்த முதலாம் கட்டளையின் காலமுதல் அது தேவாராதனைக்கென்று பிரதிஷ்டையாக்கப்பட்ட காலம்வரையும் சுமார் 200 வருஷங்கள் சென்றிருந்தன.

தேவாலயம் கட்டி முடிந்து சுமார் 60 வருஷ காலமாக யூத ஜனங்களின் தேவதா பக்தி விஷயங்கள் அவ்வளவு திருப்திகரமாயிருக்கவில்லை. அவர்களுக்குள்ளிருந்த மெய்ப் பக்தியைவிட அவபக்தியும், சன்மார்க்கத்தைவிட துன்மார்க்கமும் அதிகப்பட்டிருந்தது; அவர்கள் பெரும்பாலும் விக்கிரக பக்தரோடு சம்பந்தங் கலந்த தேவ நாமத்தை அவதூறு பண்ணிவந்தார்கள். என்றாலும் தேவன் தமது திருவுள தீர்மானத்தை மாற்றுவாரோ! அவர் அந்த ஆகாமியங்களை யூதாவிலிருந்து விலக்கி அதைத் தமக்குப் பிரியமான வாசஸ்தலமாக்கும்படி ஒரு தகுந்த மனுஷனை ஆயத்தப்படுத்திவந்தார். அவருக்கு எஸ்றா என்று பேர். இந்த எஸ்றா நியாயப்பிரமாணத்திலே தேறின வேதபாரகனாயிருந்தார். கர்த்தருடைய கரம் அவர்மேல் இருந்தது. அவர் பாபிலோனிலே ராஜாவிடம் இருந்தார்; அவர் கேட்டவைகளையெல்லாம் ராஜா அவருக்குக் கொடுத்தான். யூதர் தங்கள் தேசத்துக்குப் போகலாமென்று கோரேஸ் அரசன் விளம்பரம் பண்ணியிருந்தபோதிலும், பாபிலோன் தேசத்தையே விரும்பி, அங்கேயே தங்கியிருந்த பல யூதருமிருந்தார்கள். எஸ்றாவும் அவர்களில் ஒருவராகவே இருந்

அவன் வீட்டிலிருந்து ஒரு உத்திரம் பிடுங்கி நடப்பட்டு, அவன் அதில் தூக்கப்படவும் அதினிமித்தம் அவனுடைய வீடு குப்பைமேடாக்கப்படவுங் கடவது' என்றும் கட்டளை யிட்டான். இக்கட்டளை நாடு நகரெங்கும் விளம்பரம் பண்ணப்பட்டது. அதுமுதல் அவர்களை ஒருவரும் தடுப்பா ரில்லாததால் சீக்கிரம் வேலையை முடித்துப் பிரதிஷ்டை செய்து அந்த ஆலயத்தில் அந்தி சந்தி ஆராதனைசெய்து பலிகளைச் செலுத்தி ஆண்டவரை வணங்கிவந்தார்கள். இது முதல் இந்த தேவாலயப் பிரதிஷ்டையை வருஷந்தோறும் பண்டிகையாக ஆசரித்து வந்தார்கள். உலக இரட்சகராகிய இயேசுகிறிஸ்துவும் தமது ஜீவகாலத்தில் இந்தப் பண்டி கையை ஆசரித்தார் (யோவா. 10:22). கோரேஸ் அரசன் ஆலயத்தைக் கட்டும்படி கொடுத்த முதலாம் கட்டளையின் காலமுதல் அது தேவாராதனைக்கென்று பிரதிஷ்டையாக்கப் பட்ட காலம்வரையும் சுமார் 200 வருஷங்கள் சென் றிருந்தன.

தேவாலயம் கட்டி முடிந்து சுமார் 60 வருஷ காலமாக யூத ஜனங்களின் தேவதா பக்தி விஷயங்கள் அவ்வளவு திருப்திகரமாயிருக்கவில்லை. அவர்களுக்குள்ளிருந்த மெய்ப் பக்தியைவிட அவபக்தியும், சன்மார்க்கத்தைவிட துன் மார்க்கமும் அதிகப்பட்டிருந்தது; அவர்கள் பெரும்பாலும் விக்கிரக பக்தரோடு சம்பந்தங் கலந்த தேவ நாமத்தை அவதூறு பண்ணிவந்தார்கள். என்றாலும் தேவன் தமது திருவுள தீர்மானத்தை மாற்றுவாரோ! அவர் அந்த ஆகாமியங்களை யூதாவிலிருந்து விலக்கி அதைத் தமக்குப் பிரியமான வாசஸ்தலமாக்கும்படி ஒரு தகுந்த மனுஷனை ஆயத்தப்படுத்திவந்தார். அவருக்கு எஸ்றா என்று பேர். இந்த எஸ்றா நியாயப்பிரமாணத்திலே தேறின வேதபாரகனா யிருந்தார். கர்த்தருடைய கரம் அவர்மேல் இருந்தது. அவர் பாபிலோனிலே ராஜாவிடம் இருந்தார்; அவர் கேட்டவைகளையெல்லாம் ராஜா அவருக்குக் கொடுத்தான். யூதர் தங்கள் தேசத்துக்குப் போகலாமென்று கோரேஸ் அரசன் விளம்பரம் பண்ணியிருந்தபோதிலும், பாபிலோன் தேசத்தையே விரும்பி, அங்கேயே தங்கியிருந்த பல யூதரு மிருந்தார்கள். எஸ்றாவும் அவர்களில் ஒருவராகவே இருந்

தார். அந்த எஸ்றாவுக்கு அக்காலத்திலிருந்த ராஜன் ஏதோ காரணத்தினாலோ அறிமுகமுள்ளவனாயிருந்திருக்கிறான், ஒருவேளை அவருடைய உயர்ந்த அறிவும் பக்தியும் அதற்குக் காரணமாயிருக்கலாம். மேலும் அவர் பாபிலோனிலிருந்த யூதருக்கெல்லாம் பிரதான ஆசாரியனாயிருந்தார். தனக்கிருந்த சொற்சக்தியையும், பக்தி வைராக்கியத்தையும் தேவனுடைய மகிமைக்கென்று பின்னிட வேண்டுமென்று அவர் கருதி, அரசனண்டைபோய் தான் எருசலேமுக்குப் போக விருப்பமாயிருக்கிறதைச் சொல்லி, தன்னை அவ்விடத்து அதிபதிகள் ஏற்றுக்கொள்ளும்படி ராஜ தாக்கீது ஒன்று வேண்டுமென்று கேட்டார். அப்படியே ஆகட்டுமென்று அரசன் சொல்லி, ஒரு சன்னது எழுதிக் கொடுத்தான். அந்த சன்னதில், தன்னோடுகூட வருகிற எல்லா யூதரையும் அவன் தடையின்றி எருசலேமுக்குக் கூட்டிக்கொண்டு போகலாம் என்றும், யூதரை நியாயப்பிரமாணத்தின்படி ஆளவும், தேவனை வணங்க அவர் என்ன ஒழுங்குகளைச் செய்ய இஷ்டப்படுவாரோ அதையெல்லாம் செய்யலாமென்றும் கண்டிருந்தது. அவருடைய நோக்கம் சித்திபெறும்படி அரசனும் ஆலோசனைக்காரரும் பாபிலோன் பிரபுக்களும் திரண்ட பணங்களை வெகுமதியாக அவருக்குக் கொடுத்தார்கள். இந்த நடபடிக்கையானது 'அந்நியரின் புத்திரர் உன் மதில்களைக் கட்டி, அவர்களுடைய ராஜாக்கள் உன்னைச் சேவிப்பார்கள்' என்று ஏசாயாவினால் சொல்லப்பட்ட தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று (ஏசா. 60:10). அஞ்ஞான அரசர் தேவதா பக்தியை விரோதிக்கிறவர்களாயிருந்தாலும் தேவன் சிலதரம் மெய்த்தேவனைப்பற்றிய அச்சத்தை அவர்கள் மனதில் உண்டாக்கித் தமது நாமத்தின் மகிமைக்கென்று அவர்கள் பல உதவிகளைச் செய்யும்படி பண்ணுகிறார். அவர்கள் திருச்சபைக்கு உதவி செய்தாலும் திருச்சபைக்குள் சேராமலே சாகலாம். நோவாவின் பேழையைச் செய்த தச்சரும் அப்படியே தங்களாலான உதவிகளை சுறுசுறுப்போடு செய்து, கடைசியாக பேழைக்குப் புறம்பே ஜலத்தில் பிணங்களாய் மிதந்தார்கள். அரசன் எஸ்றாவுக்கு எழுதிய சன்னதில் குடிகளுக்கு ஒரு தண்டனையும் குறிக்கப்பட்டிருந்தது. அதாவது, 'உன் தேவனுடைய நியாயப்

பிரமாணத்தின்படியேயும், ராஜாவுடைய நியாயப்பிரமாணத்தின்படியேயும் செய்யாதவனெவனும் உடனே மரணத்துக்காகிலும், தேசத்துக்குப் புறம்பாக்குதலுக்காகிலும், அபராதத்துக்காகிலும், காவலுக்காகிலும் தீர்க்கப்பட்டு தண்டிக்கப்படக் கடவன்' என்று எழுதியிருந்தது. ஒரு அஞ்ஞான அரசன் மெய்த்தேவனைப்பற்றிய பயத்தால் ஏவப்பட்டு இவ்வளவு அநுகூலமான சட்டங்களையெல்லாம் செய்தான். இக்காலத்து கிறிஸ்தவ அரசர் தேவ மகிமையையடுத்த நேரான சட்டங்களைக் கொடுக்க இப்போது பயப்படுகிறார்கள். இந்த தேசத்திலிருக்கிற கிறிஸ்து மார்க்கத்தை ராஜாங்கத்தார் பரிபாலிக்கும்படியான மனம் உண்டாகவும், புறமதஸ்தரான பல பிரபுக்கள் பழைய பாபிலோனிய பிரபுக்களைப்போல அதற்குத் தங்களாலான உதவியையும் செய்யவும் எப்போது காலம் வருமோ தெரியாது. கர்த்தர் அப்படிப்பட்ட நாட்களை சீக்கிரம் கட்டளையிடுவாராக. பாபிலோன் அரசனாலும் பிரபுக்களாலும் தனக்குக் கிடைத்த சகாயத்தை எஸ்றா நன்கு மதித்து கர்த்தருக்கு ஸ்தோத்திரஞ் செலுத்தினார்.

அரமனையிலிருந்து தனக்கு ஆகவேண்டிய எல்லா காரியங்களையும் முடித்த பின்பு தன்னுடன் வர விரும்பின யூதரனைவரையும் அவர் கூட்டிக்கொண்டு பயணத்துக்கு ஆயத்தப்பட்டார்கள். அவர்கள் பண்ணவேண்டிய பயணம் அதிக தூரமும், துன்பமும் நிறைந்ததாயுமிருந்தது. அவர் யாத்திரை காலால் நடந்து காடுகளைக் கடக்கவேண்டியதும், துஷ்ட மனுஷரையும் மிருகங்களையும் ஊடறுத்துப் போகவேண்டியதும், வெயிலின் வெப்பமும் பனியின் குளிரும் சகிக்கவேண்டியதும், பசிதாகம் பொறுத்து உறக்கம் ஒறுத்துவிடுகிறதுமான பயணமாயிருந்தது, அவர்களைத் தவிர வேறு ஆதரவு அவர்களுக்கு இருந்ததில்லை. அரசனிடத்தில் தனக்கு ஒரு பட்டாளம் உதவிசெய்யும்படி கேட்டிருந்தால் அதுவும் கிடைத்திருக்கும். ஆனால் அவர் உன்னதமானவரின் மறைவையும் சர்வ வல்லவரின் நிழலையும் தனக்கு அடைக்கலமாகவும், அவருடைய பாதுகாப்பையே தனது அரணாகவும் எண்ணிக்கொண்டு, தன்னுடன் யாத்திரை செய்கிறவர்களோடு பயணப்பட்டார்.

எஸ்றாவோடு சுமார் 2,000 புருஷர் புறப்பட்டார்கள். அவர்களனைவரும் ஒரு விசேஷித்த உபவாசத்தால் தங்களை பயணத்துக்கு ஆயத்தம்பண்ண எஸ்றா கட்டளையிட்டார். தேவன் வழியிலே சத்துருக்களை விலக்கி அவர்களுக்குத் துணைசெய்யும்படிக்கு இந்த உபவாசம் ஏற்படுத்தப்பட்டது. அவர்கள் உபவாசித்து விண்ணப்பம் பண்ணினபடி தேவன் வழியிலே சத்துருவின் கைக்கும், பதிவிருந்தவர்களின் கைக்கும் அவர்களைத் தப்புவித்து எருசலேமில் சேர்த்தார். நாம் பரம கானானுக்குப் பயணம்பண்ணுகையில் இடையிலுண்டாகும் பல ஆத்தும மோசங்களுக்கும் பாவங்களுக்கும் விலகும்படி அடிக்கடி உபவாசம்பண்ணி விசேஷ ஜெபத்தியானங்கள் பண்ணுவது நல்லதுதான். ஆனால் இப்படிப்பட்ட நியமங்களினால் மோட்சம் கிடைக்குமென்று மாத்திரம் கிஞ்சித்தும் நினைக்கலாகாது.

எஸ்றா எருசலேமுக்கு வந்தவுடனே யூதசபையின் சீர்திருத்தலுக்கான முயற்சிகளை ஊக்கத்தோடு ஆரம்பித்தார்; ஆனால் இந்த விஷயத்தில் அவருக்குண்டான சங்கடங்களுக்குக் கணக்கில்லை. ஏனெனில் யூத ஜாதிக்குள் நடந்து வந்த சீர்கேடு அதிகமாயிருந்தன; அவர்கள் தங்கள் பக்கத்திலிருந்த அந்நிய ஜாதியாருடன் கலந்து, அவர்களுடைய விக்கிரகாராதனையை அநுசரித்து, அவர்களுடைய பெண்களையும் விவாகம் செய்தார்கள்; அந்நிய ஜாதியோடு சம்பந்தங் கலந்ததில் பிரபுக்களும் அதிபதிகளுந்தான் அதிகப் பேராயிருந்தார்கள் (எஸ்றா 9:2). நாம் இந்த வேதசரித்திரங்களை எழுதிக்கொண்டே வரும்போது அங்கங்கே அந்நிய ஜாதியோடு யூதர் கலந்து கலியாணஞ்செய்ததினால் உண்டான கேடுகள் இன்னதென்பதைக் காட்டியிருக்கிறோம். சன்மார்க்கத்தையும், மெய்த்தேவ அறிவையும், வணக்கத்தையும் உலகத்தில் சுயமாய்க் காத்துவரும்படி தேவன் தமது ஜனங்களை மற்றவர்களுடன் கலவாமல் தனிப்படுத்திவந்தாரென்பது தெளிவாயிருக்கிறது. இப்படிப்பட்ட கலப்பிடமான விவாக சம்பந்தத்தினால் சொல்லி முடியாத மோசங்களும், பக்திகேடும் உண்டாகியிருக்கின்றன. ஆணும் பெண்ணும் உலக நயம், சிற்றின்பம், பேர்ப்பிரஸ்தாபமாகிய இவைகளையே கொள்வினை கொடுப்

பனைகளில் நிச்சயப்படுத்துவார்களானால் மெய்த்தேவபக்தியும் ஆராதனையும், சத்தியத்தின் வாஞ்சையும் அதை நிலைநிறுத்தும் பிரயத்தனங்களையும் எவ்வளவு இலேசாகத் தாழ்வடையச் செய்யலாம். மெய்யாகவே இப்படிப்பட்டவர்களால் தேவனுடைய சபை சீர்குலைந்துபோம் என்பது நிச்சயம். இக்காலத்திலுள்ள அறிவும் நாகரிகமும் ஐசுவரியமுமுள்ள அநேக கிறிஸ்தவர்கள் தங்கள் குடும்பங்களின் விவாக விஷயத்தில் முற்றிலும் உலகத்தாரைப்போலவே நடந்துவருகிறார்கள். அப்படிப்பட்டவர்களால் திருச்சபையின் பரிசுத்தமும் பக்தி அனலும் வரவர கெட்டுப்போயிருக்கிறதென்பதை அவர்கள் நன்றாய் அறிந்துகொள்ள வேண்டியது.

இந்த எல்லாச் சீர்கேடுகளும் எஸ்றாவுக்கு மிகுந்த மன வருத்தத்தைக் கொடுத்தது. எருசலேமிலும் அதின் பிரபுக்களிலுமிருந்த கேடுகள் இன்னவையென்று அவர் முந்தி கேள்விப்பட்டிருப்பாரானால் ஒருவேளை பாபிலோனிலிருந்து வந்திருக்கமாட்டார் என்று சொல்லத்தக்கதாக அவ்வளவு தூரம் அவர் சஞ்சலப்பட்டார். உத்தமபக்தன் எப்போதும் தன் ஜனத்தின் தேவதாபக்தியையே கருதிக்கொண்டிருக்கிறான் என்று சொல்லவேண்டியது; தன் ஜனம் சீர்கேடாய் நடக்கிறதென்பதைக் காண்கையில் அவனுக்கு மிகுந்த சஞ்சலம் உண்டாகிறது. எஸ்றா துக்கத்தினால் தன் வஸ்திரத்தையும் சால்வையையும் கிழித்து, தலையிலும் தாடியிலுமுள்ள மயிரைப்பிடுங்கி பைத்தியம்பிடித்தவர்போல் உட்கார்ந்திருந்தார். இன்னது செய்யவேண்டுமென்று அவருக்குத் தெரியவுமில்லை, இன்னது செய்கிறேனென்று தான் அறியவுமில்லை. அநேக பக்திமான்களுடைய பேச்சையும் செய்கையையும் உலகத்தார் கவனித்து, அவர்களுக்குப் பைத்தியம்பிடித்திருக்கிறது என்று பழிப்பாய் பேசுகிறதுண்டு. பைத்தியம்போல் காணப்படும் அவர்கள் குணத்துக்கு மற்றவர்களுடைய சீர்கேடே காரணம். அவர்கள் அவபக்தரின் அழிம்புகளைக் கவனித்து மனம்பதைத்து பைத்தியக்காரராகிவிடுகிறார்கள் என்று சொல்லவேண்டியது. எஸ்றாவின் துக்கசாகரத்தின் அந்தரங்கத்தை ஜனங்கள் இலேசாய் அறிந்துகொண்டார்கள். சிறையிருப்பிலிருந்து

வந்தவர்களில் தேவனுடைய வார்த்தையை மதித்துவந்த வர்கள் யாரோ அவர்களெல்லாரும் அவரிடம்வந்து, மகா பிரபுவே, நீர் மனம்நொந்து மாண்டுபோகவேண்டாம்; இதோ நாங்கள் உமக்குத் துணையாயிருக்கிறோம்; இஸ்ர வேல் சபையில் என்னென்ன சீர்திருத்தங்களைச் செய்யும்படி நீர் விரும்புவீரோ அதையெல்லாம் நாங்கள் உமக்கு உதவியாக நின்று செய்யக் காத்திருக்கிறோம் என்று சொல்லி அவரோடு கூடிக்கொண்டார்கள். தேவ ஊழியர் தங்கள் சபையாரால் இப்படிப்பட்ட உதவிகளைப் பெறும்போது அதிக ஊக்கமாய்க் கர்த்தருடைய வேலையை அவர்கள் நிறை வேற்றக்கூடும். சில சபையார் குருவைத் தனியே விட்டுப் போட்டு அவர் செய்யட்டும், நமக்கேன் இந்த வம்பு என்றி ருக்கிறதுண்டு. அப்படிப்பட்ட சபையிலுள்ள குருவானவர் எஸ்றாவைப்போல் திகைத்தவனாய்த் தனித்து உட்கார்ந்து கொண்டு துக்கத்தால் மூண்டு, தலையிலும் தாடியிலுமுள்ள மயிரைப் பிடுங்கி புலம்பிக்கொண்டு மாத்திரம் இருப்பான்.

சபையைச் சீர்திருத்தும்படி பல ஜனங்கள் அவரோடு கூடினவுடனே அவருடைய சொஸ்த புத்தி அவருக்கு வந்ததென்று சொல்லவேண்டியது. அப்பொழுது அவர் தன் பலத்தையாவது தன் ஆட்களின் பலத்தையாவது வைத்துக் கொண்டு யாதொன்றையும் செய்யாமல், தான் எடுக்கப் போகும் முயற்சிக்கு தேவகிருபையும், உன்னத பலமும் அவசரமென்று கருதி, கடவுளுக்கு முன்பாக முழங்கால் படியிட்டுத் தன் மனதின் வியாகுலங்களையெல்லாம் அறிக்கை யிட்டு ஜெபஞ்செய்தார். இந்த ஜெபம் மகா உணர்வும் பச்சாதாபமுமுள்ள ஒரு ஜெபமாயிருந்தது. அவர் தாம் கிழித்துக்கொண்ட வஸ்திரத்தோடும் சால்வையோடும் முழங்கால்படியிட்டுத் தமது இரண்டு கைகளையும் வானத்துக்கும் நேராக விரித்துக்கொண்டு, 'என் தேவனே, நான் என்முகத்தை என் தேவனாகிய உமக்கு முன்பாக ஏறெடுக்க வெட்கிக் கலங்குகிறேன்; என் அக்கிரமங்கள் என் தலையின்மேலாகப் பெருகிற்று, என்குற்றம் வான பரியந்தம் வளர்ந்துபோயிற்று' என்று அழுதார். எங்கள் அக்கிரமத்தினிமித்தம் நாங்களும், எங்கள் ராஜாக்களும், எங்கள் ஆசாரியரும் இந்நாளிலிருக்கிறதுபோல அந்நியதேச

ராஜாக்களின் கையிலே பட்டயத்துக்கும், சிறையிருப்புக்கும் கொள்ளைக்கும், வெட்கத்துக்கும் ஒப்புக்கொடுக்கப்பட்ட தாக அறிந்துகொண்டார். அதோடு பாபிலோனிய அரசனால் தனக்கும் தன்ஜாதிக்கும் கிடைத்த விடுதலையையும் உதவி யையும் அறிக்கையிட்டார்.

எஸ்றா இந்த விஷயத்தில் செய்த முறை அவசரமில்லை யென்று யாராவது சொல்லக்கூடுமா? ஐயோ! கிறிஸ்து சபையைச் சார்ந்த ஒவ்வொரு உத்தமனும் சபைகளுக்குள் ளிருக்கும் கேடுகளையும் பாவங்களையும் உணர்ந்து, இப்படி அழுது அதின் வாழ்வுக்காக மன்றாடவேண்டியதில்லையா? இதெல்லாம் நம்மையடுத்த வேலையல்லவென்று ஒருக்காலும் சொல்லக்கூடாது. எஸ்றா இப்படி விண்ணப்பம்பண்ணி அறிக்கையிட்டு அழுது தேவனுடைய ஆலயத்துக்கு முன் பாகத் தாழ விழுந்து கிடந்தார். இந்தக் காட்சி கன்னெஞ் சுள்ள அநேகரை இளக்கிவிட்டது; உடனே இஸ்ரவேலரின் புருஷரும் ஸ்திரீகளும் பிள்ளைகளுமான மகா பெரிய சபை அவரிடத்தில் வந்துகூடிற்று. எஸ்றாவின் பச்சாத்தாப முறையும், அவருடைய புலம்பலும் கண்ணீரும் கூடிவந்த ஜனம் அனைத்தையும் அக்கினிபோல பற்றிக்கொண்டது.

'ஜனங்கள் மிகவும் அழுதார்கள்.'

எஸ்றாவே! இனி நீர் குப்புறக் கிடப்பானேன்? புலம்பு வானேன்? அழுவானேன்? கண்ணீர் சிந்துவானேன்? உம் முடைய வியாகுல அக்கினி தணியும்படி பரலோக தேவன் பாவிகளின் கண்களிலிருந்து கண்ணீர் வெள்ளத்தைப் புறப்படச் செய்துவிட்டார். ஓ! சீர்திருத்தும்படி பாபிலோ னிலிருந்து வந்தவரே! எழுந்திரும்; உம்முடைய ஜெபமாகிய தூபாக்கினியை மனந்திரும்புதல் என்னும் இனிய காற்றால் பரிமளிக்கும்படி ஆவியானவர் யூதாவின்மேல் இறங்கி விட்டார். இவ்வளவு சீக்கிரம் கேட்கப்பட்ட விண்ணப்பங் களின் தொகை கொஞ்சந்தான்; எழுந்திரும், போதும்; உமது விண்ணப்பத்தை நிறுத்தி அழுதுகொண்டு நிற்கும் ஜனத்துக்கு ஆறுதல் சொல்லி சீர்திருத்தலை ஆரம்பியும்.

எஸ்றா வெகுநேரம் தேவாலயத்துக்கு முன்பாக செத்த பிணம்போல் கிடந்தார். அப்போது அழுதுகொண்டிருந்த

ஒருவன் தன் பாவ உணர்வின் அனலால் ஏவப்பட்டு எஸ்றுவண்டை வந்து குனிந்து, எஸ்றுவை நோக்கி, 'நாங்கள் தேசத்து ஜனங்களிலுள்ள அந்நிய ஸ்திரீகளைச் சேர்ந்துகொண்டதினால் பாவஞ்செய்தோம்...இப்பொழுது அந்த ஸ்திரீகளெல்லாரையும் அவர்களிடத்தில் பிறந்தவர்களையும் என் ஆண்டவனுடைய ஆலோசனைக்கும், மற்ற தேவபக்தரின் ஆலோசனைக்கும் ஏற்றபிரகாரம் அகற்றிப் போடுவோம் என்று ஒரு உடன்படிக்கை செய்துகொள்ள சம்மதிக்கிறோம்; எழுந்திரும், நாங்களனைவரும் உமக்குத் துணைநின்று இந்த நல்ல காரியத்தை முடித்துப்போடலாம்' என்று சொன்னான். இவ்வார்த்தைகள் எஸ்றுவின் உலர்ந்த ஆவியை உயிரேற்றும் சத்துபோலிருந்தன. பாவிகள் தங்கள் பாவங்களை உணர்ந்து மனந்திரும்பி புது ஜீவமார்க்கத்தில் நடக்கும்படி தீர்மானிக்கிறதுதான் ஒரு தேவ ஊழியக்காரனைச் சந்தோஷப்படுத்தும். இந்த வார்த்தைகள் அவருடைய செவிகளில் ஏறவே அவர் எழும்பி, ஜனங்களில் பிரதானமானவர்கள் இவ்விஷயத்தை தன் மனம்போல நிறைவேற்றும்படி ஆணைவாங்கிக் கொண்டார். மனுஷன் ஆத்தும விஷயத்தில் அடையும் உணர்வானது சிலதரம் மங்கிப்போகிறதுண்டு; ஆதலால் உலக வழக்கமான ஆணையினால் அதை அவர்கள் மனதில் காத்துக்கொள்ளும்படி விரும்பினாராக்கும்; அல்லது தற்காலத்தில் உணர்வடைந்தவன் பின்வாங்கிப்போகிறதுண்டானால், அந்த ஆணையின் மூலமாய் அவனை மறுபடியும் இழுத்துக் கொள்ளலாமென்று எண்ணினாராக்கும்.

இஸ்ரவேலருக்குள் இந்தக் காலத்தில் நடந்த கேடுகளைக் குறித்து எஸ்று மாத்திரமல்ல, வேறு சில பக்தரும் கவலை கொண்டிருந்தார்கள். அதில் ஒரு பக்தன் ஒரு அறைக்குள் அப்பம் புசியாமலும் தண்ணீர் குடியாமலும் துக்கித்துக் கொண்டிருந்தான். இவனுக்கு யோகனான் என்று பேர். இவனும் எஸ்றுவோடு பாபிலோனிலிருந்து வந்த ஒரு குடும்பத்தலைவனாயிருந்தான் (எஸ்று 8:12). எஸ்று என்பவர் தேவாலயத்திலிருந்து யோகனானுடைய வீட்டுக்கு வந்து இருவருமாய் இனி நடக்கவேண்டிய சீர்திருத்தல்களைப்பற்றி ஆலோசித்துக்கொண்டார்கள் என்று தோன்று

கிறது. அதன்பின்பு சிறையிருப்பிலிருந்து திரும்பிவந்த யாவரும் மூன்று நாளைக்குள் எருசலேமில் வந்து கூட வேண்டுமென்றும், அப்படி வந்து கூடாதவர்களுடைய பொருட்கள் ஜப்திசெய்யப்பட்டு சபைக்கும் புறம்பாக்கப் படுவார்களென்றும் எங்கும் விளம்பரஞ்செய்யத் தீர்மானித் தார்கள். இந்தத் தீர்மானத்துக்கு பிரபுக்கள் பெரியோ ரான யாவரும் சம்மதித்ததால், நாடுநகரமெங்கும் வீதி வீதியாய் விளம்பரம்பண்ணப்பட்டது. எஸ்றா ஒரு குரு வாய் மாத்திரமல்ல, தேச அதிகாரிக்குரிய அந்தஸ்தும் பெற்றுவந்தபடியால் இப்படிப்பட்ட கட்டளைகளையும் தாக் கீதுகளையும் விளம்பரம்பண்ணுவது நியாயமாயிருந்தது. விளம்பரம்பண்ணப்பட்டபடியே இஸ்ரவேலின் குடிகளனைத் தும் எருசலேமில் வந்து கூடினார்கள். எஸ்றா அவர் களுடைய சீர்கேடுகளை எடுத்துக் காட்டி, தேவனுடைய பிரமாணங்களில் நடக்கும்படி ஏவி புத்தி சொன்னார். ஜனங் களனைவரும் அவ்வார்த்தைகளை அங்கீகரித்து அந்நிய ஸ்திரீகளைத் தங்கள் நடுவிலிருந்து நீக்குகிறதற்கேற்ற பிரயத்தனங்களைச் செய்துகொண்டார்கள். இதினால் யூத ஜனங்களுக்குள் அநேக சீர்திருத்தங்கள் உண்டாயின.

எஸ்றா அநேக வருஷக்காலமாக எருசலேமிலிருந்து, யூதரை அதிபதிபோல ஆண்டு சன்மார்க்கத்தையும், மெய்த் தேவ பக்தியையும் நிலைநிறுத்தி வந்தார். அதன்பின்பு துரைத்தன விஷயமாய் யூதரை ஆளும்படி நெகேமியா என்ற யூத பக்தனை தேவன் நியமித்தனுப்பினார். ஒருவேளை இரண்டு வேலையையும் தமது தோளின்மேல் போட்டுக் கொண்டால் இரண்டிலொன்று தாழ்வடையுமென்று அவரே பாபிலோன் அரசனைக் கேட்டிருக்கலாம். நெகேமியா வந்ததுமுதல் எஸ்றா துரைத்தன விஷயமான வேலையி லிருந்து ஓய்ந்து வேதியர் வேலையையே செய்து வந்தார். வேதாகமத்தை ஜனங்களுக்கு வாசிக்கிறதும் வியாக்கி யானஞ்செய்கிறதுமே அவருடைய பிரதான வேலையா யிருந்தது. அக்காலத்தில் வேதமாக வழங்கிவந்த பல ஆகமங்களை எஸ்றா சேர்த்து ஒன்றாக்கி அதனோடு தாம் தேவ ஆவியின் ஏவுதலால் எழுதினவைகளையும் கூட்டி வைத்தார் என்றும், வேதாகமத்தை எழுதி நாடுகளுக்கு

அனுப்பி தேவ சித்தத்தையும் பிரமாணத்தையும் இஸ்ரவேலர் எல்லாரும் அறியும்படி பிரசித்தப்படுத்தினரென்றும் நினைக்கப்படுகிறது. இந்த முயற்சியானது அக்காலத்தாருக்கு மாத்திரமல்ல, பின் சந்ததியாருடைய ஆத்தும வாழ்வுக்கும் அநுகூலமாயிருக்கிறது. தேவன் நமக்கு என்னென்ன தாலந்துகளை அருளியிருக்கிறரோ அதை அவருடைய நாமத்தின் மகிமைப் பிரஸ்தாபத்துக்கென்று பிரயோகித்து வரவேண்டியது பக்தரின் கடமையாயிருக்கிறதென்பதை இதனால் கற்றுக்கொள்ளுகிறோம். எஸ்றாவினாலுண்டான நன்மையை நாமும் அநுபவித்து வாழுகிறோம். இப்போது நாம் வேதாகமமாக அங்கீகரித்துவரும் பழைய ஏற்பாட்டு ஆகமங்களெல்லாம் இந்த எஸ்றாவினால்தான் ஒன்றாகச் சேர்க்கப்பட்டு ஒரு கொத்துபோல் கூட்டப்பட்டன. அவைகளை நாம் மதித்து எஸ்றாவைப்போல அதின் அறிவை இத்தேசமெங்கும் பரம்பும்படி கருதவேண்டியது.

எஸ்றா என்பவர் தேவ ஊழியக்காரருக்கு நல்ல முன்மாதிரியாக இருக்கிறாரென்று சொல்லவேண்டியது அவர் முதலாவது தன் இருதயத்தை தேவனாகிய கர்த்தருடைய வழிகளில் திருப்பிக்கொண்டு பின்பு தம்மைப்போல இஸ்ரவேல் சபையனைத்தும் கர்த்தரைப் பின்பற்றும்படி ஏவினார். ஒரு குரு தேவாவியினால் போதிக்கப்பட்டு ரட்சிப்பைக் கண்டடைந்து உணராதபட்சத்தில் மற்றவர்களுக்கு ரட்சிப்பின் அன்பைக்கூற தகுதியுள்ளவனாயிருக்க மாட்டான். பக்தியில்லாத மேய்ப்பன் தன் ஆடுகளை அவபக்தியில் கொழுக்கப்பண்ணுகிறான் என்று சொல்லவேண்டியது. கிறிஸ்வின் உண்மையுள்ள தானாதிபதிகள் எல்லாரும் பரி. பவுல் அப்போஸ்தலனைப்போல் 'நாங்களும் அந்த விசுவாசத்தின் ஆவியை உடையவர்களாயிருந்து விசுவாசிக்கிறபடியால் பேசுகிறோம்' என்று அறிக்கையிடவேண்டியவர்

களாய் இருக்கிறார்கள் (2 கொரி. 4:13). எஸ்றாவினால் யூத சபையில் இவ்வளவு பெரிய சீர்திருத்தங்கள் நடந்த போதிலும்[1] அவருடைய முடிவு இன்னபடியென்று ஒரு வருக்கும் தெரியாது. அவர் எந்த இடத்தில் என்னவிதமாய் மரணமடைந்தாரென்று அறிய யாதொரு நிச்சயமான குறிப்புமில்லை; யோசேப்புஸ் என்ற சரித்திரக்காரன் முதலாய் இதைப்பற்றி ஒன்றும் எழுதவுமில்லை. ஆனால் யூதருக்குள் நம்பப்படுகிற ஒரு பாரம்பரையில் எஸ்றா பாரசீகதேசத்தில் மரித்து அடக்கம்பண்ணப்பட்டார் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஐபிராத்து நதியோரத்தில் எஸ்றாவின் கல்லறை என்று அழைக்கப்படுகிற ஒரு கட்டட மிருக்கிறது. அதின் சுற்றுமதில் கோட்டைமதில்போல் பெருங்கல்லால் கட்டப்பட்டு, மத்தியில் வட்டக்கிணறு போன்ற இரண்டு அடுக்கும் அதின்மேல் முட்டை வடிவ மான மண்டபமுடிவும் இருக்கின்றன. அயல்நாட்டுப் பிரயாணிகள் அதைப் பார்க்கப்போகிறதுண்டு.

---

[1] எஸ்றாவினால் நிறைவேறினதாக யூதர் சொல்லும் விசேஷித்த கிரியைகளாவன: (1) மகா சூனகோகு சங்கம் என்னும் கூட்டம்; (2) வேதாகமங்களைச் சேர்ந்ததும், திருத்தினதும், ஒழுங்குபடுத்தின தும், பிரபல்லியப்படுத்தினதும்; (3) எபிரெயு பாஷைக்குப் பதிலாக கல்தேய பாஷை எழுத்தை வேதாகமத்தில் வழங்கினதும்; (4) நாளாக மங்கள், எஸ்றா, நெகேமியா, எஸ்தர் என்னும் புத்தகங்களை எழுதின தும்; வேறு சில யூதர் சொல்லுகிறபடி எசேக்கியேல், தானியேல், சின்ன தீர்க்கதரிசிகளின் ஆகமங்கள் ஆகிய இவைகளை எழுதினதும்; (5) நாடெங்கும் சூனகோகுகளை ஸ்தாபித்ததும் ஆகிய இவைகளே.

மொர்தெகாய்

திருச்சபையானது ஏகமாயும் அதைச் சேர்ந்த தனித் தனி அவயமாயும் துன்பமாகிய குகையின்வழியால் இவ் வுலகத்தைக் கடந்து பரலோகப் பிரயாணஞ்செய்ய வேண்டு மென்பதே தேவதிருவுளத் தீர்மானமாயிருக்கிறது. ஆதலால் அந்தந்தக் காலங்களில் அதின் அவயவமாயிருக்கிறவர்கள் அத்தீர்மானம் மாற்றப்பட்டுப்போக முயலாமல் அதற்கு அடங்கி நடந்து காலங்கழிக்க ஆயத்தமுள்ளவர்களாயிருக்க வேண்டியது. அவர்களுக்குண்டாகும் சங்கடங்கள் சில வேளை அலைகளின் திரண்ட ஜலக்குவியல்போலும், இடியின் இருண்ட முழக்கம்போலும், பெருங்காற்றின் மண்மாரி போலும் இருந்தாலும் இருக்கலாம். ஐயோ! நாசமானேம் என்று சொல்லத்தக்கதாக அவ்வளவு பயங்கரம் அவர்களைப் பிடிக்கலாம். இவ்வண்ணம் அவர்களுடைய விசுவாசம் புடமிடப்பட்டபோதிலும், தேவகிருபை என்னும் குளிர்ந்த மேகம் அவர்களுக்குமேல் நிழலாடுவதால் நற்கிரியைகளாகிய பலனால் அவர்கள் நிறைந்து, அவர் என்னைச் சோதித்த பின்பு நான் பொன்னாய் விளங்கினேன் என்று ஆவியில் மகிழ்ச்சிகொள்ளக்கூடும். தேவன் துன்பத்தைக் கொடுப்பதி னால் தமது பக்தரின் விசுவாசத்தையும், அவர்களை அதி லிருந்து விடுதலையாக்குவதினால் தமது நீதி, நேசம் என்னும் லட்சணங்களையும் உலகத்திற்குப் பிரசித்தம்பண்ணி வருகிறார்.

சிலவேளைகளில் உண்டாகும் துன்பமானது ஒரு பக்த னோடு மாத்திரம் போகாமல் பக்தர் பவுஞ்சுமுழுவதையும் தொடர்ந்து பற்றி, அவர்கள் அனைவரையும் அடியோடு பூமியிலிருந்து அற்றுப்போகப் பண்ணுகிறதுபோலவும் காணப்படலாம். தேவநடத்துதல்களை ஆதியோடந்தமாக கவனிக்கும் ஒரு பக்தன் இப்படிப்பட்ட நிர்மூல செயல்களை

அடிக்கடி உணர்ந்துகொள்ளுவான். இச்சமயத்தில் நாம் சொல்லப்போகும் சரித்திரமானது நிர்மூல செயல்போல் விளங்கும் தெய்வீகப்போங்கைத் தெளிவாய் விளக்கும் திருஷ்டாந்தரமாயிருக்கிறதென்று சொல்லலாம். அதன் விபரம் பின்வருமாறு:—

நமது தேசத்துக்கு வடமேற்கே பார்ஸியா என்றொரு தேசமுண்டு. அதில் சுமார் இரண்டாயிரத்து முந்நூறு வருஷங்களுக்குமுன் அகாஸ்வேரு என்று பேர்கொண்ட ஒரு அரசன் செங்கோல் செலுத்திவந்தான். அவன் ஓர் சிற்றரசனாயிராமல் நூற்றிருபத்தேழு நாடுகளை ஆண்ட சக்கரவர்த்தியாயிருந்தான். நம்முடைய தேசமும் அக்காலத்தில் அவனுடைய ஆக்கினைசக்கரத்துக்குள்தான் இருந்தது. அவனுடைய ராஜ்யத்தில் காலாகாலங்களில் சிறைபிடிக்கப்பட்டு குடியேறியிருந்த யூதஜாதியார் திரளாயிருந்தார்கள். அவன் தன் ராஜ்யபார கர்வத்தாலும், துர்ப்புத்தி மந்திரிகளுடைய ஏவுதலாலும், தன்னுடைய பட்டத்து இராணி பதிவிரதா பத்தினியாயிருந்தபோதிலும் அவளை நீக்கிப்போட்டு வேறு கலியாணஞ் செய்யும்படி தன் ராஜ்யத்திலுள்ள அழகிய கன்னிமாரையெல்லாம் கொண்டுவரச் சொல்லி அவர்களில் யூதகுலத்தைச் சேர்ந்த எஸ்தர் என்னும் மங்கையை மணம் புரிந்துகொண்டான். இந்த எஸ்தருக்கு நெருங்கிய பந்து இருந்தார். இவருக்குத்தான், மொர்தெகாய் என்று பேர். இவர் ராணியின் சொந்த சிற்றப்பனாயிருந்தபோதிலும் அதை வெளிக்குச் சொல்லாமல் தம்மை ஒரு அந்நியனைப்போல் பாராட்டிக்கொண்டார். அவருக்கு அரமனைவாசலைக் காக்கும் சேவக ஊழியம் கொடுக்கப்பட்டிருந்தது. அரமனைவாசலைக் காக்கும் உத்தியோகம் லேசாய் கிடைக்கத்தக்கதல்ல. மொர்தெகாய் தனக்கு ஒப்புவிக்கப்பட்ட வேலையில் உண்மையும் விழிப்புமுள்ளவராய் நடந்துவந்தார். நம்முடைய மகள் இராணியாகிவிட்டாள், இனி நம்மை யார் வேலைகொள்ளக் கூடுமென்று அவர் கர்வங்கொள்ளவில்லை. இத்தேசத்தில் படிப்பிலும் அந்தஸ்திலும் உயர்ந்த பிள்ளைகள் தங்கள் தகப்பன்மார் தாழ்வான உத்தியோகஞ்செய்வது தங்களுக்கு கனவீனமென்று சொல்லி சும்மாயிருக்கச் சொல்லுகிறதுண்டு; அல்லது அப்படிப்பட்ட பிள்ளைகளுடைய தகப்பன்மாரே

கர்வமூண்டு உத்தியோகத்தை உதறிவிட்டு, உட்கார்ந்து முக்காலமும் முழுகி மூதாக்கள்போல வீணாக அலைந்து திரிந்து காலங்கழிக்கிறதுண்டு. அப்படிப்பட்ட பெருமை யான சுபாவம் மொர்தெகாய்க்கு உண்டாகவே இல்லை. அவர் அல்லும்பகலும் அரமனை வாசலே தன் சொந்தவீடாகப் பாவித்து காவல் காத்துவந்தார்.

இப்படியிருக்குங் காலத்தில் அரமனை சேவகராகிய இரண்டு பிரதானிகள் ஒருநாள் இரவில் ராஜனைக் கொன்று போடும்படி ஆலோசித்துப் பேசிக்கொண்டிருந்தார்கள். இந்தச் சதியோசனைக்குக் காரணம் இன்னதென்று தெரிய வில்லை. ஒருவேளை அரசன் தங்கள் குடும்பத்தில் அல்லது குலத்தில் ஒரு பெண்ணைக் கட்டாமல் யூத குலத்திற் போய் விழுந்தாரே என்ற வர்மத்தால் இந்த சதியோசனையைச் செய்திருக்கலாம். இந்த ராஜ துரோகப் பிரயத்தனங்களைப் பேசும்போது மொர்தெகாய் தூங்குகிறாரென்று அவர்கள் எண்ணியிருக்கலாம்; அல்லது அவர்கள் வேறு பாஷையில் பேசினால் அவருக்கு விளங்காது என்று நினைத்துப் பேசி யிருக்கலாம். எப்படியும் அவர்களுடைய சதியோசனைகள் அனைத்தும் மொர்தெகாய்க்குத் தெரிந்தது. உடனே மொர்தெகாய் வெள்ளம் வருமுன்னே அணைகட்டுவதுதான் நல்லதென்று உத்தேசித்து தான் கேட்ட சமாச்சாரம் முழு வதையும் எஸ்தர் இராணியின் மூலமாய் அரசர் காதில் விழும்படிச் செய்தார். இக்காலத்தில் மொர்தெகாய் எவ்வளவு வருத்தமடைந்திருக்க வேண்டுமென்பதை யாவரும் நன்றாக அறிந்துகொள்ளவேண்டியது. இதைப் பற்றி கண்டிப்பான விசாரணை நடந்ததின்பேரில் சத்தியம் வெளிப்பட்டதால் அந்த இரண்டு பிரதானிகளையும் தூக்கிப் போட்டார்கள்.

இந்த ராஜ துரோகத்தை வெளிப்படுத்தி அரசனுடைய தலையைத் தற்காத்த மொர்தெகாய்க்கு அச்சமயத்தில் யாதொரு விருதுகள் கொடுக்கப்படாதே போனாலும், அவ ருடைய பேரும் இந்தச் சதியோசனையின் நடபடிக்கைகளும் ராஜாங்க நாளாகமத்திலே எழுதிவைக்கப்படும்படி ராஜா கட்டளையிட்டான். அப்படியே எழுதி வைக்கப்பட்

டிருந்தது. இச்சங்கதி நடந்த சிலநாளைக்குப் பின்பு புது மந்திரி ஒருவன் ஏற்படுத்தப்பட்டான். அவனுக்கு ஆமான் என்று பேர். அவன் ஜாதியில் அமலேக்கியனாயிருந்தான். அரசன் அவனை சகல பிரபுக்களுக்கும் மேலாக உயர்த்தின தால் பிச்சைக்காரர் முதல் பிரபுக்கள் வரையுமுள்ள சகல ஜனமும் அவனை சாஷ்டாங்கமாய் விழுந்து வணங்கிவந்தார்கள். அப்படி அவனை நமஸ்கரிக்க வேண்டுமென்பது ராஜ கட்டளையாயுமிருந்தது. ஆமானைக் காணும் ஆணும் பெண்ணும், அந்நிமிஷமே அடியற்ற மரம்போல தாழ விழுந்து அவனை வணங்கினபோதிலும் அரமனை வாசலி லிருந்த மொர்தெகாய் மாத்திரம் அவனை வணங்கவுமில்லை, நமஸ்கரிக்கவுமில்லை. ஆமான் அமலேக்கியனாயிருந்ததுதான் ஒரு விசேஷித்த முகாந்தரமாயிருந்தது. இந்த ஜாதியார் தேவனால் சபிக்கப்பட்டு யூதரால் பகைப்பட்டவர்களா யிருந்தார்கள் (மேலும் மொர்தெகாயின் கோத்திரத்தைச் சேர்ந்த சவுல் என்னும் அரசன் காலத்தில் அமலேக்கியர் அதிகமாய் தாழ்த்தப்பட்டது மாத்திரமல்ல, அவர்கள் அரசனும் வெட்டப்பட்டான். இந்த ஆமான் அப்படி வெட்டப்பட்ட ஆகாக் அரசனுடைய கொடிவழி பந்துதான்). மேலும் ஆமானுக்குச் செலுத்தவேண்டிய மரியாதையானது தெய்வத்துக்கு மாத்திரம் செலுத்தத்தக்க மரியாதையா யிருந்ததால் மொர்தெகாய் அவனை வணங்காமலிருந் திருக்கலாம்.

மொர்தெகாய் பெருமையினாலாவது எஸ்தரம்மாளுடைய அரசனின் பலத்தைக்கொண்டாவது ஆமானை வணங்க வில்லையென்று சொல்லக்கூடாது. அவன் விஷயத்தில் மொர்தெகாய் நடந்துகொள்வது எவருக்கும் ஆச்சரியத்தைக் கொடுத்தது. அவனுடன்கூட ராஜ காவலுக்கு வரும் சேவகர் அடிக்கடி அதைக் குறித்து வினவி எச்சரிக்கிறது முண்டு. தான் மற்றவர்களைப்போல் ஆமானை வணங்காத முகாந்தரம் இன்னதென்பதை மொர்தெகாய் வெகுநாளாய் மனதிற்குள் அடக்கி வைத்திருந்தபோதிலும் ஒருநாள் வெளியிட்டார். அவர் சொல்வார்:—அப்பா, நான் ஜாதியில் யூதனாக்கும், ஆதலால் அப்படிப்பட்ட வணக்கஞ்செய்ய என்னால் முடியாது என்றார். இந்த சமாச்சாரம் சில

நாட்களுக்குள்ளாக ஆமானுடைய காதிலும் விழுந்தது. உடனே அவன் தன் ஜாதி பூர்வோத்திரங்களையும் மொர்தெகாய் ஜாதி பூர்வோத்திரங்களையும் ஆதியோடந்தமாய் விசாரணை பண்ணி, பல காரியங்களை அறிந்துகொண்டு மொர்தெகாய் பேரிலும் அவர் ஜாதியனைத்தின் பேரிலும் மூர்க்கவெறிகொண்டான். ஆமானுடைய மூர்க்கவெறித்தியானமானது மொர்தெகாயை மாத்திரம் தழுவினதாயிராமல், யூத ஜாதியனைத்தையும் சேர்த்துப்பிடிக்கிறதாயுமிருந்தது. மொர்தெகாய்மேல் மாத்திரம் கைபோடுவது அவன் அந்தஸ்துக்கு அற்பமாய்க் கண்டபோதிலும், அவனுடைய கோபாக்கினைக்குப் போதுமான இரையாகவும் விறகாகவும் காணப்படவில்லை. அவன் தன் மந்திரியாளுகைக்குட்பட்ட நூற்றிருபத்தேழு நாடுகளிலுமுள்ள யூதரையெல்லாம் சர்வ சங்காரஞ் செய்யும்படி வகைபார்த்தான். இந்த ஆலோசனை, கோபாக்கினியால் எழும்பின நிமிஷ யோசனையென்று அற்பமாய் எண்ணிவிடலாகாது. இது தேவ தீர்மானங்களையும் வேத மார்க்கங்களையும் தெய்வீக ரட்சண்ய ஏற்பாடுகளையும் குலைத்துப்போடும்படி பாதாள லோகத்துக்குப் பெயெல்செபூலின் ஏவுதலால் நரக பள்ளத்து நாடகசாலை மண்டபத்திலிருந்து தீர்மானமாகி, ஆமானுடைய மூளைக்குள் செலுத்தப்பட்ட அபிப்பிராயமாயிருந்தது. ஏனெனில் யூதர் என்ற ஜாதியனைத்தும் அக்காலத்தில் அவனுடைய ராஜ்யத்துக்குள்ளேதான் வசித்தார்கள். மெய்ம்மார்க்க நூலும், ஆசாரமும், மெய்த்தேவ வணக்கமும், பக்தியும் அந்த ஜாதிக்குள் மாத்திரம் இருந்தது. லோக இரட்சகராக அவதாரமெடுக்கும் மேசியாவும் அந்த ஜாதிக்குள்ளிருந்தே எழும்பவேண்டியதாயிருந்தது. ஆமானுடைய ஆலோசனையானது அவையனைத்தையும் அழித்துப் போடுகிறதல்லவா? சொல்லவேண்டுமானால் ஆமான் மொர்தெகாய்க்கும் அவருடைய ஜாதிக்கும் விரோதமாகக் கட்டுப்பாடு பண்ணி சதிகற்பனைகளைச் செய்கிறதுபோலிராமல், சர்வவல்ல சாட்சாத் கடவுளின் சகல ஆலோசனைகளையும் அல்லத்தட்டிவிடும்படி அவருக்கு வாதியாக ஏற்படுவதுபோலிருக்கிறது. ஓ ஜனங்களே! ஆமானும் ஆண்டவரும் எதிர்கட்சியாகி போர்புரியப்போகிறூர்கள்;

இந்தப் போர் எவ்வண்ணம் முடியுமென்று பார்ப்போம் வாருங்கள்.

அத்தேசத்தில் ராஜ்யபாரத்துக்கடுத்த பெருங் காரியங்களைச் செய்ய ஆரம்பிக்கும்படி வருஷா வருஷம் தைமாத ஆரம்பத்தில் பூர் என்று அழைக்கப்பட்ட ஒருவித ஜோஷியச் சீட்டுப்போட்டு, அந்தந்த மாதங்களில் நல்ல லக்கணமுள்ள தினங்களைக் குறித்துக்கொண்டு அத்தினங்களில் தேச வாழ்வுக்குரிய பெருங் கிரியையை நடத்தி வருவதுண்டு. அகாஸ்வேரின் பன்னிரண்டாம் வருஷமாகிய அந்த வருஷத்தில் போட்ட சீட்டிலே ராஜ்ய சேமத்துக்குரிய கிரியைகளை நடத்தும்படி அவ்வருஷத்து மார்கழி மாதமே நல்ல லக்கணமாக கணித்துக் காட்டப்பட்டிருந்தது. இந்தச் சீட்டு எப்போதும் மந்திரியின் முன்பாக அத்தேசத்துச் சோதிட சாஸ்திரிகளால் போடப்பட்டு நாளாகமத்தில் பதியப்பட்டு அரசனுக்குத் தெரியப்படுத்தப்படுகிறதுண்டு.

சீட்டின் வரலாறுகளைத் தெரியப்படுத்தும்படி ஆமான் அரமனை சேர்ந்தான்; அவனுக்கு மங்கள வார்த்தைகள் கலந்த ராஜ பேட்டியும் கிடைத்தது. ஆமான் அரசனைத் தெண்டனிட்டு நின்று பக்தி விநயமாய்ப் பாதங்கூட்டி கைகுவித்து கனிந்த பார்வையோடு நோக்கிச் சொல்லுவான்: 'கேட்பீர் மகா ராஜாவே! நீர் என்றைக்கும் வாழ்க! மாட்சிமை தங்கிய முடி மன்னரே! உமது ராஜ்யங்களும் வாழ்வதாக! உமது அடியானாகிய நான் இத்தேசத்துப் பிரதானிகளோடும், பெரியோர்களோடும், மந்திராலோசனைக் காரர் யாவரோடும் கூடியிருந்து வானசாஸ்திரத்திலும், கிரக ராசிகளின் ஞானத்திலும் வல்லவர்களாகிய சோதிடரை வைத்து பூர் என்னும் தேவ இரகசிய வெளிப்படுத்தல் சீட்டுகளைப் போட்டதில் இவ்வருஷத்தில் ராஜ்ய சேமத்துக் கடுத்த விசேஷ கிருத்தியங்களை நிறைவேற்றும்படி மார்கழி மாதமாகிய கடைசி மாதமே நல்ல லக்கணம் என்று கண்டு கொண்டேன்' என்றான். அப்போது அரசன் அகமகிழ்ந்து, ஆ! என் அன்புள்ள மந்திரியே! ராஜாபிமான கர்த்தனே! மாட்சிமை பொருந்திய பூர் என்னும் சீட்டு முடிந்ததா?— நல்ல காரியந்தான். அந்த மங்கள லக்கணத்தில் ராஜ்ய

வாழ்வுக்கேற்ற எந்தப் பெரிய கிருத்தியத்தை நிறைவேற்ற வேண்டுமென்கிறது உன் யோசனையிலிருக்கிறது? என்று கேட்டார். உடனே ஆமான் இந்தச் சமயத்தைவிட வேறு சமயம் நமக்கு கிட்டாது என்று சிந்தித்துக்கொண்டு அரசரை மறுபடியும் பாதம் பணிந்து சொல்லுகிறான்:—

'ராஜாதி ராஜனே! ராஜ கெம்பீரனே! நீதி வழுவா நெறியோனே! இந்தியா முதல் எத்தோப்பியா மட்டுமுள்ள நூற்றிருபத்தேழு தேசங்களையும் ஒரே குடைக்குள் அடக்கி ஆளும் ஆண்டவனே! உமது சட்டங்களின் சத்தம் சமுத்திரங்களையும் வானங்களையும், நாடுகளையும் நகரங்களையும், பட்டணங்களையும் பட்டிக்காடுகளையும், கற்றோரையும் மற்றோரையும் அடக்கி ஆளுகின்றன. உம்மை சிங்காதி சிங்கமென்று நான் புகழ்ந்தாலும் அது போதாதே; அடியேனுடைய அநுதின கவனமும் கருத்தும் என் ஆண்டவனாகிய உம்முடைய தேச வாழ்வையே நோக்கியிருக்கிறது. இந்த நூற்றிருபத்தேழு நாடுகளிலுள்ள பிரஜைகளுக்குள்ளே ஒரு ஜாதியார் அங்குமிங்கும் சிதறுண்டு பரம்பியிருக்கிறார்கள். அவர்களுடைய வழக்கங்கள் மற்றக் குடிகளுடைய வழக்கங்களுக்கு முற்றும் விகற்பப்பட்டிருக்கிறது; அவர்கள் உம்முடைய சட்டங்களைச் சட்டைபண்ணுகிறதில்லை. இவ்வண்ணம் அவர்கள் போக்கின்படி விட்டுவிடுவது உமக்கு நியாயமுமில்லை, ராஜ்யத்துக்கு அநுகூலமுமில்லை. உமக்குப் பிரியமானால் அவர்களை அழித்துவிடுவது நலமாகக் காண்கிறது. அவர்களால் வரும் தீர்வைப் பண நஷ்டத்தால் ராஜ கஜானா குறையுமென்று நீர் கலங்கவேண்டாம்; நான் அந்த நஷ்டத்துக்கு இரண்டு கோடியே பத்து லட்சம் ரூபாய் கஜானாவுக்குக் கட்டிப்போடுகிறேன். அந்த ஜனங்களாலிருக்கிற லாபத்தைவிட ராஜ்யத்துக்குண்டாகிற நஷ்டங்கள் மகா பெரி'தென்று சொல்லி முடித்தான்.

யூதரைத் தொலைத்துவிடும்படி ஆமான் பேசின வார்த்தைகள் கிறிஸ்தவர்களை நாசம் பண்ணும்படி அடிக்கடி புறமதஸ்தர் செய்யும் கட்டுப்பாடுகளை நன்றாய்க் காட்டுகிறது. தேவனுடைய பிள்ளைகள் ஒரே கூட்டமாய் அல்ல, கொஞ்சம் கொஞ்சமாய்ப் பல இடங்களிலும் சிதறியிருப்பதால்

சிறுத்துக் காணுங்காட்சி முதலாய் புறமதஸ்தருடைய கண்ணுக்கு வருத்தமாயிருக்கிறது. கிறிஸ்தவர்கள் என்ற பேரை பூமியில் இராதபடி அற்றுப்போகப் பண்ண அநேக பிரயத்தனங்கள் இம்மட்டும் நடந்திருக்கிறது; இப்போதும் நடந்துவருகிறது. கிறிஸ்து மார்க்கத்தை அதம்பண்ணும் ஆணவத்தோடு படையெடுத்த அரசரும் பலருண்டு. மெய் யாகவே ஒரு கிறிஸ்தவனை விரோதிக்கிறவர்களின் தொகை அவனுடைய தலையின் மயிரிலும் அதிகந்தான். ஆயினும் நாம் அஞ்சவேண்டியதில்லை. நம்முடைய விரோதிகள், தொகை யில் அதிகமாயிருந்தபோதிலும் நம்மோடிருக்கிற இம்மானு வேல் அவர்கள் எல்லாருடைய பலத்திலும் பலவானாயிருக் கிறார். அவர் அவர்களைப் பட்டயத்தினாலும் சேனைத் திரளினாலுமல்ல, தமது நாசியின் சுவாசத்தினாலே ஊதிப் போட வல்லவராயிருக்கிறார். இம்மட்டும் பாதாள பூத கணங்களும், பூலோக மக்களுமாய்க்கூடி திருச்சபையை அழித்துப்போட முயன்றும் அது பலத்துப் பெருகிக் கொண்டே வருகிறது. இம்மானுவேல் என்னும் அதின் அரசனானவர் ஒன்றித்திருந்தபோதிலும் தமது ரட்சண்ய நேச பாணங்களை வானத்திலிருந்து விரோதிகளின் நெஞ்சில் தைக்கும்படி எய்து அவர்களைத் தமது குடிகளாக்கி, தம்மைப்பற்றிய அபிமான மதுவையும் அவர்கள் உள்ளத் தில் ஊற்றிவிடுகிறார். இம்மானுவேலரே, உமக்கே மகிமை யுண்டாவதாக!

இராஜா இச்சமயத்தில் என்ன சிந்தையிலிருந்தாரோ தெரியவில்லை. ஆமானுடைய பணிதலும், பாசாங்கும், அவன் பாராட்டின அபிமானமும் அரசன் மனதை மாற்றி விட்டதாக்கும்; அல்லவென்று 'இரண்டு கோடியே பத்து லட்சம்' என்று சொன்ன தொகையானது அவருடைய புத்தியைக் கெடுக்கும் பாஷாணமாயிருந்து, யார் எக்கேடு கெட்டுப்போனாலும் சரி, ராஜ கஜானா நிரம்பட்டும் என்று நினைத்துக்கொண்டாராக்கும்; அல்லவென்று இவர் தமது வழக்கம்போல மது அருந்தி மதி மயங்கியிருந்தாராக்கும். எப்படியும் ராஜ மதியும் குடிகள் நேசமும் அவனில் குடி கொண்டிருக்கவில்லை என்பது மெய். ஒரு ஜாதியார் வியாபார விஷயமாய் அல்லது வேறு காரணமாய்ப் பல

நாடுகளிலும் சிதறியிருந்தது தோஷமா? அவரவர் தங்கள் ஆசாரங்களைக் கைக்கொண்டு வந்தது தோஷமா? என்பதை அவன் கவனிக்கவில்லை. அவர்கள் எப்போதும் சட்டங்களை மீறும் சண்டாள ஜாதியென்பது நிஜமா, அபத்தமா என்பதை ஆராய்ந்து பார்க்கவுமில்லை. இப்படிப்பட்ட ராஜாக்களால் உலகத்துக்கும், நல்ல குடித்தனக்காரருக்கும் அடிக்கடி மோசங்கள் வந்தது மெய்தான். இப்பெருங் கூட்டத்தைச் சங்காரஞ்செய்ய மந்திரி ஆலோசிப்பது தகுதியா? இரண்டு கோடியே பத்து லட்சம் ரூபாய் கிஸ்தி கட்டும் ஜனம் அனைத்தும் நாசமாவது நமது ராஜ்ய பாரத்துக்கு நிலையான நிந்தையாகுமே என்கிற அம்மாத்திரம் யோசனை முதலாய் அரசன் மூளையில் அச்சமயத்தில் உண்டாகவில்லை. ஐயோ! அரசன் காரியத்தைக் கவனியாமலும் ஆராய்ந்து பாராமலும் ஆமானைத் தட்டிக்கொடுத்து, நல்லது மந்திரியே என்று சொல்லி, அவன் சொன்ன அபிமான ஆலோசனையானது இரண்டு கோடியல்ல, இருபது கோடி ரூபாய்க்கு சமமாக்கும் என்று சொல்லுகிறதுபோல நினைத்து, இதற்காக நீ ஒரு காசும் செலுத்தவேண்டாம்;

அந்த ஜனத்துக்கு உன் இஷ்டப்படி செய்

என்று உத்தரவருளி தன் முத்திரை மோதிரத்தையும் கழற்றி ஆமான் கையில் கொடுத்தான். அந்நிமிஷமே அவனுடைய இரத்த நரம்புகள் ஆனந்த கீதம் பாடும் கின்னர நரம்புகளைப்போல் துடித்தன என்று சொல்லவேண்டியது. அவனுக்கு அச்சமயத்திலுண்டான முக மலர்ச்சியையும் மனமகிழ்ச்சியையும் மனுமக்களில் எவனும் வருணித்து முடியாது. அட்சணமே ஆமான் தன் உத்தியோக சாலைக்குப் போய் நாடெங்குமுள்ள சம்பிரதிகள் அனைவரும் அம்மாதம் பதின்மூன்றுந்தேதியிலே வந்து சேரவேண்டுமென்று தாக்கீது அனுப்பினன்.

மந்திரியின் தாக்கீது போனவுடனே அத்தந்த நாட்டின் சம்பிரதிகள் நாட்டிய குதிரைகள்போல் விரைந்து நடந்து குறிக்கப்பட்ட தினத்தில் கூடினார்கள். அப்போது மந்திரி

ஒரு கட்டளையை எழுதி தன் ஆளுகைக்குட்பட்ட நூற்றிருபத்தேழு நாடுகளில் வழங்கப்பட்டு வந்த எல்லாப் பாஷைகளிலும் அதைத் தருசுமா பண்ணும்படி உத்தரவு கொடுத்தான். அந்தக் கட்டளையாவது: 'ஆதார்மாதமாகிய (மார்கழி மாதம்) பன்னிரண்டாம் மாதம் பதின்மூன்றாந் தேதியாகிய ஒரே நாளிலே சிறியோர் பெரியோர் குழந்தைகள் ஸ்திரீகள் ஆகிய சகல யூதரையும் அழித்துக்கொன்று நிர்மூலமாக்கவும், அவர்களைக் கொள்ளையிடவும் இதினால் கற்பிக்கிறோம்' என்பதுதான். இதை ராஜாவின் பேரால் எழுதி ராஜமுத்திரையால் உறுதிப்படுத்தப்பட்டுமிருந்தது. வாயுவேகமான அஞ்சற்காரர் இக்கட்டளையை நாடெங்கும் சுமந்து அங்கங்குள்ள அதிகாரிகளிடம் ஒப்புவித்தார்கள். கட்டளைபோனவுடன் நாடுகள் நகரங்கள், ஊர்கள் கிராமங்கள், தேர்வீதிகள், தெருவீதிகள் காடுகள் மேடுகள், தொழில் துறைகள் இராணுவங்கள், கோட்டைகள் கொத்தளங்கள், வீடுகள் விடுதிகள் எங்கும் மளமள மளமள என முழங்கும் மேளங்களாலும், பலத்த சத்தமுள்ள கட்டியக்காரராலும் பறைசாற்றி விளம்பரஞ் செய்யப்பட்டதோடு மொர்தெகாயும் எஸ்தரும் வசித்த சூசான் நகரத்து தெருக்களிலும் பிரசித்தப் படுத்தப்பட்டது. இந்த விளம்பரத்தைக் கேட்ட பெரியோர் சிறியோரான குடிகளனைவரும் கலங்கி, ஐயோ! இப்படிப் பட்ட அநியாயம் வையகத்தில் எந்தக் காலத்திலும் நடந்ததில்லையே; இதை நமது காதால் கேட்கவும், கண்ணால் பார்க்கவும் நேரிட்டதா என்று பரிதாபப்பட்டார்கள். இவ்வண்ணம் ராஜ்ய மடங்கலும் கலங்கி பிரலாபிக்கையில் அரசனும் ஆமானும் குடித்துச் சிரித்துக் காலம் போக்கினார்கள்.

இக்கட்டளையைக் கேட்கும் யூத ஜாதியான ஒவ்வொரு ஆத்துமாவின் இருதயமும் எவ்வளவு வியாகுலப்பட்டிருக்கும் என்பதை யார்தான் மறுக்கக்கூடும்? அந்த ஜாதியனைத்துக்கும் வரும் நிர்மூலத்துக்கு இன்னும் பதினொரு மாதமிருக்கிறதென்பது ஒரு ஆறுதலாயிருந்தாலும், அவ்வளவு காலத்தையும் அவர்கள் எவ்வளவு கசப்போடு கழிக்க வேண்டியதாயிருந்தது! இச்சட்டத்தைக் கேட்கும் பாபிலோனியன் அல்லது பாரஸீகன் இனிமேல் யூதனைச் சட்டை

பண்ணுவானு? யூதரிடத்தில் கடன் வாங்கினவனும் அடைமானம் வைத்தவனும் அந்தத் தொகைகளைக் கொடுப்பானு? ஐயோ, அவர்கள் புலம்புவதும் பிரலாபிப்பதுமே வேலையாயிருந்தார்கள்; யூதர் அதிகமாய் வசித்த சூசான்நகரம் கலங்கிப்போயிற்று.

நடந்த வாலாறுகளையும் பிறந்த கட்டளையையும் மொர்தெகாய் அறிந்தபோது துயாமுண்டு தன் வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டு, இரட்டுடுத்தி சாம்பலைவாரி தலைமேல் இறைத்துக்கொண்டு நகரத்தின் நடுவீதி வழியாய்த் துயரமுள்ள மகா சத்தத்தோடு அலறிக்கொண்டு அரமனை முகப்புமட்டும் வந்தார். அதற்கப்பால் அவர் போகக்கூடாது. ஏனெனில் துக்க உடைதரித்த எவனும் அரமனைக்குள் போகக்கூடாதென்பது அத்தேசச் சட்டமாயிருந்தது. நாடெங்குமுள்ள யூதரனைவரும் வேறெங்கும் போகவும் ஏதுமில்லை. ஏனெனில் அவர்கள் எங்கே போக யோசித்தாலும் அதெல்லாம் அகாஸ்வோருடைய ஆளுகைக்குட்பட்டதாகவே இருந்தன. அவர்கள் அனைவரும் கண்ணியில் அகப்பட்ட பட்சிகள்போலும் வலையில் சிக்கிக்கொண்ட மான்கள் போலும் புலம்பி உபவாசித்து வந்தார்கள்.

மொர்தெகாய் பைத்தியம் பிடித்தவர்போல் அலறித்திரியும் செய்தியும், அவர் இரட்டுடுத்தி இரவு பகல் புலம்பி அழும் செய்தியும் தாதிமார் மூலமாய் எஸ்தர் இராணிக்கு எட்டிற்று. உடனே அவள் காரியங்களைப் பூரணமாய் அறியாததால் சில பட்டுபட்டாவளிகளை அனுப்பி, தன் சிற்றப்பன் இரட்டைக்களைந்து பட்டை கட்டும்படிச் சொன்னாள். அவர் அவைகளை ஏற்றுக்கொள்ளவில்லை. அப்பால் எஸ்தர் மொர்தெகாயின் துக்கத்தில் ஏதோ அந்தரங்கமிருக்கிறதென்று உத்தேசித்து, நம்பிக்கைக்குரிய தாஞபதிகள் மூலமாய்க் காரியங்களென்ன? காரணங்களென்னவென்று விசாரித்தாள். உடனே மொர்தெகாய் நகரத்தில் நடந்த வாலாறுகளைச் சொல்லி, விளம்பரத்தின் நகலொன்றையும் கொடுத்தனுப்பி இக்கட்டளையை மாற்றும்படி பிரயத்தனம்

BISHOP STEPHEN NEILL
ECUMENICAL STUDY AND RESEARCH CENTRE
PALAYANKOTTAI.

பண்ணுவது அவளுடைய கடமை என்பதாக சொல்லச் சொன்னார். அத்தாகுபதி உண்மையுடையவனானபடியால் சகலத்தையும் எஸ்தருக்குச் சொல்லிதான் வாங்கி வந்த விளம்பர நகலையும் கொடுத்தான்.

எஸ்தர் அதைப் படித்துப் பார்த்து விசனப்பட்டு, தீர்க்காலோசனை பண்ணி இன்னபடிச் செய்யலாமென்று தெரியாமல், அத்தாகுபதி மூலமாய் பின்வரும் செய்தியைச் சொல்லியனுப்பினாள். அதாவது: 'என் அன்புள்ள சிறிய தகப்பனே, நீர் இவ்வரமனைச் சட்டம் அறியாதவரல்லவே; ராஜா கூப்பிட்டாலன்றி அவர் சமுகம் கிட்டுவது அரிதாயிற்றே; யாராவது கூப்பிடாமற் போகுஞ் சமயத்தில் அரசர் கிருபை கூர்ந்து செங்கோலை நீட்டினால் ஆச்சுது, மற்றப்படி அந்நேரமே பிணமாக வெட்டப்பட்டுப் போகிறதுண்டே; நான் அரசரைக் கண்டு ஒருமாதமாகிறது, இனி எப்போது வரவழைப்பாரோ அறியேன்; அவர் கூப்பிட்டால் என்னாலானதைப் பேசக்கூடும், கூப்பிடாத பட்சத்தில் என்னால் என்ன செய்யக்கூடும்?' என்று சொல்லியனுப்பினாள்.

தாகுபதி இவ்வளவு சமாச்சாரத்தையும் சொல்லவே மொர்தெகாய் விசனப்பட்டு, ஐயோ! நமது மகள் காரியத்தின் ஆழங்களை அறியாமல் அல்லோ இப்படி ஜாடையாய் காரியத்தைக் கடத்தி விடுகிறாள் என்று நினைத்து, பின்வரும் செய்தியை மறுபடியும் அவளுக்குச் சொல்லும்படி கேட்டார். அதாவது, 'இராணியம்மாளே! நீ அரண்மனையிலிருக்கிறதால் ஆக்கினைகத்தி உன் மட்டும் வராதென்று நினையாதே; கட்டளை பொதுவானது; நீ யூத குலமானதால் அரசர் கட்கம் முதலாவது உன் கழுத்தைக் கடந்துபோனாலும் போகலாம்; மற்ற யூதர் தப்பக்கூடாதிருக்க நீ தப்புவாயென்று கனவிலும் நினையாதே; உன் அரமனைச் சிறப்பும், அரசரின் நேசமும், தாதிகளின் பணிவும் உன் மனதை மூடுகிறதால் என் வார்த்தைகளை அற்பமாய் எண்ணாதே. நீ பஞ்சுமெத்தையில் படுத்து, இரத்தினமிழைத்த முக்காலியில் கால்

வைத்து, வெண்சாமரையால் துயில்கொண்டு, பரிமளங் களைச் சுவாசித்து, பன்னீரால் வாய்க்கொப்பளித்து, பாலில் கைகழுவி, பட்டுக் கட்டி, பாதப் பணிவாங்கி பவுசாய்க் காலங்கழிக்கும் நாட்கள் கொஞ்சந்தான். இராணியாரே! வருகிற மார்கழி மாதம் பதின்மூன்றும் தேதியன்று நானும் இரேன், நீயும் இராய், யூத ஜனமும் இரார்கள்; நீ இந்தக் காலத்தில் மவுனமாயிருந்தால் நமது பிதாக்களின் தேவன் யூதருக்குச் சகாயத்தையும் இரட்சிப்பையும் வேறொரு திசை யிலிருந்து எழும்பும்படிச் செய்வார்; அப்பொழுது நீயும் உன் குடும்பமும் அழியமற்ற யூதர் தப்பிக்கொள்வார்கள்; நீ இப்படிப்பட்ட காலத்துக்கு துணை நிற்கும்படியாகத்தான் இந்த ராஜமேன்மையைக் கடவுள் உனக்குக் கிடைக்கச் செய்திருக்கலாமே' என்று சொல்லும்படி கட்டளையிட்டார்.

மொர்தெகாய் இரண்டாந்தரம் சொல்லியனுப்பின வார்த் தைகள் ராணியின் மனதில் அம்புபோல தைத்துவிட்டதால் அவள் காரியங்களை ஆலோசித்துக்கொண்டு, நீர் சூசானி லிருக்கிற யூதரனைவரையும் கூட்டிக்கொண்டு மூன்றுநாள் அல்லும் பகலும் அன்னம் தண்ணீரின்றி அருந் தபசு செய் யுங்கள்; நானும் என் தாதிமாரும் அப்படியே உபவாசம் பண்ணுவோம். நான் சட்டத்தைக் கவனியாமல் ராஜதரிசனை காணும்படி தீர்மானித்திருக்கிறேன். 'நான் செத்தாலும் சாகிறேன்' என்று சொல்லச்சொன்னாள். தான் இந்தக் காரியத்தில் தலையிட வேண்டுமென்றே கடவுளால் அரச ருக்கு மனைவியாகும் கனம் கிடைத்ததென்று அவள் நன்றாய் உணர்ந்துகொண்டாள். மேலும் தன் சிற்றப்பன் சொல்லி யனுப்பின வாசகப்படி தேவன் எப்படியாவது சகாயத்தைக் கட்டளையிடுகிறது நிஜமென்றும் அவள் மனதில் பட்டது. இராணியின் யோசனைப்படி மொர்தெகாய் சூசானிலிருந்த யூதர் அனைவரையும் வர வழைத்துக் காரியத்தை விவரித்து, மூன்றுநாள் கண்டிப்பான உபவாசம் செய்து கடவுளுடைய பாதத்தில் தங்கள் ஜெபங்களைக் கருத்தோடு படைக்கும்படி கட்டளையிட்டார். அப்படியே அவர்கள் உபவாசித்து ராணி

ராஜசமுகம் கிட்டவும், அவளுடைய சிபாரிசால் ராஜ தாக்கீது மாறவும் கடவுளைப் பிரார்த்தித்து வந்தார்கள்.[1]

மூன்றாம் நாளில் எஸ்தர் ராஜதரிசனைக்குரிய ஆயத்தத்தோடு கொலுமண்டபத்திற்குப் போனாள். அப்போது அரசன் ஜெயசீலனாய் சிங்காசனத்தின்மேல் வீற்றிருந்தான். இராணி முற்றத்தில் நிற்கக்கண்ட அரசன் தயைகூர்ந்து செங்கோலை நீட்டவே அவள் கிட்ட நெருங்கினாள். அரசன்

[1] இந்த ஆபத்துக் காலத்தில் மொர்தெகாய் செய்ததாக எழுதப்பட்டிருக்கிற ஒரு ஜெபமுண்டு. அந்த ஜெபமாவது: 'கர்த்தாவாகிய சர்வத்துக்கும் வல்ல ராஜாவாகிய ஆண்டவரே, சகலமும் உம்முடைய வல்லமைக்குள் இருக்கின்றன; உம்முடைய இஸ்ரவேலை நீர் ரட்சிக்கவேண்டுமானால் ஒருவரும் உம்மை எதிர்த்து நிற்க முடியாதே; தேவரீர் பரத்தையும், அபரத்தையும், பரத்தின்கீழ் ஆச்சரியமான சகல பராபரங்களையும் சிருஷ்டித்தீர்; தேவரீர் எல்லாத்துக்கும் ஆண்டவர்; கர்த்தாவாயிருக்கிற உம்மை ஒருவரும் எதிர்க்கிறவர்களில்லை; தேவரீர் எல்லாவற்றையும் அறிந்திருக்கிறீர்; ஆண்டவரே, நான் அகந்தைக்கார ஆமானை வணங்காமலிருந்தது பெருமை பெத்தரிக்கத்தினாலே அல்ல, அவசங்கையினாலேயும் அல்லவென்று தேவரீருக்குத் தெரியுமே. நான் இஸ்ரவேலின் நலத்துக்காக அவன் காலடியை முதலாய் முத்திசெய்ய இதோ, ஆயத்தமாயிருக்கிறேன். நான் செய்த முகாந்தரம் மனுஷசங்கையைப் பராபரசங்கைக்குமேல் வட்டஞ்செய்யாதபடிக்கும் என் ஆண்டவராகிய உம்மையேயல்லாமல் வேறொருவனை வணங்காதபடிக்கும் செய்தேனே யொழிய பெருமையினாலே செய்தேனில்லை. இப்போதும் கர்த்தாவாகிய தேவனுமாய் ராஜாவுமாய் ஆபிரகாமின் தேவனுமாயிருக்கிற ஆண்டவரே! உம்முடைய ஜனங்களின் பேரில் கிருபையாயிரும். அவர்கள் எங்களைக் கெடுக்க வகை பார்த்து, ஆதி முதற்கொண்டிருக்கிற உமது சுதந்தரத்தை அழித்துப்போட ஆசையாயிருக்கிறார்கள். நீர் எகிப்திலிருந்து உமக்கென்று இரட்சித்துக்கொண்ட உம்முடைய பங்கை அசட்டை பண்ணாதேயும்; நீர் என் மன்றாட்டைக்கேட்டு, உம்முடைய காணியாட்சியின்பேரில் கிருபையாகி, நாங்களும் உயிரோடே பிழைத்து உம்முடைய திருநாமத்தைப் புகழ்ந்துகொள்ளும்படி எங்கள் துக்கத்தை சந்தோஷமாகத் திருப்பியருளும் சுவாமி. ஆண்டவரே, உம்மைத் துதிக்கிறவர்களின் வாயை அழிம்பாய்ப்போக இடங்கொடாதேயும்' என்பதுதான் (எஸ்தர் ஆகமத்தின் குறைபங்கு 13ஆம் அதிகாரம் 9 முதல் 17 வரை பார்க்க).

அகமகிழ்ந்து எஸ்தர் இராணியே, உனக்கு என்னவேண்டும், நீ கேட்க வந்த காரியமென்ன, நீ ராஜ்யத்தில் பாதிகேட்டாலும் உனக்குக் கொடுக்கப்படும் என்று சொன்னான். அவளோ தன் வியாகுல அக்கினியனைத்தையும் மனதில் கட்டி வைத்துக்கொண்டு முக மலர்ச்சியற்று, தான் அன்று ஒரு விருந்துவைப்பதாகவும் அதற்கு அரசனும், ஆமான் என்னும் சிரேஷ்ட மந்திரியும் வரவேண்டுமென்றும் மன்றாடினாள். நல்லது, அப்படியே ஆகட்டும் பெண்ணே என்று மங்களங்கூறி அனுப்பிவிட்டு, மந்திரிக்குச் சமாச்சாரத்தைத் தெரிவித்து அவனையும் அழைத்தான். ஆமான் ஆனந்தத்தால் ஆலவட்டம் போட்டு தன்னை ஆயத்தப்படுத்திக்கொண்டு அரசனுடன் குறிக்கப்பட்ட நேரத்தில் விருந்து மண்டபத்துக்கு வந்தான். அரசன் அறுசுவையுள்ள போஜனம் அருந்தி, மன மகிழ்ச்சிகொண்டு, ஆசைதீர பாயாசம் பண்ணி ஆனந்தங்கொண்டான். ஆமானும் அவ்வண்ணமே விலாப்புறம் வீங்க விருந்துண்டு முகமலர்ச்சி கொண்டான். இவ்வளவு கனம் எந்த மந்திரிக்கும் அந்த ராஜ்யத்தில் கிடையாதிருக்கலாம். இந்த மகிழ்ச்சி வேளையில் அரசன் இராணியை நோக்கி, உன் வேண்டுதலென்ன? நீ ராஜ்யத்தில் பாதி மட்டும் கேட்டாலும் கிடைக்கும் என்றான். அப்போது அவள் நாளையத்தினமும் நீங்கள் இருவரும் விருந்துண்ண அடியாளுடைய மண்டபத்துக்கு வரவேண்டுமென்று கெஞ்சுகிறேன்; அப்போது நான் கேட்க வேண்டியதை ராஜாவுடைய சொற்படி கேட்பேன் என்று சொன்னாள். நல்லது, அப்படியே ஆகட்டுமென்று அரசனும் ஆமானும் இராணிக்கு மங்களங் கூறி தங்கள் மாளிகைக்குப் புறப்பட்டார்கள்.

ஆமான் ராஜாவின் கோட்டை வாசலைக் கடந்துபோகும்போது அங்கே உட்கார்ந்துகொண்டிருந்த மொர்தெகாய் வழக்கம்போல வணங்கவில்லை. அந்நிமிஷமே ஆமான் ஆணவம் பெருகி ஆக்கினை செலுத்தும் கோபாக்கினியால் கொளுத்தப்பட்டவனாய் தன் அரமனை சேர்ந்தான். அங்கே அவன் மனைவி அன்றையதினம் பல பிரபுக்களை வருந்தி விருந்துண்டு மன மகிழ்ச்சியாயிருந்தாள். அச்சமயம் ஆமானும் அவர்களோடு கலந்து ராஜமாளிகையில் நடந்த

மட்டற்ற மதிப்புகளையும், தான்மாத்திரம் தனிமையாய் ராணியாரால் அழைக்கப்பட்டதையும் வியந்து பேசி மன மகிழ்ந்தான். அங்கிருந்த அனைவரும் ஆமானுக்குக் கிடைத்த அதன் விசேஷ கவுரதைக்காக மங்களங்கூறி கைதட்டினார்களாக்கும். ஆமானின் சிநேகிதர் அகமகிழும்போதே அவன் முகத்தில் துக்கசாயல் காணப்பட்டது. அவன் பின்னும் அவர்களோடு சொல்வான்: கேட்டீரோ என் நேசரே! என் நேசமே! நான் சொல்லவேண்டிய வரலாறு இன்னுமுண்டு; அரசனும் ராணியும் இவ்வளவு மதிப்பும் மரியாதையும் செய்து வந்தாலும், அந்த யூதனாகிய மொர்தெகாய் ராஜாவின் அரமனை வாசலில் உட்கார்ந்திருப்பதை நான் காணுமளவும் அரசனுடைய மதிப்பும் ராணியுடைய விருந்தும் மற்றச் சந்தோஷங்களும் எனக்கொன்றுமில்லையென்று சொன்னான். இதிலே இவனுடைய பெருந்தன்மையென்பது வெளியாகிறதல்லவா? இதினாலே ஆமான் அற்பன் என்பது தெளிவாகிறது. இவ்வளவு சொன்னவுடனே ஆமானுடைய மனைவிக்கு ஆத்திரம் பொறுக்கவில்லை. அவள் தன் கணவனை நோக்கி: நீர் இந்த இரவிற்குள்ளாக ஐம்பது முழ உயரத்தில் ஒரு தூக்குமரம் செய்து வைத்து அதிகாலையில் அரசனிடம் உத்தரவு பெற்று அவனை அதிலே தூக்கிப்போட்டு வந்து வேலைசெய்யும் என்றாள். அச்சமயத்தில் அங்கே கூடியிருந்தவர்களும் ஆம் ஆம், அதுதான் சரியான முறையென்று தீர்மானித்தார்கள். உடனே பந்தங்கொளுத்தி மொர்தெகாய்க்கு தூக்குமரம் செய்தார்கள். இதில் நாம் ஆமானுடைய மனைவியின் குணத்தை முதலாவது பார்க்கிறோம். ஆகாபுக்கு ஏற்றவள் ஏசபேல், ஆமானுக்கு ஏற்றவள் அவன் மனைவியாகிய சிரேஷி. எரிகிற பந்தத்தில் எண்ணெய் வார்த்து வளர்க்க இவளைப்போல சாமர்த்தியமுள்ளவர்கள் யாருமில்லை என்கலாம். ஆமானின் வீட்டின் ஓரமாய் தூக்குமர வேலை நடந்தேறும்போது வானதிதேவன் நகைத்துக்கொண்டிருந்தார் என்று சொல்லவேண்டியது.

ஆமானின் வரலாறு இப்படியிருக்க, விருந்திலிருந்து எழுந்துபோன அரசன் தனது பத்தினியின் முகத்தில் களையையல்ல, கலக்கத்தைக் கண்ணோக்கினபடியால் அதின் இரகசியத்தை அறியாமல் தனக்குள் கலக்கமானான். அக்

கலக்கமானது அன்றிரவு அவனுடைய கண்களின் இமைகளை மூடவிடவில்லை. அவன் வெகுநேரம் பரிமளந் தெளித்து புஷ்பம் பரப்பியிருந்த மெல்லிய மெத்தையுள்ள தூங்கு மஞ்சத்தில் துயிலெடுக்கத் தலைசாய்ந்திருந்தும், நித்திரைவராததால் எழுந்து விளக்கேற்றி தனது விழிப்பு நேரத்தில் ராஜ்யபாரத்துக்கடுத்த பூர்வ வரலாறுகளை அறிய விரும்பி, அந்த நாளாகமங்கள் அடங்கிய புஸ்தகத்தை வாசிக்கும்படி ஒரு பிரதானிக்குக் கட்டளையிட்டான். அதின் ஊடேயூடே ராஜாபிமான் குடிகள் பலர் ராஜ்ய க்ஷேமத்துக்காக செய்த பெருங் கிரியைகளும் அதினிமித்தம் அவர்கள் பெற்றுக்கொண்ட பட்டங்கள், பரிசுகள், உயர்ந்த அந்தஸ்து ஆகிய சகல விபரங்களும் அடங்கியிருந்தன. அந்தப் பிரதானி அவைகளை வாசிக்க வாசிக்க அரசன் கேட்டுக்கொண்டேயிருந்தான். கடைசியாகப் பிரதானி, வாசல் காவலாளரில் இருவர் அரசன்மேல் கைபோட நினைத்து சதியோசனை செய்ததும் அதை மொர்தெகாய் அறிவித்ததும் அவ்விரு குற்றவாளிகளும் தண்டிக்கப்பட்டதுமான வரலாறை வாசித்தான். அப்பொழுது அரசன் அந்த சதியோசனையைக் காட்டிக்கொடுத்து அரசனைத் தப்புவித்த மொர்தெகாய்க்கு ஏதாவது கனமும் மேன்மையும் செய்யப்பட்டதா என்று கேட்டான். உடனே பிரதானி, ராஜாவே, அப்படிப்பட்டதொன்றும், செய்யப்படவில்லையென்று சொன்னான். அப்படியா என்று சொல்லி அதற்கு என்ன இனும் கொடுக்கலாமென்று தியானித்துக்கொண்டிருக்கையில் கிழக்குவெளுத்துப் பகலோன் புறப்பட்டதைக் கண்டு பள்ளியறையைவிட்டு கொலுமண்டப முற்றத்துக்கு வந்தான்.

அரசனுக்குமுன் ஆமான் அங்கே வந்து, தான் செய்த தூக்குமரத்திலே மொர்தெகாயைத் தூக்கிப்போடவேண்டுமென்று உத்தரவு கேட்கக் காத்திருந்தான். ஐயோ! ஆமான் அந்த நாளை இரத்தம் சிந்துதலால் பிரதிஷ்டை செய்யும்படி போகிறான். இதின் முடிவு இன்னதென்று நாம் சீக்கிரம் அறிந்துகொள்ளுவோம். ஆமான் அரசரிடம் போகுமுன்னே அரசன் ஆமானுடன் பேசும்படி ஆரம்பித்தான். ஆமானுடைய செய்கை அநியாயமானதால் அதைச் சொல்

லும்படி சமயமும், சம்பாஷணை சம்பந்தமும் உண்டு பண்ணிக்கொள்ளும்படி முயன்றிருக்கலாம். நன்மையான பேச்சைப் பேச பயப்படாவிட்டாலும் தீமையான காரியத்தை இடமும் சமயமும் பார்த்துப் பேசுவதுதான் உலக வழக்கமாயிருக்கிறது. அரசன் ஆமானைக் கண்ட வுடனே அவனைப் பார்த்து, ராஜா கனம்பண்ண விரும்பும் மனுஷனுக்கு என்னென்ன மேன்மைகள் செய்யப்படலா மென்பதை ஆலோசித்துச் சொல்லும், மந்திரியே என்றான். உடனே ஆமான் அரசன் தன்னைக்குறித்துக் கேட்கிறானே யன்றி வேறல்லவென்று தீர்மானித்து, ஆ! நமக்கு வரும் வாழ்வு ஆற்று வெள்ளம்போல் வருகிறதென்று அகமகிழ்ந்து ராஜாவை நோக்கி: மகா ராஜாவே! அரசர் கனப்படுத்த விரும்பும் மனுஷனுக்கு ஆறு காரியங்கள் செய்யப்பட வேண்டுமென்று அடியான் புத்தியில் தோன்றுகிறது. அவையாவன:—

1-வது. இராஜவஸ்திரம் தரிப்பிக்கப்படவேண்டும்.

2-வது. பட்டத்துக் குதிரையின்மேல் அவனை ஏற்ற வேண்டும்.

3-வது. இராஜகிரீடமும் அவனுக்கு சூட்டப்பட வேண்டும்.

4-வது. இராஜ பிரபு ஒருவன் அவனை இவைகளால் உடுத்தவேண்டும்.

5-வது. அவனைப் பட்டணப்பிரவேசம் செய்யவேண்டும்.

6-வது. பிரதானியான ஒருவன் அவனுக்குமுன் நடந்து ராஜா கனம்பண்ணுகிற மனுஷனுக்கு இப்படியே செய்யப்படும் என்று கட்டியம் கூறவேண்டுமென்று சொன்னான்.

மந்திரியின் ஆலோசனை அரசனுடைய கவலையையெல் லாம் ஆறிவிட்டது. அரசன் மந்திரியைத் தட்டிக்கொடுத்து, நன்றாய்ச் சொன்னாய் நேச மந்திரியே, நன்றாய்ச் சொன்னாய், நீ என் ராஜவஸ்திரத்தையும் குதிரையையும் சீக்கிரமாய்க் கொண்டுபோய் ராஜ அரமனைவாசலில் உட்கார்ந்திருக்கிற யூதனாகிய மொர்தெகாய்க்கு அந்தப்பிரகாரம் செய்; நீ

சொன்ன எல்லாவற்றிலும் ஒன்றும் தவருதபடிக்குப் பார் என்று கட்டளையிட்டான். அதைக் கேட்டவுடனே ஆமானுடைய இருதயத்தின் நிலைமையை என்ன சொல்ல! அவனுடைய தலைமேல் மலைவிழுந்ததுபோலும், உள்ளத்திலே வெள்ளம் தாக்கினதுபோலும், நெஞ்சிலே பஞ்சுவைத் தடைத்ததுபோலும், கழுத்திலே கயிறு இறுக்கினுற்போலவும், அடிவயிற்றிலே இடிவிழுந்தாற்போலும் இருந்ததென்று தீர்மானமாய்ச் சொல்லலாம். ஆ, வானமே, வானுதிவானங்களே! பூமியே, தாழ்ந்த பூதலங்களே! கடவுளை வாழ்த்துங்கள்; அவருடைய செயல்களை மனுஷன் அறியான்; அவருடைய புயம் யாருக்கு வெளிப்பட்டிருக்கிறது! ஆ, வானுளும் வேந்தரே! மண்ணுேரை விண்ணிலிருந்து ஆளுகிற வல்லதேவனே! உமது செயல்களை நாங்கள் ஆச்சரியத்தோடு கண்ணுேக்குகிருேம்!! மன்னன் வாக்குக்கு மறுவாக்குண்டோ? இனி ஆமான் தான் நினைத்துவந்த செய்தியைச் சொல்ல வாய்திறக்கலாமா? கூடாது. ஆமான் அந்நிமிஷமே வஸ்திரத்தையும் குதிரையையும் கொண்டுபோய் மொர்தெகாய்க்குச் செய்து முடிக்கவேண்டிய மரியாதையைச் செய்ய ஆரம்பித்தான். அச்சமயத்தில் மொர்தெகாய் இரட்டுடுத்தினவராய் ராஜ அரமனைவாசலில் இருந்ததால் ஆமான் அவாமேல் ராஜவஸ்திரத்தைத் தரிப்பிக்கும்படி அழைத்தபோது, அவர் காரியத்தை அறியாமல் ஆமான் தம்மைப் பரிகாசஞ் செய்கிருனென்று எண்ணிக் கண்டபடி பேசினுரென்றும், கடைசியாக காரியங்களின் நிச்சயத்தை அறிந்துகொண்டு குதிரையின்மேல் ஏறினுரென்றும் யோசேப்புஸ் என்னும் சரித்திரக்காரன் எழுதியிருக்கிருன்.

ஆமான் மொர்தெகாயைக் குதிரையின்மேலேற்றிப் பட்டணப்பிரவேசஞ்செய்தார். மொர்தெகாய் கலியாணமாப்பிள்ளைபோல் குதிரைமேலேறியிருந்தார். அவருக்குமுன் மேளதாளங்களும், கின்னரங்களும், வீணைகளும், சுரமண்டலங்களும், எக்காளங்களும் தங்கள் தங்கள் தொனிகளை முழக்கின; வாழ்த்துதல்களும், வணங்குதல்களும் அவருக்குக் கிடைத்தன; அவருக்குமுன் பட்டுவஸ்திரங்கள் விரிக்கப்பட்டன. அவர் பச்சைத் தோரணங்களையும் புஷ்பப் பந்தல்களையும் கடந்துவந்தார். அவருக்குமுன்

லகான் பிடிக்கிற குதிரைக்காரன்போல போன ஆமான், சந்தடியான சந்துகளிலும் திரள் ஜனம் திரண்ட தெருக்களிலும் நின்று மேளதாளங்களைக் கைகாட்டி நிறுத்தி 'ராஜா கனம்பண்ண விரும்பும் மனுஷனுக்கு இப்படிச் செய்யப்படும்' என்று கட்டியங்கூறி கடந்துபோனான். மேல் வீடுகளிலிருந்து புஷ்பமாரிகளும் தாழ் வீடுகளிலிருந்து பன்னீர்மாரியும் அவர்மேல் பெய்தன; அறைவீடுகளிலிருந்து ஆகா! அது சரியென்றும், ஜன்னல்களிலிருந்து சவ்வாசு என்னும் சொல்லும் தெருக்கள்தோறும் சந்தோஷத்தாலுண்டாகும் பெருஞ்சிரிப்பும் கேட்கப்பட்டன. முன் நடப்போரும், பின் நடப்போரும், பக்கம்போவோரும் மொர்தெகாயைப் பார்த்து அகமகிழ்ந்து பச்சை இலைகளை உருவி பாங்காய்த் தெளித்தார்கள். இவ்வளவு சிறப்பான ஊர்கோலங்கொண்ட மொர்தெகாய் கடைசியாக அரசனை வணங்கி தமது நன்றியறிதலைச் செலுத்தும்படி அரமனை வாசலில் வந்துநின்றார். ஆமானோ சஞ்சலரோகம் பிடித்து, சாமுகம் பட்டதால் முக்காடிட்டுக்கொண்டு தீவிரித்து தன் வீடுவந்து சேர்ந்தான். ஆ, அழிம்பனே! உன் காரியம் இம்மட்டோடே முடிந்ததா? இல்லை; இன்னும் நீ அனுபவிக்கவேண்டிய லச்சையுமுண்டு.

ஆமான் இன்னம் வரக்காணோமே என்று அவன் மனைவி ஆவலோடு பார்த்துக்கொண்டிருந்தாள். ஐயோ, இதோ! உன் புருஷன் வந்துவிட்டான்; இனி அவனிடம் பேசவேண்டியதைக் கேளம்மா, கேள்! அவள் கேட்க பின் தாங்கினாலும் இராமுழுவதும் குடித்துக் கூத்தாடி அவன் வீட்டிற்குள்ளே காலம்போக்கின சண்டாளராவது கேட்கட்டுமேன்! ஐயோ! மொர்தெகாய்க்கு தூக்குமரம் செய்துவிட்டு உத்தரவு கிடைக்குமென்ற ஆவலால் ஆமான் ஓடினானே. அவன் திரும்பிவந்து சொல்லுகிற செய்தியென்ன? அவன் அங்கு நடந்த சமாச்சாரங்களையெல்லாம் சொன்னான்; தான் போனதையும், அரசன் வினவினதையும், இவன் மறுமொழி கொடுத்ததையும், அரசன் கட்டளை கொடுத்ததையும், மொர்தெகாயைப் பலவந்தமாய் பிடித்து உடுத்திக் குதிரைமேல் ஏற்றினதையும், அவனுக்குச் செய்த மரியாதைகளையும் எல்லாம் சொன்னான். இவனுக்குத் தான்

சொன்னபடி நிறைவேறக்கூடாதேபோனாலும் அரசன் சொன்னபடி நிறைவேற்றும்படியான நல்லபுத்தி யிருந்தது. இதில் நாம் ஆமானைப் புகழவேண்டியதுதான். எப்படி யெனில், நாம் இப்பொழுது மொர்தெகாய்க்கு வைத்த கண்ணி படாதேபோனாலும் இன்னம் சில மாதங்களுக்குப் பின்பு படுமல்லவா! அதினிடையிலுள்ள சில காலத்திற்குள் இவன் மேன்மைபட்டால் மேன்மைபடட்டும், எப்படியும் எல்லா வாழ்வும் மார்கழி மாதம் பதின்மூன்றும் தேதியிலே மண்ணாய்ப்போம் என்று நினைத்தான். இந்த முறையைத் தேறின துரோகிகள் அடிக்கடி கையாடுகிறார்கள். அவர்கள் தங்கள் மனதில் பகைத்து நிமிஷந்தோறும் தீமை செய்ய விரும்பும் சிலரை அதற்கு அநுகூலமான காலம் கிட்டாத தால் அதிகமாய் கனம்பண்ணி, மதிக்கிறவர்களைப்போல் பாசாங்கு பண்ணுகிறார்கள். இது பிசாசின் சுபாவம். இப் படிப்பட்ட குணத்தைத்தான் 'முத்தியிட்டுக் கத்திப்போடு கிறது' என்றும், 'தலையைத்தடவி மூளையை உறுஞ்சுகிறது' என்றும், 'உயரத்தூக்கி தாழத் தள்ளுகிறது' என்றும் சாதாரணமாய்ச் சொல்லுகிறது. ஆமானின் வாய்ப்பிறப் பைக் கேட்ட அனைவரும் மந்திரியே, உமக்கு ஆபத்துக் காலம் தொடர்ந்துவிட்டது; இனி நீர் அவனுக்குத் தாழ்ந்து போவது நிச்சயம் என்று சொன்னார்கள்.

இவ்வண்ணம் அவர்கள் பேசிக்கொண்டு, இனி என்ன செய்யலாமென்று யோசித்துக்கொண்டிருக்கையில் ராஜா வின் பிரதானிகள் அங்கங்குலுங்க ஆத்திரமாய் ஓடிவந்து, அரசனும் அரசியும் விருந்துமண்டபத்திற்கு வந்துவிட்டார் கள்; ஐயா அப்படியே ஓடிவாருங்கள் என்று சொல்லி துரி தப்படுத்தினார்கள். உடனே ஆமான் இம்மட்டுமுண்டான வெட்கத்தை அக்கினிக்குள்ளும், மனச்சஞ்சலத்தை மடியி லும் கட்டிக்கொண்டு விருந்துமண்டபத்துக்கு விரைந்து சென்றான். மந்திரி வந்தவுடனே அரசன் பந்தியிலுட்கார்ந்து திராட்சரசம் அருந்தி, அறுசுவையுள்ள அமுதுபதார்த்தங் களையுண்டு அகங்களித்தார். அச்சமயத்தில் மொர்தெகாயின் வரலாறுகளையும், அவருக்கு அன்றையத்தினம் கிடைத்த மட்டற்ற மேன்மைகளையுங்குறித்து அரசனும் ஆமானும்

சம்பாஷித்துக் காலட்சேபஞ்செய்திருப்பார்களென்று திட்டமாய்ச் சொல்லலாம்.

அரசன் விருந்தில் மது அருந்தி மனங்களித்திருக்கிறபோது ராணியைப் பார்த்து என் நேசமே! நேற்றையதினத்தில் நான் உன்னிடத்தில் வினவிய விஷயங்களைக் குறித்து நாளைக்கு ஆகட்டுமென்று சொன்னாயே, இப்பொழுதும், என் நேச எஸ்தரே! உன் வேண்டுதலென்ன? அது உனக்குக் கொடுக்கப்படும். நீ கேட்கிற மன்றாட்டென்ன? நீ ராஜ்யத்தில் பாதிமட்டும் கேட்டாலும் கிடைக்குமென்று சொன்னான். உடனே ராணி இதைவிட வேறு சமயம் நமக்கு வாய்க்காதென்று உணர்ந்து, உள்ளத்திற்குள்ளே உன்னத தேவனுடைய உதவியைக் கோரிக்கொண்டு, மகாராஜாவே! உமது கண்களில் இவ்வளவு தயவுகிடைத்ததே, அதே போதும். நான் கேட்கும் இரண்டு சிறிய மன்றாட்டுகளாவன:

1. என் ஜீவனை நீர் தற்காக்க வேண்டுகிறேன்.

2. என் ஜனத்தின் ஜீவனை நீர் தற்காக்க வேண்டுகிறேன். மகாராஜாவே! வேலை தொழிலுக்கென்று எங்களை மிருகங்களைப்போல விற்று அதின்மூலமாய் ராஜ கஜானாவை நிரப்பினாலும் எங்கள் மனம் ஆறிப்போம்; ஆனால் இப்பொழுதோ எங்களைக் கொல்லவும் நிர்மூலமாக்கவும் நீர் விற்றுப்போட்டீர்; எங்களை நிர்மூலமாக்குவதாலுண்டாகும் ராஜ்ய நஷ்டத்துக்கு அந்தச் சத்துரு உத்தரவாதம்பண்ண முடியாது என்று சொல்லி அலறினாள். அப்படியிப்படி போகாமலும் அக்கம்பக்கம் பாராமலும் அரமனைக்குள்ளே இருந்த அரசருக்கு அரசி சொன்ன ஒவ்வொரு வார்த்தையும் ஓரோர் அம்புபோல் பாய்ந்தது. இராணியின் பேச்சில் ஞானம் அடங்கியிருக்கிறது. இவள் விண்ணப்பத்தை முந்தி பண்ணிக்கொண்டு வரலாறுகளின் திரையை மெதுவாய்த் திறக்கிறாள். இவள் முந்தி வரலாறைத் துவக்கி பிந்தி விண்ணப்பஞ்செய்தால் காரியமனைத்தும் பிரதிகூலமாய் முடிந்தாலும் முடியலாமே. மேலும் அவள் சதியோசனையின் திரையைச் சட்டென்று திறந்துவிடாமல் சமயம்போல்

மெதுவாய்க் காரியத்தை வெளிப்படுத்துகிறதும் ஒரு யூகந்தான்.

இவ்வளவும் கேட்டவுடனே அரசன் அவள்மேல் நேசாக்கினிமூண்டு அதினாலே அவளுடைய எதிரியின்மேல் கோபாக்கினிகொண்டார். எதிரி இன்னானென்று ராணி இன்னம் சொல்லவில்லை. அரசன் ஆத்திரத்துடனே எஸ்தரை நோக்கி இப்படிச் செய்யத் துணிந்தவன் யார். அவன் எங்கே? என்று கேட்டான். உடனே யூதகுல சிங்க மாது வீரங்கொண்டு,

'சத்துருவும் பகைஞனுமாகிய அந்த மனுஷன்

இந்தப் பொல்லாத ஆமான்தான்'

என்று சுட்டிக்காட்டினாள். உடனே திகில் ஆமானைப்பிடித்தது. அந்நிய ஜாதியான அமலேக்கியனை யூதமாது விழுங்கிவிட்டாளல்லவா! ஆமானே, உன் சூதெங்கே, தந்திரமெங்கே? ஆ! உன் கண்ணியெங்கே, கழுமரமெங்கே? தேவனுடைய பிள்ளைகளின் நேரான பேச்சு பிசாசின் பிள்ளைகளுடைய மாய உபாயங்களையெல்லாம் நாசமாக்கிவிடும். ராஜா இவைகளைக் கேட்டு மதிமயங்கி, கோபத்தின் கொடுமையால் வாய்ப்பேச வகையற்று திராட்ச ரசப் பந்தியை விட்டெழுந்து பித்தங் கொண்டவனைப்போல் பூந்தோட்டம்போய் புஷ்பங்களைக் கிள்ளித் திரிந்தான்; ஆமானோ, தன் கழுத்துக்குக் கண்ணி வந்துவிட்டதென்று கலங்கி எழுந்து கைகட்டி, கால்பூட்டி ராணியை வணங்கி நின்றான். இராணியிடம் இரக்கம் கிடைக்கவில்லையென்று கண்டபின்பு, நின்று கும்பிட்டால் முடியாது, இனி விழுந்து கும்பிட்டால்தான் சரியென்று நினைக்கிறவனைபோல் ராணியார் உட்கார்ந்திருந்த மெத்தையின்மேல் ஆமான் விழுந்துகிடந்தான். 'எட்டினால் குடுமியைப் பிடிப்பான் எட்டாவிட்டால் காலைப் பிடிப்பான்' என்ற பழமொழி இந்த ஆமானுக்குச் சரியாகச் செல்லும். தேவன் தமது சத்துருக்களை இப்படியும் தாழ்த்துவார், இதற்கு மிஞ்சியும் தாழ்த்துவார்.

நந்தவனம் சுற்றப்போன அரசன் சில நிமிஷங்கள் பொறுத்து மறுபடியும் விருந்துமண்டபத்துக்கு வந்தார்.

LIBRARY OF ... KOTTAI
2561

அச்சமயத்திலும் ஆமான் முன்போல எஸ்தர் உட்கார்ந்திருந்த மெத்தையின்மேல் விழுந்துகிடக்கிறதைக் கண்டு, இவ்வண்ணம் நமது ராணியைத் தொந்தரவுசெய்ய இவன் துணிந்தானே என்று உக்கிரகோபங்கொண்டு முத்திரை மோதிரத்தைப் பிடுங்கிக் கொண்டான். அரசனுடைய கண் குறியையும் முகக் குறியையும் பேச்சு ஜாடையையும் கண்டவுடனே பக்கத்தில் நின்ற சேவகர் கொலைக்களம்போம் குற்றவாளிபோல அவனுடைய முகத்தை மூடினார்கள். உடனே அற்போனா என்னும் பிரதானி ஓடிவந்து மகாராஜாவே! ராஜாபிமானியாகிய மொர்தெகாயைக் கொல்லும்படி இந்த ஆமான் செய்துவைத்த ஐம்பது முழ உயரமான தூக்குமரம் அவன் வீட்டண்டை நாட்டப்பட்டிருக்கிறது என்றான். உடனே அரசன் அப்படியா காரியம் என்று சொல்லி 'அதிலே அவனைத் தூக்கிப்போடுங்கள்' என்றான். அரசன் கட்டளைப்படி ஆமான் தூக்குண்டான். அரசர் கோபமும் தணிந்தது.

இந்த வரலாறுகளனைத்தும் 'தன்வினை தன்னைச்சுடும்' என்றும் 'தான் வெட்டின குழியில் தானே விழுவான்' என்றும் சொல்லப்படும் நீதி வாசகங்களை மெய்ப்பிக்கிறதுபோலிருக்கிறதல்லவா! மற்றவர்களுக்கு நஷ்டத்தை அல்லது துன்பத்தை உண்டாக்கும்படி நாம் பிரயாசப்படவே கூடாது. அதிலும் அதிகமாய் தேவனுடைய பிள்ளைகளைத் துன்பப்படுத்துகிறவர்களைத் துன்பப்படுத்தும்படி தேவனே எழுந்தருளியாகிறார் என்று சொல்லலாம்.

ஆமான் அரை உயிராய்த் தொங்கும்போதுதானே அரசாட்சியில் அதிக மாறுதல் நடந்தது. ராஜா முத்திரை மோதிரத்தை மொர்தெகாயுக்குக் கொடுத்து அவரை முதல் மந்திரியாக்கினான். ஆமானும் மொர்தெகாயும் அவரவருடைய ஆசனங்களை மாற்றிக்கொண்டார்கள். அந்த மாறுதலின்படி மொர்தெகாயுடைய தூக்குமரம் ஆமானுக்கும், ஆமானுடைய சிங்காசனம் மொர்தெகாயுக்கும் கிடைக்கிறது. வானம் கொடுக்கிற மாறுதல் சிலதரம் இப்படிப்பட்டதாய்த்தான் இருக்கிறது. ராஜாபிமானமும் தேவாபிமானமுங்கூடி மொர்தெகாயுக்கு இவ்வளவு பெருங்

கீர்த்தியை உலகில் கொடுத்தது. நீதிமான்களைக் கர்த்தர் நிலைநிறுத்துகிறார். ஐயோ! பாரஸீக ராஜரீகம் சுமார் ஒரு மணி நேரத்துக்குள்ளாக மாறிப்போயிற்று. உலக வாழ்நாளெல்லாம் அநித்தியமும் மாறுதலுமுள்ளவைகள்தான். காலையில் கைதி மாலையில் மந்திரி, காலையில் மந்திரி மாலையில் கைதி. வாசலைக் காத்தவன் சிங்காசனமேறினான், சிங்காசனத்திலிருந்தவன் கழுமரத்தில் தொங்கினான்.

இம்மட்டோடு காரியம் முடிந்ததென்று சொல்லக்கூடாது. ஆமான் மாண்டாலும் யூதர்கள்மேல் பிறந்த ஆக்கினையின் தாக்கீது மாறவில்லை. ஆதலால் ராணியார் அந்த ஆக்கினை மாறும்படி பிரயாசப்பட்டாள். அவளுடைய பிரயாசம் மொர்தெகாய் மந்திரியாயிருந்ததால் லேசாக பலிக்கக்கூடியதாயிருந்தது. இதற்குள்ளாக முந்தின கட்டளை பிறந்து சுமார் மூன்றுமாத காலமாகிவிட்டது. யூதருக்கு அநுகூலமான கட்டளை பிறப்பிக்கும் அதிகாரம் முழுமையும் அரசன் மொர்தெகாய்க்குக் கொடுத்தான். உடனே மொர்தெகாய் இந்தியா முதல் எத்தியோப்பியா மட்டுமுள்ள நூற்றிருபத்தேழு நாடுகளின் தேசாதிபதிகள், துரைகள், அதிகாரிகள் முதலியவருக்கும் அந்தந்த நாட்டின் பாஷையில் விளம்பரம் பண்ணும்படி புதுக் கட்டளைகளை அனுப்பினார். இந்த இரண்டாங் கட்டளை அதிசீக்கிரத்தில் பிரசித்தமாகிறதற்கேற்ற பிரயத்தனங்களெல்லாம் செய்யப்பட்டது. அக்கட்டளையானது முந்தினதை ரத்துபண்ணுகிறதாயிராமல், யூதர் முந்தின கட்டளையின் பிரகாரம் தங்களைத் தாக்கும் எதிரிகளை மடக்கிக் கொலைசெய்து தற்காத்துக்கொள்ளலாமென்றிருந்தது. மேதியா பார்சு ராஜ்யத்தில் ஒருதரம் கொடுத்த கட்டளையை ரத்துபண்ணக்கூடாதென்கிற சட்டமிருந்தால் இவ்வித முறைதான் சமயத்துக்கனுகூலமான முறையாயிருந்தது. அக்கட்டளை முழுவதையும் தெளிவாக அடியில் காட்டினால் வாசிக்கிறவர்கள் அதின் கருத்தை நன்றாய் உணர்ந்துகொள்ளக்கூடும்.

புதுக் கட்டளை

'ஆதார் மாதமென்கிற (மார்கழி) பன்னிரண்டாம் மாதம் பதின்மூன்றாந் தேதியாகிய அந்த ஒரே நாளிலே அந்தந்தப்

பட்டணத்திலிருக்கிற யூதர் ஒன்ருகச் சேர்ந்து தங்கள் பிராணனைக் காப்பாற்றவும், தங்களை விரோதிக்கும் சத்துருக்க ளாகிய ஜனத்தாரும் தேசத்தாருமான எல்லாரையும் அவர் கள் குழந்தைகளையும் ஸ்திரீகளையும் அழித்துக் கொன்று நிர்மூலமாக்கவும், அவர்கள் உடமைகளைக் கொள்ளையிடவும் ராஜா யூதருக்குக் கட்டளையிடுகிருர்' என்பதுதான். இந்த வாசகமானது நாம் முன் சொல்லிய வண்ணம் முந்தின கட்டளையை அகற்றிவிட்டோமென்று நேராகக் காட்டாதே போனலும், அதை மடக்கிக் குறைத்துவிடும் எதிர் ஏற்பாடு போல் இருக்கிறதென்பது தெளிவாகத் தெரியவரலாம். முதலாம் கட்டளை பிறந்து சுமார் இரண்டரை மாதமாகி விட்டபோதிலும் அதைப் பெலவீனப்படுத்தவும் இரண்டாம் கட்டளையைப் பலப்படுத்தவும் பின்னும் ஒன்பது மாத மிருந்தது.

இந்தப் புதுக் கட்டளையானது ராஜ நகரத்தில், முந்தின கட்டளையைப் பிரசித்தம் பண்ணினதைப் பார்க்கிலும் அதிக மான பிரபலக் கோலத்தோடு விளம்பரமாக்கப்பட்டது. சூசானில் அது பறைசாற்றப்பட்ட தினத்தில் மொர்தெகாய் தமது மந்திரி தத்துவத்துக்குரிய மகத்துவ கோலமாய்பவனி போனர். அவர் இளநீலமும் வெள்ளையுமான ராஜ வஸ்திரத்தையும், பெரிய பொன் முடியையும், பட்டையும், இரத்தாம்பரத்தையும் அணிந்தவராய் கொலுமண்டபத்தி லிருந்து புறப்பட்டார். அவருக்குமுன் எக்காளங்களும், நாகசுரங்களும், கின்னரங்களும், வீணைகளும், சுரமண்டலங்களும் தங்கள் இனிய நாதங்களைப் பொழிந்தன; மேளதாளங்கள் தங்கள் குரலை முழக்கின; வில் வீரரும் வாள் வீரருமான போர்வீரர் அனைவரும் தங்கள் தங்கள் வீரத்துவங்களை வெளிப்படுத்திக்கொண்டு முன் ஏகி நடந் தார்கள்; சிலம்பக்காரர் ஆகாய சஞ்சாரிகள்போல ஆல வட்டம் போட்டார்கள்; புலவரும், கவிராயரும், மற்றும் பாடகரும் வந்தன வண்ணங்களையும், வாழ்த்தும் விருத்தங் களையும், இன்பமான வெண்பாக்களையும், இனிய பதங்களை யும், கனிவான கவிகளையும், சாதுரிய கீதங்களையும் கீத வாத்தியங்களின் மெட்டுக்கிசைய பாடினர்கள். இது புதுக் கட்டளையைப் பிரசித்தம் பண்ணும் நாளாகவும், அதோடு

மொர்தெகாய் மந்திரிப் பட்டந்தரித்த உற்சவமாகவும் கொண்டாடப்பட்டதாக்கும். இச்சமயத்தில் அவர் பட்டத்துக் குதிரையின்மேலாவது யானையின்மேலாவது ஏறிக்கொண்டு பட்டணப் பிரவேசம் செய்திருக்க வேண்டியது. புது மந்திரியின் மகத்துவத்தையும் புதுக் கட்டளையின் சத்தத்தையும் கண்டு கேட்ட சூசான் நகரம் சவ்வாசு, சவ்வாசு என்று கைதட்டி ஆர்ப்பரித்து அக மகிழ்ந்தது. இஸ்ரவேலே! நீயே பாக்கியம் பெற்றவன். இதிலும் அதிகமாய் மெய் இஸ்ரவேலனாகிய உத்தம கிறிஸ்தவன் அதிக பாக்கியம் பெற்றவனாயிருக்கிறான். கர்த்தருடைய பிள்ளைகளின் ஆத்தும சத்துருவாகிய ஆமான் அதாவது, சாத்தான் அதோகதியாகிவிட்டான். அவன் ஆன்பங்களையும் சாவையுங்கொண்டு தேவ தாசரை தேவனை விட்டுப் பிரித்து அழிவுக்குள்ளாகும்படி பிரயாசப்படு கிறான். உலக இரட்சகராகிய இயேசுவோ தமது மரணத் தால் மரண அதிகாரியைக் கீழ்ப்படுத்திவிட்டார்; அவர் சிலுவையின் மூலமாய் சிலுவையின் மேலே வெற்றிசிறந் தார். அல்லேலூயா! அவரே பக்தருக்குரிய மந்திரி. பாவி களின் இருதய சிங்காசனம் அவர் வசம் ஒப்புவிக்கப்பட வேண்டியது. பிசாசல்ல அவரே அதின்மேல் உட்கார்ந் திருந்து தினந்தினம் இருதயக்கோட்டைக்குள்ளும் புறம்பும் ஆடம்பரத்தோடு பவனி வந்து அதை ஆண்டு நடத்த வேண்டும். ஆதலால் வாசிக்கிறவனே! இயேசு சுவாமியை உன் இருதய ராஜ்யத்துக்கு மந்திரியாக பட்டங்கட்டு; இப் போது உன்னை ஆளும் பாதாள ராட்சதனாகிய பிசாசை சிலுவையில் அறைந்து தொங்கவைக்கலாம்.

இந்தப் புதுக் கட்டளை எங்கெங்கே போனதோ அங்கெல் லாம் சந்தோஷமும், களிப்பும், விருந்து கொண்டாடுதலுமா யிருந்தது. யூதரைப்பற்றிய பயம் அநேகரைப் பிடித்தது. இதுவன்றி, தேவச் செயல்களை இவ்விஷயத்தில் கவனித்து தியானித்த பலர் பயந்து யூத மார்க்கத்தில் அமைந்து ஆண்டவருக்கடுத்த தாசரானார்கள், நாம் எப்போதும் தேவ செயலைக் கவனித்து வரவேண்டும். நமக்குண்டாகும் சம்பவங்களை ஒவ்வொன்றாக பேர் சொல்லி கடவுள் எனக்கு இப்படி செய்துபோட்டாரே என்ற மனச் சோர்படைகிறது

சரியல்ல. நாம் துன்பம், நஷ்டம், துக்கம், மரணம் என்று அழைக்கும் நிலைமைகளனைத்தும் தேவனால் இன்பம், லாபம், சந்தோஷம், ஜீவன் என்று அழைக்கப்பட்டு வருகிறதென்று சொல்லவேண்டியது. நாம் உபத்திரவம் என்பதினாலேயே நமக்குப் போக்கையும், துன்பம் என்பதினாலேயே இன்பத்தையும், நஷ்டம் என்பதினாலேயே லாபத்தையும், சாவு என்பதினாலேயே ஜீவனையும் கட்டளையிடுகிறவராயிருக்கிறார். ஆமானால் ஆலோசிக்கப்பட்ட பிரயத்தனம் உலகத்துக்கு நஷ்டமாயிருந்தாலும், அதைக்கொண்டே தமது மார்க்கம் உலகத்தில் விர்த்தியடையும்படி தேவன் அதை நடத்தினார்.

இம்மட்டும் இந்த வரலாற்றைப் பார்த்த நாம் இனி மார்கழி மாதம் பதின்மூன்றாந்தேதியில் நடந்த வரலாறுகள் தான் என்ன என்று அறிய ஆசைப்படுவது இயல்பு. சங்கார நாளுக்கு முன்பாக சகல யூதரும் ஒன்றுகூடி தங்களை ஒருமைப்படுத்திக்கொண்டு காத்திருந்தார்கள். அவர்களை எதிர்ப்பார் யாருமில்லை என்று சொல்லத்தக்கதாக அவ்வளவு பிரயத்தனமும் செய்தார்கள். மொர்தெகாயின் பயம் அந்த நூற்றிருபத்தேழு நாடுகளிலுமிருந்த அதிகாரிகளைப் பிடித்ததினால் அவர்கள் அனைவரும் யூதருக்குத் துணை நின்றார்கள். எப்படியும் சில துஷ்டர் யூதர்கள்மேல் கத்திப்போடவேண்டுமென்று கலகம் பண்ணினார்கள்; உடனே யூதர் அனைவரும் அவர்களை எதிர்க்கவும் தங்களைக் காப்பாற்றவும் துணிந்து ராஜதானியில் ஒரே நாளில் ஐஞ்ஞூறுபேரைக் கொன்றார்கள். அதுவுமன்றி ஆமானுடைய பத்துக் குமாரரும் கொல்லப்பட்டார்கள். இவர்கள்தான் மற்ற துஷ்டரை ஏவி முதலாங்கட்டளைப்படி கலகம்பண்ண ஆரம்பித்தார்கள் போல் தோன்றுகிறது. அம்மட்டோடு கலகம் அடங்கவுமில்லை; ஆதலால் மறுநாளும் யூதர் முந்நூறு பேரைக் கொன்றார்கள். அதுவன்றி ராஜ கட்டளைப்படி ஆமானுடைய மக்களின் பத்து உடல்களும் உயரமான கழுமரங்களில் தொங்கவைக்கப்பட்டன.[1] அதோடு கலகமும்

---

[1] ஆமானின் பத்துக் குமாரரும் 75 அடி உயரமான கழுமரத்தில் ஒருவனுக்குக் கீழ் இன்னொருவனை தொங்கும்படி கட்டிவைக்கப்பட்டதாக யூதர் சொல்லுகிறார்கள்.

அடங்கிவிட்டது. இச்சமயத்தில் கொள்ளையிடும்படி ராஜ கட்டளையிருந்தபோதிலும் கலகத்தை அதிகப்படுத்தாதபடி யூதர் கொள்ளையடிப்பதை நிறுத்திவிட்டார்கள். அவர்கள் கொள்ளையிடும்படி போகாமல் தங்களைக் சொல்ல வந்தவர்களை எதிர்த்து மடக்க மாத்திரம் போனார்கள். இப்படி ராஜ்யத்திலுள்ள பல இடங்களிலும் கலகமுண்டானதில் யூதர் எழுபத்தையாயிரம் பேரைக் கொன்றுபோட்டார்கள். இவ்வளவு ரத்த பழிக்கும் காரணன் அந்தச் சண்டாள ஆமான். ஆமான் தொலைந்தாலும் முக்கால் லட்சம் பேர் பழியைத் தலைமேல் சுமத்திக்கொண்டான். அவன் தொலையாமல் முதலாம் கட்டளையை நிறைவேற்றியிருப்பானானால் எத்தனை லட்சம் பேருடைய ரத்தப்பழியை ஏற்கவேண்டியதோ தெரியவில்லை.

கர்த்தருடைய பிள்ளைகளே! எங்களைப் பார்ப்பாருமில்லை, கேட்பாருமில்லை, எங்களுக்குத் துணை புரிவாருமில்லையென்று நீங்கள் விசனப்படவேண்டாம். வானப்பிதாவின் பிள்ளைகள் பூமியின் மக்களை கெஞ்சுகிறது பிசகு. நீ வானத்தை நோக்கி கெஞ்சு, அங்கிருந்து உனக்குத் துணை வரும்; அங்கிருந்து அவர் வில்லின் அம்புகளையும் பட்டயங்களையும் உன்னை அறியாமலே அனுப்பி உன் சத்துருக்களை அதம்பண்ணி உனக்கு ஜெயம் தருவார். நீ பூமியை நோக்கும் மட்டும் உனக்கு ஜெயமில்லை அப்பா!

இவ்வண்ணம் காரியங்கள் அநுகூலப்பட்ட பின்பு ராணியும் மொர்தெகாயும் ஏகமாய்க்கூடி இந்தப் பெரிய இரட்சிப்பின் விஷயம் எந்நாளும் நினைவுகூரப்பட்டுவரும்படி இதை ஒரு பண்டிகையாக ஏற்படுத்தினார்கள். அதற்கு பூரீம் பண்டிகையென்று பேர் வழங்கப்பட்டது. யூதர் அதற்கு எஸ்தரின் பண்டிகையென்று சொல்வதுண்டு. கிறிஸ்துவுக்குச் சுமார் 450 வருஷத்துக்குமுன் ஏற்படுத்தப்பட்ட இந்த உற்சவமானது கிறிஸ்துவின் காலத்திலும் ஆசரிக்கப்பட்டு வந்தது. அது மாத்திரமல்ல, இக்கால யூதரும் அதை

ஒரு விசேஷித்த பண்டிகையாக ஆசரித்து வருகிறார்கள்.[1] இந்த உற்சவங்களை எல்லாத் தலைமுறைகளிலும், வம்சங்களிலும், தேசங்களிலும் ஆசரிக்கவேண்டுமென்றும் எஸ்தரும் மொர்தெகாயும் அந்த நூற்றிருபத்தேழு தேசங்களிலுமுள்ள யூதருக்குத் தாக்கீது செய்தார்கள்.

[1] தற்கால யூதர் பூரீம் பண்டிகையை ஆசரிக்கும் முறையை இங்ஙனம் சுருக்கிக்காட்டுவது நலமென்று தோன்றுகிறது. இந்த உற்சவத்துக்கு முந்தின நாள், பிதாக்களானவர்கள் கண்டிப்பான உபவாசத்திலிருப்பார்கள். உற்சவ நாட்கள் இரண்டும் பெரும் நாட்கள் என்று அழைக்கப்படும். குடிக்கிறதும் கூத்தாடுகிறதும், பொங்குகிறதும் பொறிக்கிறதும், தின்கிறதுமே விசேஷித்த வேலையாயிருக்கும். இந்த நாளில் ஸ்மரணை தெரியாமல் குடிப்பதே ஆனந்தம் என்பார்கள் ஆராதனை நேரத்தில் ஆண்களும் பெண்களும் பிள்ளைகளும் ஆலயத்துக்குப் போவார்கள். ஒவ்வொரு ஆராதனையிலும் எஸ்தரின் ஆகமம் முழுவதும் ஒரு தோல் சுருளிலிருந்து வாசிக்கப்படும். வாசிக்கையில் ‘ஆமான்’ என்ற பேர் வரும்போதெல்லாம் அவர்களனைவரும் ஏகமாக ‘அவன் பேர் கிறுக்கப்படுவதாக, துன்மார்க்கரின் நினைவு பூமியிலிருந்து மங்கிப்போவதாக’ என்று சொல்லி காலால் தரையில் உதைக்கிறதுண்டு. சிறுவர், சிறிய மரச் சுத்தியல்களைச் செய்து வைத்துக்கொண்டு ஆமான் என்ற பதத்தைக் கேட்டவுடன் சீச்சீ என்று பழித்து சுத்தியலால் தரையில் அடிப்பார்கள். ஆமானுடைய மக்கள் பத்துப் பேருடைய பேரும் வரும்போது அவர்களனைவரும் ஒரே தடவையில் மாண்டதைக் குறிப்பிக்கும்படி அவ்வளவு பேரையும் மூச்சுவிடாமல் வாசித்து முடிப்பார்கள். அவர்கள் ஒருவரின் கீழ் ஒருவராய் ஒரே கழுமரத்தில் தொங்கினதையும் இது குறிக்கவேண்டுமாம். வாசிப்புக்காரன் எஸ்தர் ஆகமத்தை முடித்தவுடனே எல்லாருங்கூடி உரத்த சத்தமாய்

ஆமானுக்குச் சாபம், மொர்தெகாய்க்கு ஆசீர்வாதம்;
சிரேஷிக்குச் சாபம், எஸ்தருக்கு ஆசீர்வாதம்;
விக்கிரக பக்தருக்குச் சாபம், இஸ்ரவேலுக்கு ஆசீர்வாதம்;
ஆமானைத் தூங்கப் பண்ணின அற்போனா வாழ்க

என்று சொல்லுவார்கள். ஆதி காலங்களில் வைக்கோலால் ஒரு பொம்மை பண்ணி அதை ஆமான் என்று அவமானப்படுத்திக் கொளுத்தியும் வந்தார்களாம். சில சூனகோகுகளில் ஒரு பெரிய கல்லில் ஆமான் என்றபேரை வெட்டி, அதை வாசற்படியில் கொண்டு வந்து போட்டு அது உடைந்துபோகும்படி கல்லால் அடிக்கிறதுமுண்டு.

அப்பால் நாம் மொர்தெகாயைக் குறித்து அதிகமாய் வாசிக்கிறதில்லை. அவர் ராணியுடன் அரமனையில் சஞ்சரித்து தம் வேலையை ஜாக்கிரதையோடு செய்துவந்தார்; ராஜ்யத்தின் வாழ்வையும் விசேஷமாய் யூத ஜனத்தின் வாழ்வையும் விருத்தி பண்ணுவதே அவருடைய சிந்தையும் செய்கையுமாயிருந்தது. அவருடைய சரித்திரத்தை முடிக்கிற வேதாகம ஆசாரியன் 'யூதனாகிய மொர்தெகாய் ராஜாவாகிய அகாஸ்வேருவுக்கு இரண்டாவதானவனும், யூதருக்குள் பெரியவனும், தன் திரளான சகோதரருக்குப் பிரியமானவனுமாயிருந்ததுமன்றி, தன் ஜனங்களில் நன்மையை நாடி தன் குலத்தாருக்கெல்லாம் சமாதானமுண்டாக பேசுகிறவனுமாயிருந்தான்' என்ற வாசகத்தைக்கொண்டு முடித்துவிட்டான். அவர் எத்தனை வருஷம் மந்திரியாயிருந்தரென்றும் எவ்விதமாய் மரித்தாரென்றும் நமக்குத் தெரியாது. அவருக்கு எழுபது பாஷைகள் தெரிந்திருந்ததென்றும், அவர் எப்போதும் நீதிமானாகிய மொர்தெகாயென்று அழைக்கப்பட்டு வந்தாரென்றும், நானூறு வருஷம் உயிரோடிருந்தாரென்றும், யூதர் சொல்லிக்கொள்ளுகிறார்கள். அவருடைய உடல் எக்பட்னுவில் அடக்கம் பண்ணப்பட்டதென்று சிலரும், சூசானில் என்று சிலரும் சொல்லுகிறதுண்டு. அவர் எவ்விடத்தில் எவ்வண்ணம் மரித்தபோதிலும் ஆபிரகாமின் மடியில் உட்கார பாத்திரமான பக்தனாயிருந்தாரென்பது நமது மனதுக்குச் சந்தோஷத்தைக் கொடுக்கவேண்டியது.

இதினால் திருச்சபையிலுள்ள ஒவ்வொரு பக்தனும் சத்துருக்கள் மத்தியில் வாசம் பண்ணிவரும்படி கடமைப்பட்டிருக்கிறானென்றும் அவனுடைய சகாயர் வானத்திலிருக்கிறாரென்றும் நன்றாய் விளங்குகிறது. எக்காலத்திலும் பாதாளம் பரலோகத்தையும், மாமிசம் ஆவியையும், மனுட்புத்திரர் தேவனுடைய பிள்ளைகளையும் துன்பப்படுத்தி வருகிறதே வழக்கமாயிருக்கிறது. நாம் தற்கால இடுக்கண்களை நோக்கி இளக்கரிக்கிறவர்களாயிராமல், வருங்கால வாழ்வைநோக்கி விசுவாசத்தோடு ஜீவிக்கவேண்டியவர்களாயிருக்கிறோம்.

இஸ்ரவேலர் மொர்தெகாயாலடைந்த மீட்சியை நினைவு கூரும்படி பூரீம்பண்டிகை ஏற்படுத்தப்பட்டது. இயேசு கிறிஸ்துவாலுண்டான நித்திய மீட்பை ஒவ்வொரு பாவியும் நினைவுகூரவேண்டியதுதான். அதற்காகவே திருச்சபையில் ஞாயிற்றுக்கிழமை ஆசரிக்கப்பட்டு வருகிறது. ஆதலால் ஞாயிறுதோறும் விசேஷமாய் இயேசுவின் இரட்சிப்பின் வரலாறுகளை வாசித்து, தியானித்து, பிசாசாகிய ஆமானை நமது இருதயங்களில் பகைத்து வெறுத்து இயேசு இரட்சகரை மதித்து, தொழுது ஸ்தோத்திரித்து வரவேண்டியது.

பொறுமை பக்தன்

யோபு

இப்பொழுது நமது வாசகத்துக்கு வரும் பொறுமை பக்தரின் வரலாறுகள் பூமியிலும் அதிலுள்ள வாழ்வுகளிலும் நாம் நம்பிக்கை வைக்கக்கூடாதென்றும், அவையனைத்தும் திடீரென்று நம்மைவிட்டு எடுபட்டும், நாம் அவைகளை விட்டு எடுபட்டும் போகவேண்டியதென்றும் வல்லமையோடு நமக்கு உணர்த்தும் என்பதற்கு ஐயமில்லை. ஒரே நாளுக்குள்ளாக உலக வாழ்வின் உச்சியிலிருந்து தாழ்ச்சி, தரித்திரம் என்னும் பள்ளத்தில் ஒருவன் விழுந்துவிடக் கூடுமென்பதற்கு பொறுமை பக்தரின் சரித்திரத்தைப் போல் தெளிவாகக் காட்டும் சரித்திரம் வேறு இல்லையென்று சொல்லவேண்டியது. இவ்விடத்தில் நாம் பொறுமை பக்தன் என்று அழைக்கும் ஆள் வேதாகமத்தில் யோபு என்று அழைக்கப்பட்டிருக்கிறார். யோபு என்ற பேருக்கு 'விம்மி அழுவோன்' என்று அருத்தம்.[1]

பொறுமை பக்தர் வசித்த காலத்தைப்பற்றி பலரும் பலவித அபிப்பிராயங்களைச் சொல்லுகிறதுண்டு. இவருடைய வரலாறுகளடங்கிய ஆகமமானது எஸ்தர் ஆகமத்துக்குப் பிந்தி வைக்கப்பட்டிருக்கிறதால், அவர் அதற்கடுத்த காலத்தில்தான் வசித்தாரென்று சொல்லக்கூடாது. கிறிஸ்து மார்க்க வேதாகமமானது பெரும்பாலும் கால வரிசையின்படியல்ல, பொருள் வரிசையின்படி ஒழுங்குபடுத்தியிருக்கிறதென்பதை அறிந்துகொள்ளவேண்டியது. பொறுமை பக்தர் ஆபிரகாம் குலத்தில் நாகோர் வழியாய்த் தோன்றினவர்

[1] வேதாகமத்திலுள்ள யோபின் ஆகமம் நமது தேசத்தில் வழங்கும் அரிச்சந்திர மகாராஜாவின் சரித்திரத்துக்கு ஒத்திருக்கிறதென்று பவர் என்னும் வேதசாஸ்திரியார் சொல்லியிருக்கிறார்.

என்றும், ஏறக்குறைய அவர் காலத்தில் வசித்த ஒரு பொறுமை பக்தன் என்பதுமே அநேகர் ஒப்புக்கொள்ளும் அபிப்பிராயமாயிருக்கிறது. எப்படியும் யோபின் ஆகமத்தி லிருக்கிற பலியின் போங்கு மோசேயின் பலி ஏற்பாடு களுக்கு முந்தினதாகவே இருக்கவேண்டியது. யோசேப்புக் கும் மோசேக்கும் மத்தியிலுள்ள காலத்தில் யோபு என்பவர் வசித்திருப்பார் என்பதும் சற்று நம்பக்கூடிய அபிப்பிராயமா யிருக்கிறது.

பொறுமை பக்தர் எந்தக் காலத்தில் வசித்திருந்தாலும் சரி, எப்படியும் அவர் ஒரு காலத்தில் நாம் வசிக்கும் பூலோகத்தில் வசித்து, தேவ பக்தியையே ஆபரணமாகவும், பொறுமையையே அங்கியாகவும், கடவுள்பேரிலுள்ள பற்றுதலையே தன் இளைப்பாறும் கட்டிலாகவும் வைத்துத் தமது காலத்தைக் கழித்து வந்தார் என்பது மாத்திரம் நிச்சயம். ஆதலால் பொறுமை பக்தரைப்பற்றி வேதாகமத் தில் வரும் சரித்திரத்தை இங்ஙனம் தியானிக்கத் துவக்குவோமாக.

வாழ்வு பருவம்

பொறுமை பக்தர் என்ற பேரால் நாம் இவ்விடத்தில் அழைக்கும் யோபு என்பவர் ஊத்ஸ்[1] என்னும் தேசத்தி லுள்ளவர். இவருடைய பெற்றோர் உற்றோர் உறவினர் இன்னா ரென்று வேதாகமத்தில் நாம் அறிய ஏதுவில்லை; இவருடைய பிறப்பு, வளர்ப்பு, கல்வி இவைகளைக் குறித்தும் நமக் கொன்றும் தெரியாது. பொறுமை பக்தரின் சரித்திரம் அவ ருடைய மார்க்க நிலையைக்கொண்டே ஆரம்பிக்கிறது. அவர் 'உத்தமனும் சன்மார்க்கனும் தேவனுக்குப் பயந்தவனும் பொல்லாப்புக்கு விலகுகிறவருமாயிருந்தார்' என்று சொல்லப்படும் வார்த்தைகளில் அவருடைய பிறப்பும் வளர்ப்பும் ஒருவாறு தெளிவாகிறது. இதினாலே பொறுமை

[1] இந்த தேசம் அராபி தேசத்தின் ஓர் பாகமென்றும் அது பெரும் பாலும் வனாந்தர அராபியா என்றும் அழைக்கப்பட்டது. எப்படியும் இந்த நாடு சபேயர், கல்தேயர், இதுமேயர் முதலியவர்களின் தேசத்துக்குச் சமீபமாயிருந்தது.

பக்தருடைய பெற்ஞேர் தேவதா பக்தியுள்ளவர்களா யிருந்து, தங்கள் குமாரனைக் கர்த்தருடைய வழிகளில் வளர்த்திருக்கிருர்கள். உத்தமம், சன்மார்க்கம், தேவ பயம், பொல்லாப்புக்கு விலகுதலாகிய சதுர் லட்சணங்களால் யோபு என்பவர் பிரகாசித்தார். ஆத்தும சம்பந்தமாய் இருக்கவேண்டிய உயர்ந்த ஆஸ்திபெல்லாம் அவருக்கு இருந்தது; மார்க்க விஷயத்தில் மாய்மாலக்காரனுயிராமல் உத்தமனுயிருந்தார்; கிரியை விஷயத்தில் செவ்வையும் நீதியுமான காரியங்களேயே நிறைவேற்றி வந்தார்; தேவ விஷயத்தில் எப்போதும் பயபக்தியும் வணக்கமும் ஆராதிக்கிற குணமுமுடையவராயிருந்தார்; பாவ விஷயத் தில் விலகி நடந்து வந்தார். உத்தமம் அவர் தலையின் கிரீடமாயும், சன்மார்க்கம் அவர் கையின் கட்கமாயும், தேவ பக்தி அவர் மார்பின் பதக்கமாயும், பொல்லாப்புக்கு விலகுதல் அவர் கால்களின் அலங்காரமாயுமிருந்தது. ஆகவே மார்க்க விஷயத்தில் இவர் சதுர் லட்சணம் பொருந் திய சற்புத்திரனுய் விளங்கினுர். இதுதான் அவருடைய ரூபத்தின் சாயல்.

இனிமேல் உலகப் பிரகாரமாய் இவருடைய மேன்மை, மகத்துவங்கள் என்னவென்று பார்ப்போம். இவருக்கு ஆண் மக்கள் ஏழும், பெண் மக்கள் மூன்றுமாக பத்துப் பிள்ளைகளிருந்தார்கள்; பிறந்ததெல்லாம் உயிரோடிருந்து பெற்ற தகப்பனைச் சந்தோஷப்படுத்தி வந்தார்கள். பொறுமை பக்தரையும் அவருடைய பத்துப் பிள்ளைகளையும் கண்ட எவரும் 'இதோ, கர்த்தருக்கு பயந்த மனுஷன் இவ் விதமாய் ஆசீர்வதிக்கப்படுகிருன்' என்று சொல்லவேண்டி யது நியாயமல்லவா!

பக்தி பாக்கியமும் பிள்ளை பாக்கியமு மாத்திரமல்ல, பொருள் பாக்கியமும், சொற்சத்தி பாக்கியமும் அவருக்கு இருந்தது. அவருக்கு ஏழாயிரம் ஆடுகளும், மூவாயிரம் ஒட்டகங்களும், ஐந்நூறு ஏர்மாடுகளும், ஐந்நூறு கழுதைகளும், திரளான பணிவிடைக்காரரும் இருந்தார்கள். மேலும் அவர் அந்தத் திசையிலிருந்த எல்லாரைப் பார்க்கி லும் பெரியவராயிருந்தார். இக்காலத்து பாஷைப்படி

அவரை ஒரு அரசன் என்று சொல்லவேண்டியது. அந் நாட்டுக் குடிகளை உள்ளபடியே ஆண்டு கண்காணித்து வந்தார்; அவர் தமது பாதங்களை நெய்யால் கழுவினார்; அவருடைய வீட்டில் எண்ணெய் தண்ணீர் பட்டபாடுதான். அவர் பட்டண வீதியில் புறப்பட்டுப்போய் உயர்ந்த ஓர் ஆசனம்போட்டு வீற்றிருக்கும்போது வாலிபர் அவரைக் கண்டு ஒளித்துக்கொள்ளுவார்கள்; விருத்தாப்பியர் எழுந்து நின்று கைகட்டி கால்கூட்டி நிற்பார்கள்; பிரபுக்கள் தாங்கள் பேசுவதை நிறுத்தி எஜமான் சித்தமென்று வாய்மூடிக் கொள்ளுவார்கள்; பெரியோரின் சத்தமடங்கி, அவர்கள் நாக்கு அவர்கள் மேல்வாயோடு ஒட்டிக்கொள்ளும்; அவருடைய சத்தம் கேட்டவுடனே பாக்கியவான் வாய் திறந்துவிட்டார் என்று ஜனங்கள் வாழ்த்துவார்கள்; அவரைக் காண்கிற யாவரும் அவருடைய உத்தமத்தைப் பிரஸ்தாபிக்கிறதுண்டு; அவர் சகலருக்கும் பிரயோசனமா யிருந்தார். ஏழைகளையும் திக்கற்றவர்களையும் விதவை களையும் எப்போதும் அவருடைய அாமனையண்டை பார்க்க லாம். அவர் குருடனுக்குக் கண்ணும் சப்பாணிக்குக் காலும் ஏழைக்குத் தகப்பனுமாயிருந்தார்; அவருடைய தீர்ப்பே கடைசி தீர்ப்பாயிருந்தது; அவருடைய ஆலோ சனையின்படியே சகலரும் நடந்துவந்தார்கள்; அவர் தலைவனாய் உட்கார்ந்து இராணுவத்துக்குள் ராஜாபோல் அந்நாட்டிலிருந்தார்.[1] ஆகவே மாம்சத்தின் பிரகாரமும் ஆவியின் பிரகாரமும் அவர் ஐசுவரியமுடையவராகவே இருந்தார். இப்படி இவ்விரண்டு வாழ்வுகளிலும் மேன் மைப்படுவதற்கு மிஞ்சின மேன்மை இவ்வுலகில் உண்டோ? இல்லை. இவருடைய வாழ்வுதான் உயர்ந்த வாழ்வு. ஆனால் ஐயோ! அடிக்கடி உலகவாழ்வு ஆத்தும நஷ்டத்துக்குக் காரணமாயிருக்கிறதென்று நாம் அநுபோகத்தால் அறிந் திருக்கிறோம். பணக்காரர் பராபரனை மறக்கிறதுபோல் பிச்சைக்காரர் மறக்கிறதில்லை. ஆதலால் துக்கப்படுகிற காலத்திலும், சுகப்படுகிற காலத்திலும் 'எங்களை இரட்சித் தருளும் தயவுள்ள கர்த்தாவே' என்று ஒவ்வொருவரும் மன்றாடவேண்டியது.

---

[1]யோபு 29:6 முதல் கடைசிவரையும் பார்.

யோபு என்பவரிடத்தில் மெய்த் தேவபக்தி நிலைத்திருந்ததால் உலகவாழ்வும் சொற்சக்தியும் அதைக் கெடுத்துப்போட இயலாமற்போயிற்று. அவர் சாதாரண பக்திமானுயல்ல, விசேஷித்த பக்தனுயிருந்தார். தம்முடைய சுயபக்தியைப்பற்றி மாத்திரம் அவர் கவலையுள்ளவராயிராமல் தன் மக்கள் ஒவ்வொருவருடைய பக்தியைப்பற்றியும் கவலைப்பட்டுவந்தார். அவருடைய ஆத்தும வாழ்வுக்காக ஜெபம்பண்ணுவதும் பலியிடுவதும் புத்தி சொல்லுவதும் அவருடைய விசேஷித்த வேலையாயிருந்தது; அவருடைய குமாரருக்குள் அன்பும் ஐக்கியமும் நிலைத்திருந்தது; அக்காலத்தில் அவரவர் பிறந்தநாளைக் கொண்டாடி விசேஷித்த விருந்துவைத்து பலிசெலுத்துகிறது வழக்கமாயிருந்தது. பொறுமை பக்தருடைய மக்கள் ஒவ்வொருவரும் தன்தன் பிறந்தநாள் வரும்போது மற்றச் சகோதரர் சகோதரிகளை வரவழைத்து விருந்துகொடுத்து சந்தோஷம் கொண்டாடுவார்கள். அந்தச் சடங்கு முடிந்தவுடனே இவர் ஒருவேளை என் குமாரர் பாவஞ்செய்து தேவனை தங்கள் இருதயத்திலே தூஷித்திருப்பார்களென்று சொல்லி, அவர்களைப் பரிசுத்தப்படுத்தி அவர்களுடைய இலக்கத்தின்படியே சர்வாங்க தகனபலிகளைச் செலுத்துவார். பொறுமை பக்தர் இவ்விடத்தில் காட்டியிருக்கிற நல்லமாதிரியை ஒவ்வொரு தாய் தகப்பனும் பின்பற்றவேண்டியது நியாயமல்லவா! இவர் தன் குடும்பத்துக்குத் தகப்பனுய்மாத்திரமல்ல, குருவும் ஆசாரியனுமாயிருக்கிறார். தான் வணங்கும் தேவனைத் தன் பிள்ளைகளும் தனக்குப் பின்னின்று வணங்கும்படி நன்றாய்ப் பழக்கியிருக்கிறார். மேலும் இந்தக் காலத்தில் அவர் தேவனோடு சஞ்சரிக்கிற பக்தனுயிருந்திருக்கிறார். கடவுளுடைய அருளையும் அன்பையும் தமது சிந்தையில் நன்றாய்க் காத்துக்கொண்டு தியானித்ததால் கடவுளுடன் உறவாடி பக்திசுவாலையில் பிரகாசித்தார். தேவசித்தம் அவருக்கு வெளிப்படுத்தப்பட்டது; அவருடைய அருளின் பிரகாசம் அவர்மேல் தங்கியிருந்தது. அதைப்பற்றி அவரே ஓரிடத்தில் சொல்லுகிறார்:—'சென்றுபோன மாதங்களிலும், தேவன் என்னைக் காப்பாற்றிவந்த நாட்களிலும் எனக்குண்டாயிருந்த சீர் இப்பொழுதிருந்

தால் நலமாயிருக்கும்; அப்பொழுது அவர் தீபம் என் தலையின்மேல் பிரகாசித்தது; அவர் அருளின வெளிச்சத்தினால் இருளைக் கடந்துபோனேன்' என்று எழுதியிருக்கிறது (யோபு 29:2,3). இதினாலே உலக அந்தஸ்தும், தொல்லையும், வாழ்வும் அதிகரித்தால் தேவபக்தி அற்றுப் போம் என்று சிலர் சொல்லுகிறது பிசகென்றும், அதைக் காத்துக்கொள்ளுகிறவர்கள் அதிக பாக்கியவான்களாவார்களென்றும் தெளிவாக விளங்குகிறது. மேலும் லோக அந்தஸ்தானது நமது தகாதசெய்கைகளை ஆக்கினையின்றி கடத்திவிடும் காரணமாயிராமல், நமது சன்மார்க்கத்தையும் பயபக்தியையும் மற்றவர்களுக்கு முன்மாதிரியாக்கும்படி வெளிப்படுத்தும் காரணமாய் மாத்திரமிருக்கிறதென்று அறிந்துகொள்ளவேண்டியது. இக்காலத்திலிருக்கிற கிறிஸ்துவ பிரபுக்களையும் துரைமக்களையும் நாம் கவனித்தால் இப்படித் தங்களுக்காகவும் தங்கள் பிள்ளைக்குட்டிகளுக்காகவும் ஜெபமாகிய பலியைச் செலுத்துகிறதைக் காண்கிறோமா? இல்லை. எத்தனையோ பிரபுக்கள் தங்கள் பிள்ளைகளோடு தேவனை ஆராதித்து தங்கள் ஸ்தோத்திர பலியைச் செலுத்தாமல் உலக வாழ்வினால் மயங்கிப் போயிருக்கிறார்கள் என்று பார்க்கிறோம்.

யோபு என்பவருடைய தேவ பக்தியானது வாய்ப்பேச்சிலும், பலிமுதலாகிய சடங்குகளிலுமாத்திரம் இருக்கவில்லை. அவருடைய ஜீவகால நடபடிக்கைகளெல்லாம் அவரிடத்தில் விளங்கிய வாய் பக்தியோடும், சடங்கு பக்தியோடும் ஒத்திருந்தன. எப்படியெனில் அவர் மிகுந்த உபத்திரவங்களைச் சகிக்கவேண்டியதாயிருந்த காலத்தில் அவருடைய சிநேகிதர் வந்து இவை அனைத்தும் யோபு என்பவருடைய அகோர பாவத்தால் உண்டாயின என்று அநியாயமாய்க் குற்றஞ் சாட்டி அவரை மனந்திரும்புதலுக்கு ஏவின சமயத்தில் அவர் தமது உத்தமத்தை அறிக்கையிட்டார். இது சுய பெருமையை நிலைநிறுத்தும்படி வீம்பால் பேசின வார்த்தைகளாயிராமல் உத்தம இருதயத்தின் சுத்த பக்தியால் வெளியிட்ட மறுமொழியேயன்றி வேறல்ல. அவர் சொல்லுகிறார், 'முறையிடுகிற ஏழையையும் திக்கற்ற பிள்ளையையும் உதவியற்றவனையும் இரட்சித்தேன்; கெட்டுப்போக இருந்தவ

னுடைய ஆசீர்வாதம் என்மேல் வந்தது; விதவையின் இருதயத்தைக் கெம்பீரிக்கப் பண்ணினேன்; நீதியைத் தரித்துக் கொண்டேன், அது என் உடுப்பாயிருந்தது, என் நியாயம் எனக்குச் சால்வையும் பாகையுமாயிருந்தது. நான் குருடனுக்குக் கண்ணும் சம்பாணிக்குக் காலுமாயிருந்தேன்; நான் எளியவர்களுக்கு தகப்பனுயிருந்து நான் அறியாத வழக்கை ஆராய்ந்து பார்த்தேன்; நான் அநியாயக்காரருடைய கடை வாய்ப்பற்களை உடைத்து அவர்கள் பறித்ததை அவர்கள் பற்களிலிருந்து பிடுங்கினேன்' என்று சொன்னதோடு 'நான் சங்கடப்படுகிறவர்களுடன் அங்கலாய்த்து உபத்திரவப்பட்டவர்களுக்காக அழுதேன்; எளியவர்கள் வாஞ்சித்ததை நான் கொடாதிருந்து, விதவையின் கண்களைப் பூத்துப்போகப் பண்ணி, தாய் தகப்பனில்லா பிள்ளை என் ஆகாரத்தில் சாப்பிடாமல் நான் ஒருவனுய்ச் சாப்பிட்டதுண்டோ?' என்கிறுர். அநாத பிள்ளைகள் தங்கள் பெற்றோர் மடியிலிருந்து வளருவதுபோல் அவர் வீட்டிலிருந்து வளர்ந்தார்கள் என்றும், அவர்களைத் தன் பிள்ளை போல கைலாகுகொடுத்து நடத்தி வந்தேனென்றும் சொன்னுர். 'நான் பொன்னின்மேல் நம்பிக்கை வைத்து தங்கத்தைப் பார்த்து, நீ என் ஆதரவு என்றும், என் ஆஸ்தி பெரியதென்றும், என் கைக்கு மிகுதியும் கிடைத்தது என்றும் நான் சொன்னதில்லை' என்று அவரே அறிக்கையிடுகிறுர்.[1] நான் முன் சொல்லிய வண்ணம் இதினுலே அவரைத் தற்பொழிவுக்காரன் என்று தீர்க்கலாகாது. அவருடைய சிநேகதர் கொண்டிருந்த தப்பிதத்தைக் கண்டிக்கும் வார்த்தைகளேயன்றி வேறல்ல. இப்படிப்பட்ட பக்தனுல் பலருக்கும் பகிரங்க வாழ்வுண்டாகும் என்பதை யார் ஆட்சேபிப்பார்கள்? இப்பேர்ப்பட்ட பக்தர் எவ்வளவுக்கு உலகை வாழ்வில் விருத்தியாகிறுர்களோ அவ்வளவு உலகத்துக்கு வாழ்வுண்டாகும்; அவர்கள் தங்களுடைய உயர்ந்த சிம்மாசனங்களிலிருந்து பக்தி சுவாலையால் ஜொலிப்பார்கள். இக்காலத்தில் இப்படிப்பட்ட அதிகாரிகளை நாம் கண்டுபிடிக்கிறதில்லை. இந்நாட்டு அதிபதிகளும் பெரி

[1] யோபு 29:12-17; 30:20; 31:16-20, 24, 25.

யோரும் அநீதியை உடையாகவும் அக்கிரமங்களை ஆபரணமாகவும், பரிதானத்தைப் பாகையாகவும், பொய்யைப் பாதரட்சையாகவும், கபடம் என்னும் கேடகத்தை அக்கிளுக்குள் இறுக்கி, குரூரமென்னும் கூரிய பட்டயத்தால் குடிகளை ஆளவும் அடக்கவும் பிரயாசப்பட்டு வருகிறார்கள். பொருளாசையை நாடாமல் பொல்லாரைச் சிட்சித்து, நல்லாரை உற்சாகப்படுத்தும் அதிபதிகளின் தொகை, ஐயோ! எத்தனை கொஞ்சமென்று சொல்லவேண்டியது. உலகமெல்லாம் நடந்து போகவேண்டும், தான் ஒருவனே ரதமேறவேண்டும்; ஊரார் குடிசையிலும் நான் மாத்திரம் மெத்தையிலும் வசிக்கவேண்டும்; ஊராருக்குக் கந்தை போதும், எனக்குக் காசிபட்டும் போதாது; மற்றவர்களுக்கு ஐந்து ரூபாய் போதும், எனக்கோ ஐஞ்ஞூறானாலும் ஐயாயிரமானாலும் போதாது; நான் உட்கார, நாடெல்லாம் எழுந்து நிற்கவேண்டும் என்று சொல்லுகிறவர்கள் எத்தனையோ பேர் இருக்கிறார்.

இப்படிப்பட்ட பூரண பக்தனை கடவுள் கை விடுவாரா? கை விடவேமாட்டார். அவருடைய ஜனங்களே அவருக்குப் பங்கும் சுதந்தரருமாயிருக்கிறார்கள். அவர் அவர்களைக் காப்பாற்றிச் சகல மோசங்களிலுமிருந்து ஆதரித்து மேன்மைப்படுத்துகிறார். இதைப் பின்வரும் வரலாறுகளால் நாம் தெளிவாக அறிந்துகொள்ளுவோம்.

பொறுமை பக்தன் இவ்வளவாய் இகலோக பாக்கியத்திலும் பரலோக பாக்கியத்திலும் வாழ்வு பெற்று வருங்காலத்தில் ஒரு பெரிய விசேஷம் நடந்தது. எப்படியெனில், அரூப கடவுள் தமக்கு ஏவலாட்களாகப் படைத்திருக்கும் சம்மனசுக்கள் கூட்டம் ஒருநாள் கர்த்தருடைய சந்நிதியில் வந்து நின்றார்கள். ஒருவேளை அவரவருக்கு தேவன் கொடுத்த வேலைகளை நிறைவேற்றி தம் தம் கணக்கைக் கொடுத்தார்களாக்கும். தேவன் இந்த ஜீவன்களை மோட்ச லோகத்தில் இரட்சிப்பைச் சுதந்தரிக்கப்போகிறவர்களினிமித்தமாக ஊழியஞ்செய்யும்படி தமக்குச் சித்தமான காலங்களில் பூலோகத்தில் அனுப்பி வந்தார். ஆதலால் பரலோகத்துக்கும் பூலோகத்துக்கும் எவ்வளவும் சம்பந்தமில்லாதது

போல வெளிக்குக் காணப்பட்டபோதிலும் உள்ளபடி சம்பந்தம் இருந்து வந்தது. தேவ புத்திரர் என்று அழைக்கப் பட்ட சம்மனசுக்கள் தம் தம் வழக்கம்போல் அவரவர் வேலை களைப்பற்றி தேவனுக்குச் சொல்லப்போன கூட்டத்தில் சாத்தானும் அவர்கள் நடுவில் வந்து நின்றான். இந்தச் சாத்தானும அவனுடைய கூட்டமும் ஆதியில் சம்மனசுக் களாகவே இருந்தார்கள். பின்பு அவர்கள் தாங்கள் கொண்ட பெருமையினால் சிறுமைப்படுத்தப்பட்டு நித்திய தண்ட னையை ஆக்கினையாகப் பெற்றார்கள். இவர்கள் தேவ தண்டனைக்குள்ளாக்கப்பட்ட முதல் கடவுளுடைய கிரியை களைக் கெடுத்துப்போடப் பார்க்கிறதும், அவருக்கு விரோத மாய் மனுமக்களை ஏவி விடுகிறதுமே வேலையாயிருக்கிறார்கள். ஆளோடு ஆளாய் நின்றால் யாரும் நம்மை அறியார்கள் என்று அந்தப் பேய் நினைத்திருக்கலாம். சம்மனசுக் கள் பூலோகத்தில் செய்யும் வேலையின் இரகசியங்களை அறிந்து அதற்குத்தக்க கேடுகளை உண்டுபண்ண நோக்க மாய் இந்தச் சாத்தான் போனாலும் போயிருக்கலாம். தேவ பக்தரையிட்டு சிலவேளை சாத்தான்களுக்கும் சம்மனசுக் களுக்கும் வாக்குச் சண்டை உண்டாகிறதுமுண்டு. நாம் முன்னே மோசே என்பவரைப் பற்றி எழுதின வரலாற்றில் மிகாவேல்சம்மனசுக்கும் சாத்தானுக்கும், மோசேயின் சரீரத் தைக் குறித்து சம்வாதம் நேரிட்டதென்று சொல்லியிருப் பது இதற்கு ஒரு திருஷ்டாந்தமாயிருக்கிறது. தன்னை எவரும் இனமறியக் கூடாதென்று சாத்தான் நினைத்து, அவருடைய புத்திரர்களின் நடுவில் வந்து நின்றபோதிலும் தேவன் அவனை இன்னானென்று இனமறிந்து கொண்டார். பக்தர் மத்தியில் பிசாசு வரான் என்று நாம் கிஞ்சித்தும் எண்ணலாகாது. அவர்கள் நடுவில்தான் அவனுக்கு வேலை யிருக்கிறது; பாவிகள் நடுவில் அவனுக்கு என்ன வேலை? பக்தரே! உங்கள் நடுவிலிருக்கும் சாத்தான்களை நீங்கள் பெரும்பாலும் இனமறிந்துகொள்ளுகிறதில்லை; அவன் தன்னை உங்கள் தலைவனாகப் பாராட்டி உங்கள் நடுவில் நின்று கொள்ளுவான். ஆதலால் தங்கள் மத்தியிலுள்ள சாத் தானைக் காட்டிக்கொடுக்கும்படி தேவனை மன்றாடிக்கொண்டே யிருக்கவேண்டியது.

அன்றையதினம் கூடிவந்த சம்மனசோரின் கண்களெல்லாம் கர்த்தாவை நோக்கிக்கொண்டிருந்தன; கர்த்தர் சாத்தானை நோக்கி: 'நீ எங்கேயிருந்து வருகிறாய்?' என்றார். அதற்கு அவன், 'நான் பூமியெங்கும் உலாவி அதில் சுற்றித் திரிந்து வருகிறேன்' என்று சொன்னான். இந்த வாசகம் சாத்தானின் கர்வத்தை நன்றாய்க் காட்டுகிறது. இவன் ஆதியில் கேட்டவாறு சொல்லும், சாத்தான். இப்பொழுதும் இருக்கிறதும் பெருமை.

ஆண்டவர் அம்மட்டோடே காரியத்தை முடித்துவிடவில்லை. அவர் பிசாசையும் அதின் கிரியைகளையும் அடியோடு அழித்து விடுகிறவரானதால் அன்றையதினம் அவனைத் தமது தூதர் நடுவில் வெட்கப்படுத்திக் கீழ்ப்படுத்தும்படி முயன்றார். பூலோகம் தனக்குச் சொந்தமல்லவென்றும், அதின் குடிகள் பேரில் அவன் அதிகாரம் பூரணமாய்ச் செல்லுகிறதில்லையென்றும், சம்மனசோரும் சகல மனுவோரும் காணும்படிக்கும் அவர் மறுபடியும் சாத்தானை நோக்கி, 'என் தாசனாகிய யோபின்மேல் கவனம் வைத்தாயோ? உத்தமனும் சன்மார்க்கனும் தேவனுக்குப் பயந்து பொல்லாப்புக்கு விலகுகிறவனுமாகிய அவனைப்போல பூமியில் ஒருவனுமில்லை' என்றார். அதற்கு சாத்தான் சொல்வான்: 'யோபு விருதாவாகவா தேவனுக்கு பயந்து நடக்கிறான்! நீர் அவனையும் அவனுடைய வீட்டையும் அவனுக்குண்டான எல்லாவற்றையும் சுற்றி வேலியடைக்கவில்லையா? அவன் கைகளின் கிரியையை ஆசீர்வதித்தீர், அவனுடைய சம்பத்து தேசத்தில் பெருகிற்று; ஆனாலும் உம்முடைய கையை நீட்டி அவனுக்குண்டானவையெல்லாம் தொடுவீரானால் அப்பொழுது அவன் உமது முகத்துக்கெதிரே உம்மைத் தூஷிக்கானோ பாரும்' என்றான். சாத்தானுடைய மேற்சொல்லிய வாசகத்தைச் சற்று கவனமாக வாசிக்கிறவன் உடனே கொல்லென்று சிரித்துவிடவேண்டியதல்லவா! முதல் வாசகத்தில் இவன் தன்னை ஒரு லோகாதிபதியும் சர்வ சக்கரவர்த்தியும் போல பேசிவிட்டு இப்பொழுது தன் சொந்தவாயால் தானல்ல, தன்னிடத்தில் வினவும் தேவனே சர்வாதிகாரி யென்று ருசுப்படுத்துகிறானல்லவா? மனுஷருக்கு வீடு கட்டுகிறவரும், வேலிகட்டுகிறவரும் அவர்களை ஆசீர்வதிக்

கிறவரும் எல்லாம் தேவன் தான் என்று அறிக்கையிடுகிறான் இவன் பக்தரின் வீட்டைக் கன்னமிடவும், கூடுமானால் இடிக்கவும் திரிந்தலைகிற திருட்டுப்பயல் என்று ஏன் சொல்லக்கூடாது. இவன் தேவன் கட்டின வேலியைத் தாண்ட முதலாய் சக்தியற்றவன். இவன் தேவனுடைய பிள்ளைகளின் வேலியைச் சுற்றித்திரிந்து, வேட்டை நாய்போல் யாரைக் கடிக்கலாம் என்று அங்குமிங்கும் பாய்ந்துதிரிகிற வேலையேயன்றி வேறல்ல. இவன் கர்ச்சிக்கிற சிங்கம்போல் எவரை விழுங்கலாமென்று வகைதேடுகிறது மெய்யானாலும், வல்லமையற்றவன். பின்னை அவனால் மனுஷரில் கோடானு கோடிபேர் மாண்டுபோகிறதின் காரணமென்னவென்று கேட்டாயோ? அதின் இரகசியம் உனக்குள் இருக்கிறதேயன்றி, அவனிடத்தில் இல்லை. நீ அவனுக்கு இடங்கொடுக்கிறாய்; நீ வலிய அவன் வரும்படி உன் வேலியைப் பிடுங்கிக் கொடுத்து, உன் கதவைத் திறந்து வைத்து அவனை உன்னோடு வைத்துக்கொள்ளுகிறாய்; உன் கேட்டின் இரகசியமெல்லாம் உனக்குள்தான் இருக்கிறதப்பா! உனக்குள்தான் இருக்கிறது! நீ அவனைக் கட்டி அணைக்கிறாய், அவன் உன்னைக் காயப்படக் கடிக்கிறான்; நீ அவனை முகத்தில் முத்தமிடுகிறாய், அவன் உன் முதுகில் குதிரை ஏறுகிறான்; நீ அவனை வாழ்த்துகிறாய், அவன் உன்னைத் தாழ்த்துகிறான்; நீ பொன்னை அவன் பாதத்தில் படைக்கிறாய், அவன் மண்ணை உன் வாயில் போடுகிறான். ஐயோ! சிநேகிதனே, நீயே உன்னைச் சாத்தானுக்கு ஒப்புக்கொடுத்துக்கெடுக்கிறாயேயன்றி அவன் தன் பலத்தால் உன்னைக் கீழ்ப்படுத்துகிறதில்லை. உன் சுயவல்லமையால் நீ பாவத்தைப் பலமாய்ச் செய்யும்போது சாத்தானின் பலத்தால் நான் ஆளப்படுகிறேனேயென்று அவன்பேரில் சாக்கு சொல்லுகிறதுண்டு. இது பாவ இருதயத்தையடுத்த ஒரு மாய சாஸ்திரமாக்கும். உனக்கு வீடு கட்டுகிறவரும், வேலியடைக்கிறவரும், காவல் காக்கிறவரும், வரமளிக்கிறவரும் கர்த்தர்தாம். சாத்தானால் ஒன்றுமில்லை. 'பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள், அப்பொழுது அவன் உங்களைவிட்டு ஓடிப்போவான்' என்று லோக இரட்சகர் சொல்லியிருக்கிறார். இதுதான் அந்த மாய சாஸ்திரத்தைக் குலைக்கும்

மெய் சாஸ்திரமாயிருக்கிறதென்று அறிந்துக்கொள் .நீ சாத்தானுல் பாவஞ்செய்ய ஏவப்படும்போது எதிர்த்து நிற்பாயானுல் பிசாசு நடந்துபோகாமல் ஓட்டம் பிடிப்பதை ஆவியில் உணருவாய்.

யோபின் பொறுமையும் பக்தியும் உலக வாழ்வினிமித்தமல்ல, தெய்வீகமுள்ளதென்பதை சாத்தான் அறியும்படி 'இதோ, அவனுக்குண்டானவையெல்லாம் உன் கையிலிருக்கிறது, அவன்மேல் மாத்திரம் உன் கையை நீட்டாதே' என்று சொன்னுர். இவ்வளவு இடங்கிடைத்ததே பெரிய காரியமென்று சாத்தான் சந்தோஷத்தோடே போனுன். இப்படி தேவன் தமது பக்தனே சாத்தானுடைய கையில் ஒப்புக்கொடுப்பானேன் என்று பலர் கேட்கலாம். இந்தச் சரித்திரத்தைக் கவனமாய் தியானிக்கிறவர்கள் இவ்வகையான தேவ நடத்துதல் பசாசானவனைத் திருப்திபடுத்தும்படியல்ல, அவனைக் காலாகோலமாக்கி வெட்கப்படுத்தும்படி தேவனுல் கையாடப்பட்டிருக்கிறதென்று திட்டமாய் அறிந்துகொள்ளுவான். சாத்தான் ஆதிமுதல் ரட்சண்ய வேலைக்கு இடையூருன காரியங்களையே செய்துவருகிருன். அவனுடைய இடையூறுகளை அறுத்து ரட்சண்யத்தை முடித்து தமக்கு கனத்தையும், சாத்தானுக்கு கனவீனத்தையும் உண்டாக்கும்படியாக தேவன் அவைகளை ஆண்டு நடத்திவருகிருர். யோபின் உத்தமத்தைச் சாத்தான் ஆட்சேபித்ததால் அவருடைய உத்தமம் யதார்த்தமானதுதான் என்கிற சத்தியத்தை ரூபிக்கும்படி இந்தப்படி செய்தாரேயன்றி வேறல்ல. இதுதான் இந்தச் சரித்திரத்திலடங்கிய தேவ நடத்துதலின் இரகசியமென்று சொல்ல வேண்டியது. இதை அறிந்துகொண்டால் இனிவரும் வரலாறு அனைத்தும் மயக்கமின்றி விளங்கிப்போம். உள்ளபடிச் சொன்னுல் ஒரு பக்தனுக்கும் பசாசுக்கும் நடக்கும் போரை இது திருஷ்டாந்தப்படுத்துகிறது. கடவுள் எப்போதும் பக்தர்பட்சம் நின்று துணைசெய்கிறவரானபடியால் இதைப் பசாசுக்கும் பராபரனுக்கும் நடக்கும் போர் என்று சொன்னுலும் குற்றமில்லை. இந்தச் சரித்திரத்திருல் முதல் தரமான பக்தரை தேவன் சிலதரம் எவ்விதமாய் நடத்துகிருர் என்பதையும் அறியலாம். உத்தம பக்தரை தேவன்

கைவிட்டுவிட்டார் என்று உலகம் உத்தேசித்து கைதட்டும் படி அவ்வளவு துன்ப சமுத்திரத்தில் ஆழ்த்துகிறதுண்டு; அந்த உத்தமனோ தனக்குள் அதே சமயத்தில் இது துன்ப மல்ல, இன்பமென்று கீதம்பாடி கின்னரம் அறுக்கலாம். இப்படிப்பட்ட நடத்துதல்களில் விழுந்துபோகிற பக்தாட்கள் பலருண்டு. ஆனால் அவர்கள் அப்படி விழுந்து விசுவாசக் கப்பலைச் சேதப்படுத்திக்கொள்ளாமல், நீர் என்னைக் கொன்றாலும் உம்மையே நம்பியிருக்கிறேனென்று ஒரே பிடியாகப் பிடிப்பதுண்டானால் அதின் பலனைப் பின்னால் கண்டனுபவித்து களிகூருவார்கள். இதை வாசிக்கிறவனே! தேவன் என்னை உலகத்திலிருக்கிற எல்லாரைப் பார்க்கிலும் அநியாயமாய் நடத்தியிருக்கிறார் என்று சொல்லத் துணிகிறாயோ? அப்படி பேசுவதை விடு. நீ இந்தச் சரித்திரத்தைக் கவனமாய் ஆராய்ந்து தியானித்தால் கர்த்தர் யோபு என்ற பக்தனைவிட உன்னைத் தயவாய் நடத்தியிருக்கிறார் என்று காண்பாய். பக்தர் விஷயத்தில் எவ்வித போங்கான நடத்துதலையும் தேவன் பாராட்டுகிறதுண்டென்பதை உணர்த்த இதைவிட வேறே சரித்திரம் இல்லையென்று சொல்லவேண்டியது. இனி நாம் சரித்திரத்தைத் தொடர்ந்து போவோமாக. பொறுமை பக்தரின் மங்கைகளின் வாழ்வும் ஒரே தினத்துக்குள் மாறிப்போயிற்று. அதின் வரலாறு இன்னதென்பதைப் பின்வருவதால் அறியலாம்.

தாழ்வு பருவம்

பொறுமை பக்தரின் தேவதா பக்தியின் ஆழமும் வைராக்கியமும் இவ்வளவென்று பசாசு கண்டு வெட்கப்படும்படி தேவன் அவருக்குண்டானவைகளை யெல்லாம் சாத்தான் கையில் ஒப்புக்கொடுத்தாரென்று முன் சொன்னோமே. இந்த நீசத்துரோகி தன் வேலையை உடனே துவக்காமல் சமயம் பார்த்துக்கொண்டே யிருந்தான். இந்த விஷயத்தில் சாத்தான் இரண்டு பலத்த யோசனைகளைத் தீர்மானித்துக்கொண்டான் என்று சொல்லலாம். அதில் ஒன்று பொறுமை பக்தருக்குண்டாகும் துன்பமெல்லாம் ஒரே நாளில் ஒன்றின்பின் ஒன்றாய் நேரிடவேண்டுமென்பதும், மற்றொன்று உண்டாக்கும் நஷ்டத்தால்

பொறுமை பக்தனின் தேவதா பக்தி அதே தினத்தில் குலைந்துபோக வேண்டுமென்பதுந்தான். கொஞ்சங்கொஞ்ச மாய் நஷ்டமுண்டானால் இது உலக இயல்பே. 'யானைக்கும் அடி பிசகும்' என்ற பழமொழிபோல யாருக்கும் ஏற்றத் தாழ்வான ஜீவகாலம் இருக்கிறது வழக்கந்தான் என்று பொறுமை முனிவர் எண்ணி தேவ பற்றுதலை விடமாட்டார். ஒரே தினத்தில் சர்வ நஷ்டமானால் இது இயல்பல்ல, சர்வ வல்லவருடைய செயலென்று உத்தேசித்து அந்த சர்வ வல்லவர்மேலுள்ள பிடியை விட்டுவிடலாம் என்று பிசாசு உத்தேசித்திருந்தானென்று சொல்லவேண்டியது. பிசாசே! உனக்கு இவ்வளவு புத்தியிருந்தால் பூரண பக்தனுக்கு அதைவிட ஒரு முழ உயரமான புத்தியிருக்குமென்று நினைத்துக்கொள்.

தான் எடுத்த பெரிய வேலையை நடத்தும்படி சாத்தான் சமயம் பார்த்து, பொறுமை பக்தருடைய மக்களின் ஜனன திருநாள் ஒன்றுதான் அதற்கேற்ற சமயம் என்று தீர்மானித் தான். அதிலும் சிரேஷ்ட புத்திரன் ஜனன நாளைப்போல நல்ல தினம் வேறு கிடையாதென்று அவன் உத்தேசித்து, பொறுமை பக்தரின் பொருளனைத்தின்பேரிலும் போர் செய்ய ஆயத்தப்பட்டான். மேலும் அவன் அத்திசையி லுள்ள துஷ்ட ஜாதியாருடைய இருதயத்தில் சென்று முனிவரின் சொத்துக்களையெல்லாம் கொள்ளையிட்டுக் கொள்ளும்படி துர்ப்போதனைசெய்து முடித்திருந்தான். சாத்தான் எண்ணியபடி மூத்த மகனின் பிறந்தநாள் வந்தது. அப்பொழுது யோபும் இவருடைய குமாரரும் குமாரத்திகளும் தங்கள் மூத்த சகோதரன் வீட்டிலே புசித்து திராட்சரசம் குடிக்கிறபோது, ஒரு ஆள் அவரிடம் ஓடிவந்து கும்பிட்டு, மா பிரபுவே! உம்முடைய எருதுகள் உழுகிறபோது கழுதைகள் அவைகளின் பக்கத்தில் மேய்ந்து கொண்டிருந்தன; அப்பொழுது சபேயர் என்னும் ஜாதியார் சிலர் வந்து பலவந்தமாய் மந்தையனைத்தையும் ஓட்டிக் கொண்டு போய்விட்டார்கள், உம்முடைய மேய்ப்பரை வெட்டிக் கொன்றுபோட்டார்கள், நான் ஒருவன் மாத்திரம் உயிர்தப்பி ஓடிவந்தேன் என்று சொல்லிக்கொண்டிருக்கை யில் வேறொருவன் தலைவிரி கோலமாய் ஓடிவந்து

மா துரையே! வானத்திலிருந்து அக்கினி விழுந்து ஆடுகளை யும் வேலையாட்களையும் சுட்டெரித்துப்போட்டது, நான் ஒருவன் மாத்திரம் உயிர்தப்பி ஓடிவந்தேன் என்றான். இவன் தன் பேச்சை சொல்லியும் சொல்லாதுமிருக்கும் போது வேறொருவன் தலைதெறிக்க ஓடிவந்து அப்பனே! கல்தேய ஜாதித் திருடர் மூன்று கும்பலாக வந்து ஒட்டகங் களை யெல்லாம் ஓட்டிக்கொண்டு போய்விட்டார்கள், வேலைக் காரரையெல்லாம் வெட்டிப்போட்டார்கள், நான் ஒருவன் மாத்திரம் உயிர்தப்பி வந்தேன் என்று அழுதான். இவன் இப்படிச் சொல்லிக்கொண்டிருக்கும்போதே வேறொருவன் வந்து ஐயோ, அருமை ராஜாவே! உம்முடைய குமாரரும் குமாரத்திகளும் தங்கள் மூத்த சகோதரன் வீட்டிலே விருந்துண்ணும்போது ஒரு பெருங்காற்று வந்து அந்த வீட்டின் நாலு மூலையிலும் அடிக்க, சுவர் இடிந்து பிள்ளை கள்மேல் விழுந்ததினால் அவர்கள் இறந்து நான் ஒருவன் மாத்திரம் தப்பி அதை உமக்கு அறிவிக்கும்படி வந்தேன் என்றான். ஆகவே பொறுமை பக்தரின் ஆடுமாடுகளும், கழுதை ஒட்டைகளும், வேலைக்காரர் வேலைக்காரிகளும், குமாரர் குமாரத்திகளும் எல்லாரும் ஐந்து நிமிஷத்துக்குள் அழிந்துபோனார்கள்.

இதில் நாம் இடையில் கவனிக்கும் ஒரு விஷயமுண்டு. பொறுமை பக்தனைத் துன்பப்படுத்தும்படி சபேயரும் கல்தேயரும் சாத்தானால் ஏவப்பட்டிருக்கலாம்; ஆனால் வானத்து அக்கினியும் பெருங்காற்றும் அவருக்குத் துன்ப காரணமான வகையென்ன? இது கடவுள் சாத்தானோடு கூடிக்கொண்டு ஒரு பக்தனை இம்சைப்படுத்தினதுபோ லிருக்கிறதல்லவா என்று சிலர் சொல்லலாம். இதற்கு உத்தரவாக நாம் சொல்லுகிறது என்னவென்றால், பொறுமை முனிவருக்குண்டான துன்பம் மாரிகாலத்திலுண்டாயிருக்க லாம்; அன்று மின்னலும் மழையோடுகூடிய புசலும் அடித் திருக்கலாம். பிசாசு இதே சமயத்தில் அந்த மின்னலையும் காற்றையும் அவர்களுக்கு விரோதமாகத் திருப்பி அவ் வண்ணமாய்த் தனக்குண்டாகிறது தேவனுடைய கரத்தி லிருந்தேயன்றி சாத்தானால் அல்லவென்று பொறுமை பக்தர் த்ப்பாய் நினைத்து வழுவிப்போக ஏதுபண்ணியிருக்கலாம்.

சாத்தானுடைய குணத்துக்கு இது விரோதமல்ல. அடிக்கடி தேவ தயவுகளைக்கொண்டே நம்மை அவநம்பிக்கைக்கு ஏவு கிறதுண்டு. தேவனுடைய சகல நல்ல ஈவுகளிலும் நஞ்சு கலந்து அதினாலுண்டாகிற தீமையைக் கடவுள்மேல் சாட்டி விடும்படி பிரயாசப்படுகிறதே அவனுடைய விசேஷித்த வேலைகளில் ஒன்றாயிருக்கிறது.

பொறுமை பக்தரை விசுவாசத்திலிருந்தும் தேவ பற்றுதலிலிருந்தும் பிரிக்கும்படி சாத்தான் செய்யவேண்டியதையெல்லாம் செய்து முடித்தான். அவனுடைய பிரயத்தனங்களுக்கு அக்கம்பக்கம் வசித்த ஜாதியாரும் ஆகாயத்து அக்கினியும் பெருங்காற்றும் துணைநின்றன. இந்தப் பிரயத்தனங்கள் ஒன்றும் அவரை விசுவாசத்திலிருந்து விலக்க முடியவில்லை. அவருடைய பக்தியின் ஜுவாலையை பெருங் காற்று அவிக்கவுமில்லை, அவருடைய பொறுமைகடலை அக்கினி நக்கிப்போடவுமில்லை, அவருடைய நம்பிக்கை ஏணியின் படிக்கட்டுகளில் ஒன்றும் பழுதாகவுமில்லை. ஐசுவரியவான்களில் பலர் தங்கள் வாழ்வு காலத்தில் பக்தியின் உடைகளைப் போட்டுக்கொண்டு திரிந்தபோதிலும் நஷ்டம், துன்பம் நேரிட்டவுடனே அவர்களுடைய மாய் மாலம் வெளிப்பட்டுப்போம். இப்படி அடிக்கடி நாம் பார்க்கிறோம். பொறுமை பக்தரின் காரியம் அவைகளில் ஒன்று போல் ஒத்ததில்லை. அவர் நஷ்டத்தின் மத்தியில் அதிஷ்ட முகம் காட்டி சாவின் மத்தியில் ஜீவனுடையவர்போல் காணப்படுகிறார்.

இவ்வளவு சம்பவங்களையும் அவருடைய காது கேட்டவுடனே தமது ஜாதி வழக்கம்போல சால்வையைக் கிழித்து தமது தலையைச் சிரைத்து தரையிலே விழுந்து பணிந்து கொண்டு,

'நிர்வாணியாய் என் தாயின் கர்ப்பத்திலிருந்து வந்தேன்,
நிர்வாணியாய் அவ்விடத்துக்குத் திரும்புவேன்,

கர்த்தர் கொடுத்தார்,
கர்த்தர் எடுத்தார்,
கர்த்தருடைய நாமத்துக்கு ஸ்தோத்திரம்'

என்று சொன்னார். இதினால் அவருடைய ஆத்துமாவின் சாயல் நன்றாய்த் தெரிகிறது. சகல நஷ்டங்களையும் காதால் கேட்டு மனதால் உணர்ந்த பின்பு தரையில் விழுந்து பணிந்து கொண்டார். இவர் முற்றிலும் உலகத்தானாயிருந்தால் அநேக காரியங்களைச் செய்திருக்கலாம். அக்கினியோடும் காற்றோடும் இவர் யுத்தஞ்செய்யக்கூடாதே போனபோதிலும் கல்தேயரோடும் சபேயரோடும் யுத்தஞ்செய்ய புறப்படலாம். அவர் தமக்கு அந்த இரண்டு ஜாதியாராலுண்டான நஷ்டங்களைக் குறித்து முறையிட்டது மெய்யானால் அவருக்காகப் பல சிற்றரசர் படையெடுத்துப்போய் பழி வாங்கியிருக்கலாம். இல்லை. அவர் தமக்குண்டான இந்த சோதனையை ஒரு பெரிய காரியமாய் எண்ணவில்லை. உண்டான யாவும் உமது செயலால்தான் உண்டானது அப்பனே! என்று அறிக்கையிடுகிறதுபோல் கடவுளை விழுந்து வணங்கிப் பணிந்தார். மேலும் அவர் தாம் இந்தப் பொருட்கள் ஒன்றும் தன்னுடையதல்லவென்றும் வேறொருவருடைய அதாவது, தேவனுடையவைகளைத் தாம் சிலகாலம் அநுபவிக்கும்படி உத்தர விருந்ததென்றும் இப்பொழுது அந்த உத்தரவு மாறிப்போனதேயன்றி தேவ தயவாவது பராமரிப்பாவது மாறிப்போகவில்லையென்றும் உணர்ந்து, 'கர்த்தர் கொடுத்தார், கர்த்தர் எடுத்தார்' என்று அறிக்கையிடுகிறார். இதினாலே உலகப் பொருட்களிலும், சொந்தப்பிள்ளைகளிலும் எவ்வளவு குறைந்த மதிப்பும் பற்றுதலும் அவருக்கு இருந்ததென்றும், தேவன்மேல் எவ்வளவு பலமான பிடியிருந்ததென்றும் பரிஷ்காரமாய் விளங்குகிறது. அவர் தமது துக்கத்தை ஆற்றவும் மாற்றவும் தமது பூர்வோத்தர சொத்தின் கணக்கை பரிசோதித்து, 'நான் நிர்வாணமாய் வந்தேன், ஆதலால் போனதொன்றும் என்னுடையதல்ல' என்றும் சொல்லுகிறாப்போலிருக்கிறது. பரி. பவுல், பக்தர் ஒருவரும் உலகப் பொருட்களில் நம்பிக்கை வைக்கக்கூடாதென்றும், அதின் வேஷம் கடந்துபோகிறபடியால் நாம் அதைத் தொட்டும் தொடாமலுமிருந்து நமது காலத்தைக் கழிக்க வேண்டுமென்றும் போதித்த போதனையை பொறுமை பக்தன் பரிசுத்த ஆவியினால் கற்றறிந்து அதின்படி நடத்தி

யிருக்கிறார். மொத்தமாய்ச் சொன்னால் உலக வாழ்வை விரும்பும் விஷயத்தில் பக்தர்,

'நிர்வாணமாய் வந்தேன்,
நிர்வாணமாய்ப் போவேன்'

என்ற இரண்டு வாசகங்களையும் மறக்கவொண்ணாது அவைகளில் ஒவ்வொன்றையும் அநுபவிக்கும்போது பக்திவினயத்தோடு,

'கர்த்தர் கொடுத்தார்'

என்று ஓயாமல் நினைவுகூரவேண்டியது. அவைகளில் ஒன்றுவது குறையுங்காலத்தில் அல்லது எடுபடுஞ் சமயத்தில் முறுமுறுப்பில்லாமலும் உலகத்திலுள்ள ஒருவரையும் நிந்தியாமலும்,

'கர்த்தர் எடுத்தார்'

என்று எல்லாருக்கும் அறிக்கையிடவேண்டியது. கர்த்தர் கொடாமலும் நிறைகிறதுமில்லை, அவர் எடாமல் குறைகிறதுமில்லை. மேலே சொல்லிய நாலு வாசகங்களும் மனுஷருடைய ஜீவ காலத்தின் வெவ்வேறு நிலைமையைக் குறிக்கிறதாயிருக்கிறது. இந்த எல்லாக் காலங்களிலும் பக்தன் சந்தோஷமுள்ள மனதோடு தரையில் தாழ விழுந்து, 'கர்த்தருடைய நாமத்துக்கு ஸ்தோத்திரம்' என்று அறிக்கையிட வேண்டியது.

அவருடைய நோயினால் அவர்பட்ட கஸ்திக்குக் கணக்கில்லை. மாயமான மாதங்கள் அவருடைய சுதந்தரமாகிய சஞ்சலமான இராத்திரி அவருக்குக் குறிக்கப்பட்டிருந்தன. அவர் படுக்கும்போது எப்போது எழுந்திருப்பேன், இராக்காலம் எப்போது முடியுமென்று அங்கலாய்த்து உருண்டு புரண்டு காலங்கழிப்பார். அவருடைய மாம்சம் பூச்சிகளினாலும் அடைபற்றின புழுதியினாலும் மூடப்பட்டிருந்தன; அவருடைய தோல் வெடித்து சீழ் ஓடி பீரிட்டுக்கொண்டிருந்தன; அவருடைய எலும்புகளைப் புழுக்கள் துளைத்தன; அவருடைய நரம்புகளில் ஓய்வில்லா நோவிருந்தது; அவரை மதிப்பார் ஒருவரும் இருந்ததில்லை. அப்படியிருந்தபோதிலும் அவர் அவைகளையெல்லாம் பொறுமை பக்தியோடு தாங்கிக்கொண்டார். அவர் தம்முடைய துன்பங்

களைச் சகித்துக்கொண்டபோதிலும், அவருடைய மனைவிக்கு அது அநியாயமாகக் காணப்பட்டன. யோபின் ஜெபங்களை யும் தருமங்கயும் நீதி நியாயங்களையும் பூரணமாய்க் கண்டிருந்த மனைவி அவரைப்போல பக்தியுள்ளவளாயிராதபடியால் வேறு அபிப்பிராயப்பட்டு கடவுள்பேரில் காரமாயிருந்தாள். ஒருநாள் அவள் தன் கணவர்படும் மட்டற்ற அவஸ்தைகளை மனதில் எண்ணி அவரண்டைபோய், 'நீர் இன்னம் உம்முடைய உத்தமத்தில் உறுதியாய் நிற்கிறீரோ? தேவனைத் தூஷித்து ஜீவனைவிடும்' என்று சொன்னாள். இவள் பேச்சு கொஞ்சமானபோதிலும் அதனுள் மூன்று விசேஷித்த பாவங்களைச்செய்யும்படி அவரை ஏவினாள். அவர் தேவன்மேல் வைத்திருக்கும் நம்பிக்கையை விடவும், அவரைத் தூஷிக்கவும், தற்கொலை செய்யவும் ஏவினாள். இந்தப் பெரிய வேலைக்கென்றுதான் சாத்தான் இவளை மாத்திரம் உயிரோடு வைத்திருக்கிறான் என்று தோன்றுகிறது. யோபு என்பவர் தனிமையாய் மாத்திரமிருந்தால் விழமாட்டார் என்று எண்ணி அவருடைய மனைவியைக் கொல்லாமல் விட்டிருக்கலாம். பிசாசு பழைய திருடனல்லவா! அவன் பழைய பாம்பாகிய வல்லசர்ப்பமல்லவா! ஆதலால் ஆதி ஆதாமைக் கெடுத்த சாஸ்திரத்தைக் கையாடினால்தான் யோபு என்பவர் கீழே விழுந்துபோவார் என்று நினைத்துக்கொண்டான். இம்மட்டும் யோபுக்குப் பணிவிடை செய்த மனைவி, இன்று தன் உத்தியோகத்தை பசாசின் வேலைக்கென்று ஒப்புக்கொடுத்தாள். பொறுமை பக்தன் அந்த வார்த்தைகளால் அசையவுமில்லை; அவர் தமது நேசமனைவி, தேவச்செயலின் அந்தரங்கங்களை அறியாமல் பேசுகிறாள் என்று நன்றாய் அறிந்து அவளை நோக்கி: 'நீ பைத்தியக்காரி பேசுகிறது போல பேசுகிறாய், தேவன் கையிலே நன்மையைப் பெற்ற நாம் தீமையையும் பெறவேண்டாமோ' என்றார். சாத்தானே, நீ இந்த வார்த்தைகளால் வெட்கப்பட வேண்டியதில்லையா? இனி நீ பொறுமை பக்தர்பேரில் குறைகூறத் துணிந்து தேவ சமுகம்போக முகம் வருமா? நீ கல்தேயருக்குள் புகுந்து கெடுத்தாய், அவர் அசையவில்லை; சபேயரைக் கொண்டு சம்பிரதாயம் பண்ணினாய், அது பலிக்கவில்லை; மின்னலோடும் காற்றோடும் கலந்து கெடுத்தாய், ஆனாலும்

காரியம் வாய்க்கவில்லை; பொருளை அழித்துப் பிள்ளைகளைக் கொன்றாய், அப்படியிருந்தும் அவர் புரண்டுபோகவில்லை; அவருடைய எலும்பையும், நரம்பையும், மாம்சத்தையும், தோலையும் அழுகப் பண்ணினாய், ஆனால் அவருடைய பக்தி அதமாகவில்லை; அவருடைய மனைவியைக்கொண்டு கெடுக்கப் பார்த்தாய், இதோ அதின் முடிவையும் நீயே காண்கிறாய்; நீ கல்தேயரைக்கொண்டும், சபேயரைக்கொண்டும், சுழல் காற்றைக்கொண்டும், அக்கினியைக்கொண்டும், மக்களைக்கொன்றும், மாமிசத்தைத் தின்றும், மனைவியைத் தூண்டி விட்டும் ஆக ஏழு விதமாய்ப் பூரணமாகப் பரிசோதித்தாயிற்று. இதோ! அவர் பொன்குகையில் ஏழு தரம் புடமிடப்பட்ட சுத்த பொன் பக்தனாய் விளங்குகிறார்; இனி அப்பாலே போ சாத்தானே! தேவனுடைய பிள்ளைகளைத் துன்பப் படுத்துகிறதை விட்டு ஓயமாட்டாயா?

இவைகளில் எல்லாவற்றிலும் யோபு தன் உதடுகளால் பாவஞ்செய்யவில்லை. துன்பப் படுகிறவர்களெல்லாருக்கும் யோபு நல்ல திருஷ்டாந்தரமாயிருக்கிறார். அவருடைய முன் மாதிரியைக் கவனித்து எப்பொழுதும் தேவன்பேரில் நம்பிக்கையா யிருக்கவேண்டியது.

சிநேகிதர் பருவம்

யோபு என்பவர் சாத்தான் வைத்த ஏழுவகைக் கண்ணிகளுக்கும் தப்புவித்துக்கொண்டாலும் அம்மட்டோடு சாத்தான் அவரை விடவில்லை. எட்டாத பக்தனாகிய யோபு தன் எட்டாம் பிரயத்தனத்தால் விழுந்துபோனாலும் போகலாமென்று சாத்தான் எண்ணினான். சமீபத்திலிருக்கிறவர்களைக்கொண்டு நாம் யோபை விழத்தட்டல் கூடாது; தூரத்திலிருக்கிற அவன் சிநேகிதரைக்கொண்டு அவன் மனதை விளையாடவிட்டு, விளையாட்டோடு விளையாட்டாய் அவன் விசுவாசக்காலைத் தட்டி கீழே கிடத்தி மேற்கொள்ள வேண்டுமென்று கருதினான். யோபு என்பவருக்குப் பல சிநேகிதர் இருந்தபோதிலும் அதில் மூவர் மகா பிராணபட்சமுடையவர்களாயிருந்தார்கள். அம்மூவருக்கும் முறையே எலிப்பாஸ், பில்தாத்து, சோப்பார் என்று பெயர். இம் மூவரும் சாதாரண குடித்தனக்காரராயிராமல் அரசு

செலுத்தி வந்த மன்னராயிருந்தார்கள்.[1] பொறுமை பக்தருக்கு நேரிட்ட பல கஷ்ட நஷ்டங்களையெல்லாம் அவர்கள் கேள்விப்பட்டு அவருக்காக பரிதபிக்கவும், ஆறுதல் சொல்லவும் ஒருவரோடொருவர் ஆலோசனை பண்ணிக்கொண்டு தங்கள் ராஜதானியிலிருந்து புறப்பட்டு வந்தார்கள்.

இவர்கள் வருகிற நேரத்தில் யோபு என்பவர் தமது குப்பை மேட்டில் வசித்து, ஓடுகளால் தம்மைச் சுறண்டி, தன் இரணங்களின் வேதனை பொறுக்கமாட்டாமல் ஓலமிட்டுக் கொண்டிருந்தார். முன் அவரைப் பட்டு வஸ்திரத்தோடும், பவுசோடும் கண்ட கண்ணுக்கு இது பிரமிப்பாயிருக்குமல்லவா! அவரை இன்னாரென்று இனமறியக்கூடாதபடி அவ்வளவு மாறுதல் அவருடைய தேகத்திலிருந்தது. வந்த அரசர் மூவரும் அவரைத் தமது வீட்டில்தானிருப்பாரென்று உத்தேசித்திருக்கலாம்; அவர் வீட்டிலல்ல குப்பை மேட்டில் இருக்கிறார் என்று கேள்விப்பட்டவுடனே அவ்விடம் போனார்கள். தூரத்தில் வரும்போதே வழிகாட்டின ஆள் அதோ பாருங்கள்! குப்பை மேட்டில் அவர்தான், அதோ பாருங்கள்! என்று சொல்லியிருப்பான். அவர்கள் தூரத்தில் வருகையில் தங்கள் கண்களை ஏறெடுத்துப் பார்த்து, அவருடைய உருமாறி, அந்தங்கெட்டு அலங்கோலமாயிருக்கிறதைக் கண்ணுற்று ஆருத்துயரத்தால் மூழ்கி சத்தமிட்டு அலறி, அவரவர் தங்கள் சால்வையைக் கிழித்துக் கொண்டு, வானத்தைப் பார்த்து தேவ நடத்துதலைப்பற்றி ஆச்சரியப்பட்டு பயமடைந்து, தங்கள் தலைமேல் புழுதியைத் தூற்றிக்கொண்டு, பேச வாயெழும்பாமல் பிரமித்து அவருடைய சமீபத்தில் மண்திண்டுபோல் உட்கார்ந்திருந்தார்கள். முதலாம் நாள் மாத்திரமல்ல, ஏழுநாளும் அவர்கள் அடிக்கடி வந்து அவர் சமீபத்தில் உட்கார்ந்து ஒன்றும் பேசாமல் எழுந்திருந்து போனார்கள். அவர்களைக் கண்டது யோபுக்கு ஆறுதலாயிருந்தும் அவர்கள் மௌனம் சாதித்திருந்தது வேதனையை விருத்தி பண்ணுகிறதுபோலிருந்தது. இவர்கள் மூவரும் கூடி வந்ததும், தங்கள் நேசத்தைக்

---

[1] செப்த்ரியூஜென்ற் திருப்புதலில் இம்மூவரும் ராஜாக்கள் என்று கண்டிருக்கிறது.

காட்டினதும், குப்பைமேட்டில் உட்கார்ந்ததும், சால்வையைக்கிழித்துக்கொண்டதும், புழுதியைப் போட்டுக்கொண்டதும், புலம்பினதுமெல்லாம் நன்ருயிருக்கிறது. ஆனுல் இவர்கள் பேசாமலிருந்தது மற்ற நல்ல செய்கைகளையெல்லாம் கெடுத்துவிடுகிறது. இவர்கள் முனிவரின் சங்கடங்களைப் பார்த்து பரிதபிக்க மாத்திரம் வராமல் ஆறுதல் சொல்லவும் வந்தார்கள். ஆனுல் ஏழு நாள் மட்டும் யாதொரு ஆறுதலையும் சொல்லவில்லை. அவர்கள் ஆறுதலளிக்கும் முறைதெரியாத தேற்றரவாளரும் மருந்து முறையும் வியாதியின் தன்மையும் அறியாத வைத்தியருமாயிருந்தார்கள். இப்படிப்பட்டவர்கள் ஏன்தான் வரவேண்டும்! அவரவர் வீட்டில் இருந்துவிடக்கூடாதா? உபத்திரவப்படுகிறவர்களுக்காக பரிதபிக்கிறது மாத்திரம் போதாது, அவர்களுக்கு ஆறுதல்சொல்லவும் மறக்கலாகாது.

யோபின் சிநேகிதர் மௌன சாதனையாயிருந்தது அவருக்குண்டான சோதனைகளிலெல்லாவற்றிலும் பலத்த சோதனையாயிருந்தது. இதை நாம் சாதாரண பிரமிப்பு, ஆச்சரியம், மட்டுமிஞ்சின துக்கம் என்று கழித்து விடுவோம். ஆனுல் இந்த மௌனத்தில் சாத்தான் இருந்தான். சிநேகிதரின் மௌனம் முனிவரின் பொறுமை கோட்டையை உடைக்கும் பலத்த இயந்திரமாக பசாசு கையாடினுன். யோபின் அவதிகளைக் கண்டவுடனே அவரைப் பற்றியிருந்த மதிப்பும் அவருடைய பக்தியைப் பற்றியிருந்த எண்ணமும் எல்லாம் மாறிப்போயிற்று. அவர்கள் அவரைப் பார்க்கப் பார்க்க தேவன் தம்மை உறுதியாய்ப் பின்பற்றும் பக்தனை இப்படி நடத்தவே மாட்டார் என்றும், இவர் மாய்மால பக்தியால் இவ்வளவு காலமும் வேஷம் போட்டிருக்கிருர் என்றும் எண்ணிக்கொண்டார்கள். உத்தமரை மாயக்காரராக எண்ணும்படியான மனதை எழுப்பி விடுவது சாத்தானுடைய சம்பிரதாயங்களில் ஒன்று. உத்தமனை மாயக்காரனுக எண்ணும்படி செய்துவிட்டால் மாயக்காரன் உத்தமனுகிறது கூடுமா? யோபு என்பவர் சுத்த பக்தனல்ல, மாயக்காரனென்றும் அவருக்குண்டான சங்கடங்கள் விசுவாச பரீட்சையல்ல, தேவ கோபாக்கினியின் சுவாலைகள்

என்றும் அந்த சிநேகிதருக்கு உணர்த்திவிட்டதுதான் அவர் சகிக்கக்கூடாத பெருந் துன்பமாயிருந்தது.

இப்படியே அந்த மூன்று சிநேகிதர் மௌனமாயிருந்த ஏழு நாட்களுக்குப் பின்பு முனிவரின் வார்த்தையிலும் மனதிலும் கொஞ்சம் பேதம் காணப்பட்டது. ஆனால் அந்த பேதம் சாத்தான் நினைத்த பேதமாயிராமல் பக்தரின் மாம்ச பெலவீனத்தால் வேளாவேளை உண்டாகும் பேதமாய் மாத்திரமிருந்தது. சாத்தான் தேவனோடு இரண்டு தடவையிலும் கூறின சபதமெல்லாம் யோபு 'உமது முகத்துக்கு எதிரே உம்மைத் தூஷிக்கானோ, பாரும்' என்பதுதான். இந்த சபதத்தின்படி யோபு கடவுளைத் தூஷிக்கவே இல்லை; ஆதலால் சாத்தான் யோபோடு போர் செய்ய கச்சை கட்டினதில் தோற்றேபோனான். ஏழாம் நாளில் யோபு தன் வாயைத் திறந்து, தான் பிறந்த நாளைச் சபித்தார். ஆனால் நாம் முன் சொல்லிய வண்ணம் தன்னைப் பிறப்பித்து காத்தாண்டு வந்த கருணைம்பர கடவுளைப் பற்றி அவர் யாதொரு தூஷணமான வார்த்தைகளையும் பேசவே இல்லை. அந்தக் காலத்தில் நட்சத்திரங்கள் மூலமாய் பலாபலன்களைக் கணிக்கிறதும், தங்களுக்குண்டாகும் லாப நஷ்டங்களுக்கு நட்சத்திரங்களே காரணமென்று எண்ணிக்கொள்வதும் வழக்கமாயிருக்கலாம். யோபு என்பவர் தான் பிறந்த நாளைச் சபித்ததெல்லாங்கூடி, இந்த தேசத்திலுள்ள நமது ஹிந்துக்கள் தங்களுக்குண்டான ஆபத்துக்களை மற்றவர்களுக்குச் சொல்லி ஆறும்பொழுது, இதெல்லாம் நான் பிறந்த நட்சத்திர பலன்தான், என் வேளைக்கூறு இவ்வண்ணமானேன், என் கிரகலக்கணம் என்னை இப்படி ஆக்கிவிட்டது. என்று பலவாறு சொல்லுகிற பாவனையேயன்றி வேறல்ல. ஒரு வேளை முனிவர் தமது பிறந்த நாளைப்பற்றி இவ்வளவு கசப்பாய்பேசும்படி, அன்றையத்தினம் அவருடைய பிறந்தநாளாயிருந்திருக்கலாம். அவர் பிறந்த நாளில் பலரும் வந்து முன் வருஷங்களில் இப்படிப்பட்ட நாளில் அவர் வீட்டிலிருந்த வாழ்வுகளை எடுத்துச்சொல்லி நினைப்பூட்டியிருக்கலாம். இனிமேல் அந்த பிறந்தநாளைக்கொண்டாடுவதேது, பழைய பவுசேது என்று அவர் மனங் கசந்திருக்கலாம். எப்படியும் அவர் மனதில் அச்சமயத்தில் கொஞ்சம் மாறுதலிருந்ததென்

பது மெய்தான். அந்த மாறுதல் சரீரநோயின் வேதனையா லுண்டானதேயன்றி ஆத்தும பக்தியின் குறைவினாலாவது, ஆண்டவர்பேரில் வைத்திருந்த பற்றுதலின் தாழ்வினா லாவது உண்டானதில்லையென்பது தெளிவாயிருக்கிறது.

நாம் அச்சமயத்தில் அவர் பேசின வார்த்தைகளை நுட்ப மாய் அறிய இப்பொழுது கவலைப்படாமல் அதினாலுண் டான சிநேகிதரின் சம்பாஷணையைப்பற்றி மாத்திரம் கவனித்துக்கொண்டு போகிறது நல்லது. முனிவர் வாய் திறந்தவுடனே அந்த மூன்று சிநேகிதரும் தங்கள் வாயைத் திறக்க ஆரம்பித்து அவரையே குற்றப்படுத்தப் பார்த்தார் கள். அவர்கள் மனதில் உத்தம பக்தனுக்கு இவ்வளவு நீசு நிலைமையும் உயர்விலிருந்து திடீரென்று இவ்வளவு தாழ்வும் நேரிடவே மாட்டாதென்று உத்தேசித்து, யோபு தங்களைப் போல் ஒரு அதிபதியாய் இருந்ததால் பல துன்மார்க்கங் களைச் செய்திருக்கலாமென்று நினைத்து குற்றஞ்சாட்டிப் பேசினார்கள். 'உம்முடைய பொல்லாப்பும் உம்முடைய அக்கிரமங்களும் முடிவில்லாததுமா யிருக்கிறதல்லவோ' என்று சொல்லி அவர் அடகுவாங்கி, ஏழைகளுடைய வஸ்திரங்களைப் பிடுங்கி, பசித்தவனுக்கு ஆகாரங்கொடாமல் படுசண்டாளனாயிருந்ததாகச் சொன்னார்கள். அவர்களும் யோபைப்போல் அரசு செலுத்திவந்ததால் தாங்கள் எப்படிச் செய்து வந்தார்களோ அப்படியும் அதற்கு மிஞ்சியும் அவர் நடந்திருக்கலாமென்று எண்ணிக்கொண்டார்கள். 'தான் கள்ளன், பிறரை நம்பான்' என்றொரு பழமொழி உண்டல் லவா?

யோபு என்பவர் தமதுமேல் அநியாயமாய்ச் சாட்டப் பட்ட குற்றங்களை மறுத்து 'நான் துன்மார்க்கனல்ல என் நடைகள் வழியைவிட்டு விலகினதும், என் இருதயம் என் கண்களைப் பின்தொடர்ந்ததும், ஏதாகிலும் ஒரு மாசு என் கையில் ஒட்டிக்கொண்டதும் உண்டானால், அப்பொழுது நான் விதைத்ததை வேறொருவன் புசிப் பானாக,' 'நான் மீறுதல் இல்லாத சுத்தன், நான் குற்றமற்ற வன், என்னில் அக்கிரமம் இல்லை,' 'என் கால்கள் அவர் அடிகளைப் பற்றிப்பிடித்தது; அவருடைய நெறியைவிட்டு

நான் சாயாமல் அதைக் கைக்கொண்டேன்; அவர் உதடுகளின் கற்பனைகளைவிட்டு நான் பின்வாங்குவதில்லை,' 'என் நீதியைக் கெட்டியாய்ப் பிடித்திருக்கிறேன்; அதை நான் விட்டுவிடேன்' என்று இப்படிப் பல வாசகங்களைப் பேசி தமது சிநேகிதரைக் கண்டித்தார்.[1] இந்த வாசகங்களில் சில பெருமையும் தற்பொழிவும் ஆணவமும் உள்ள கருத்துகளாகக் காணப்படலாம்; அப்படியல்ல; இந்த வார்த்தைகள் பேசப்பட்ட சமயத்தையும் அந்தச் சமயத்தில் அவர் அநுபவித்த நீசநிலைமையையும் கவனிக்குங்காலத்தில் இது ஆணவத்தைக் காட்ட அல்ல, ஆண்டவர்மேலுள்ள பற்றுசையின் நிச்சயத்தைக் காட்ட உணர்த்தப்படுகின்றன என்றே எண்ணவேண்டியது. புண்களால் நொந்து சீழால் நாறி குப்பையில் புரண்டுகிடக்கிற முனிவருக்கு கர்வம் நெஞ்சில் வருமா? இல்லை. இது தேவதாபக்தியின் சுவாலையின் அனலேயன்றி மாம்ச சிந்தையின் நாற்றமல்ல.

இவ்வளவாய் அவர் தமது தேவதாபற்றுதலை உயர்த்திப் பேசினபோதிலும் தன் பாவ இருதயத்தை உணர்ந்து கொள்ளாதவரா யிருக்கவில்லை. அவர் அடிக்கடி அவைகளைச் சிந்தித்து அறிக்கையிட்டார். ஒருதரம் முனிவர் 'மன்னுயிரைக் காப்பவரே, பாவஞ்செய்தேனானால் உமக்கு நான் செய்யவேண்டியதென்ன?' என்று அழுதார். இன்னொருதரம் 'நான் நீதிமானாயிருந்தாலும் அவரோடே வழக்காடாமல், என் நியாயாதிபதியினிடத்தில் இரக்கத்துக்குக் கெஞ்சுவேன்' என்று அறிக்கையிட்டார். வேறொரு தடவையில் 'அவர் தமது மிலாற்றை என்னைவிட்டு அகற்றுவாராக; அவருடைய பயங்கரம் என்னைக் கலங்கப்பண்ணாதிருப்பதாக; என் மீறுதலையும் என் பாவத்தையும் எனக்கு உணர்த்தும், நீர் உமது முகத்தை மறைத்து என்னை உமக்குப் பகைஞனாக எண்ணுவானேன்' என்று கெஞ்சினார் (யோபு 7:20; 9:15; 9:34; 23:3). தன்னை உணர்ந்து தாழ்த்திப் பேசின இந்த வாசகங்கள் பக்தி அனலால் தெளிந்துபேசின முந்தின அவருடைய வாசகங்களை உறுதிப்படுத்துகிறதாயிருக்கின்றன.

---

[1] யோபு 10:7; 31:7,8; 33:9; 23:11,12; 27:6.

பக்தரிடத்தில் விளங்கவேண்டிய பொறுமை, சாந்தம் என்னும் இலட்சணங்களில் இவர் சிறந்து பிரகாசித்தார். அவர் தமக்குண்டான சகல சங்கடங்களையும் சகித்துக் கொண்டு 'கர்த்தர் என்னைக் கொன்றுபோட்டாலும், அவர்மேல் நம்பிக்கையா யிருப்பேன்' என்றும், 'எனக்கு மாறுதல் எப்போது வருமென்று எனக்குக் குறிக்கப்பட்ட போராட்டத்தின் நாளெல்லாம் நான் காத்திருக்கிறேன்' என்றும், 'அவர் என்னைச் சோதித்தபின் நான் பொன்னாக விளங்குவேன்' என்றும் அறிக்கையிட்டிருக்கிறார் (யோபு 13:15; 14:14; 23:10). அவர் வியாதியின் கொடுமையால் பலதரம் வருத்தமான வார்த்தைகளைப் பேசினபோதிலும் அதெல்லாம் ஆவியின் பெலவீனத்தினால் அல்லவென்பதும், தேவன்பேரிலுள்ள எரிச்சலினாலும் வெறுப்பினாலும் அல்லவென்பதும் திட்டமாயிருக்கிறது. அவரைக் கண்டவர்களெல்லாரும் இனி இவருக்கு சாவுதானென்று தீர்மானிக்க வேண்டியதிருந்தாலும், அவரோ இவையனைத்தும் நலமாக மாறுங்காலம் இருக்கலாமென்ற எண்ணமுடையவரா யிருந்தார். ஒருவேளை மரணமடைந்துபோனாலும் உயிர்த்தெழுதலினால் நித்தியவாழ்வு கிடைக்குமென்று அவர் உறுதியாய் விசுவாசித்து அறிக்கையிட்டார். உயிர்த்தெழுதலைப்பற்றி அவர் கூறிய வாசகம் சர்வலோகத்தாருக்கும் சாவை ஜீவனாக மாற்றும் தேவாமிர்தம்போலிருக்கிறதென்று சொல்ல வேண்டியது. அந்த வாசகமாவது:—

> 'என் மீட்பர் உயிரோடிருக்கிறார் என்றும், அவர் கடைசிநாளில் பூமியின்மேல் நிற்பார் என்றும் நான் அறிந்திருக்கிறேன். இந்த என் தோல் முதலானவை அழுகிப்போனபின்பு, நான் என் மாம்சத்தில் இருந்து தேவனைப் பார்ப்பேன். அவரை நானே பார்ப்பேன்; அந்நிய கண்கள் அல்ல, என் கண்களே அவரைக் காணும்' என்பதே.

இந்த வாசகம் என்றைக்கும் நிலைக்கும்படி கருங்கல்லிலே உளி வெட்டுமாய் ஈய எழுத்துமாய்ப் பதிந்தால் நலமாயிருக்குமென்று இவரே சொல்லியிருக்கிறார். பூர்வகாலத்

தில் இவ்வுலக துன்பங்களால் அடிபட்டு வேதனையையும் நஷ்டத்தையும் அநுபவித்தவர்களுக்கு இந்த வாசகம் இன்பத்தைக்கொடுத்து மறுமையையும் உயிர்த்தெழுதலை யும் நினைப்பூட்டினதென்பதற்குச் சந்தேகமில்லை. ஆனால் இக்காலத்திலிருக்கிற நமக்கோ, அதிலும் அருமையான ஒரு பொன்னெழுத்து வாசகமுண்டு. அதாவது: 'நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன்' என்று நமது இரட்சகராகிய இயேசு கூறிய வாசகந்தான். இந்த பொன்னெழுத்து வாசகம் நமது உலக துன்பங்களை நாம் உடனே மறந்து, மறுமையின் வாழ்வையும் பாக்கியத்தையும் நமக்கு முன் வைக்கிறதுபோலிருக்கிறது.

பொறுமை பக்தரிடத்தில் விளங்கிய எல்லாச் சாந்தத் தோடும் பொறுமையோடுங்கூட தேவகரம் தன்னைத் தொட்டதென்றும், தாம் தேவனுடைய சிட்சையின் குகைக் குள்ளிருக்கிறேன் என்றும், தேவன் தம்மைத் தம்முடைய பகைஞரில் ஒருவனை நடத்துவதுபோல் நடத்துகிறாரென் றும் உணர்ந்துகொண்டு அந்த நடத்துதலை தூஷியாமலும் சபிக்காமலும் பொறுமையாய்ச் சகித்துவந்தார் (யோபு 6:4; 19:11; 23:15). இப்படிச் சொல்வதால் யோபு என் பவருடைய வார்த்தைகளில் யாதொரு பிசகு காணப் படவேயில்லை என்பது நமது கருத்தல்ல. ஆனால் அவ ருடைய வாசகங்கள் அவருக்குண்டான சரீர வேதனையின் தன்மையை நமக்கு நன்றாய்க் காட்டும் திருஷ்டாந்தங் களாய் இருக்கிறதேயன்றி, அவரிடத்தில் ஒரு காலத்தி லிருந்த தேவபக்தி முற்றிலுமாய் எடுபட்டுப்போனதா லுண்டாகிற வார்த்தைப்பாடுகளாக நாம் எடுத்துக்கொள் ளக்கூடாது. இதற்குமுன் நாம் கவனித்த நோவா, ஆபிரகாம் என்னும் பக்தரிடத்தில் சிலதாம் காணப்பட்ட குறைகள்போல் இவ்விஷயத்தில் இவரையும் குறைசொல்ல வேண்டியதாயிருக்கிறது. முற்றும் குறையிராத மனுஷ தேகி ஒருவர் மாத்திரம் உண்டு. அவர் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவே. அவர் ஒருவர்மாத்திரம் பாவம் இல்லாதவரும் பாவங்களுக்கு விலகினவருமா யிருக்கிறார்.

யோபு என்பவருடைய மனக்கலக்கத்துக்கு துன்பங்கள் மாத்திரம் காரணமாயிராமல் சாத்தானும் காரணமாயிருந்

தான். அவன் யோபுக்குள் பிரவேசிக்கவில்லையானாலும், அவருடைய சிநேகிதருடைய வாய்க்குள்ளிருந்துகொண்டு அவர்களுடைய நாவின் கட்கத்தின் வழியாய் அவருடைய நெஞ்சில் பாய அநேக குழப்பங்களை உண்டுபண்ணினதால் அவர் அந்தந்த சமயத்துக்கேற்றாப்போல பேச நேரிட்ட தென்று தோன்றுகிறது. இதினாலே யோபு குற்றவாளி யல்லவென்று சொல்லத்துணியாமல் இவ்வளவுக்கும் மூல காரணனும், ஏவும் கருவியும் சாத்தான்தான் என்று மாத் திரம் சொல்லப் பிரயாசப்படுகிறோம். உலகப் பிரகாரமாய் மிகுந்த உபத்திரவத்தையும் துன்பத்தையும் அநுபவிக்கிற ஒருவரும் தேவனால் கைவிடப்பட்டவர்களென்றும், அவ ருடைய ஆக்கினையைச் சுமக்கிறவர்களென்றும் ஒரு போதும் சாதித்துவிடக்கூடாது. யோபு என்பவர் சரித்திரம் அப்படிப்பட்ட எண்ணத்தை நம்மைவிட்டு மாற்றிவிட வேண்டியது. ஒருவிதமாய்ச் சொன்னால் ஒவ்வொரு கிறிஸ்தவனும் தன் ஆத்துமஸ்திதியில் பொறுமை பக்தர் பட்ட பாட்டுக்கு உடந்தைப்பட்டவன்தான். ஏனெனில், 'துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும், இப்பிரபஞ் சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும், வானமண்ட லத்துப் பொல்லாத ஆவிகளின் சேனையோடும் நமக்குப் போராட்டமுண்டு.' இந்தப் போராட்டத்தில் நாமிருக்கை யில் 'நாம் உலகத்துக்கும், தூதருக்கும், மனுஷருக்கும் வேடிக்கையாகிறோம்' என்று சொல்லத்தக்கதாகவே இருக் கிறது. எல்லாரும் நமது போர் எப்படி முடியுமென்று பார்த்துக்கொண்டே யிருக்கிறார்கள். நாமோ பின்வாங்கா மல், கர்த்தரிலும் அவருடைய மிகுந்த வல்லமையிலும் சத்துவங்கொண்டு போராடவேண்டியது. நமது போராட் டம் பிராண அபாயம்போல் காணப்பட்டபோதிலும் என் றென்றைக்கும் நீடித்திராமல் சீக்கிரத்தில் ஜெயமாகும். ஏனெனில் சமாதானத்தின் தேவன் சீக்கிரமாய் சாத்தானை நமது கால்களின்கீழ் நசுக்கிப்போடுவார்.

புதுவாழ்வு பருவம்

பொறுமை பக்தர் படாதபாடெல்லாம்பட்டு பல நாட் களைக் கழிக்கவேண்டியதிருந்தபோதிலும் தேவனுடைய

கிருபாகரம் அவர்மேல் வைக்கப்பட்டிருந்தது. சாத்தான் தன் பிரயாசத்தால் என்னென்ன முடிவைக் கருதியிருந்த போதிலும் தேவன் இந்தப் பிரயத்தனத்தால் யோபுக்கு லாபத்தையும் தமக்கு மகிமையையும் மற்ற மனுஷருக்குப் போதனையையும் கருதியிருந்தார். கர்த்தர் எப்போதும் நீதிபரர். அவர் தம்மைநோக்கி இரவும் பகலும் கூப்பிட்டுக் கொண்டிருக்கிற பிள்ளைகளுக்குச் செவிகொடாமலிருப் பாரா? சீக்கிரத்தில் செவிகொடுத்தார். யோபின் மூன்று சிநேகிதர் அவருடைய குற்றத்தை எடுத்துக்காட்டி வாதாடி விடாய்த்துப்போன பின்பு எலியூ என்னும் பேருடைய ஒரு ஞானிவந்து இருபட்சத்தாரையும் குற்றஞ்சாட்டி, யோபு என்பவர் மனம் பதைத்துப் பேசின வார்த்தைகளை தப்பென்று கண்டித்து உணர்த்தினான். ஆனால் அவன் முந்தின மூவரைப்போல் முனிவரின் பக்தியெல்லாம் மாய்மால பக்தியாயிருந்ததென்று சொல்லவே இல்லை. கடைசியாக கிருபையுள்ள தேவனே பிரசன்னமாகித் தமது தீர்மானங்களை விளம்பினார். ஆனால் முதலாவது முனிவ ரிடத்தில் காணப்பட்ட பிசகுகளைக் கண்டித்துணர்த்த அவா பின்வாங்கவில்லை. அவர் யோபைக் குற்றவாளியாகத் தமக்குமுன் நிறுத்தி அவர் பேசின தகாத வாசகங்களுக்கு நியாயஞ்சொல்லும்படி பிடித்தார். பெருங்காற்றே தேவ னுடைய பிரசன்ன ஸ்தானமாயிருந்தது (யோபு 38:1,யு). இப்படிப்பட்ட பிரசன்னம் கிட்டினால் நமது வழக்கை யெல்லாம் முகமுகமாய்த் தெளிவித்துச் சொல்லலாமே யென்று யோபு அடிக்கடி ஆசித்தார்; ஆனால் அவர் தரிசன மானபோது திடுக்கிடுகலக்கமானார். பாவிகள் அடிக்கடி தேவனை நேரே தரிசித்து இன்னின்னபடி கேட்கலாம் என்று ஆசிப்பார்கள். பரிசுத்தவான்கள் தேவசமுகத்தால் அஞ்சி அருண்டு நிற்கையில் துன்மார்க்கருக்கு நிலையேது? பரிசுத்தவான்களும் பராபரனுடைய சமுகத்தில் பைத்தி யக்காரர்போல் நிற்கவேண்டியதல்லவா?

இச்சமயத்தில் தேவன் பேசின வார்த்தைகள் மகா பய பக்தியுள்ளவைகளாயிருந்தன. யோபின் வாய் அடங்கவும், அவன் சத்தம் தாழவும் அவர் தமது மகிமைப்பிரஸ்தா பங்களையும், சிருஷ்டி பராக்கிரமங்களையும், ஞானசமுத்திரக்

கோஷ்டங்களையும், சங்காரபலத்தையும், ஆளும் தத்துவங்களையும் எடுப்பாய் எடுத்துக் கூறினார். ஆ! அவருடைய ஆளுகை மகத்துவத்தின் எத்தனையோ கோடி பங்கில் ஒன்றை மாத்திரம் நாம் காண்கிறவர்களாயிருக்கிறோம். அந்தக் கொஞ்சத்தையும் நாம் சரியாய் உணர்ந்துகொள்ளுகிறதுண்டானால் நமது அறியாமையும், பலவீனமும் தெளிவாய்த் தெரிந்துபோம். நாம் தேவச் செயல்களின் பூரணங்களை அறியாதவர்களானதால் அதை ஒருக்காலும் பழுதுகூறக்கூடாது. பரி. பவுல் இப்படிப்பட்டவர்களுக்கு ஏற்ற உணர்வுண்டாக, 'மனுஷனே! தேவனோடு எதிர்த்து தர்க்கிக்கிற நீ யார்? உருவாக்கப்பட்ட வஸ்து உருவாக்கினவனை நோக்கி, நீ என்னை ஏன் இப்படி உண்டாக்கினாய் என்று சொல்லலாமா' என்று கேட்கிறார்.

சர்வ வல்லவருக்கு முன்பாக யோபுக்குப் பேசவாயுண்டா? இல்லை. அவர் தேவனுடைய செயலின் அந்தரங்கங்களையெல்லாம் கேட்டுப்போட்டு, தன்னைக் காரியமறியாத மூடன் என்று ஒத்துக்கொண்டு வெட்கத்தால் மூடப்பட்டு, தன் குற்றத்தை அறிக்கையிட்டு, 'இதோ நான் நீசன்; நான் உமக்கு என்ன மறு உத்தரவு சொல்லுவேன்; என் கையினால் என் வாயைப் பொத்திக்கொள்ளுகிறேன். நான் இரண்டொருதரம் பேசினேன்; இனி நான் பிரதியுத்தரம் கொடாமலும் பேசாமலும் இருப்பேன்' என்று சொல்லி சும்மாயிருந்தார் (யோபு 40:4,5). இது பாவி பிழைக்கும் புத்திதான். நாம் ஒவ்வொருவரும் தேவனுடைய பாதத்தின் கீழ் அடிபணிந்து வாய்பொத்தி, கேட்கிறேன் என்றே சொல்லவேண்டியது.

அம்மட்டோடே தேவன் நிறுத்திவிடவில்லை; யோபுக்குத் தமது மகத்துவம் முழுவதும் விளங்குகிறதால் அவர் என்றென்றைக்கும் போதனையடைந்துகொள்ளும்படி தேவன் தம்முடைய வல்லமைகளையும், சிறந்த மகிமைப் பிரஸ்தாபங்களையும் சொல்லும்படி ஆரம்பித்தார். அந்த மகிமைகளைக் கேட்கிறவன் நடுநடுங்கவேண்டியது. அவரே பூமியை அஸ்திபாரப்படுத்தினார்; சமுத்திரங்களுக்கு எல்லை குறித்து, அதில் ஆழங்களைக் கதவால் அடைத்திருக்கிறார்.

வானத்துக்கும் பூமிக்கும் மத்தியிலுள்ள மைதானத்தை வெண் மேகத்தாலும் கரும்புனலாலும் மறைத்திருக்கிறார்; உறைந்த மழைக்கும், அக்கினிக்கும், காற்றுக்கும், பெரு மழைக்கும் அவரிடம் பண்டகசாலையுண்டு; அந்தரலோகத்தி லுள்ள கிரகலோகங்களையெல்லாம் வழிநடத்துகிறார். மலை வனங்களிலுள்ள ஆடுகள், மான்கள், காட்டுக்கழுதைகள், காண்டா மிருகங்கள் இவைகளினால் விளங்கும் அவருடைய மகிமைகள் அனந்தமுண்டு. வனங்களிலுள்ள நீக்குருவி, நாரை, டேகை, கழுகு, மயில், அன்னம், மாடப்புரு முதலிய பட்சிஜாதிகளால் விளங்கும் அவருடைய மகிமை களை மெய்யாகவே ஆராய்ந்துமுடியாது. இவை அனைத்தை யும் கவனிக்கிற ஒவ்வொருவனும் நமது தேவனைப்போல் பெரிய தேவன் யார்? வல்லமைகளைச்செய்கிற தேவனைப் போல் பெரிய தேவன் யார்? என்று அறிக்கையிடவேண்டிய தாயிருக்கிறது.

இவையனைத்தையும் யோபு கேட்டு நடுங்கி தன் மனதைத் தாழ்த்தி உத்தம நெஞ்சோடு 'தேவரீர் சகலத்தையும் செய்ய வல்லவர்; நீர் செய்ய நினைத்தது தடைபடாது என்பதை அறிந்திருக்கிறேன்... நான் எனக்குத் தெரியாததையும், என் புத்திக்கு எட்டாததையும், நான் அறியாததையும் அலப்பினேன்' என்று சொல்லி பச்சாத்தாபப்பட்டதோடு, இம்மட்டும் 'நான் என் காதினால் உம்மைக் குறித்து கேள்விப் பட்டேன்; இப்பொழுதோ என் கண் உம்மைக் காண்கிறது. ஆகையால் நான் என்னை அருவருத்து தூளிலும் சாம்பலிலு மிருந்து மனஸ்தாபப்படுகிறேன்' என்று அறிக்கையிட்டார். இவ்வண்ணமாய் பொறுமைபக்தர் துன்பத்தால் சற்று நோய்கொண்டதுபோல் காணப்பட்ட தமது உள்ளத்தைப் பழையபடி சொஸ்தப்படுத்திக்கொண்டு பரமானந்தமடைந் தார். இதில் நமக்கு நல்ல படிப்பினையுண்டு. தன் ஜீவிய சம்பவங்களில் தேவ நடத்துதல்களைப்பற்றி கண்டபடி சிந்தித்து மனதை வருத்தப்படுத்துங்காலமட்டும் அதில் ஆறுதலிராது. ஆனால், எல்லாம் உமது திருச்செயல் அப்பனே! உமது சித்தப்படி என்னை நடத்திக் கடைசியில் மோட்சத்தைத் தாரும் என்று தாழவிழுகிற தாசருக்கு உடனே மனச் சமாதானமாகிய ஆரோக்கியமுண்டாகும்.

'தேவன் பெருமையுள்ளவர்களுக்கு எதிர்த்துநிற்கிறார், தாழ்மையுள்ளவர்களுக்குக் கிருபையளிக்கிறார்' என்று சத்தியசாஸ்திரம் அறிவிக்கிறது.

யோபு என்பவர் தமது இருதயத்தை தேவன்பேரில் பூரணமாய்ச் சாட்டினபின்பு அவரே முனிவருக்குச் சகாயராய் எழுந்தருளினார். அவர் தமது தாசனுடன் பேசுகிறதை விட்டுப்போட்டு யோபைத் தங்களுடைய சம்பாஷணையினால் கெடுத்துக் குற்றஞ்சாட்டின மூன்று சிநேகிதருக்கு விரோதமாய் எழும்பி அவர்களைக் கண்டித்து, என் தாசனாகிய யோபு பேசினதுபோல் நீங்கள் என்னைக்குறித்து நிதானமாய்ப் பேசவில்லை என்று குற்றஞ்சுமத்தி, பொறுமை பக்தரை அவர்களுக்கு ஆசாரியனாக ஏற்படுத்தி, அம்மூவருடைய குற்றம்போக்கும் பலியாக ஏழு காளைகளையும், ஏழு ஆட்டுக்கடாக்களையும் தகனபலியிடும்படி கட்டளையிட்டார். அக்கட்டளையின்படியே யோபு அவர்களுக்காக பலியிட்டு, கர்த்தாவே, என் சிநேகிதரின் புத்தியீனத்தை மன்னியும் என்று மன்றாடினார். அப்படியே கர்த்தர் யோபின் மன்றாட்டைக் கேட்டு அவர்களுக்கு மன்னித்தார்.

இச்சமயத்தில் பொறுமைபக்தன் அக்கால வழக்கம்போல் குடும்ப ஆசாரியன் போட்டுக்கொள்ளும் விசேஷித்த பூசை உடையை உடுத்தியிருக்கலாம்; அவர் வெளிக்கு சுத்தமான பூசாரிபோல் உடுப்பினால் விளங்கினாலும், உடலில் காயமும், வீக்கமும், கொதிக்கிற இரணமுமான நோயாளியாகவே இருந்தார். பாவிகள் தங்கள் சகல பாவ அழுக்கோடும் தேவனுடைய பலிபீடத்துக்கு வரும்போது இயேசுகிறிஸ்துவின் நீதியங்கியால் மூடப்பட்டவர்களாய் பலியிட்டு பூசை செய்ய வேண்டியது. முனிவர் பலிசெலுத்திப் பணிந்து, தமது சிநேகிதருக்காக மன்றாடிக்கொண்டிருக்கும்போதே அவருடைய நோய் மாறிற்று. இதென்ன ஆச்சரியம்! இப்படிச் சம்பவித்ததுண்டா? உலக இயல்புக்கு இது ஆச்சரியந்தான்; தேவ வல்லமைக்கு இது சகஜமான காரியமாயிருக்கிறது. வல்லமைகளைச் செய்கிற பரம வைத்தியரே, உமக்கு ஸ்தோத்திரமுண்டாவதாக.

முனிவருக்குத் தீராத நோயிருந்ததே, அது தீர்ந்த முறையென்ன! அதின் மருந்தென்ன? சகல நோயாளிகளே, வாருங்கள்; சொல்லுகிறேன்.

'கர்த்தர் யோபின் முகத்தைப் பார்த்தார்.'

இதுதான் முனிவர்நோய்க்கு மருந்தும் முறையுமாய் இருந்தது; கடவுளின் திருமுக அருளே மருந்தாயிருக்கிறது. அவர் நமது ஆத்தும நோயிலாவது சரீர பிணியிலாவது கண்ணோக்குகிறதே முறையாயிருக்கிறது. ஆகையால் நோயாளிகளாகிய நாமெல்லாரும் 'கர்த்தாவே, உமது முகத்தின் வெளிச்சத்தை எங்கள்மேல் பிரகாசிக்கச்செய்யும்' என்று மன்றாடவேண்டியது. யோபின் முகத்தைப் பார்த்த தேவனே! என்னையும் பாரும், என் நோயையும் தீரும். முதலாவது பெருங்காற்றினின்று பேசின தேவன், அப்பால் பலியிலிருந்து எழும்பின ஜுவாலையின் நடுவிலிருந்தாராக்கும். அந்த ஜுவாலையின் காங்கை குணமளிக்கும் தேவ அருளின் காங்கையும் முனிவர்மேல் வீச அவர் ஆரோக்கியமானார்.

யோபு என்பவர் தேவசெயலைப்பற்றி தப்பான காரியங்களைப் பேசின தமது சிநேகிதருக்காக மன்றாடினார்; நாமும் நமது சிநேகிதருக்காக தேவனிடத்தில் மன்றாடும்படி மறக்கக்கூடாது. மற்றவர்களுக்காகவும் விசேஷமாய் நமது சத்துருக்களுக்காகவும் மன்றாடுவது நமக்கே ஆசிர்வாதமாய் முடியும். 'யோபு தமது சிநேகிதருக்காக மன்றாடினபோது கர்த்தர் அவன் சிறையிருப்பை மாற்றினார்' என்று வாசிக்கிறோம். அதுமுதல் சாத்தான் அவருடைய சமீபத்திலிருந்து விலகி வெட்கத்தோடு பாதாளலோகம் போனான். பாதாளம்போன சாத்தான் அங்கே என்ன சொல்லுவான்? யோபே கெலித்தான், யோபே கெலித்தான் என்று தான் வாயிலடித்துக் கொள்ளுவான். வேறு வார்த்தைக்கு எங்கே இடமிருக்கிறது!

பொறுமைபக்தர் தமக்குண்டான துன்பங்களையெல்லாம் பொறுமையோடு சகித்து முடிவுபரியந்தம் தமது பக்தியின் உத்தமத்தில் நிலைத்திருந்தபடியால் கர்த்தர் அவரை முன்னிலும் இரண்டுபங்கு அதிகமாய் ஆசீர்வதித்தார். அவருடைய

இன பந்துக்களும் சிநேகிதரும் இந்த அதிசய சுகத்தைக் கேள்விப்பட்டு, தங்கக்காசுகளோடும் பொன் ஆபரணங்க ளோடும் வந்து அவைகளை அவருக்கு வெகுமதிபண்ணி மங்களங்கூறினார்கள். அவருடைய மந்தையும் முன்னிலும் இருமடங்கு அதிகமாயிற்று. ஒருவேளை அவரைக் கொள்ளை யடித்த சபேயரும் கல்தேயரும் அவரிடத்தில் விளங்கிய தேவதயவை உணர்ந்து பயந்து, தாங்கள் முன் கொள்ளை யடித்துப்போன மந்தையனைத்தையும் அவைகளின் குட்டி களோடு திருப்பக் கொடுத்திருக்கலாம்; அதோடு இனமாக வந்த பல மிருக ஜீவன்களும் சேர்ந்து முன்னிலும் இரு மடங்காய் இருந்தது. ஆகவே அவருக்கு கடைசியில் பதினாயிரம் ஆடுகளும், ஆறாயிரம் ஒட்டகங்களும், ஆயிரம் கழுதைகளும், ஆயிரம் ஏர்மாடுகளுமிருந்தன. அவற்றோடு முன்போல ஏழு ஆண்குழந்தைகளையும் மூன்று பெண் குழந்தைகளையும் கடவுள் கடாட்சித்தார். பிள்ளைப்பாக்கிய மும் இருமடங்குதான் என்று சொல்லவேண்டியது. ஏனெ னில் முன்னே மாண்ட பத்துப் பிள்ளைகளும் தேவனிடத்தி லிருந்தார்கள். அவர்கள் ஆத்துமாவுக்கு அழிவில்லையே. அவர்களையும் இவர்களையும் சேர்த்தால் இருபது பிள்ளைக ளென்று சொல்லவேண்டியதல்லவா! கடவுளிடம் அடிபடு கிறது நல்லதல்லவா! அவர் ஓங்கும் பிரம்பைக் குனிந்து தாங்கிக் கும்பிட்டு நிற்கிறவன் குன்றிப்போகாமல் இரட்டை ஆசீர்வாதங்களாலும் பரிபூரண பலன்களாலும் நிரப்பி அனுப்பப்படுவான்.

யோபு என்பவருடைய பேர்பிரஸ்தாபமும், அவருடைய மன்றாட்டின் மேன்மையும் உலகத்தைவிட்டு எடுபட்டுப் போகவில்லை. அவருடைய பொறுமை என்றென்றைக்கும் மனுஷருக்கு முன்மாதிரிபோலிருக்கிறது. அவருடைய பேரை எசேக்கியேல் தீர்க்கன் நோவா, தானியேல் என்னும் பக்தரோடு சேர்த்துப் பேசியிருக்கிறார் (எசே. 14:14–20). அப்போஸ்தலர் காலத்திலும் யோபு என்பவருடைய பேர் அழிந்துபோகவில்லை. ஆதிக் கிறிஸ்தவர் துன்பத்தைச் சகித்துவரும்படியாக யோபு என்பவருடைய மாதிரியே தகுதி என்று யாக்கோபு அப்போஸ்தலன் கண்டு, ‘இதோ, பொறுமையாயிருக்கிறவர்களைப் பாக்கியவான்களென்

கிறேமே! யோபின் பொறுமையைக் குறித்து கேள்விப்பட் டிருக்கிறீர்கள், கர்த்தருடைய செயலின் முடிவையும் கண் டிருக்கிறீர்கள்' என்று சொல்லி ஏவியிருக்கிறார். அவர் ஜீவித்த காலம் சுமார் ஐயாயிரம் வருஷத்துக்கு முன்னிருந்த போதிலும் இன்றைக்கும் உயிரோடிருந்து சகலருக்கும் பொறுமையை உணர்த்துகிறதுபோலிருக்கிறது.

பொறுமை பக்தர் தமக்குண்டான துன்பம் ஓய்ந்து இன்பம் பிறந்தபின்பும் நூற்றுநாற்பது வருஷம் உயிரோ டிருந்து, நாலு தலைமுறையாக பேரன் பூட்டன் கண்டு பூரண வயதுள்ளவராய் பூலோக கெபிக்குள் புகுந்தார். அக்கெபிக்குள்ளிருக்கும் அழிவு என்னும் சிங்கம் அவரை விழுங்கிவிடுமா? இல்லை. ஏனெனில், அவருடைய மீட்பர் உயிரோடிருக்கிறார்; அவர் கடைசிநாளில் பூமியின்மேல் நிற்பார்; அவருடைய தோல் முதலானவை அழுகிப்போன பின்பு உயிர்த்தெழுந்து தமது மாம்சத்திலிருந்து தேவனைப் பார்ப்பார்; அந்நிய கண்களல்ல, அவருடைய கண்களே அவரைக் காணும். பொறுமை பக்தரைப்பற்றி வாசிக் கிறவனே! நீ அவரைப் பார்க்கவேண்டுமென்று ஆசைகொண் டிருந்தால் அவருடைய தேவபக்தியைப் பின்பற்றி நட; அப்பொழுது நீயும் மரணகாலத்தில் அவர் இருக்கிற இடத் தில் போய்க் கண்டு, இந்த வரலாறுகளையெல்லாம் பேசிக் கொள்ளலாம். ஆதலால் உன் உள்ளிந்திரியங்கள் சோர்ந்து போகவேண்டாம்.

ஏசாயா தீர்க்கதரிசி

தீர்க்கதரிசி என்ற பதம் பின் நடக்கப்போகிற காரியங்களை முந்தி அறிவிக்கிறவன் என்ற கருத்தை அடக்கியதாயிருக்கிறது. இப்படிப் பின்வரும் சம்பவங்களைக் குறிசொல்வதுபோல் கூறுவதுமாத்திரம் இவர்கள் தொழிலாயிராமல், தம்தம் காலத்து ஜனங்களின் ஆத்தும ஸ்திதிகளைக் கவனித்து அவர்கள் மெய்த் தேவனைவிட்டுப் பின்வாங்கவிடாமல் மனந்திரும்ப ஏவிக்கொண்டுவருவதும் அவர்கள் வேலையாயிருந்தது. இப்படிப்பட்ட தீர்க்கதரிசிகள் ஆதிமுதல் எழும்பினபோதிலும் சாமுவேலின் காலமுதல்தான் அது தேவபக்தியுள்ளோரின் சங்கிலிபோல வெளிக்குக் காணப்பட்டது. ஆதாம், ஏனோக்கு, நோவா, ஆபிரகாம், மோசே முதலியவர்கள் தங்கள் தங்கள் காலத்தின் தீர்க்கதரிசிகளாயிருந்தார்களென்பது மெய்யானாலும், சாமுவேலின் காலமுதல் உண்டான மார்க்கச் சீர்திருத்தமானது அதை நிலையும் தொடர்ச்சியுமான தேவ பணிவிடைபோல உலகத்துக்கு விளம்பரப்படுத்திற்றென்று சொல்லவேண்டியது. யூதர்கள் நாற்பத்தெட்டு ஆண் தீர்க்கதரிசிகளும், ஏழு பெண் தீர்க்கதரிசிகளும் உண்டென்று சொல்லிவந்தார்கள். அவர்கள் ஒவ்வொருவருடைய வரலாறும் நமக்குப் பூரணமாய்த் தெரியாது.

இப்பொழுது நாம் கவனிக்கப்போகும் ஏசாயாவின் சரித்திர வரலாறு அப்படிப்பட்ட ஒன்றுதான். இவர் உசியா, யோதாம், ஆகாஸ், எசேக்கியா என்னும் நாலு அரசர் காலத்திலிருந்து சுமார் அறுபது வருஷம் பல காரியங்களைக் குறித்தும் விபரமான தீர்க்கதரிசனங்களை உரைத்தபோதிலும் இவருடைய சுய சரித்திரத்தைக் குறித்து நமக்கு அதிகமாய் ஒன்றும் தெரியாதிருக்கிறது. இதினாலே நாம் உலகத்தில் பேர் பிரஸ்தாபமாயிருக்கிறவர்கள்தான்

பெரியவர்கள், பிரஸ்தாபமில்லாதவர்கள் தாழ்ந்தவர்கள் என்று பெரும்பாலும் எண்ணும் வீணை எண்ணம் தப்பிதம் என்று உணர்ந்துகொள்ளவேண்டியது. இவருடைய சரித்திர வரலாறுகளைப்பற்றி இரண்டொரு குறிப்புகள்மாத்திரம் நமக்குத் தெரிந்தபோதிலும் இவர் எழுதிய தீர்க்கதரிசன ஆகமத்தால் இவருடைய குணம், கல்வித்திறமை, தேவதா பக்தி, இரட்சண்ய விசுவாசம் ஆகிய விசேஷித்த காரியங்களைத் தெளிவாக அறிந்துகொள்ளுகிறோம்.

இவருடைய தகப்பனுருக்கு ஆமோத்ஸ் என்று பேர். இவர் ராஜகுடும்பத்தைச் சேர்ந்தவராயிருந்தாரென்றும், இவருடைய குமாரத்தியை மனுசே அரசன் விவாகஞ் செய்தாரென்றும் யூதருக்குள் ஒரு பாரம்பரை உண்டு. இவருடைய மனைவியும் தீர்க்கதரிசனம் உரைத்துவந்தாள் (ஏசா. 8:3). இவருக்கு இரண்டு குமாரர் இருந்தார்கள்; அவர்களில் ஒருவனுக்கு சேயார் யாசூப் என்றும், இன்னொருவருக்கு மகேர்-சாலால்-அஷ்-பாஸ் என்றும் பேர். சேயார் யாசூப் என்றால் மீதியானவர்கள் திரும்புவார்கள் என்றும், மகேர்-சாலால்-அஷ்-பாஸ் என்றால் கொள்ளைக்குக் கடுகி சூறைக்குத் தீவரிப்பான் என்றும் அர்த்தம். இவ்விருபேரும் யூதஜாதியின் பின்னிலைமையை உணர்த்தும் தீர்க்கதரிசனப் பேர்களாயிருந்தன. ஏசாயா எருசலேம் தேவாலயத்திற்குச் சமீபமான ஒரு வீட்டில் வாசம்பண்ணினர்.

இவர் தீர்க்கதரிசன அருள்பெற்றிருந்ததோடு கவி கட்டவும் நாளாகமங்களை எழுதவும் வல்லவராயிருந்தார். ஆதலால் அவர் கல்வியில் தேறிய தீர்க்கதரிசியாயும், கவிகட்டும் புலவனுயுமிருந்தார் என்று அவருடைய ஆகமமெங்கும் விளங்குகிறது. அவருடைய மன எழுச்சிகள் மற்றவர்கள் அதிசயப்படத்தக்க மேலான எழுச்சிகளாயிருந்தது. அவர் தம்முடைய காலத்திலிருந்த பாவத்தையும் சீர்கேட்டையும் ஒருதரம் உணர்த்தும்படி முயன்றபோது வானத்தையும் பூமியையும் நியாயாதிபதிகளாக வைத்து கடவுள் அவர்களிடத்தில் அபயமிட்டு பிரியாதுபண்ணும் வண்ணமாய் அதை எழுதியிருக்கிறார். அந்த வார்த்தைகளாவன. "வானங்களே கேளுங்கள், பூமியே செவிகொடு, கர்த்தர்

பேசுகிறார், நான் பிள்ளைகளை வளர்த்து ஆதரித்தேன், அவர்களோ எனக்கு விரோதமாகக் கலகம்பண்ணினார்கள். மாடு தன் எஜமானையும், கழுதை தன் ஆண்டவனின் முன்னணையையும் அறியும்; இஸ்ரவேலோ அறிவில்லாமலும், என் ஜனம் உணர்வில்லாமலும் இருக்கிறது என்கிறார்' என்பதே. இதினாலே கடவுளைவிட்டுப் பின்வாங்கிப்போகிற மனுஷருக்கு மாட்டுப் புத்தியிலும் கழுதைப் புத்தியிலும் தாழ்வான புத்தி மாத்திரம் இருக்கிறதென்பது தெரியவருகிறது. நம்முடைய தேசத்திலும் இலட்சக்கணக்கானபேர்கள் மெய்த் தேவனை இன்னம் அறியாமல் தேவனல்லாத கல், மண் முதலியவைகளால் செய்யப்பட்ட விக்கிரகங்களை நமஸ்கரித்து வருகிறார்களல்லவா! இந்த அநியாயத்தை நாமும் தீர்க்கதரிசியைப் போல் வானத்தையும் பூமியையும் கூப்பிட்டுச் சொல்ல வேண்டியதாகவே இருக்கிறது. இந்த தேச முழுவதிலும் மெய்த் தேவனை தொழுதுகொள்ளுங் காலத்தைக் கடவுள் சீக்கிரம் கட்டளையிடுவாராக.

இவர் காலத்திலிருந்த சீர்க்கேடுகளும் சன்மார்க்கக் கெடுதலும் இவ்வளவென்று சொல்லத் தேவை இல்லை. அவர்கள் ஜாதியனைத்தும் பாவமும் அவர்கள் சந்ததியனைத்தும் கேடுண்டாக்குகிற புத்திரருமாயிருந்து, விக்கிராகாராதனையைச் செய்துவந்தார்கள். அவர்கள் பிரபுக்கள் பெரியோர் எல்லாரும் பாவநோயால் வருந்தினார்கள்; பரிதானம், கள்ளவழக்கு, பொய், ஏழைகளை ஒடுக்குதல் முதலிய தீமைகள் அவர்களுக்குள் சாதாரணமாக நடந்துவந்தது. சோதோம் அழிக்கப்பட்ட காலத்திலிருந்த கேடெல்லாம் அக்காலத்தில் இஸ்ரவேல் ராஜ்யத்திலிருந்தது; ஆதலால் தீர்க்கதரிசி அக்காலத்துப் பெரியோரை சோதோமின் அதிபதிகள் என்றும், கொமோராவின் ஜனம் என்றும் பேர் சொல்லி அழைத்தார். அவர்கள் செய்துவந்த மார்க்க முறைகளெல்லாம் வீண்சடங்காயிருந்ததேயன்றி அதின் ஆவிக்குரிய பொருளை உணர்ந்ததாயிருக்கவில்லை. ஆதலால் தீர்க்கதரிசி அவர்களை எச்சரித்து உணர்த்தி, அவர்கள் பாவங்களை தேவன் மன்னிப்பாரென்பதற்கு அத்தாட்சியாக 'உங்கள் பாவங்கள் சிவேரென்றிருந்தாலும் உறைந்த மழையைப்போல வெண்மையாகும், அவைகள் இரத்தாம்

பரச் சிவப்பாயிருந்தாலும் பஞ்சைப்போலாகும்' என்று தைரியப்படுத்தினார். அவர் எலியாவைப்போல் இரட்டையுடுத்தி வார்க்கச்சையைக் கட்டி பாதரட்சையை அணிந்து தபோதனர்கோலமாய்த் திரிந்தலைந்தார். தேவ ஊழியக்காரருக்கு விசேஷித்த உடையிருக்கிறது நல்லதுதான். மனதின் பக்தி வெளியின் உடைநடையால் விளங்குவதைக் குற்றமென்று சொல்லக்கூடாது. உத்தம போதகர் தேவநீதியையும் பாவக்கேட்டையும் ஜனங்களுக்குச் சொல்லி அப்படியே விட்டுவிடுவது சரியல்ல; பாவமன்னிப்புக்குரிய தேவ வாக்குத்தத்தங்களை அவர்கள்முன் வைத்து இரட்சகரண்டை வரும்படி ஏவவேண்டியவர்களாயிருக்கிறார்கள்.

ஏசாயா தீர்க்கதரிசியின் காலத்திலிருந்த யூத சபையானது மட்டுமிஞ்சி சீர்கெட்டதாயிருந்தபோதிலும், அதில் தேவன் பிரியப்படாத கெட்ட கனிகள் உண்டானபோதிலும் உத்தமர் சிலர் இருந்தார்களென்பது மெய்; அப்படிப்பட்டவர்களின் தொகை திராட்சத் தோட்டத்திலுள்ள ஒரு குச்சைப்போலும் வெள்ளரித் தோட்டத்திலுள்ள ஒரு குடிசையைப் போலவும் சிறுத்து மீந்திருந்தது. தேவ பக்தியானது தேசத்தில் விருத்தியாகாமல் அவபக்தி மிஞ்சி நாடு நகரங்களை நிரப்புகிறபோது கிறிஸ்தவன் மனந்தளரக் கூடாது. இப்படியே ஒளிக்கும் இருளுக்கும், பக்திக்கும் அவபக்திக்கும் ஒரு ஞானப்போர் ஆதிமுதல் உண்டாகிக்கொண்டே வருகிறது. ஆனால் அவபக்தி மேற்கொள்ளமாட்டாது. அவபக்தி நோவாவின் காலத்துப் பிரளயம்போல் சகல சன்மார்க்க மலைகளையும் மூடிப் போட்டாலும், பேழை ஜலத்தின்மேல் மிதந்ததுபோல கடைசியாக மெய்ப்பக்தி அதை அடக்கி மேற்கொண்டு பூலோகத்தை நிரப்பும்.

ஏசாயா தீர்க்கதரிசி உசியா இராசன் காலமட்டும் ஊக்கத்தோடு தீர்க்கதரிசனமுரைத்து வந்தார். அந்த அரசன் மாண்ட வருஷத்தில் அவர் தமது ஊழியத்திலிருந்து ஏதோ காரணத்தால் நின்றுபோனார் என்று தோன்றுகிறது. ஆனால் அவர் தேவனுடைய நாமத்துக்காக செய்யவேண்டிய வேலை இன்னும் அதிகமாயும் உலக இரட்சகருடைய

இரட்சண்யத்தைப்பற்றியும் ராஜ்யத்தைப்பற்றியும் அறிவிக்க வேண்டிய தீர்க்கதரிசனங்கள் திரளாயிருந்தபடியாலும் தேவன் ஒரு விசேஷித்த தரிசனையின்மூலமாய் அவரைச் சந்தித்து தைரியப்படுத்தினார். அத்தரிசனையாவது: ஆண்டவர் உயரமும் உன்னதமுமான ஆசனத்தில் வீற்றிருக்கக் கண்டார்; அவருடைய வஸ்திரத் தொங்கலால் தேவாலயம் நிரப்பப்பட்டது; அவ்வாறு செட்டைகளுள்ள சம்மனசுக்களின் சேனை அவருக்கு மேலாக பறந்து நின்றார்கள்; அவர்கள் இரண்டு செட்டைகளால் தங்கள் முகத்தை மூடி, இரண்டு செட்டைகளால் தங்கள் கால்களை மூடி, இரண்டு செட்டைகளால் பறந்து, ஒருவரையொருவர் நோக்கி, சேனைகளின் கர்த்தர் பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர்; பூமியனைத்தும் அவருடைய மகிமையால் நிறைந்திருக்கிறதென்று கூப்பிட்டுச் சொன்னார்கள். தீர்க்கதரிசி இந்தக் காட்சியையும் செய்தியையும் கண்டு கேட்டபோது பயந்து 'ஐயோ! அதமானேன், நான் அசுத்த உதடுகளுள்ள மனுஷன்; சேனைகளின் கர்த்தராகிய ராஜாவை என் கண்கள் கண்டதே' என்று சதறினார். அச்சமயத்தில் ஜோதிமயமான சேராபின்களில் ஒருவன் பலிபீடத்திலிருந்து தன் கையில் பிடித்திருந்த குறட்டால் ஒரு நெருப்புத் தழலை எடுத்து தீர்க்கதரிசியண்டை வந்து அதினால் அவருடைய வாயைத் தொட்டு இதோ, இது உன் உதடுகளைத் தொட்டதினால் உன் அக்கிரமம் நீங்கி உன் பாவம் நிவர்த்தியாயிற்று என்று சொன்னான். அப்புறம் 'யாரை நான் அனுப்புவேன், யார் நமது காரியமாய்ப் போவான்' என்று சிம்மாசனத்திலிருந்து எழும்பும் ஆண்டவருடைய சத்தத்தை தீர்க்கதரிசி கேட்டார். உடனே அவர் 'இதோ, அடியேன் இருக்கிறேன், என்னை அனுப்பும்' என்று சொன்னார். அப்போது அவர் போய் செய்யவேண்டிய போதனை இன்னதென்று விபரமாகக் கூறப்பட்டது. தீர்க்கதரிசி அதைக் கேட்டவுடன் திடுக்கென்று தமது தரிசனையிலிருந்து தெளிந்தார்.

இந்தத் தரிசனையில் காணப்பட்ட ஆண்டவர் சேனைகளின் கர்த்தராகிய யேகோவாவே. பரி. யோவான் இந்த சங்கதியைப் பேசும்போது தீர்க்கதரிசி இந்தத் தரிசனையில் கிறிஸ்துவின் மகிமையைக் கண்டதாகச் சொல்லுகிறார்

(யோவா. 12:41). இதினாலே இயேசுகிறிஸ்து யேகோவா வாகிய தேவனாயிருக்கிறாரென்று ருசுப்படுகிறது. இந்தத் தரிசனையில் தீர்க்கதரிசி தேவனைப் பார்க்கவும், அவருடைய தூதரைக் காணவும், அவர்கள் பாட்டைக் கேட்கவும், தேவ னுடனே சம்பாஷிக்கவும், தேவனால் பாவமன்னிப்பையும் புது ஜீவபெலனையும் பெறவும், உன்னதமானவரால் பட்டாபி ஷேகம் பெறவும், அக்கினி தீட்சை அடையவுமான அஷ்ட பாக்கியங்களைப் பெற்றார் என்று தெரியவருகிறது. இந்தத் தரிசனையைத் தீர்க்கதரிசி தமது ஜீவகாலத்தில் மறந்துபோகக் கூடாதபடி அவ்வளவு வல்லமையுள்ள தரிசனையாக இருக் கிறது. இப்படிப்பட்ட வரலாற்றைக் கேட்கும் ஒரு பக்தன், ஆ! எனக்கு இந்தப் பாக்கியம் ஒருநாளும் கிட்டவில்லையே என்று சொல்லி துக்கப்படலாம். ஆம், இது துக்கத்தோடு நாடும் நல் நாட்டந்தான். ஆபிரகாமுக்கும், ஏசாயாவுக்கும், பரி. யோவானுக்கும், பரி. பவுலுக்கும் தரிசனமளித்த ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து இக்காலத்திலும் தமது சித்தத்தின்படியே தமது தாசருக்குக் காட்சியளித்து வருகிறார் என்பதற்குச் சந்தேகமில்லை. ஏனெனில் அவர் நேற்றும் இன்றும் என்றும் ஒரே விதமாயிருக்கிறார். பக்தர் தாழ்ச்சியுள்ள மனதோடு தேவ தரிசனையை நாடி தங்கள் சரீரங்களையும் ஆத்துமாக்களையும் பரிசுத்தமாய்க் காத்துக் கொள்ளும்போது அவர் வேளாவேளை சொப்பனங்களின் மூலமாயாவது தரிசனைகளின் மூலமாயாவது தமது மகிமையை அவர்களுக்கு விசேஷித்த வண்ணம் காட்டி வருகிறார். எப்படியும் பொதுவாக ஒவ்வொரு விசுவாச முள்ள கிறிஸ்தவனுக்கும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்து கிருபையின் யத்தனங்களின் மூலமாயும் தேவாவியின் தங்குதலினாலும் தமது ரட்சண்ய மகிமையைக் காட்டி வருகிறார்.

தீர்க்கதரிசியின் தரிசனையின் பாக்கியமானது அவர் மட்டுக்கும் அடுத்ததாயிராமல் கிறிஸ்து சபையனைத்துக்கும் அடுத்ததாக இருக்கிறது. அவர் பாடக் கேட்டு எழுதி வைத்த பரிசுத்த கீதமானது கிறிஸ்து சபையின் தினகால கீதமாகவும், அதின் விசேஷித்த ஆராதனையின் ஸ்தோத்திர மாகவும் வழங்கி வருகிறது.

BISHOP STEPHEN NEILL
ECUMENICAL STUDY AND RESEARCH CENTRE.
PALAYAMKOTTAI.

சேனைகளின் கர்த்தர் பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர்;
பூமியனைத்தும் அவர் மகிமையால் நிறைந்தன

என்ற வானகீதமானது தூதரையும் மனுஷரையும் ஏக சகோதரராக்கி, வானத்தையும் பூமியையும் ஒன்றுபோல தேவ ஸ்துதியால் நிரப்புகிறதல்லவா! இந்தக் கீதமே நமது வீட்டின் கீதமாயும் காட்டின் கீதமாயும், பந்தலின் கீதமாயும் பாடையின் கீதமாயும், ஆண்களின் கீதமாயும் பெண்களின் கீதமாயும், இரவின் கீதமாயும் பகலின் கீதமாயும், பிறப்பின் கீதமாயும் இறப்பின் கீதமாயுமிருப்பதாக. இந்தப் பாட்டை நாம் பாடும்போதெல்லாம் இதைக் கட்டிப் பாடின தேவ லோக பாடகராகிய சேராபின் புலவரையும் பூமியில் அதை எழுதி வைத்து பாடம் பண்ணின தீர்க்கதரிசியாகிய ஏசாயா புலவரையும் நன்றியறிதலுள்ள மனதோடு நினைத்து, நமது ஆத்துமாவின் பத்து நரம்பு வீணைகளையும், எண்ணரம்பு சுரமண்டலங்களையும், கைத்தாளங்களையும், நாகசுரங்களை யும் ரட்சண்ய ஆனந்த பலத்தைக்கொண்டு முழக்கி,

'சேனைகளின் கர்த்தராகிய தேவனே,
நீர் பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர்;
வானமும் பூமியும் உமது மகிமையால் நிறைந்தன;
உன்னதமானவராகிய தேவரீருக்கே
மகிமையுண்டாவதாக என்று
இடைவிடாமல் உம்மை ஸ்தோத்திரிக்கிறோம்;
ஆமென்'

என்று கீர்த்தனம் பாடுவோமாக.

ஏசாயா தீர்க்கதரிசி இந்தத் தரிசனையைக் கண்டதுமுதல் உலக இரட்சகராகிய மேசியாவைப்பற்றித் தீர்க்கதரிசனங் களைக் கூறும்படி ஆரம்பித்தார் என்று காண்கிறோம். ஆத லால் இந்தத் தரிசனையில் விசேஷித்த காரணம் அவரை நாட்டுத் தீர்க்கதரிசியாக்க அல்ல, இரட்சண்ய சாஸ்திரத்தை யும் ராஜ்யத்தையும்பற்றிக் கூறும் விசேஷித்த தீர்க்கதரிசி யாக்கும்படியாகத்தான் என்று விளங்குகிறது. இவர் பிறந்த எட்டாம் நாளில் எடுத்துக்கொண்ட பேரும் அதற்குத் தகுந்ததாகவே இருந்தது. ஏனெனில் ஏசாயா என்ற பேருக்கு 'கர்த்தரின் இரட்சிப்பு' என்பது பொருளா

யிருந்தது. கர்த்தரின் இரட்சிப்பைப்பற்றிக் கூறுவதே இவருடைய விசேஷித்த தொழிலாயிருந்தது. உலக இரட்சகரையும் அவருடைய மார்க்கத்தையும்பற்றி இதற்கு முன் வெளிப்படுத்தப்படாத அநேக விசேஷ விஷயங்கள் அவர் மூலமாய் வெளிப்படுத்தப்பட்டது.

ஆதி மனுஷன் பாவஞ்செய்த நாளில் வாக்குத்தத்தஞ் செய்யப்பட்ட ஸ்திரீயின் வித்து என்னும் இரட்சகர் உலக முறையின்படி ஒரு ஸ்திரீயிலிருந்து தோன்றுமல், அதிசயமான முறையாக ஒரு ஸ்திரீயினிடம் தோன்றுவார் என்பது இவருக்கு தேவனுல் வெளிப்படுத்தப்பட்டது; ஆதலால் 'இதோ, ஒரு கன்னி கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள், அவருக்கு இம்மானுவேல் என்று பேரிடுவாள்' என்று கூறினுர் (ஏசா. 7:14; மத். 1:23). இம்மானுவேல் என்பதற்கு நம்மோடிருக்கிற தேவன் என்று அர்த்தம். இந்தத் தீர்க்கதரிசனத்தின்படியே தேவன் நம்மோடிருக்கவும், உலாவவும், தூங்கவும், புசிக்கவும், போதித்து உணர்த்தவும், பாடுபட்டு மீட்கவும் மரியம்மாள் என்னும் ஒரு பரிசுத்த கன்னியினிடத்தில் அவதாரமாகி, முப்பத்துமூன்று வருஷமிருந்து சிலுவையிலே பாடுபட்டு மரித்து அடக்கம்பண்ணப்பட்டு, மூன்றும் நாளில் உயிரோடெழுந்திருந்து, நாற்பது நாள்மட்டும் பூமியிலிருந்து, அப்பால் மேகவாகனமூலமாய்ப் பரலோகம் போனுர். இப்பொழுது அவர் பூமியில் எந்தத் தேகமுடையவராய் இருந்தாரோ அதே தேகத்தோடு பரலோகத்திலுமிருக்கிறுர். அவர் தேவனுனபடியால் அவ்விடத்தில் மாத்திரம் இருக்கிறுர் என்று சொல்லக்கூடாது; இவ்வுலகத்திலும் இருக்கிறுர். அவர் தமது மனுஷாவதாரக் காலத்தில் மாத்திரமல்ல, இன்றைக்கும் என்றைக்கும் நம்மோடிருக்கும் தேவனும், நம்முடைய இம்மானுவேலாயும் இருக்கிறுர்.

உலகத்தில் அவதாரமெடுக்கும் இம்மானுவேல் என்னும் இயேசுகிறிஸ்துவினுல் அஞ்ஞான இருளிலும் அறிவீன மந்தாரத்திலுமிருக்கிற சகல ஜாதிகளும் ஞானவெளிச்சத்தையும் பரம ஜோதியையும் அடைவார்கள் என்றும் அவர் ஒரு பாலகனுகப் பிறந்து ஒரு ஸ்திரீயின் குமாரன்

போல் அவதாரமெடுத்தாலும் பூலோக அரசாட்சிமுழுவதும் அவருக்குக் கொடுக்கப்படும் என்றும், அவர் அதிசயமானவர் ஆலோசனைக்கர்த்தா, வல்லமையுள்ள தேவன், நித்தியபிதா, சமாதானப்பிரபு என்னும் சிறந்த நாமங்களை யுடையவரா யிருப்பார் என்றும் தீர்க்கதரிசிக்கு வெளிப்படுத்தப்பட்டது (ஏசா. 9:6). இந்தப் பேர்கள் ஒவ்வொன்றும் உலகத்தில் இம்மானுவேலாக அவதாரமெடுக்கும் ஆளின் தெய்வீகத் தையும் மேன்மையையும் உணர்த்துகிறதாகவே இருக் கின்றன.

தீர்க்கதரிசி வரப்போகிற இரட்சகரின் வெறும்பேரை மாத்திரம் சொல்லி அதோடு சும்மாயிராமல், 'இதோ, உங்கள் தேவன் நீதியைச் சரிக்கட்டவும், உங்கள் தேவன் பதிலளிக்கவும் வருவார்; அவர் வந்து உங்களை ரட்சிப்பார்; அப்பொழுது குருடரின் கண்கள் திறக்கப்பட்டு, செவிடரின் செவிகள் திறவுண்டுபோம்; அப்பொழுது முடவன் மானைப் போல் குதிப்பான்; ஊமையன் நாவும் கெம்பீரிக்கும்' என்றும் (ஏசா. 35:4–6), 'கர்த்தரின் மகிமையாகிய இம் மானுவேல் அவதாரமாகி வெளியரங்கப்படுங்காலத்தில் மனுஷர் அவரைக் காண்பார்கள்' என்றும் (ஏசா. 40:5), 'அவர் மேய்ப்பனைப்போலவே தமது மந்தையை மேய்ப்பார்; ஆட்டுக்குட்டிகளைத் தமது புயத்தினால் சேர்த்து, தமது மடியிலே சுமந்து, கறவலாடுகளை மெதுவாய் நடத்துவார்' என்றும், 'சிறுமைப்பட்டவர்களுக்குச் சுவிசேஷத்தை அறிவிக்கவும், இருதயம் நொறுங்குண்டவர்களைக் காயங் கட்டவும், சிறைப்பட்டவர்களை விடுதலையாக்கவும், கட்டுண்ட வர்களைக் கட்டவிழ்க்கவும், கர்த்தருடைய அநுக்கிரக வருஷத்தைக் கூறவும், தேவனுடைய நீதியைச் சரிக்கட்டும் நாளைக் கூறவும், துயரப்பட்ட அனைவருக்கும் ஆறுதல் சொல்லவும், சீயோனிலே துயரப்பட்டவர்களைச் சீர்ப்படுத்த வும், அவர்களுக்கு சிங்காரத்தையும், ஆனந்தத்தையும், துதியின் உடையையும் கொடுக்கவும், அவர் தேவனால் அனுப்பப்பட்டவராக அவதாரமாவார்' என்றும் வெளிப் படுத்தப்பட்டது. இது பாவ உணர்வால் தவித்து நம்மை ரட்சிக்கத் திராணியற்ற மனுப்புத்திரருக்கு எவ்வளவு மங்கள செய்தியாயிருக்கிறது! உலக இரட்சகராகிய இயேசு

அவதாரமாகி பூமியில் சஞ்சரித்த காலத்தில் கிராமங்களிலும் நகரங்களிலும் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து சகலவிதமான நோய்களையும் குணமாக்கி மரித்தோரையும் எழுப்பினார். அவரால் குருடர் பார்வையடைந்தார்கள், சப்பாணிகள் நடந்தார்கள், குஷ்டரோகிகள் குணமானார்கள், செவிடர் கேட்டார்கள். அவர் பசியுள்ளவர்களை அப்பத்தால் திருப்தி யாக்கி அழுதுகொண்டிருந்தவர்களை ஆனந்தப்படுத்தினார். எல்லாவற்றுக்கு மேலாக அவர் பாவங்களை மன்னித்து தம்மிடம் மனந்திரும்பினவர்களுக்கு பாவமன்னிப்பின் பாக்கியத்தைக் கட்டளையிட்டார்.

ஏசாயாவுக்கு தேவன் வரப்போகிற இரட்சகரின் அற்புத வல்லமையையும், ரட்சண்ய வல்லமையையும் மாத்திரம் வெளிப்படுத்தாமல், அவர் பாவிகளுக்காக படும் பாடு களையும், நிந்தைகளையும், அவமானங்களையும் மரணத்தையும் அவர் கடைசியாக அடையும் வெற்றியையும் வெளிப்படுத்தி யிருக்கிறார். அதின் விபரங்களை இவ்விடத்தில் காட்டாம லிருப்பது தகுதியல்ல. அதாவது:—

'எங்கள் மூலமாய்க் கேள்விப்பட்டதை விசுவாசித்தவன் யார்? கர்த்தருடைய புயம் யாருக்கு வெளிப்பட்டது? இளங்கிளையைப்போலவும், வறண்ட நிலத்திலிருந்து துளிர்க்கிறவேரைப்போலவும் அவனுக்கு முன்பாக எழும்பு கிறார்; அவருக்கு அழகுமில்லை, சௌந்தரியமுமில்லை அவரை பார்க்கும்போது, நாம் அவரை விரும்பத்தக்க ரூபம் அவருக்கு இல்லாதிருந்தது. அவர் அசட்டைபண்ணப் பட்டவரும், மனுஷரால் புறக்கணிக்கப்பட்டவரும், துக்கம் நிறைந்தவரும், பாடு அநுபவித்தவருமாயிருந்தார்; அவரை விட்டு, நம்முடைய முகங்களை மறைத்துக்கொண்டோம்; அவர் அசட்டைபண்ணப்பட்டிருந்தார்; அவரை எண்ணமற் போனோம். மெய்யாகவே அவர் நம்முடைய பாடுகளை ஏற்றுக்கொண்டு, நம்முடைய துக்கங்களைச் சுமந்தார்; நாமோ, அவர் தேவனால் அடிபட்டு வாதிக்கப்பட்டு, சிறுமைப்பட்டவரென்று எண்ணினோம். நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார்; நமக்குச்

சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது; அவருடைய தழும்புகளால் குணமாகிறோம். நாம் எல்லாரும் ஆடுகளைப்போல வழிதப்பித்திரிந்து, அவனவன் தன் தன் வழியிலே போனோம்; கர்த்தரோ நம்மெல்லா ருடைய அக்கிரமத்தையும் அவர்மேல் விழப்பண்ணினார். அவர் நெருக்கப்பட்டும் ஒடுக்கப்பட்டும் இருந்தார். ஆனாலும் தம்முடைய வாயை அவர் திறக்கவில்லை; அடிக்கப்படும்படி கொண்டு போகப்படுகிற ஒரு ஆட்டுக்குட்டியைப்போலவும், தன்னை மயிர்கத்தரிக்கிறவனுக்கு முன்பாகச் சத்தமிடா திருக்கிற ஆட்டைப்போலவும், அவர் தம்முடைய வாயைத் திறவாதிருந்தார். இடுக்கணிலும் நியாயத்தீர்ப்பிலுமிருந்து அவர் எடுக்கப்பட்டார்; அவருடைய வம்சத்தை யாரால் சொல்லி முடியும்? ஜீவனுள்ளோருடைய தேசத்திலிருந்து அறுப்புண்டுபோனார்; என் ஜனத்தின் மீறுதலினிமித்தம் அவர் வாதிக்கப்பட்டார். துன்மார்க்கரோடே அவருடைய பிரேதக்குழியை நியமித்தார்கள்; ஆனாலும் அவர் மரித்த போது ஐசுவரியவானோடே இருந்தார்; அவர் கொடுமை செய்யவில்லை; அவர் வாயில் வஞ்சனை இருந்ததுமில்லை. கர்த்தரோ அவரை நொறுக்கச் சித்தமாகி, அவரைப் பாடுகளுக்குட்படுத்தினார்; அவருடைய ஆத்துமா தன்னைக் குற்ற நிவாரணபலியாக ஒப்புக்கொடுக்கும்போது, அவர் தமது சந்ததியைக் கண்டு, நீடித்த நாளாயிருப்பார்; கர்த்த ருக்குச் சித்தமானது அவர் கையினால் வாய்க்கும். அவர் தமது ஆத்துமவருத்தத்தின் பலனைக் கண்டு திருப்தி யாவார்; என் தாசனாகிய நீதிபரர் நம்மைப் பற்றும் அறிவினால் அநேகரை நீதிமான்களாக்குவார்; அவர்க ளுடைய அக்கிரமங்களைத் தாமே சுமந்துகொள்வார். அவர் தம்முடைய ஆத்துமாவை மரணத்திலூற்றி, அக்கிரமக் காரரில் ஒருவராக எண்ணப்பட்டு, அநேகருடைய பாவத்தைத் தாமே சுமந்து, அக்கிரமக்காரருக்காக வேண்டி கொண்டதினிமித்தம் அநேகரை அவருக்குப் பங்காகக் கொடுப்பேன்; பலவான்களை அவர் தமக்குக் கொள்ளையாகப் பங்கிட்டுக்கொள்வார்' (ஏசா. 53:1–12).

உலக இரட்சகர் அவதாரமாகிறதற்கு சுமார் அறுநூறு வருஷங்களுக்கு முன் வெளிப்படுத்தப்பட்ட இந்த தேவ

இரகசியத்தின்படியே இயேசுகிறிஸ்து அடிமையின் சாயலாகி சிலுவையில் மரணமடைந்து, கடைசியாக உயிர்த்தெழுந்து வெற்றி சிறந்தார். இதின் வரலாறுகள் புதிய ஏற்பாட்டாக மத்திலுள்ள நான்கு சுவிசேஷங்களினால் தெரியவரும். ஆதலால் இவ்விடத்தில் நாம் அதின் விபரங்களைச் சொல்லாமல் நிறுத்துகிறோம்.

உலக இரட்சகர் அவதாரமெடுத்து மனுஷரை மீட்கும்படி பாடுபடுகிறதோடு பூமியில் நிலையான ஒரு புது ராஜ்ய பாரத்தை ஸ்தாபிப்பார் என்பதும் தீர்க்கதரிசிக்கு வெளிப்படுத்தப்பட்டது. அந்த வெளிப்படுத்தலின்படியே தீர்க்கதரிசி அந்த தேவலோக ராஜ்யபாரத்துக்கடுத்த காரியங்களையும் தமது ஆகமத்தில் எழுதியிருக்கிறார். அவைகளில் சிலவற்றை இங்ஙனம் எடுத்துக்காட்டுவோம். அதாவது: ‘கடைசி நாட்களில் கர்த்தருடைய ஆலயமாகிய பர்வதம் பர்வதங்களின் கொடுமுடியில் ஸ்தாபிக்கப்பட்டு, மலைகளுக்கு மேலாய் உயர்த்தப்படும்; எல்லா ஜாதிகளும் அதற்கு ஓடிவருவார்கள். திரளான ஜனங்கள் புறப்பட்டு வந்து: நாம் கர்த்தரின் பர்வதத்துக்கும், யாக்கோபின் தேவனுடைய ஆலயத்துக்கும் போவோம் வாருங்கள்; அவர் தமது வழிகளை நமக்குப் போதிப்பார், நாம் அவர் பாதைகளில் நடப்போம் என்பார்கள்; ஏனெனில் சீயோனிலிருந்து வேதமும், எருசலேமிலிருந்து கர்த்தரின் வசனமும் வெளிப்படும். அவர் ஜாதிகளுக்குள் நியாயந் தீர்த்து, திரளான ஜனங்களைக் கடிந்துகொள்வார்; அப்பொழுது அவர்கள் தங்கள் பட்டயங்களை மண்வெட்டிகளாகவும், தங்கள் ஈட்டிகளை அரிவாள்களாகவும் அடிப்பார்கள்; ஜாதிக்கு விரோதமாய் ஜாதி பட்டயம் எடுப்பதில்லை, இனி அவர்கள் யுத்தத்தைக் கற்பதுமில்லை. [1] கிருபையினாலே சிங்காசனம் ஸ்தாபிக்கப்படும்; நியாயம் விசாரித்து துரிதமாய் நீதிசெய்கிற ஒருவர் அதின்மேல் தாவீதின் கூடாரத்திலே நியாயாதிபதியாய் உண்மையோடே வீற்றிருப்பார். [2] அக்காலத்திலே செவிடர் புஸ்தகத்தின் வசனங்களைக் கேட்பார்கள்; குருடரின் கண்கள் இருளுக்கும் அந்தகாரத்

---

[1] ஏசா. 16:5. [2] 29:18,19.

துக்கும் நீங்கலாகிப் பார்வையடையும். சிறுமையானவர்கள் கர்த்தருக்குள் மிகவும் மகிழ்ந்து, மனுஷரில் எளிமையான வர்கள் இஸ்ரவேலின் பரிசுத்தருக்குள் களிகூருவார்கள். இதோ, ஒரு ராஜா நீதியாக அரசாளுவார்; பிரபுக்களும் நியாயமாகத் துரைத்தனம் பண்ணுவார்கள். [1]பள்ள மெல்லாம் உயர்த்தப்பட்டு, சகல மலையும் குன்றும் தாழ்த்த பட்டு, கோணலானது செவ்வையாகி, கரடுமுரடானவை சமமாக்கப்படும் என்றும், கர்த்தரின் மகிமை வெளியரங்க மாகும், மாம்சமான யாவும் அதை ஏகமாய்க் காணும், கர்த்தரின் வாக்கு அதை உரைத்தது என்றும் வனாந் தரத்திலே கூப்பிடுகிற சத்தம் உண்டாயிற்று. [2]அவர்கள் பசியாயிருப்பதுமில்லை, தாகமாயிருப்பதுமில்லை; உஷ்ண மாகிலும், வெயிலாகிலும் அவர்கள்மேல் படுவதுமில்லை; அவர்களுக்கு இரங்குகிறவர் அவர்களை நடத்தி, அவர்களை நீரூற்றுகளிடத்திற்குக் கொண்டுபோய் விடுவார். என் மலை களையெல்லாம் வழிகளாக்குவேன்; என் பாதைகள் உயர்த் தப்படும். இதோ, இவர்கள் தூரத்திலிருந்து வருவார்கள்; இதோ, அவர்கள் வடக்கிலும் மேற்கிலுமிருந்து வருவார்கள். இவர்கள் சீனீம்தேசத்திலுமிருந்து வருவார்கள் என்கிறார். வானங்களே, கெம்பீரித்துப் பாடுங்கள்; பூமியே, களிகூரு, பர்வதங்களே, கெம்பீரமாய் முழங்குங்கள்; கர்த்தர் தம் முடைய ஜனத்துக்கு ஆறுதல்செய்தார். சிறுமைப்பட்ட வர்கள்மேல் இரக்கமாயிருப்பார். [3]கர்த்தர் சீயோனுக்கு ஆறுதல் செய்வார்; அவர் அதின் பாழான ஸ்தலங்களை யெல்லாம் தேறுதலடையச்செய்து அதின் வனாந்தரத்தை ஏதேனைப்போலவும், அதின் அவாந்தரவெளியைக் கர்த்தரின் தோட்டத்தைப்போலவும் ஆக்குவார்; சந்தோஷமும் மகிழ்ச்சியும் துதியும் கீதசத்தமும் அதில் உண்டாயிருக்கும். என் ஜனங்களே, எனக்குச் செவிகொடுங்கள்; என் ஜாதியாரே, என் வாக்கைக் கவனியுங்கள்; வேதம் என்னி லிருந்து வெளிப்படும்; என் பிரமாணத்தை ஜனங்களின் வெளிச்சமாக ஸ்தாபிப்பேன். என் நீதி சமீபமாயிருக்கிறது;

---

[1] ஏசா. 40:4,5., [2] 49:10–13. [3] 51:3–6.

என் ரட்சிப்பு வெளிப்படும்; என் புயங்கள் ஜனங்களை நியாயந்தீர்க்கும்; தீவுகள் எனக்குக் காத்திருந்து, என் புயத்தின்மேல் நம்பிக்கையாயிருக்கும். உங்கள் கண்களை வானத்திற்கு ஏறெடுங்கள், கீழே இருக்கிற பூமியையும் நோக்கிப்பாருங்கள்; வானம் புகையைப்போல் ஒழிந்து போம், பூமி வஸ்திரத்தைப்போல் பழசாய்ப்போம்; அதின் குடிகளும் அப்படியே ஒழிந்துபோவார்கள்; என் ரட்சிப்போ என்றென்றைக்கும் இருக்கும்; என் நீதி அற்றுப்போவதில்லை. இன்னும் இந்தப்பரலோக ராஜ்யத்தைப்பற்றி தீர்க்கதரிசி சொல்லுகிறதையெல்லாம் எடுத்தெழுதினால் விரியும். வாசிக்கிறவர்கள் பின்னும் அறிய விரும்பினால் ஏசாயா 59:16-21; 60 அதி. 61:1-5; 65:25 வசனங்களைப் பார்க்கவும்.

மேலே சொல்லிய வாசகங்களால் குறிக்கப்பட்ட ராஜ்யம் கிறிஸ்துமார்க்கந்தான். இவ்வளவு காலத்துக்குள்ளாக பூமியின் மூன்றில் ஒருபாகம் இந்த மார்க்கத்துக்குட்பட்டிருக்கிறது; மீதியான இரண்டு பங்கும் அதின் பிரகாசத்தைக் கல்வியின்மூலமாயும் நாகரீகத்தின மூலமாயும், வியாபார சம்பந்தமாயும் ஒருவாறு பெற்றுக்கொண்டு வருகிறது. கிறிஸ்து மார்க்கம் இக்காலத்தில் எல்லாத் தேசங்களிலும் பிரசங்கிக்கப்பட்டுவருகிறது; அதின் சுவிசேஷகாந்திக்கு மறைவான தேசம் ஒன்றுமில்லை. இவ்வுலகத்திலுள்ள பெரிய ராஜ்யங்களெல்லாம் கிறிஸ்தவர்களால் அல்லது அவர்கள் சொற்சக்தியால்தான் ஆளப்பட்டு வருகிறது. இன்னும் சிலகாலத்தில் சிலுவையில் அறையுண்ட இயேசுவைக் குறித்த சுவிசேஷமானது சகல பாஷைக்காரரையும் ஜாதியாரையும் தனக்குள் இழுத்துக்கொள்ளும் என்பது மெய். அப்படிப்பட்ட காலத்தை நம்முடைய மாம்சக்கண் பார்க்கும் பாக்கியம் நமக்குக் கிடையாமலிருந்தாலும் இருக்கலாம். அதையிட்டு நாம் ஆயாசப்படவேண்டியதில்லை.

இயேசுவின் சுவிசேஷமானது ஒவ்வொரு பாவியையும் பார்த்து 'ஓ, தாகமாயிருக்கிறவர்களே, நீங்கள் எல்லாரும் தண்ணீர்களண்டைக்கு வாருங்கள்; பணமில்லாதவர்களே,

நீங்கள் வந்து, வாங்கிச் சாப்பிடுங்கள்; நீங்கள் வந்து, பணமுமின்றி விலையுமின்றித் திராட்சரசமும் பாலும் கொள்ளுங்கள். நீங்கள் அப்பமல்லாததற்காகப் பணத்தையும், திருப்திசெய்யாத பொருளுக்காக உங்கள் பிரயாசத்தையும் செலவழிப்பானேன்? நீங்கள் எனக்குக் கவனமாய்ச் செவிகொடுத்து, நலமானதைச் சாப்பிடுங்கள்; அப்பொழுது உங்கள் ஆத்துமா கொழுப்பான பதார்த்தத்தினால் மகிழ்ச்சியாகும். உங்கள் செவியைச் சாய்த்து, என்னிடத்தில் வாருங்கள்: கேளுங்கள், அப்பொழுது உங்கள் ஆத்துமா பிழைக்கும்; தாவீதுக்கு அருளின நிச்சயமான கிருபைகளை உங்களுக்கு நித்திய உடன்படிக்கையாக ஏற்படுத்துவேன்' (ஏசா. 55:1--3) என்று அழைக்கிறது.

இவ்வண்ணம் ஏசாயா தீர்க்கதரிசி உலக இரட்சகரின் வரலாறுகளைக் குறித்து அதிக விபரமாய் வெளிப்படுத்தியிருக்கிறதால் அவரை சுவிசேஷ தீர்க்கதரிசி என்ற பேரால் எல்லாரும் அழைத்துவருகிறார்கள். என்றாலும் அவர் தம்முடைய காலத்திலுள்ள பல ஜாதியாராகிய மோவாபியர், சீரியர், பெலிஸ்தியர், பாபிலோனியர் முதலியவர்கள்மேல் வரும் தேவதண்டனையையும் கூறினார். அதின் விபரங்களை நாம் நுட்பமாய் இவ்விடத்தில் கவனிக்கவேண்டியதில்லை; இரட்சண்ய சம்பந்தமாய் அவருடைய சரித்திரத்தை ஆராய்வதே நமது விசேஷித்த நோக்கமாயிருக்கிறது.

இனி நாம் இவருடைய சரித்திரத்தைச் சுருக்கி முடிக்கவேண்டியதாயிருக்கிறது. இவர் உசியா அரசனின் ஆதியோடந்தமான நடபடிக்கைகளையும், எசேக்கியா அரசனின் வரலாறுகளையும் எழுதின ஆகமக்காரராயிருக்கிறார் (2 நாளா. 26:22; 32:32). ஆனால் இந்த நூல்கள் எப்படியோ சோர்ந்து போய்விட்டன. ஏசுசீராக் என்னும் ஆகமக்காரன் ஏசாயா தீர்க்கதரிசியைக் குறித்து எழுதும் வாசகம் சற்று கவனிக்கப்படத்தக்கதுதான். 'அவர்கள் கிருபையுள்ள கர்த்தாவை நோக்கிக் கூப்பிட்டு தங்களுடைய கைகளை அவருக்குநேராக ஏறெடுத்தார்கள். அப்போது பரமண்டலங்களிலிருக்கிற பரிசுத்தரோ அவர்களுடைய கூப்பிடுதலுக்கு உடனே செவிகொடுத்து, ஏசாயா என்கிறவரைக்

கொண்டு அவர்களை ரட்சித்தார். அவர் அசீரியருடைய பாளயத்தை அடித்து தம்முடைய சம்மனசுகளைக்கொண்டு அழித்துப் போட்டார். ஏனென்றால் எசேக்கியா கர்த்தருக்கு தாற்பரியமாக நடந்து ஏசாயா என்கிறவர் காட்டின தமது தகப்பனாகிய தாவீதின் வழியில் நடந்து வந்தார். ஏசாயா என்கிறவரோ தம்முடைய தீர்க்கதரிசனத்திலே மகா உண்மையும் சத்தியமுமுள்ள தீர்க்கதரிசியாயிருந்தார். அவருடைய காலத்திலே சூரியன் பின்வாங்கிப்போய், ராஜாவின் ஆயுசு நீடித்திருந்தது. அவர் நடக்கப்போகிற காரியங்களைப் பற்றித் தீர்க்கதரிசனஞ் சொல்லி, சீயோனிலே துக்கப்படுகிறவர்களை ஆற்றித்தேற்றி, அவர்களை அமரிக்கை பண்ணினார்' என்று எழுதியிருக்கிறார் (ஏசுசீரா. 48:22-27).

கிறிஸ்துவும் அவருடைய அப்போஸ்தலரும் ஏசாயா தீர்க்கதரிசியையும் அவருடைய ஆகமத்தையும் அடிக்கடி கனப்படுத்தி வந்தார்கள். புதிய ஏற்பாட்டில் இவர் பேர் இருபத்தொரு தரம் வழங்கப்பட்டிருக்கிறதென்று பார்க்கிறோம்.[1] பூர்வசபைப் பிதாக்களும் இந்தத் தீர்க்கதரிசியை மட்டற்ற மதிப்போடு பேசியிருக்கிறார்கள். ஆனால் யூத ரபிமாரோ, உலக இரட்சகராகிய மேசியாவைப்பற்றி அவர் நுட்பமாய் எழுதிய பல விஷயங்கள் தங்கள் அபிப்பிராயத்துக்கும் விசுவாசத்திற்கும் ஒத்துவரவில்லையென்பதாய் அவரையும் அவருடைய தீர்க்கதரிசனத்தையும் குறைகூறி தாழ்த்துகிறதுண்டு.

இவர் இன்ன காலத்தில் இன்ன விதமாய் மரணமடைந்தாரென்று திட்டமாய் எழுதப்பட்டிருக்கவில்லை. இவர் தமது மருமகனாகிய மனாசே அரசன் காலத்தில் அவனால் வாளால் அறுக்கப்பட்டு மாண்டார் என்னும் இந்தச் சங்கதியைக் காட்டவே, எபிரெய நிருப ஆக்கியோன் விசுவாசிகளின் அட்டவணையில் 'வாளால் அறுப்புண்டார்கள்' என்னும் வாசகத்தை வழங்குகிறதாயும் நினைக்கப்படுகிறது (எபி. 11:37). அவர் என்னவிதமாய் மாண்டாலும் தமது மரணத்

[1] எலியாவின் பேர் புதிய ஏற்பாட்டில் முப்பதுதடவை வழங்கப்பட்டிருக்கிறதென்று பார்க்கிறோம்.

தினால் உலகத்தில் அவதாரமெடுப்பதாக தமக்கு வெளிப்படுத்தப்பட்ட இம்மானுவேலையும், தமக்கு தரிசனமளித்த பிதாவாகிய தேவனையும் தம்மை நடத்தி தீர்க்கதரிசன வார்த்தையைப் பொழியப்பண்ணின பரிசுத்த ஆவியையும் கண்டு களித்து, மரித்தோர் ஸ்தலத்தில் உயிர்த்தெழுதல் பரியந்தம் சுகமாய் தங்கியிருக்கிறார்.

THE TINNEVELLY DIOCESAN LENDING LIBRARY

புலம்பும் பக்தன்

எரேமியா

யூத ஜாதியாரின் வரலாறுகள் தேவச் செயலையும் பராமரிப்பையும் படம்போல காட்டும் அடையாளங்களாயிருக்கின்றன. மனுஷன் கடவுளுக்கு விரோதமாய் இரண்டகம் பண்ணி தன் நன்றிகேட்டை வெளிப்படுத்தினபோதிலும், தேவன் பிதாவடைவாய் நம்மை நடத்திக் காத்து வருகிறாரென்றும், அவர் இரக்கமும் மன உருக்கமும் நீடிய சாந்தமும் உள்ளவரென்றும், ஆயிரந் தலைமுறைகளுக்குக் கிருபையைக் காக்கிறவரென்றும் யூதருடைய சரித்திரங்களினால் அறிந்துகொள்ளுகிறோம். மேலும் இந்தச் சரித்திரமானது தேவன் பாவத்தை எவ்வளவு அருவருக்கிறாரென்றும், அவர்களைத் தமது சொந்தப் பிள்ளைகளைப்போல நடத்தினாலும் பாவத்தினிமித்தம் தண்டியாமல் விடுகிறதில்லையென்றும் நன்றாய் உணர்த்துகிறது. தேவன் இஸ்ரவேலரை அவர்களுடைய பாவங்களினிமித்தம் தண்டிக்கும் முன்னதாக தீர்க்கதரிசிகள் என்று சொல்லப்பட்ட உத்தமரைக்கொண்டு எச்சரித்து வந்தார். தீர்க்கதரிசிகள் என்றால் பின்வருங் காலத்தில் நடக்கப்போகிற நன்மை தீமைகளைத் தேவ அருள் பெற்று முந்தியே சொல்லி, ஜனங்களை குணப்படுத்தலுக்கு ஏவின பக்தாட்கள்தான். யூத ஜனங்கள் தேவனுடைய பிரமாணங்களையும் நியமங்களையும் விட்டு விட்டு அவரவர் மனம்போனபடி அக்கிரமங்களில் தலைப்படுகிற காலங்களில் தேவன் இப்படிப்பட்ட பக்தரை தமது ஆவியால் எழுப்பி அவர்களை தேவதா பக்திக்கும் மெய் அறிவுக்கும் திருப்பி வந்தார். அவர்களோ தங்களுடைய சகல அக்கிரமங்களோடுங்கூட தேவனுடைய தானாபதிகளாகிய தீர்க்கதரிசிகளைப் பரியாசஞ்செய்து, அவருடைய வார்த்தைகளை அசட்டை பண்ணி நிந்தித்து வந்தார்கள். ஆதலால் சில

தரம் இந்தத் தாஸனுபதிகள் உக்கிர கோபத்தோடும், சிலதரம் அன்போடும், சிலதரம் அநுதாபக் குரலோடும், சிலதரம் புலம்பலோடும் தாங்கள் கூறவேண்டிய போதனைகளைக் கூறி வந்தார்கள். தங்களுக்கு ஒப்புக்கொடுக்கப்பட்ட தீர்க்க தரிசன ஊழியத்தை உத்தமத்தோடு செய்துவந்த பக்தர் அடிக்கடி நிந்தைகளையும், அடிகளையும், கட்டுகளையும், காவல் களையும் அநுபவித்து வந்தார்கள். அவர்கள் ஒவ்வொருவரு டைய சரித்திரத்தையும் நாம் விசாரித்தறிய ஆசைப்பட்டால் இப்பிரபந்தம் விரியுமாதலால் இரண்டொன்றை மாத்திரம் மாதிரி சரித்திரங்களாக தியானிப்போம்.

அநேக தீர்க்கதரிசனங்களின் சரித்திரங்களைப் பார்க்கி லும் புலம்பும் பக்தர் என்று நாம் அழைக்கும் எரேமியாவின் வரலாறுகள் சற்று விபரமாய் அறியக்கூடியதாயிருக்கிறது என்று சொல்லலாம். மேலும் இவர் தமது காலத்திலிருந்த இஸ்ரவேலரின் இடுக்கத்தையும் இம்சையையும் நினைத்து ஒரு புலம்பல் பாடியிருப்பதால் இவரை நாம் புலம்பும் பக்தர் என்று அழைப்பதில் பழுதுமில்லை. இவருடைய சரித்திரச் சுருக்கத்தால் இவர் ஊக்கமும், உண்மையும், பொறுமையும், சாந்தமும், அன்புமுள்ளவராய்த் தமது ஊழியங்களை நிறை வேற்றி வந்தாரென்று தெளிவாய் விளங்கும். இது தேவ ஊழியக்காரன் ஒவ்வொருவனுக்கும் இருக்கவேண்டிய லட்ச ணங்கள்தானே. இச்சிறந்த குணங்களோடு தேவ பணி விடையை நிறைவேற்றி வருகிறவன் தன் வேலையில் தேவா சீர்வாதம் இருப்பதைத்தானே காணக்கூடும். இம்மட்டும் பொதுவாக பேசின காரியங்களை நாம் நிறுத்தி எரேமியாவின் சரித்திரவரலாறுகளைச் சற்று ஆழ்ந்து ஆராய்வோமாக.

இவர் தமது தாயின் கர்ப்பத்திலிருக்கும்போதே தீர்க்க தரிசியாகும்படி தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டார். இது எவ்வளவு சிறந்த பாக்கியமென்று சொல்லவேண்டியது! இவருடைய தகப்பனார் ஒரு ஆசாரியனாயிருந்தார்; இவருடைய தாயும் சாதாரணமான ஸ்திரீயாயிராமல் தேவ தாபக்தியில் முற்றி உன்னத அருள் பெற்றவளாகவே இருந் தாள் என்று சொல்லவேண்டியது. இவரைப்பற்றி தேவன் கொண்டிருந்த தீர்மானம் இன்னதென்று அவருடைய பெற்

ருருக்குத் தெரியவில்லே. அவர் பால்குடி மறந்து அங்கு மிங்கும ஓடித்திரியுங்காலத்தில் மற்றப் பிள்ளைகளிடத்தில் காணுத நற்குணம் தங்கள் குமாரனுக்கு இருக்கிறதென்று அவர்கள் கண்டு உள்ளத்தில் மகிழ்ச்சியடைந்திருக்கலாம்.

அவர் சிறு பிராயமாயிருக்கும்போது (சிலர் நினைக்கிற படி அவர் பதினுலு வயதாயிருக்கும்போது) கர்த்தருடைய வார்த்தையைத் தீர்க்கதரிசனமாகக் கூறும்வரம் வந்திறங் கிற்று. ஒரு வேளே இந்தவரம் இராச்சொப்பனத்தின் மூலமாயாவது பகல் தரிசனத்தினுலாவது வந்திருக்கவேண்டி யது. ஆவியின் பிரகாரமாய் அந்த வரம் அடக்கப்படக் கூடாததாயிருந்தும் மாம்சப் பிரகாரமாய் தம்மை ஒரு சிறு பிள்ளைதானே என்று உணர்ந்துகொண்டு, பாலிய வயதின் பெருமை மேற்கொள்ளாதபடி தடுத்துக்கொண்டு தனக்கு தரிசனமான ஆண்டவரை நோக்கி, 'ஆ! கர்த்தராகிய ஆண்ட வரே, இதோ நான் பேச அறியேன், சிறு பிள்ளையாய் இருக் கிறேன்' என்று சொல்லித் தம்மைத் தாழ்த்திக்கொண்டார். இதினுலே தேவ ஊழியத்துக்கு அவர் வெறுப்பைக் காட்டினு ரென்று ஒருக்காலும் சொல்லக்கூடாது. அந்த உன்னத தொழிலேச் செய்யும்படி தாம் தகுதியுடையவரல்லவென்று தம்மைக் குறைவுபடுத்திக்கொள்ளுகிறதாகவே நாம் நினைக்க வேண்டியது. அப்போது கர்த்தர், 'நான் உன்னைத் தாயின் வயிற்றில் உருவாக்கு முன்னே உன்னை அறிந்தேன்; நீ கர்ப்பத்திலிருந்து வெளிப்படுமுன்னே நான் உன்னைப் பரிசுத்தம் பண்ணி, உன்னை ஜாதிகளுக்கு தீர்க்கதரிசியாகக் கட்டளையிட்டேன்' என்று சொன்னுர். இந்த வாசகம் அவரைத் தைரியப்படுத்துகிறதாயிருந்தது. அவர் உருவாகு முன் அவரை அறிந்தவர் தீர்க்கதரிசி யாக்குகிறபோது இனித் தடை சொல்லலாமா? கர்ப்பத்திலே அந்த வேலேக் கென்று பிரித்தெடுக்கப்பட்டு பரிசுத்தமாக்கப்பட்டிருக்கை யில் இனி பின்வாங்கலாமா? கூடாதே.

மேலும் கர்த்தர் அவரை நோக்கி, 'நான் சிறு பிள்ளை யென்று நீ சொல்லாதே; நான் உன்னை அனுப்புகிற எல்லா இடத்திலும் நீ போய் நான் உனக்குக் கட்டளையிடுகிறதை யெல்லாம் நீ பேசுவாயாக; நீ அவர்களுக்குப் பயப்பட

வேண்டாம்; உன்னைக் காக்கும்படி நான் உன்னுடனே இருக்கிறேன்' என்று சொன்னதோடு, 'கர்த்தர் தமது கரத்தை நீட்டி அவருடைய வாயைத்தொட்டு, இதோ, என் வார்த்தைகளை உன் வாயிலே வைக்கிறேன்' என்று வரங்கொடுத்து, 'பார், பிடுங்கவும் இடிக்கவும், அழிக்கவும் கவிழ்க்கவும், கட்டவும் நாட்டவும் உன்னை நான் இன்றைய தினம் ஜாதிகளின் மேலும் ராஜ்யங்களின் மேலும் ஏற்படுத்துகிறேன்' என்று அதிகாரங்கொடுத்தார். இவ்வளவு வரங்களோடும் அருளோடும் உலகத்தில் தீர்க்கதரிசனப் பட்டம்பெற்ற மனுமகன் ஒருவனுமில்லையென்று சொல்லவேண்டியது. இந்த வாசகம் கூறப்பட்டவுடனே புலம்பும் பக்தர் வெற்றி மனுஷனுனர் என்று சொல்லவேண்டியது. பாலியன் என்று புலம்பின அவர் பஞ்சுக் கிழவனைப்போல நடந்துகொண்டார். அது முதல் ஒருவரும் அவரைப் பாலியன் என்று எண்ணவுமில்லை; அவருடைய வாயிலும் முகத்திலும் விளங்கிய ஜாடையால் அவரை மகா முதியோனைப்போலவே எண்ணி வந்தார்கள். கர்த்தருடைய காவலுக்குள்ளிருந்து அவருடைய திருக்கரத்தால் தொடப்பட்டு, அவருடைய வசனத்தையே ஆகாரமாக எண்ணி அவரால் அதிகாரம் பெறுகிற குருவுக்கு அப்புறம் வயதைப்பற்றி என்ன அச்சம், மற்றதைப்பற்றி என்ன அச்சம்? அங்கிஷத்தில் அவர் தீர்க்கதரிசியின் உத்தியோகத்தைத் தாழ்ச்சியுள்ள மனதோடு ஏற்றுக்கொண்டார்.

எரேமியா தன்னிஷ்டப்படி தீர்க்கதரிசி உத்தியோகத்தை எடுத்துக்கொள்ளவில்லை. இதில் ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் நல்ல படிப்பினையுண்டு. உத்தம பக்தர்முதலாய் தேவ ஊழியராக அதிகாரம்பெற பயப்படுகிறதுண்டு; ஆனால் கள்ளத் தீர்க்கதரிசிகள்மாத்திரம் ஒருவரும் தேடாவிட்டாலும் தாங்களே தங்களைத் தீர்க்கதரிசிகளாக்கிக்கொள்ளுகிறதுண்டு. இவர்களில் சிலர் தாங்கள் பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டோம் என்றும் துணிந்து சொல்லிக்கொள்ளலாம்; இல்லை, அவர்கள் பண ஆசையினாலும் பேர்பிரஸ்தாபத்தினாலும் ஏவப்பட்டவர்களேயன்றி வேறல்ல. 'சம்மனசுக்கள் கால்வைக்கப் பயப்படும் இடங்களில் சாத்தான் கூத்தாடப் பார்க்கிறான்' என்று ஒரு வாசகமுண்டு. அதுபோல பரி

சுத்தர் பயத்தோடு விலகும் ஊழியத்துக்குப் பண ஆசைக் காரரும் பொல்லாதவர்களும் பலத்தோடு விரைந்தோடு கிறதுண்டு. இந்தக் காலத்தில் கல்தேய ஜாதியார் யூதரை மடக்கும்படி அணிவகுத்து வந்தார்கள். இந்தச் சங்கட மானது தற்செயலாய் உண்டானதாயிராமல் அவர்களுடைய பாவத்தினுலேதான் உண்டானதென்று உணர்த்தும்படியாக ஒரு தகுந்த ஆள் வேண்டியதாயிருந்தது. இந்தப் பெரிய கிரியையை நிறைவேற்றும்படி எரேமியாவுக்கு மிஞ்சிய ஆள் அக்காலத்தில் இருந்ததில்லை. இதினுல் அநேக உபத்திர வங்களும் சங்கடங்களும் அவருக்கு நேரிடுமென்பதும் தீர்க்கதரிசிக்குத் தெரிந்திருக்கிறது; அரசனுடைய ஆக்கினு சக்கரமும், சேனுபதிகளின் சினமும், தளகர்த்தரின் தண்டாயுதமும், போர்வீரரின் கூரிய ஆயுதங்களும், பிரபுக் களின் பிரம்பும், கத்திக்கட்டிகளின் கட்கமும், வில்வீரரின் அம்பும், குடிகளுடைய கூக்குரலும் தமக்கு விரோதமா யிருக்குமென்று அவர் நன்ருய் உணர்ந்திருந்தபோதிலும் உன்னத அபிஷேகங்கொடுத்த பலத்தால் பாலிய கூச்சமற்று வெண்தாடிநீண்ட வேதியன்போல் தேவதா வேகமுண்டார். இதுவன்றி அவர் புறப்படும் தேவவேலையில் அவரைத் தைரியப்படுத்தும்படியாக 'அவர்கள் உனக்கு விரோதமாக யுத்தம்பண்ணுவார்கள், ஆனுலும் உன்னை மேற்கொள்ளமாட் டார்கள். நீ அவர்கள் முகத்திற்கு அஞ்சாதிரு; உன்னை ரட்சிக்கும்படிக்கு நான் உன்னுடனே இருக்கிறேன்' என்றும் தேவன் சொன்ஞர். இது வெறும் வாசகங்களாய் மாத்திர மிராமல், புலம்பும் பக்தர் அங்குமிங்கும் போய் ஆயாச மின்றி ஆண்டவருடைய ஊழியத்தை நடத்தும் வானத்து வாகனம்போலுமிருந்தது.

நீ அவர்கள் முகத்துக்கு அஞ்சாதிரு,
நான் உன்னுடனே இருக்கிறேன்

என்ற இரு வாசகங்களும் உத்தம ஊழியக்காரன் தேவபணி விடையை நிறைவேற்றும்படி விரைந்துசெல்லும் இரு செட்டைகள் போலிருக்கின்றன. இவ்விரு செட்டைகளை யும் மோசேயும் யோசுவா என்னும் தளகர்த்தனும் வேறு சில பக்தரும் தரித்துக்கொண்டு தம் தம் ஊழியங்களைத்

தவறாது நடத்திவந்து முத்திப்பேறு பெற்றார்களென்று புத்த பூர்வமாய் விளங்குகிறது. இது அக்காலத்து தேவ ஊழியருக்குமாத்திரமல்ல, எக்காலத்து ஊழியருக்குமுரிய பொதுச் செட்டைகள்போலிருக்கின்றன. ஆதலால் இதை வாசிக்கும் தேவ ஊழியக்காரனே! நீயும் அக்கிரமக்காரருடைய முகத்துக்கு அஞ்சாதிருந்து உன் வேலையை நிறைவேற்றிவா, கர்த்தர் உன்னுடனிருப்பாராக.

எரேமியா தேவாபிஷேகம் பெற்றவுடனே தமது ஊழியத்தை ஆரம்பித்தார். அவர் அக்காலத்திலிருந்த விக்கிரகாராதனை, நன்றிகேடு, வேசித்தனம் முதலியவை சகல அருவருப்புகளைத் திறந்துசொல்லி, அவர்களுக்கு வரவிருக்கும் மோசநாசங்களைக் கூசாமல் கூறினார். அவர்களைத் தாறுமாறுமாய்த் திரிதலையும் பெண்ணொட்டகத்துக்கும், தன் இச்சையின் மதவெறியிலே காற்றையுட்கொள்ளுகிறதுமான காட்டுக்கழுதைக்கும் ஒப்பிட்டுப்பேசி உணர்த்தினார். அவர்களுடைய கேட்டினிமித்தம் கண்டபடி தூஷிக்க வேண்டுமென்று இப்படிப் பேசாமல், அவர்களைக் குணப்படுத்தலுக்கு ஏவவே பிரயாசப்பட்டார். இவருடைய போதனையின் போங்குகளனைத்தும் அக்காலத்திலிருந்த அரசனுக்கும் பொருந்தினதாயிருந்தது. ஆகவே அரசனும் தீர்க்கதரிசியும் ஒன்றாகக் கூடிக்கொண்டு யூதரை மனந்திரும்பும்படி பிரயாசப்பட்டார்கள். இப்படி இருவரும் கூடி ஒத்து வேலைசெய்தபோதிலும் உத்தம குணப்படுதலும் மனமாறுதலும் லேசில் உண்டாகவில்லை. ஜனங்கள் சில காலம் தங்கள் அக்கிரமங்களிலிருந்து ஓய்ந்தும் அப்பால் மறுபடியும் பழைய அக்கிரமங்களைப் பின்பற்றியும் வந்தார்கள். தேவஊழியக்காரர் துரைத்தனத்தால் உதவிபெறும்போது சந்தோஷப்படவேண்டியதுதான்; அப்படி உதவி கிடையாதிருக்கும்போது சஞ்சலப்படக்கூடாது ஏனெனில் குணப்படுதலும் மனந்திரும்புதலும் அரசரின் துணைக் கருவிக்குள் அல்ல, ஆண்டவருடைய ஆவியின் அருளுக்குள்ளிருக்கிறது.

தீர்க்கதரிசிக்குத் துணைநின்று தேசத்தைப் பக்தி நிலைமைக்குக் கொண்டுவரும்படி முயன்ற அரசனுக்கு

யோசியா என்று பெயர். இவருடைய அரசாட்சிக்காலமட்டும் எரேமியாவுக்கு யாதொரு சங்கடமும் நேரிடவேயில்லை. யோசியா முப்பத்தொரு வருஷம் அரசாண்டார். அதில் பிந்தின பதினெட்டு வருஷம் இவர் தீர்க்கதரிசனமுரைத்துவந்தார். அரசனுடைய மரணம் அவருக்கு ஆழ்ந்த துயரத்தைக் கொடுத்ததால் அதை நினைத்து ஒரு புலம்பல் பாடினார். அந்தப் புலம்பலின் போக்கு இன்னதென்று நமக்குத் தெரியாது.[1] அரசன் சமாதி கண்டது முதல் இவருடைய ஜீவிய சக்கரம் தன் அயனத்தில் மாறுதல் பெற்றது. அதன் வரலாறுகள் பின்வரும் விபரங்களால் தெளிவாக விளங்கும்.

முதலாவது அவருடைய பகிரங்க சத்துருக்களாய் எழும்பினவர்கள் அவருடைய ஜனன ஊரிலுள்ள சுயபந்துக்களான ஆசாரியர்தான். சுயஊராரும் சுயபந்துக்களும், சுய உத்தியோகஸ்தரும் விரோதிகளாய் எழும்புகிறதை உலகத்தில் சகஜமாய்ப் பார்க்கிறோம். மனுஷஜாதியின் பல லட்சணக்கேடுகளில் இது பொதுவாயிருக்கிறது. எந்தத் தேசத்திலும் பாஷைக்காரரிலும் இந்த முறைப்பாடுதான் இருக்கிறது. இதற்குக் காரணம் பொறாமைதான். ஆனதோததிலிருந்த ஆசாரியர் தங்கள் ஊரிலும், பந்துவிலும், தொழிலாளியிலும் இப்படிப்பட்ட பிள்ளையொன்று எழும்பினதற்காகத் தேவனை ஸ்தோத்திரிக்கவேண்டியதல்லவா புத்தி; இல்லை; அவர்கள் அந்தப் பரிசுத்த குணத்தை விட்டு எரேமியாவை நிந்திக்கவும் துன்பப்படுத்தவுங் கூடுமானால் கொலைசெய்துபோடவும் பிரயாசப்பட்டார்கள். இதின் விபரமொன்றும் அவருக்குத் தெரியாது. அவர் யாதொரு கபடமின்றிச் சாதுவான ஒரு ஆட்டைப்போல் அவர்களுக்குள் சஞ்சரித்தபோதிலும், அவருடைய ஊழியம் அவர்களுடைய மனதுக்கு விரோதமாயிருந்தபடியாலும், அவர் அரசனென்றுவது, அடிமையென்றுவது, ஆசாரியனென்

[1] எரேமியா இச்சமயத்தில் பாடின புலம்பல் யோசேப்புஸ் காலத்தில் யூதருக்குள் இருந்தது. அது நமது வேதாகமத்திலிருக்கிற புலம்பல் ஆகமந்தான் என்று சொல்லக்கூடாது. யோசியாவின்மேல் பாடின புலம்பல் ஆகமத்தைப்பற்றி 2 நாளாகமம் 35:25லும் காண்கிறோம். அது பிந்திய காலத்தில் எப்படியோ காணமற்போயிருக்கலாம்.

ருவது, சபையாரென்ருவது பாராமல் தேவ அருளால் அவரவருடைய அக்கிரமங்களை யெடுத்து வெளியே போட்டு,

'சீர்கெட்ட இஸ்ரவேலே திரும்பு'

என்று எங்கும் பிரசங்கம்பண்ணிக்கொண்டு வந்ததால் அவர்கள் அவரைக் கொலைசெய்துபோட்டால் நலமென்று நினைத்தார்கள். ஒருவேளை அவருடைய பாலிய வயதும் மனதை வருத்தப்படுத்தியிருக்கலாம். இப்படிப்பட்ட குணத்தை இக்காலத்திலும் காணலாம். தேவனுடைய இரகசியங்களில் அருள்பெற்றுப் பாவிகளைத் தேவஞானத்தோடு உணர்த்தும் போதகன் ஒருவனிருந்தால், அவனுடைய பிரஸ்தாபம் தங்களுடைய கள்ளப் பிரஸ்தாபங்களைக் கெடுத்துவிடுகிறதென்று பார்த்து அவனைக் கருவறுத்துப் போடும்படி பிரயாசப்படுகிற சுபாவம் நல்லதல்ல. மேலும் வயதையிட்டும் வம்சத்தையிட்டும் ஒரு குருவையும் மதியாமல் அவன் மூலமாய் விளங்கும் தேவசித்தத்தினிமித்தம் அவனை மதிப்பது புத்தி. தெய்வீக பக்தி விநயத்தை சபையில் ஸ்தாபிக்கும்படி முயலுகிறவர்களைச் சபையார் நேசித்துக் கனப்படுத்தினபோதிலும், சுய குடும்பத்தாரும் சுய உத்தியோகஸ்தரும் அவர்கள்மேல் வன்கண்ணடைகிறதுண்டு. தங்களுக்கு அந்த அருள் பிரசாதமும் அனல் பிரசாதமும் இல்லாததுதான் அவர்கள் வர்மத்தின் உள் இரகசியம். ஒருவனுக்குக் கிடைத்திருக்கிற அருள் தனக்கில்லையானல் அதற்கு அவனு பழி? எந்த நல்ல ஈவும் நிறைவுள்ள எந்த வரமும் உயரத்திலிருந்து சுடர்களின் பிதாவினால் இறங்கிவருகிறது. அவர் ஆள் பார்த்து பட்சபாதம் பண்ணுகிறதுமில்லை, வயதும் வம்சமும் பார்த்துக் குறைக்கிறதுமில்லை. அவர் சித்தங்கொண்டு எவனுக்கு எவ்வளவு அள்ளிக்கொடுக்கிருரோ, அதுவே அவனவன்பெற்ற பாக்கியமாயிருக்கிறது. ஆதலால் இனி நாம் மற்றவர்களுக்குக் கிடைத்த வரங்களினிமித்தம் அவர்களைப் பகைக்கிறவர்களாயிராமல், நமக்கிருக்கும் குறைவை 'யாவருக்கும் சம்பூரணமாய்க் கொடுக்கிறவரும் ஒருவரையும் கடிந்துகொள்ளாதவருமான தேவனிடத்தில் கேட்போமாக,' அப்பொழுது கொடுக்கப்படும்.

எரேமியா தனக்குண்டான அவஸ்தையையிட்டு முறையிட ஆரம்பித்தபோது தேவன் அவருக்குத் துணைநின்று தமது சகாயத்தைச் செய்ததோடு, இன்னம் அதிக அவஸ்தைகளுக்கு நீ ஆயத்தமாயிருக்க வேண்டுமென்றும் உணர்த்தி வந்தார். உத்தம தேவ ஊழியக்காரன் தனக்குண்டாகும் பலவித அவஸ்தைகளின் தொகையை எண்ணிக்கொண்டு மலைக்கிறவனாயாவது, பின்வாங்குகிறவனாயாவது இராமல் தனக்குச் சகாயம் செய்பவரை நினைத்து மனம் ஆறிக் கொள்ளவேண்டியது. இவர் இதே நிலையைச் சிலகாலம் கையாடிக்கொண்டு வந்தபோதிலும், ஜனசதளங்களின் விரோதம் அவருடைய மனதை உதைக்கும் பெரு வெள்ளம் போல் அதிகப்பட்டதால் அவர் சிலகாலம் மனமுறிவுபட்டார். அந்த மனமுறிவால் ஒருதரம் 'என் தாயே! தேசத்துக்கெல்லாம் வழக்குக்கும் வாதுக்கும் உள்ளானவனாயிருக்கும்படி என்னை நீ பெற்றாயே. ஐயோ, எல்லாரும் என்னைச் சபிக்கிறார்களே' என்று பெருமூச்செறிந்தார். இவர் கர்ப்பத்தில் தேவ ஊழியத்துக்கென்று பரிசுத்தமாக்கப்பட்டபோதிலும், விழுந்துபோன ஆதாமின் சாயலையும் தன்மையையுமே உடையவராயிருந்தார். இந்தக் காலத்திலும் தேவன் அவருக்குத் தர்சனமாகி தமது கிருபையை உணர்த்தி தீர்க்கதரிசி ஊழியத்தைத் தைரியத்தோடு நடத்தி வரும்படி ஏவினார். தேவ ஊழியங்களில் உண்டாகும் சங்கடங்களுக்கு நாம் அஞ்சி முறையிடும்போது தேவன் அவைகளை நம்மைவிட்டு விலக்கிவிடாமல் தமது அருளை அபரிமிதமாய்த் தந்து மறுபடியும் ஊழியஞ்செய்யவே கற்பிக்கிறார். பரி. பவுல் தம்மைக் குத்திக்கொண்டிருந்த முள்ளுக்காக மூன்றுதரம் வேண்டிக்கொண்டபோதிலும் முள் நீக்கப்படவில்லை; ஆனால் கிருபை அருளப்பட்டதென்று பார்க்கிறோம்.

கிருபை அதிகப்பட்டதால் சத்துருக்களின் மும்முரம் குறையவில்லை. தேவ வாக்குத்தத்தத்தை அவர் சிரமேற்கொண்டு தேவதாசினத்தோடு அரசனையும் ஆசாரியர் பிரபுக்களையும் அவரவர் அக்கிரமத்தில் கடிந்துகொண்டு, தேவாவியின் ஏவுதலோடு நிறைந்து கல்தேயர் அவர்களைச் சிறைபிடித்துக்கொண்டுபோகும் காலம் சமீபித்திருக்கிறதென்று

கூறினார். இந்தத் தீர்க்கதரிசனம் குணப்படுதலையுண் டாக்காமல் மூர்க்கவெறியை எழுப்பிவிட்டது. சாத்தான் சத்தியத்தைக்கொண்டே சத்துருக்களை அதிகப்படுத்தி வருவதை உலக நடபடிக்கைகளில் சாதாரணமாய்க் காண் கிறோம். தாங்கள் சத்துருக்களின் கையில் கைதிகளாகி சங்கடப்படவேண்டிய திருக்குமென்று இவர் கூறிய தீர்க்க தரிசனங்களை தங்களை வீணாய்ச சபிக்கும் தீமொழி வாசகங்க ளென்று அவர்கள் தப்பாய் அர்த்தம்பண்ணி அவரை அதிக மாய்ப் பகைத்தார்கள். இப்படி அரசன்முதல் ஆண்டி வரையுமுள்ள சகலத் திரளாரும் அவரை விரோதித்து வந்தார்கள். ஊரெல்லாம் பகைக்கில் ஒருவன் என்ன செய்வான்? ஊரெல்லாம் பகைக்கிறதையிட்டு ஒருவனைப் பொல்லாதவனென்று தீர்க்கவுங்கூடாது. இவர் கர்வங் கொண்டு தலைக்கொழுப்பினால் இப்படிப்பட்ட சாப வார்த்தை களைக் கூறுகிறாரென்று அவர்கள் அனைவரும் யோசித்துக் கொண்டு இனி இவனைக் கொலை செய்வதேயன்றி வேறு காரியமில்லையென்று தங்களுக்குள் சொல்லிக்கொண்டார் கள். தமக்கு விரோதமாகச் செய்யப்படும் ஆலோசனை யனைத்தையும் எரேமியா அறிந்து கர்த்தரிடத்தில் அறிக்கை யிட்டு தமது வேலையை நிறைவேற்றி வந்தார்.

இவர் போன போக்கு ஆசாரியருக்கே பிடிக்கவில்லை. ராஜா அவருக்கு விரோதமாய் யாதொரு பிரயத்தனம் செய்யாதிருந்தாலும் பாஸ்கூர் என்ற ஆசாரியன் தேசாபி மானிபோலவும், ராஜாபிமானிபோலவும் எழும்பி, அவரை அடிக்கவும் காவலில் போடவும் துணிந்தான். ஆனாலும் அவன்தானே மறுநாளில் அவனை விடுதலை செய்துவிட்டான். ஒருவேளை அரசன் இவரை அப்படித் துன்பப்படுத்தக்கூடா தென்று கட்டளையிட்டிருக்கலாம். இவர் அடிபட்டுக் காவலில் வைக்கப்பட்ட விஷயமானது அவருக்குச் சொல்லி முடியாத மனக்கசப்பை உண்டாக்கிற்று. அச்சமயத்தில் அவர் பொது மனுஷனைப்போல கண்டபடியெல்லாம் பேசி மனம் நொந்தார். ஆதாமின் மகனுக்குள் எவ்வளவு கிருபை இறங்கினபோதிலும் அவனுடைய விழுதலின் பாவ நிறம் அவனைவிட்டு மாறிப்போகிறதேயில்லை.

இதற்கப்புறமுள்ள சரித்திரத்தில் எரேமியாவின் குண பாகங்கள் முற்றிலும் மாறியிருக்கிறதென்பதை நாம் காண் கிறோம். ஏனெனில் இம்மட்டும் அவருக்குச் சம்பவியாத சங்கடங்கள் நேரிட்டபோதிலும் அவர் முறுமுறுப்புக்கும், மனமுறிவுக்கும் இடங்கொடுக்கவில்லை.

அவர் தீர்க்கதரிசியாக தெரிந்துகொள்ளப்பட்டு சுமார் இருபது வருஷத்துச்குப் பின்பு (கி. மு. 610) யோயாக்கீம் என்கிற அரசன் செங்கோல் செலுத்திவந்தான். அரசன் மாறினாலும் இவருடைய தீர்க்கதரிசன போக்கு மாறவில்லை. அவர் கர்த்தருடைய ஆலயத்தின் பிரகாரத்தில் நின்று கொண்டு, அங்கே பணிந்துகொள்ளும்படி வந்த சகல குடிகளையும் தம்மண்டை வரும்படி கூப்பிட்டு, அவர்களுடைய பாவங்களை அவர்களுக்கு எடுத்துக்காட்டி மனந்திரும்புதலுக் கேற்ற போதனைகளைச் சொன்னார். அந்தப் போதனையோடு அவர்கள் மனந்திரும்பாத பட்சத்தில் சிறையாக்கப்படுவார் கள் என்றும் சொன்னார். ஆசாரியரும் தீர்க்கதரிசிகளும் குடிகளும் இதைக் கேட்டு அவர்மேல் சீறி அவரைப் பிடித்து நீ சாகவே சாகவேண்டும், இந்த ஆலயமும் நகரமும் குடியில்லாமல் பாழாய்ப் போகுமென்று நீ சொன்னாயல்லவா? நீ சாகவே சாகவேண்டுமென்று நாய்களைப்போல் அவர்மேல் சாடினார்கள். உடனே அவரைக் கைதியாக்கி பிரபுக்கள் சங்கத்திற்கு முன்பாக நிறுத்தி விசாரணைசெய்ய, அவர் களும் இநத மனுஷன்

மரண ஆக்கினைக்குப் பாத்திரன்

என்று தீர்ப்பு செய்தார்கள். அச்சமயத்தில் அவர் பயப் படவுமில்லை. தமது தரிசன மொழிகளை மாற்றவுமில்லை. தம்மை அவர்கள் கொன்றாலும் கொல்லட்டும் என்று எண்ணி தான் பேசின வார்த்தைகளனைத்தும் யதார்த்தமென்றும், ஜனங்கள் மனந்திரும்ப வேண்டுமேயன்றி இப்படிக் கொலை பாதகம் செய்யக்கூடாதென்றும் புத்தி சொன்னார். இதினால் அவரைக் கொலைசெய்ய நினைத்தவர்களுடைய மனம் மாறிற்று; அவர்களில் சிலர் மெய்யுணர்வடைந்து அவரைக் கொல்லக்கூடாதென்று சொன்னார்கள்; சில பேலியாளின் பிள்ளைகள் கொல்லத்தான் வேண்டுமென்று சாதித்தார்கள்.

கடைசியாக அவருக்குச் சகாயஞ்செய்யும் தேவன் சத்துருக்கள் கையில் அவரை ஒப்புக்கொடுக்கவில்லை. இச்சமயத்தில் இவருக்கு இன்ன கட்டளை கொடுத்தார்கள் என்று நமக்கு விளங்குகிறதில்லை. ஒருவேளை இனிமேல் இப்படி பகிரங்கமாய் ஆலயப் பிராகாரத்திற்கு வந்து முன்போல போதனை செய்யக்கூடாதென்று ஆக்கியாபித்தார்கள்போலிருக்கிறது.

அப்பால் எரேமியா தேவ சித்தப்படி தம்முடைய தீர்க்க தரிசனங்களையெல்லாம் எழுதும்படி ஒரு எழுத்துக்காரனைத் திட்டஞ்செய்து அந்தரங்கத்தில் அவை அனைத்தையும் ஆயத்தப்படுத்தி பல இடங்களிலுமிருந்து ஜனங்கள் உற்சவங்களுக்காக வரும்போது அவனைக்கொண்டு வாசிக்கும்படி செய்தார். பாருக்கு என்ற எழுத்துக்காரன் எரேமியாவின் மனம்போல அவைகளை எழுதி உற்சவ காலத்தில் கும்புகள் நடுவில் கூக்குரலிட்டு வாசித்தான். இந்தச் சமாசாரம் பிரபுக்களுக்கும் அரசனுக்கும் எட்டவே, அந்த வாசகங்களைத் தாங்கள் அறியும்படியாக புஸ்தகத்தைக் கேட்டு வாங்கினார்கள். அரசன் அவைகளை வாசிக்கக் கேட்கவே, கோபாக்கினையால் மூண்டு ஒரு சூரிக்கத்தியினால் அந்தப் புஸ்தகத்தை அறுத்து நெருப்பிலிட்டு எரித்துப்போட்டு, தீர்க்கதரிசியையும் எழுத்துக்காரனையும் தன்னிடம் பிடித்து வரக் கட்டளையிட்டான். இச்சமயத்தில் எரேமியாவும் அவருடைய சிநேகிதனும் அகப்படாதபடி எங்கேயோ ஒளித்துக் கொண்டார்கள். இதை நாம் அவர்களுடைய சாமர்த்தியமென்று இலேசாய் எண்ணிவிடாமல் தேவகரம் அவர்களைக் காத்ததென்று பக்தி விநயத்தோடு ஒத்துக்கொள்ள வேண்டியதாயிருக்கிறது. ஏனெனில், 'கர்த்தர் அவர்களை மறைத்தார்' என்று வேதாகமம் அறிவிக்கிறது. அதற்குப் பின்பு இவர் மறுபடியும் ஒரு பிரதியை எழுதி, அதில் அரசன் கடைசியாக அவரைப் பிடித்து கொலைசெய்து போடும்படி யோசித்ததினிமித்தம் வரும் ஆக்கினைகளையும் கூறியிருந்தார். அதுவும் முன்போல் பண்டிகைக் காலத்தில் பகிரங்கமாய் வாசிக்கப்படச் சொன்னார். பாருக்கு தீர்க்க தரிசி சொன்னபடியே செய்தும் யாதொரு கலகமும் குழப்பமும் நேரிடவில்லை. ஒருவேளை தேவன் அவருடைய

சத்துருக்களின் மனதை மடக்கிப்போட்டு தமது வல்லமைக்கு அஞ்சும்படி கிருபை செய்திருக்கலாம்.

எரேமியா எருசலேமின்மேலும் யூத ஜனங்கள்மேலும் வருமென்று தேவனால் ஏவப்பட்டு கூறின எல்லா சங்கடங்களையும் தமது கண்ணால் கண்டுகொண்டார். கர்த்தரிடத்தில் மனந்திரும்பாமல் எரேமியாவின் வார்த்தைகளைத் தள்ளிப்போட்டு, கள்ளத் தீர்க்கதரிசிகளின் பொய்த் தீர்க்கதரிசனங்களை நம்பின அரசனும், அவன் வீட்டாரும், அந்நாட்டுப் பிரபுக்களும் இவர் கண்காண பாபிலோனுக்கு சிறையாகப் போனார்கள். இவர் தமது சுயதேசத்திலிருந்து அவர்களுக்கு ஆறுதலாக கடிதம் அனுப்பிவந்தார். அவர் அனுப்பின கடிதத்தில் சிறையிருப்பிலிருக்கும் ஜனங்கள் எப்படியும் எழுபது வருஷத்துக்குப் பின்பு திரும்பிவந்து இடிந்து போன ஆலயத்தையும் நகரத்தையும் மறுபடியும் கட்டிச் சுகமாய் வாழ்வார்கள் என்று காட்டியிருந்தார். இது அவர்கள் சிறையிருப்பின் கஷ்டங்களையெல்லாம் மாற்றும் மருந்துபோலிருந்தது. இவர் சிறையிருப்புக்கு போகாவிட்டாலும் சுய ஊரில் அவருக்குண்டான சங்கடங்கள் கொஞ்சமல்ல. சிறைபிடிக்கப்பட்டுப் போயிருந்தால் இவருக்கு அவ்வளவு சங்கடங்கள் நேரிட்டிருக்கமாட்டாது. ஏனெனில், அந்தக் காலத்தில் தீர்க்கதரிசிகள் என்று தங்களை அழைத்துக்கொண்டு தெருத்தெருவாய்த் திரிந்த கள்ளத் தரிசனக்காரர் பலர் இருந்தார்கள். தேவனுடைய உத்தம தீர்க்கதரிசியின் வார்த்தைகளை பொய்யாக்க வேண்டுமென்பதே அவர்கள் முழு நோக்கமாயிருந்தது. எரேமியா ஆபத்துக் கிட்டியிருக்கிறதென்றால் அவர்களெல்லாரும் கூடி, அது பொய், ஆதாயங் கிட்டியிருக்கிறதென்றும், சகாயம் உண்டாகும் என்றால் இல்லை, சஞ்சலம் வருகிறதென்றும், வாதுகூறி வழக்கிட்டும் வந்தார்கள். இந்த எதிர்ப்போதனைகளாலும் கள்ளத் தரிசனங்களாலும் தேசம் கெட்டுப் போயிற்று. குணப்பட மனமாகிறவர்களையும் இவ்வண்ணமாக இவர்கள் கெடுத்துப்போட்டார்கள். இது யூதப் போதகரின் பிரிவினைகள் என்று சொல்லவேண்டியது. இப்படிப்பட்ட கள்ளப் போதகரும் பொய்த் தீர்க்கதரிசனக் காரரும் கிறிஸ்து சபையில் எக்காலத்திலும் நிலைத்திருக்

கிறார்கள். அப்போஸ்தலருடைய காலத்திலும் இந்தப் பிரிவினைக்காரர் எழும்பி சத்திய உபதேசங்களைப் புரட்டி சபைகளைக் கெடுத்துவந்தார்கள். நாம் தீர்க்கதரிசிகள் என்று வேஷம்போட்டுத் திரிகிறவர்களையெல்லாம் நம்பலாகாது.

இந்தக் கள்ளத்தீர்க்கதரிசிகள் எரேமியாவை இலேசில் விடவில்லை. அரசனும், பிரபுக்களும், ஆசாரியரும், குடிகளும், எல்லாம் இவர்கள் பட்சத்தில்தானிருந்தார்கள்; ஏழை எரேமியா மாத்திரம் தனிப்பட்டார். என்றாலும் அவரிடத்தில் மாத்திரம் தேவன் தமது சித்தத்தை வெளிப்படுத்திவந்தார். அவரும் தமது எதிரிகளின் தொகையையும் அவர்கள் அந்தஸ்தையும் கவனித்து எவ்வளவும் மயங்காமல் சத்தியத்தைச் சத்தமிட்டுக் கூறினார். வாளைக் கண்டு அவர் வாய்மூடினதுமில்லை, கயிற்றைக் கண்டு அவர் கடந்து போகவுமில்லை, தடியைக் கண்டு அவர் தடுமாறிப் பேசவுமில்லை. கூட்டம் அதிகப்பட்டதற்குத் தக்கதாய் அவருடைய கூக்குரல் அதிகப்பட்டது, பிரபுக்கள் அதிகப்பட்டதற்குத் தக்கதாய் அவருடைய பேச்சின் உறுதியும் பலத்தது. என்னவந்தாலும் வரட்டும் என்று சொல்லி, அவர் தேவனுடைய திருவுளத்தின் செயல்களைத் தமக்கு வெளிப்படுத்தப்பட்டபடியே கூறிவந்தார்.

எசேக்கியாவின் அரசாட்சி காலத்தில் இந்தக் கள்ளத் தீர்க்கதரிசிகள் இவருக்குச் செய்த கஷ்ட ரோஷ்டங்களுக்குக் கணக்கில்லை. அக்காலத்திலுண்டான அவஸ்தைகளில், அரசன் பாபிலோன் அரசாட்சிக்கு அடங்கிப்போவதும் தேவ தீர்மானமாயிருந்தது. இவர் அந்தத் தீர்மானத்தைச் சொன்னபோது எதிரிகள் அது கூடாதென்று எதிர்த் தீர்க்கதரிசனங்கள் சொன்னார்கள். அரசனுக்கு அந்தக் கள்ள முகஸ்துதி வாசகங்கள் இணக்கமாயிருந்தது. சில காலத்திற்குள்ளாக அதினிமித்தம் உண்டான லாபத்தை அரசனே கண்டான். எப்படியெனில், பாபிலோன் அரசன் எருசலேமை முற்றிகைபோட்டு அதின்மேல் யுத்தஞ்செய்தான்; அச்சமயத்தில் அரசன் சில ஸ்தானாபதிகளை இவரிடம் அனுப்பி, தேவனால் தங்களுக்குச் சகாயங்கிடைக்கும்படி

விண்ணப்பம்பண்ண வேண்டுமென்று கேட்டான். அவரோ முன்போல தைரியமூண்டு அவர்களுடைய அழிவு கர்த்தரால் தீர்மானிக்கப்பட்டிருக்கிறதென்றும், அவர்கள் அடிமைகளாவார்களென்றும் சொல்லியனுப்பினார். கர்த்தரின் ஊழியக்காரருடைய நல்ல ஆலோசனைகளையும் போதனைகளையும் அசட்டைபண்ணிப்போட்டு, தங்கள் ஆபததுக் காலத்தில் எங்களுக்காக ஜெபஞ்செய்யுங்கள் என்று கேட்கும் சபையாரை இக்காலத்திலும் காணலாம். இவர் இன்னும் தமது வாசகத்தை மாற்றவில்லையென்று இது தேவசித்தமல்ல அவருடைய சொந்தக் கருவமான வார்த்தையென்றும் அரசனும் பிரபுக்களும் தப்பாக எண்ணி எரிச்சல் மூண்டு அவரை ராஜதுரோகிபோல் காவலில் போட்டார்கள்.

எரேமியா காவலறைக்குள் சஞ்சரித்தபோதிலும் கர்த்தருடைய கிருபை அவரைவிட்டு எடுபட்டுப்போகவில்லை. சாலையில் சாத்தானின் பிள்ளைகள் நடுவில் வாசம்பண்ணுகிறதைவிட காவலில் கர்த்தருடன் வாசம்பண்ணுவது நல்லதல்லவா! இவர் காவலறையில் வைக்கப்பட்டதுமுதல் தீர்க்கதரிசன விஷயத்தில் அவர் வாய் அடங்கிப்போகவுமில்லை. தேவன் வேளாவேளை தமது சித்தத்தை இவருக்கு வெளிப்படுத்திவந்தார். இவர் அதை உடனுக்குடனே அரசனுக்கும் மற்றவர்களுக்கும் அறிவித்துவந்தார். மேலும் அவர் காவலிலிருக்கையில் அவருடைய வம்சச் சொத்தொன்றைத் தமது குடும்பச் சொத்தாகவும் வாங்கினார். இப்படி இவர் சொத்து வாங்கி அதை முத்திரைப் பத்திரத்தால் தன்னுடையதாக்கிக்கொண்ட விஷயமானது சிறையாய்ப்போன இஸ்ரவேலர் குறிக்கப்பட்ட காலத்துக்குப் பின் திரும்பவும் எருசலேமுக்கு வந்து அவரவருடைய காணியாட்சிகளைக் கையாட்சி செய்துவருவார்கள் என்று தேவன் சொன்ன வாக்கை நிச்சயப்படுத்தும் செய்கையாகவும் இருந்தது. இதினாலே தேவ ஊழியக்காரர் சொத்துகளை வாங்கி உலகத்தொல்லையிலும் பிரவேசித்து வரலாம் என்று பொருள்கொள்ளாது யூதாவின் சிறையிருப்பு ஒரு காலத்தில் மாறி அவரவர் கையாட்சி அவரவருக்குக் கிடைக்குமென்பதை தெளிவாய் உணர்த்திக்காட்டும் ஒரு திருஷ்டாந்தமாய் இருக்கும்படி தீர்க்கதரிசி தேவ கட்டளை

யால் இந்தப் பிதிரார்ஜிதச் சொத்தைக் கொண்டாரேயன்றி வேறல்ல.

இந்தக் காவலறைக்குள் வரப்போகிற இரட்சகரைப் பற்றிய வாக்குத்தத்தமும் அவருடைய திருச்சபையின் வாழ்வும் தீர்க்கதரிசிக்கு அறிவிக்கப்பட்டது. ஆதாமுக்கு 'ஸ்திரீயின் வித்து' என்னும் பேராலும், ஆபிரகாமுக்கு 'உன் சந்ததி' என்னும் பேராலும் குறிப்பிக்கப்பட்ட லோகரட்சகர் எரேமியாவுக்கு 'நீதியின் கிளை' என்னும் பேரால் குறிப்பிக்கப்பட்டிருக்கிறார். 'அந்நாட்களிலும் அக்காலத்திலும் தாவீதுக்கு நீதியின் கிளையை முளைக்கப் பண்ணுவேன்; அவர் பூமியிலே நீதியையும் நியாயத்தையும் நடப்பிப்பார். அந்நாட்களில் யூதா ரட்சிக்கப்பட்டு எருச லேம் சுகமாய்த் தங்கும். அவர் எங்கள் நீதியாயிருக்கிற கர்த்தர் என்பது அவருடைய நாமம்' என்று தீர்க்கதரிசிக்கு அறிவிக்கப்பட்டது. இதைக் கேட்கும் கடவுளின் தாசன் ஒவ்வொருவனும் தன் இரு கைகளையும் வானத்துக்கு நேராக ஏறெடுத்து தேவ அன்பை ஸ்துதிக்கவேண்டியதுண்டு. தேவன் தமது பிள்ளைகளை மறந்துபோகாமல் காலாகாலத்தில் தமது வாக்குத்தத்தங்களை நினைப்பூட்டி தம்மண்டை இழுத்துக்கொண்டு வருகிறவரா யிருக்கிறார்.

பாபிலோன் அரசன் முற்றுகைபோட்டிருந்த காலத்தில் சிதேக்கியா அரசன் ஜாடையாய் மனந்திரும்புதலுக்குரிய அடையாளத்தைக்காட்டினான். எப்படியெனில், பிரபுக்கள் ஏழை யூதரை அடிமைகொண்டுவந்தார்கள்; அரசன் அப்படிப்பட்ட அடிமைகளை விடுதலைசெய்துவிடவேண்டு மென்று கண்டிப்பான உத்தரவுசெய்தான். இதினால் யூதேயாதேசத்தில் கொஞ்சம் மாறுதல் உண்டாயிற்று. என்றாலும் இது விருத்தியாகவுமில்லை, நீடித்திருக்கவு மில்லை. எப்படியெனில், முற்றிக்கைபோட்டிருந்த பாபி லோனியர் தங்களுடைய எதிரிகளாகிய எகிப்தியரை முறியடிக்கும்படி திரும்பிப்போக நேரிட்டது. அந்தக் காலத்தில் அரசனும் பிரபுக்களும் தங்கள் தீர்மானங்களை மாற்றி பழையபடி தங்கள் சகோதரரை அடிமைகொள்ள வும் தேவபக்தியிலிருந்து விலக்கவும் துணிந்தார்கள்.

எரேமியா இக்காலத்தில் காவலறையிலிருக்கவில்லை; சத்துருக்கள் ஏதோ காரணத்தால் அவரை விடுதலைசெய்தார்கள் ஒருவேளை இவருடைய ஜெபத்தினுல் சத்துருக்கள் தாங்களே முற்றிக்கை போடுவதை விட்டுவிட்டார்களென்று எண்ணியிருக்கலாம். இவர் காவலில் போடப்பட்டதை யிட்டு கவலைப்படவுமில்லை, விடுதலையானதைப்பற்றி வீராப்புக்கொள்ளவுமில்லை. எந்த நிலைமையிலிருந்தாலும் தான் தேவனுடைய வார்த்தைகளைக் கூறும் தானுபதி என்பதை அவர் உணர்ந்துகொண்டு, தேவ அறிவிப்பின்படி மறுபடியும் பாபிலோனியர் வந்து முற்றிகை போடுவார்களென்றும் அரசனும் குடிகளும் அவனுக்குள்ள யாவும் சிறைப்படுவார்களென்றும் தைரியத்தோடு சொல்லிவந்தார். இது அவர்கள் விசனத்தை விருத்திபண்ணிவிட்டது. அப்போது அவர்கள், இவனை சும்மாயல்லோ காவலிலிருந்து வெளியேற்றினேம் என்றெண்ணிஞர்கள்.

எரேமியா ராஜ்யபாரத்துக்கு வரும் காரியங்களையெல்லாம் தேவசித்தப்படி சொல்லியான பின்பு, இனி இந்த இரும்புக் கழுத்துள்ள ஜனத்தின் நடுவில் நாம் சஞ்சரிப்பது தகுதியல்ல என்றெண்ணியோ, வேறெந்த முகாந்தரத்தினலோ ராஜதானியைவிட்டு நாட்டுப்புறத்துக்குப் போனுர். இவர் போகும் போக்கை, அரசனும் பிரபுக்களும் தப்பாய் நினைத்து, அவர் எதிரிகளுடைய பட்டாளத்தில் கூடிக் கொள்ளப் புறப்படுகிருரென்று உத்தேசித்து, அவரைப் பிடித்துவர ஆட்களை அனுப்பினுர்கள். எரேமியாவைப் பிடித்தவர்கள் அவரை அடிதண்டமாய் அடித்து அநியாயஞ்செய்து மறுபடியும் காவலில் போட்டார்கள். அங்கே ஒரு நிலஅறை இருந்தது. அதனுள்ளிருக்கும்படி, கட்டாயம்பண்ணிஞர்கள். அவர் அநேக நாள் அங்கே இருந்தார். ஒருகாலத்தில் அரசன் மறுபடியும் இவரை இரகசியத்திலே அழைத்து ராஜ்யத்தைப்பற்றிய தேவசித்தத்தைக் கேட்டான்; இவரோ ராஜ்யம் பாபிலோனியர் கைவசமாவது நிச்சயமென்று தேவாவியால் ஏவப்பட்டுச் சொன்னுர். அதுமுதல் அரசன் இவரைச் சற்று தயவாய் நடத்திவரக் காவல்காரருக்கு உத்தரவுகொடுத்தான். ஏனெனில் தாம் படும் அவஸ்தைகளை அரசனுக்கு முறையிட்டார். பிரபுக்கள்

அனைவரும் அவருடைய சிரசை வாங்கிப்போடவேண்டு மென்று அரசனிடத்தில் வாதாடினார்கள்; அரசன் உங்கள் மனம்போனபடிச் செய்யுங்கள் என்று அவர்கள் வசனத்தில் ஒப்புவித்தான். உடனே சத்துருக்கள் அவரைக் கொல்ல பயந்ததினால் சேறுநிறைந்த ஒரு கிணற்றுக்குள் கயிறுகட்டி இறக்கிவிட்டார்கள். அவருடைய கழுத்துமட்டும் முழுகத் தக்கதாக அவ்வளவு சேறு அங்கே இருந்ததாக யோசேப்புஸ் சொல்லுகிறார். சேற்றின் நாற்றத்தாலும் குளிர்ச்சியாலும் இவர் தானாக மாண்டுபோக அந்தச் சண்டாளர் நினைத்தார் கள். தேவனோ அந்த ஆபத்திலிருந்தும் அவரை ரட்சிக்கும் படி ஒரு ஆளை நியமித்திருந்தார். எப்படியெனில், எரேமியா உளையுள்ள துரவுக்குள் போடப்பட்ட செய்தியை ராஜ அரண்மனையிலிருந்த எத்தியோப்பியனாகிய எபெத் மெலேக் கேள்விப்பட்டு அரசனிடத்தில் அறிவித்தான்; அரசன் பிரபுக்களின் மோசத்தைக் கண்டு மனம்பொங்கி முப்பது ஆட்களை அவனோடு அனுப்பி, அவரைச் சாகுமுன் தூக்கி எடுக்க உத்தரவுகொடுத்தான். அந்த உத்தரவின்படி அவர்கள் பழம் புடவைகளாலும் கந்தைகளாலும் கயிறு களைத் திரித்து அக்கிளுக்குள்மாட்டி கட்டித் துரவிலிருந்து அவரை எடுத்துவிட்டார்கள்.

இதோடு இவருடைய தண்டனை முற்றிலும் மாறிப்போக வில்லை. குழியிலிருந்து எடுத்த அவரை மறுபடியும் முன் போல காவற்கூடத்தில் வைக்கும்படி அரசன் உத்தரவு கொடுத்தான். இவர் விஷயத்தில் பிரபுக்கள் அநியாயஞ் செய்கிறார்களென்பதை அரசன் அறிந்திருந்தாலும், அவரை முற்றிலும் விடுதலையாக்கிவிட்டால் பிரபுக்கள் தன்மேல் சீறுவார்களென்று அப்படிச் செய்தான். எபெத்மெலேக் தீர்க்கதரிசிக்குச் செய்த சகாயத்தை தேவன் நினைவுகூர்ந்து அவனை நகரத்தின் அழிவு காலத்தில் இரட்சித்தார் (எரே. 39:15-18).

எரேமியா முன்போல் சிறையிலிருக்கையில் அரசன் அவரை மறுபடியும் ஒருதரம் வரவழைத்து தேவ சித்தத்தை அந்தரங்கத்தில் கேட்டான். அப்போது அவர் பட்டணம் சத்துருவின் கைக்கு இரையாகும் என்றும் அவன் அதை

அழிக்கவே அழிப்பான் என்று தைரியமாய்க் கூறினார். தீர்க்க தரிசியின் வாயில் தேவன் வசனத்தைக் கொடுக்கும்போது அவர் வேறெதைத்தான் சொல்லக்கூடும்' இது அரசனுடைய இருதயத்துக்கு ஏற்றதாயிருக்கவில்லை; ஆதலால் பழைய படி சிறைக்கூடத்துக்குப் போகும்படி உத்தரவு கொடுத்தான். அவர் சத்தியத்தைப்பற்றி கவலைப்படாமல் தமது உயிரையும் சுகத்தையும் பற்றி மாத்திரம் கவலைகொண்டிருந்தது மெய்யானால், பட்டணம் பிடிபடாதென்று வீணாய்ப் பிதற்றி நமது காரியத்தை அநுகூலப்படுத்திக்கொள்ளலாம். அவர் தம்முடைய ஜீவாநுகூலத்தை எள்ளளவேனும் கருதாமல் தேவ சித்தம் ஒருக்காலும் பொய்யாக்கப்படக்கூடாதென்று மாத்திரம் கருதினார். ஒருவேளை அரசனும் பிரபுக்களும் எரேமியாவின் வாய்ச்சொல்லுக்குள் சகல வாழ்வு தாழ்வும் அடங்கியிருக்கிறதென்று தப்பாய்யெண்ணி, அவர் ஒரு நல்ல வார்த்தை சொல்லட்டுமென்று அடிக்கடி கூப்பிட்டுத் தொந்தரவு பண்ணினார்கள் போலிருக்கிறது. அவர் ஆதி முதல் அந்தம் மட்டும் தமது வாய்ச்சொல்லுக்குள் அல்ல, தேவசித்தத்துக்குள் சகலமும் இருக்கிறதென்று வற்புறுத்தி வந்தார். 'அடிமேலடியடித்தால் அம்மியும் நகரும்' என்ற பழமொழியுண்டே; சிதேக்கியா அரசன் விஷயத்தில் அதுவும் பிசகு வாசகம் போலிருந்தது. எரேமியா எத்தனையோதரம் திரும்பத் திரும்ப அரசனுக்கும் ராஜ்யத்துக்கும் வரும் அழிவைக் கூறினபோதிலும் அதை எழுதி வாசித்த போதிலும் அவன் மனம் மாறவில்லை கடைசியாக தீர்க்கதரிசி விலங்குமாட்டப்பட்டு கைதியாயிருந்த காலத்திலேயே தேசம் சத்துருக்கள் வசமாயிற்று; தீர்க்கதரிசியின் வசனங்களை ஏற்றுக்கொள்ளாதிருந்த சிதேக்கியாவின் கண்கள் இரண்டும் பிடுங்கப்பட்டு கபோதியானான்; அவன் தப்பியோடாதபடிக்கு பாபிலோன் ராஜா இரண்டு வெண்கல விலங்குகளை அவனுக்கு மாட்டினான். ஐயோ, சிதேக்கியாவே! பிரபுக்கள் பேச்சை நம்பினதற்கு லாபமாக கபோதியாயும், தீர்க்கதரிசியின் வார்த்தைகளை அசட்டை பண்ணினதற்கு லாபமாக வெண்கலச்சங்கிலி துலங்கும் கைதியுமானாயாக்கும்!

நாம் மற்றவர்களுடைய காரியத்தைப் பேசுவதை நிறுத்தி எரேமியாவின் வரலாறுகள் அப்புறம் எப்படியாயிற்றென்று பார்ப்போம். பாபிலோன் அரசன் இவரைக் காவலில் கண்டுபிடித்து கைதிகளின் சேனுபதியினிடம் ஒப்புவித்து 'நீ அவனுக்கு ஒரு பொல்லாப்பையும் செய்யாமல் அவனைப் பத்திரமாய்ப் பார்த்து அவன் உன்னேடு சொல்லுகிறபடியெல்லாம் அவனை நடத்து' என்று கட்டளை கொடுத்தான். அந்தக் கட்டளையின்படி அவர் விடுதலையாக்கப்பட்டு அந்நாட்டுக்குப் புதிதாக ஏற்படுத்தப்பட்ட கவர்னராகிய கெதலியாவுடைய விசாரணைக்குள்ளிருந்தார். அதுமுதல் எரேமியா மீதியாக இருந்த குடிகளோடு வாசம் பண்ணி வந்தார். அந்தக் குடிகள் அவ்வளவு அமரிக்கையாயிருக்கவில்லை. அதில் இஸ்மவேல் என்ற ஒரு சண்டாளன் கெதலியாவை இரகசியமாய்க் கொலை செய்ததால் பெரிய குழப்பம் நேரிட்டது. என்ருலும் மீதியாயிருந்த இராணுவ வீரரும் பிரபுக்களும் பெரியோருமான சகல ஜனங்களும் அவரைத் தங்கள் ஆலோசனைக்கு அதிபதியாக அங்கீகரித்து, அவரை மதித்து, அவர் சொன்னபடி செய்து வந்தார்கள். அவர்களில் மிச்சமானவர்கள் இனி நாம் எகிப்திற்குப்போய் அடைக்கலம்புகுந்துகொள்வதே நலமென்று சாதித்து, அவரையும் தங்களோடுகூட வரும்படி கேட்டார்கள். அவர் அதைத் தடுத்துப் பார்த்தும் அவர்கள் கேட்கவில்லை. கடைசியாக கட்டாயத்தோடு கூட்டிக்கொண்டு எகிப்திற்குப் போய் விட்டார்கள். அவ்விடத்திலும் எரேமியா ஜனங்களின் ஆகாமியத்தைக் கண்டித்துக்கொண்டு எகிப்தியரால் அவர்களுக்குவரும் நாச மோசங்களையெல்லாம் தெளிவாகக் காட்டி, மனந்திரும்புதலுக்கு அவர்களை ஏவி வந்தார். அவர்களோ குணப்படவில்லை. அவர் தமது ஜீவ காலமெல்லாம் கடவுளின் செயலை மனுஷருக்கு உணர்த்தியும் அவர்கள் முரட்டாட்டம் மாறவில்லையென்று கண்டபோது எவ்வளவு மன வருத்தப்பட்டிருப்பார்! கடைசியாக அவர் எகிப்து தேசத்திலிருக்கும்போது தானே மரித்தார் என்று பலரும் அநுமானிக்கிருர்கள். ஒரு சரித்திரக்காரன் அவர் எகிப்திலுள்ள தப்பேனியஸ் என்ற ஊரில் குடியேறியிருந்த யூதரால் கல்லெறிந்து கொல்லப்பட்டார் என்று எழுதியிருக்கிருன்;

மகா அலெக்சாந்தர் அரசன் அவருடைய எலும்புகளை அலெக்சாந்தரியா நகரத்துக்கு எடுத்துக்கொண்டு போனதாகவும் ஒரு சரித்திரக்காரன் எழுதியிருக்கிறான்; வேறொரு ஆகமக்காரன் அவர் எகிப்திலிருந்து பாபிலோனுக்குப்போய் நல்ல நரை வயதில் சமாதானமாய் மரித்தார் என்கிறான். என்றாலும் வேதாகமத்தில் அதைப்பற்றி யாதொரு குறிப்பும் எழுதப்பட்டிருக்கவில்லை.

எரேமியா என்பவர் கவிகட்டுகிறதில் மகா வல்லவராயிருந்தார். சிறைப்பட்ட இஸ்ரவேலரின் ஸ்திதியையும் தாழ்மையையும் பற்றி அவர் எழுதியிருக்கிற புலம்பல் ஆகமம் அதற்குத் தகுந்த அத்தாட்சியாயிருக்கிறது. இதுவுமன்றி 'எரேமியாவின் நிருபம்' என்ற பேரால் ஒரு ஆகமத்தையும் அவர் எழுதினாரென்று எண்ணப்பட்டிருக்கிறது. சிறைப்பட்டுப்போன ஜனம் பாபிலோனியருடைய விக்கிரகாராதனைக்கு இசைந்து கொள்ளக்கூடாதென்பதே இதின் வாசகப் போக்கின் மொத்தக் கருத்தென்று சொல்லவேண்டியது.

எரேமியாத் தீர்க்கதரிசி எக்காலத்திலும் அதிக மதிப்பாக யூதரால் எண்ணப்பட்டு வந்தார். நம்முடைய இரட்சகருடைய மனுஷாவதாரக் காலத்திலும் இவரைப் பற்றிய மதிப்பு ஜனங்களுடைய மனதைவிட்டு மாறிப்போகவில்லை ஏனெனில் இரட்சகரை யூதர் பலர், பழைய எரேமியா என்றும் சொல்லிக்கொண்டதாக வாசிக்கிறோம் (மத். 16:14).

இம்மட்டும் நாம் இவருடைய வரலாறுகளைக்கொண்டு பல காரியங்களைத் தியானித்ததோடு வேறொரு விசேஷித்த படிப்பினையையும் தியானிக்கவேண்டியதாயிருக்கிறது. அவர் அதிகக் காலம் தீர்க்கதரிசனமுரைத்து திரும்ப திரும்ப சத்தியத்தைக் கூறினபோதிலும் யாதொரு பலனையும் மன மாறுதலையும் ஜனங்களிடத்தில் கண்டதில்லை. தேவ ஊழியக்காரன் தன் ஊழியத்தைக் கவனிக்கவேண்டியதேயன்றி அதின் பலனைக் கவனித்து இளக்கரித்துப் போகக்கூடாது. ஏனெனில், 'நடுகிறவனாலும் ஒன்றுமில்லை, நீர்ப்பாய்ச்சுகிறவனாலும் ஒன்றுமில்லை; வளர்க்கிற தேவனாலே எல்லாம் ஆகும்' என்ற வாசகப்படி பலனுக்குரிய காரியத்தை

ஆவியானவரின் கரத்துக்கு ஒப்புவித்து விடவேண்டியது. 'என் ஓட்டத்தைச் சந்தோஷத்தோடே முடிக்கவும், தேவனுடைய கிருபையின் சுவிசேஷத்தைப் பிரசங்கம் பண்ணும்படிக்கு நான் கர்த்தராகிய இயேசுவினிடத்தில் பெற்ற ஊழியத்தை நிறைவேற்றவுமே விரும்புகிறேன்' என்று பரி. பவுல் அறிக்கையிட்ட வாசகத்தை நாம் மறக்கக்கூடாது.

தானியேல் மந்திரி

சிறைப்பட்ட பருவம்

எரேமியா தீர்க்கதரிசியின் சரித்திரத்தை வாசித்தவன், யூத ஜாதியாரெல்லாரும் சிறைபிடிக்கப்பட்டு கல்தேயர்வசம் கைதிகளானார்களென்று அறிந்துகொள்ளுவான். அப்படிச் சிறைபிடிக்கப்பட்டவர்களில் நாம் இவ்விடத்தில் ஆராயப் போகும் தானியேல் ஒருவராயிருந்தார். சிறைபிடிக்கப்பட்ட காலத்தில் இவர் வாலிபனாய்மாத்திரம் இருந்தார்.

இவர் சாதாரண குடித்தனக்காரனாய் அல்லது பிரபு குலத்தைச் சேர்ந்தவராயிராமல் ராஜவம்சத்தைச் சேர்ந்தவராயிருந்தார். இவரைப்போல ராஜகுல பாலியரான வேறு சிலரும் சிறைபிடிக்கப்பட்டிருந்தார்கள். பாபிலோனின் அரசன் அக்காலத்திலிருந்த மற்ற அரசரைப்போல் அடிமைகளைக் கொலைசெய்கிறவனாயிராமல் அவர்கள்மேல் அநுதாபங்கொண்டு ஆதரித்துவருகிற குணமுடையவனாயிருந்தான். இது யாருக்கும் இருக்கவேண்டிய நல்ல குணந்தான். தங்கள் எதிரிகள் கீழேவிழுந்து தாழ்ந்துபோனபின்பு அவர்களைத் தயவாய் நடத்தவேண்டியது; ஒருவனை அடக்கினபின்பு அணைத்து ரட்சிக்கவேண்டியது. இந்த அரசன் தான் ஜெயித்து சிறையாக்கின அடிமைகளையெல்லாம் பரிசோதனை செய்தபோது அவர்களில் ராஜவம்சத்தைச் சேர்ந்த சில வாலிபர் அழகிலும் புத்தியிலும் சிறந்தவர்களென்று கண்டு, அவர்களுக்கு நமது தேசத்துக்குரிய அறிவையும் சாஸ்திரங்களையும் கற்றுக்கொடுத்தால் சில வருஷங்களுக்குள் ராஜ்ய பாரத்தின் உத்தியோகங்களுக்கு யோக்கியதையாவார்களென்று கண்டு, கல்தேய பாஷையையும் ஞானங்களையும் கற்றுக்கொடுக்க உத்தரவு கொடுத்தான்.

இப்படிப்பட்ட உத்தியோகத்திற்கென்று ராஜதானியில் ஒரு கல்விச்சாலை இருந்ததென்றும், அதில் பல பாபிலோனிய பிள்ளைகள் கல்வி கற்று வந்தார்களென்றும் தோன்றுகிறது. இதினாலே பாபிலோன் ராஜ்யம் வாழ்வும் விருத்தியும் சமாதானமுமுள்ள ஒரு ராஜ்யமாயிருந்ததென்றும், அவ்விடத்து அரசன் காட்டுமனுஷனாயிராமல் கல்வியில் தேறினவனாயிருந்தானென்றும் தோன்றுகிறது. இந்த உயர்ந்த கல்விச்சாலையில் போய் கல்வி கற்கும்படி நாலு யூத வாலிபர் அரசனால் தெரிந்துகொள்ளப்பட்டார்கள். அவர்களுக்கு முறையே தானியேல், அனனியா, மிஷாவேல், அசரியா என்று பெயர். இந்த நான்கு வாலிபரும் ராஜ வம்சத்தாரானதால் அந்தக் கல்விச்சாலையில் சாமானிய மானவர்களுடைய பிள்ளைகள் படிக்கவில்லையென்று தோன்றுகிறது.[1] அரசன் தனது ராஜ்யத்திலிருந்து தெரிந்தெடுக்கப்பட்டு அவ்விடத்தில் படித்துவந்த பாவியரைவிட இந்த நால்வர்மேலும் அதிக பாசமாயிருந்தார். இவர்களுடைய அழகுதான் இதற்குக் காரணமாயிருக்கலாம். நாம் அழகை ஒரு பெரிய காரணமாய்ச் சொல்லாமல் ஆண்டவர் அவன் இருதயத்தை அவ்வண்ணம் திரும்பும்படிச் செய்து தமது பிள்ளைகளை மேன்மைப்படுத்தும்படி முயன்றார் என்றே சொல்லவேண்டியது. ஏனெனில் உலகத்தில் சாதாரணமாய் தற்செயலென்றும் இயல்பென்றும் சொல்லிக் கொள்ளப்படுகிறதெல்லாம் நமக்கு விளங்காதிருக்கும் தேவ ஞானத்தின் இரகசிய ஆழங்களேயன்றி வேறல்ல.

தானியேலுக்கும் அவருடன் சேர்ந்த மூன்று தோழருக்கும் ராஜா தான் உண்ணும் போசனத்திலேயும் தான் குடிக்கும் திராட்சரசத்திலேயும் தினம் ஒரு பங்கை அனுப்பி வந்தார். இந்தக் கல்விச்சாலையில் இவர்கள் மூன்றுவருஷம் படித்துக் கடைசியாக ராஜசமூகமேறி பரீட்சைகொடுக்க வேண்டியதாயிருந்தது. ராஜபோசனத்தை உண்ண இவர் பிரியப்படவில்லை. அந்தப் போசனத்தால் தம்மைத் தீட்டுப் படுத்தக்கூடாதென்று அவர் மனதில் நிர்ணயம்பண்ணிக்

---

[1] இவர்கள் நாலுபேரும் சிதேக்கியாவின் குடும்பத்தைச் சேர்ந்தவர்களாயிருந்தார்கள் என்று யோசேப்புஸ் சொல்லுகிறார்.

கொண்டு தம் நோக்கத்தை அறிவித்து, ராஜபோசனம் வேண்டாமென்று வேண்டிக்கொண்டார். ராசபோசனமானது எவ்வளவு அறுசுவையுள்ளதாயிருந்தபோதிலும் அது தங்களுடைய வேதப்பிரமாணத்தின்படி இரத்தமில்லாமல் சமைக்கப்பட்டிருக்கமாட்டாதென்றும், அதில் ஒரு பாகம் எப்படியும் விக்கிரகத்துக்குப் படைக்கப்பட்டதாயிருக்குமென்றும் எண்ணியிருக்கலாம். இவ்விஷயத்தில் இவரிடத்தில் காணப்பட்ட குணத்தைக் குற்றமென்று சொல்லக்கூடாது. தமது சரீரமானது அதின் சகல அவயவங்களோடும் கூட விருத்தசேதன உடன்படிக்கையால் யேகோவாவாகிய தேவனுக்குப் பிரதிஷ்டையாக்கப்பட்டிருக்கிறதென்றும், அதில் நியாயப்பிரமாணத்துக்கு விரோதமான எந்த அசுத்தமும் பிரவேசிக்கக்கூடாதென்றும் எண்ணினது வீண்சடங்கு அல்லது கர்வமென்று சொல்லாமல், தேவபக்தியின் ஒருபிடி என்று சொல்லவேண்டியது. இவர் ராஜபோசனம் வேண்டாமென்று கேட்டுக்கொண்டது போல மற்ற மூன்று வாலிபரும் கேட்டார்கள்.

இதினால் என்ன தொல்லையாகுமோ என்று பிரதானி பயந்து தானியேலை நோக்கி, 'உங்களுக்குப் போசனத்தையும் பானத்தையும் குறித்திருக்கிற ராஜாவாகிய என் ஆண்டவனுக்கு நான் பயப்படுகிறேன்; அவர் உங்களையும் மற்ற வாலிபரையும் வந்து பரிசோதிக்கிறதுண்டானால் ஒருவேளை உங்கள் முகம் வாடிப்போயிருக்குமே; அப்பொழுது அரசன் என் சிரசை வாங்கிப் போடுவாரே' என்று சொன்னான். பிரதானி பிடிவாதம் செய்கிறாரே இனி என்ன செய்யலாமென்று அவர் நினைத்து, சுயம்பாகியைச் சிநேகம்பண்ணிக் கொண்டு தமக்கும் தமது தோழருக்கும் ராஜ ஏற்பாட்டுப்படியுள்ள உயர்ந்த போஜனம் வேண்டாமென்றும் பருப்பு முதலான மரக்கறிகளும் தண்ணீருமே போதுமென்றும் கேட்டார். பிரதானியே இணங்காத காரியத்துக்கு, சுயம்பாகி சம்மதிப்பானா? அவன் துவக்கத்தில் மறுத்திருக்கலாம்; கடைசியாக தாங்கள் விரும்பிய போஜனத்தைப் பத்துநாள் கொடுத்து முகலட்சணம் பார்த்து, அப்பால் வேண்டுமானால் எங்களைக் கட்டாயம்பண்ணுங்கள் என்று சொன்னதின்பேரில் அவனும் அந்தரங்கத்தில்

சம்மதித்து அவர் கேட்டபடி செய்தான். பத்துநாளைக்குப் பின்போ எல்லா வாலிபருடைய இரத்தபுஷ்டியையும் முக அழகையும்விட இந்த நாலுபேருடைய சாயல் நன்றாயிருந் தது. அதுமுதல் இதுதான் அவர்களுடைய தேகத்துக் கேற்ற போஜனமாயிருக்கிறதென்று அந்தப்படி சமைத்துக் கொடுத்து வந்தார்கள்.

இவர் நமக்குக் கிடைத்த வாழ்வு ஒருவருக்குமில்லை, நல்ல போஜனமும் தோழமையும் மெத்தைவீடும் அகப்பட்டதே பெரிய காரியம் என்று உண்டு. உடுத்து, டம்பாச்சாரிபோலத் திரிந்தலையாமல், விடாமுயற்சியாய்க் குறிக்கப்பட்ட பாடங் களைக் கவலையோடு படித்து வந்தார்கள். தேவ அருள் இவரையும் இவருடைய சிநேகிதரையும் சந்தித்தபடியால் அவர்கள் சகல கலைவல்லோரானார்கள். இவர்களெல்லாரி லும் தானியேலுக்குச் சகல தரிசனங்களையும் சொப்பனங் களையும் அறியத்தக்க வரத்தைக் கடவுள் கடாட்சம்பண்ணி னார். இதற்கெல்லாம் காரணம் அவர் தேவன்மேல் கொண் டிருந்த பக்திதான். கர்த்தர் தம்மை அண்டுகிறவர்களுக்குத் தமக்குச் சித்தமான கிருபைகளைச் சம்பூரணமாய் அருளும் எந்த நல்ல ஈவும் நிறைவுள்ள எந்த வரமும் உயரத்தி லிருந்து உன்னத கடவுளால் மனுஷருக்கு அருளப்படுகிற தென்பதைக் கல்விகற்ற பாலகரும் வாலிபரும் மறக்க லாகாது.

தானியேலையும் அவருடன் கூடிய யூத மாணக்கரையும் அரசனுடைய பரீட்சைக்குக் கொண்டுவருகிறதற்குக் குறித்த காலத்தில் அவர்கள் வந்தார்கள். அரசன் பல சாஸ்திரங்களையும் கற்றுத் தேர்ந்த கல்தேய பண்டிதர்களைக் கொண்டு அவர்களை வினாவினதில் 'ஞானத்துக்கும் புத்திக் கும் அடுத்த எந்த விஷயத்திலும் தன் ராஜ்யமெங்குமுள்ள சகல சாஸ்திரங்களிலும் ஜோஷியரிலும் அவர்களைப் பத்து மடங்கு சமர்த்தராகக் கண்டான்.' இந்தப் பரீட்சை முடிந்த பின்பு அவர்கள் ஒவ்வொருவருக்கும் அரசன் தன் ராஜ்யத் தில் உத்தியோகங்களைக் கொடுத்தான். அவர்கள் தங்க ளுக்கு ஒப்புக்கொடுக்கப்பட்ட வேலைகளை ஜாக்கிரதை யோடும் எவரும் மெச்சிப் பேசிக்கொள்ளும் உண்மை யோடும் நிறைவேற்றி வந்தார்கள்.

இப்படியிருக்கும் காலத்தில் ஒருநாள் அதிகாலையில் அரமனையெங்கும் அங்கலாய்ப்பும் ஆவியில் தளர்ச்சியும் காணப்பட்டது. அதின் இரகசியம் சொல்லுகிறேன் கேள்: முந்தின நாள் இரவில் அரசன் அசோதையாய் அயர்ந்து நித்திரைகொள்ளும்போது ஆச்சரியமான ஒரு சொப்பனங் கொண்டார். இம்மட்டும் தமது ஜீவகாலத்தில் அவர் பல சொப்பனங்களைக் கண்டும், மற்றவர்கள் கண்டதாகச் சொல்லும் சொப்பனங்களைக் கேட்டுமிருக்கலாம். தாம் அன்றுகண்ட சொப்பனமோ இம்மட்டும் காதால் கேளாத அதிசய விசேஷமாயிருந்ததால் ஆவி கலங்கவும், ஆச்சரியத் தோடு பிரமிக்கவும், இதின் கருத்தென்னவாயிருக்குமோ வென்று கவலைப்படவும் நேரிட்டது. அரசன் தமது மனோ தத்துவத்தால் அதின் இரகசியத்தை கிரகிக்கக்கூடியமட்டும் பிரயாசப்பட்டும் ஒன்றும் புலப்படவில்லைபோலத் தோன்று கிறது. அந்தச் சொப்பனத்தை முதலாய் அரசன் மறந்து போனார். அதைப்பற்றி அதிக கவ்னமும், விசாரணையு முண்டாகட்டுமென்று தேவன் அதை மறக்கச்செய்தா ராக்கும். அப்பொழுது அரசன் தன் தேசத்திலுள்ள சாஸ்திரிகளையும், ஜோஷியரையும், சூனியக்காரரையும், ஞானிகளையும் வரும்படி கட்டளைபண்ணி, அவர்கள் அனை வரும் வந்து கூடினபின்பு அரசன் சொல்லுவார்: ஓய் சாஸ்திரிகளே! ஜோஷியரே! ஞானிகளே! கல்தேய ராஜ்யத்து வித்வசிரோமணிகளே! என்னண்டை சேருங்கள், நான் ஒரு சொப்பனங்கண்டேன், அந்த சொப்பனத்தை அறியவேண்டு மென்று என் ஆவி கலங்கியிருக்கிறது என்றார். உடனே அந்தச் சாஸ்திரிகள் அரசனுடைய அடிபணிந்து அத்தியந்த வணக்கத்துடனே 'ராஜாவே, நீர் என்றும் வாழ்க' சொப்ப னத்தை உமது அடியாருக்குச் சொல்லும், அப்பொழுது அதின் அர்த்தத்தை விடுவிப்போம்' என்று சீரியபாஷை யிலே சொன்னார்கள். இதினாலே அரசன் இவர்களைப்பற்றி இவ்வளவு நாளும் தப்பிதமாய் நினைத்திருந்த அபிப்பிராயம் இன்னதென்று தெரியவருகிறது. இந்தத் திருட்டு ஞானி களும் குருட்டு ஜோஷியரும் ஆட்களை மிரட்டி பரலோக இரகசியங்களும், பாதாளலோக அந்தரங்கங்களும் தங்களுக் குத் தெரியுமென்றும் ஊரெங்கும் பிதற்றிப் பேதைகளை

மிரட்டிப் பணங்களைத் திரட்டிக் காலத்தைக் கடத்திவந் திருக்கிறார்கள். பாரம்பரையாய் பேதைகளுக்குள் வழங்கி வந்த பொய் எண்ணம் காலவளர்த்தியால் சத்தியம் போலாகி, சக்கரவர்த்தியும் சந்தேகமில்லாமல் நம்பிக் கொள்ள நேரிட்டதுபோலிருக்கிறது. மேலும் இந்தத் திருட்டு ஞானிகள் தங்கள் சொற்சக்தியால் எப்படியோ ஒருதரம் மேற்கொண்டு தங்களனைவருக்கும் அங்கங்கே நிலையான வாசஸ்தலமிருக்கவும், வரும்படிக்கு மானியங்கள் பெற்றதோடு ராஜசம்பளமும் பெற்று வாழ்ந்துவந்தார்க ளென்றும் தோன்றுகிறது. இவர்கள் ராஜ்யபாரத்துப் பூனை களாயிருந்து பொய் பித்தலாட்ட முதலிய மோசங்களுக்கு அஞ்சாமல் குடிகளை ஏமாற்றிக் காலந்தள்ளி வந்திருக்க லாம். இவர்கள் சீரிய பாஷையில் பேசினதும், இவர்க ளுடைய வண்டோலங்களைச் சற்றே விலக்கிவிடுகிறது. ஒரு வேளை இந்தச் சமயத்தில் பலவிதமான ஜனங்களும் கூடி வந்திருக்கலாம். அரசர் தமது ராஜ்யத்திலுள்ள சகலவித மான ஞானிகளையும் வரவழைத்திருக்கிறதால் மாட்சிமை பொருந்திய ராஜகச்சேரியும் மகாநாடும் கூடுமென்று குடிகள் கும்பல்கும்பலாய்க் கூடிவந்திருக்கலாம். இந்தத் திருட்டு சாஸ்திரிகள், நாம் ஜனங்கள் பேசுகிற சாதாரண பாஷை யில் பேசினால் யாவருக்கும் தெரிந்துபோம் என்று சற்று அடக்கமாய் காரியத்தை மேற்கொள்ளும்படி அரசனைப் பார்த்து சீரிய பாஷையிலே பேசினார்கள்போலிருக்கிறது. இந்தக் குணந்தான் இக்காலத்துப் பிராமணருக்கும் ரோமைக் குருக்களுக்கும் இருக்கிறதென்று சொல்ல வேண்டியது. அவர்கள் ஜனங்களுக்கு விளங்கிய பாஷை யில் மார்க்கத்துக்குரிய எல்லாச் சடங்குகளையும் நடத்தாமல் தெரியாத பாஷையில் செய்துகொண்டு, அந்த பாஷைக்குள் ஏதோ வல்லபம் அடங்கியிருக்கிறதுபோல பாராட்டி ஏழை கள் மனதைக் கெடுத்துப் போடுகிறார்கள்.

சொப்பனத்தைச் சொல்லும், அர்த்தத்தைச் சொல்லு வோம் என்ற வார்த்தைகளைக் கேட்டவுடனே அரசனுக்குக் கோபமுண்டது. அரசன் அவர்களை நோக்கி: என்னிடத்தி லிருந்து பிறக்கிற தீர்மானம் என்னவென்றால், நீங்கள் சொப்பனத்தையும் அதின் அர்த்தத்தையும் அறிவிக்காமற்

போனால் துண்டித்துப் போடப்படுவீர்கள்; உங்கள் வீடுகள் எருக்களங்களாக்கப்படும்; சொப்பனத்தையும் அர்த்தத்தை யும் தெரிவிக்கிறதுண்டானால் உயர்ந்த வெகுமதிகளையும் கனத்தையும் பெறுவீர்களென்று சொன்னார். எல்லா இரகசி யங்களையும் அறிவிக்கக் கூடுமென்று சொல்லி இந்நாள் மட்டும் ஏழைக்குடிகளை ஏமாற்றி தந்த திருட்டு ஞானிகள் இன்று கண்ணியில் பட்டார்கள். அவர்கள் மறுபடியும் அரசனை அடிபணிந்து, மகா மன்னரே! சொப்பனத்தைச் சொல்லும்; அடியார் அதின் அர்த்தத்தைச் சொல்லுகிறோம் என்று கேட்டார்கள். அரசன் முகம் சிவந்து முன்னிலும் எரிச்சலானார். அவர் மறுபடியும் கோபதாபத்தோடே நான் சொன்ன தீர்மானமே தீர்மானம்; நீங்கள் வீண்காலம், போக்கி பித்தலாட்டத்தால் என்னை ஏமாற்றிவிடலாமென்று கனவிலும் நினைக்கவேண்டாம் எனத் தீர்மானமாய்ச் சொன்னார். உடனே அவர்கள் இது எங்களாலும் முடியாது, எவர்களாலும் முடியாது; இது எந்த ராஜாவுங்கேளாத பெரும் ஞானம்; இது கடவுளுக்கே தெரியுமென்று சொன்னார்கள். இதினிமித்தம் அரசன் உக்கிரமூண்டு, தன் ராஜ்யத்திலிருந்த ஞானிகளையெல்லாம் கொலைசெய்யும்படி கட்டளையிட்டான். இக்கட்டளை பிறந்தவுடனே தானியேலையும் அவருடைய தோழரையும் கொலைசெய்யும்படி தேடினார்கள். ஒருவேளை இச்சமயத்தில் அவர்கள் வராமலிருந்திருக்கலாம்; அல்லது இவர்கள் சிலகாலத்துக்கு முன்தான் கல்விச்சாலையிலிருந்து உத்தியோகம்பெற்றதால் முந்தின விளம்பரத்தினால் வரவழைக்கப்படாமலிருக்கலாம். மூத்து நரைத்த ஞானிகளும், சோதிடரும் போதுமான தொகையாயிருக்கும்போது குட்டிஞானிகளைச் சட்டைபண்ணுவார்களா? மேலும் அரசன் கொடுப்பார் என்று அவர்கள் எண்ணிவந்த வெகுமதி ஆள் அதிகப்பட்டால் விலையில் குறையலாமென்று ஞானிகளின் தலைவர் சூதாய் எண்ணி புதிதாய் ஞானிகளாக்கப்பட்ட வாலிபரைக் கூப்பிடாமற்போயிருக்கலாம். ஆனால் அரசன் பொன் புஷ்பங்களைக் கொடாமல் அவர்கள் தலைகளை வீசிப்போட உத்தரவுபண்ணினதால் அதில் அவர்களுக்கு முதல் பங்கு கொடுக்கிறது நல்லதென்று அவர்கள் எண்ணி, தானியேலையும் அவருடைய தோழரையும் தேடி

ஞர்கள் போலிருக்கிறது. ஒருவேளை அந்த ஞானிகள் உத்தியோகம் அமர்ந்த காலவரிசையின்படி சிறியவனி லிருந்து சிரசாக்கினை செய்துகொண்டேபோய், அந்தத் தலைகளை அரசன் பாதத்தில் குவித்தால் சில தலைகள் வெட்டப்பட்டவுடனே அரசன் தமது ஆக்கினையை மாற்றி விடுவார், அதோடு மூத்து நரைத்த நமது தலைகள் தற்காக்கப் படுமென்று நினைத்தாலும் நினைத்திருக்கலாம்.

இந்தச் சிரசாக்கினை உத்தியோகத்துக்கு ஆரியோகு என்னும் பேருடையவன் அதிபதியாக நியமகம் பெற்றிருந் தான். இவன் தானியேலையும் அவருடைய தோழரையும் கைதிகளாக்கினபோது தானியேல் இதின் இரகசியம் அறி யாமல் அந்தத் தலைவனிடத்தில் காரியங்களை விசாரணை செய்தார். அவன் நடந்த வரலாறுகளைச் சொல்லிமுடித்த வுடனே அவர் அவனிடம் விடைபெற்று ராஜசமுகம்மேறி, மகா ராஜாவே! அடியார் இம்மட்டும் இதைப்பற்றிய யாதொரு சமாசாரமும் அறியோம்; இப்பவும் அரசன் ஒரு இரவு தவணைகொடுக்கிறதுண்டானால் கடவுளுடைய சகாயத்தைத் தேடி அரசன் கண்ட சொப்பனத்தைச் சொல்லும்படி பார்க்கிறோம்; அப்படி எங்களால் சொல்லக் கூடாதேபோனால் இதோ, எங்கள் தலைகளை உமது கத்திக்கு இணக்கமாகத் தாழ்த்துகிறோம் என்று பணிவாய் மன்றாடி னார். தானியேலுடைய வாசகம் அரசனின் கோபத்தைத் தனிக்கும் வெள்ளம் போலிருந்தது. மேலும் அரசனுக்கு ஞானிகளின் தலை வேண்டியதாயிராமல், தான் கண்ட சொப்பனம் தெரியவேண்டியதாயிருந்தது. தானியேலின் விண்ணப்பப்படி அரசன், நல்லது, ஆகட்டும் என்று சொன் னார். அப்பால் அவர் தமது தோழருக்கும் இந்தச் சங்கதி யைச் சொல்லி கடவுள் இந்த இரகசியத்தை நம்மில் யாருக் காவது வெளிப்படுத்தி பிராணனைக் காப்பாற்றும்படி உருக்கத்தோடும், விசுவாசத்தோடும் ஜெபஞ்செய்யும்படி கற்பித்து, தம்முடைய ஆச்சிரமத்துக்குப் போய் தானும் தன் தோழரும் பாபிலோனின் மற்ற ஞானிகளோடேகூட அழியாதபடிக்குப் பரலோகத்தின் தேவனுடைய பாதத்தில் போய்விழுந்தார். பாபிலோன் ஞானிகளெல்லாம் இந்தச் சங்கதியைக் கேட்டவுடனே எவ்வளவு சந்தோஷம் கொண்

டாடியிருப்பார்கள்! தங்கள் தலைகளைத் தற்காக்க ஒருவன் வருகிறானும் என்ற செய்தியைவிட மனமகிழ்ச்சியுள்ள செய்தி வேறுண்டா!

பரலோக தேவன் தமது பாதம்பணியும் பிள்ளையை ஒருநாளும் பாதத்தால் உதைத்துக் கொல்லமாட்டார்; அவருடைய பாதத்தில் ரட்சிப்பின் ஆசீர்வாத சுனையுண்டல்லவா! தானியேல் பரலோக தேவனுடைய பாதம்பிடித்த சிந்தையோடு நித்திரைபோனார்; அப்பொழுது கர்த்தர் தரிசனமாகி, அரசன் கண்ட சொப்பனத்தையும், அதின் அர்த்தத்தையும் அவருக்கு வெளிப்படுத்தினார். உடனே அவருடைய பரவச ஆனந்தம் பொங்கினது; அவர் அந்த ஆனந்த சிந்தையைச் சிதறவிடாமல் தம்முடைய கவிவல்ல கால்வாய் வழியாய் இறக்கி:

பல்லவி

துத்தியம் துத்தியம் தேவா—உம் நாமம்
நித்தியம் நித்தியம் ஸ்தோத்திரமாக—துத்தி.

சரணங்கள்

1. உமக்குண்டு ஞானம் பலமும்—நீர்தான்
காலங்கள் வேளைகள் மாற்றுவீர் என்றும்
மன்னர் மகுடர்கள் எல்லாம்—உம்மால்
மாறுவார் ஏறுவார் மாளுவார் மெய்யாய் —துத்.

2. ஆழங்கள் உம்மால் வெளியாம்—மறைவான
ஞானங்கள் புதைபொருள் யாவுமே உம்மால்
துலங்குதே ஜோதிபோல் மெய்யாய்—சேயன்
தானியேல் இனியும்மைத் துள்ளித் துதியானே—துத்.

3. எங்கள் பிதாக்களின் தேவா! அடியார்
ஏக்கங்கள் தீரத் திருவுள மானீர்
எங்கள் ஜெபங்களைக் கேட்டீர்—இதையிட்டு
துதிக்கிறேன் துள்ளி பணிகிறேன் தாழ்ந்து —துத்.

என்று பாடினார். பக்தியுள்ள படிப்பன் புலவனாயிருப்பதும் நல்லது; அப்பொழுது அவன்வழியாய்ச் சுரக்கும் ஞான சுனையின் ஜலம் அநேக சோலைகளை நீர்ப்பாய்ச்சும்.

மறுநாள் அதிகாலேமட்டுந்தான் தவணையிருந்ததால், காலதாமதஞ்செய்தால் தமது உயிரும் வேறு பல உயிரும் மாண்டுபோகலாமென்று அவர் உத்தேசித்து, தலைவாங்கும் தலையாரியண்டை விடியற்காலத்திலே போய், வீரபராக்கிரமரே! நீர் உமது கத்திகளைத் தீட்டி ஈட்டிகளைக் கூர்மையாக்க வேண்டாம், என்னை இட்சணமே ராஜசமுகம் சேர்க்கும்படி கூட்டிக்கொண்டு போவீரானால் நான் அரசருக்கு அர்த்தம் சொல்லுவேன் என்றார். நல்லது, அப்படியே ஆகட்டுமென்று அவ்விருவரும் ராஜசமுகம் ஏறினார்கள். இந்தச் சமாசாரம் நகரமெங்கும் தெரிந்துபோனதால் அரமனையில் பெருங்கூட்டம் சேர்ந்தது. தானியேல் இச்சமயத்தில் தாமாகக் கனத்தைச் சம்பாதித்துக்கொள்ளப் பிரயாசப்படாமல், தலையாரிகளின் தலைவன்மூலமாய் அதைத் தேடினது அவருடைய தாழ்மையை விளக்குகிறதாயிருக்கிறது.

அரசன் கொலுமண்டபத்தில் வீற்றிருந்தார்; பிரபுக்கள் அவர் பக்கத்தில் புடைசூழ்ந்திருந்தார்கள். ஞானிகள் வழக்கப்படி உட்காரும் உயர்ந்த ஸ்தானத்தில் அன்று உட்கார்ந்திருக்க மாட்டார்கள்; அவர்களனைவரும் தலைகவிழ்ந்து பெருமூச்செறிந்திருக்கலாம்; இவருடைய முயற்சி அனுகூலப்படாது என்று அவர்களில் பலர் நினைத்தாலும் நினைத்திருக்கலாம். அரசன் தமது சிம்மாசனத்திலிருந்து கொண்டு தானியேலைப் பார்த்து. 'நான் கண்ட சொப்பனத்தையும் அதின் அர்த்தத்தையும் நீ எனக்கு அறிவிக்கக் கூடுமா?' என்று கேட்டார். அதற்கு அவர் பிரதியுத்தரமாகச் சொல்லுவார்: 'மன்னரின் மன்னரே! நீர் கேட்கிற பொருளைத் தெரிவிக்க மனுஷரிலுள்ள ஞானிகளாலும் ஜோஷியராலும் சாஸ்திரிகளாலும் குறிகாரராலும் கூடாது; நீர்கண்ட சொப்பனம் பரலோகத்தின்தேவனிடத்திலிருந்து வந்திருக்கிறது; உமது ராஜ்யபார சம்பந்தமாய் கடைசி மட்டும் சம்பவிப்பதைக் கடவுள் அந்தச் சொப்பனத்தின் மூலமாய் அறிவித்திருக்கிறார். இப்பொழுது மகாராஜாவே மன்னர்க்கதிபதியே! நீர் கண்ட சொப்பனத்தையும் நீர் பார்த்த தரிசனத்தையும் சொல்லுகிறேன் கேளும் என்றார்.

உடனே கட்டியக்காரன் ஜனங்களின் சந்தடியை அடக்க, அவர் சொல்லுவார்:—

ராஜாவே! நீர் தூங்கும்படி படுத்திருக்கையில், நான் ஆளும் மகிமையும் விசாலமுமான ராஜ்யத்துக்கு இனிமேல் என்ன சம்பவிக்கப்போகிறதோ என்பது உமது சிந்தையி லிருந்தது; அதைக்குறித்தே நீர் மனோதியானமாயிருக்கை யில் தூங்கிவிட்டீர். அச்சமயத்தில் மறைபொருளையும் வருங்கால சம்பவங்களையும் அறிவிக்கும் ஞானமுள்ள தேவன் உமது மன ஆசைபோல் அதை வெளிப்படுத்தும் படி சித்தங்கொண்டார். அதைச்சொல்லி அதன் தாற்பரி யத்தையும் விளக்கும்படி இதோ, நான் ராஜசபையேறியிருக் கிறேன்; மகாராஜாவே! அடியான் இங்கேவந்திருக்கும் ஞானி களிடத் தேறினவனல்ல, கடவுள் என்மூலமாய் அதின் இரகசியத்தைச் சொல்லும்படி கிருபை கூர்ந்ததால் அதை எனக்கு வெளிப்படுத்தினாரேயன்றி வேறல்ல என்று சொன்னார். அரசனும் அதிபதிகளும் அங்கலாய்ப்போடே அவருடைய மொழிகளைத் தேவாமிர்தம்போல் உட்கொண் டார்கள். அப்பால் தானியேல் சொப்பனத்தைப் பின்வரு மாறு கூறினார்:—

கேட்பீர், மகா ராஜாவே! நீர் பெரியதோர் சிலையைக் கண்டீர்; அப்பெரும் சிலை பிரகாசமுள்ளதாயுமிருந்தது. அது உமக்கெதிரில் பூத இராட்சதன்போல் நின்றது; அதின் பார்வையோ பயங்கரமாயிருந்தது; அச்சிலையை நீர் கூர்ந்து கண்ணோக்கவே அது ஐந்துவித உலோகங்களாலமைந்த ஒரு சிலையென்று கண்டுகொண்டீர். அதின் தலை பொன்னாயும், மார்பும் புயங்களும் வெள்ளியாயும், வயிறும் தொண்டையும் வெண்கலமாயும், கால்கள் இரும்பாயும், பாதங்கள் பாதி இரும்பும் பாதி களிமண்ணும் கலந்ததாயுமிருந்தது. இந்த அதிசய பருமனான பஞ்சவர்ணச் சிலையை நீர் விழித்தகண் தட்டி விழியாமல் பார்த்துக்கொண்டிருக்கையில் மலையி லிருந்து கைகளால் பேர்க்கப்படாத கல்லொன்று உருண்டு வந்தது; அக்கல் அந்தச் சிலையின் பாதங்களில் மோதி அதை விழத்தட்டிற்று; சிலை விழவே ஏகமாய் நொறுங் குண்டு தூசிபோல் பொடியாகிக் காற்றால் கண்ட இடங்

களுக்கு அடித்துக்கொண்டுபோகப்பட்டது. சிலையை மோதின சிறு கல்லோவென்றால் பெரியதோர் பர்வதமாகி பூமியையெல்லாம நிரப்பிற்று. அவ்வதிசயம் கண்டு பிரமை கொண்டு அதிர்மூண்டு, திடுக்கென்று விழித்தீர்; இதுவே சொப்பனம், இதன்றி வேறில்லை என்றார்.

இவ்வளவும் சொல்லவே அரசனுடைய உள்ளம் பூரித்தது. அரசன் கண்ட சொப்பனத்தைக் கேட்டவர்கள் அனைவரும் இப்படிப்பட்ட கனவுகண்டவர் இப்பூமியில் ஒருவருமில்லை என்று நினைத்துக்கொண்டிருக்கலாம். அப்பால் தானியேல் சொப்பனத்தின் அர்த்தத்தைச் சொல்லத்துடங்கினார்:—கேட்பீராக, ராஜாவே! சிலையின் தலை பொன்னாக இருந்ததே, அது நீர்தான். அண்டசராசரங்களையும் படைத்து, அகிலாண்டகோடி பிரமாண்ட நாயகரான சர்வ வல்லமையுள்ள தம்பிரான் உமக்கும் பெரும் ராஜ்யமொன்றைத் தந்திருக்கிறார். அந்த ராஜ்யத்திலுள்ள யானைமுதல் எறும்பு ஈறாக உள்ள சகல ஜீவன்களின் அதிகாரமும் உமது உள்ளங்கைக்குள் இருக்கின்றன. உமது பெருந்தன்மையையும் அதிகாரப் பெருக்கத்தையும் சிரேஷ்டத்தையும் உணர்த்தும்படி உம்மை அச்சிலையின் பொன் தலையாகக் குறித்துக்காட்டியிருக்கிறார். உமது காலத்துக்குப் பின்பு உமக்குக் கீழ்த்தரமான இரண்டாம் மூன்றாம் ராஜ்யங்கள் எழும்பும்; நாலாவதாக எழும்பும் ராஜ்யமானது பொன்தலை குறிக்கும் ராஜ்யம்போல் சிறந்ததாயிராவிட்டாலும் இரும்பைப்போல பலமானதாயிருக்கும். கடைசியாக இதுவும் பிரிவுபட்டு அதில் ஒரு பாகம் பலமும் ஒரு பாகம் களிமண்போல் பலவீனமுமாயிருக்கும். பூலோக ராஜ்யபார சம்பவங்கள் இப்பிரகாரமிருக்குங்காலத்தில் கேட்பீர், மன்னவரே! செவிசாய்த்து, பரலோக தேவன் என்றென்றைக்கும் அழியாத ஒரு ராஜ்யத்தை எழும்பப்பண்ணுவார். மலையிலிருந்து மனுஷர்கையால் பேர்க்கப்படாதகல்லொன்று வந்ததை நீர் கண்டது, இந்த ராஜ்யத்தைத்தான் குறிக்கிறது. இதற்கு மனுஷரில் எவனும் அதிபதி தத்துவம் தனக்குண்டென்று சொல்லவேகூடாது. 'அந்த ராஜ்யம் வேறே ஜனத்துச்கு விடப்படுவதில்லை;' கடைசியாக நீர் கண்ட சிறு கல்லால் குறிக்கப்படும் பரலோக தேவனுடைய

பரலோக ராஜ்யமானது பூலோக ராஜ்யங்களை நிர்மூலமாக்கி, தானே என்றென்றைக்கும் நிற்கும். இவ்வண்ணமாய் பூலோக முடிவுமட்டுமாயுள்ள சரித்திரத்தை ஆண்டவர் அரசனுக்குச் சொல்லிவிட்டார். சொப்பனமும் இதுதான், அதின் சரியான தாற்பரியமும் இதுதான் என்று அரசனைச் சேவித்து தமது ஆசனத்தில் உட்கார்ந்தார்.

உடனே அரசன் தேவதாபயத்தால் கொளுத்தப்பட்டுக் கீரைத்தண்டுபோல் குழைந்து முகங்குப்புறவிழுந்து தானியேலை வணங்கி, மதிமயங்கி அவரை தெய்வமாக எண்ணி அவருக்குக் காணிக்கை செலுத்தவும் தூபங் காட்டவும் கட்டளையிட்டான். அப்பால் அவன் புத்தி தெளிந்து தானியேலின் தேவனாகிய யேகோவாவை மெய்த் தேவன் என்று ஒப்புக்கொண்டு, அவருக்கு வெகுமதிகளைக் கொடுத்து அவரைப் பாபிலோன் ராஜ்யமுழுவதற்கும் அதி பதியாகவும், சகல ஞானிகளுக்கும் பிரதானியாகவும் உயர்த் தினன்.

இந்தச் சொப்பனமானது கிறிஸ்துமார்க்கத்தின் தன் மையையும் வல்லமையையும் உணர்த்தும் நல்ல முன்னடை யாளமாகயிருக்கிறது. மலையிலிருந்து சிலையை மோதும்படி உருண்டு வந்த கல் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துதான். அவர் பரிசுத்த பர்வதமாகிய சீயோன்மலை என்னப்படும் வானலோகத்திலிருந்து உருண்டுவந்தார். அவரை ஒரு வரும் உருட்டவுமில்லை, மனுஷர்போய் அவரைக் கொண்டு வரவுமில்லை. தெய்வத்தில் தெய்வமும், ஜோதியில் ஜோதியும், மெய்த்தேவனில் மெய்த்தேவனுமாயிருந்த அந்தக் கல் மனுஷராகிய நமதுமேற்கொண்ட அன்பின் அனலால் வெடித்து, பூமியின்மேல் தாம் பூண்டிருந்த நேசகவர்ச்சியால் இழுக்கப்பட்டு உருண்டுவந்து பூலோகஞ் சேர்ந்து, அவதார மெடுத்து தம்மையே கிறிஸ்துமார்க்கத்துக்கு மூலைக்கல்லாக ஸ்தாபித்து, கிறிஸ்துசபையாகிய பெரும் பர்வதத்தை உண் டாகும்படி செய்திருக்கிறார். சொப்பனத்தில் கண்ட சிறு கல் களிமண்பாதத்தில் மோதினலும், அதின் அதிர்ச்சியால் இரும்பும் வெண்கலமும் வெள்ளியும் பொன்னுமான மேலுறுப்புகள் அனைத்தும் விழுந்து தவிடுபொடியாகி

விட்டன; கிறிஸ்துவாகிய சிறு கல்லால் பொன்போன்ற பூர்வ யூதமார்க்கத்தையும், வெள்ளி, வெண்கலம், இரும்பு போன்ற பூலோகத்திலுள்ள சகல அவமார்க்கங்களையும் அழித்துப்போடும்படி தேவன் திருவுளங் கொண்டிருக்கிறூர். கடந்த சுமார் இரண்டாயிரம் வருஷங்களுக்குள்ளாக இந்தக் கல் பூலோகத்தின் மூன்றிலொரு பங்கை நிரப்பத்தக்கதாக பெருத்துவிட்டது. சுமார் இரண்டாயிரத்து நானூற்றுமுப்பது வருஷத்துக்குமுன் கண்ட மேற்சொல்லிய சொப்பனத்தின் பிரகாரம் அது பூமியையெல்லாம் நிரப்பும் பெரிய பர்வதம்போலாகிவிடும் என்பதும் நிச்சயம்.

இதை வாசிக்கும் சிநேகிதனே, நீ இந்துவானுல் உன்னேடு பேசவேண்டிய ஒரு செய்தியுண்டு. அதாவது: கிறிஸ்துவாகிய கல்லே அசட்டை செய்யாதே, அவருடைய அவதார வரலாறும், அவஸ்தையான ஜீவனமும், நீச மரணமும் அவரை விரோதிக்கும்படி உன்னே ஏவ வேண்டாம்; உன் தலையைக் கிறிஸ்துவாகிய கல்லில் கோபமாய் மோதி அடித்து உடைத்துக்கொள்ளவேண்டாம்; அதினுல் உனக்கே சேதமாகும்; ஒருகாலத்தில் அந்தக் கல் உன்மேல் விழும்; அதாவது, அவரே உன் நியாயாதிபதியாய் வீற்றிருந்து செங்கோல்செலுத்தித் தீர்ப்புக்கூறுவார். அக்காலத்தில் நீ பிழைக்கும்படியாக இப்பொழுது விசுவாசத்தால் அவரண்டைவந்து அவருடைய சபையில் சேர்ந்து உன் நேசத்தால் அவரை முத்தமிடுவாயாக.

இதை வாசிக்கும் சிநேகிதனே! நீ கிறிஸ்தவனுனுல் உன் உள்ளம் மகிழவேண்டாமோ? நீ தினந்தோறும் அந்தக் கல் சீக்கிரத்துக்குள்ளாக பூமி முழுவதையும் கவிந்துகொள்ளும்படி மன்றூடவேண்டியதில்லேயா? ‘கர்த்தாவே, உம்முடைய ராஜ்யம் வருவதாக.’

மேலும் இதோடு நாம் தியானிக்கும் வேறெரு சிறிய குறிப்பையும் காண்கிறேம். சொப்பனத்தில் உருண்டு வந்ததாகக் கண்ட சிறிய கல் களிமண்ணுகிய கால்விரல்களில் படவே பலமுள்ள லோகங்களால் அமைக்கப்பட்டிருந்த

தலைமட்டுமுள்ள உறுப்புக்களனைத்தும் நாசமாய்ப்போயின. கிறிஸ்து மார்க்கமானது களிமண்போன்ற அறிவீனரும் ஏழைகளுமானவர்கள் மூலமாகவே வல்ல கரமும், வயிர நெஞ்சும், பொன்மய ரூபமுமான பிரபுக்களுக்கு போதிக்கப் படவேண்டியது. அவர்கள் களிமண்தான்; ஆனால் அவர்களில் மோதும் பலமோ உன்னத கல்லின் பரிசுத்த பலமானதால் அது மண்பாண்டங்களாகிய ஏழைக் கிறிஸ்தவர்கள் மூலமாகப் போனாலும் பலஞ்செய்யும். ஆதலால் ஒருவனும் தன்னை இந்த மகா வேலைக்குத் தகுந்தவனென்று சொல்லிக் கொள்ளவேண்டாம். நம்மைப் பலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே நாம் எவற்றையும் செய்ய வல்லவர்களாயிருக்கிறோம்.

இப்பொழுது நாம் மறுபடியும் தானியேலின் சரித்திரத்தைத் தொடர்ந்து போவோமாக. தானியேல் என்பவர் பாபிலோன் நாட்டதிபதிகளுக்கும் ஜோஷிய வித்வான்களுக்கும் மேலாக உயர்த்தப்பட்டபோதிலும் அவருடைய நற்குணம் மாறவே இல்லை. சிலருடைய தலை கனத்தை அடைந்தவுடனே ஆட்டம் கொடுக்கும், அயலாரை மதிக்க மாட்டார்கள்; நெருங்கிய சிநேகிதரை ஒருக்காலும் காணாத புது ஆட்களைப்போல் பார்த்து, நீர் யார், எவர், இனந்தெரியவில்லையே என்று கர்வங் காட்டுவார்கள்; அவர்கள் உடையும் பெருமை, உணவும் பெருமை, நடையும் பெருமை, பார்வையும் பெருமை, அவர்கள் உட்காருவதும் பெருமை, எழுந்திருப்பதும் பெருமை, வாரும் என்பதும் பெருமை, போம் என்பதும் பெருமை என்று சொல்லத்தக்கதாக அவ்வளவு மாறிப்போகிறதுண்டு. தானியேலுடைய குணங்களில் அப்படிப்பட்ட மாறுதல் யாதொன்றும் காணப்படவில்லை; அவர் தன் காரியக்குட்டியாய் இருக்கவுமில்லை. ஆதலால் அவர் அரசனிடம் சிபாரிசுசெய்து தமது சிநேகிதராகிய சாத்ராக்கையும் மேஷாக்கையும் ஆபேத்நேகோவையும் பாபிலோன் மாகாணத்துக் காரியங்களை விசாரிக்கும் அதிபதிகளாக்கினார். இவர் செய்த இந்த முயற்சி ஜாதி வித்தியாசத்தினால் ஏவப்பட்டதல்ல; மெய்ப் பக்தியை பாபிலோன் தேசத்திலே விருத்திபண்ணலாமென்ற நோக்கத்தினாலேதான் என்பது பின்வரும் வரலாறுகளால் விளங்கும்.

பொற்சிலைப் பருவம்

தானியேல் ராஜ அரமனையிலே தங்கி தினந்தோறும் கொலுமண்டபத்தில் வீற்றிருந்து செங்கோல் செலுத்தி வந்தார்; அவருடைய சிநேகிதரும் தம் தம் வேலைகளைக் கிரமமாய் நிறைவேற்றி வந்தார்கள். இப்படி நடந்துவருங் காலத்தில் அரசன் ஒரு பெரிய பொற்சிலையை உண்டுபண்ண வேண்டுமென்று உத்தரவு கொடுத்தார். ஒருவேளை தன் ராஜ்யத்தின் வாழ்வையும் விருத்தியையும் தன் குடிகளும் மற்றவர்களும் அறிந்துகொள்ளவும், தனக்குக் கிடைத்திருக்கிற பூலோக பாக்கியங்களை உணர்ந்து கடவுளுக்குத் துதி செலுத்தும் திருவிழாவைக் கொண்டாடவும் நோக்கமாக அந்தப் பொற்சிலையை உண்டுபண்ணியிருக்கலாம். அரசன் அந்தச் சிலையை ஒரு விஸ்தாரமான மைதானத்தில் நிறுத்தி தன் ராஜ்யத்திலுள்ள தேசாதிபதிகள் சேனாதிபதிகள், ஞானாதிபதிகள் நியாயாதிபதிகள், வில்வீரர் வீணை வீரர், தர்மசாஸ்திரிகள் நீதிசாஸ்திரிகள், வைத்தியசாஸ்திரிகள் நாடுநகரங்களிலுள்ள உத்தியோகஸ்தர் அடங்கலும் அச்சிலையின் பிரதிஷ்டைக்கு வந்து சேரும்படி அழைத்தனுப்பினான். இம்மட்டும் தானியேலின் தேவன்மேல் பெரிய எண்ணமாயிருந்த அரசன் இவ்வண்ணம் செய்யத் துணிந்தது அந்நாட்டு அதிபதிகளுக்குச் சொல்லிமுடியாத ஆனந்தமாயிருந்தது. அரசன் உண்டுபண்ணியிருந்த பொற்சிலை சின்னஞ் சிறியதாயிராமல் அறுபதுமுழ உயரமும், ஆறுமுழ அகலமுமான பெரியதோர் சிலையாயிருந்தது. முழுவதும் பொன்னாயிருந்த அந்தச் சிலைமேல் சூரியகதிர்கள் படும்போது அது அக்கினி கக்குகிறதுபோல் ஜொலித்தது.

சோதிடர்கள் சொன்ன லக்கினத்தின்படியே தேசாதிபதிகளும் நியாயாதிபதிகளும், நாட்டதிபதிகளும் சேனாதிபதிகளும், தலைவரும் புலவரும், ஞானிகளும் யூகிகளும், பட்டவர்த்தனரும் பிரபுக்களும், நகரங்களிலும் நாட்டுப்புறங்களிலுமிருந்து வந்த உத்தியோகஸ்தரும் ராஜா நிறுத்தின பொற்சிலையின் பிரதிஷ்டை உற்சவத்துக்குக் கூடி சிலைக்கு எதிராக நின்றார்கள். அச்சமயத்தில் கட்டியக்காரன் உயர்ந்த

ஓர் மேடையின்மேல் ஏறிநின்று, சலசலவென்று இறையும் சந்தடியைக் கைகாட்டி அமர்த்தி உரத்த சத்தமாய்ச் சொல்லுவான்:—'ராஜாதி ராஜன், ராஜகெம்பீரன்—மன்னரின் மகுடாதிபதி—வில்லெயும் வீரர்—பட்டய மன்னர்—வாள் வீசம் புலி—வல்லாரை வென்றோர்—விருதுக் குடையோர்—பாராளும் வேந்தர்—பாபிலோன் அரசனாகிய நேபுகாத்நேச்சாருடைய மகத்துவ நாமத்தால் உங்களுக்கு அறிவிக்கப்படுவது என்னவென்றால்;—எக்காளம், நாகசுரம், கின்னரம், வீணை, சுரமண்டலம், தம்புரு முதலான சகலவித கீதவாத்தியங்களும் இடி முழங்கினாற்போல மளமளவென முழங்கும் போது நீங்கள் அனைவரும் அடியற்ற மரம்போல தாழ விழுந்து ராஜா நிறுத்திய பொற்சிலையைப் பணிந்துகொள்ள வேண்டியது; எவனாவது தாழவிழுந்து அதைப் பணிந்து கொள்ளாதேபோனால் அவன் அந்நேரம் எரிகிற அக்கினிச் சூளையின் நடுவிலே போடப்படுவான்' என்று கூறி, டமடமவென தன் முரசை முழக்கினான். உடனே எக்காளம் தன் நெடுங்கழுத்தால் கூவினது; நாகசுரமும் இன்பத்தொனியைக் கக்கினது; கின்னரமும் தன் வண்ணத்தொனியைவிட்டது; சுரமண்டலமும் தம்புரும் தரைமண்டலமும் பரமண்டலமும் வெடித்துப் போகத்தக்கதாக முழங்கின. அது கேட்ட ஜனமனைத்தும் தாழவிழுந்து இருகரங்களாலும் பொற்சிலையைக் கும்பிட்டார்கள்.

அதே சமயத்தில் மூவர் கைதிகளாக்கப்பட்டார்கள். எப்படியெனில், கூடி வந்திருந்த பெருங்கூட்டத்தில் சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ ஆகிய மூவரும் இருந்தார்கள். அவர்கள் அந்தச் சிலையைக் கும்பிடவில்லை. இதை அவர்கள்மேல் குற்றமாக்கி ராஜாவிடம் அறிவித்ததில் அவன் கோபாக்கினிமூண்டு அம்மூவரையும் வரவழைத்து, அவர்கள் நடபடிக்கைகள் சரியல்லவென்று கண்டித்து, அவர்களுடைய தேவனையும் கண்டபடி தூஷித்து, இன்னொரு தடவை கீதவாத்தியம் முழங்கும்போது நீங்களும் தாழவிழுந்து நான் நிறுத்தின சிலையை வணங்கினாலாச்சுது, இல்லாவிட்டால் அக்கினிச் சூளைக்கு இரையாவீர்களென்று சொன்னதோடு, 'உங்களை என் கைக்குத் தப்புவிக்கபோகிற தேவன் யார்?' என்றும் சபதங்கூறினான். இந்தச் சமயத்

தில் தானியேல் எங்கே யிருந்தாரென்பதைப் பற்றி நமக் கொன்றும் தெரியவில்லை; ஒருவேளை அவரும் அவ்விடத்தில் இருந்திருப்பார். அவரையும் இவர்களோடு சேர்த்தால் தங்கள் காரியம் வாய்க்காதென்று பகைவர் தந்திரமாய் எண்ணி, இவர்களை மாத்திரம் பிடித்திருக்கலாம். அரசன் எவ்வளவு கோபமாய்ப் பேசினபோதிலும் அம்மூவரும் அஞ்சவில்லை. அவர்கள் ஏகமன நிர்ணயமாய் ராஜாவை நோக்கி, 'நேபுகாத்நேச்சாரே, இந்தக் காரியத்தைக் குறித்து உமக்கு உத்தரவு சொல்ல எங்களுக்கு அவசியமில்லை. நாங்கள் ஆராதிக்கிற எங்கள் தேவன் எங்களைத் தப்புவிக்க வல்லவராயிருக்கிறார்; அவர் எரிகிற அக்கினிச் சூளைக்கும், ராஜாவாகிய உம்முடைய கைக்கும் நீங்கலாக்கி விடுவிப்பார். விடுவிக்காமற்போனாலும், நாங்கள் உம்முடைய தேவர் களுக்கு ஆராதனை செய்வதுமில்லை, நீர் நிறுத்தினபொற் சிலையைப் பணிந்து கொள்வதுமில்லை' என்று சொன்னார் கள்.

இவ்வளவு கேட்கவே அரசன் கோபத்தால் வேறு முகப் பட்டு அக்கினிச்சூளையை முன்னிலும் ஏழு மடங்கு அதிக மாய்ச் சூடாக்கி, அம்மூவரையும் கட்டி அக்கினிப்பள்ளத் தில் எறியும்படி தன் இராணுவ வீரரில் சில பலசாலிகளைத் திட்டஞ்செய்தான். அரசனுடைய கோபாக்கினைக்கும் சத்துருக்களின் கோபாக்கினைக்கும் தக்க அளவாக சூளை கொளுத்தப்பட்டவுடனே குறிக்கப்பட்ட பராக்கிரமர் அம் மூன்று பக்தாட்களையும் அவரவர் சால்வைகளோடும், நிஜார் களோடும், பாகைகளோடும், மற்ற வஸ்திரங்களோடும் கட்டி எரிகிற அக்கினிப்பள்ளத்தின் மத்தியில் எறிந்தார்கள். அவர் களை அக்கினிக் கரையோரத்தில் அல்ல, நடுமத்தியில் எறிய வேண்டுமென்று அரசன் கண்டிப்பாய் உத்தரவு கொடுத்த தால் போர் வீரர் கூடிய மட்டிலும் சூளைக்குக் கிட்ட போக வேண்டியதிருந்தது. சூளை மிகவும் சூடாக்கப்பட்டிருந்த படியால் அதின் ஜுவாலையால் அந்த வீரர் மாண்டுபோனார் கள்; பக்தர் மூவருமோ கட்டுண்டவர்களாய் எரிகிற அக்கினிச் சூளையின் நடுவிலே விழுந்தார்கள். அவர்கள் மேலிருந்த எரிச்சலால் அனலை இன்னும் அதிகப்படுத்த வேண்டுமென்று ராஜாவின் வேலைக்காரர் ஓயாமல் கந்தகத்

தையும், கீலயும், சணலையும், மெல்லிய மிலாறுகளையும் சூளையிலே எறிந்துகொண்டேயிருந்தார்களாம். எல்லாரும் அவர்கள் தொலைந்தார்கள் என்று சொன்னார்கள்; விசேஷமாய் பாபிலோன் பிரபுக்கள் பலர் இன்றோடு நமது களைகளைப் பிடுங்கிப்போட்டோம் என்று சந்தோஷப்பட்டார்கள். அவர்கள் அப்படியே சந்தோஷப்படட்டும், நாம் இன்னும் கடைசி மட்டும் பார்ப்போம்.

சேவகர் செத்துப்போனதும் வேறு மூவர் அக்கினியில் போடப்பட்டதும் அரசனுடைய உள்ளத்தை வதைத்துக் கொண்டிருந்ததென்று சொல்லவேண்டியது. இந்த மூவரையும் சும்மாயல்லோ போட்டோமென்று அனுதாபப்படும்போதோ, அல்லது அவர்கள் உடல் பஸ்பமாவதைப் பார்ப்போமென்று கன்னெஞ்சுகொள்ளும்போதோ சூளையைக் கூர்மையாய்க் கண்ணோக்கி, புத்தி தடுமாறினவன் போல் தீவிரமாய் எழுந்திருந்து தன் மந்திரிமாரை கூப்பிட்டு, அதோ! அக்கினிக்குள் உலாவும் ஆட்களைக் எண்ணுங்கள்; நாம் மூவரையல்லோ போட்டோம், அங்கே நாலுபேர் விடுதலையாகி அக்கினியின் நடுவிலே சாங்கோபங்கமாய் உலாவுகிறார்களே; அவர்களுக்கு யாதொரு சேதமுமில்லை; நாம் போடாத நாலாம் ஆளின் சாயல் மனுமக்கள் போலிராமல் தேவ புத்திரனுக்கு ஒப்பாயிருக்கிறது என்று சொன்னான். இது எவ்வளவு ஆச்சரியமான சம்பவமென்று சொல்லவேண்டியது! விக்கிரகாராதனையைப் பாபிலோனில் ஸ்தாபிக்க முயலும் நாளிலேதான் தேவன் அதைக் குலைத்துப்போடும்படி எழுந்தருளியாகிறார் என்று பார்க்கிறோம். இந்த மூவரும் அக்கினியின் நடுவிலிருந்து கீதம் பாடியதாகவும் சொல்லப்பட்டிருக்கிறது.[1] அது மெய்யானால்

---

[1] இந்தக் கீதம் எபிரெயு பாஷைப் பிரதிகளில் இல்லாவிட்டாலும் சில கிரேக்கைத் திருப்புதல்களிலும், லத்தின் திருப்புதல்களிலும் தானியேல் 3:23ஆம் வசனத்துக்குப் பின்பு சேர்க்கப்பட்டிருக்கிறது. இதை தானியேலின் ஆகமத்துக்கு ஒழிபியலாக அப்போகிரிப்பா ஆகமத்தில் காட்டியிருக்கிறது. இது பெரும்பாலும் மூன்று வாலிபரின் பாட்டு என்ற பேரால் வழங்கப்படுகிறது. இதை ஆங்கிலேய சபை காலை ஆராதனையில் முதலாம் பாடத்துக்குப்பின் பாடும் கீர்த்தனைகளில் ஒன்றாகக் (Benedicite omnia opera) குறித்திருக்கிறது.

அம்மூன்று வாலிப பக்தர்களும் நினைத்தவுடனே கவி கட்டிப் பாடத்தக்க நொடிப் புலவராயிருக்கவேண்டியது. மற்றப்படி தேவர்களின் சாயலுக்கொத்தவராய் விளங்கி அவர்களோடு அக்கினியின் மத்தியில் உலாவி வந்த பரமபுத்திரன் அந்தப் பாட்டைக்கட்டி அவர்களைப் பாடும்படிச் சொல்லியிருக்கலாம். அக்கினியின் ஜுவாலை இரைச்சலுக்குள்ளே ஆண்டவரின் துதியின் இரைச்சல் கேட்கப்படுகிறது எவ்வளவு அதிசயம்! நாம் துன்பம் உபத்திரவம் ஆகிய வியாகுல சூளைக்குள்ளிருக்கையில் துதிபாடும் வேலையே யன்றி வேறு வேலை நமக்குத் தகாது. அவர்கள் தங்கள் கவி மூலமாய் கர்த்தர் சிருஷ்டித்த வானங்களையும் தூதரையும், ஆகாய ஜலங்களையும் ஆழத்து ஜலங்களையும், சூரியசந்திர நட்சத்திராதிகளையும், மழை பனி காற்றுகளையும், அக்கினியையும் உஷ்ணத்தையும், மாரிகோடைக்காலங்களையும், மின்னல் மேகங்களையும், இரவையும்பகலையும், ஒளியையும் இருளையும், பூமியிலுள்ள மலைகளையும் குன்றுகளையும் தாழ்ந்த பூண்டுகளையும் உயர்ந்த விருட்சங்களையும், நதிகளையும் மற்ற நீர் நிலைகளையும், மகா மச்சங்களையும் மற்ற மச்சங்களையும், ஆகாயத்துப் பறவைகளையும் பூலோக மிருகங்களையும், மனுமக்களனை வரையும் பக்தாட்களையும், பூசாசாரிகளையும் நீதிமான்களின் ஆவிகளையும் தங்களுடன் சேர்ந்து பாடும் கூட்டாளிகளாக எண்ணிக்கொண்டு,

‘கர்த்தரைப் போற்றிப் புகழ்ந்து
என்றென்றைக்கும் அவரைத் துதியுங்கள்’

என்ற பல்லவியைக்கொண்டு நெடுநேரம் பாடினார்கள். இந்தப் பாடலுக்கு பின்பு அசரியா என்ற வாலிபன் அக்கினி மத்தியிலிருந்து ஜெபஞ்செய்ததாகவும் நாம் வாசிக்கிறோம். அப்போகிரிப்பா ஆகமக்காரன் சொல்லுகிறவண்ணம் அந்தப் பரமபுத்திரர் சூளைக்குள் இறங்கி அனலுக்குள் குளிர்ந்த காற்றாய் வீசினார்; அதினால் அவர்களில் ஒருவனையும் அக்கினி தொட்டதுமில்லை சுட்டதுமில்லை.

இந்த அதிசய சம்பவமானது பொற்சிலை உற்சவத்தை அக்கினிச் சூளை உற்சவமாக மாற்றிவிட்டதென்று சொல்ல வேண்டியது. அதோடு அங்கு கூடிவந்திருந்த சகல

மனுஷரும் இந்த அதிசயத்தைக் கவனிக்கவும் இதைப் பற்றிப் பேசிக்கொள்ளவும் ஆரம்பித்தார்கள். கடைசியாக அரசன் எரிகிற அக்கினிச் சூளையின் வாசலண்டைக்கு வந்து,

'உன்னத தேவதாசராகிய
சாத்ராக்கே, மேஷாக்கே, ஆபேத்நேகோவே
நீங்கள் வெளியே வாருங்கள்! வாருங்கள்!!'

என்று கூப்பிட்டான். இதற்குள்ளாக சூளை தன் அனலி லிருந்து தாழ்ந்திருக்கலாம்; அல்லது அந்தப் பரம புத்திரர் அதை முற்றிலும் அவித்துப்போட்டிருக்கலாம். அவர்கள் எவ்வளவுக்கு அதிகநேரம் அக்கினியின் மத்தியில் நின்று உலாவிப் பாடிக்கொண்டிருப்பார்களோ அவ்வளவுக்கு உன்னத தேவனுக்குப் புகழ் எழும்புமேயன்றி வேறல்ல. அரசனுடைய குரலைக் கேட்டவுடனே அம்மூவரும் தாயின் மடியிலிருந்து சந்தோஷமாய் புறப்பட்டு வருகிற பிள்ளை யைப்போல வந்தார்கள். தேசாதிபதிகளும் தலைவரும், அதிகாரிகளும் மந்திரிகளும் கூடி வந்து அவர்களுடைய தேகத்தின்மேல் அக்கினி பெலன் செய்யாமலும், தலைமயிர் கருகாமலும், அவர்களுடைய சால்வைகள் சேதப்படாமலும், அக்கினிப் புகையின் மணம் அவர்களில் வீசாமலுமிருந்ததை யுங்கண்டு ஆச்சரியப்பட்டார்கள். உடனே அரசனுடைய மார்க்க அபிப்பிராயம் வேறுபட்டது. அவன் விக்கிரகத்தின் மேல் வைத்த எண்ணத்தை முற்றிலும் மாற்றி பக்தியுள்ள இந்த வாலிபர் வணங்கி வந்த யேகோவாவை ஸ்தோத்தி ரித்துப் போற்றினதுமன்றி, யேகோவாவாகிய தேவனுக்கு விரோதமாக தூஷண வார்த்தையைச் சொல்லுகிற எந்த ஜனத்தானும் ஜாதியானும் பாஷைக்காரனும் துண்டித்துப் போடப்படுவான் என்றும், அவன் வீடு எருக்களமாக்கப் படும் என்றும் விளம்பரம் பண்ணி, 'இவ்விதமாய் ரட்சிக்கத் தக்க தேவன் வேறெங்குமில்லை' என்று அறிக்கையிட்டு, அம்மூவருக்கும் முன்னிலும் உயர்ந்த உத்தியோகங்களைக் கொடுத்தான்.

இந்த வரலாறுகள் நமக்கு அநேக நல்ல போதனைகளைக் கொடுக்கிறவைகளாயிருக்கின்றன. இவர்கள் மூவரும் ஒன்று

போல் கூடி மெய்த்தேவ மகத்துவத்தை வெளிப்படுத்தின தால் பொய்த்தேவ பற்றுதல் அழிக்கப்பட்டது. தேவனை மகிமைப்படுத்துவதே நமது நோக்கமாயிருக்கவேண்டியது. தேவமகிமை நம்மால் மெய்யாகவே விளங்கவேண்டுமானால் நமக்குத் துன்பம் உண்டாகும் என்பது மெய். நாம் நமது துன்பத்தால் தேவ இன்பத்தையும், நமது தாழ்வால் தேவ மேன்மையையும், நமது கனவீனத்தால் தேவகனத்தையும், நமது மரணத்தால் தேவபக்தியின் ஜீவனையும் உலகத்தில் நிலைநிறுத்தவேண்டியது நேரிட்டால் அது நல்லதுதானே. உத்தம பக்தர் தங்களுடைய வாழ்வையெல்லாம் கிறிஸ்துவி னிமித்தம் குப்பை என்று தாழ்வாய் எண்ணி, அவர் பெருகவும் நான் குறையவும்வேண்டுமென்று பிரயாசப் படுவார்கள்.

இந்த மூன்று இரத்தச்சாட்சிகளும் தங்களுடைய விசுவாசத்தை அக்கினியால் ருஜுப்படுத்தி துன்பத்தைச் சகிக்கிறதால் தேவனை மகிமைப்படுத்தவேண்டிய மனுப் புத்திரர் எல்லாருக்கும் திருஷ்டாந்தமாயிருக்கிறார்கள். அவர்களுக்குள்ளிருந்த விசுவாசமே அவர்களைப் பட்சிக்கும் படி எழும்பி, எரிந்த அக்கினியின் உக்கிரத்தை அவித்து விட்டது. எப்படியும் விசுவாசிக்குக் கடைசியில் ஜெயந் தான். அவன் ஐயோ! என்று அலறிக்கொண்டு சாகாமல், அல்லேலூயா! என்று பாடிக்கொண்டு தன்னைச் சூழ்ந்திருந்த அக்கினியிலிருந்து தப்பிவருகிறான்.

இதினாலே தேவன் தமது பிள்ளைகளை நடத்தும் பாதை யும் இன்னதென்று தெரியவருகிறது. நம்மை நடத்தும் பாதையானது நெய்யாய்ப் பொழியவேண்டுமென்றும், அதின் ஓரங்களில் சில்லென்று குளிரும் நீரூற்றுகளும், பச்சென்று விளங்கும் சோலைகளும், கமகமவெனப் பரிமளிக்கும் புஷ்பச் செடிகளும், கைநீட்டிப் பறித்துத் தின்றுகொண்டேபோகத் தக்க பழ விருட்சங்களும், அந்திசந்தி அறுசுவையோடு அமுதளிக்கும் ஆசார சத்திரங்களும், இன்பமாய் இளைப் பாறும் தாங்குமஞ்சங்களுமுள்ளதாயிருக்கவேண்டுமென்று நாம் ஆசைப்படுகிறதுண்டு. தேவனுடைய பாதைகளோ இவையனைத்திற்கும் முற்றிலும் விரோதமானதாயிருந்தா

லும் இருக்கலாம். உன்னுடைய வழிகள் நம்முடைய வழிக ளல்லவென்று கர்த் ் சொல்லுகிறார். அவருடைய பாதை கள் சறுக்கிவிழத்தக உச்சி மலைப்பாதையாயும், முள்ளும் புதருமுள்ள காட்டுப் தையாயும், பானங்கிட்டாத பாலை வனமாயும், அன்னங்கிட ாத அவாந்தரவெளியாயும், பழங் கள் கிட்டாத பள்ளத் க்காயும் இருக்கலாம். அவர் பெரும்பாலும் தமது பிள்ளைகளை அக்கினிச் சூளையாகிய துன்பத்தின்மூலமாய் நடத்தி, இன்பலோகத்தின் பாக்கியங் களை அருளுகிறார். அச்சமயத்தில் நாம் கடவுளின் செயல் களைக் குறித்து விசாரிக்க அல்லது ஆட்சேபிக்க துணிகிற வர்களாயிராமல், ‘பிதாவே! உமது சித்தம் என்னில் நிறை வேறுவதாக; நீர் முட்களின் வழியாய் முடியையும், தாகத் தின் வழியாய் ஜீவதடாகத்தையும், அன்னத்தாழ்ச்சியால் வானத்து மன்னாவையும், அடிகாயங்களால் அரவணைப்பை யும், நிருவாணத்தால் நீதியின் உடையையும் தந்துவருகிறீர்; நீர் நடத்தும் பாதையை நான் பழுதுகூறாமல், எனக்குமுன் நீர் அந்தப் பாதையில் நடக்கிறீர் என்று அறிந்து உமது சால்வையின் தொங்கலைப் பிடித்துக்கொண்டு சாங்கோபாங்க மாய் கைவீசி வருகிறேன்’ என்று சொல்லி பரமசிந்தை யடைந்து அவர் நடத்தும் பாதைக்குட்படவேண்டியது.

இனி நாம் மந்திரியின் சரித்திரத்தில் விட்டதை தொடர்ந்து போவோமாக. மந்திரியும் அவருடைய தோழர் மூவரும் பாபிலோன் ராஜ்யத்தில் விருதுக்குடைய மேன் மக்களாய் வாழ்ந்து, தம்தம் பதியில் உத்தியோகஞ்செய்து வருங்காலத்தில் அரசன் மறுபடியும் ஒரு அதிசயமான சொப்பனங்கண்டான். தானியேல் அதின் தாற்பரியத்தைக் கூறினார். அது அரசனுக்கு மகா கனவீனமும் துன்பமும் நேரிடுவதை உணர்த்தினது. அந்தச் சொப்பனத்தின்படி கடவுள் அரசனுடைய கிரீடத்தைத் தாழ்த்தி, அவனை மிருக மாக்கி, ஏழு வருஷம் காட்டில் வசித்து புல்பூண்டுகளைத் தின்று காலந்தள்ளி மறுபடியும் குணந்தெளிந்து அரசுபுரிவ தாக அவர் மொழிந்தார்.

இப்படி ஒருநாளும் நிறைவேறாதென்று பலரும் அரச னைத் தைரியப்படுத்தியிருக்கலாம். ஆனாலும் அச்சொப்பனங்

கண்ட ஒரு வருஷத்துக்குப் பின்பு ஒருநாள் அரசன் தன் ராஜ்யபார வாழ்வுகளையும் மகத்துவங்களையும் மனதிற் சுமந்து, கர்வ பார்வையோடும் காம்பீரநடையோடும் அரமனை மேல் உலாவிக்கொண்டிருந்து, தனது பாதத்தின்கீழ் காணப் பட்ட மாடமாளிகைகளையும் கூடகோபுரங்களையும் தேர்வீதிச் சிறப்பையும் தெருவீதி ஒழுங்கையும் ரதகஜதுரகபதாதி களின் பவுஞ்சையும் கைத்தொழிற்சாலைகளையும், கல்வி மாடங்களையும் தொங்கு தோட்டத்தையும், தோன்றும் மற்றெல்லா காட்சிகளையும் கண்ணுற்று பெருமைமூண்டு, அப்பெருமையை அழித்துவிட அல்லது அகற்றிவிட தன்னால் இயலாமல் வாய்விட்டு,

இது என் வல்லமையின் பராக்கிரமத்தினால்
என் மகிமைப்ரதபிாபத்துக்கென்று
நான் கட்டின மகா பாபிலோனல்லவா![1]

என்று சொன்னான். இந்த வார்த்தைகள் அவன் ராஜ்ய பாரத்து அந்தரங்க அநுகூலராயிருந்த சாட்சாத் கடவுளை சங்காரஞ்செய்யும் பட்டயம்போலிருக்கிறதல்லவா! இந்த நான் என்னும் ஆணவம் ஆதாமின் மக்களுக்கு ஆகாது; ஐயோ! ஆதாமின் மக்களில் அநேகர் மாண்டதற்கும் தாழ்ந்த தற்கும் இதுதான் காரணம். நான் என்றவனை வென்றவனே அரசன். அரசனுடைய கர்வவாசகம் அவனுடைய வாயி லிருக்கும்போதே உள்ளபடி நான் என்று சொல்லவேண்டியவ ராகிய வானாதி தேவனிடத்திலிருந்து ஒரு சப்தமுண்டாகி,

---

[1] இது முதலாவது நோவாவின் பேரனாகிய நிம்ரோத் என்னும் வீரனால் பாபேல் கோபுரமிருந்த மைதானத்தில் கட்டப்பட்டிருந்தது. தானியேல் காலத்தில் இந்நகரம் நாலுதிசையிலும் 15 மைல் தூரமான சம சதுரமுள்ளதாயும், 60 மைல் சுற்றளவுள்ள பட்டணமாயுமிருந் தது. இந்தக் கோட்டையின் மதில் சுவர் 87 அடி கனமும், 250 அடி உயரமும், அநேக உயர்ந்த கோபுரங்களும் துருக்கங்களுமுள்ளதா யும் இருந்தன. திசைக்கு 25 வாசலாக 100 வெண்கலக் கதவுகளுள்ள பெரும் வாசல்களும் அதற்கிருந்தன. இந்த நகரம் உலகத்திலுள்ள ஏழு அதிசயங்களில் ஒன்றாகச் சொல்லப்பட்டுவந்தன.

'இராஜாவாகிய நேபுகாத்நேச்சாரே!
ராஜ்யபாரம் உன்னைவிட்டு நீங்கிற்று,
நீ மனுஷரைவிட்டு தள்ளப்பட்டாய்,
நீ மிருகங்களோடே சஞ்சரிப்பாய்,
நீ ஏழுவருஷம் மாடுபோல் புல்லைமேய்வாய்'

என்று விளம்பிற்று. அந்நேரமே இந்த வார்த்தைகளின்படி அரசனுக்கு நேரிட்டது. அவன் உடனே தன் இரு கரங்களையும் கால்களாக உபயோகித்து மிருகம்போல் நடந்து புல்லை மேய்ந்தான்; அவனுடைய தலைமயிர் கழுகுகளின் இறகுகளைப்போலவும் அவனுடைய நகங்கள் பட்சிகளுடைய நகங்களைப்போலவும் வளர்ந்தன; பனியும் மழையும், கானலும் வேனலும், அவனுக்குச் சொந்தமாயின. ஐயோ! பெருமை எவ்வளவு கேடானதென்று தியானிப்போமாக; அது மனுஷனை மிருகமாக்கி அவன் கிரீடத்தை உதைத்து அவனைத் தாழ்த்திவிட்டது. இவ்விஷயத்தில் நாம் தானியேலிடத்தில் காணும் விசேஷித்த லட்சணம் அவருடைய தைரியந்தான். அரசன் கண்ட சொப்பனம் அவனுக்கு விரோதமாயிருக்கிறதென்று கண்டாலும் அதை மறைக்காமலும் மாற்றாமலும் உள்ளபடி அரசனுக்கு அறிவித்தார். தேவ ஊழியக்காரர் தங்களுக்கு வெளிப்படுத்தும் தேவ இரகசியங்களையும் இப்படியே அறிவிக்கவேண்டியவர்களாயிருக்கிறார்கள்.

நேபுகாத்நேச்சாருடைய பெருமைக்குத் தண்டனையாக குறிக்கப்பட்ட காலம் கழிந்தபோது அவனுடைய புத்தி அவனுக்கு வந்தது, அவன் மறுபடியும் சிம்மாசனமேறி செங்கோல் செலுத்தினான். ஆனால் இந்த ஏழு வருஷ காலங்களாக அத்தேசத்தில் யுத்தங்களாவது பஞ்சங்களாவது உண்டாகவுமில்லை, அயல்நாட்டு அரசர் அவன் தேசத்தை இச்சித்ததுமில்லையென்று பார்க்கிறோம். அந்தக் காலத்து மனுஷ நிலைமையைக் கவனித்தால் இது ஆச்சரியந்தான். அரசனுக்குண்டான தேவதண்டனையானது அக்காலத்து மன்னரையெல்லாம் மனக்காய்ச்சல் பிடிக்கும்படி செய்துவிட்டதென்று சொல்லவேண்டியது. இச்செய்தியைக்

கேட்ட எவனும் கடவுளால் சாபத்தீடாக்கப்பட்ட சிங்காசனம் எனக்கு வேண்டாம் என்று கழித்துவிட்டிருக்கலாம். இந்த ஏழு வருஷங்களிலும் தானியேல் மந்திரியே ராஜ்ய மனைத்துக்கும் தலைவராயிருந்து தேவசித்தப்படி அரசு புரிந்து, குடிகளை ஆண்டுவந்தார் என்று நினைக்கத்தக்கதாயிருக்கிறது. இந்த அற்புத தண்டனையானது இவர்மேல் ஒருவனும் எழும்பாதபடி அடக்கும் தேவதண்டாயுதம்போ விருந்ததென்று நினைக்கலாம். அரசன் மறுபடியும் சிங்காசனபதியானவுடனே தன்னைத் தாழ்த்தி உயர்த்தின தம்பிரானை தாழ்ச்சியுள்ள மனதோடே அர்ச்சித்து, அவருடைய நாமத்தைப் பிரஸ்தாபப்படுத்தி, தான் என்னும் ஆணவம் அழிந்து செங்கோல் செலுத்திவந்தான். தானியேலும் அவன் ஆதரவில் முக்கியஸ்தராய் காலங்கழித்து வந்தார்.

பாபிலோன் ராஜ்யத்தில் இனிச் சீரும் சன்மார்க்கமும் தழைத்தோங்குவதற்கு யாதொரு ஆட்சேபனையும் இல்லையென்பது நமது மனதில் படலாம். ஆனால் காரியமோ வித்தியாசமாயிருந்தது. முந்தின அரசனுடைய மனதிலுண்டான தெய்வீக உணர்ச்சியானது அக்குடும்பத்தையும் ராஜ்யத்தையும் விட்டு சீக்கிரம் மாறிப்போயிற்று. ஒருவேளை தானியேலை அவர்கள் உத்தியோகத்திலிருந்து நீக்கி அல்லது தாழ்த்தி, தலையெடுக்கவிடாமலும் சன்மார்க்கத்தை விருத்தி பண்ணவிடாமலும் தடை செய்ததினாலே உண்டாகியிருக்கலாம். நேபுகாத்நேச்சாருடைய குமாரனாகிய [1] பெல்ஷாத்சார் காலத்தில் இவருடைய சரித்திரத்தில் ஒரு விசேஷித்த மாறுதல் நடந்ததாகக் காண்கிறோம். அதென்னவெனில், முந்தின அரசன் ஒருநாள் தன் பிரபுக்களில் ஆயிரம்பேரை வரவழைத்து ஒரு பெரிய விருந்துசெய்து அவர்கள் முன்பாக வெறிக்கக் குடித்தான். இது தேவனுக்குப் பிரியமான செய்கையாயிருக்கவில்லை. இம்மட்டோடு அவன் கேடு முடியவில்லை. அவன் தன் பிரபுக்களோடும் தன் மனைவிகளோடும் தன் வைப்பாட்டிகளோடும் விருந்துண்டான்

[1] இவ்விடத்தில் குமாரன் என்பது பேரன் என்பதற்குப் பதிலாக வழங்கப்பட்டிருக்கிறது.

என்று பார்க்கிறோம். இதினாலே முன்னே இவன் தகப்பன் பெருமையைத் தன் நெஞ்சிலே வளர்த்தவன் என்றும், இவன் குடியையும் விபசாரத்தையும் வளர்த்தவன் என்றும் தோன்றுகிறது. அரசன் தன் கேட்டோடு கேடாய் தேவனுடைய ஆலயத்திலிருந்து கொள்ளையாய்க் கொண்டு போகப் பட்டு, ராஜ பொக்கிஷசாலையில் வைக்கப்பட்டிருந்த பொன் வெள்ளிப் பாத்திரங்களை வரவழைத்து, அவைகளில் அவனும் அவன் பிரபுக்களும் மனைவிகளும் வைப்பாட்டிகளும் குடித்ததுமன்றி மெய்த்தேவனை தூஷித்து, பொன்னும் வெள்ளியும் வெண்கலமும் இரும்பும் மரமுமான விக்கிரக தேவர்களைப் புகழ்ந்தார்கள். ஐயோ! தேவ பயம் பாபிலோனில் எவ்வளவு சீக்கிரத்துக்குள் மாறிவிட்டது. அஞ்ஞான பிரபுக்களும், அநேக மனைவிகளும், அநேக தாசிகளுமுள்ள சங்கத்தின் மத்தியிலிருக்கிற பெல்ஷாத்சாருக்கு தேவ பயம் அற்றுப்போனது அதிசயமல்ல. குடியும் விபசாரமும் நுழையும் குடிசைக்குள் தேவ பயம் தங்கவே தங்காது. இந்த விருந்திலே நடக்கிற நடபடிக்கைகளைப் பார்த்தால் பெல்ஷாத்சார் கடவுளைத் தனக்குமுன் நிறுத்தி, அவரை அவர்கள் நடுவில் வேணுமென்று பழித்து கனவீனப் படுத்துகிறது போலிருக்கிறது.

தேவன் இச்சமயத்தில் சும்மாயிருந்தாரோ? இல்லை. பெல்ஷாத்சாரை வெல்ல அவருக்கு வெகு நேரம் செல்லுமா? ஏழு வருஷம் அவன் தகப்பனை மிருகமாக்கினவர் இவனை என்றென்றைக்கும் மிருகமாக்கக்கூடாதோ? அவர் மிருகத்தை மனுஷனாக்கவுங்கூடும், மனுஷனை மிருகமாக்கவுங் கூடுமல்லவா? அவர் தமது ஆக்கினையுள்ள சித்தத்தை அரசனுக்கு உணர்த்தும்படி ஒரு துண்டுக்கையை அனுப்பினார். எப்படியெனில், அரசன் மது உண்டு, மன்மத பிரமனாயிருந்த சமயத்தில் அரசனுக்கு எதிரான சுவரில் ஒரு விரல் வந்து சில எழுத்துக்களை எழுதினது; அந்தக் கையுறுப்பை ராஜா கண்டான். உடனே அவன் முகம் வேறுபட்டது, அவன் நினைவு கலங்கதது; அவன் பயந்து நடுக்குவாதம் பிடித்தவனைப்போல் ஆடினான். அதின் கருத்தை அறிய தன் ஞானிகளைக் கேட்டும் அவர்களால் கூடாமற்போயிற்று. கடைசியாக அவன் மனைவியின்

ஆலோசனையினால் தானியேலைப் பிடித்தான். அவர் வந்து சுவர் எழுத்து வாசகத்தை வாசிக்குமுன் இவன் தகப்பனுடைய முன்பின் நடபடிக்கைகளையெல்லாம் சொல்லி, இவனுடைய அக்கிரமங்களைக் கண்டித்து, இவன் செய்த தேவ தூஷண செய்கைகளை உணர்த்தி, கடைசியாக இவையெல்லாவற்றுக்கும் தண்டனையாக தேவன் இந்த எழுத்தை எழுதினார்; இதின் அருத்தம்:—

'தேவன் உன் ராஜ்யத்தை மட்டிட்டார்,
அதற்கு முடிவுண்டாக்கினார்,
நீ தராசிலே நிறுக்கப்பட்டு, குறையக் காணப்பட்டாய்,
உன் ராஜ்யம் பங்கு போடப்படும்'

என்றும் சொன்னார். இதிலும் தானியேலின் தைரியத்தையும் உண்மையையும் பார்க்கிறோம். தேவ ஊழியக்காரன் உண்மையாய்ச் சத்தியத்தைக் கூறவேண்டியவனாயிருக்கிறான். தானியேல் இது முதல் அதிகமாய் உயர்த்தப்பட்டார். ராஜா அவருக்கு இரத்தாம்பர உடை கொடுத்து, கழுத்தில் பொற்சரப்பளியிட்டு, அவரைத் தேசத்திற்கு மூன்றாம் அதிபதியாக்கி, நாடெங்கும் அவருடைய கீர்த்தியைக்குறித்து கட்டியங்கூறும்படி கட்டளையிட்டான். அன்று இராத்திரியிலே மேதியா தேசத்து அரசன் வந்து ராஜ்யத்தைப் பிடித்துக்கொண்டு அரசனைக் கொன்றுபோட்டான். அதுமுதல் ராஜ்ய சம்பந்தமாய்ப் பல மாறுதல் உண்டாயின. அவைகளொன்றைக் குறித்தும் நாம் கவலைப்படாமல் இவருடைய வரலாறுகளை மாத்திரம் கவனித்துக் கொண்டு போவோமாக.

புதிய சக்கரவர்த்தியாகிய தரியு என்பவன் மேதிய, பார்சிய தேசங்களின் ஏக சக்கரவர்த்தியானவுடனே தன் ஆக்கினை சக்கரத்துக்குட்பட்ட நாடுகளையெல்லாம் நூற்றிருபது பங்காகப் பிரித்து, நூற்றிருபது கவர்னர்களை அங்கங்கிருந்து ஆளுகை நடத்திவரத் திட்டம் பண்ணினதோடு அந்த அதிகாரிகளுக்கு மேலாக மூன்று தலைவரையும் நியமித்தான். அந்த மூன்று தலைவரும் ராஜ பிரதிநிதி என்று அழைக்கப்படுகிற கவர்னர் ஜெனரல்கள்போல அரசுபுரிந்து வந்தார்கள் என்று சொல்லவேண்டியது. அம்மூவரில்

தானியேல் ஒருவராயிருந்தார். இதினாலே இவருடைய பேர் பிரஸ்தாபமும், அரசாட்சித் திறமையும், தேவதா பக்தி நிலையும், அயல் தேசங்களில் எவ்வளவு பிரஸ்தாபமாய் விளங்கியிருக்கிறதென்பது தெளிவாகிறது. தானியேல் எவ்வளவு வாழ்வடைந்தபோதிலும், அவர் உலக அந்தஸ்தில் எவ்வளவு உயர்ந்தபோதிலும் தன் தேவனை மறக்கவுமில்லை, தன்னை அவருக்கு மேலாக உயர்த்தவுமில்லை. இப்படிப் பட்ட ஆழ்ந்த பக்தி அநேகருக்கு இருக்கிறதில்லை. இந்த மேலான கனமான ஊழியத்திலும் அவர் மாசிறந்தவர் என்று பேரெடுத்தார். அவர் அதிகாரஞ் செலுத்தி வந்த நாடுகளில் கல்வியும் நாகரீகமும், சன்மார்க்கமும் ராஜாபிமானமும் வளர்ந்தேறி வந்ததென்று சொல்லவேண்டியது. அவரின் அரசாட்சித் திறமையையும் அவருடைய நாட்டு வாழ்வையும் அரசன் கவனித்து, பிரதான மூன்று அதிகாரிகளுக்குள் இவரைத் தலைவராக்கினான். பின்பு சில காலத்துக்குள்ளாக அவருடைய வரலாறுகளனைத்தையும் ஆதியோடந்தமாய் விசாரித்தறிந்து அவருக்குள் தேவ அருளின் விசேஷித்த ஆவி இருந்தமையால் அவருக்கு விசேஷ பட்டஞ் சூட்டி ராஜ்ய முழுமைக்கும் அதிகாரியாக ஏற்படுத்த ராஜா நினைத்தான்.

சிங்கக்கெபி பருவம்

தானியேலின் பூலோக பாக்கியம் பந்தடித்து உயர்ந்தாப் போல் எழும்புகிறதை மற்றப் பிரதானிகள் கண்ணுற்று வன்கண்பட்டு, எப்படியாவது அவரைக் குற்றப்படுத்தி விடும்படி முயன்றார்கள். இந்தத் தந்திரத்தை அவர் அறியாதிருந்தும் வழக்கம்போல் உண்மையோடும், விடாத ஜாக்கிரதையோடும், தேவதா பக்தியோடும் தம்முடைய தினகால கர்மங்களை நடத்தி வந்தார். ‘நெருப்பிலே புழுப் பற்றாது’ என்ற சுலோகத்துக்கு இணையாய் இவருடைய தொழில் முயற்சிகளில் சத்துருக்கள் கண்டுபிடிக்கத்தக்க ஒரு குற்றமும் இருந்ததில்லை. அப்பால் பகைவர் அந்தரங்கத்தில் கூட்டங்கூடி, நாம் இந்த தானியேலை அவனுடைய தேவனைப் பற்றிய வேத விஷயத்திலே குற்றப்படுத்தினால் கூடுமேயன்றி வேறொன்றிலும் குற்றம் பிடிப்பது கூடாதென்று

தீர்மானம் பண்ணி, எப்படியும் இவன் தலையை வாங்கிப் போடுவதே சரி என்று தங்களுக்குள் கட்டுப்பாடு பண்ணிக் கொண்டார்கள்.

இதற்கென்று அவர்கள் எடுத்த பிரயத்தனம் எவ்வளவு உபாயமும் தந்திரமுமானது என்பது பின்வருவதால் விளங்கும். எப்படியெனில் அந்நாட்டுப் பிரதானிகளும், தேசாதிபதிகளும், மாகாணத் தலைவரும், மற்றும் பெரியோரும் ஒரு மகாநாடு கூடி தங்களுக்குள் சில ஒழுங்குகளைச் செய்துகொண்டு ராஜதரிசனை பெறும்படி போனார்கள். தானியேலை இந்தக் கூட்டத்தில் சேர்க்கவில்லை. தங்களுடைய மார்க்கப் பிரபல்லியத்துக்கேற்ற பொதுக்கூட்டம் கூடுகிறதுபோல அவர்கள் வெளிக்குப் பேச்சையுண்டாக்கி, அந்தரங்கத்தில் தானியேலுக்கு கண்ணிகளை உண்டுபண்ணினார்களாக்கும். அவர்களனைவரும் ராஜ சபையேறி கொலு மண்டபத்தில் வீற்றிருந்த சக்கரவர்த்தியை நமஸ்காரஞ் செய்து, கேட்பீர் மகா இராஜாவே! நீரும் உமது அரசாட்சியும் என்றென்றும் வாழ்வதாக!! அடியாரைப்போல் அரசபிமானமுள்ளவர்கள் எவருமில்லையாக்கும்; உம்மையும் உமது கனத்தையும் பிரஸ்தாபிப்பதுதான் எங்கள் வேலை. இப்பொழுதும் மகா மன்னரே! நூற்றிருபது தேசத்தையும் ஒரு குடைக்குள் ஆண்டுவரும் இராஜ சிங்கமே! அடியாருடைய மன்றாட்டு அரசன் காதுக்கு இசைந்ததாயிருப்பதாக. இப்பொழுதும் தரியுமா மன்னரே! உம்முடைய நூற்றிருபது தேசங்களிலுமுள்ள எளியவனானாலும் வலியவனானாலும், பாலியனானாலும் புருஷனானாலும், ஆணானாலும் பெண்ணானாலும், கற்றவனானாலும் கல்லாதவனானாலும், உழவினனானாலும் உத்தியோகஸ்தனானாலும், ஞானியானாலும் பேதையானாலும் மொத்தத்தில் 'எவனாகிலும்' முப்பது நாள் வரையில் ராஜாவாகிய உம்மையே தவிர எந்த தேவனையானாலும், மனுஷனையானாலும் நோக்கி யாதொரு காரியத்தையுங்குறித்து விண்ணப்பம் பண்ணக்கூடாதென்றும், அப்படி விண்ணப்பம் பண்ணினால் அவன் சிங்கங்களின் கெபியிலே போடப்பட இராஜா கட்டளை பிறப்பித்து உறுதியான தாக்கீது செய்யவேண்டுமென்றும் ராஜ்யத்திலுள்ள பிரதானிகள், பிரபுக்கள், மந்திரிகள், தலைவர் எல்லாருக்கும்

அபிப்பிராயமாயிருக்கிறது. ஆதலால் மகா இராஜாவே! நீர் அப்படிப்பட்ட சட்டமொன்றை ஏற்படுத்தி அதற்குக் கையெழுத்து வைக்கவேண்டும் என்று கெஞ்சி, தாங்கள் எழுதி வைத்துக்கொண்டிருந்த இரத்தஞ்சிந்தும் சட்டத்தின் நகலையும் நீட்டினார்கள். அரசனோ இந்த சதியோசனையின் ஆழத்தை எவ்வளவேனும் சிந்திக்கவில்லை; இது தானியேலுக்கு வைக்கும் கண்ணியென்று அவன் புத்தியில் படவுமில்லை. 'உம்மையே தவிர' என்ற ஒரு வாசகந்தான் அவன் புத்தியைக் கெடுத்துவிடும் நஞ்சாக இருந்ததென்று சொல்லலாம். பொதுவான ஜனங்களுக்கும், அரசனுக்கும் பிரபுக்கள் தந்திரமாய்க் கேட்ட இந்த விண்ணப்பமானது தேச நன்மைக்கு அநுகூலம்போல தோன்றிற்று. ஜனங்கள் பற்பல பிரிவான கச்சேரிகளில் அலைந்து திரிந்து பணங்களை இறைத்து வழக்காடி சோர்ந்து போகாமலும், கடவுள் கடவுள் என்று பயப்பட்டுக்கொண்டிருந்து பூசாசாரிகளின் சாபத்துக்கு விலகியிருக்கவும், தேச மனைத்துக்கும் ஒரு மாதத்து மனச்சுயாதீனம் கொடுக்கிறதுபோல இது வெளிக்குக் காணப்பட்டது. ஆனால் இதின் ஆவிக்குரிய தன்மையைக் கிரகித்தால் இக்கட்டளையால் இராச்சியமனைத்தும் நாசமாய்ப் போகுமல்லவா? முப்பதுநாளுக்குள் திருடரையாவது கொலைக்காரரையாவது பிடிக்கக்கூடாது, பிரியாது செய்யக்கூடாது; என்ன செய்தாலும் கேள்வியில்லையானால், அந்தத் தேசத்துக்கு என்ன கெதி நேரிடும் என்பதை அவரவரே உணர்ந்து கொள்ளவேண்டியது. என்னை அடித்தான், கொள்ளையிட்டான், கொலை செய்தான் என்று ஒருவன் அபயமிடவுங்கூடாது; எனக்கு அன்னமிடு, என்னை ஆதரி என்று ஒருவன் மற்றொருவனைக் கேட்கவுங்கூடாது; தன் மனநோயைக் கடவுளிடம் சொல்லவுங்கூடாது; காணிக்கை செலுத்தவுங் கூடாதல்லவா? ஐயோ! இராச்சியத்தைக் கெடுக்கிற சட்டம் என்று அரசன் அறியாமலும் தான் உயர்த்தும்படி தீர்மானித்திருக்கிற தானியேலுடைய ஜீவனை சுருக்குகிற கண்ணியாக இருக்கிறதென்று தெரியாமலும் அக்கட்டளைப் பத்திரத்திற்குக் கையெழுத்து வைத்தான்.

உடனே இந்தப் புதுகட்டளை நாடெங்கும் கைக்கொள்ளப் படும்படி செய்யவேண்டிய பிரயத்தனமெல்லாம் செய்யப் பட்டன. தானியேலோவென்றால், அந்தப் பத்திரத்துக்கு கையெழுத்து வைக்கப்பட்டதென்று அறிந்திருந்தபோதி லும், தன் வீட்டுக்குள்ளே போய், தன் மேல் அறையிலே தான் தினம் செய்து வந்த வழக்கத்தின்படியே மூன்றுதரம் தன் தேவனுக்குமுன் முழங்கால்படியிட்டு ஜெபம் பண்ணி ஸ்தோத்திரஞ்செய்து வந்தார். அவர் மெல்லிய குரலோடு ஜெபம் பண்ணினாலும் வலியகுரலோடு ஸ்தோத்திரப்பாட்டு களைப் பாடினார் போலிருக்கிறது. அவருடைய சத்தத்தின் ஜாடையையும் வார்த்தைகளையும் சத்துருக்கள் ஒளித்திருந்து கவனித்து அந்நிமிஷமே அரசனிடம் போய், ஆளைப் பேர் சொல்லாமல் காரியத்தை மாத்திரம் சொல்லி, உம்முடைய கட்டளையின்படி நிறைவேற்றவேண்டுமென்று பிரியாது செய் தார்கள். அரசனும் மதிமயங்கி, ஆம், ஆம், அவனைத் தண்டிக்கவேண்டுமென்று சொல்லி அவன் யார், அவனுடைய வரலாறென்னவென்று வினவவே, அவர்களனைவரும் இனி நமக்கு பயமில்லை; அரசனை அவர் வார்த்தையைக்கொண்டே வென்று, நாம் நினைத்தபடி முடித்துவிடலாமென்று சந் தோஷப்பட்டு அரசனை நோக்கி, கேட்பீர் மகா மன்னரே, ‘சிறைபிடிக்கப்பட்ட யூதேயா தேசத்தின் புத்திரரில் தானியேல் என்பவன் உம்மையும் நீர் கையெழுத்து வைத் துக்கொடுத்த கட்டளையையும் மதியாமல் தினம் மூன்று வேளையும் தான் பண்ணும் விண்ணப்பத்தைப் பண்ணு கிறான்’ என்றார்கள்.

இந்தப் பிரியாதை எவ்வளவு தந்திரமாய் நடத்துகிறார் கள் பாருங்கள்! அவர்கள் பேசின ஜாடையினால் ராஜ சட்டத்தை மீறினவன் மேதியனாய் அல்லது பார்சியனா யிராமல் யூதனென்றும், அவன் சிறைபட்ட ஒரு கைதியே யன்றி அதிக கனம் அவனுக்கு இல்லையென்றும், அவர் பேரைக் காட்டி நீர் மட்டுமிஞ்சி ராஜாபிமானிபோல் உயர்த்து கிறீரே அவன்தான் உம்மை இகழந்தான் என்றும் ருசுப் படுத்தும்படி பிரயாசப்பட்டார்கள். பேயின் மக்கள் தேவ னுடைய பிள்ளைகளைக் கவிழ்க்கும்பொழுது நரகத்து ஞான மெல்லாம் உபயோகிக்கப்படுவது வழக்கந்தான். இராஜா

இந்த வார்த்தைகளைக் கேட்டவுடனே சஞ்சலப்பட்டு தானியேலை இந்த அபாயத்திலிருந்து இரட்சிக்கப் பொழுது போகுமட்டும் தன் ராஜ்யசமர்த்துகளை யெல்லாங்கொண்டு பிரயாசப்பட்டான். நரகத்தின் மக்களிடத்தில் நீதியும் இரக்கமும் தயாளமும் செல்லுமா? தன் பிரயத்தனங்கள் ஒன்றும் வாய்க்கவில்லையென்று அரசன் கண்டு, கட்டளை யின்படி தானியேலைச் சிங்கக்கெபியில் போடும்படி சம்மதித்து அந்தத் துயரக் காட்சியை தானும் பார்த்து, தன் நல்ல மந்திரியின்மேல் தானும் ஒரு சொட்டுக் கண்ணீர் சிந்தலாமென்று போனான். அரசனும் அவன் ஆட்களும் சிங்கக்கெபிக்குப் போகும்போது கடவுள் அவரை இரட்சித் தாலும் இரட்சிக்கலாம் என்ற ஒரு எண்ணம் அரசன் மனதில் பாய்ந்ததுபோலிருக்கிறது. ஒருவேளை சாத்ராக், மேஷாக் முதலியவர்கள் அக்கினிக் குழியிலிருந்து அதிசய மாய் வெளியேறிவந்ததை அவன் கேள்விப்பட்டிருக்கலாம். கடைசியாக அரசன் அலறுதலோடும், புலம்பலோடும் தன் உத்தம சினேகிதனுக்கு இப்படி நேரிட்டதே என்று அவரைப் பார்த்துக் கொண்டிருக்கும்போதே தன் விரோதி களால் அவர் சிங்கக் குகையில் இறக்கிவிடப்பட்ட துயரக் காட்சியை கண்ணுற்று மார்பிலடித்துக்கொண்டு பரவச சிந்தையால் மீண்டு, தேவ அருள் பெற்று, 'தானியேலே! நீ இடைவிடாமல் ஆராதனை செய்கிற தேவன் உன்னைத் தப்புவிப்பார்' என்றான். இந்த வாசகம் நேசாபிமானத்தா லுண்டான நல்வாக்காயிராமல் தேவாவியால் ஏவப்பட்டு சொன்ன தீர்க்கதரிசனமா யிருந்ததென்று பின்வரும் வரலாறுகளால் தெரியவரும்.

தானியேலைக் கெபிக்குள் இறக்கின பின்பு ஒரு கல் கெபியின் வாசலில் வைக்கப்பட்டது. இனி அவர் தப்பு வாரோ? கீழே சிங்கங்களும், பக்கத்தில் பர்வதசார்புகளும், மேலே பெரிய கல்லுமாயிருக்கிற இந்த அபாய அகழிக் குள்ளிருந்து அவர் மீண்டுவருவாரா? இப்படியே இவருடைய வரலாறுகளை முடித்துவிடுவது தருமமல்லவா?—இல்லை. இந்த பக்தனை இப்படித் திடீரென்று மறந்துவிடவேண்டாம்; இன்னும் கடைசிமட்டும் அவருடைய தோலையும் சதையை யும் எலும்புகளையும்பற்றி சில காரியங்களை நாம் அறிந்து

சொண்டாலும் அது நல்லதுதானே. அப்படியானால் அவர் இறங்கின கெபியண்டை இன்னும் சிலநேரம் உட்கார்ந்து கொண்டு நடந்த விபரங்களைக் கண்ணோக்குவோமாக.

அரசன் தானியேல்மேல் கொண்டிருந்த நேசாபிமானத்தைப் பூரணமாய்க் கண்ட பிரதானிகள் தங்களுக்குள் வைராக்கிய மூண்டு, அவருடைய எலும்புகளில் ஒன்றும் கெபியைவிட்டு வெளியேறக் கூடாதென்றும், மரியாதையோடு நகரத்துக்குள் சுமந்துவரப்பட்டு இராஜ கல்லறைகளில் அடக்கம் பண்ணப்படக்கூடாதென்றும், சிங்கத்தின் வயிறே தானியேலின் பிரேதக்குழியாகி அதற்குள்ளே ஜீரணித்துப் போகவேண்டுமென்றும் கருதி, இராஜ மோதிரத்தாலும் பிரபுக்களின் மோதிரத்தாலும் கெபியை மூடின கல்லை முத்திரையிட்டார்கள். அரசன் தங்களுடைய உத்தரவின்றி அவருடைய எலும்புக்கு ஒன்றும் செய்யக் கூடாதென்று தடுக்கும்படி இப்படித் தங்கள் முத்திரையையும் போட்டார்களாக்கும். இவ்வண்ணம் செய்யவேண்டிய பந்தோபஸ்தெல்லாம் செய்தானபின் பாபிலோன் பிரபுக்கள் அனைவரும் அகங்களித்து முகமலர்ந்து அவரவர் வீட்டுக்கு ஏகினார்கள். அரசனோ அழுதுகொண்டு அங்கலாய்த்து அலறி, ஐயோ! ஐயோ!! என்று அநுதாபப்பட்டு அரமனை சேர்ந்தான். அன்றிரவு அரசன் போசனம் பண்ணவுமில்லை; கீதவாத்திய தொனிகளைக் கேட்க விரும்பவுமில்லை; அவன் கண் அயரவுமில்லை; அரமனை சாவு வீடுபோல துக்கங்கொண்டாடின. அரசன் அன்று இராமுழுதும் தூங்காமல் என்னென்ன யோசனைகளெல்லாம் செய்தானோ தெரியவில்லை.

மறுநாள் அதிகாலையில் கிழக்கு வெளுக்கும்போது ராஜா எழுந்திருந்து சிங்கக்கெபிக்கு நேரே பித்தங்கொண்ட மனுஷனைப்போல் தீவிரமாய்ப் போனான். இராஜா கெபியின் கிட்ட வந்தபோது துயரக்குரலோடு மந்திரியைக் கூப்பிட்டு, 'தானியேலே! ஜீவனுள்ள தேவனுடைய தாசனே! நீ இடைவிடாமல் ஆராதனை செய்கிற உன் தேவன் உன்னை சிங்கங்களுக்குத் தப்புவிக்க வல்லவராயிருந்தாரா?' என்று கேட்டான். தானியேலை கெபிக்குள் போட்ட இரவில் அரசன்

அவர் சுகமாய் இருப்பதைக் காட்டும் தரிசனையாவது சொப்பனமாவது கண்டாரோ, என்னவோ தெரியவில்லை. எப்படியும் சாத்ராக், மேஷாக், ஆபெத்நேகோ என்னும் மூன்று வாலிபர் சில வருஷங்களுக்குமுன் அக்கினிச் சூளையில் போடப்பட்டதும், அற்புதமாய் மீண்டு வந்ததும் அரசன் காதுக்குள் எட்டியிருக்கலாம். அதின் மூலமாய் இந்த பக்தனுக்கும் ஒரு அதிசயமான விடுதலையை தேவன் கட்டளையிடலாமென்று அவன் உத்தேசித்திருக்க லாம். மற்றபடி இவ்வண்ணம் பேச ஏதுவிருக்கமாட்டாது.

அரசன் கெபியை மூடின கல்லின்மேல் படுத்துக்கொண்டு தன் சத்தம் கெபிக்குள் செல்லும்படியான இடையின் வழியாய் தானியேலின் பேரைச் சொல்லி கேட்கவே, அவர் மறுமொழி கொடுக்க ஆரம்பித்தார்:—அவர் இன்னும் உயிரோடிருக்கிறாரா?—ஆம் உயிரோடிருக்கிறார். அல்லே லூயா! அநாதி தேவனே உமக்கு ஸ்தோத்திரம், உம் முடைய நித்திய புயங்களுக்கு நீடூழிகாலமும் துதியுண்டாவ தாக. சிங்கங்களின் அரசரே! சிரஞ்சீவியே, ஜீவனைக் கொடுக்கவும் எடுக்கவும் செங்கோல் செலுத்தும் ஜெயாதி பதியே உமக்கே மகிமையுண்டாவதாக. பாபிலோன் முழுவதுங்கூடி உமது பக்தன் ஒருவனை பங்கப்படுத்தும்படி முயன்றும் நீர் அவர் பக்கமாய் நின்று பாபிலோனைப் பங்கப் படுத்திவிட்டீர். அல்லேலூயா!—அரசன் கூப்பிட்டவுடனே அவர் மறுமொழியாக 'இராஜாவே, நீர் என்றும் வாழ்க! சிங்கங்கள் என்னைச் சேதப்படுத்தாதபடிக்கு தேவன் தம்முடைய தூதனை அனுப்பி அவைகளின் வாயைக் கட்டிப் போட்டார். அதேனென்றால் அவருக்கு முன்பாக நான் குற்றமற்றவனாய்க் காணப்பட்டேன்; இராஜாவாகிய உமக்கு முன்பாகவும் நான் நீதிக்கேடு செய்ததில்லை' என்றார். அச்சமயத்தில் மன்னர் மனதில் உண்டான மகிழ்ச்சியின் அளவை மனுமக்களில் எவனும் அளந்து காட்டக் கூடியவ னல்ல. அவரைக் கெபியிலிருந்து எடுத்துவிடும்படி அரசன் ஆக்யாபித்தான். அந்நிமிஷமே அவர் யாதொரு சேதமு மின்றி கரையேறி பாபிலோன் தேசத்தின்மேல் பிரகாசித்த பகலோனையும், பாபிலோனின் கட்டட அழகையும், கனி மரங்களையும், சிகர சிங்காரங்களையும் கண்ணுற்றார். ஆனால்

அவருடைய உள்ளமோ விக்கிரகாராதனைக்காரரின் வீராப்புகளைத் தியானித்துக் கொண்டிருந்ததென்று சொல்ல வேண்டியது.

தானியேலைப்பற்றிய இந்த வரலாறுகளானது மெய்ப் பக்தர் தங்கள் பக்திவிநயத்தை எவ்வளவு உறுதியாய்ப் பிடித்திருக்கிறார்களென்றும், அவர்களுக்குள்ளிருக்கும் தேவ பக்தியானது தைரியத்தையும் நிலையான பற்றுதலையும் உண்டுபண்ணுகிறதென்றும் தெரிவிக்கிறது. நமக்குள்ளிருக்கும் பக்தியானது காலத்துக்குக்காலம் மாறுகிறதாயும், வெவ்வேறு ஜாடையைக் காட்டுகிறதாயு மிருக்கலாகாது. மெய்தேவ பக்திக்கு சமயத்துக்கேற்ற வேஷம் போடத் தெரியாது, அப்படி வேஷம்போடவுமாட்டாது. ஒருவன் தேவபக்தியில் எவ்வளவுக்கு நிலைத்திருந்து பலப்படுகிறானோ அவனுக்கு உலகத்தில் அதிக துன்பமும், அநேக சத்துருக்களும் எழும்புகிறதுண்டு. விசுவாசிகள் அவைகளினால் விழுந்துபோகாமல் ‘எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினால் எங்களுக்கு ஜெயங்கொடுத்திருக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரமுண்டாவதாக’ என்று வெற்றிப் பாட்டுப் பாடி ஜெயகிரிமேல் ஜெயமாய் ஏறுவார்கள்.

சிங்கக்கெபியிலிருந்துதூக்கிவிடப்பட்ட தானியேலுடைய மேனியில் ஒரு சேதமும் காணப்படவில்லை. ஏனெனில் அவர் தேவன்பேரில் விசுவாசமாயிருந்தார். முன்னே அக்கினிச்சூளையில் போடப்பட்ட மூன்று வாலிப பக்தாட்களுடைய விசுவாசத்தால் சுவாலையின் அனல் தணிக்கப்பட்டதுபோல இச்சமயத்தில் சிங்கங்களின் வாய் இவருடைய விசுவாசத்தால் அடைக்கப்பட்டது. பக்தரைப் பட்சிக்கும் அக்கினியும் அவர்களைத் தின்னும் சிங்கமும் இப்பூலோகத்தில் இல்லையென்று சொல்லவேண்டியது. அப்பால் அரசன் அவருக்குப் பதிலாக வாதியாகி அவர் மேல் குற்றஞ்சாற்றின மனுஷரையும், அவர்கள் மனைவி மக்களையும் சிங்கக்கெபியிலே போட்டான். அவர்கள் கெபியின் அடியில் சேருமுன்னே சிங்கங்கள் அவர்கள்மேல் பாய்ந்து அவர்கள் எலும்புகளையெல்லாம் நொறுக்கிப் போட்டது. கர்த்தாவே! உம்மை நேசிக்கும் பக்தரின்

பகைஞரை நீர் தண்டியாமல் விடீர் என்று இதிஞலே அறிகிறோம். அப்பால் அரசன் தானியேல் தொழுதுவந்த யேகோவாவைப் புகழ்ந்துபோற்றி, 'என் ராஜ்யத்தின் ஆளுகைக்குள் எங்குமுள்ளவர்கள் யாவரும் தானியேலின் தேவனுக்கு முன்பாக நடுங்கி பயப்படவேண்டுமென்று என்னலே தீர்மானிக்கப்படுகிறது' என்று பிரஸ்தாபித்தான். இந்த அஞ்ஞான அரசன் செய்த பிரயத்தனத்தில் பாதியளவாவது சில கிறிஸ்தவ அரசர் செய்யாமலிருக்கிறது துக்கந்தான். ஆதலால் ஒவ்வொரு கிறிஸ்தவனும் தேவனை நோக்கி 'பரமபிதாவே, கிறிஸ்தவர்களான இராஜாக்கள், பிரபுக்கள், அதிகாரிகள், ஆலோசனைக்காரர் அனைவரும் பட்சபாதமில்லாமல் உண்மையாய் நீதியைச் செலுத்தி, துன்மார்க்கத்தை தண்டனையினாலே அடக்கி, உமது சத்தியவேதத்தையும் சன்மார்க்கத்தையும் நிலைப்படுத்தி வரும்படி அவர்களுக்குக் கிருபைசெய்தருளும்' என்று அடிக்கடி மன்றாடவேண்டியது.

தானியேல் கெபியிலிருந்து கரையேறின பின்பு முன்னிலும் அதிக ஊக்கத்தோடு தேவதாபக்திக்குரிய முயற்சிகளை நடத்திவந்தார். அவருடைய ஜெபங்களும், தியானங்களும், உபவாசங்களும், பொது நன்மையை விரும்பும் குணமும் அதிகரித்துவந்தது. அப்பால் அவர் தடுப்பாரின்றி தன் அனுதின ஜெபத்தியானங்களைச் செய்துவந்தார். அக்காலத்தில் ராஜ்யபாரத்தில் ஒரு மாறுதலுண்டாயிற்று. தரியு அரசன் சமாதி கண்டு கோரேஸ் அரசன் அக்கிராசனதிபதியானன்.

கோரேசுடைய ராஜ்யபாரகாலத்தில் இவர் காரியம் ஜெயமாய்த்தான் இருந்தது. அவருடைய இருதயம் தியான ஏணியில் உச்சமாய் ஏறினதால் சம்மனசுக்களோடு சம்பாஷிக்கவும், அவர்கள் மூலமாய் சாட்சாத் கடவுளின் செயல்களை அறிந்துசொல்லவும் கிருபைபெற்றார். இது மாத்திரமோ? பூலோகத்தில் அவதாரமெடுக்க இருந்த மனுஷகுமாரனையும், தரிசனையில் கண்டு களிகூர்ந்தார். இக்காலங்களிலெல்லாம் அவர் தமது சுய ஜனங்களாகிய யூதருக்கு பல சலாக்கியங்கள் அருளப்படவும், அவர்கள்

மறுபடியும் சுகமாய் கானானில் போய்க் குடியேறவும் பல பிரயத்தனங்கள் செய்தார். அப்பிரயத்தனங்கள் பிரயோசன மற்றதா யிருக்கவில்லை. கோரேஸ் அரசனுக்கும் இவருக்கும் நெருங்கிய பாசமிருந்தது; அவர் நினைத்த காரியத்தையும், எடுத்த முயற்சியையும் அரசன் அநுகூலப்படுத்திவந்தான். [1]பூலோகத்தின் கடைசிக் காலத்தில் சம்பவிக்கும் பல விஷயங்கள் அவருக்கு வெளிப்படுத்தப்பட்டன. அவை புத்திக்கெட்டாத பரம இரகசியங்களா யிருக்கின்றன. உலக இரட்சகராகிய மேசியாவின் தன்மை, ஊழியம் இன்னதென்றும், அவரால் உலகத்துக்குண்டாகும் பாக்கிய சலாக்கியங்கள் இன்னவையென்றும் அவர் தேவாவியால் அறிவித்ததுமன்றி, அவர் அவதாரமெடுத்து தம்மைப் பிராணத்தியாகஞ் செய்யும்படி இன்னும் சுமார் 500 வருஷங்கள் இருக்கிறதென்றும் கூறினார். யூதர் பாபிலோனிலிருந்து விடுதலையாவதற்கு இவரே விசேஷித்த ஏவுதலாய் இருந்தாரென்று நினைக்கவேண்டியதா யிருக்கிறது. லோக இரட்சகரைக் குறித்து தானியேல், குறித்த காலத்திலே அவர் அவதாரமெடுத்து ஞானபோதனைகளைப் போதித்து, சிலுவையில் தமது உடலைப் பிராணத்தியாகமாக்கி பரலோகம் எழுந்தருளினார்; அவரை விசுவாசிக்கிறவர்களுக்கு நித்திய ஜீவனுண்டு.

தானியேலின் அந்தியகால அரசாட்சி விபரங்களைப் பற்றி நமக்கொன்றுந் தெரியாது. ஆனால் அவர் தினந்தோறும் தேவதரிசனங்கள் அடைந்து, கடவுளோடு உறவாடி, பரம காட்சிகளைக் கண்டு காலங்கழித்தார். அவர் கண்ட காட்சிகளையெல்லாம் பொருளோடு அறிந்துகொள்ளும்படி ஆசைப்பட்டு தமக்கு அக்காட்சிகளை அளித்த கடவுளை நோக்கி, ஆண்டவரே! பூலோக முடிவின் வரலாறுகளையும் மற்றும் விஷயங்களையுங் குறித்து எனக்கொன்றும் விளங்கு

---

[1] தானியேல் சரித்திரத்தையொட்டி இந்தக்காலத்தில் நடந்ததாகச் சொல்லப்பட்டிருக்கிற ஒரு சரித்திரமுண்டு. அதாவது:—அவர் கோரேஸ் அரசனோடிருந்து அவருக்குப் பிராணநேசனாயிருந்த காலத்தில் ஒருநாள் அரசன் தானியேலை நோக்கி, நீ ஏன் என் தேவனாகிய பெல்லை வணங்குகிறதில்லையென்று கேட்டான்

அதற்கு அவர், நான் வானத்தையும் பூமியையும் படைத்த ஜீவனுள்ள தேவனைக் கும்பிடுவேனேயன்றி, கைவேலையான விக்கிரகத்தை சேவிக்கிறதில்லையென்று சொன்னார். அப்போது அரசன், பெல்லுக்கு ஜீவனில்லையென்று நினைக்கிறாய், நாளொன்றுக்கு எவ்வளவு தின்கிறான், குடிக்கிறான் என்று உனக்குத் தெரியாதா என்றான். (அந்த பெல்லுக்குத் தினந்தோறும் 12 படி மெல்லியமாவும், 40 ஆடுகளும், 6 குடம் திராட்சரசமும் செலவழிக்கப்பட்டது.) தானியேல் இதைக் கேட்டு சிரித்துக்கொண்டு, இராஜாவே, ஏமாந்து போகாதேயும், பெல்லுக்கு உள்ளே களிமண், மேலே பித்தளை, அது தின்றது மில்லை, குடித்ததுமில்லை என்பதை நீர் அறிந்துகொள்ளும் என்று சொன்னார். உடனே அரசன் கோபமூண்டு பூசாசாரிகளை அழைப்பித்து தனக்கும் தானியேலுக்கும் நடந்த சம்பாஷணைகளைச் சொல்லி, இதின் இரகசியம் என்ன? ஒன்று நீங்கள் சாகவேண்டும், அல்லது பெல்லைத் தூஷிக்கும் தானியேல் சாகவேண்டும் என்று சொன்னான். தானியேல் அப்படியே ஆகட்டுமென்று ஒத்துக்கொண்டார். பெல்லின் பூசாசாரிகள் பெண்ஜாதிமார் பிள்ளைகள்தவிர எழுபது பேராயிருந்தார்கள். அப்பொழுது அவர்களனைவரும் பெல்லின் கோவிலுக்குப் போனார்கள். பூசாசாரிகள் அரசனை நோக்கி, இதோ, நாங்கள் வெளியே போகிறோம், நீர்தாமே மாவையும் இரசத்தையும் வைத்து கதவைக் கெட்டியாய்ப் பூட்டி இராஜ முத்திரையால் அடையாளம் பண்ணும்; நாளை நீர் வந்து பார்க்கையில் பெல்சுவாமியார் இதுகளைத் தின்னாதேபோனால் நாங்கள் சாகட்டும், தின்றிருந்தால் எங்கள்மேல் தீங்குபேசும் தானியேல் சாகவேண்டும் என்றார்கள். இதை இலேசாய் நினைத்து சொல்லிப்போட்டார்கள். பலிபீடத்தின் கீழே ஒரு கள்ளவாசலிருந்தது. இதின் வழியாய் அவர்கள் எப்போதும் போய் பெல்லுக்குப் படைக்கும் பண்ட பதார்த்தங்களையெல்லாம் தின்கிறது வழக்கம். நல்லது அப்படியே ஆகட்டுமென்று அவர்களை அனுப்பிவிட்டு ராஜா பல பதார்த்தங்களைப் படைத்து வைத்தான். தானியேல் சேவகரை அனுப்பி சாம்பல்கொண்டு வரக் கற்பித்து ராஜாவுக்குமுன்னே ஒருவரும் அறியாமல் அதைக் கோவிலெங்கும் தெளித்துக் கதவைப் பூட்டி இராஜ முத்திரையிட்டு வெளியே போனார்கள். இராத்திரியில் பூசாசாரிகளும் அவர்களுடைய மனைவிகளும் மக்களும் வழக்கப்படிவந்து அவைகளைத் தின்று குடித்து முடித்தார்கள். பொழுதுவிடிந்து அரசனும் தானியேலும் கோவிலுக்குப் போய், பூட்டுகளும்

முத்திரைகளும் உடைக்கப்படவில்லையென்று நன்றாய் அறிந்துகொண்டு திறந்து உட்பிரவேசித்தார்கள். அரசன் வைத்த பதார்த்தங்களனைத்தையும் பெல் சாப்பிட்டுவிட்டது என்று அகமகிழ்ந்து ஆராய்ந்துபாராமல், கைகுவித்து உரத்திக் கூப்பிட்டு பெல்லே, நீயே பெரியவன், உன்னிடத்தில் மோசமொன்றுமில்லையென்று சொன்னான். தானியேல் உடனே கொல்லென்று நகைத்து இராசாவே, உள்ளே போகாதேயும், தரையைப்பாரும், கவனியும் என்று காட்டி, இதுகளெல்லாம் யாருடைய காலடிகள் என்று கேட்டார். உடனே அரசன் ஏதோ தந்திரம் நடந்திருக்கிறது மெய்யென்று உணர்ந்து கோபமூண்டு பூசாசாரிகளையும் அவர்கள் பெண்சாதிபிள்ளைகளையும் பிடிக்கிறபோது, அவர்கள் தங்கள் வழக்கத்தைச் சொல்லி நிலவறைவழியாய் வந்த கள்ள வழியையும்காட்டினார்கள். அரசன் அவர்களனைவரையும் உடனே சிரசாக்கினை செய்து பெல் விக்கிரகத்தை தானியேல் வசம் ஒப்புவித்தான். அவர் அதை உடைத்து அதின் கோவிலையும் இடித்துவிட்டார்.

அந்த ஆலயத்துக்குள் பாபிலோனியர் கும்பிட்டுவந்த மலைப்பாம்பொன்றிருந்தது. அரசன் அவரைப் பார்த்து, தானியேலே! இது பித்தளை அல்லது செம்பு அல்லவே, இதற்கு உயிர் இருக்கிறதே, இதையாகிலும் கும்பிடேன் என்று சொன்னான். அதற்கு தானியேல், இதை ஜீவனுள்ள தேவனுக்கு இணையாகச் சொல்லலாமா? இதை நான் பட்டயம் தடியின்றி கொல்லக்கூடுமே என்றார். அப்போது அரசன் அப்படியா?—பட்டயமாவது தடியாவது இல்லாமல் நீ இதைக் கொல்லு பார்ப்போம் என்றான். அப்போது அவர் கொழுப்பையும் கேசத்தையும் மயிரையும் கலந்து பிசைந்து அடைசெய்து பாம்புக்கு ஊட்டினார். அது வெடித்து செத்துப்போயிற்று.

இந்தக் கதைகள் எபிரெயு, கல்தேயு வேதாகமப் பிரதிகளில் இல்லாவிட்டாலும் கிரேக்கத் திருப்புதல்களில் இருக்கின்றன. உரோமைச்சபை இதை திவ்விய அதிகாரமுள்ள வேதாகமத்தோடு சேர்ந்தபாகமென்று ஒப்புக்கொண்டாலும் பல முகாந்தரங்களையிட்டு நாம் அப்படி ஒப்புக்கொள்ளுகிறதில்லை. இத்தேசத்திலுள்ள விக்கிரகாராதனைக்காரரை உணர்த்துகிறதற்கு இது நல்ல திருஷ்டாந்தரமென்று தோன்றினபடியால் இவ்விடத்தில் அதை விபரமாய் எடுத்துக்காட்டத் துணிந்தோம். [அப்போக்கிரிப்பா ஆகமம், பெல்லையும் வல்லசர்ப்பத்தையுங் குறித்த சரித்திரம் காண்க.]

கிறதில்லை, அவை என்னவாயிருக்கும் என்று ஆவலோடு கேட்டார். அப்போது அவர், தானியேலே, போகலாம்! இந்த இரகசியங்கள் முடிவுகாலமட்டும் புதைபொருளாக வைக்கப்பட்டும், முத்திரிக்கப்பட்டும் இருக்கும்; அதை நீ அறிய ஆசைப்பட்டால் முடியாது என்று சொன்னதோடு, 'நீயோவென்றால் முடிவுவருமட்டும் போயிரு; நீ இளைப்பாறிக் கொண்டிருந்து, நாட்களின் முடிவிலே உன் சுதந்தரவீதத்துக்கு எழுந்தருளியாவாய்' என்று உத்தரவருளினார். அதோடு அவர் தமது ஆயுளைத் தமது சிருஷ்டி கர்த்தாவிடம் ஒப்புவித்து சமாதி கண்டு தமது சுதந்தரவீதம் பங்கிடப்படும் கடைசிநாளில் எழுந்திருக்கும்படி இளைப்பாறிக் கொண்டிருக்கிறார்.

அவர் எவ்வளவு வயதில் என்ன வியாதியினால் இப்பூலோக பிரயாணத்தை முடித்துக்கொண்டாரோ நமக்குத் தெரியாது. எப்படியும் எண்பது பிராயத்துக்குக் குறையாமல் இருந்தாரென்று அநுமானிக்கவேண்டியது. அவர் எஸ்றாவோடே சிறையிருப்பிலிருந்து கானானுக்குத் திரும்பி வந்து, மறுபடியும் பார்சியாவுக்குப்போய் சூசா நகரத்தில் நல்ல நரைவயதில் மரணமடைந்தார் என்று சொல்லுகிறார்கள். தானியேல் சிறந்த ஒரு சிற்பாசாரியாயிருந்து பார்சியாவிலுள்ள சூசா அல்லது எக்பாற்றா நகரத்தில் ஒரு விஸ்தாரமான மாளிகையையும் விநோதமான கோபுரத்தையும் கட்டினாரென்றும், அக்கட்டடங்கள் யோசேப்புஸ் காலத்தில் புதிய கட்டடம்போல் அவ்வளவு பலமாயும் உறுதியாயுமிருந்ததென்றும் யோசேப்புஸ் என்னும் யூத சரித்திரக்காரன் எழுதியிருக்கிறான். பார்சியா தேசத்தில் தேவனாக வணங்கப்படுகிற சோரையாஸ்ற்றர் இந்த தானியேலேயன்றி வேறல்லவென்று சிலர் அபிப்பிராயப்பட்டிருக்கிறார்கள். யூத ரபிகளோ தானியேல் தீர்க்கதரிசன ஆகமமானது லோக இரட்சகராகிய இயேசுகிறிஸ்துவை நுட்பமாய்க் குறித்துக் காட்டுகிறதால் அவரை விசுவாசிக்க மனமற்று, மற்ற தீர்க்கதரிசிகளுக்கு மகா தாழ்வாக மதித்துவருகிறார்கள். ஆனால் கிறிஸ்து இரட்சகர் இவரைத் தீர்க்கதரிசி என்று அழைத்திருக்கிறதால் (மத். 24:15) அவரைக் குறித்து யூத ரபிமார்

கொள்ளும் தாழ்ந்த அபிப்பிராயத்தைக் கவனிக்கவேண்டிய தில்லை.

தானியேல் உயிரோடிருந்த காலத்தில் அவருடைய ஞானத்தைப்பற்றி அவ்வளவு பிரபல்லியமான எண்ண மிருந்தபடியால் அவருடைய பேர் ஒரு பழமொழியாக வழங்கிவந்தது (எசே. 28:3). அவரில் விளங்கிய விசுவாசம் தெய்வீக வைராக்கியம், பரிசுத்தம் முதலிய இலட்சணங்கள் ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் விசேஷமாய் தேவஊழியக்கார ருக்கும் இருக்கவேண்டியது. அப்பொழுது அவர்கள் தானியேல் மா பக்தரோடுகூட ஆகாயமண்டலத்து ஒளியைப் போலவும், நட்சத்திரங்களைப்போலவும் என்றென்றைக்கு முள்ள சதாகாலங்களிலும் பிரகாசிப்பார்கள்.

கடல் ஆழங்கண்டவர்

யோனா

இச்சமயத்தில் நாம் வாசிக்கப்போகும் சரித்திரம், இதற்கு முந்தின எந்தச் சரித்திரத்திலும் விந்தையான தென்று சொல்லவேண்டியது. கடலாழங் கண்டவரின் சரித்திரத்தால் தேவநீதியின் மகத்துவம் வெளியாகிறதோடு, ஒரு பாவியின் சரித்திரமும் பூரணமாய்த் தெரியவரும்; ஆதலால் நாம் இவருடைய சரித்திரத்தை எழுதிக்கொண்டே போகும்போது, அங்கங்கே பாவியின் சரிதையையும் சுட்டிக் காட்டிப்போவது தப்பிதமாயிருக்கமாட்டாது. கிறிஸ்தவர்களெல்லாருக்கும் புதிய ஏற்பாட்டிலுள்ள கெட்டகுமாரனுடைய உவமை தெரியுமே (லூக். 15:11–24). இந்தச் சரிதை பழைய ஏற்பாட்டிலுள்ள ஒரு கெட்டகுமாரனுடைய சரித்திர வரலாறுயிருக்கிறதென்று எண்ணிக்கொள்ளவேண்டியது. இவருடைய பேரைச் சுருக்கி 'ஆழங்கண்டவர்' என்று எழுதிக்கொண்டுபோவது வாசிக்கிறவர்களுக்குச் சற்று லேசாக இருக்கலாமென்று எண்ணி, அவ்வண்ணம் எழுதுவோம்.

ஆழங்கண்டவர் சுமார் இரண்டாயிரத்து எழுநூறு வருஷத்துக்குமுன் பூமியில் இருந்தார். இவர் பல விஷயங்களைக் குறித்துத் தீர்க்கதரிசனமுரைத்திருக்கலாம், அவைகளின் விபரமொன்றும் நமக்குத் தெரியாது; என்றாலும் அவர் நினிவே என்னும் மகா நகரத்துக்கு விரோதமாய்க் கூறின தீர்க்கதரிசனமும், அதனோடு சம்பந்தப்பட்ட அவருடைய சரித்திரமும்மாத்திரம் வேதாகமத்தின்மூலமாய் நமக்கு இறங்கிவந்திருக்கிறது. அதை இங்ஙனம் கூறுவோம்.

ஆழங்கண்டவர் செபுலோன் நாட்டிலுள்ள காத்தேப்பேர் ஊரில் அமித்தாய் என்ற பக்தனுக்குப் பிறந்தார்[1] (2 இரா. 14:25). இவருடைய தகப்பனுர் சாதாரண பக்தனுயிராமல் தேவ அருள் அடைந்து, வெளிப்படுத்தலைப் பெற்று தீர்க்க தரிசனங்களைச் சொல்லுகிறவராகவுமிருந்தார். ஆதலால் ஆழங்கண்டவர் இளம்பிராயமுதல் பக்திநெறியில் வளர்க்கப் பட்டு, கடவுளின் பாதத்தைத் தேடி வளர்ந்த தாசனு யிருந்தாரென்று சொல்லவேண்டியது.

ஆழங்கண்டவர் பக்திநிலை தவருது பத்தாவைத் தொழுதுவருங்காலத்தில் ஒருநாள் ஆண்டவர் அவருக்குப் பிரசன்னமாகி, 'நீ எழுந்து மகா நகரமாகிய நினிவேக்குப் போய், அதற்கு விரோதமாகப் பிரசங்கி; அவர்களுடைய அக்கிரமம் என் சமுகத்தில் வந்து எட்டினது' என்ருர். 'நீ எழுந்து' என்ற வாசகமானது இத்தரிசனையின் காலத்தில் அவர் முழங்கால் தியானத்திலாவது, சாஷ்டாங்க தியானத்தி லாவது இருந்தார் என்னும் அநுமானத்தைத் தருகிறதா யிருக்கிறது. இவர் செய்யவேண்டிய வேலை பட்டிக்காட்டி லல்ல, மகா நகரமாகிய நினிவேயிலிருந்தது. இந்தக் கட்டளை அவர் எதிர்பாராததும் பயப்படத்தக்கதுமானதா யிருந்தது. ஆதலால் அவர் தேவசமுகத்திலிருந்து விலகி, யோப்பாவில் கப்பலேறி தர்ஷீசுக்குப் போய்விட தீர்மானித் துக் கப்பல் கூலியும் செலுத்தி படகேறினுர். இதினுலே அவருடைய குறைவுகள் பட்டப்பகல்போல் விளங்குகின் றன. அவர் அதுமுதலாக 'கர்த்தருடைய சமுகத்தினின்று விலகினுர்.' அதாவது தமது அன்ருடக தியானத்தையும், ஆராதனை வணக்கங்களையும் நிறுத்திவிட்டார்; நாம் அதிக பக்திவிநயமாயிருக்கிறதால் ஆண்டவர் நம்மைக் காடு மேடெல்லாம் அலையவைத்துக் காலாகோலப்படுத்தப்போகி ருர்; இனி நமது தொழுதுகொள்ளுதலும் வேண்டாம், அவருடைய துரத்துதலும் வேண்டாம் என்கிறவரைப்போல் நடந்துகொள்ளுகிருர். உத்தம கிறிஸ்தவர்கள் தங்கள் பக்தி

[1] சில யூத ரபிமார் யோனு சரேப்தா ஊரில் எலியாவினுல் உயிரோடெழுப்பப்பட்ட கைம்பெண்ணின் மகனேயன்றி வேறல்ல வென்று எழுதியிருக்கிருர்கள்.

யில் பூரணமாகுந் தருணத்தில் தங்கள் விஷயத்தில் இப்படிப் பட்ட தேவ நடத்துதல்கள் விளங்கும்போது மனஞ்சோர்ந்து பக்திவளர்ச்சியிலிருந்து குறைகிறதுண்டு; ஜெபத் தியான முறைகளைச் சிலகாலம் நிறுத்திவிடுகிறதுமுண்டு. இது தேவசெயல்களின் சமயம்பார்த்து சாத்தான் நம்மைக் கெடுக்கிற உபாயதந்திரங்களேயன்றி வேறல்ல. ஒரு பிராயத்தில் மகா பக்தராய் விளங்கினவர்கள் பாவத்துக்குச் சாய்கிற முதல்படி, தேவாராதனைகளையும் கிருபையின் யத்தனங்களையும் அசட்டை செய்து, அவ்வண்ணமாக தேவ சமுகத்திலிருந்து விலகியோடுகிறதினால்தான். ஒருவனும் தன் இருதயத்தின் பக்தியின் பலத்தால் பெருமைகொண்டு தேவாலய ஆராதனைகளையாவது, திருச்சபையின் நியமங்களையாவது அசட்டைசெய்யக்கூடாது; அப்படி அவன் அசட்டை செய்கிறதுண்டானால் தேவசமுக சலாக்கியங்களுக்கு அவன் சீக்கிரம் தூரமாவான் என்பதை மறந்துபோகலாகாது.

ஆழங்கண்டவர் தேவனுடைய உத்தம பிள்ளையாயிருந்தும் பிதாவின் கட்டளையை மீறும்படி தீர்மானித்து ஓடுகிறார்; தன்னை 'பயபக்தியுள்ளவன்' என்று அவரே அறிக்கையிட்டாலும் தேவசமுகத்தை விட்டு ஓடுகிறார். தேவனுடைய பிள்ளைகளே! அவருடைய நாமத்தின்மேல் பயபக்தியுள்ளவர்களே! உங்கள் பக்தியின் படிகளில் வழுக்கலும், சறுக்குதலுமுண்டென்று நிதானித்து ஜாக்கிரதையாய் நில்லுங்கள். மேலும் அவர் தமக்குண்டான தரிசனைக் கட்டளையினால் நம்முடைய மாமூல் உத்தியோகமும், இடமும் மாறிப்போயிற்று என்று கோபப்பட்டு ஓடுகிறதுபோலிருக்கிறது. தன் தேசத்துக்குள்ளும், தன் இனத்துக்குள்ளும் தீர்க்கதரிசனம் சொல்லத்தான் பிரியப்பட்டாற்போலிருக்கிறது. தேவன் அவரை வேறு ஜாதியார் நடுவிலும், தேசத்தின் மத்தியிலும் போகச் சொன்னவுடனே அவருடைய சமுகத்தைவிட்டு ஓடிவிட்டார். இன்னம் அவருடைய விழுதல் எவ்வளவு தாழ்வானது என்று பாருங்கள்! கடவுள் அவரை நினிவேக்குப் போகச்சொல்ல இவர் தர்ஷீசுக்குப் போவேன் என்று யோப்பாவில் கப்பல் ஏறுகிறார். கடவுள் குறித்த இடம் கிழக்கே இருந்தது; இவர் தெரிந்துகொண்ட இடமோ நேர் மேற்கே இருந்தது. கடவுள் கால்நடை பயணத்

தைக் குறிப்பிடுகிறார்; இவர் கப்பல்நடை பயணத்தைத் தெரிந்துகொள்ளுகிறார். ஆண்டவர் குறித்த இடம் நூறு மைல் தூரமாயிருந்தால் அவர் அதற்கதிகமான தூரத்தைத் தெரிந்துகொள்ளுகிறார். இதையெல்லாம் கவனிக்கையில் நினிவேக்குப் போகும்படி தேவகட்டளை பிறந்தவுடனே இவருக்குக் கோபமூண்டு, 'வண்ணத்துக்குக் கிண்ணம்பாடி' 'ஏட்டிக்குப் பூட்டி பண்ணி' என்ற சுலோகங்கள்போல எதிரித்தனம் பாராட்டுகிறதாயிருக்கிறது. உத்தம பக்தர் பாவபடுகுழியில் விழும்போது, அந்த விழுதல் மற்றப் பாவிகளுக்கு பெலவீனத்தால் அல்லது அறிவீனத்தால் விழுகிறதுபோலிராமல் பகிரங்க விழுதலாயும், நேர்விரோத போங்காயும், முந்தின பக்தியின் திசைக்கு எதிர்திசையை அடுத்ததாயும் இருக்கலாம். மேலும் அவர் கப்பலுக்கு 'கூலி கொடுத்து' ஏறினார். ஒருவேளை நினிவே பயணத்தில் தேவன் எலியாவைப் போஷித்ததுபோல காகங்களைக் கொண்டு போஷிக்கலாம், அல்லது வேறு உதவிகளை ஆயத் தஞ் செய்ய இருக்கலாம். அது வேண்டாம் என்கிறவர் போலும், என்னை ஆதரிக்க எனக்குப் பலமில்லையோ என் கிறவரைப்போலும் தாமே கூலி கொடுத்துப் போகிறார். இது பாவத்தில் விழும் பக்தரின் நிலைமையை நன்றாகக் காட்டுகிறது. அவர்கள் தேவசமுகத்தைவிட்டுத் தங்கள் மனம் போனவழியாக தேவகடமைகளை நிறைவேற்றப் போகும்போது தங்களுடைய முந்தின பக்தி, ஜெபம், நற் கீர்த்தி, சொற்சக்தி முதலியவைகளைக் கூலியாகவும், வழிச் செலவாகவும் வைத்துக்கொண்டு நடந்துவருகிறார்கள். இவர் களுடைய ஓட்டமும் யாத்திரையும் யோனாவின் கப்பலைப் போல கொஞ்சத்தூரம் நன்றாய் ஓடும்; ஆனால் அப்புறம் அதின் வண்டோலம் தெரியும். ஒருவனும் தன் சுய நீதியில் நம்பிக்கை வைக்கவேகூடாது. மொத்தமாய்ச் சொன்னால் ஆழங்கண்டவர், பழைய காயீனைப்போல் கர்த்தருடைய சமுகத்தைவிட்டு விலகவேண்டுமென்று தீர்மானம்பண்ணி இப்படி எதிர்திசைக்கு ஓடினார். தேவகட்டளைப்படிக்கு அவர் தமது இருப்பிடத்திலிருந்து நினிவேக்குப் புறப்பட்டுப் போயிருப்பாரானால் பூர்வ மகாத்துமாக்களாகிய ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு, யோபு முதலானவர்கள் வசித்த நாடு

களைக் கடந்து, பூர்வதேவச் செயல்களைத் தியானித்து, மனத்திடனடைந்து, மெசொபொத்தாமியா முதலிய நீர்வள தேசத்தின் பசுங்காட்சியால் ஆயாசந்தீர்ந்து, திகிரிஸ் நதியின் தெளிந்த ஜலத்தையும், ஐபிராத் நதியின் அருஞ்சலத்தையும் அருந்தி, அங்கம் தேறி, அருள் தங்கினவராய் நினிவேயின் தெருக்களைக் குலுங்கச் செய்யலாம். அப்படிக்கில்லாமல் இவர் கப்பலேறி அலைதிரளின் கடுங்காட்சியையும், மீன்கள் நீந்துவதின் வேடிக்கையையும் பார்த்துப் பார்த்து தர்ஷீசுக்குப் போகத் தீர்மானித்தார். பாவிகள் தேவச்செயலின் போங்கை அருவருத்துத் தங்கள் மனப்போங்கை நிலைநிறுத்துகிறார்கள் என்பது மெய். இவர் தேவசமுகத்தை அசட்டை செய்த விஷயம் இரட்டித்துக் கூறப்பட்டிருக்கிறது. ஆதலால் நினிவேக்குப் போகவேண்டுமென்ற தேவகட்டளை ஒருதடவைக்குமேல் இவருக்கு உணர்த்தப்பட்டதென்று சொல்லலாம். அப்படியானால் இவர், திரும்பத் திரும்பக் கொடுக்கப்பட்ட தேவகட்டளையைத் துணிகரமாய் மீறி, தன் போக்கை நிலைநிறுத்தப் பார்த்தார் என்று சொல்லலாம். பக்தர் பாவிகளாக மாறும்போது அதிக துணிகரத்தைக் காட்டுகிறார்கள். கடைசியாக, இவர் கடவுளின் சித்தத்திற்கு விரோதமாக யுத்தம்பண்ணி மேற்கொண்டவர்போல் சாங்கோபாங்கமாய்க் கப்பலேறி அதின் நங்கூரம் தூக்கும் வேடிக்கையைப் பார்த்துக்கொண்டிருக்கிறார். இவருடைய இம்மட்டுமுள்ள விஷயம் தகப்பன் வீட்டைவிட்ட கெட்ட குமாரனுடைய விஷயம்போல்தானிருக்கிறது. யோனாவே! நல்லது, கப்பலேறிப்போம்; நான் உம்முடைய கப்பலில் ஏறாமல் தேவபராமரிப்பென்னும் தோணியில் ஏறிக்கொண்டு உம்மோடுகூடவே வருகிறேன். ஏனெனில் உம்மைக் கடைசி மட்டும் தொடர்ந்து பார்ப்பது என் தீர்மானமாயிருக்கிறது.

யோனா பாவத்தில் விரைந்தோடினதைக் கண்ட நாம், அவர் அதினால் அடைந்த பலன்களைப் பக்கத்திலிருந்து பார்ப்பது தகுதியாயிருக்கும். எந்த ஊழியத்திலும் ஒரு சம்பளமிருக்கிறதுபோல பாவ ஊழியத்திலுமுண்டு. தேவனுடைய பிள்ளையாயும் அவருடைய பக்தனாயும் இருந்தவன் பாவத்தில் விரைந்தோடி சுய புண்ணியமாகிய துடுப்பை வலித்து, தேவ சமுகத்தை மறந்து பாவ சமுத்திரத்தில்

யாத்திரை செய்கையில் அதற்குரிய பலனை அடையாமல் போகிறதில்லை. இவர் அடைந்த முதற்பலன் பெருங்காற்று தான். இவர் கப்பலில் ஏறுமுன் பெருங்காற்று இல்லை. இவரும் ஏறினார், காற்றும் துவங்கிற்று. அக்காற்றின் ஆரம்பம் மெதுவாயும் இன்பமாயுமிருந்திருந்தால் ஆகா! நமக்கேற்ற காற்றுதான், நாம் உத்தேசித்ததைவிட சீக்கிரம் தர்ஷீசின் தரையை மிதிக்கலாம் என்று எண்ணியிருக்கலாம். அக்காற்றோ, அவரைக் கடலில் ஆழ்த்தும்படி வந்த சூறுவளியாயிருந்தது. பாவ சமுத்திர யாத்திரிகனும் காற்றை விதைத்துப் பெருங்காற்றை அறுப்பானென்று ஓசியா சொல்லுகிறார் (ஓசி. 8:7). அதாவது, அழிவுக்கேது வான முடிவே அவர்கள் பலனாயிருக்கும். காற்று ஜீவ காருண்யமாயிருந்தாலும் பெருங்காற்று ஜீவநாசமுள்ளது. பெருங்காற்று மண்ணை வாரி முகத்தில் எறிந்து கையால் முகத்தை மூடப்பண்ணும். பாவம் ஒருவனுடைய கீர்த்திப் பிரஸ்தாபம், மதிப்பு எல்லாவற்றின்மேலும் மண்ணை வாரிப் போட்டு, ஒரு காலத்தில் தன்னை மதித்தவர்கள், நேசித்தவர்களை ஏறிட்டுப் பாராதபடி தலைமறைவாய்த் திரியச்செய்கிறது.

இவர் பயணத்தில் பெருங்காற்றோடு கடலும் கொந்தளித்தது. இதை அவருடைய இரண்டாம் பயன் என்று சொல்லலாம். மேலே பெருங்காற்றும் கீழே கொந்தளிப்பும் மத்தியில் இவருடைய கப்பலுமிருக்க நாம் காண்கிறது எவ்வளவு துக்கமாயிருக்கிறது. இதைப் பார்த்தால் வானமும் பூமியும் அல்லது காற்றும் ஜலமும் இவருடைய பயணத்தைத் தடுக்குந் தூதராக நிற்கிறதுபோலும், அவரைப் பிடித்துத் தண்டிக்கும் சேவகராகத் துரத்துகிறதுபோலும் இருக்கிறதல்லவா? பாவிகளுக்கும் வெளியே பாவங்களும் உள்ளே போராட்டங்களும் இருக்கும்; மனச்சாட்சி சொல்ல முடியாத குழப்பத்துக்குள்ளாகும். இது பாவ உணர்வினாலுண்டாகும் குழப்பமாயிராமல் பாவத்திரட்சியினாலுண்டாகும் குழப்பமாயிருக்கும். இவர் கண்ட மூன்றாம் பலன் கப்பலாட்களின் புலம்பலும் அழுகையுந்தான். அவர்கள் எல்லாரும் கலங்கி மனம் பொங்கி அழுதார்கள். அமைதலான குடும்பம் அலறி அழும்படி ஒரு பாவமுள்ள சகோ

தரன் போதும்; பந்துக்கட்டான ஒரு சபை பதறிச் சிதறிப் போக ஒரு துஷ்டன் போதும்; ஒரு ஊரை நஷ்டப்படுத்த ஒரு பாவி போதுமென்கலாம். இம்மட்டோடே போகாமல் கப்பலிலிருந்த சரக்குகளெல்லாம் கடலில் நஷ்டமாயின. இவ்வளவு நஷ்டத்துக்கும் காரணம் இவர்தான். பிரயாணி கள் வழிக்கு ஆயத்தம்பண்ணியிருந்த உணவுப் பதார்த்தங் களும், வியாபாரிகள் ஏற்றியிருந்த சரக்குகளும் எல்லாம் நஷ்டமாயின. பாவத்தால் சரீரத்துக்கும் ஆத்துமாவுக்கு மடுத்த வஸ்துக்கள் யாவும் நஷ்டமாகிப்போகின்றன; பாவத்தினலே சரீரத்தின் பொருட்களாகிய பணம், நிலம், வீடு முதலியவைகள் நஷ்டமாகின்றன. ஜீவகாலமாகிய கப்பலிலிருக்குமட்டும் உதவத்தக்க அநேக பணங்கள் ஒரே பாவத்தால் தொலைந்துபோகிறதுண்டு. அதோடு ஆத்தும வாழ்வு வஸ்துக்களாகிய அன்பு, சாந்தம், சமாதானம், தேவகிருபை, மெய்ப்பக்தி முதலிய யாவும் பாவ ஜீவகாலத் தில் பறிபோய்விடுகிறதால் அவர்கள் வெறுங்கையும் அம்மணமுமாயிருக்கிறார்கள். வானத்திலும், பூமியிலும், கப்பலிலும், கடலிலும் இவ்வளவு காரியங்கள் நடக்கிற சமயத்தில் நாம் யோனா இருக்கிற இடத்தைத் தேடிப் பார்க்க வேண்டியதாயிருக்கிறது. மேல் தட்டிலிருந்து அழுகிற கூட்டத்தோடாவது, சரக்குகளைத் தூக்கி எறிகிற கும்பலோ டாவது, கடவுளுக்கு நேராக அழுது கையேந்தி நிற்கும் கும்பலோடாவது நாம் இவரைக் கண்டுபிடிக்கக்கூடவில்லை. ஐயோ! இவர் எங்கே போனார்? காற்றோடு காற்றாய்ப் பறந்து போனாரோ? அல்லது கடலில் விழுந்து தம் உயிரை மாய்த் துக்கொண்டாரோ? யோனாவோவென்றால், 'கப்பலின் கீழ்த் தட்டில் இறங்கிப் போய்ப்படுத்துக்கொண்டு அயர்ந்த நித்திரை பண்ணினார்.' சாத்தான் மனுஷரைப் பாவத்தைப் பார்க்கப் பண்ணி, அப்புறம் செய்யச் சொல்லி, அப்புறம் பாவத்தில் தூங்கவும் வைக்கிறான். ஆம், அவன் தெல்லீலாள் என்ற வேசியைப்போல பராக்கிரம பக்தரைத் தன் வலையில் சிக்க வைத்து, தன் மடியிலே நித்திரைபண்ணச் செய்து, லோக இன்ப வெண்சாமரையை வீசி, கடைசியாக ஆவிக்குரிய பலமனைத்தையும் அடியோடு அகற்றிப்போடுகிறான். இவர் மேல் தட்டை விட்டுக் கீழ்த் தட்டை தெரிந்துகொண்டார்.

இது பாவ பள்ளத்தில் மனுஷன் மனதோடு இறங்குகிறதை உணர்த்துகிறது எனலாம். தேவ கோபம் அவர்களை மேலும் கீழும் தாக்கினாலும், உலகப் பழிப்பு அவர்கள் பக்கத்தில் மோதினாலும் அதையெல்லாம் சட்டைபண்ணாமல், முன்னிலும் அதிகமாய்ப் பாவஞ்செய்கிறார்கள். இவர் கீழ்த்தட்டில் படுத்து நித்திரைபோனார். இங்கேதான் அவருக்கு ஆறுதல் இருக்கிறதாம். பாவிகள் மேல்நோக்குகிறதில்லை. அவர்கள் தங்கள் இருதயத்தை ஏறெடுத்துப் பிதாவின் அன்பையும், குமாரனின் நேசத்தையும், மோட்சவாசிகளின் வாழ்வையும், ஜீவகிரீடத்தையும் நோக்கவேமாட்டார்கள்; அவர்கள் பாவத்தின் தாழ்ந்த பள்ளத்திற்குப் போக விரைந்தோடி, அங்கே சுகமாய்ப் படுத்து நித்திரை கொள்கிறார்கள்; அவர்கள் வானம்பாடியைப்போல் கீழேயிருந்து மேலே பறக்க விரும்பாமல், கழுகைப்போல் மேலேயிருந்து பாவபாதாளத்துக்கு உராஞ்சி பறந்து இறங்குகிறார்கள்; விலாங்கைப்போல சகதியைத் தங்கள் இருப்பிடமாக்கி தேவநேச ஜோதிகளை அசட்டை செய்கிறார்கள். யோனா அயர்ந்த நித்திரை செய்தாராம். இச்சமயத்தில் இவருக்குத் தூக்கம் வந்தது எவ்வளவு அதிசயமாயிருக்கிறது! எல்லாருக்கும் தூக்கம், இவருக்குத் தூக்கம். அது சாதாரண தூக்கமாயிராமல் அயர்ந்த நித்திரையாயிருந்தது. ஒருவேளை கப்பலில் ஏறுமட்டும் தேவ கட்டளையை மீறுகிறோமே என்று மனங்குத்தினதால் நினிவேக்குப் போகக் கட்டளைபிறந்த நாள் முதல் தூக்கம் வரவேயில்லையாக்கும். கடைசியாக, அவருடைய துணிகரம் மேலிட்டு மனச்சாட்சியின் கூரை மட்டியாக்கி அதன் பலனைக் குறைத்துவிட்டதால், அவர் மனதில் தடுப்பாரின்றி ஆறுதல் பெற்று சாங்கோபாங்கமாய் தூங்கினாராக்கும். பாவிகளும் சில வேளை கன பாவ அலைகளுக்குள் இன்பமாய்த் தூங்குகிறார்கள். வெட்கத்தின் அலைகளாவது, தேவதண்டனையின் புசல்களாவது, நரக தண்டனையின் அமளிகளாவது அவர்களுக்கு ஒன்றுமில்லாததுபோல சுகமாயிருக்கிறார்கள். இவருடைய தூக்கத்தை முதல் மனுஷனுடைய அயர்ந்த நித்திரையோடு ஒப்பிட்டுப் பார்த்தால், ஆதி மனுஷன் ஒரு ஸ்திரீயைப் பிறப்பிக்கத் தூங்கினாரென்றும், இவர் தம்முடைய பாவகர்ப்பம் பிரசவமாகும்படி

தூங்கினுரென்றும் சொல்லலாம். இவருடைய தூக்கத்தை லோக இரட்சகர் ஒரு நாள் கடலின் கோஷ்டத்தில் தூங்கின தோடு ஒத்துப் பார்த்தால், அவர் தமது சீஷருடைய விசுவாசத்தைப் பலப்படுத்தும்படி தூங்கினுரென்றும், இவர் தமது அவிசுவாசத்தைப் பிரபல்யப்படுத்தத் தூங்கினுரென் றும் சொல்லலாம். இதினுல் எந்த பக்தனும் தன்னை மேன்மைப் பாராட்டிக்கொள்ளக் கூடாதென்று ரூபாகர மாகிறது. ஒரு தீர்க்கதரிசியின் மகனும், தானே தீர்க்க தரிசியுமான இவர் தேறின பக்தரைத் தமது விழுதலால் எச்சரித்து உணர்த்துகிருர் என்று தாராளமாய்ச் சொல்ல லாம். இவர் மேல் தட்டைவிட்டுக் கீழ்த்தட்டில் வந்து படுத்ததுபோல் அநேகர் பாவத்தினிமித்தம் ஊர் மாறுகிற துண்டு. யோனு இடமாறினுலும் குணமாறவில்லை. பாவிகள் தங்கள் இடத்தையும் இனத்தையும் மாறினுலும் அவர்கள் பாவத்தை மாற்றமாட்டார்கள்.

இவர் சாங்கோபாங்கமாய் குறட்டையிட்டு நித்திரை போகையில் மாலுமி அவரிடத்தில் வந்து: ‘நீ நித்திரை பண்ணுகிறதென்ன? எழுந்திருந்து உன் தேவனை நோக்கி வேண்டிக்கொள்’ என்று ஏவினுன். இவன் யோனுவை எழுப்பவேண்டுமென்று வராமல், கடலில் எறியும்படியான அவசியமற்ற சரக்குகள் இன்னுமுண்டா என்று அடித் தட்டைப் பார்க்கும்படி வந்திருக்கலாம். ஆம், அந்தக் கப்பலுக்கு அவசியமில்லாத சரக்கு யோனுதான். அவரால் தான் இவ்வளவு கேடும், இவ்வளவு நஷ்டமும், இவ்வளவு புலம்பலும் உண்டாயிற்று. இது இவர்மேல் விளங்கிய தேவகிருபையின் முறையென்று சொன்னுலும் பழுதில்லை. இம்மட்டும் ஆண்டவர் யோனுவின் மனச்சாட்சியைக் கொண்டும், அப்பால் பெருங்காற்று, கடல் கொந்தளிப்பு முதலிய அந்தரங்க முறையைக் கொண்டும் உணர்த்தினுர். அவைகளையெல்லாம் அவர் உணர்ந்து மனந்திரும்பாததினுல் இப்போது வெளியரங்கமாய் மனுஷனைக்கொண்டு உணர்த்தப் பார்க்கிருர். மாலுமி உணர்த்தினுன் என்கிற விஷயம் இவர் கேட்டில் வளர்ந்த ஸ்திதியையும் காண்பிக்கலாம். இம்மட்டும் கப்பலிலிருந்த பலர் வந்து எழுப்பியும் அவர் அசையவில்லை. கடைசியாக, மாலுமி தானே வரவேண்டிய

தாக அவ்வளவு அஜாக்கிரதையில் இருந்தாராக்கும். பாவிகள் தங்கள் குடும்பங்களிலும் ஜீவனங்களிலும் அந்தரங்கமாய் உணர்த்தப்படுகிற தேவ எச்சரிப்புகளையும், சிநேகிதர் முதலானவர்கள் மூலமாய் அடையும் உணர்த்தல்களையும் முற்றிலும் அசட்டைப் பண்ணும்போது, அவர்களுடைய மனந்திரும்புதலுக்கென்று தேவன் மாலுமி போன்ற உத்தம போதகன்மாரைக் கொண்டு உணர்த்தி மனந்திரும்புதலுக்கு அழைக்கிறார். ஆ! பாவிகளுக்கு இரக்கம் காட்டுகிறதில் நமது இரட்சகருக்கு சமானமானவர்கள் இல்லவே இல்லை. அவர் தமது தாசரைக் கொண்டு பாவ தூக்கத்தில் இருக்கிற அனைவருக்கும் எச்சரிப்பாக,

இரவு சென்றுபோயிற்று
பகல் சமீபமாயிற்று (ரோ. 13:12);
தூங்குகிற நீ விழித்து
மரித்தோரை விட்டெழுந்திரு (எபே. 5:14);
மற்றவர்கள் தூங்குகிறதுபோல்
தூங்காமல் விழியுங்கள் (1 தெச. 5:6);
விழித்திருங்கள், எதிரி வருகிறான்,
உறுதியாயிருந்து எதிர்த்து நில்லுங்கள் (1 பேது. 5:8,9);
நீ தூங்காமல் விழித்துக்கொண்டு
சாகிறதற்கேதுவானவைகளை ஸ்திரப்படுத்து (வெளி. 3:2);

என்ற மணிநாதங்களைத் தினந்தோறும் அடித்துக்கொண்டேயிருக்கிறார். மாலுமி வரச்சொன்ன பின்பு இனி அவர் படுத்திருந்தால் ஒருவேளை கோபத்தில் கடலில் தூக்கிப் போட்டுவிடும்படி கட்டளை யிடுவானென்று பயந்தோ, அல்லது வேறென்ன முகாந்தரத்தாலோ யோனா கீழ்த் தட்டை விட்டு மேல் தட்டுக்கு வந்தார். இவர் கீழ்த் தட்டை விட்டதே பெரிய காரியம். அவர் எந்த முகாந்தரத்தால் வந்தாலும் அது ஒரு பக்கத்திலிருக்கட்டும்.

யோனா மேல்தட்டில் வந்தவுடனே ஆழத்திலும், ஆகாயத்திலும், கடலிலும், கப்பலிலுமிருக்கிற அமளிகுமளிகளைப்

பார்த்து அசந்துபோனார். புசல் அடியாக்காலத்தில் புசலும், கோஷ்டமில்லாக் கடலில் கோஷ்டமும் எவருக்கும் அதிசயத்தைக் கொடுத்ததுபோல இவருக்கும் கொடுத்தது. ஆகவே, இவர் முகம் கரிகறுத்துப்போயிற்று என்கலாம். இப்படி அகாலத்தில் நேரிடுகிற இந்த அகோர தேவ சிட்சைக்கு ஒரு காரணமிருக்க வேண்டுமென்பதே அவர்கள் சிந்தையிலுண்டான முதலாம் கருத்து. இது தேவச் செயலால்தான் அவர்கள் சிந்தையில் உதித்திருக்கலாம். ஆகவே யார் நிமித்தம் இந்த ஆபத்து நமக்கு நேரிட்டதென்று அறியும்படி சீட்டுப்போடுவோம் என்று சொல்லி, சீட்டுப் போட்டார்கள். இப்போது தேவன் இம் மட்டும் மனந்திரும்பாத யோனாவுடைய பாவங்களை ஊரெங்கும் விளம்பரமடித்து விசாரணைக்குக் கொண்டு வருகிறதா யிருக்கிறது. அந்தச் சீட்டு யோனாவின் பேருக்கே விழுந்தது. ஆ! இந்தச் சமயத்தில் எல்லாருடைய கண்களும் அவர்பேரில் வைக்கப்பட்டது. அவருடைய உடையையும் போங்கையும் பார்த்தால் அவரைக் குற்றவாளியென்று சமுசயப்படக்கூடாது; ஆனாலும் அவர்தான் குற்றவாளி. பாவி எந்த உயர்ந்த அந்தஸ்தை உடையவனா யிருந்தாலும் குணப்படாத பட்சத்திலும் மனந்திரும்பி தன் பாவங்களை விட்டுவிடாத பட்சத்திலும் தேவன் அவன் பாவத்தை வெளிப்படுத்துவார் என்பது மெய். ஏதேனில் வீசிக்கொண்டிருந்த சுடரொளிப் பட்டயம் ஆதிமனுஷனின் பாவத்தையும், காயீனின் அடையாளம் அவனுடைய பாவத்தையும், பேழையானது பழைய உலகத்தின் பாவங்களையும் எப்படி விளம்பரப்படுத்திற்றோ அப்படி இந்தச் சீட்டு யோனாவின் பாவத்தை விளம்பரப் படுத்தினது என்கலாம். சீட்டு விழுந்தும் இவர் தம்முடைய செய்கையை அறிக்கையிடவில்லை. இது அவருடைய சீர்க்கேட்டை வற்புறுத்தி உணர்த்துகிறது. பாவிகள் வெளியரங்கமாய்க் கண்டுபிடிக்கப்பட்டாலும் தங்கள் உணர்வை அடையாமலிருக்கலாம். தேறின பாவிகளுக்கு இது ஒரு விசேஷித்த குறிப்பு.

தேவ கட்டளையை மீறி தன் மனம்போனபடிப் போனவரை தேவன் சும்மா விடவில்லை. அவர் யோனாவின்

பாவத்தைக் காற்றைக்கொண்டும் கடலைக்கொண்டும் விளம்பரப்படுத்தி, அவரைக் கைதியாக்கி கடலின் மத்தியிலே தானே நியாயவிசாரணை செய்தார். இந்த விசாரணைக்குக் கப்பலே கச்சேரியாகவும், சீட்டே சாட்சியாகவுமிருந்தது. தேவன் வாதியாகவும், யோனா பிரதி வாதியாகவும், கப்பலாட்கள் நியாயாதிபதியாகவுமிருந்து காரியங்களை நிறைவேற்றினார்கள். இவ்வளவு சம்பவிக்கும் என்பதை இவர் கனவிலும் எண்ணி யிருக்கமாட்டார். 'கர்த்தரோடு வழக்காடுகிறவர்கள் நொறுக்கப்படுவார்கள், வானத்திலிருந்து அவர்கள்மேல் குமுறுவார்' என்ற பூர்வ வாசகம் அவர் மனதில் படவே இல்லை. அந்த விசாரணை நேரத்தில் அவர்கள் ஒவ்வொருவரும் கூடி, யோனாவினிடத்தில் ஐந்து பலத்த கேள்விகளைக் கேட்டார்கள். அவையாவன:—

1. யார் நிமித்தம் இந்த ஆபத்து நமக்கு வந்தது?
2. உன் தொழிலென்ன?
3. நீ எங்கேயிருந்து வருகிறாய்?
4. உன் தேசம் எது?
5. நீ என்ன ஜாதியான்?

என்பவைகள்தான். இந்தக் கேள்விகளால் யோனாவை அவர்கள் குற்றவாளியாகத் தீர்க்காமல், அவர் மூலமாய் இந்த தேவச் செயலின் இரகசியம் வெளியாகுமென்று மாத்திரம் எண்ணி யிருந்ததாகத் தோன்றுகிறது. இனி இவர் தூங்கப்போவாரோ? அவருடைய மனச்சாட்சியை மடக்கிக்கொள்ளுவாரோ? அது அவரால் முடியாது. ஏனெனில், அவர் மேல்தட்டிலும் மாலுமி முன்னும் கப்பலாட்கள் நடுவிலும் இருக்கிறார். அவர் பேருக்கு விழுந்த சீட்டு அவருடைய முகத்துக்குமுன் இருக்கிறது. அவர் பாவ பள்ளத்தில் இறங்கின காலம்போக, அதை விட்டு வெளியேறி பரிசுத்த பர்வதத்தில் மிதிக்கும் காலம் வந்துவிட்டது. அவர்கள் கேள்விகள் ஐந்தும் பஞ்ச பாணங்கள்போல அவருடைய துரோக நெஞ்சைப் பிளந்து விட்டன. ஆதலால் அவர் சொல்வார்:—நான் எபிரெய ஜாதியான், சமுத்திரத்தையும் பூமியையும் உண்டாக்கின பரலோகத்தின் தேவனாகிய கர்த்தரிடத்தில் பயபக்தி

யுள்ளவன், நான் அவருடைய கட்டளையை மீறி நினிவேக்குப் போகாமல் தர்ஷீசுக்குப் போகிறேன் என்று தமது வரலாறனைத்தையும் சொன்னார். இதை யோனா மனுஷர் முன்பாக செய்த பாவ அறிக்கையென்று சொல்லலாம். இவரின் வாய்ப்பிறப்பு சகலருடைய மனதையும் பதைக்கப் பண்ணிற்று. இன்னும் சமுத்திரம் தன் கோஷ்டத்திலிருந்து ஓயவுமில்லை, ஆதலால் அவர்கள், இனி நாங்கள் செய்ய வேண்டியதென்ன? என்று கேட்டார்கள். அவர் இதற்குள்ளாக தேவ செயல்களைத் திட்டமாய் உணர்ந்து, நீங்கள் என்னை எடுத்து சமுத்திரத்திலே போட்டுவிடுங்கள்; அப்பொழுது சமுத்திரம் உங்களுக்கு அமர்ந்திருக்கும்; என்னிமித்தமே இந்தக் கொந்தளிப்பு வந்தது என்று சொன்னார். மனந்திரும்புகிற பாவிகள் தங்கள் பாவங்களை உத்தம இருதயத்தோடு அறிக்கையிடாமலிருக்க மாட்டார்கள்.

கப்பலிலிருந்தவர்க ளெல்லாரும் நல்லவர்களா யிருந்தார்கள். ஆதலால் யோனாவைக் கடலில் தூக்கி எறிவது தருமமல்ல, சீக்கிரம் ஒரு கரையைச் சேர்ந்து இறக்கி உயிரோடு விட்டுவிடலாமென்று எண்ணி பலமாய்த் தண்டு வலித்தார்கள். ஆனால் கடலின் மும்முரத்தால் அவர்கள் பிரயாசம் வீணாய்ப் போயிற்று. கடைசியாக அவர்கள் கடவுளை நோக்கி, இந்தப் பழியை எங்கள் தலைமேல் வைக்காதேயும் தேவனே, என்று பிரார்த்தனை செய்து, துக்கத்தோடு அவரைக் கடலில் போட்டார்கள். உடனே சமுத்திரம் தன் மும்முரத்தினின்று ஓய்ந்தது. பாவிகள் பாவ அறிக்கை செய்கிறதால் தண்டனைக்குத் தப்பிவிடுவார்கள் என்று சொல்லக்கூடாது. தேவன் தம்மண்டை திரும்புகிற பாவிகளையும் உபத்திரவங்களின் மூலமாய்ப் பூரணப்படுத்துவதே அவருடைய முறையா யிருக்கிறது. குணப்படுகிற பாவிகள் மாம்ச தண்டனையின்றி மறுலோகம் போய்விடலாமென்று நினைக்கவே கூடாது. மேலும் பாவங்களைப்பற்றிய அறிவாவது பாவ அறிக்கையாவது தண்டனையை மாற்றி பாவமன்னிப்பைத் தந்துவிடும் என்று எண்ணலாகாது. பாவங்களை அறிவதும் அறிக்கையிடுவதும் நமது கடமையா யிருக்கிறது; பாவ மன்னிப்பை அருளு

வதும் தண்டனையை மாற்றுவதும் தேவனுடைய சித்தமா யிருக்கிறது. ஒருவேளை தேவன் தண்டனை கலந்த பாவ மன்னிப்பையாவது, தனிப் பாவ மன்னிப்பையாவது அருளலாம். அது அவருடைய திருவுளச் சித்தத்தின்படி அந்தந்த ஆத்துமாவின் பிற்கால வாழ்வுக்கேற்றபடி தேவனால் அருளப்படுகின்றன. ஆனால் எந்தப் பாவி தன் பாவங்களை அறிந்து அறிக்கையிடுகிறதோடு அவைகளை விட்டுவிடுவானோ அவன், கர்த்தருடைய கண்களில் இரக்கம் பெறுவது நிச்சயமே நிச்சயம். அந்த இரக்கம் நாம் முன் சொன்னபடி தண்டனை கலந்த இரக்கமாயாவது, தண்டனை கலவாத தனி இரக்கமாயாவது இருக்கலாம். அதை மனுஷன் கவனிக்கலாகாது. தேவ கோபத்துக்கு யோனா விறகுபோல் சமுத்திரத்துக்குள் இறங்கினார். ஆனால் அவருடைய மறு பிறப்பிற்கு சமுத்திரம் ஒரு கர்ப்பம்போலிருந்தது. பாவிகளுக்கு தேவன் அருளும் சில விசேஷ தண்டனைகள் அவர்களுடைய மனந்திரும்புதலின் ஏதுக்களாக இருக்க லாம்.

கடலில் எறியப்பட்ட யோனாவைப் பாதுகாத்து இரட் சிக்கும்படிக்குக் கர்த்தர் ஒரு பெரிய மீனை ஆயத்தப்படுத்தி யிருந்தார். மரக்கப்பலிலிருந்து ஜலத்தில் தள்ளப்பட்ட அவருக்கு மச்சக் கப்பலொன்றை திட்டஞ் செய்திருந்தார். இந்த மச்சக் கப்பலை கிறிஸ்துவின் சரீரமாகிய திருச் சபைக்கு ஒப்பிடலாம். பாவ சமுத்திரத்தில் விழுந்து, தேவ கோபத்துக்குள்ளானவர்கள் கிறிஸ்து சபையாகிய பெரிய மீனால் விழுங்கப்பட்டு பாதுகாக்கப்படுகிறார்கள். கர்த்தருடைய சபை என்னும் மச்சமானது உலகமெங்கும் அனுப்பப்பட்டு பாவிகளை இரட்சிப்புக்கு விழுங்கி தற்காத்து வருகிறது. அந்த மீனுக்குள் யோனா இராப் பகல் மூன்று நாளிருந்தார். இந்த மூன்றுநாளும் அவர் பயமுற்று சுகம் பெற்று தம் பத்தாவைத் துத்தியஞ் செய்கிற பெரிய வேலையி லிருந்தார். அந்த மீன் மூன்றும் நாள் அவரைக் கரையில் கக்கிவிட்டது. கடல்களின் தேவனே, உமக்கே ஸ்தோத்திர முண்டாவதாக; யோனா மூன்றுநாள் மீன் வயிற்றிலிருந்த விஷயமானது உலக இரட்சகர் மூன்றுநாள் கல்லறையி லிருந்து மறுபடியும் உயிரோடெழுந்திருப்பதை உணர்த்தும்

முன்னடையாளமா யிருந்தது (மத். 12:40; 16:4). அவர் மீன் வயிற்றிலிருந்து கரையில் கக்கப்பட்டது, பாவி மறுபடியும் பிறந்து புது ஜீவபலனடைந்து, புது வேலைக்குத் தன்னை ஆயத்தப்படுத்துவதை நன்றாய்க் காட்டுகிறது.

தேவன் யோனாவை அப்பாலாவது அவர் இஷ்டத்துக்கு விடவில்லை. அவர் மறுபடியும் முந்தின கட்டளையையே கொடுத்து நினிவேயில் போய்ப் பிரசங்கம்பண்ண உத்தரவருளினார். இனிமேல் அவர் முன்போல ஓடுவாரோ? இம்மட்டும் பட்டபாடு போதாதா? அவர் உடனே புதுப் பெலனடைந்து தன்னைப் பாதாளத்திலிருந்து மீட்ட ஆண்டவருடைய கட்டளையை சிரமேற்கொண்டு நினிவே பட்டணம் போய்த் தெருத் தெருவாய்ச் சுற்றி,

> இன்னும் நாற்பதுநாள் உண்டு;
> அப்பொழுது நினிவே கவிழ்க்கப்பட்டுப்போம்

என்று பிரசங்கஞ் செய்தார். நினிவேயின் மனுஷர் இதற்கு முன் இப்படிப்பட்ட பிரசங்கத்தைக் கேட்டதே இல்லை. இது கோடங்கிகள் ஈர் அர்த்தப்படச் சொல்லும் குறி மொழிபோலிராமல் ஓர் அர்த்தமாகச் சொல்லும் தேவ தீர்மானமா யிருந்தது. நினிவேயின் அழிவுக்கு இன்னும் நாற்பதுநாள் மாத்திரமிருக்கிற தென்பது அவர்கள் மனதைக் குலுங்கப்பண்ணிற்று. யோனா கப்பலேறி தர்ஷீசுக்கு ஓடிப்போகாத பட்சத்தில் நினிவே பட்டணத் தவணை நாள்கூடக் கொஞ்சமா யிருக்கலாம். அந்தச் சகாயத்தை அவர் நஷ்டப்படுத்தினார் என்பது அவர் மனதில் இருந்தது. நினிவேநகரம் மூன்றுநாள் பிரயாண விஸ்தாரமான பெரிய நகரமாயிருந்தது. அவர் முதலாம் நாள் போகக்கூடிய தெருவெல்லாம் போய்த் தமது விளம்பரத்தைக் கூறினவுடனே ஊரெங்கும் அதைப்பற்றிப் பேச்சுண்டாயிற்று. அவர் முதலாம்நாள் போய்ப் பிரசங்கித்த இடம் பிரபுக்களும், பட்டவர்த்தனரும் வாசம்பண்ணின ராஜவீதியாய் இருந்திருக்கலாம். யோனாவின் வார்த்தைகள் மந்திரிகளையும், பிரதானிகளையும், பிரபுக்களையும், பெரியோரையும், தளகர்த்தரையும், ராணுவ வீரரையும், புலவரையும், பூசாசாரிகளையும் நடுநடுங்கப்பண்ணிற்று.

இன்னும் நாற்பது நாளுக்குள் நினிவேயின் நீண்ட மதில் களும், உயர்ந்த கோபுரங்களும், கனத்த மாளிகைகளும், பலத்த கொத்தளங்களும், அழகிய தேர்வீதிகளும், அடர்ந்த தெருவீதிகளும், அங்குள்ள சித்திரமண்டபங்கள், அஸ்திர மண்டபங்கள், இராணுவ சாலைகள், ஆயுத சாலைகள், பண்ட சாலைகள், பொக்கிஷ சாலைகள், வர்த்தக சாலைகள், புஷ்பக் காவுகள் அனைத்தும், அங்குள்ள பட்டுபட்டாவளிகள், இரத்தினுதிகள், வைர வைடூரியங்கள், பொன்னுபரணங்கள், கீத வாத்தியங்கள், கின்னரங்கள், வீட்டலங்காரங்கள் அனைத்தும், அங்குள்ள வீரர், சூரர், சேனைகள், யானைகள், ஆடுகள், மாடுகள், பாலியர், வாலிபர், ஆண்கள், பெண்கள் அனைத்தும் கவிழ்க்கப்பட்டு அவைகளும் அவர்களும் பூமிக்குக் கீழும், பூமி மேலுமாக மாறும் என்ற சத்தம் மிகுந்த நன்மைக்கேற்ற மாறுதலையுண்டாக்கிற்று. இக் காலத்தில் தேவ ஊழியக்காரர் துன்மார்க்கரின் அழிவைக் குறித்து இவ்வண்ணம் நாள் குறித்துச் சொல்லக்கூடாதே போனுலும், அதைப் பயமின்றி கூறி ஜனங்களுக்கு ஏவும்படி கடமைப்பட்டவர்களாகவே இருக்கிருர்கள். அப்படி அவர் கள் செய்யாதபட்சத்தில் அந்த இரத்தப்பழி அவர்கள்மேல் இருக்கும். அக்காலத்தில் நினிவேயிலிருந்து அரசாட்சி விஷயங்களை நடத்திவந்த மந்திரி நல் இருதயமுடையவனு யிருந்தானென்று தோன்றுகிறது. உடனே அவன் நகராதி பதிகளை வரவழைத்து யோனுவின் வாய்ப்பிறப்பை பக்தி யுடன் தியானித்து அவருடைய போதனையை ஏற்றுக் கொண்டு உபவாசஞ்செய்யும்படி கூறினுன்; மேலும் பெரி யோர் முதல் சிறியோர்மட்டும் இரட்டுடுத்திக்கொண்டார்கள். வெளியரங்க உபவாசமும் இரட்டுடுத்தலும் அந்தரங்க பக்தி விருத்திக்கு ஏதுவாகப் பிரயோகிக்கப்பட்டது. சிலர் உபவாசத்தினுலே புண்ணியம் வருகிறதென்பார்கள்; வேறு சிலர் உபவாசம் வீண் சடங்கென்பார்கள். அவ்விரு வருடைய அபிப்பிராயமும் சரியல்ல. உபவாசத்தை பக்தி விருத்திக்கும் பச்சாத்தாப வளர்ச்சிக்கும் அநுகூலமாக உபயோகப்படுத்திக்கொள்வதினுல் ஆத்துமாவுக்கு வாழ்வு பெருகுமென்பதை ஆட்சேபிக்கக் கூடாது.

இச்செய்தி நினிவேயின் ராஜாவுக்கும் எட்டினது.[1] ஒருவேளை அன்றையத்தினம் வியாபாரம் நிறுத்தப்பட்டு, ஜனசந்தடி அடங்கி, மேளதாளங்களின் சத்தம் ஓய்ந்து, பிரபுக்கள் கூடும் மண்டபமும் புலவர் கூடும் மாளிகையும் அரவமற்று, வழக்கப்படி ராஜசமுகமேறும் பிரதானிகளின் வருகை நின்று விருந்துமண்டபம் ஆளில்லாமல் அந்தங் கெட்டு, நகரத்தில் கூக்குரலும் கிரகத்தில் புலம்பலும் எழும்பியிருக்கலாம். மூன்றுநாள் பிரயாணதூரமுள்ள பெரிய நகரத்தில் ஒரு தேவ ஊழியக்காரனால் உண்டாகிற இரட்சிப்புக்கேதுவான மாறுதல் எவ்வளவு என்று இவ் விடத்தில் பார்க்கிறோம். இவர் தமது சுருக்கப் பிரசங்கத் தோடு தம்முடைய அற்புதமான சரித்திரத்திலுள்ள பெருங் காற்று, சீட்டுப்போடுதல், மீன்வயிற்றுச் சஞ்சாரம், மீண்டும் பிழைத்தல் ஆகிய இந்தச் சமாச்சாரங்களையும் சொல்லி யிருக்கலாம். அரசன் இவையனைத்தையும் கேட்டவுடனே அவருடைய வாக்கின்படி நிச்சயமாய் நிறைவேறும் என்று நம்பி சிம்மாசனம் தனக்கு வேண்டாம் என்பதுபோல அதை விட்டு எழுந்து, தாம் கட்டியிருந்த பட்டையவிழ்த்து பக்கத்தில் எறிந்துவிட்டு இரட்டையுடுத்தி குப்பைமேட்டில் உட்கார்ந்தார். மேலும் ராஜா தானும் பிரதானிகளும் கூடித் தீர்மானித்த கட்டளையாவது:—நினிவேயிலெங்கும் மனுஷ ரும் மிருகங்களும் மாடுகளும் ஆடுகளும் ஒன்றும் ருசி பாராதிருக்கவும், மேயாமலும் தண்ணீர் குடியாமலுமிருக்க வும், மனுஷரும் மிருகங்களும் இரட்டினால் மூடிக்கொண்டு தேவனை நோக்கி உரத்தசத்தமாய் கூப்பிட்டால் தேவன் கிருபைகூர்ந்து தங்கள்மேல் தீர்மானித்த தண்டனையை மாற்றினாலும் மாற்றலாம் என்றெண்ணிப்படிச் செய்தார்கள். இந்த அரசனை நாம் எவ்வளவோ பாராட்டவேண்டியது! இப்படிப்பட்ட அரசர் இக்காலத்தில் பூமியின் நாலுதிசைக் கொருவராக நாலுபேர் இருப்பார்களென்பது மெய்யானால், இவ்வுலகம் எவ்வளவு சன்மார்க்கமுள்ளதாகிவிடும்.

---

[1] இக்காலத்தில் நினிவேயில் ஆண்ட அரசனைச் சிலர் புள் என்றும், வேறு சிலர் அத்ரமலேக் என்றும், இன்னம் சிலர் சருதனப்பாலு என்றும் சொல்லுகிறார்கள்.

நினிவே நகரத்தார் உபவாசித்து அழுது ஆண்டவருடைய பாதத்தைப் பிடித்து ஏமாந்துபோகவில்லை. அவர்கள் தங்கள் பொல்லாத வழியை விட்டு மனந்திரும்பினார்களென்பதினால் நற்கிரியைகளை முயற்சித்துவருகிறார்களென்பதையும் கர்த்தர் கண்டு, அவர்களை அழியாமல் இரட்சித்தார். ஆ, உலகமே! கிருபையிலும் இரக்கத்திலும் கிறிஸ்தவர்களுடைய தேவனாகிய யேகோவாவுக்கு மிஞ்சின ஒரு ஆளை நீ காட்டக்கூடுமா? கர்த்தர் மிகுந்த இரக்கமும், கிருபையும், நீடிய சாந்தமுமுள்ளவராயிருக்கிறார். அவர் கோபங்கொள்ளுகிற காலத்திலும் இரக்கத்தை நினைவுகூருகிறார். அவர் நமது பாவங்களுக்குத்தக்கதாக நமக்குச் செய்யாமலும், நம்முடைய அக்கிரமங்களுக்குத்தக்கதாக நமக்குச் சரிக்கட்டாமலுமிருந்து தமது கிருபையின் ஐசுவரியத்தின்படியே நம்மை ஆதரிக்கிறார். ஆதலால் மனந்திரும்ப ஆவல்கொண்ட பாவியே! ஆவியில் மகிழ்ச்சிகொண்டு ஆண்டவருடைய அன்புக்கு அல்லேலூயா பாடு. அவர் அழும் பிள்ளையை அடித்து அழாதே என்று சொல்லாமல் அணைத்து, அழும் கண்ணைத் தமது காருண்யமென்னும் கைக்குட்டையால் துடைத்து ஆறுதல்படுத்துகிறார். நமது அழுகை அவருக்கு வேடிக்கையாயிராமல் தமது அன்பைக் கேட்கும் விண்ணப்பம்போலிருக்கிறது. இரட்டுடுத்தும் பிள்ளையை அவர் கிட்டவராதே என்று தள்ளாமல், அவனுக்கு இரட்சண்யம் என்னும் பட்டுடுத்தி அனுப்புகிறார். சாம்பலில் உட்கார்ந்து அழும் பிள்ளையை வேசிப் பிள்ளையென்று அவர் நம்மை அசட்டைபண்ணாமல் தூக்கி அணைத்து, தமது திருக்குமாரனாகிய இயேசுவின் திரு உதிரத்தால் கழுவித் துடைத்து ஆதரிக்கிறார். அவர் தமது தாசரின் தாழ்மையை நோக்கிப்பார்த்து அவர்களை ரட்சண்ய சந்தோஷத்தால் நிரப்பி உயர்த்துகிறார்.

ஆழங்கண்டவர் கடவுளால் குறிக்கப்பட்ட நாற்பது நாளும் நினிவே எங்கும் பிரசங்கம் செய்துவிட்டு நாற்பத்தோராம் நாள் நகரம்விட்டு அப்பாலிருந்துகொண்டு நினிவே கவிழ்க்கப்பட்டழியப்போகிற வேடிக்கையைப் பார்க்கலாம் என்றெண்ணியிருந்தார்போலிருக்கிறது. பட்டணம் கவிழ்க்கப்படாததை அவர் கண்டவுடனே, சந்தோஷப்பட்டு கடவு

ளின் காருண்யத்தைக் கண்டு மனதோடு துத்தியஞ்செய் கிறதைவிட்டுவிட்டு விசனமும் கடுங்கோபமுமானூர். அவருடைய கோபத்துக்கு ஒரு கணக்குமில்லே, வழக்குமில்லே. தன் விருப்பத்தின்படி கடவுள் நிறைவேற்றிப்போடவேண்டுமென்பது இவர் சிந்தையிலிருக்கிறதேயன்றி, தேவசித்தத்தின் போங்குக்குத் தன் நடையை விடவேண்டுமென்பது இவர்சிந்தையில்இல்லே. இவர்தன்னுடைய வார்த்தையின்படி நிறைவேறவேண்டுமென்று ஆவல் கொண்டு தேவனுடைய கிருபையையும் இரட்சண்ய அன்பையும் பழுதுகூறுகிறது போலிருக்கிறது. நினிவே குணப்பட்டு அழிவுக்குத் தப்பாதா என்பது தேவவாஞ்சையாயிருந்த சமயத்தில் நினிவே பட்சிக்கப்பட்டு அழிவுக்குள்ளாகாதா என்பது இவர் வாஞ்சையிலிருக்கிறது. தேவ கண்ணுக்கும் மனுஷ கண்ணுக்கும், தேவசிந்தைக்கும் மனுஷசிந்தைக்கும் எவ்வளவு வித்தியாசம் இருக்கிறதென்று பாருங்கள்! நினிவே அழிக்கப்படாததை யோனு கண்டு கடுங்கோபங்கொண்டு கர்த்தரை நோக்கி, 'ஆ! கர்த்தாவே! நான் என் தேசத்திலிருக்கும்போதே இதைச் சொல்லவில்லேயா? இதினிமித்தமே முன்னே தர்ஷீசுக்கு ஓடிப்போனேன்; நீர் இரக்கமும், மன உருக்கமும் நீடிய சாந்தமும், மிகுந்த கிருபையுமுள்ளவரும் தீங்குக்கு மனஸ்தாபப்படுகிறவருமான தேவன் என்று அறிவேன். இப்போதும் கர்த்தாவே, 'என் பிராணனே என்னேவிட்டு எடுத்துக்கொள்ளும்; நான் உயிரோடிருக்கிறதைப் பார்க்கிலும் சாகிறதே நலமாயிருக்கும்' என்று விண்ணப்பம் பண்ணினூர். இவர் இந்த வார்த்தைகளே விண்ணப்பமாக உரைத்த சமயத்தில் நினிவேயில் நடந்த தேவச் செயலேப்பற்றி எவ்வளவு கோபமும், எரிச்சலுமுள்ளவராயிருந்தாரென்பது தெளிவாகிறது. இப்படிச் சொல்ல அவர் முழங்கால் முடங்கினது எவ்வளவு அதிசயம்! இவருடைய விண்ணப்ப முறையின்படி தேவன் இவருக்கு நடத்தியிருந்தால் கடலேவிட்டு வெளியேறுவாரா? மீனும் அவரைச் சேதமின்றி கக்குமா? இதினூலே தேவ தயவை அதிகமாகப் பெற்று அதினூல் கர்வங் கொண்டு திரிகிற குருக்களின் வரலாறு தெரியவருகிறது. அவர்கள் தங்கள் ஆதிக்க ஆணவத்தால் சிலதரம் தங்களுடைய மன

துக்குப் பிடியாதவர்களைச் சபிக்கவும், அவர்கள் அதமாக வேண்டுமென்று ஜெபிக்கவும் ஆரம்பிக்கிறார்கள். இவர் சாவை விரும்பி,

என் பிராணனை எடுத்துக்கொள்ளும்,
நான் சாகிறது நலமாயிருக்கும்

என்று சொல்லுகிற வாசகம் பயங்கரமாயிருக்கிறது. இதிலே அச்சமயத்தில் இவருக்கிருந்த பெருமையின் அளவு இவ்வளவு என்பது தெரியவருகிறது. இவர் என்னவோ கடவுளுக்குப் பெரிய வேலைகளையெல்லாம் செய்து நிறைவேற்றி முடித்தவர்போலும், இவருடைய சாவால் கர்த்தருடைய வேலைக்குப் பெரிய நஷ்டம் வரவேண்டுமென்பதுபோலவும் கருதுகிறதாகத் தோன்றுகிறது. ஒரு யோனா போனால் ஒன்பது யோனாவை எழும்பப்பண்ணவும், இந்தப் பெரிய மனுஷனால் நடந்த வேலையையும் அதற்கதிகமான வேலைகளையும் ஒரு சிறு பாலியனைக்கொண்டு முடிக்கவும் கர்த்தரால் கூடுமென்பதை அச்சமயத்தில் இவர் நினைத்தாரில்லை. பல விஷயங்களில் பேரெடுத்த போதகன்மார் இப்படி கர்வங்கொள்ளுகிறதுண்டு. இது சரியல்ல.

யோனா இப்படி விண்ணப்பம்பண்ணியும் அவருடைய கெட்ட ஆசை தீரவில்லை. தாம் கோபத்தோடு பண்ணின விண்ணப்பத்துக்கு தேவன் பயந்து, நம்மைத் திருப்திபடுத்தி நகரத்தை அழிப்பார் என்று அவர் தப்பாய் எண்ணி, நகரத்துக்குக் கிழக்கேபோய் அங்கே தனக்கு ஒரு குடிசை போட்டு சம்பவிக்கப்போகிறதைப் பார்க்கும்படி உட்கார்ந்திருந்தார். ஓ! பக்தனே! உட்கார்ந்திரும்! உட்கார்ந்திரும்!! உமது கோபம் நினிவேவுக்கு யோகம் என்று எண்ணும். உமது பெருமை அதிகப்படுகிற நேரத்தில் தேவனுடைய கிருபை அதிகப்படுகிறது. தேவன் நினிவேயின்மேல் கிருபை வைத்ததோடு இவர்மேலும் கிருபைவைத்து, அவருடைய குடிசையோரத்தில் அவருடைய தலையின்மேல் நிழலுண்டாயிருக்கவும், அவருடைய மனமடிவை நீங்கலாக்கவும் ஒரு ஆமணக்குச் செடியை முளைக்கப்பண்ணினார். இது அவரை உணர்த்தும் ஒரு கருவியாகவும் இருந்தது. இது யோனா நாற்பதுநாள் பனியிலும் வெயிலிலும் திரிந்தலைந்ததினாலும்

பிரசங்கித்ததினாலும் தலையிலுண்டான உஷ்ணத்தை ஆற்றி குளிர்ச்சியையும் தெளிந்த புத்தியையும் கொடுக்கும் ஒரு வைத்தியமாயுமிருந்ததாக்கும். அந்தச் செடியின்மேல் அவருக்கு மிகுந்த சந்தோஷமிருந்ததாம்.

மறுநாளிலே தேவன் ஒரு பூச்சியை அனுப்பி அதின் இலையனைத்தையும் தின்றுவிடச் செய்தார்; அதினால் அந்தச் செடி காய்ந்துபோயிற்று. செடி காய்ந்துபோனதும் நகரம் அழியாதிருக்கிறதும் அவருக்கு மிகுந்த மனநோவைக் கொடுத்ததால் ஐயோ! நான் செத்தாலும் நலமே என்று அங்கலாய்த்தார். அச்சமயத்தில் ஆண்டவர் அவருக்குத் தரிசனமாகி, நீ ஆமணக்கினிமித்தம் எரிச்சலாயிருக்கிறது நல்லதோ என்று கேட்டார். உடனே அவர் மூர்க்கங்கொண்டு, தான் என்ன பேசுகிறேனென்றறியாமல் 'நான் மரணபரியந்தம் எரிச்சலாயிருக்கிறது நல்லதுதான்' என்றார். அப்போது கர்த்தர் அவருடைய புத்தியீனத்தைப் பார்த்து, 'நீ பிரயாசப்படாததும், நீ வளர்க்காததும், ஒரு இராத்திரியிலே முளைத்ததும், ஒரு இராத்திரியிலே அழிந்துபோனதுமான ஆமணக்குக்காகப் பரிதபிக்கிறாயே; வலதுகைக்கும் இடதுகைக்கும் வித்தியாசமறியாத லட்சத்து இருபதினாயிரம் பேருக்கதிகமான மனுஷரும், அநேக மிருகஜீவன்களுமிருக்கிற மகா நகரமாகிய நினிவேக்காக நான் பரிதபியாமல் இருப்பேனோ?' என்று சொன்னார். ஆமணக்கு நிழலால் தன் தலையின் உஷ்ணம் சற்று தணிந்ததினாலோ, வேறெந்த காரணத்தினாலோ அவர் மறு பேச்சு பேசாமல், கர்த்தர் தமக்குச் சொன்னபடி செய்வாராக என்று அறிக்கையிடுகிறவர்போல் மவுனமாய் இருந்துவிட்டார். குணப்படுகிற பாவிகள்மேல் தேவன் வைக்கும் கிருபையை இந்த வரலாறுகள் நன்கு உணர்த்துகிறதல்லவா!

அப்புறம் இவரைப்பற்றிய வரலாறு ஒன்றும் நமக்குத் தெரியாது. அவர் நினிவேயிலிருந்து பயணப்பட்டு தமது சொந்த தேசத்துக்குப்போய் தேவகட்டளையின்படி தீர்க்கதரிசியின் ஊழியத்தை நிறைவேற்றிவந்தார் என்றே சொல்ல வேண்டியதாயிருக்கிறது. அவருடைய மரண விபரங்களைக் குறித்து நமக்கொன்றும் தெரியாது. ஆனால் அவர்

காத்தேப்பர் ஊரில் அடக்கம் பண்ணப்பட்டாரென்பதே ஒரு பழைய பாரம்பரையாயிருக்கிறது. ஆனால் தற்காலத்தாரோ அது பிசகென்று சொல்லி, மோஸல் நகரத்துக்கெதிரான நேபியூனஸ் என்னும் ஸ்தானத்தில் அடக்கம் பண்ணப்பட்டதாகச் சொல்லுகின்றார்கள்.

ஆழங்கண்டவர் என்று நாம் அழைக்கும் யோனாவிலும் பெரியவர் ஒருவர் உண்டு. அவர் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவே. அவரைப்பற்றிய வரலாறுகள்தான் சுவிசேஷம் என்று அழைக்கப்படுகிறது. யோனாவின் பிரசங்கத்தைக் கேட்டு நினிவே நகரத்திலுள்ள அரசன்முதல் ஆண்டி ஈறாக அனைவரும் குணப்பட்டார்கள். ஆனால் அவரிலும் பெரியவராகிய கிறிஸ்துவின் சுவிசேஷத்தையோ நம்முடைய தேசத்தார் இன்னம் அசட்டை செய்கிறார்கள். இது எவ்வளவு துக்கமான காரியம்! இவர்கள் இப்படி அசட்டைபண்ணிக் கொண்டே தங்கள் காலத்தை முடிக்கிறதுண்டானால் நியாயத் தீர்ப்புநாளில் நினிவே பட்டணத்தார் இத்தேசத்தாரோடெழுந்து நின்று இவர்கள்மேல் குற்றஞ்சுமத்துவார்கள்.

கர்த்தாவே இந்துதேசர்
கல்வியற்ற காப்பிரிகள்
பிரமர் சீனர் யூதர் கிரேக்கர்
தீவாரான துஷ்டர்கள்
மற்றெல்லாரும்
உம்மைப் போற்றச் செய்திடும்.

இரண்டாம் பங்கு முடிந்தது.

எங்களின் அண்மைக்காலத் தியான நூல்கள்

ஏழு வார்த்தைகள்
கிறிஸ்தவ ஜீவியம்
கிறிஸ்தற்ற கிறிஸ்துமார்க்கம்
என் சுய சரிதை
நீங்கள் அறியாதிருக்கிற ஒருவர்
— எஸ். பரமானந்தம்

நிமிடச் செய்திகள்
— தி. தயானந்தன் பிரான்சிஸ்

கண்ணீரைப் போக்கும் காலைப்பொழுது
— ஜான் எச். பீட் தமிழாக்கம் : தி. தயானந்தன் பிரான்சிஸ்

தூய ஆவியே வாரும் முழுப் படைப்பையும் புதிதாக்கும்
— தமிழில்: வி. தேவசகாயம்

உயர, உயர.....
— கே. ஜி. எபநேசர்

ஆண்டவரே சொல்லும் அடியேன் கேட்கிறேன்
— கே. ஜி. எபநேசர்

எல்லாம் இயேசுவே
— எபநேசர் டிக்கிகஸ்

சிறுவர்களே உங்களுக்கு
— ராஜம்மாள் டிக்கிகஸ்

வாமறிந்த தூல்களிலே
— தி. தயானந்தன் பிரான்சிஸ்

மோட்சப் பிரயாணம்
— ஜான் பனியன் தமிழாக்கம் சாமுவேல் பவுல்

தியானச் சோலை
தியான ஆலயம்
உங்களோடு ஒரு நிமிடம்
ஆத்தும நேசரின் அங்க மகத்துவம்
— சாமுவேல் பவுல்

CLS

விலை ரூ. 40 (இந்தியாவில் மட்டும்)